பத்தியாங் கன்னி ராசி பால்மரம் அரளி யாகும்
வித்தையாம் புதனுள் நீசம் வேத நூல் விபரந் தானே. 25

அஸ்தத்துக்கு.

நிலைபெறும் அஸ்தங் கன்னி நின்றபெண் ணெருமை பட்சி
தலைமைசெம் பிராந்து தெய்வ கணமது தானே யாகும்
விலகிய விருட்சமாததி வீடது தென்மேற் காகும்
பலகலை கழுத்து நூலாம் பகருவாய் புதனுள் நீசம். 26

சித்திரைக்கு.

சித்திரை புலியா ணுகுஞ் சிறந்ததோர் விருட்சம் வில்வம்
வெத்தியாங் கருடன் பட்சி விளங்கிய புதனுள் நீசம்
மத்தியங் கணம ரக்கன் மனைகள் தென் மேற்கு வாசல்
அத்துடன் துலாமி ராசி அறைந்தனர் சிரசில் நூலே. 27

சுவாதிக்கு.

சோதிநா ளெருமை யாணைச் சொல்லலாந் தேனீ யாகும்
நீதிசேர் மருத மாகும் நிறைகணந் தேவ ராகும்
ஆதி நூல் கழுத்தில் நிற்கும் ஆதிக்கந் துலாமே வெள்ளி
கோதிலா மேற்கு வாசல கோருமைப் பசியே நீசம். 28

விசாகத்துக்கு.

சீர்பெரும் விசாகம் நாற்கால் சிறந்தபெண் புலியே யாகும்
நேர்பெரும் விளாவி ருட்சம் நிலைசெவ்வாற் குருவி பட்சி
பேர்கண மரக்க ராகும் பெருகுநூல் கெர்ப்ப மாகும்
சோர்விலா துலாமே மேற்கு தொந்தமால் வெள்ளி நீசம். 29

அனுஷத்துக்கு.

உன்னிய அனுஷம் பெண்மான் ஓங்கிய மகிழ்வி ருட்சம்
பன்னிய சக்ர வாளப் பட்சியாங் கணமுந் தேவர்
முன்னுள குறங்கு நூலாய் மொழிவது செவ்வாய் நீசம்
பொன்னிற மான மேற்கு புகழ்ந்திடும் பெரியோர் முன்னே. 30

கேட்டைக்கு.

கேட்டையே கலைமான் நாற்கால் கேடிலாச் சாத கப்புள்
நீட்டிய பிராய்வி ருட்சம் நிலைகண மரக்க ராகும்

 In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சூட்டுவர் காலின் நூலாம் சுற்றகம் மேற்கு வாசல்
நாட்டிய செவ்வாய் நீசம் நலந்தரு மிரசசி தேளே. 31

மூலத்துக்கு.

மூலமே மூங்கில் பெண்ணாய் மொழிபுள்ளு செம்போத் தாகும்
சாலவே கணம ரக்கன் தரித்த நூற் காலி லாகும்
கோலிய மனைக்கு வாசல் குறித்தது வடமேற் காகும்
தேலிய குருவே நீசம் தெளிந்தவில் லிராசி யாமே. 32

பூராடத்துக்கு.

பூராடம் ஆண்கு ரங்கு பொழில்வஞ்சி வானின் கோழி
தேரான கணம ரக்கன் தீதுநாள் வியாழம் நீசம்
பாராளக் குறங்கு நூலாம் பார்மனை வடமேற் காகும்
நேரான தனுசு ராசி நிட்சயம் முனிவர் சொன்னர். 33

உத்திராடத்துக்கு.

திருந்திய உத்தி ராடந் திணிபசு மலட தாகும்
பொருந்திய பலாவி ருட்சம் புகழ்பட்சி வலிய னாகும்
வருந்திய கணமே மாந்தர் வடக்கது மகரம் நீசம்
அருந்திய வயிற்று நூலாம் அமரர்க ளுரைத்த வாறே. 34

திருவோணத்துக்கு.

திருவோணம் பெண்கு ரங்கு திருத்தியாம் மரமெ ருக்கு
மருவிய கணமுந் தேவர் மகிழ்மனை வடக்கு வாசல்
உருவம்வான் கோழி பட்சி யுற்றது கழுத்து நூலாம்
அருஞ்சனி மகரம் ஜென்மம் அருந்தவ ருரைத்த வாறே. 35

அவிட்டத்துக்கு.

அவிட்டம்பெண் சிங்கம் பட்சி யாம்வண்டு மரமோ வன்னி
தெவிட்டமாங் கணம ரக்கன் சிரசினிற் கயிற தாகும்
நிவிட்டமா மகர கும்பம் நிச்சயம் சனிநாள் நீசம்
சவிட்டுமண் வடக்கு வாசல் சாஸ்திர மறிந்து சொல்லே. 36

சதயத்துக்கு.

சதையம்பெண் குதிரை பட்சி சாற்றிய அண்டங் காகம்
விதைமரங் கடம்பு நூலோ விளங்கிய மார்பி லாகும்
சதைகண மரக்கன் ராசி கருதிய கும்ப மாகும்
சிதைவிலா வடக்கு வாசல் செப்புவர் சனிநாள் நீசம். 37

பூரட்டாதிக்கு.

புரட்டையாண் சிங்கந் தேமா விருட்சமாம் புள்ளே உள்ளான்
திரட்டிய கணமே மாந்தர் செப்புவர் வயிற்று நூலாம்
மருட்டிய கும்ப ராசி வாசலும் வடமேற் காகும்
உருட்டிய சனியின் வாரம் உரைத்தனர் காலந் தேர்ந்தோர். 38

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உத்திரட்டாதிக்கு.

உத்திரட்டாதி நாற்காற் பாற்பசு விருட்சம் வேம்பு
பத்தியாங் கணமே மாந்தர் பறவைகோட்டான் தானுகும்
மித்திரங் குறங்கு நூலாம் வியாழன்றன் வார மாகும்
சித்திரம் மீன ராசி சீரகம் வடகிழக்கே. 39

ரேவதிக்கு.

ரேபதி பெட்டை யானை நிகழ்பட்சி வல்லூ றுகும்
தூபதி கணமுந் தேவர் துளிர்மா மிலுப்பை பாலாம்
பூபதி காலாம் நூலாம் பொருள் மீனம் வியாழம் வாரம்
மாபதி வடகிழக்கு வாசலென் றுரைப்பர் நூலோர். 40

விவாகப் பொருத்தம்

நமது தேசத்திலே நம்மவர்கள் இக்காலத்திலே பெரும்பாலும் பணத்தையும், அழகையும், அதிகாரத்தையும் நோக்கியே பெண் கொள்வதும், கொடுப்பதும் செய்து வருகின்றுர்கள். நமது சோதிடசாஸ்திரங்களிலே பெண் கொள்ளுதற்கும் கொடுத்தற்கும் ஏற்பட்ட விதிகளோ? தற்கால வழக்கத்துக்கு முற்றும் மாருகவிருக்கின்றன. அவ்விதிகளை யனுசரித்து விவாக விஷயத்தை நடத்தாது தம்மனம் போனவாறே விவாகம் நடத்தப் பட்டு வருவதால் குடும்பங்கள் தோறும் ஸ்திரீ புருஷர்களுக்கு, அன்பின்மை ஒற்றுமையின்மை, சந்ததியின்மை, சந்ததியுண்டாயவிடத்தும் அற்பசந்ததியாதல், துர்ப்பலசந்ததி, கருவழிதல், கர்ப்பரோகம்-பிறந்திறத்தல் முதலிய தீப்பலன்களே உண்டாகின்றன.

விவாக விஷயத்திற்குச் சாஸ்திரங்களிலே விதிக்கப்பட்ட விதிகளையே முதலிலே நோக்கவேண்டியவர்களாயிருக்கவும், நம்மவர்கள் பெரும்பாலும் பணப்பொருத்தம், அழகுப் பொருத்தங்களையே நோக்குபவர்களாய் விட்டார்கள். பணத்தாலும் அழகாலும் மாத்திரம் விவாகம்—நன்மையைத் தரமாட்டாதென்பது நம்மவர்கள் பலமுறையும் அனுபவத்திற் கண்டவுண்மை. ஆதலால் சாஸ்திரங்களிலே சொல்லப்பட்ட விதிகளையே முதற்கண் அனுசரித்து விவாக கருமத்தைச் செய்தல் வேண்டும். சாஸ்திரங்களிலே விதிககப்பட்ட நக்ஷத்திரப் பொருத்தம் முதலிய பொருத்தங்களெல்லாம்அத்தியாவசியகம் ஆராயப்படுதல் வேண்டுமென்பது சித்தாந்தமாகின்றது. இப்பொருத்தங்களாற் பயனில்லையெனச் சிந்த்த்து வாளா உலக வழக்கத்திற்காகப் பார்ப்பவர்களே பெரும்பாலார். அஃது அவர் பேரறியாமையின் பயனும்.

நக்ஷத்திரப் பொருத்தம் பார்க்குமிடத்துப் புருஷ நக்ஷத்திரத்தினது குணமொன்றுகவும், ஸ்திரீ நக்ஷத்திரத்தினதுகுணம் மற்றொன்றுகவும், இருக்குமாயின் அவர்களுடைய குணங்களும் சுபாவங்களும் மாறுபட்டனவாகவேயிருக்கும். இதனுண்மையை யாவரும் பரீக்ஷித்து அறிந்துகொள்வது மிக எளிது. இப்படியே ஒவ்வொரு பொருத்தமும் ஒவ்வொருபயன் குறித்தனவேயாம். விவாகவ்ஷயம், மனுஷருக்கு மற்றெக்கருமத்திலும் முக்கிய கருமமன்றே ! அதனுலேயே உலகம் நடைபெறவேண்டி யிருத்தலின் அதனையாவரும் அலக்ஷியஞ் செய்யலாகாது. அதுபற்றியே இச்சோதிடக் களஞ்சியத்தில் விவாகப்பொருத்தவிஷயத்தைக் கிரமமாக ஆராய்ந்து பிரசுரிக்கலாயினேம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நட்சத்திரம்.	மிருகம்.	பட்சி.	மரம்.	கணம்.	சூன்யமீ.	ஜென்ம வாரம்.	ராசி.	ரச்சக் கயிறு.	வாசல்.
அச்சுவினி	ஆண்குதிரை	இராஜாளி	எட்டி	தேவகணம்	சித்திரை	செவ்வாய்	மேஷம்	பாதம்	கிழக்குவாசல்
பரணி	ஆண்யானை	நீர்க்காக்கை	நெல்லி	மனுஷகணம்	சித்திரை	செவ்வாய்	மேஷம்	தொடை	கிழக்கு
கார்த்திகை	பெண்ஆடு	மயில்	அத்தி	ராக்ஷதகணம்	சித்திரை	செ வெ	மேஷம்	வயிறு	கிழக்கு
ரோகணி	ஆண்பாம்பு	ஆந்தை	நாவல்	மனுஷகணம்	வைகாசி	வெள்ளி	இடபம்	கழுத்து	கிழக்கு
மிருகசீரிடம்	பெண்பாம்பு	கோழி	கருங்காலி	தேவகணம்	வைகாசி	பு-வெ	இடபம்	சிரசு	கிழக்கு
திருவாதிரை	பெண்நாய்	அன்றில்	செங்கருங்கா	மனுஷகணம்	ஆனி	புதன்	மிதுனம்	கழுத்து	தென்கிழக்கு
புனர்பூசம்	பெண்பூனை	அன்னம்	மூங்கில்	தேவகணம்	ஆனி	புத சனி	மிதுனம்	வயிறு	தென்கிழக்கு
பூசம்	ஆண்ஆடு	நீர்க்காக்கை	அரசு	தேவகணம்	ஆடி	சனி	கடகராசி	தொடை	தென்கிழக்கு
ஆயிலியம்	ஆண்பூனை	சிச்சிலி	புன்னை	ராக்ஷதகணம்	ஆடி	சனி	கடகம்	பாதம்	தெற்கு
மகம்	ஆண்எலி	ஆண்கழுகு	ஆல்	ராக்ஷதகணம்	ஆவணி	ஞாயிறு	சிங்கம்	பாதம்	தெற்கு
பூரம்	பெண்எலி	பெண்கழுகு	மாமரம்	மனுஷகணம்	ஆவணி	ஞாயிறு	சிங்கம்	தொடை	தெற்கு
உத்திரம்	ஆண்மாடு	சிள்வண்டு	அலரி	மனுஷகணம்	புரட்டாசி	ஞா-புத	கன்னி	வயிறு	தெற்கு
அஸ்தம்	பெண்எருமை	பருந்து	ஆத்தி	தேவகணம்	புரட்டாசி	புதன்	கன்னி	கழுத்து	தென்மேற்கு
சித்திரை	ஆண்புலி	கருடன்	வில்வம்	ராக்ஷதகணம்	ஐப்பசி	புத-வெ	துலாம்	சிரசு	தென்மேற்கு
சுவாதி	ஆண்எருமை	தேன்-ஈ	மருது	தேவகணம்	ஐப்பசி	வெள்ளி	துலாம்	கழுத்து	மேற்கு
விசாகம்	பெண்புலி	செவ்வாற்குரு	விளா	ராக்ஷதகணம்	ஐப்பசி	செ-வெ	துலாம்	வயிறு	மேற்கு
அனுஷம்	பெண்மான்	சக்கிரவாளம்	மகிழ்	தேவகணம்	கார்த்திகை	செவ்வாய்	விருச்சிகம்	தொடை	மேற்கு
கேட்டை	ஆண்மான்	சாதகப்புள்	பிராய்	ராக்ஷதகணம்	கார்த்திகை	செவ்வாய்	விருச்சிகம்	பாதம்	மேற்கு
மூலம்	பெண்நாய்	செம்போத்து	மூங்கில்	ராக்ஷதகணம்	மார்கழி	வியாழம்	தனுசு	பாதம்	வடமேற்கு
பூராடம்	ஆண்குரங்கு	பகண்டை	வஞ்சி	ராக்ஷதகணம்	மார்கழி	வியாழம்	தனுசு	தொடை	வடமேற்கு
உத்ராடம்	மலட்டுப்பசு	வலியன்	பலாசு	மனுஷகணம்	தை	வி-சனி	மகரம்	வயிறு	வடக்கு
அபிசித்து	பெண்கீரி	ஆந்தை	பலாசு	மனுஷகணம்	தை	சனி	மகரம்	கழுத்து	வடக்கு
திருவோணம்	பெண்குரங்கு	வான்கோழி	எருக்கு	தேவகணம்	மாசி	சனி	கும்பம்	கழுத்து	வடக்கு
அவிட்டம்	பெண்சிங்கம்	பொன்வண்டு	வன்னி	ராக்ஷதகணம்	மாசி	சனி	கும்பம்	சிரசு	வடக்கு
சதயம்	பெண்குதிரை	அண்டகாக்கா	கடம்பு	ராக்ஷதகணம்	மாசி	சனி	கும்பம	கழுத்து	வடமேற்கு
பூரட்டாதி	ஆண்சிங்கம்	உள்ளான்	தேமா	மனுஷகணம்	மாசி	வி-சனி	கும்பம்	வயிறு	வடமேற்கு
உத்ரட்டாதி	பெண்மாடு	கோட்டான்	வேம்பு	மனுஷகணம்	பங்குனி	வியாழம்	மீனம்	தொடை	வடகிழக்கு
ரேவதி	பெண்யானை	வல்லூறு	இலுப்பை	தேவகணம்	பங்குனி	வியாழம்	மீனம்	பாதம்	வடகிழக்கு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கலியாண முகூர்த்தம்.

சூடிய மணநாள் மூலம் ரேவதி மகமோண் சோதி
யோடு மான்றலையு ரோகணி யனுடமுத் திரங்க ளத்தம்
கூடி நன்றுவா விருத்தை யட்டமி கொடியோர் வாரம்
ஆடிமார் கழிபு ரட்டை மாசிதீ தன்ன மன்னேய்.

இ-ள். கலியாண முகூர்த்தத்திற்கு - மூலம்-ரேவதி-மகம் திருவோணம்- சோதி-மிருகசீரிடம்- ரோகணி - அனுடம்- உத்திரம்- உத்திராடம்-உத்திரட்டாதி-அஸ்தம்-இவை நன்று. உவா-இருத்தை-அஷ்டமி-சனி-செவ்வாய்-ஞாயிறு-ஆடி-மார்கழி-புரட்டாசி-மாசி-விலக்கப்பட்டன.எ-று41.

அன்னமே மிதுனங் கும்பம் அலவனே யிடபம் வில்லு
கன்னிகோல் நன்று பன்னொன் ருறுமூன் றினிய தீக்கோள்
பொன்னவ னெட்டிற் றியன் புகர்புத னுறெட்டாகா
ரன்னவ ரேழிற் றியர் மதிநல்ல னிரண்டில் மூன்றே.

இ-ள். மிதுனம்-கும்பம்-கடகம் ரிஷபம்-தனுசு-கன்னி-துலாம்- இவை நன்று. 11-மிடம். 6-மிடம், 3 மிடம் பாபர் நல்லர். வியாழம் அஷ்டமத்தில் பொல்லான். வெள்ளி-புதன்-6-8-ல் பொல்லார். எழாமிடம் எல்லாருந் தீயர். சந்திரன் 2-3-ல் நல்லன். எ-று. 42

வேறு.

முருந்து மதியே ரோகணியாம் மொழியும் புதனுத் திரட்டாதி
பொருந்து குருவே மகம்நன்று புகர்மூ லம்ரே வதியத்தம்
இருந்த ரிஷபந் துலாஞ்சிங்கம் இரட்டை தெறுக்கால் மீன்மகரம்
திருத்து மாத மோரேழுஞ் செய்ய மணங்கள் மிகநன்றே.

இ-ள். திங்கட்கிழமை ரோகணி நட்சத்திரமும், புதன்கிழமை உத்திரட்டாதி நட்சத்திரமும், வியாழக்கிழமை மகநட்சத்திரமும். வெள்ளிக்கிழமை முலம் ரேவதி, அஸ்த நட்சத்திரங்கூடிய சுபதினங்களும், வைகாசி-ஐப்பசி-ஆவணி-ஆனி-கார்த்திகை-பங்குனி தை - இந்த மாதங்களில் திருமணஞ் செய்ய மிகநன்மையுண்டாம். (லக்கினதிபதி) கேந்திர திரிகோணங் களிலிருக்கலாம். அல்லது தீதென்பதாம். எ-று. 43

விவாகச் சக்கரம்.

போந்த வட்டத்து ளெண்கோண மேநடு
பேர்த நாள்நின்ற நாளதிற் போதுநாள்
மீந்த நாட்களைப் பூர்வமுந் தண்டிக்கும்
மிக்க சுற்றம்பெண் பிள்ளையும் போம்நடு

சேர்ந்த வாழ்வு கிழக்கெரி நோய்கெடும்
தெற்கு வாழ்வு நிருதிமேற் காம்பிணி
வாய்ந்த கால்பெருங் கேடுநல் வாழ்க்கையாம்
வடக்கு மன்சுக சீவமு மாகுமே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். சதுரமாக எண்கோணங் கீறி நடுவே வட்டம் போட்டு அந்த வட்டத்துள்- முன்சூரியனிருந்தநாள் -இருக்கும்நாள்- இருக்கப்போகிற நாள் இந்த மூன்றுநாளும், நடுவே எழுதி இதுமுதலாய்க் கிழக்குமுதல் மும்மூன்று நட்சத்திரமாக எட்டுத்திக்கிலும் எழுதி நட்சத்திரம் 27-ம் கண்டுகொள்க. இனி வட்டத்துக்கு நடுவே இரவிநடுநாள் 3-ல்முகூர்த்தம் பண்ணினுல் கணவனும் சுற்றமும் பெண்ணும்போம். கிழக்கு நாள் 3-ல் முகூர்த்தம் பண்ணினுல் தனதானியமுண்டு; திருமாதுசேரும். தென்



கிழக்கு 3-ல் நோய்-தெற்கு 3-ல் அழியும், தென்மேற்கு 3-ல் வாழ்வு மக்களுண்டு. மேற்கு 3-ல் மாதமளவும் தோஷம். வடமேற்கு 3-ல் பெருங்கேடு. வடக்கு வாழ்வுண்டாம். வடகிழக்கு 3-ல் தனதானியமும், திருமாதுஞ் சேரும். எ-று. 44

பொருத்தம்பார்க்கும் பொதுவிதி.

கன்னியர் பிறந்த நாளைக் கணவனுள் வரைக்கு மெண்ணிப்
பன்னிரன் டதனிற் ருக்கிப் பாரிலொன் பானுக் கீய
மன்னுமுத் தமமொன் பானும் மத்திபம் ஆற தாகும்
இன்னதில் மூன்றதாகில் எடுப்பது பிச்சை தானே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். பெண் நட்சத்திரமுதல் புருஷ நட்சத்திரம் வரையெண்ணி 12-ல் பெருக்கி 9-ல் வகுக்க மிச்சம் 3-6-9-வரும். 45

இதில் 3-வரில் நாசம். அதமம்.
6 வரில் தரித்திரம், மத்திமம்.
9-வரில் பாக்கியம். உத்தமம்.

மணப் பொருத்தம்.

மாதவர் மணப்பொ ருத்தம் வழுந்துநாட் கணப்பொ ருத்தம்
மாதுமா கேந்தா மோடு ஸ்திரீ தீர்க்கம் யோனி ராசி
மேதகு மதிப திக்கோள் வசியமி ரச்சு வேதன்
தீதறு மரங்கள் புள்ளு தெரிந்திட வுரைப்ப தாமே.

இ-ள். நட்சத்திரப் பொருத்தம்-கணப்பொருத்தம்-மாகேந்திரப் பொருத்தம்-ஸ்திரீ தீர்க்கப்பொருத்தம்-யோனிப்பொருத்தம் - இராசிப்பொருத்தம்-இராசியாதிபதிபொருத்தம்- வசியப்பொருத்தம்- இரச்சுப்பொருத்தம்-வேதைப்பொருத்தம்-என்று சொல்லப்பட்ட தசப்பொருத்தமும் அடைவே சொல்லுவேன். இதுவுமன்றி ஏகநட்சத்திரப் பொருத்தமாவது, புருஷ நட்சத்திரமுதல் பெண்நட்சத்திரம் வரைக்கும் எண்ணினதுகைஇரண்டு வரில் உத்தமம், ஒன்றுவரில் மத்திமம். பிராமணுளுக்கு ராசி அதிபதிப் பொருத்தம், க்ஷத்திரியாளுக்கு கணப்பொருத்தம், வைசியாளுக்கு ஸ்திரீ தீர்க்கப்பொருத்தம், சூத்திராளுக்கு யோனிப்பொருத்தம் இருந்தால் செய்யலாம். (வேறுவிதம்.) ரோகணி-திருவாதிரை-பூசம் மகம்-அஸ்தம்-உத்திராடம்-திருவோணம் ரேவதி-இவை 8-ம்ஸ்திரீயும் புருஷனும், ஒரு நாளாகில் உத்தமம்.அசுவினி-கார்த்திகை-மிருகசீரிடம்-புனர்பூசம் உத்திரம்-சித்திரை-அனுஷம்-உத்திராடம்-இவை 8-ம் ஸ்திரீயும்புருஷனும் ஒருநாளாகில் மத்திமம்-பரணி-ஆயிலியம்-பூரம்-சுவாதி-விசாகம்-கேட்டை மூலம்-பூராடம்-அவிட்டம்-சதயம் பூரட்டாதி-இவை 11-ம் ஸ்திரீயும் புருஷனும் ஒருநாளகில் அதமம். ஸதிரீ புருஷர்கள் நாள் ஒன்ருய் இராசியிரண்டு கூறுபட்டிருந்தால் முற்கூறு புருஷனும், பிற்கூறு பெண்ணுமாகில் மிக உத்தமம். இது மாறிற் பொருந்தாது.

1-வது நட்சத்திரப் பொருத்தம்.

உரைத் திடிலிரண்டு நான்கா றெட்டொன்பானீ ராறீரேழ்
பரித்தவெண்ணிரண்டுபத்தொன் பானிருபத்திரண்டும்
இருத்தியவிருபன்மூன்றும் இருபத்தாறிருபத்தெட்டும்
பொருத்தநன்றிருபத்தொன்பா னுளிவைபூவின்மாதே.

இ-ள். பெண் நட்சத்திரமுதல் புருஷ நட்சத்திரம் வரைக்கும் என்ணின் துகை. 2-4-6-8-9-12-14-16-19-22-2-326-28-29-நாள் இவை யெல்லாக் கன்மங்களுக்கும் பொருந்தும் நாளென்பது எ-று. 47

இதுவுமது.

மான் றலைபுனர்தமாரல் வயப்பரிசதையமாடி
யான்றசித்திரைபங்கூனி யனுட மத்திமம்பார்செங்கை
பூன்றியவறிவன்ரேணி மகம்பூசமோணமத்தம்
தோன்றினன்றெருநாளல்லா தொழித்தனர்துணிந்துதேர்ந்தோர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். மிருகசீரிடம்- புனர்பூசம்- கார்த்திகை- அசுவினி- சதையம்- உத்திராடம்.சித்திரை-உத்திரம்-அனுஷம்-இவை ஒன்பதும் ஸ்திரீயும் புருஷனும் ஒருநாளகில் மத்திமம். ரோகணி திருவாதிரை-உத்திரட்டர்தி-ரேவதி-மகம்-பூசம்-திருவோணம்-அஸ்தம்-இவையெட்டும் ஒருநாளாகில் உத்தமம். மூலம்-ஆயிலியம்-விசாகம்-கேட்டை-பூரம்-பூராடம்-பூரட்டாதி பரணி-அவிட்டம் சோதி-இவை பத்து நட்சத்திரங்களும், இருவரும் டையதும் ஏக நட்சத்திரமாகில் ஆகாது. எ-று. 48

கணப்பொருத்தம்

தோடுப்புத்திரங்கள் செங்கைமுப்பூரம்மக்கள்
பாரமான்றலைபூசங்கள் பனைவிளக்கோணந்தோணி
முரிமாவத்தந்தேவர் முறங்கேட்டைப்பயறுமூலம்
ஆரல்பரம்பவிட்டஞ்செக்கு மகங்கண மரக்கராங்கே.

அசுவினி — மா மிருகசீரிடம் — புனர்பூசம் — பூசம் — அஸ்தம் சுவாதி — விளக்கு அனுஷம் — பனை திருவோணம் — ஓணம் ரேவதி — தோணி	பரணி — அடுப்பு ரோகணி — தேர் திருவாதிரை — செங்கை பூரம் — உத்திரம் — பூராடம் — உத்திராடம் — பூரட்டாதி — உத்திரட்டாதி	கார்த்திகை — ஆரல் ஆயிலியம் — பாம்பு மகம் — சித்திரை — பயறு விசாகம் — முறம் கேட்டை — மூலம் — அவிட்டம் — சதயம் — செக்கு
{ இவை — 9-ம் தேவகணம். }	{ இவை — 9-ம் மனுஷகணம். }	{ இவை — 9-ம் இராட்சச கணம் }

இதுவுமது.

அரக்கருந்தேவர் தாமும் அலைப்பகையரக்கரோடே
பெருக்கவும்மனிதர்சேரிற் பிணம்படுமக்களோடே
செருக்கியதேவர்சேரின் மத்திமஞ்செல்வமுண்டாம்
இருக்குமேற்கணங்களொன்றே யிவைநலமாகுமொன்றே.

இ-ள். இராட்சதகணமும், தேவகணமுமாகில்-சிலுகு. இராட்சத கணமும், மனிதகணமுமாகில் மரணம். மனுஷகணமும், தேவகணமுமாகில் மத்திமம், இரண்டும் ஒருகணமாகில் உத்தமம். எ-று. 50

மாகேந்திரப்பொருத்தம்.

ஸ்திரீதீர்க்கப் பொருத்தம்.

ஒன்றுநான்கேழுபத்துப் பதின்மூன்றெண்ணிரண்டாம்நாட்கள்
ஒன்றொழித்திருபானையைந் திருபதோடிரண்டுமாகில்
நன்றுமாகேந்திரந்தான் நாட்பதின்மூன்றப்பாலே
சென்றிடின்மிகவும்நன்று ஸ்திரீதீர்க்கமென்று செப்பே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். பெண்பிறந்த நட்சத்திரம் முதல் புருஷ நட்சத்திரம் வரை 1-4-7-10-13-16-19-25-22-வது நட்சத்திரமாகவரில் மாகேந்திரப் பொருத்த முண்டென்பது, பெண் நட்சத்திரம் முதல் புருஷ நட்சத்திரம்வரையெண்ணினால் 13-நட்சத்திரத்துக்கும் மேற்படில் உத்தமம் பதின்மூன்றிற் குறைவதாகாதென்று சொல்லுவர். எ-று. 51

யோனிப்பொருத்தம்.

செப்பியகுதிரையானை யாடுதீய்நாகஞ்சாரை
தப்பிற்பெண்ணாய்பெண்பூனை தகர்புஞ்சுநயெலியாண்பெட்டை
யொப்பெருதெருமைவேங்கை கிடாப்புலியோடுபுல்வாய்
கொப்புறுகலைநாய்வல்லாண் குரங்குவன் பசுக்குரங்கே.

இ-ள் அசுவினி—ஆண்குதிரை, பரணி—ஆண்யானை, கார்த்திகை-பெண் ஆடு, உரோகணி-நாகப்பாம்பு, மிருகசீரிடம்-சாரைப்பாம்பு, திருவாதிரை—பெண்ணாய், புனர்பூசம்—பெண்பூனை, பூசம்—ஆண் ஆடு, ஆயிலியம்—கடுவன்பூனை, மகம்-ஆண் எலி, பூரம்—பெண் எலி, உத்திரம்—எருது, அஸ்தம்—பெண் எருமை, சித்திரை—ஆண்புலி, சோதி—ஆண் எருமை, விசாகம்—பெண்புலி, அனுஷம்—பெண்மான், கேட்டை—ஆண் மான், மூலம்—ஆண் நாய், பூராடம்—ஆண் குரங்கு, உத்திராடம்-மலட்டுப் பசு, திருவோணம்—பெண் குரங்கு எ று. 52

இதுவுமது.

குரமிகுமனையிற்பெண்டீர் குதிரையிற்பேடுகூறில்
நரர்களிற்புருடர்நல்லர் பாறபசுமிடியிருக
இருபதோடேழுநாளும் யோனியிப்பரிசேயென்று
துரகமே ஆதியாகச் சொல்லிடாய்துடியே அன்னாய்.

இ-ள். துடியிடைபோன்றவடிவுடை மங்கையேகேட்பாயாக:—அவிட்டம்-பெண், சதையம்-பெண்குதிரை, பூரட்டாதி நரபுருஷன், உத்திரட்டாதி பாற்பசு, இரேவதி-பெண்யானை, இவ்வகையால் அசுவினி முதலாகக் கண்டுகொள்க. எ-று. 53

துடிபிடியானை தன்னிற் பகைநரர் துரகங்கோக்கள்
கடியுடையெருமைபுல்வாய் கடாப்புலிபகையதாகும்
கொடியபாம்பதனுக்காடு குரங்குக்குநாயதாகும்
கடியபேரெலிக்குப் பூனை பகையெனக்கருதுநீயே.

இ-ள். யானைக்குப்பகை மனிதர், குதிரைக்குப்பகை பசு, எருமைக்கும் மானுக்கும் கிடாவுக்கும் பகை புலி, பாம்புக்குப்பகை ஆடு, குரங்குக்குப் பகை நாய், எலிக்குப்பகை பூனை. எ-று.

(வேறு விதம்) யானைக்குப்பகை சிங்கமும் மனிதரும், குதிரைக்குப் பகை பசுவும் எருமையும், பசு-எருமை-கடா-மான்-நாய்-இவ்வைந்துக்கும் பகை புலியும், குரங்குக்குப்பகை ஆடும், எலிக்குப்பகை பூனையும் பாம்பும், பாம்புக்குப் பகை கீரியும் ஆடும், பூனைக்குப்பகை நாயும் புறியுமாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மானுக்கு-பசுவும், ஆட்டுக்கு-குதிரையும், நாய்க்கு மனுஷரும், நட்பாம். இவையல்லாதவை சமமாம். சகலயோனிகளுக்கும் குரங்கு நட்பென்பாருமுளர். 54

கருத்துடையாணுமாணுங் கடும்பகைபெண்ணும்பெண்ணும்
திருத்தமாம்பெண் பெண்ணாகி யாணணேற்செல்வமுண்டாம்
விருத்தமாம்பெண்ணுணாகி யாண்பெண்ணேல் மிகவும்யோனிப்
பொருத்தமாமிராசியேழில் மேற்படிற்புகழுண்டாமே.

இ-ள். இரண்டுயோனியும் புருடயோனியாகில் ஒன்றுக்கொன்று கொடிய பகையாம், இரண்டு யோனியும் பெண்யோனியாகில் உத்தமம். ஸ்திரீ-ஸ்திரீ யோனியாகி-புருஷன் புருஷயோனியாகில் நன்றென்பது. புருஷன் ஸ்திரீ யோனியாகி ஸ்திரீ புருஷயோனியாகில் மாறுதலுண்டாம். சத்துருயோனியாகில் பொருந்தாது. (இராசிப்பொருத்தம்) கொள்ளும்படி, ஸ்திரீ ராசியில் நின்று புருஷராசியளவு மெண்ணினால் ஏழாமிராசியாகிலும், ஏழுக்கு மேற்படிலும் உத்தமம், ஏழிற் குறையலாகாது. எ-று. 55

இராசி அதிபதிப்பொருத்தம்.

உண்டாயமறிக்குந்தேட்கும் உறவுமான் விடையாழ்கோல்பெண்
குண்டைகோற்குறவுவீணை கொடியதேளாதியாறுந்
தண்டுபெண்டனக்குச்சிங்கம் மீனொழிந்தெல்லாஞ்சார்வாம்
நண்டுக்குவிடையாழ்லில்மீன் நாரிநட்பென்றுசொல்லே.

இ-ள். (மேஷம்—விருச்சிகத்துக்குறவு, மகரம்—ரிபஷம் —மிதுனம்-துலாம்-கன்னி இவ்வைந்துமென்பது.) ரிஷபதுலாத்துக்குறவு. மிதுனம்-விருச்சிகம்-தனுசு-மகரம் - கும்பம் - மீனம் - மேஷம் - இவ்வேழுமென்பது.) (மிதுனம்-கன்னிக்குறவு, மேஷம்-ரிஷபம் கடகம்-துலாம் விருச்சிகம்-தனுசு மகரம்-கும்பம். இவ்வெட்டுமென்து.) கடகத்துக்குறவு, ரிஷபம்-மிதுனம் கன்னி-தனுசு-மீனம்-இவ்வைந்துமென்பது. எ-று. 56

சொல்லியசிங்கத்துக்குச் சுற்றமீன மேடமாகும்
வில்லுமீன்றனக்குக்கும்பம் விடைமுதலாறும் நட்பாங்
கொல்லைமான்கும்பத்துக்குக் கோதையாழ்விடைமீன்விற்கோல்
அல்லல்மாகுழலாய்கேண்மீ னதிபதிப்பொருத்தமாங்கே.

இ-ள். இருட்டுக் கூந்தலைச் சுருட்டிக் கொண்டைபோடும் ஏந்திழையே கேட்பாயாக, சிங்கத்துக்குறவு, மீனம்-மேஷம்-தனுசு மீனத்துக்குறவு, கும்பம் ரிஷபம் மிதுனம்-கடகம்-சிங்கம்-கன்னி-துலாம்-இவ்வேழுமெனபது. மகரகும்பத்துக்குறவு, கன்னி-மிதுனம் ரிஷபம்-மீனம்-தனுசு-துலாம்-இவ்வாறுமென்பது. எ-று. 57

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இராசி அதிபதிப்பொருத்தம்
வேறுவிதம்.

விவரம்	சூரி	சந்	செவ்	புத	வியா	வெள்	சனி
சூரியனுக்கு	உத்	உத்	உத்	மத்	உத்	தீது	தீது
சந்திரனுக்கு	உத்	உத்	மத்	உத்	மத்	மத்	மத்
செவ்வாய்க்கு	உத்	உத்	உத்	தீது	உத்	மத்	மத்
புதனுக்கு	உத்	தீது	மத்	உத்	மத்	உத்	மத்
வியாழனுக்கு	உத்	உத்	உத்	தீது	உத்	தீது	மத்
வெள்ளிக்கு	தீது	தீது	மத்	உத்	மத்	உத்	உத்
சனிக்கு	தீது	தீது	தீது	உத்	மத்	உத்	உத்

ஸ்திரீராசியதிபதியும், புருஷராசியதிபதியும், ஒருவருக்கொருவர் தம்மில் உத்தமமானுல் நல்ல பொருத்தமென்றும், மத்திமமானுற் குறைந்த பொருத்தமென்றும், தீதானுற் பொருத்தமேயில்லையென்றும், அறிந்துகொள்ளவேண்டும். இவ்வண்ணமே சந்திர நவாம்சாதிபதிகளைக் கொண்டும் பார்த்து நிச்சயிக்க.

இராசி வசியப்பொருத்தம்.

பொருந்திடுமறிக்குச்சிங்கம் விருச்சிகம்பொருவிடைக்கு
விருந்துகற்கடகங்கோலாம் மிதுனத்துக்கரிவையாகுந்
திருந்துநற்கடகத்துக்குத் தேட்சிலைசிங்கத்துக்குக்
கருஞ்சுரு வசியமாகுங் கன்னிக்கு விடைமீன்பொன்னே.

இ-ள். மேஷத்துக்கு-சிங்கமும் விருச்சிகமும், ரிஷபத்துக்கு-கடகமும் துலாமும், மிதுனத்துக்கு-கன்னியும், கடகத்துக்கு-விருச்சிகமும் தனுசும், சிங்கத்துக்கு மகரமும், கன்னிக்கு-ரிஷபமும் மீனமும்வசியமென்றறிவது. எ-று.

பொன்னனாய் துலைக்குப்புல்வாய் பொருந்து தேளதற்கு நண்டாங்
கன்னியும்வசியமாகுங் கார்முகமதற்குமீனை
சொன்னவில்மகரத்துச்குக் கும்பமாங்கும்பத்துக்கு
மன்னுமீன்மீனத்துக்கு மகரமும்வசியந்தானே.

இ-ள். துலாத்துக்கு-மகரமும், விருச்சிகத்துக்கு-கடகமும் கன்னியும், தனுசுக்கு-மீனமும், மகரத்துக்கு-கும்பமும், கும்பத்துக்கு-மீனமும், மீனத்துக்கு-மகரமும் வசியம். எ-று.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வசியப்பொருத்தம் வேறுவிதம்

ஸ்திரீ புருஷர்களுடைய ஜன்மராசிகள் மீனதுலாமாகிலும், மிதுன விருச்சிகமாகிலும், கும்ப கடகமாகிலும், மேஷ கன்னியாகிலும், ரிஷப தனுசாகிலும், மகர சிங்கமாகிலும் விவாகஞ் செய்யக்கூடாது.

இரச்சுப் பொருத்தம்

வைச்சவான்மதியிற்பாதி போலமூன்றுவரையைக்கீறி
மெய்ச்செய்தவரையின்மேலே விளங்கநால்வரையுங்கீறி
அச்சுவினிமுதலாய்வைத்து ரச்சுவையடைவேயெண்ணி
யுச்சிடவிருவர் நாளும் ஒருவரையுறுமேற்கேடே.

இ-ள். ஒத்தநிலத்திலே சந்திரன்பாதிபோலே மூன்றுவரையைக் கீறியதிலே குறுக்கே நாலுவரையுங்கீறில் அது இருபத்தேழுவரையாகும். முதல்வரையிலே அசுவினியை நாட்டி இருபத்தேழு நாளையும் என்னுவது, எண்ணிச்சென்றால் ஸ்திரீ நாளும், புருஷநாளும் ஒருவரையி லிருக்கலாகா தென்பது. எ-று. மேலும் சிறப்பித்தது அதனால் அசுவினியமும்-ஆயிலியமும்-மகமும்-கேட்டையும்-மூலமும்-ரேவதியும்-இந்த ஆறு நாளும்-அடிக் கயிறென்றும், பரணி-பூசம்-பூரம்-அனுஷம்-பூராடம்-உத்திரட்டாதி-இந்த ஆறுநாளும் குறங்குக்கயிறென்றும், கார்த்திகை-புனர்பூசம்-உத்திரம்-விசாகம்-உத்திராடம்-பூரட்டாதி-இந்த ஆறு நாளும் வயிற்றுக்கயிறென்றும், ரோகணி - திருவாதிரை-அத்தம் - சுவாதி - திருவோணம்-சதையம் இந்த ஆறுநாளும் கழுத்துக் கயிறென்றும், மிருகசீரிடம்-சித்திரை-அவிட்டம்-இந்த மூன்றுநாளும், சிரசுக் கயிறென்றும் பெயராம். இவையெல்லாம் தம்மிற் பொருந்தாது. 60



CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உறங்கயிறடியதாகில் உள்ளபொன்கேடதாகும்
குறங்கினிற்கயிறதாகிற் கூறுகமலடியென்றும்
நிறந்தருப்வயிறதாகில் நிச்சயம்மக்கள்சாவாம்
சிறந்தவான்கழுத்ததாகிற் கொழுநன்சாஞ்சிரத்திற்பெண்சாம்.

இ-ள். அடிக்கயிருகில்-பொருள் நாசமாகும், குறங்காகில்-மலடாகும், வயிருகில்-புத்திர நாசமாகும், கழுத்தாகில்-பத்தா மரணமாம், சிரசாகில்-பெண் சாகும், இவ்வகையால் இரச்சு கண்டுகொள்க. எ-று. 61

வேறு விதம்

பாதத்திற்கயிறதாகிற் பரதேசமேகிமீள்வர்
அல்குலிற்கயிறதாகில் அவளுமேவேசையாவள்
வயிறடிக்கயிறதாகில் மக்களும்நிதியுமுண்டாம்
கழுத்தடிக்கயிறதாகில் கணவனுக்கழிவேசொல்லு
உச்சியிற்கயிறதாகில் ஒண்டொடிமரணமாமே. 62

வேதப் பொருத்தம்

சாந்தமுச்சதுரமாகத் தலத்தினிற்கீறியத்தில்
ஆய்ந்தமுன்நான்குங்கீறி யமைந்தவேதைக்கயிற்றிற்
சேந்தமாமூலைவைத்துத் தெரிந்தெண்ணத்தெரிவைநாளும்
மாந்தநாட்டானுமேக வரையுறின் மரணங்காணே.

இ-ள். ஒத்த நிலத்திலே முச்சதுரமாகக்கிறியிதின்மேலே முன்னுன்கு வரையுங் கீறில், வேதைக்கயிற்றில் இருபத்துநாலும் மூன்று மூலையுமாக இருபத்தேழுங்கண்டு அதில் அசுவினியை ஒருமூலையிலேநாட்டிரேவதியீருக வெண்ணினுல், இருவர்நாளும் ஒருவரையி லுறலாகாது, மேலும் சிறப்பித்தது அதனுல், அசுவினி-மகம்-மூலம் இவை தம்மிற் பொருந்தாதென்க.

பரணிக்கு-கேட்டை பகை	பூசத்துக்கு-உத்திராடம் பகை
கார்த்திகைக்கு-அனுஷம் பகை	ஆயிலியத்துக்கு-பூராடம் பகை
ரோகணிக்கு-விசாகம் பகை	பூரத்துக்கு-ரேவதி பகை
மிருகசீரிடத்துக்கு-சுவாதி பகை	உத்திரத்துக்கு-உத்திரட்டாதி பகை
திருவாதிரைக்கு-அவிட்டம்	அஸ்தத்துக்கு பூரட்டாதி பகை
புனர்பூசத்துக்கு-திருவோணம்	சித்திரைக்கு-சதையம் பகை

ஆதலால் இந்நாட்கள் ஒன்றுக்கொன்று பொருந்தாது. மற்றுள்ள நாட்களெல்லாம் பொருந்தும். 63

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வேதைக் கயிறு
விருக்ஷப் பொருத்தம்



காஞ்சிரம் நெல்லி யத்தி நாவற்றின் கருங்கா லிப்பின்
நாஞ்சசெண் பகமே புன்னை யால்வாகை யரசு வெள்ளில்
தீஞ்சுளைப் பலா வெருக்கு மாதளை சிறந்த வில்வம்
பூஞ்சுனை மருது தாழை மகிழ்மூங்கிற் பொழிற்றே மாவே.

இ-ள். அசுவினி-காஞ்சிரம், பரணி-நெல்லி, கார்த்திகை-அத்தி, ரோகணி-நாவல், மிருகசீரிடம்-கருங்காலி, திருவாதிரை-செண்பகம், புனர்பூசம்-புன்னை, பூசம்-ஆல், ஆயிலியம்-வாகை, மகம்-அரசு, பூரம்-விளா, உத்திரம்-பலா, அத்தம்-எருக்கு, சித்திரை-மாதளை, சோதி-வில்வம், விசாகம்-மருது, அனுஷம்-தாழை, கேட்டை-மகிழ், மூலம்-மூங்கில், பூராடம்-தேமா எ-று 64

இதுவுமது

பொழில் வஞ்சி பலாசுவன்னி மாப்புளி வேம்பி லுப்பை
பழுதின்றிப் பரிமுன் காணப் பால்மரம் பலாசு புன்னை
எழுசம்புப் புகழ்ப லாமா விலுப்பை செண்பகமெ ருக்குங்
கிழவஞ்சி யரசா லத்தி மாதளை வயிர மற்றே.

இ-ள். உத்திராடம்-வஞ்சி, திருவோணம்-பலாசு, அவிட்டம்-வன்னி, சதையம், மராமரம்-பூரட்டாதி-புளி, உத்திரட்டாதி-வேம்பு. ரேவதி-இலுப்பை, இப்படி இருபத்தேழுநாளுங் கண்டு கொள்க. இவை யீற்றில் பலாசு-புன்னை - நாவல் - மகிழ் பலா-மா-இலுப்பை செண்பகம் - எருக்கு-வஞ்சி-அரசு-ஆல்-அத்தி மாதளை-இவைகள் பால்மரம், அல்லாதவை யெல்லாம் வயிரம். எ-று. 65

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இதுவுமது.

வயிரமா ணாகிப் பெண்பால் மரமெனின் மைந்த ருண்டாம்
வயிரமா தரிவை யாகி லாம்பலன் மலடி யாகும்
வயிரம திரண்டு மாகின் மைந்தரும் பொருளு மாயின்
வயிரம தொழிந் திரண்டும் பாலெனில் வாழ்வுண்டாமே.

இ-ள். புருஷன்-வயிரமாய், பெண்-பால்மரமாகில், புத்திருண்டாம். பெண் வயிரமாய்-புருஷன்-பால்மரமாகில், மலடாவர், இருவரும் வயிரமாகில், புத்திர சேதமும்-அர்த்தசேதமும்-மனக்கவலையுமுண்டாம்.இருவர் நாளும் பால்மரமாகில்-இலட்சுமி கடாக்ஷமுண்டாம். எ-று. 66

பட்சிப் பொருத்தம்

வாழ்பரி முதலா வைந்தும் வல்லூரா திரைமுன் றாறும்
சூழ்வலி யாந்தை யாகுந் துய்யவுத் திரமுன் ஊைந்தும்
தாழ்விலா வலிய னாகுந் தடம்பனை முதலா வைந்தும்
கோழியா மோண மாதி யாறுவா மயிலின் கூறே

இ-ள். அசுவினிமுதல் ஐந்துநாளும்-வல்லூறு, திருவாதிரைமுதல் ஆறுநாளும்-ஆந்தை, உத்திரம் முதல் ஐந்துநாளும் வலியன், அனுஷம் முதல் ஐந்துநாளும்-கோழி, திருவோணம் முதல் ஆறுநாளும் மயில் எ-று. 67

பட்சிப்பகை

மயிர்ப்பகை வல்லூ ருந்தை கோழிக்கு மவையே யாகும்
செயிற்பகை வலியற் காந்தை யாந்தைக்கு வலியன் றீதாம்
இயற்றிய வலிய னல்லா தெல்லாம்வல் லூரினுக்கு
யுயிற்பகை யல்லான் மற்றிங் கொழிந்தவை யுறவா மென்றே.

இ-ள். மயிலுக்கு-வல்லூறும்-ஆந்தையும் பகை, கோழிக்குவல்லூறும் ஆந்தையும் பகை,வலியனுக்கு-ஆந்தைபகை,ஆந்தைக்கு-வலியன் பகை, வல்லூருக்கு வலியனொழிய மற்றெல்லாம் பகை, சொல்லாதவை யெல்லாம் உறவு. (இதிற் சொன்னவையெல்லாம் உயிர்ப்பகை.) எ று. 68

காரிய சுத்தி

கால்கொண்ட மணத்துக்கேழுங் கருதும்வாயுரைக்கிரண்டும்
மால்கொண்டமனைக்கு நான்கும் வழிப்போக்குக்கீரைந்துவாஸ்து
மேல்கொண்டயிர திட்டைக் காதுமயிர் வித்தைமுடி சீமந்தம்
வேல்கொண்டநாமமுன்னூற் கெட்டிடஞ்சுத்தமென்றே.

இ-ள். விவாகத்துக்கு ஏழாமிடமும், அன்னப்பிராசனத்துக்கிரண்டாமிடமும், கிரகாரம்பத்துக்கு நான்காமிடமும். யாத்திரைக்குப் பத்தாமிடமும், சுத்திகொள்ளுவது, வாஸ்து பிரதிஷ்டை-கன்னவேதனம், சவுளம், வித்தியாரம்பம், அபிஷேகம், சீமந்தம், நாமகரணம், உபநயனம், இவையீற்றுக்கு எட்டாமிடம் சுத்தமாகக் கொள்ளுவது. எ-று. 69

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இராசி சுத்தி

சுத்தமாமணஞ்சிரார்த்தம் யாத்திரைசோலை வைத்தல்
புத்திசேர்குருவைக்காண்டல் புணர்ந்திடலகமெடுத்தல்
வைத்தயேருழவுகூவல் மரக்கலம்மயிரேகல்வி
கத்தியமேடமாதி கயலீருய்க்கழித்தார்கற்றோர்.

இ-ள். விவாகத்திற்கு மேடமும், சிரார்த்தத்திற்கு ரிஷபமும், யாத்திரைக்கு மிதுனமும, விருட்சம் வைக்கக் கடகமும், ஆசானைககாணச் சிங்கமும், புணர்ச்சிக்குக் கன்னியும், அகமெடுக்கத் துலாமும், உழவுக்கு விருச்சிகமும், கிணறுவெட்ட தனுசும், மரக்கலயாத்திரைக்கு மகரமும், க்ஷவரத்துக்குக் கும்பமும், வித்தியாரம்பத்துக்கு மினமுமாகாது. இவை விலக்கப்பட்ட விராசிகளாம். இவையல்லாத மற்றவிராசிகள் உத்தமமாம். எ-று. 70

நட்சத்திரப் பகையறிய

அசுவினிக்கும்-மகத்துக்கும்	மூலத்துக்கும்
பரணிக்கும்	கேட்டைக்கும்
கார்த்திகைக்கும்	அனுடத்துக்கும்
ரோகிணிக்கும்	விசாகத்துக்கும்
மிருகசீரிடத்துக்கும்	சுவாதிக்கும்
திருவாதிரைக்கும்	அவிட்டத்துக்கும்
புனர்பூசத்துக்கும்	திருவோணத்திற்கும்
பூசத்துக்கும்	உத்திராடத்திற்கும்
ஆயிலியத்துக்கும்	பூராடத்துக்கும்
பூரத்துக்கும்	ரேவதிக்கும்
உத்திரத்துக்கும்	உத்திரட்டாதிக்கும்
அஸ்தத்திற்கும்	பூரட்டாதிக்கும்
சித்திரைக்கும்	சதையத்துக்கும் பகையாம்.

காலவோரையின் பலன்

கலித்துறை

அருக்கன் புகர்புத்தி யிந்துடன் மந்தனு மந்தணன் சேய்
இருக்குங் கடிகை யிரண்டரை யாகு மிதன்பலன் கேள்
மரிக்கும் மணஞ் செயும் மாலையுங் காட்டும் மகிழ்வுடனே
சிரிக்குஞ் சிறைசெயும் சேலையுஞ் சாத்துஞ் செருச் செயுமே.

இ-ள். சூரியன் காலவோரையாகில் மரணமுண்டாகும். சுக்கிரன் ஓரையாகில்-மணஞ்செய்யும், புதனோரையாகில்-புத்திரசந்தோஷம், சந்திரவோரையிலே வளர்பிறையாகில்-மகிழ்ச்சி, தேய்பிறையாகில்-தீது, சனியோரையாகில்-சிறைப்படுத்தும்,—வியாழவோரையாகில்—ஆடையாபரணமுண்டாம். செவ்வோரையாகில்-சண்டை சச்சரவு முண்டாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வேறுவிதம்

குருவோரையில்-விவாகஞ்செய்யலாம். சுக்கிரவோரையில்-பயணம் போகலாம், செவ்வாயோரையில்-உயுத்தத்துக்குப்போகலாம். சனிவோரையில்-இராஜபேட்டிக்குப் போகலாம் புதவோரையில்-வித்தியாப்பியாசம் செய்யலாம். சந்திரவோரையில்-கிரகப்பிரவேசம் செய்யலாம், நன்று எ-று. 71

அமிர்தயோகம் மரணயோகம் அறிய

ஆதிவாரம்

பலமுடைமூலமோணம் இரேவதியத்தம்பாரில்
நலமுடையுத்திரங்கள் மூன்றும்நன் றருக்கன்றன்னில்
குலவிய அனுஷங்கேட்டை கொடுநுகம்விசாகம் விட்டம்
சலமுடையருக்கன்வாரஞ் சார்ந்திடில்மரணந்தானே.

இ-ள். ஞாயிற்றுக்கிழமையில்-மூலம்-திருவோணம்-ரேவதி-அஸ்தம்-உத்திரம்-உத்திராடம்-உத்திரட்டாதி-இவ்வேழுநட்சத்திரங்களும்அமிர்தயோகமாம். அனுஷம் கேட்டை - கொடுநுகமாகிய-மகம்-விசாகம்-அவிட்டம்-இவ்வைந்து நட்சத்திரங்களும் மரணயோகமாம். இவையல்லாத அசுவினி-பரணி-கார்த்திகை-ரோகிணி மிருகசீரிடம்-திருவாதிரை-புனர்பூசம்-பூசம்-ஆயிலியம்-பூரம்-சித்திரை-சுவாதி-பூராடம்-சதயம்-பூரட்டாதி- இப்பதினைந்து நட்சத்திரங்களும், சித்தயோகமென்பதாம். எ-று: 72

சோமவாரம்

தானமான்றலையேசோதி சகடுருள்புணர்தமோணம்
ஆனநாள் திங்கள்சேரில் அமிர்தமாயோகமாகும்
கானமாமகம்விசாகங் கார்த்திகைபூரட்டாதி
யானநாளுத் திராட மதிவரில்மரணமென்னே.

இ-ள். திங்கட்கிழமையில் மான்றலையாகிய மிருகசீரிடம், சோதியாகிய சுவாதி சகடுருளாகிய உரோகணி-புணர்தமாகிய புனர்பூசம்-திருவோணம்-இவ்வைந்து நட்சத்திரங்களும் அமிர்தயோகமாம். மகம் விசாகம்-கார்த்திகை பூரட்டாதி-உத்திராடம்-இவ்வைந்து நட்சத்திரங்களும் மரணயோகமாம். இவையல்லாத அசுவினி-பரணி-திருவாதிரை-பூசம்-ஆயிலியம்-பூரம்-உத்திரம்-அஸ்தம்-சித்திரை-அனுஷம் கேட்டை-மூலம்-பூராடம்-அவிட்டம சதயம் உத்திரட்டாதி-ரேவதி-இப்பதினேழு நட்சத்திரங்களும் சித்தயோகமாம். எ-று. 73

பௌமவாரம்

அன்றியஉரோணிமூலம் அறிவனுத்திரத்திற்செவ்வாய்
நின்றிடில மிர்தயோகம் நிறைந்தவான் சதயஞ்செங்கை
வென்றியவிசாகம்பூரட் டாதியைவிரும்பினும்
கன்றியசெவ்வாய்நின்ருற் கருமங்கள்நாசந்தானே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். செவ்வாய்க்கிழமையில்-உரோகணி-மூலம்-அறிவனுளாகிய உத்திரட்டாதி-உத்திரம்-இந்நான்கு நட்சத்திரங்களும், அமிர்தயோகமாம். சதயம்-செங்கையாகிய திருவாதிரை விசாகம்-பூரட்டாதி-இந்நான்கு நட்சத்திரங்களும் மரணயோகமாம். இவையல்லாத-அசுவினி-பரணி-கார்த்திகை-மிருகசீரிடம் புனர்பூசம் - பூசம்-ஆயிலியம்-மகம்-பூரம்-அஸ்தம்-சித்திரை - சுவாதி-அனுஷம்-கேட்டை - பூராடம் - உத்திராடம்-திருவோணம்-அவிட்டம்-ரேவதி இப்பத்தொன்பது நட்சத்திரங்களும் சித்தயோகமாம். எ-று. 74

சௌமியவாரம்

காணுமுப்பூரமாடி கார்த்திகையுத்திரத்தில்
பூணுறுமடவாய்புந்தி வந்திடிற்புகழ்வர்சால
ஆணியாமவிட்டமூலம் ரேவதிகுதிரையத்தம்
சேணுறுபுந்திவந்தாற் செய்யுமக்கருமந்தீதே.

இ-ள். புதன்கிழமையில் - பூரம் - பூராடம் - பூரட்டாதி-ஆடியாகிய உத்திராடம்-கார்த்திகை-உத்திரம் இவ்வாறு நட்சத்திரங்களும், அமிர்தயோகமாம். அவிட்டம்-மூலம் ரேவதி குதிரையாகிய அசுவினி-அஸ்தம்-இவ்வைந்து நட்சத்திரங்களும், மரணயோகமாம். இவையல்லாத-பரணி-ரோகணி-மிருகசீரிடம்-திருவாதிரை- புனர்பூசம்- பூசம்- ஆயிலியம் மகம்-சித்திரை-சுவாதி-விசாகம் - அனுஷம் - கேட்டை - திருவோணம்-சதயம்-உத்திரட்டாதி இப் பதினாறு நடசத்திரங்களும் சித்தயோகமாம்.

குருவாரம்

கரும்பொடுசோதிபூசம் அசுபதிமகத்திற்கற்றோர்
விரும்பியேவியாழன் நின்றால் விளம்புவாரமுதமென்றே
திருந்துமான்றலைபார்செக்குச் செங்கையுத்திரத்தோடாரல்
சுரும்பமர்குழலாய்பொன்னன் வந்திடிற்றுயரஞ்சொல்லே.

இ-ள். வியாழக்கிழமையில்-கரும்பாகிய- புனர்பூசம்- சோதியாகிய சுவாதி-பூசம்-அச்சுவினி- மகம்- இவ்வைந்து நட்சத்திரங்களும் அமிர்தயோகமாம். மான்றலையாகிய மிருகசீரிடம், பாராகிய-ரோகணி, செக்காகிய சதயம்,செங்கையாகிய-திருவாதிரை, உத்திரம், ஆரலாகிய கார்த்திகை-இவ்வாறு நட்சத்திரங்களும் மரணயோகமாம். இவையல்லாத பரணி-ஆயிலியம் பூரம்-அஸ்தம-சித்திரை-விசாகம்-அனுஷம்- கேட்டை- மூலம்-பூராடம்-உதகிராடம்-திருவோணம்- அவிட்டம்- பூரட்டாதி- ரேவதி- இப்பதினாறுநட்சத்திரங்களும் சித்தயோகமாம் எ-று. 76

பிருகுவாரம்

சொல்லொருமூலமத்தம் ரேவதிதுரகஞ்சுங்கம்
புல்லிடிலமுதயோகம் பூசம்ரோகணியுங்கேட்டை
மல்குபேரோண மாயில் மகத்தினில்வெள்ளிவந்தால்
அல்லுறுங்குழலாய்தீதென் றறைந்தனர்தமிழையாய்ந்தோர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். வெள்ளிக்கிழமையில்- மூலம்- அஸ்தம்- ரேவதி- துரகமாகிய அசுவினி-இந்நான்கு நட்சத்திரங்களும் அமிர்தயோகமாம். பூசம்- ரோகணி-கேட்டை- திருவோணம்-ஆயிலியம்-மகம்-இவ்வாறு நட்சத்திரங் களும் மரணயோகமாம். இவையல்லாத-பரணி-கார்த்திகை-மிருகசீரிடம் திருவாதிரை- புனர் பூசம் பூரம்- உத்திரம்- சித்திரை- சுவாதி- விசாகம்- அனுஷம்- பூராடம்- உத்திராடம்- அவிட்டம்- சதயம்- பூரட்டாதி- உத்தி ரட்டாதி இப்பதினேழு நட்சத்திரங்களும் சித்தயோகமாம். எ-று. 77

மந்தவாரம்

ஆய்ந்தசீர்மகமேசோதி யாரல்பார்சதயங்காரி
சேர்ந்திடிலமுதயோகஞ் சித்திரைபுரட்டைகுலம்
சாய்ந்தவுத்திரம்பாம்பைம்மீன் சனிவரில்மரணமென்க
தேர்ந்த திற்சொல்லாநாட்கள் சித்தயோகப்பேர்செப்பே.

இ-ள். சனிக்கிழமையில்- மகம்- சோதியாகிய- சுவாதி- ஆரலாகிய கார்த்திகை-பாராகிய-உரோகணி-சதயம் இவ்வைந்து நட்சத்திரங்களும் அமிர்தயோகமாம். சித்திரை- புரட்டையாகிய- பூரட்டாதி, குலமாகிய இரேவதி- உத்திரம்- பாம்பாகிய- ஆயிலியம். ஐம்மீனாகிய அஸ்தம். இவ்வாறு நட்சத்திரங்களும் மரணயோகமாம். இவையல்லாத-அசுவினி- பரணி- மிருகசீரிடம்- திருவாதிரை- புனர்பூசம்- பூசம்- பூரம்- விசாகம்- அனுஷம்-கேட்டை-மூலம் பூராடம்-உத்திராடம்-திருவோணம்-அவிட்டம் உத்திரட்டாதி-இப்பதினாறு நட்சத்திரங்களும் சித்தயோகமாம். 78

———

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அமிர்தாதியோகங்கள்

நக்ஷத்திரம்.	ஞாயிறு	திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி	சனி
அசுவனி	சித்	சித்	சித்	மர	அமி	அமி	சித்
பரணி	சித்	சித்	சித்	சித்	சித்	சித்	சித்
கார்த்திகை	சித்	மர	சித்	அமி	மர	சித்	அமி
ரோகணி	சித்	அமி	அமி	சித்	மர	மர	அமி
மிருகசீரிடம்	சித்	அமி	சித்	சித்	மர	சித்	சித்
திருவாதிரை	சித்	சித்	மர	சித்	மர	சித்	சித்
புனர்பூசம்	சித்	அமி	சித்	சித்	அமி	சித்	சித்
பூசம்	சித்	சித்	சித்	சித்	அமி	மர	சித
ஆயிலியம்	சித்	சித்	சித்	சித்	சித்	மர	மர
மகம்	மர	மர	சித்	சித	அமி	மர	அமி
பூரம்	சித்	சித்	சித்	அமி	சித்	த்சி	சித்
உத்திரம்	அமி	சித	அமி	அமி	மர	சித்	மர
அஸ்தம்	அமி	சித்	சித்	மர	சித்	அமி	மர
சித்திரை	சித்	சித்	சித்	சித்	சித்	சித்	மர
சுவாதி	சித்	அமி	சித்	சித்	அமி	சித்	அமி
விசாகம்	மர	மர	மர	சித்	சித்	சித்	சித்
அனுஷம்	மர	சித்	சித்	சித்	சித்	சித்	சித்
கேட்டை	மர	சித்	சித்	சித்	சித்	மர	சித
மூலம்	அமி	சித்	அமி	மர	சித்	அமி	சித்
பூராடம்	சித்	சித்	சித்	அமி	சித்	சித்	சித்
உத்ராடம்	அமி	மர	சித்	அமி	சித்	சித்	சித்
திருவோணம்	அமி	அமி	சித்	சித்	சித்	மர	சித்
அவிட்டம்	மர	சித்	சித்	மர	சித்	சித்	சித்
சதயம்	சித்	சித்	மர	சித்	மர	சித்	அமி
பூரட்டாதி	சித்	மர	மர	அமி	சித்	சித்	மர
உத்ரட்டாதி	அமி	சித்	அமி	சித்	சித்	சித்	சித்
ரேவதி	அமி	சித்	சித்	மர	சித்	அமி	மர

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அமிர்த சித்தயோகம்

யோகநன் றிரவி யத்தம உயர்மதி வான்பே ராளன்
வேகவங் காரன் சென்னி மேதைசே ரனுஷம் விண்ணோர்
ஏகமந் திரிசேர் பூசம் இருப்புகர் வாரந் தோணி
ஆகமன் சனியும் ரோணி யமுதசித் தியுமா மன்னாய்.

இ-ள். ஞாயிற்றுக்கிழமையில் அஸ்தமும், திங்கட்கிழமையில் பேராளனாகிய மிருகசீரிடமும், அங்காரகனாகிய செவ்வாய்க்கிழமையில் சென்னியாகிய அச்சுவினியும, மேதையாகிய புதன்கிழமையில் அனுஷமும், தேவர்களுக்கு மந்திரியாகிப் வியாழக்கிழமையில் பூசமும், புகராகிய வெள்ளிக்கிழமையில் தோணியாகிய இரேவதியும, சனிக்கிழமையில் உரோணியாகிய உரோகணி நட்சத்திரமும் வருவது அமிர்த சித்தயோகமாம். எ-று. 79

திதி அமிர்தயோகம்

செப்பிய குருவுக் கொன்பான் நான்குசுன் பன்னொன் சேய்க்கு
வெப்புறு கதிருக் கொன்றே டாறுபன் னொன்று வெள்ளிக்
கொப்புடை மதிக்கு மின்னே யேழிரண் டுயர்ந்த புந்திக்
கப்பதின் மூன்று மூன்றும் எட்டுநல் லமுத யோகம்.

இ-ள். ஞாயிற்றுக்கிழமையில் பிரதமையும் சஷ்டியும் திங்கட்கிழமையில் துதியையும் சத்தமியும், செவ்வாய்க்கிழமையில் சதுர்த்தசியும், புதன்கிழமையில் அஷ்டமியும், திரிதிகையும், திரயோதசியும், வியாழக்கிழமையில் நவமியும், வெள்ளிக்கிழமையில் ஏகாதசியும், சனிக்கிழமையில் சதுர்த்தசியும் வருவது அமிர்தயோகமாம். எ-று. 80

திதி சுபயோகம்

அன்னமே பரிதிக் கோரெட்டம்புலிக் கோன்பான் சேய்க்கு
மன்னிய விருமூன் றாகும் மாலவற் கொருமூன் றாகும்
பொன்னவன் றனக்குப் பக்கம் பதினொன்று புகற்குப் பன்மூன்
றின்னல்சேர் சனிக்குப் பன்னொன் றிவைசுபயோக மாமே.

இ-ள். ஞாயிற்றுக்கிழமையில் அஷ்டமியும், திங்கட்கிழமையில் நவமியும், செவ்வாய்க்கிழமையில் சஷ்டியும, புதன்கிழமையில் திரிதிகையும் வியாழக்கிழமையில் ஏகாதசியும், வெள்ளிக்கிழமையில் திரயோதசியும், சனிக்கிழமையில் சதுர்த்தசியும் வருவது சுபயோகமாம். எ-று. 81

தெத்த யோகம்

கொடுங்கதிர்க் கீரா றுன்ற குளிர்மதி தனக்குப் பன்னொன்
றடுஞ்செவ்வாய்க் கைந்து மேதைக் கிரண்டுபொன் னவனு காறு
நெடும்புகர்க் கெட்டு நீலற் கொன்பது திகழ்ந்த பக்கம்
படர்ந்தவை தெத்த யோக தீதென்பர் பலரு மன்னே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். ஞாயிற்றுக்கிழமையில் துவாதசியும், திங்கட்கிழமையில் ஏகாதசியும் செவ்வாய்க்கிழமையில் பஞ்சமியும், புதன்கிழமையில் துதியையும், வியாழக்கிழமையில் சஷ்டியும், வெள்ளிக்கிழமையில் அஷ்டமியும், சனிக்கிழமையில் நவமியும் வருவது தெத்தயோகமாம். இவைசுபகன்மங்களுக்காகாது.

நாச யோகம்

மருவிய கதிர் விசாகம் மதிவருஞ் சதயஞ் செவ்வாய்
பொருவிய விட்டம் புந்தி ரேவதி பொன்னு ரோணி
பெருகவி பூசங் காரி யுத்திரம் பேணி வந்தால்
அருளிலா நாச மென்பர் அரியநூ லாய்ந்தோர் தாமே.

இ-ள். ஞாயிற்றுக்கிழமையில் விசாகமும், திங்கட்கிழமையில் சதயமும், செவ்வாய்க்கிழமையில் அவிட்டமும், புதன்கிழமையில் ரேவதியும், வியாழக்கிழமையில்உரோகணியும், வெள்ளிக்கிழமையில்பூசமும், சனிக்கிழமையில் உத்திரமும் வருவது நாசயோகமாம், எ-று. 83

வார திதிகளின் நாசயோகம்

என்றுநீ டிருளேச் சீறும் இந்துவுக் காறு வெள்ளிக்
கொன்றிய நவமி மேதைக் கிரண்டொளி யவற்கு நான்கு
பொன்றனக் கெட்டு நீலன பூமனுக் கேழு பொல்லாக்
கன்றிடு நாச யோக மென்றறி கதிர்வேற் கண்ணாய்.

இ-ள். கூர்மை தங்கிய வேலாயுதம்போன்ற கண்களையுடைய பெண்ணணங்கே? கேட்பாயாக :—மங்குமிருளை யெங்குமிலாது பங்கப்படுத்தித்தங்காதோட்டுந் திங்களாகிய திங்கட்கிழமையில் சஷ்டியும் வெள்ளிக்கிழமையில் நவமியும், மேதையாகிய புதன்கிழமையில் துதியையும், ஒளியென்னும் சூரியனாகிய ஞாயிற்றுக்கிழமையில் சதுர்த்தியும், பொன்னாகிய வியாழக்கிழமையில் அஷ்டமியும், நீலனாகிய சனிக்கிழமையிலும், பூமனாகிய செவ்வாய்க் கிழமையையும் சத்தமியும் வருவது வாரதிதிகளின் நாசயோகமாம். இவ்வாரங்களில் இத்திதிகள்வரில் சுபகாரியங்கள் செய்யக்கூடாது. எ-று. 84

வாரந் திதி நட்சத்திரங்கூடிய நாசயோகம்

கதிரவற் கைந்தோ டாரல் கணக்கற்கேழ் பரணி காரி
எதிருமென் டோடு தோணி எரிக்கு முன்னுவாவும் ரோணி
புதியபொன்-றனக்குப் பன்மூன் றனுஷமாம் புகர்க் காரேணம்
மதியவற் கிரண்டாம் பக்கஞ் சித்திரை மருவில் நாசம்.

இ-ள். கதிரவனாகிய ஞாயிற்றுக்கிழமையில் பஞ்சமிதிதியும் கார்த்திகை நட்சத்திரமும் கணக்கனாகிய புதன்கிழமையில் சத்தமிதிதியும், பரணிநட்சத்திரமும், காரியாகிய சனிக்கிழமையில் அஷ்டமி திதியும், ரேவதிநட்சத்திரமும், எரிநாளாகிய செவ்வாய்க்கிழமையில் உவாவாகிய பூரணைதிதியும், ரோகணி நட்சத்திரமும், பொன்னவனாகிய வியாழக்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கிழமையில் திரயோதசிதிதியும் அனுஷ நட்சத்திரமும் புகராகிய சுக்கிர வாரமென்னும் வெள்ளிக்கிழமையில் சஷ்டி திதியும் திருவோண நட்சத்திரமும், மதியாகிய திங்கட்கிழமையில் துதிகைதிதியும், சித்திரை நட்சத்திரமும் சேர்ந்துவருவது நாசயோகமாம். இவ்வாரங்களில் திதிநட்சத்திரம்பொருந்திவரில் அன் நாட்களில் மங்களகாரியங்கள் செய்யலாகாது. எ-று. 58

சத்தயோகம்

அருக்கன்முன் சனியிருக முறம் பொய்கை யவிட்டந்தோணி
உருட்குடம் உத்திரத்தோ டுதித்தவா ரத்தி னின்று
தெரித்தநா ளளவு மெண்ணி யேழுக்கீய்ந் தீயாச்சேடம்
இருத்தைநா சஞ்சா வின்பம் சுபஞ் சித்தி பிரிச மென்னே.

இ-ள். ஞாயிறுமுதல் சனியீருக முறமாகிய விசாகம், பொய்கையாகிய பூராடம், அவிட்டம் தோணியாகிய இரேவதி, உருளாகியரோகணி குடமாகிய பூசம், உத்திரம், இந்நாள்முதலாக அவற்றைவாரத்தி லுற்ற நாளளவு மெண்ணின தொகையை ஏழுக்கீய்ந்து யீயாதசேடம் ஒன்ருகில் இருத்தையோகம், இரண்டாகில் நாசயோகம், மூன்ருகில் மரணயோகம். நான்காகில் அமிர்தயோகம், ஐந்தாகில் சுபயோகம், ஆருகில் சித்தியோகம், ஏழாகில் பிரிசயோகம் என்று பார்த்துக்கொள்வது அபிசித்தி கூட்டி எண்ணுவது. எ-று

அக்கினியோகம்

பிரிசவெண் டிங்கட்காறு பெரிய சேய்க் கேழு மாலுக்
குரைசெய்தா ரெட்டுப் பொன்னுக் கொன்பது புகர்க்குப் பத்து
பரியசுன் னுக்குப் பன்னொன் றருக்கற்கீ ராறு பக்கம்
விரைசெய் பூங்குழலா யங்கி யோகமென் றிசைத்தார் மேலோர்.

இ-ள். பிரியமுள்ள வெண்டிங்களாகிய திங்கட்கிழமையில் சஷ்டியும் பெரியசேயாகிய செவ்வாய்க்கிழமையில் சத்தமியும், மாலாகியபுதன்கிழமையில் அஷ்டமியும், பொன்னனுகிய வியாழக்கிழமையில் நவமியும். புகராகிய வெள்ளிககிழமையில் தசமியும், பரிய சுன்னுகிய சனிக்கிழமையில் ஏகாதசியும். அருக்கனுகிய ஞாயிற்றுக்கிழமையில் துவாதசியும். வருவது அக்கினியோகமாம். இவ்வாரங்களில் இத்திதிகள் சேரலாகாது. இவை (சுபகாரியங்களுக்கு விலக்கப்பட்டது.) எ-று. 87

எமகண்டயோகம்

நால்கதிர் மகமும் பூரம நுண்மதி பூசம் பாம்பு
ஆலங்கி யனுட மாரல் அறிஞன்மான் றலையு மத்தம்
நாலவன் தோணி மூலம் நுண்வெள்ளி சகடு சோதி
கால்சனி வோணம் விட்டம் எமகண்டங் கழித்தார் மேலோர்.

இ-ள். கதிராகிய ஞாயிற்றுக்கிழமையில் மகமும் பூரமும், நுண்மதியாகிய திங்கட்கிழமையில் பூசமும் பாம்பாகிய ஆயிலியமும், அங்கியாகிய

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

செவ்வாய்க் கிழமையில் அனுஷமும், ஆரலாகியகார்த்திகையும், அறிஞனாகிய புதன்கிழமையில் மான்றலையாகிய மிருகசீரிடமும் அஸ்தமும். நாலவனாகிய வியாழக்கிழமையில் தோணியாகிய ரேவதியும் மூலமும். வெள்ளிக்கிழமையில் சகடாகிய உரோகணியும் சோதியாகிய சுவாதியும், சனிக்கிழமையில் ஓணமாகிய திருவோணமும் விட்டமாகிய அவிட்டமும் வருவது எமகண்ட யோகமாம் இப்படிவரில் சுபகன்மங்களுக்காகாது. எ-று. 88

சகடயோகம்

மேலெழுவியாழம்நின்ற விராசிக்காறீராறெட்டில்
மாலைவெண் மதியுஞ்சேரில் வந்தநாட்சகடயோகம்
பாலகன் பிறக்கிற்சாவாம் பழிபடுமணத்தைச்செய்யில்
ஞாலமேல்வழியைப்போகில் நலமில்லைநறுமின்கொம்பே.

இ-ள். வியாழம் நின்ற விராசிக்கு ஆறுமிடத்திலும், பன்னிரண்டாமிடத்திலும், எட்டாமிடத்திலும், வெண்மதியாகிய சந்திரகிரகம் வரும் நாள்சகடயோகமாம். இதன் பலன் பாலன் பிறக்கில் சாவு. மணஞ் செய்யில்வழிபோகில நன்மையில்லை. (சுபகன்மங்களுக்கு விலக்கப்படுமென்க) எ-று.

பிரதியோகத்தின் பெயர்

நறுங்கம்பம்பிரிசம்வாளுள் புண்ணியம்மணமாகண்டம்
அறந்துணைச்சூலகண்டம் ஆக்கமூண றவோடேற்றங்
கறங்கயில்சித்திகோறல் பெறுகாயம்பரிசங்காட்சி
திறம்புகழ்காவல்வாய்ப்புத் திசைமுகனிந்திரன்பேய்.

இ-ள். நன்மையைத்தரத்தக்க கம்பம்-விட்கம்பம். பிரீசம்-பிரீதி, வாளுள்-ஆயுஷ்மான், புண்ணியம்-சௌபாக்கியம், மணம்-சோபனம், ஆகண்டம், அதிகண்டம், அறம்-சுகர்ம்மம், துணை-திருதி, சூலம்-சூலம், கண்டம்-கண்டம், ஆக்கம்-விருத்தி. ஊண்-துருவம், அறவு-வியாகாதம், ஏற்றம்-அரிசனம், அயில்-வச்சிரம், சத்தி-கோறல், விதிபாதம்-பாதம், பெறுகாயம், வரியான், பரிசம்-பரிகம், காட்சி-சிவம், திறம்-சித்தம், புகழ்-சாத்தியம், காவல்-சுபம், வாய்ப்பு-சுப்பிரமம், திசைமுகன்-பிராமியம், இந்திரன்-மாகேந்திரம், பேய்-வைதிருதி, இப்படி இருபத்தேழு நாம யோகத்திற்கும் பிரிதி நாமயோகமுங் கணடு கொள்வது. எ.று 90

விஷயோகம்

பேயுடன்பரிசங்கோறல் பெரும்பாம்புசூலங்கம்பம்
ஆயுமாகண்டங்கண்டம் அயிலொழித்திவைகள்நன்ரும்
ஓயுமாகம்பம்மூன்று சூலமஞ்சரவுக்கொன்பான்
காயுமாகண்டங்கண்டம் ஆறுமுன்கடிகைநீக்கே.

இ-ள். பேயாகிய வைதிருதியும், பரிசமாகிய பரிகமும், கோறலாகிய சித்தியும், பெரும்பாம்பாகிய வியாகாதமும், சூலமாகிய சூலமும், கம்பமாகிய விஷ்கம்பமும், ஆகண்டமாகிய அதிகண்டமும், கண்டமாகிய கண்டமும், அயிலாகிய வச்சிரமும், இந்த ஒன்பது நாமயோகமும் ஒழிய மற்ற பதினெட்டு நாமயோகமும், நன்றென்பது. மேலே சொல்லிய ஒன்பது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நாமயோகத்திலும், விஷ்கப்ப நாமயோகத்துக்கு ஐந்து நாழிகையும், பாம்பாகிய வியாகாத நாமயோகத்துக்கு ஒன்பது நாழிகையும், கண்ட நாமயோகத்துக்கு ஆறு நாழிகையும் முன்னே கழிப்பது. நின்றது ஆமென்பது பேயும், பரிசமும், கோறலும் அயிலும் ஆகாது. எ-று. 91

நித்த யோகம்

நீக்கியிக்கடிகைமுன்னே இவையுமாம்நித்தயோகம்
பூக்குழல்மடவாயித்தை வாக்கியந்திருவங்கூட்டி
சேர்த்ததிற்சென்றதிங்கள் திகதியின் தினத்தைச்செவ்வை
பார்த்ததிலொருநாள்நீக்கி நின்றநாள்பரிந்துசொல்லே

இ-ள். நித்தயோகம் பார்க்கும்படி—முன்னே கழிப்பித்து நின்ற நாழிகையே நித்தயோகம். இத்தை வாக்கியத்துருவங்கூட்டி இதனுடனே சென்ற மாதமும், தேதியுங்கூட்டி நாளைப் பார்த்து கண்ட நாளிலே ஒரு நாளைக் கழித்து நின்றநாள் இத்தனை நாளொன்றறிந்து முன்பு சென்ற இருபத்தேழில் வந்த பலாபலன் பார்த்துச் சொல்வது. எ-று. 92

திவசத் திதியோகம்.

பரித்தவன்றுறுபக்கத்தி லொன்றேத்தியேழுக்கீய்ந்தால்
திருக்கலிநந்தைகாளஞ் சேய்தனம்புகழென்றேழும்
உரைத்தனரிதனிற்காளங் கலியிவையொழியமற்றுந்
தெரித்தனநல்லதென்று திவத்திதியோகஞ்செப்பே.

இ-ள். அத்தை பக்கம் இத்தனையாம் பக்கமென்றறிந்து அதிலே ஒன்று கூட்டி ஏழுக் கீய்ந்தால் நின்ற சேடம்-ஒன்ருகில் - திருத்திவசம், இரண்டாகில்-கலிதிவசம், மூன்ருகில்-நந்தைதிவசம், நான்காகில் - காளகண்டதிவசம், ஐந்தாகில்-சேய்திவசம், ஆருகில்-தனதிவசம், ஏழாகில்-புகழ்திவசம், இந்தஏழிலும், கலிதிவசமும் காளகண்டதிவசமும், பொல்லாது. மற்றுள்ளதெல்லால் நல்லது. எ-று. 93

சூரியன் பார்வை

மேற்குகதிரோன்நின்ற நாளுமற்றதன்மேன்மூன்றுங்
கோதறுபின்னின்மூன் றுங் குருட்டுநாளொன்றுகொள்க
ஓதியவதற்குப்பின்முன் நான்குநாளொருகண்காணும்
ஏதமில்நின்றநாட்கள் இருகண்ணுண்டருக்கற்கென்றே.

இ—ள். கதிரோனுகிய சூரியன் நின்ற நாளும், அதற்கு மூன்று நாளும், பின் மூன்றுநாளும், குருட்டுநாளென்க. அதற்கு முன்னே நான்கு நாளும், பின்னே நான்குநாளும், ஒரு கண்ணெனன்க. மற்ற நாட்கள் இருகண் பார்வையுள்ள நாட்களாம். எ-று. 94

சோ-10.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சந்திரன்பார்வை

அருக்கனுர் கிழமை யாதி சென்றவக் கிழமை யாய்ந்து
பெருக்கி நான் கதனுற் பெற்றை மாமுதற் கழித்துப் பின்னை
இருக்குநா ளொன்பா னேர்கண் பன்னிரண் டிருகண் காணும்
தருக்கிலாப் பின்னி லேழுங் குருட்டுநாட் சந்திரற்கே.

இ-ள். ஞாயிற்றுக்கிழமை முதலாகச்சென்ற கிழமையை நான்கிற் பெருக்கி அத்தொகையை அசுவினி முதலாகக் கழித்து நின்ற நாளிலே ஒன்பதுநா ளொருகண், நின்றநாளிற் பன்னிரண்டு நாள் இருகண், அதற்குமேல் ஏழுநாள் குருட்டுநாள், அபிசித்து கூட்டி எண்ணுவது. எ-று. 95

கண்ணுள்ள திதி, இல்லாததிதி

சந்தித்த பிற்பக்கத்துத் தசமிவிட் டதன்பின் னைந்தும்
முந்துற்ற தாதிநான்குங் குருடுபின் னெருமூன் றேர்கண்
பிந்துற்ற வாறுங் காணும் பின்னின்முன் னெருகண் காணுஞ்
சிந்தித்த வாறுங் காணுந் திரியமூன் றிருகண் காணே.

இ-ள். அமரபக்ஷத்து ஏகாதசிமுதலைந்தும், பூர்வபக்ஷத்து பிரதமை முதல்நான்கும், குருட்டுத்திதிகளாம், பூர்வபக்ஷத்துப் பஞ்சமிமுதல் மூன்றும் ஒருகண், அஷ்டமிமுதல் ஆறும் இரண்டுகண், சதுர்த்தசியும், பூரணையும், அமரபக்ஷத்துப் பிரதமையும். அஷ்டமிமுதல் மூன்று திதிகளும் ஒரு கண்ணுள்ள திதிகளாம். துதிகைமுதல் ஆறுதிதிகளும், பூர்வபக்ஷத்து அஷ்டமிமுதல் ஆறுதிகளும் இரண்டுகண்ணுள்ள திதிகளாம். எ-று. 96

இதோமாதிரி வேறுவிதம்

பக்ஷத்தின்பார்வை நாள்.

பூர்வ-பிரதமை திதி	பூர்வ-பஞ்சமி	பூர்வ-அஷ்டமி
துதிகை	சஷ்டி	நவமி
திரிதிகை	சப்தமி	தசமி
சதுர்த்தி	சதுர்த்தசி	ஏகாதசி
அமர-ஏகாதசி	பௌர்ணமி	துவாதசி
துவாதசி	அமர-பிரதமை	திரயோதசி
திரயோதசி	அஷ்டமி	அமர-துதிகை
சதுர்த்தசி	நவமி	திரிதிகை
அமாவாசை	தசமி	சதுர்த்தி
இவை-9-ம்	இவை-9-ம்	பஞ்சமி
(குருட்டுநாள்.)	(ஒருகண்நாள்.)	சஷ்டி
		சப்தமி
		இவை-12 ம்
		(இருகண்நாள்.)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ராசிகளின் பார்வை

மேடம் இடபம் மிதுனம் கடகம் கும்பம் மீனம் இவை 6 ம் பகல்பார்வைசிங்கம் கன்னி துலாம் விருச்சிகம் தனுசு மகரம் இவை 6 ம்இரவுபார்வை

ஒருகண் ணுண்டே னுந்திங்கட் குத்தமங் கதிரோற் காகா
இருகண் ணுண்டான பக்கம் யாவர்க்கு மின்ப மெய்தும்
இருகண்ணு மில்லா நாளில் இயற்றிய கருமந் தீதாம்
விரவிய சுற்றத் தோடு கெடுமென விளம்பி னாரே.

இ - ள். சந்திரனுக்கு ஒரு கண்ணிருந்தாலும் உத்தமம் சூரியனுக்கு ஒரு கண்ணிருந்தாலுமாகாது இரண்டு கண்ணுள்ள நாட்களில் சுபகாரியஞ்செய்யலாம்

கண்ணுள்ளவாரம்

நல்லதோர் வியாழம வெள்ளி நற்புத னிருகண் ணாகும்
வல்லதோ ரிரவி திங்கள் வருமொரு கண்ண தாகும்
கல்லவே சுபமு கூர்த்தங் கருணையாய்ச் செய்வா யென்று
சொல்லினு ருமைக்கு யீசன் சுகமுள நாளீ தென்றே. 98

இதுவுமது மேற்கோள்

புந்தியும் வியாழந் தானும் புகரிரு கண்ணே யாகும்
சந்தித்த செவ்வா யோடு சனிக்கில்லை கண்கள் தானும்
வந்திடு மிரவி தானும் வலக்கண்ணு மென்றே சொல்லும்
இந்துவோ பூரணத்தி லிருகண்ணுந் தேய்வி லொன்றே.

இ - ள். நன்மையைத்தரத்தக்க வியாழம் வெள்ளி புதன் இம்மூன்று வாரங்களும் பூரணச்சந்திரனும் இரண்டு கண்ணுள்ள நாட்களாம் வலிமை பெற்ற ஞாயிறு திங்கள் இவ்விரண்டு வாரங்களும் தேய்பிறைச் சந்திரனும் ஒருகண்ணுள்ள நாட்களாம். உமையவளுக்கு யீசன் உரைத்தவாறு இரண்டுகண்ணுள்ள நாட்களில் சுபகாரியங்கள் செய்யச் சுகமுண்டாம். எ-று. 99

குருட்டுவாரம்

மற்றதோர் சனிசெவ்வாய்கள் வந்திடு மிரண்டு நாளும்
குற்றமே யுள்ள தான குருட்டுநா ளிதுவே யாகும்
நற்றமிழ் தேர்ந்தோ ரின்னுள் நல்லதோர் சுபமுகூர்த்தம்
உற்றபேர் செய்ய மாட்டா ரொரு கண்ணு மில்லா நாளே.

இ-ள். மேலே சொல்லிய நாட்கள் தவிர மற்றநாட்களாகிய சனி-செவ்வாய், இவ் விரண்டு நாட்களும் குருட்டுநாளாம். சோதிடமுணர்ந்த கணிதவல்லவர்கள் இந்நாட்களில் நல்ல சுபகாரியங்களைச் செய்ய மாட்டார்களாம். அத்துமீறிச்செய்தால் மெத்தத்தீதாகு மென்பதாம். எ-று. 100

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பாடாவரிநாள்

வெண்பா

வீடா லயந்தேரும் விக்கிரகந் தோணிசந்தை
பாடா வரிநாளிற் பாழாகும் —நாடுங்கால்
சோதி முதலைந்தும் சோணை முதல்நான்கும்
ஆதிமுதல் மூன்றும் அறி.

இ-ள். சுவாதி விசாகம்-அனுஷம்- கேட்டை- மூலம்-ஆ 5-ம், திருவோணம்-அவிட்டம்-சதயம்-பூரட்டாதி ஆ 4ம் அசுவினி-பரணி-கார்த்திகை. ஆ 3-ம், இந்தப் பன்னிரண்டு நட்சத்திரமும் பாடாவரி நாளென்னப்படும்-இதில்-வீடு-ஆலயம்-தேர்- விக்கிரகம்- தோணி-சந்தை முதலிய கட்டடம் தொழில் இவைகள் செய்யலாகாது. சுபகாரியங்களுக்கு விலக்கப்பட்டது. எ-று. 101

எரிநாள்.

விரிகதிர்மாமகம் விசாகந்திங்களாம்
அருங்குஜனுதிரை யாயிலியம்புதன்
விரைகுருசதையமும் வெள்ளிரோகணி
இரைசனிபூராட மெரிக்கும்நாட்களே.

இ-ள். ஞாயிறு-மகமும், திங்கள்-விசாகமும், செவ்வாய்- திருவாதிரையும், புதன்-ஆயிலியமும், வியாழன்-சதையமும், வெள்ளி-உரோகணியும், சனி-பூராடமும், ஏரிநாளானதால் இந்நாட்களில் புதுமனை கோலில் தீப்படும். சுபகன்மங்களுஞ் செய்யலாகாது. எ-று. 102

கரிநாள்.

சித்திரையி லாறுபதி னைந்துதேதி
சிறந்தவை காசியேழ் பதினுரேடு
மத்ததொரு பதினேழாம் ஆனிமாதம்
வருந்தேதி யொன்ருரும் ஆடி தன்னிற்
பத்தமுள்ள விரண்டுடனே பத்தீர்பத்து
பரிவாகு மாவணியி லிரண்டாந்தேதி
மெத்தவே யொன் பானும் யீர்பத்தெட்டில்
மிகமகிழ்வா யின்னமுந்தான் விள்ளுவேனே. 103

புரட்டாசி பதினுறு மிருபத்தொன்பான்
புகழான ஐப்பசியி லாருேடேதான்
சரட்டான இருபானுங் கார்த்திகைக்கும்
காஞென்று பத்துபவி னேழுதேதி
திரட்டான மார்கழிக்கு ஆருேடொன்பான்
சிறப்பான தேதிபதி ஞென்றேயாகும்
வரட்டான தைமாத மொன்றிரண்டு
மகிழ்மூன்று பதிஞென்று பதினேழ்தானே. 104
நேரான மாசிபதி னைந்து பன்னேழ்
நேர்மைபதி ஞரும்பங் குனிமாதத்திற்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பேரான ஆறுபதி னைந்தினேடு
பிறங்குபத் தொன்பான் நா ளிவைகளெல்லாம்
சீராக உமைக்கீசன் கரிநாளென்று
செப்பினு ரிந்நாளிற் சுபமுகூர்த்தம்
தாராள மாய்ச்செய்ய லாகா தப்பா
தாரணியோர்க்குத் தெரியச் சாற்றினேனே. 105

கரிநாள்-அல்லது மாசத்தியாச்சியம்

சித்திரைமீ"	6 - 15உ	கார்த்திகைமீ"	1. 10. 17உ
வைகாசிமீ"	7 - 16 - 17உ	முதற் சோமவாரமும்.	
ஆனிமீ"	1 - 6உ	மார்கழிமீ"	6 - 9 - 11உ
ஆடிமீ"	2 - 10 - 20உ	தைமீ"	1-2-3 - 11 - 17உ
ஆவணிமீ"	2 - 9 - 28உ	மாசிமீ"	15 - 16 - 17உ
புரட்டாசிமீ"	16. 29உ	பங்குனிமீ"	6 - 15 - 19உ
ஐப்பசிமீ"	6. 20உ	ஆக மாதம் 12 க்கு கரிநாள் 34.	

சிலர் கார்த்திகைமீ" முதற் சோமவாரம் நீக்கி ஐப்பசிமீ" 22-ந் தேதியாகக்கொள்வர். மேற்சொன்ன தேதிகளின் பகலும், அதற்குப் பூர்வத்தின் ராத்திரியும் சுபகாரியங்கள் செய்யலாகாது.

கிழமை பிறந்தநாள்

வந்திக்குங்க திர்க்குக்காடு மதிக்குச்சித் திரைசேய்க்காடி
புந்திக்குவிட்டம்பொன்மேற் கேட்டையாம்புகர் பூராடம்
கிந்திக்குஞ்சனிக்குத்தோணி கிழமைகள் பிறந்தநாளாம்
சிந்திக்குங் கருமமெல்லாந் தீமையாய்விளையுமமாதோ.

இ - ள். ஞாயிறு-பரணி, திங்கள்-சித்திரை, செவ்வாய்-உத்திராடம், புதன்-அவிட்டம், வியாழம்-கேட்டை, வெள்ளி-பூராடம், சனி-ரேவதி நட்சத்திரம் வருவது கிழமை பிறந்த நாளாம். இவ்வார நட்சத்திரங்களில் இருதயத்தி லெண்ணிச் செயகின்ற சுபகன்மங்களெல்லாம் தீமையாய் விளையும் ஆனதால் யாதொரு காரியமுஞ் செய்யலாகாது.

காலற்றன - உடலற்றன - தலையற்றனநாள்

கார்த்திகையும் உத்திரமும் உத்திராடம்
காலற்ற நாளாகுங் கண்டுபாரு
கீர்த்தியுள மிருகசீ ரிடமவிட்டஞ்
சித்திரையும் உடலற்ற நாளதாகும்
பூர்த்தியாம் விசாகமொடு பூரட்டாதி
புனர்பூசந் தலையற்ற நாளதாகும்
நேர்த்தியிலே மங்களமாங் காரியங்கள் 107
நீவிலக்கிச் செய்யெனவே நிசழ்த்தினேமே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இதுவுமது.

காலற்றன வுடலற்றன தலையற்றன நாளிற்
கோலக்குய மடவார் தமைக் கூடின்மலடாவார்
மாலிட்டொரு மனைமாளிகை கோலினது பாழாம்
ஞாலத்தவர் வழிபோகிலும் நலமெய்திடா ரவமே. 108

தலையற்றன வுடலற்றன நாளற்றன நாளில்
நிலைவைத்தவர் மனைகோபுரம் நீடும்பதி நாசம்
கலைகற்றவர் பிணியுற்றவர் கடுகிப்பயணத்தார்
வலையுற்றிடு மானுகுவர் மணஞ்செய்திடிற் பிணமே.

கார்த்திகை—	உத்திரம்—	உத்திராடம்—	காலற்றநாள்
மிருகசீரிடம்—	சித்திரை—	அவிட்டம்—	உடலற்றநாள்
புனர்பூசம்—	விசாகம்—	பூரட்டாதி—	தலையற்றநாள்

இ-ள். இந்நாட்களில் மனைகோலில் மனைபாழாம், பெண்திரட்சியானல் மலடாம். பயணமானல் உயிர்போம், விவாகஞ்செய்யில் அப்பெண் விதவையாம், ஆகையால் இந்தநாட்களைக்குறித்து கற்றுணர்ந்த பெரியோர்கள் இனிவந்த நூலிலாவது இதற்குச்சமாதானமாகச்சொல்லி இந்த விதியைத் தவிர்த்து நடாத்துவாராயின் நாசகாலந்தவராது, எப்படி இருந்தாலும்இந்த நாட்களை நீக்கிமற்றபரணி அசுவினி உரோகிணி திருவாதிரை பூசம் ஆயிலியம் மகம் பூரம் அஸ்தம் சுவாதி அனுஷம்கேட்டை மூலம் பூராடம்திருவோணம் சதயம் உத்திரட்டாதி ரேவதி, இப்பதினெட்டுநாளும் முழுநாளானதால் இந்நாட்களில் அவரவர்களுக்குப் பொருந்திய நாளைவைத்து மனைகோலவும், சுபகாரியங்கள் செய்யவும் உத்தமம். எ-று.

மாதாந்தம்-வருஷாந்தம்-தோஷயோகம்.

மாதாந்தம் மூன்று நாளும் வருஷாந்தம் ஒருபத்தைந்தும்
தீதாந்த கிராணந் தீண்டுந் தினமுன்பின் சேர்ந்தவேழும்
காதாந்த கண்ணாய் நாளிற் கடையிரு கடிகை தானும்
வேதாந்த முணர்ந்த மேலோர் தீதென விளம்பினரே.

இ-ள். மாதாந்தத்திலே அந்தம் மூன்றுநாளும், வருஷாந்தத்திலே அந்தம்பதினைந்துநாளும்,கிராணந்தீண்டினநாளும் அதற்குமுன்மூன்று நாளும் பின் மூன்றுநாளும், ஆக ஏழுநாளும், நட்சத்திரத்தில் அந்தம் இரண்டுநாழிகையும், சுபகன்மங்களுக்கு விலக்கப்படும். எ-று. 110

வாரசூனியம்

ஆதவற் கனுடங் கேட்டை முகமுறமடுப்பைந் தானம்
தீதறு மதிக்குப் பொய்கை தேள்மகம் புரட்டை யாரல்
கோதறு விசாகம் பொல்லாக் குருதிக்கு விட்டமோணம்
மேதறு சதையங்கேட்டை யாதிரை விளம்பலாகா.

இ-ள். ஞாயிற்றுக்கிழமையில் அனுடம், கேட்டை மகம். முறமாகிய விசாகம் அடுப்பாகிய பரணி ஐந்தானமாகிய மிருகசீரிடம் மதியாகிய திங்கட்கிழமையில் பொய்கையாகிய பூராடம், தேளாகிய அனுசம், மகரம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

புரட்டையாகிய பூரட்டாதி, ஆரலாகிய கார்த்திகை விசாகம் குருதியாகிய செவ்வாய்க்கிழமையில் விட்டமாகிய அவிட்டம், ஓணமாகிய திருவோணம் சதையம் கேட்டை ஆதிரையாகிய திருவாதி கூடில் வார சூனியமாம். எ-று. 111

இதுவுமது

விளம்பியபுதற்குமூலம் ஓணமோடாரல்விட்டம்
இளம்பரிபரணிதீதென் றியம்பினரிரணியற்கு
வளங்கொள்மான்றலைபூராடம் மரக்கலம்புணர்தம்பூரம்
துளங்கியமுலைபாய்தீதென் றுரைத்தனர் துய்ய நூலோர்.

இ-ள். புதனுக்கு மூலம் திருவோணம் கார்த்திகை அவிட்டம் இளம் பரியாகிய அசுவினி பரணி இவைகள் கூடினால் தீதாமென்றுரைத்தோடு இரணியனாகிய வியாழனுக்கு வளமைபொருந்திய மான்றலையாகியமிருக சீரிடமும், மரக்கலமாகிய ரேவதி, புணர்ந்தமாகிய புனர்பூசம், பூரம், இந் நாட்கள் நேரினும் வாரசூனியமாம். எ-று. 112

நூலறி புகற்குப் பூசம் விசாகமோடண்சகடு விட்டம்
கோலமான் றலையோ டத்தம் அனுடமுங் கொடுமை செய்யும்
நீலனுக் கத்தம் பூசம் புணர்தமுத்திரம் நீற் ரேணி
மாலையொண் குழலாய் தீதுவார சூனியம் வந்தாலே.

இ - ள். வெள்ளிக்கு பூசம் விசாகம் சகடாகிய ரோகணி அவிட்டம் கோலமான்றலையாகிய மிருகசீரிடம் அத்தம் அனுடம் நீலனாகிய சனிக்கு அத்தம் பூசம் புனர்பூசம் உத்திரம் ரேவதியும், இப்படியிம்மூன்று விருத் தத்திலும், அவ்வாரங்களிற் சொன்ன நட்சத்திரங்கள்வரில் வாரசூனிய மென்று பெயராம். (இந்நாட்களில் சுபகன்மங்களுக்கு விலக்கப்படும்.) எ-று. 113

பகலிரவு விழிப்பு ராசிகள்

விளங்கிய மேடங்குண்டை வீணைமான் கடகம் வில்லும்
இளம்பிறை யினமா யாறு மிரவுகண் காணு மென்றும்
தெளிந்திடு மரிகோல் கன்னி குடங்கயல் தேளுமெல்லாம்
விளங்கதி ரருக்கன் கூருய்ப் பகல்விழியுடைய மன்னே.

இ-ள். விளங்காநின்ற மேடம் குண்டையாகிய இடபம் வீணையாகிய மிதுனம் மானாகிய மகரம் கடகம் வில்லாகிய தனுசு. இவ்வாறு ராசிகளும், சந்திரன் இனமாகையால் இரவில் விழிப்பு, என்றும் அரியாகிய சிங்கம் கோலாகியதுலாம், கன்னி குடமாகிய கும்பம் கயலாகிய மீனம் தேளாகிய விருச்சிகம் இவ்வாறு ராசிகளும் சூரியனினமாகையால் பகலில்விழிப்பு என்றுஞ் சொல்லவேண்டியது. எ-று. 114

வடுகநாதன் நிலையறிய

வாசமுடன் நீறணியும் வடுக நாதன்
வடகிழக்குத் தெற்குடனே வாயுமூலை
தேசமுட னேகிழக்குத் தென்மேற் கோடு
நேர்வடக்குத் தென்கிழக்கு நேரேமேற்கு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ஓசையுட னேகிளம்பிச் சூல மேந்தி
ஒரு திசைக்கு நாழிகைதான் மூன்றே முக்கால்
தேசிகனு யமர்ந்திருப்பா னவனிருக்கும்
திசைமூலே தனையறிந்து செப்புவாயே.

இ-ள். வடுகநாதனென்பவன், காலையிலெழுந்து நித்தியகன்மங்களை முடித்து நீறணிந்து ஆடையணிந்து போஜனமுண்டு அடைக்காயருந்தி சந்தனம் பூசி கந்தமலர்சூடி கையிற் சூலமேந்தி வெளியே கிளம்பி ஒரு திசைக்கு மூன்றேமுக்கால் நாழிகையாக முதலாவது வடகிழக்கு 2வது தெற்கு 3வது வடமேற்கு 4வதுகிழக்கு 5வது தென்மேற்கு 6வது வடக்கு 7வதுதென்கிழக்கு 8வது மேற்கு இவ்விதமாகப் பகல்முகூர்த்தம் எட்டுத் திக்குஞ்சுற்றிவருவதால் அக்காலங்களில் அவனிருக்குந்திசையில்யாத் திரைபோகலாகாது.

நிர்வாணி.

மறையவ னருக்கன் தீயின் மதிபுகர் நிருதி தன்னிற்
கறையவன் செவ்வாய் காற்றிற் கணக்கவீ சான நந்தன்னில்
நெறியினிர் வாணிநிற்பள் நிகழ்திசை புறமாக் கொள்ளின்
வெறிகமழ் குழலினுளே வெல்வது திண்ண மன்றே.

சூலம் களரி காலன் நிலையறிய.

ஞாயிறு வியாழ மங்கி நற்றிங்கள் வெள்ளி கன்னி
சேயுடன் சனியுங் காற்று செம்புதன் வடகீழ்திக்கு
நாயிறு களரி காலன் நலமுடன் தலைவை வைத்து
ஏயதோர் வலக்கை வாட்கொண்டிடக்கைகீழ் படுப்பன்ருனே.

இ-ள். நிருவாணி சூலம் களரிகாலன் என்பது ஒன்றுதான் பகற்கா லம் திக்குகளிலும், இரவு காலம் மூலைகளிலும் நிருவாணி சூலம் நிற்கும் களரி காலன் மட்டும் வலதுகையில் வாட்கொண்டு இடதுகையின்மேல் சிரம்வைத்து முகூர்த்த நாழிகைவரையில் படுத்திருப்பன். எ-று. 117

காயமோ காட்டுங் காலிற் கைக்கெதிர் மரணங்காட்டும்
தூயதோர் சென்னி மீதிற் றுணிந்துபோர் செய்யநன்று
ஏயதோர் முதுகின் பக்கம் இகலுற வெற்றி யுண்டாம்
ஆயிரம் பேர்வந்தாலும் அவர்களை வெல்வர்தாமே.

இ-ள். பகற்காலம். சூலமறிய திங்கள் சனி கிழக்கு, செவ்வாய் புதன் வடக்கு, வியாழம் தெற்கு, வெள்ளி ஞாயிறு மேற்கு, இரவு காலம், சூலமறிய, ஞாயிறு வியாழம் அங்கியாகிய தென்கிழக்கு, அக்கினிமூலே திங்கள் வெள்ளி கன்னி மூலையாகிய தென்மேற்கு, நிருதிமூலே செவ்வாய் சனிகாற்ருகிய வாயுவு மூலே— புதன் வடகிழக்கு ஈசான்யமூலே, இந்த வாரங்களில் இந்த மூலேயில் களரிகாலன் இடது கையின்மேல் தலே வைத்து அதற்கு எதிர்மூலேயில் கால்நீட்டிப் படுத்திருப்பன். போர்புரியப் போகிறவர் காலின் புறம்போனுல்தேகத்தில் காயங்காட்டும்; கைக்கெதிர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy



போனால் மரணங்காட்டும் தலைப்புரம் துணிந்துபோனால் மலைப்பில்லாமற் சண்டைசெய்ய நன்மையுண்டாம். முதுகின்புறம்போனால் வெற்றியுண்டு. ஆயிரம்பேர்வந்தெதிர்த்தாலும் அவர்கள் மாயுப்படி போர்புரிந்து வெல்வார்களென்பதாம். எ-று.

அபிசித்து காலம்.

உத்திராடம் நாலாம் பாதம் முடிவில் நாழிகை 15 ம் திருவோணம் முதலில் நாழிகை 4ம் ஆ நாழிகை 19-ம் அபிசித்து நாளாம்.

துவிதை மூலம் முதலில் 2- நாழிகை யென்பதாம்.

சரேசன் ஜென்மலக்கினத்திரேக்காணத்து 22-வது திரேக்காணமாம். கலைக்யானன் ஜென்மநட்சத்திரத்துக்கு 54-வது காலில் இருப்பன்.

வைசேடிகன் ஜென்மநட்சத்திரத்திற்கு 87-வது காலில் இருப்பான் வருடம் பிறந்த நாளும், அதற்கு முன்னேழு பின்னேழு ஆகப் பதினைந்து தினமும் மாதப் பிறப்பும்: முன்பின் ஆக மூன்று தினமும், நட்சத்திரம் கடைசியில் 2-நாழிகையும் சுபமுகூர்த்தத்திற்கு ஆகாது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அதிக மாதம் - ஒரு மாதத்தில் இரண்டு அமாவாசை வருவதாம்.

அதிக மாதம்.

இந்தமாதத்தின் கண்ணே, யிரண்டுசங்கிராந்திவந்தால்
முந்துமாதஞ்சங்கற்பம் மொழியசங்கற்பமாதல்
வெந்திறுலருக்கன்சீத வெண்மதியுடனேகூடி.
வந்தசங்கிராந்திமாதம் வளரதிமாதமாமே.

அபதோஷி யென்பது— அவமாகம் } ஒரு கிழமையில் மூன்று திதி மூன்று நட்சத்திரம் யோகங்கள் கூடுவதாம்.

மாமகம்-மாமாங்கம் சிங்கத்தில் வியாழனிருக்க மாசி மாதம் மகரத்தில் தேவமாமகம். கும்பகோணத்தில் பல வருடம் விய வருடம் விளம்பி வருடம் சாதாரண வருடம், துந்துபி வருடம் இந்தப்படி 60 - வருடம் 5-பங்கு, முன் கூறினபடி ஐந்து தடவை வரும்.

திரிகால முகூர்த்தம் உதைய முதல் 10-நாழிகை பூர்வ முகூர்த்தம்-நடு 10-நாழிகை அடியின் முகூர்த்தம், கடைசி 10 நாழிகை கோதுளி-முகூர்த்தமாம்.

சர்ப்ப முகூர்த்தம் சூரியன் உதித்த நாழிகை 2-க்குமேல் ஒண்ணே முக்கால்வரை மூன்றே முக்கால் நாழிகையும் சர்ப்ப முகூர்த்தமாம்.

உத்திர முகூர்த்தம் உதித்து நாழிகை 4-க்குமேல் ஒண்ணேமுக்கால் வரை. ஆ. ஐந்தே முக்கால் நாழிகையும் உத்திர முகூர்த்தமாம்.

ரோகமறிய.

ஆயிலியம் உத்திரட்டாதி முதற் பாதமும், பரணி மூலம் இரண்டாம் பாதமும், திருவோணம் உத்திரம் மூன்றும் பாதமும், மிருகசீரிடம் சுவாதி நாலாம் பாதமும் ரோகமென்பதாம்.

அவமிருத்து தோஷம்.

அவிட்டம் அத்தம் முதற்பாதமும், திருவாதிரை விசாகம் இரண்டாம் பாதமும், ஆயிலியம் உத்திரட்டாதி மூன்றும் பாதமும், பரணி மூலம் நாலாம் பாதமும் அவமிருத்து தோஷமென்பதாம்.

விதவைநாள் - அலிநாள்.

புனர்பூசம் பூசம் விதவை நாளென்பதாம், மிருகசீரிடம் சதையம் அலி நாளென்பதாம்.

ஜீவனுள்ள நாள்.

திருவோணம் பூசம் ரேவதி அஸ்தம் அனுஷம் ரோகணி உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி இந்த ஒன்பது நாளும் எப்போதும் ஜீவனுள்ள நாளென்பதாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

யோகினி யறிய.

ஒன்றுடன் தசமியினுய் உயர்கொடிகுபேரனங்கி
வென்றிகொள்நிருதிசண்டன் விடைமாநத்தீசன்வானம்
நின்றுறுபூமிதன்னில் நிற்பன்யோகினியாம்பின்னும்
மன்றநல்வலமும்நன்ரும் மற்றவைநாசமாமே.

பூமி சுக்கிரன் நிலையறிய.

உரைத்திடுமுற் பிரதமையே கிழக்கதாதி
யோரெட்டு முறையுமொன்பான் விசும்பி லிரைந்
திருக்குநிலந் திரியவுநா லைந்துமிந்த
வியல்பாக வரும்பூமி சுக்கிரன்ருன்
மருக்கமழுங் குழன் மடவாய் இடமுன்னுநா
வலமுடன்பின் நன்ருகும் மண்விண்ணுநா
தரைக்குள் வினையனைத்தினுக்கும் முன்னேர்சொன்ன
சங்கியையின் வழியாமுஞ் சாற்றினேமே.

யோகினி பூமி சுக்கிரன் நிலையறிய.

பூர்வபட்சம்	திதிகள்	அமரபட்சம்	பூமி சுக்கிரன் நிலை.
கிழக்கு	பிரதமை	மேற்கு	கிழக்கு
வடக்கு	துதியை	வடமேற்கு	தென்கிழக்கு
தென்கிழக்கு	திரிதிகை	வடகிழக்கு	தெற்கு
தென்மேற்கு	சதுர்த்தி	ஆகாயம்	தென்மேற்கு
தெற்கு	பஞ்சமி	பூமி	மேற்கு
மேற்கு	சஷ்டி	கிழக்கு	வடமேற்கு
வடமேற்கு	சப்தமி	வடக்கு	வடக்கு
வடகிழக்கு	அஷ்டமி	தென்கிழக்கு	வடகிழக்கு
ஆகாயம்	நவமி	தென்மேற்கு	ஆகாயம்
பூமி	தசமி	தெற்கு	பூமி
கிழக்கு	ஏகாதசி	மேற்கு	கிழக்கு
வடக்கு	துவாதசி	வடமேற்கு	தென்கிழக்கு
தென்கிழச்கு	திரயோதசி	வடகிழக்கு	தெற்கு
தென்மேற்கு	சதுர்த்தசி	ஆகாயம்	தென்மேற்கு
தெற்கு	பௌர்ணமி	பூமி	மேற்கு
தெற்கு	அமாவாசை	பூமி	மேற்கு

இத்திதிகளில் மேற்கண்டதிக்குகளில் பூமி சுக்கிரனும் யோகினியு மிருப்பார்கள்: ஆகாயம் பூமியிலும், முன்னிலும் இடப்புறத்திலும் இருக்கும்போது அத்திக்குகளைநோக்கி சுபமுகூர்த்தங்கொள்ளுதலும். குடிபுகுதலும், யாத்திரை போகுதலும் ஆகாவாம், சூது வழக்கு யுத்தம் யாத்திரைக்குப் பிரதானம். முன் மரணம் பக்கம்ரோகம். பின ஜெயம் ஆகாயம். பூமி மத்திபம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

யாத்திரைக்கு.

ஆரலேயாதியேழ்நாள் நந்தைசேய்கிழக்காந்தெற்கு
சீரியமகத்தோடேழ்நாள் பத்திரைசனியே திங்கள்
சாருமேற்கனுடமாறுஞ் சயைபுதன் குருவடக்கு
பூரண மவிட்டமேழ்நாட் புகர்கதிர் நன்றுபோக்கே. 122

யாத்திரைக்காகாதநாள்.

போக்கினிற்பரணியாரல் ஆதிரைபூரம்மூன்றுந்
தீக்குமாயிலியங்கேட்டை சித்திரைவிசாகஞ்சோதி
யாக்கியமகமிருத்தை யாதியட்டமியுவாக்கள்
நீக்கிமேலருக்கன்சேய்மால் நிலையோரை நினைக்கலாகா. 123

இ-ள். செவ்வாய்க்கிழமை நந்தையென்னும் பிரதமை சஷ்டி ஏகாதசி இம்மூன்று திதியும், கார்த்திகை ரோகணி மிருகசீரிடம் திருவாதிரை புனர்பூசம் பூசம் ஆயிலியம் இவ்வேழுநாளும் கிழக்கு.

திங்கட்கிழமை சனிக்கிழமை பத்திரையென்னும் துதியை சத்தமி துவாதசி இம்மூன்று திதியும், மகம் பூரம் உத்திரம் அஸ்தம் சித்திரை சுவாதி விசாகம் இவ்வேழுநாளும் தெற்கு.

புதன்கிழமை வியாழக்கிழமை சயையென்னும் திரிதியை அஷ்டமி திரையோதசி இம்மூன்று திதியும், அனுஷம் கேட்டை மூலம் பூராடம் உத்திராடம் திருவோணம் இவ்வாறுநாளும்மேற்கு.

ஞாயிற்றுக்கிழமை வெள்ளிக்கிழமை பூரணையென்னும் பஞ்சமி தசமி உவா பௌர்ணமி இந்நான்கு திதியும், அவிட்டம் சதயம் பூரட்டாதி உத்திரட்டாதி ரேவதி அசுவனி பரணி இவ்வேழுநாளும் வடக்கு.
இவ்வாரம் திதி நட்சத்திரங்களில் இத்திக்குநோக்கியாத்திரைபோகலாம்:—

ஞாயிறு செவ்வாய் புதன்கிழமைகளில் இருத்தையாகிய சதுர்த்தி நவமிசதுர்த்தசி பிரதமை அஷ்டமி அமாவாசை இவ்வாறுதிதிகளும், பரணி கார்த்திகை திருவாதிரை பூரம் பூராடம் பூரட்டாதி ஆயிலியம் கேட்டை சித்திரை விசாகம் சோதி மகம் இப்பன்னிரண்டு நட்சத்திரங்களும் உபையராசிகளும் நீக்கவேண்டியது.

இதுவுமது

நினைவுறுவிட்டிவில்லு விதிபாதம்நெடியவட்டம்
துனிவுறுகிராணஞ்சூலந் தூயசங்கிராந்திதூமம்
வனிதைகேளிடித்தல்மின்னல் மழைபெய்தலிடறல்தும்மல்
இணையனசெய்யப்போகி லெய்திடும் நாசமெல்லாம்.

இ-ள். விட்டி வில்லு விதிபாதம் பரிவேடம் கிரஹணம் சூலம் சங்கிரமம் தூமம் இடித்தல் மின்னல் மழைபெய்தல் இடறல் தும்மல் இவையெல்லாம் யாத்திரைக்கு விலக்கப்பட்டன. எ-று. 124

ஜன்மராசியில் யாத்திரை.

எல்லையில்யாத்திரைக்கங் கேதுவானிராசிக்காறிற்
சொல்லியமூன்றேடொன்பான் பதினொன்று சுகத்தைநல்கும்
அல்லல்சேய்பகையைக்கோலி லாங்கவனிராசிக்கெட்டிற்
செல்லிடிற்பகையைக்கொன்று திரும்பித்தன்பதியைச்சேரும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். தன்னுடைய விராசிக்கு-6-9-3-11-போகில் சுகத்தையுண்டாக்கும். சத்துருவைச் செயிக்கப்போகில் அவனுடைய ராசிக்கு-8-ம் இராசியிலே புறப்படில் சத்துருவைச் செயம்பண்ணிச் சுகமேதிரும்பிவருவானென்பது. (தன்னுடைய விராசிக்கு 12-ம் இராசியிற் புறப்படில் சரீர வாதையுண்டாம்.) எ-று. 125

பதியுடைநற்கோளெங்கும் நன்றைந்திற்பலரும்பொல்லார்
மதியிரண்டெட்டுநாலோ டொன்பதீராறுமாய்க்குந்
திதியுடைவெள்ளிதீயன் ஏழிற்றீய்க்கோள்கள்பத்துங்
கதியுடைமூன்றுமாறும் பதினொன்றுமினியர்காணே.

இ-ள். நற்கோள் உதையாங்கிஷம் நன்று. 5 மிடம் எல்லாரும் பொல்லார். சந்திரன் 2-8-4-9-12-மிடம் தீயன். சுக்கிரன் 7, மிடம் பொல்லான் பாபர்-10-3-6-11-மிடம் நல்லர். எ-று. 126

சமுத்திரயாத்திரை.

புரவிமாலனுடஞ்சோதி போற்றுமான்பண்டியந்தங்
கரமுடன்புகர்பொன்புந்தி கலைமகிவாரம்மிக்க
சரமதாமிராசியோடு தண்சலவிராசிதன்னில்
வரமுறுமுகூர்த்தங்கொள்ளின் வாரிமேற்பயணமாமே.

இ-ள். புரவியாகிய அசுவினி, மாலாகிய திருவோணம், அனுடமாகிய அனுஷம், சோதியாகிய சுவாதி, போற்றுமானாகிய மிருகசீரிடம், பண்டியாகிய உரோகணி, அந்தமாகிய ரேவதி, கரமாகிய அஸ்தம், இவ்வெட்டு நட்சத்திரங்களும், வெள்ளி வியாழம் புதன். திங்களாகியவாரங்களும், ஜலராசியாகிய சரவிராசிகளும் பொருந்திய நாட்களிலே சமுத்திர யாத்திரை பயணஞ்செய்ய மிகவும் நன்று. எ-று. 127

வெண்பா.

ஆடனத்தங் கோல்மிதுனம் அல்லற் படையகற்றுந்
தேடு மகரஞ் சிறைசெய்யும் — நாடுபுகழ்
மீனம் நலமிக்கும் மேகமழை யாங்கும்பம்
ஊன மில்லா லக்கினத்தை யோது. 128

விற்பகையை வெல்லும் விடையிற் சுகங்காட்டும்
அற்குழலி கர்க்கடக மற்பமாம்—பொற்புவியில்
மன்னவனுஞ் சிங்கம் மகிழ்வாழ்வி ருச்சிகத்திற்
றன்னுடம்பிற் காட்டுந் தழும்பு.

இ-ள். மேஷம் பயன்படாது. துலாம் மிதுனம் துன்பமகற்றும், மகரம் சிறைப்படுத்தும், மீனம் நன்மையுண்டாக்கும் கும்பம் மழையில் நனைந்து வருவன், தனுசு சத்துருவை ஜெயிப்பன், இடபம் இன்பத்தையுண்டாக்கும, கன்னி கர்க்கடகம கருத்தில் அற்பசுகம் சிங்கம் சிந்தையில் நினைத்தபடி சந்துஷ்டியடைவன், விருச்சிகம உடம்பிற்காயங்காட்டும், ஆகையால் உத்தமலக்கினத்தையுணர்ந்தே உரை என்பதாம். எ-று. 129

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

யாத்திரை திரிசூலசக்கரம்

இலகு திரிசூலங்கள் மூன்றுகீறி
 யிடச்சூலம்யாத்திரைநா ளதனைவைத்து
வலமுறவேநாளெல்லாம் எண்ணிவந்தால்
 வழிபோவான்பிறந்தநாள் நடுவீராறிற்
பலன்மிகவேஉண்டாகும் பக்கம் ஆறும்
 பலனில்லைபடைசூல மதனில்வந்தால்
சலமிகவேஉண்டாகும் சாவான்கண்டீர்
 சத்தியமேயாத்திரைநாள் சாற்றினேமே. 130



மேற்கோள்

ஒங்குமுச்சூலநாட்க ளொன் பதின்மரணமாகும்
பாங்குறுமுள்ளில்நாட்கள் பன்னிரண் டிலியவெற்றி
தீங்குறும்புறநாளாறுந் திங்கள் சேர்நாள்தொட்டெண்ணப்
பூங்குழன்மடந்தைநல்லாய் போர்முகத்துணர்ந்து கொள்ளே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். தான்புறப்படும் நட்சத்திரத்தை முதலில்வைத்துத் தன் ஜென்மநட்சத்திரம் எந்தஸ்தானம் வருகிறதோ, அதைத்தெரிந்து பலன் சொல்லவும். சூலநாட்கள் ஒன்பதிலும் சுகமில்லை மரணமென்க வெளிப் பக்கமிருக்கும் ஆறுநாளும், வீணாகும் பலன்கிட்டாது. உட்பக்கமிருக்கும் பன்னிரண்டு நாளும், மிக்க நன்மைத்தரும். எ-று. 131

விஷ்டி தோஷமறிய.

மன்னுமுதற்சதுர்த்தியினி லைந்தாஞ்சாமம்
மருவியவட்டமியிரண்டு பன்னொன்றேழாம்
முன்னிலுவா நாற்சாமம் பிற்பக்கத்தின்
மூன்றிலிருமூன்றேழில் மூன்றுஞ்சாமம்
பன்னியபிற்பத்தினிலே யெட்டாஞ்சாமம்
பதினான்கின்முதற்சாமம் பகர்ந்தவிஷ்டி.
இன்னதனையச்சாம மென்றுமற்றை
யிரவிமுதற்றிசைகள் தீதென்றுமாமே. 132

பூர்வபட்சச்	சதுர்த்தசியில்	5-ம் சாமம்	மேற்கிலேயும்
,,	அஷ்டமியில்	2-ம் சாமம்	தென்கிழக்கிலேயும்
,,	ஏகாதசியில்	7-ம் சாமம்	வடக்கிலேயும்
,,	பூரணையில்	4-ம் சாமம்	தென்மேற்கிலேயும்
அமரபட்சத்	திரிதிகையில்	6-ம் சாமம்	வடமேற்கிலேயும்
,,	சப்தமியில்	3-ம் சாமம்	தெற்கிலேயும்
,,	தசமியில்	8-ம் சாமம்	வடகிழக்கிலேயும்
,,	சதுர்த்தசியில்	1-ம் சாமம்	கிழக்கிலேயும்

விஷ்டியுண்ணுதலால் இச்சாமங்களில் சுபகாரியங்களும் இத் திசையில் யாத்திரையுஞ் செய்யலாகாது.

பஞ்சகோள் நின்ற தோஷம்.

சூரியன் நின்ற நட்சத்திரத்திற்கு 7 ம் நக்ஷத்திரம் உற்பாத மென்றும், 10 ம் நக்ஷத்திரம் தாரகமென்றும், 15 ம் நக்ஷத்திரம் பிரம தண்டமென்றும், 21 ம் நக்ஷத்திரம் காலனென்றும் பெயராம்.

புதன் நின்ற நட்சத்திரத்திற்கு 8 ம் நட்சத்திரமும் 18 ம் நட்சத்திரமும், 24 ம் நட்சத்திரமும், கண்டமென்று பெயராம்.

சுக்கிரன் நின்ற நட்சத்திரத்திற்கு 7 ம் நட்சத்திரமும், 9 ம் நட்சத்திரமும், வியாழன் நின்ற நட்சத்திரத்திற்கு 7 ம் நட்சத்திரமும், 9 ம் நட்சத்திரமும். கொடுமையென்றும் பெயராம்.

சனிநின்ற நட்சத்திரத்திற்கு 5 ம் நட்சத்திரமும், 6 ம் நட்சத்திரமும் 10 ம் நட்சத்திரமும், 11 ம் நட்சத்திரமும், 20 ம் நட்சத்திரமும, பந்த மென்றும் பெயராம்.

இராகு கேது நின்ற நட்சத்திரங்களுக்கு 7 ம் நட்சத்திரம், பரிக மென்றும் பெயராம். இவை ஆகாவாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இன்னும் இதைபோன்ற விஷ்டிதோஷம் பஞ்சகிரகதோஷம் கிராண காலம் சூலம் சங்கிரமம் இடி மின்னல் மழைபொழிதல் இடறல் தும்மல் யாதாமொருவர் தடங்கல்செய்யப் பயணம் போகலாகாது.

ஜென்ம லக்கினத்துக்கு-2-3-5-5-11-இவை சுத்தியுண்டாகப்போக லாம் முக்கியம் 5-மிடஞ் சுத்தியாயிருக்கவேண்டியது. பெண்களுக்கு ஆடி புரட்டாசி மாசி மாதங்களும், வெள்ளி புதவாரம் விலக்கப்பட்டன.

நிஷேகம்.

பூவையேயனையார்பூத்த நாள்முதல்மூன்றுநாளும்
வேவிடார்புணர்ச்சிபின்னை விரும்புநாட்பன்னிரண்டாம்
ஏவியகருவதுண்டாம் இங்கி திலிரட்டைநாளாண்
பாவகமொற்றைநாளேற் பெண்ணெனப்பகர்மின்நீயே.

இ-ள். ஸ்திரீ பூத்த நாள்முதல் மூன்றுநாளும், விலக்கப்பட்டன. மேற் பன்னிரண்டுநாளும் கெற்பமுண்டாம் இதில் இரட்டித்தநாளெல் லாம் ஆண் ஒற்றைநாளெல்லாம் பெண். எ-று. 133

பகர்தருசோதிமூலம் பனையுருளோணந்தோணி
தகவிலுத்திரங்கள்மூன்றுஞ் சதையநாளத்தஞ்சாலப்
புதல்வர்கள் புணர்ச்சி விட்டஞ் சித்திரைபுனர்தம்பூசம்
மகசிரங்குதிரையிந்நாள் மத்திமந்தீதுமற்றே.

இ-ள். சுவாதி மூலம் அனுஷம் ரோகணி திருவோணம் ரேவதி உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி சதையம் அத்தம் இவை நிஷேகத் துக்குச் சுத்தமென்பது. அவிட்டம் சித்திரை புனர்பூசம் பூசம் மிருக சீரிடம் அசுவனி இவைமத்திபம் அல்லாதவையாகாது. எ-று. 134

திதுவரவெட்டிருத்தை தீயவர்வாரஞ்செப்பி
லோதருபிறந்தநாட்கள் பகலுடனெழிக்கப்பட்ட
தாதவிழ்குழவிகௌவம் சரராசிமிகவும்நன்ரும்
மேதகுகோட்கள்நோக்கில் மிக்கவும்விழுமிதாமே.

இ-ள். உவா அஷ்டமி இருத்தை ஞாயிறு செவ்வாய் சனி ஜென்ம நட்சததிரங்களும், பகலும் விலக்கப்பட்டன. அல்லாதவைகளுஞ் சரராசிக ளும் உததமம். மற்ற ராசிகளும் சுபக்கிரக நோக்குண்டாகில நன்மை யாம்.

விழுமியமதிகெண்டங்கள் வெள்ளிபொன்னஞ்சேரடொன்பான்
எழுமிடம்நல்லர்புந்தி யேழினேடொன்பான் நல்லன்
அழிவுறுபாபர்பன்னொன் ருரெருநமூன்றும்நல்லர்
செழுமணிப்பூணினர்கள் புணர்ச்சியைச்செப்புங்காலே.

இ-ள். கெண்டமென்ற கேந்திரஸ்தானமாகிய உதையம் 4-மிடம். 7-மிடம, 10-மிடம். சந்திரன் நல்லன். வெள்ளியும்-வியாழமும், திரி கோண ஸ்தானமாகிய உதையம். ஐந்து ஒன்பதாமிடத்தினும் நல்லர். புதன் 7-மிடம். 9-மிடம். நல்லன். பாபர். 11 மிடம். 6-மிடம். 3-மிடம் நல்லர். சரராசியும் லக்கின சுத்தமும் இருத்தல் நன்று உத்தமம். எ-று. 136

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சீமந்தம்

சொல்லுநான் காறெண்டிங்கள் தோணிமான் றலைபாரோணம்
புல்லுமுத்திரங்களத்தம் பூசங்கள் புகழ்கோள் வாரம்
நல்லவாமிரட்டைபக்கம் நலமிலேயாடுவாத்தேள்சிங்கம்
அல்லவாஞ்சீமந்தத்துக் கட்டமசுத்திநன்றும்.

இ-ள். 4 - 6 - 8 - என்னும் இரட்டித்த மாதங்களில் வளர்பிறையில் சுபவாரங்களில் அமாவாசி பூரணை நவமி நீங்கிய ஒற்றைத்திதிகளில் ரேவதிமிருகசீரிடம் ரோகணி திருவோணம் உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி புனர்பூசம் பூசம் முதலிய நட்சத்திரங்களில் சிங்கம் விருச்சிகம் நீங்கிய இராசிகளில் ஏறுபொழுதில் ஆகாயம் நிர்மலமாக இருக்கும் போது அட்டம சுத்தமான லக்கினத்தில் மாயோன் பலியாகிய சீமந்தஞ் செய்யலாம். பிராமணருக்கு மேற்சொன்ன மூன்று மாதங்களும் ஆகும். எ-று. 137

கிரகப்பிரவேசம்

தத்துங்கதிர்சேயிவையாகா சனிபொன்புந்திமதிவாரம்
அத்தந்தா சுபுனர்பூசம் அனுஷஞ்சோதியசுவினியும்
உத்தரங்களொருமூன்று மோணரேவதியிவைநன்றும்
எத்துங்குடந்தேள்சதுர்த்தியுவா வதையும் நீக்கிக்குடிபுகுமே.

இ-ள். வாரங்களில் ஞாயிறு செவ்வாயாகாது. சனி வியாழம் புதன் திங்கள் நன்று. நட்சத்திரங்களில் அஸ்தம் சித்திரை புனர்பூசம் அனுஷம் விசாகம் அசுவினி உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி திருவோணம் ரேவதி நன்று. இராசிகளில் கும்பம் விருச்சிகமாகாது பட்சங்களில் சதுர்த்தி உவா யாகாது. இவை நீக்கி குடி புகுதவும். எ-று. 138

அட்டமியுவாவிருத்தை யருக்கன்சேய்மூலமாதம்
விட்டிலுமவிஷமாம் நாழி வெள்ளியேயெதிரில்மூடம்
சுட்டியவலக்கண்சுங்கன் சூலமும்நேரேயாதல்
நட்டமாமனைபுகுந்தால் நாசமென்றுரைக்கலாமே.

இ-ள். அட்டமி உவா இருத்தை ஞாயிறு செவ்வாயும், மூல மாதமாகிய ஆனி புரட்டாசி மார்கழி பங்குனியும், விஷ்டியும், விஷகடிகையும், வெள்ளி யெதிரும் மூடம் பாடு வலக்கண் வெள்ளியும், சூலமெதிரும், குடி புகுவராகில் நஷ்டமாம். எ-று 139

கடகமுஞ்சிங்கந்தானுங் கதிரவன் திசையிற்செல்விற்
படமுடையரவந்தீண்டும் பார்மனைபாழதாகும்
திடமனையதனிற்புத்து சேர்ந்திடக்காணலாகும்
விடமெனும்விழியினளே விதிவழி திண்ணந்தானே.

இ-ள். கடகத்திலும், சிங்கத்திலும், சூரியன் திக்கில் குடிபுகுந்தால் விஷத்தையுடைய பாம்பு கடிப்பதல்லாமல் வீடும்பாழாகிப் புற்றெழும்பும். எ-று.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

துலாமொடுதேளுந்தெற்கு தோனுதல்செய்வானேல்
பலாபலனெல்லாம்பாழாய்ப் பதியுடன்குடிபோமென்று
நிலாவெனும்விழிகண்மாதே நிறைமனையொடுக்கலாகா
தலாதல முன்னே சொன்னேன் சமையமாந்திங்களுண்டே.

இ-ள் துலாத்திலும், விருச்சிகத்திலும், தென்றிசையிற் குடிபுகுந்தாலும், மனைகோலினும், தன்னுடைய சம்பத்தை யிழப்பதுமன்றி குடும்பமும் நசித்துப்போம். எ-று. 141

மகரமாங்கும்பம்மேற்கே வாழ்மனைபுகுவானாகில்
நிகரமாந்தலங்கள்வேருய் நிறைமனையழிந்தேபோகும்
சிகரமாந்தலைவன் சாவன் சிதைவுறுந்திண்ணமாகும்
அகரமாந்தலமல்லாது ஆட்சியுமல்லற்கேடே.

இ-ள். மகரத்திலும், கும்பத்திலும், மேற்கே குடிபுகினும், மனைகோலினும், அம்மனை நாசமடைவதன்றி யசமானிறந்து குடும்பம் பலவாறு சிதைந்துபோம். எ-று. 142

அங்குஞாயிற்றுநாளில் அகம்புகில்வாழ்வுமீறுந்
திங்களில்லஞ்சேரிற் றிருமகள் கடாக்ஷமுண்டாம்
பங்கமாஞ்செவ்வாய்நாளிற் பதிபுகில்சண்டையுண்டாம்
மங்கையேமயனுர்சொன்ன வண்ணமையறிந்துகொள்ளே.

இ-ள் ஞாயிற்றுக்கிழமையில் குடிபுகுந்தால் சம்பத்துண்டாம். திங்களிற் குடிபுகுந்தால் இலட்சுமி கடாட்சமுண்டாம். செவ்வாயிற் குடிபுகுந்தால் தீராத சண்டையுண்டாம். எ-று. 143

பொங்கியபுதனேயாகிற் போனவரகத்தில்வாழ்வார்
மங்கிலாவியாழநாளில் மனைபுகில்வாழ்வுண்டாகும்
பங்குறவெள்ளிநாளிற் பாரியாள் வேசியாவள்
தங்கியசனியிற்போனல் சலிப்பில்லைசுகமதாமே.

இ-ள். புதவாரத்திற் குடிபுகுந்தால் அம்மனையிற் சுகித்திருப்பர், வியாழக்கிழமையிற் குடிபுகுந்தால் சம்பத்துண்டாம். வெள்ளியிற் குடிபுகுந்தால் மனையாள் வேசியாவள். சனிக்கிழமையிற் குடிபுகுந்தால் சுபகரமுண்டாம்.

நாமகரணம்

எழிற்பெயரிடுநாள்பத்தி லீராறிலோணந்தோணி
வழுத்துமான்றலைபார்மூலம் மகமத்தன்சதையம்விட்டம்
விழுப்பனையுத்திரங்கள் விளங்கிருபூசம்நன்றும்
ஒழித்திடாறுவாவையொன்பா னொத்தித்தபக்கத்துள்ளார்.

இ-ள். பிராமணருக்குப் பன்னிரண்டாநாள், மற்றவர்களுக்கு முப்பதாநாள் நாமகரணம்பண்ணுவது, திருவோணம் ரேவதி மிருகசீரிடம் ரோகணி மூலம் மகம் அத்தம் சதையம் அவிட்டம் அனுஷம் உத்திரங்கள் மூன்றும் விளங்கும்படியான சோதி புனர்பூசம் பூசம் இவையும் இரட்டித்த பக்கங்களும் நல்லது. நவமியும் உவாவும் ஒழிய மற்றவைகள் நல்லது. எ-று. 145

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உள்வருதிலேயிராசி யுதித்திடவச்சிமுன்னே
எள்ளிருநம்மிநற்கோள் வாரத்தெட்டினிற்கோள்நீக்க
யொள்ளியபகைநீசத்தை நோக்குங்கோளுதையமாற்றிப்
பிள்ளை தன்னுமஞ்சாற்றிப் பிறைநுதற்கருங்கட்பேதாய்

இ-ள். ஸ்திரராசிகளிலே உச்சிக்கு முன்னே நற்கோள் வாரங்களிலே அஷ்டம சுத்தியுண்டாக பகை நீசக்கோள் நோக்குங்கோள் உதைய மாற்றி நாமகரணம் சாற்றுவது. எ-று. 146

கன்னவேதனம்

காணுமாறேழா ந்திங்கள் கருதுநாளீரா றீரெண்
ஒணமான் றலைபூசங்க ளவிட்டமுத்திரங்களத்தம்
தோணிசித்திரையேசெங்கை சுபர்வாரம்பன் முன்றீரா
ருணியாமிரண்டுமூன்றைந் தாறேழ்கா தணிதல் நன்றும்.

இ-ள். (பிறந்தபிள்ளைக்கு) 6 - 7 - 8- இம்மூன்று மாதத்தில் 12 - 16 - இந்நாட்களில், திருவோணம் மிருகசீரிடம் புனர்பூசம் பூசம் அவிட்டம் உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி அஸ்தம் இரேவதி சித்திரை திருவாதிரை இந்த நட்சத்திரங்களில், சுபவாரமும் சுபக்கோளுதையமுமானுல் காதுகுத்துவது நன்று. பக்கங்களில் திரயோதசி துவாதசி துதிகை திரிதிகை பஞ்சமி சஷ்டி சத்தமி இவை நல்லது. எ-று. 147

ஆளரிகுடந்தேள்தீதாம் ஆடுமானுமிரண்டும்
நாளிருபக்கஞ்சேருங் கிழமைகள் நணுகிற்றிதாம்
கோளவையெட்டில்நீக்கிக் கொடுங்கதிருச்சிமுன்னே
வாள்விழிமாதேசொன்னேம் வைத்திடுகாதுவல்லே.

இ-ள் மிதுனம் சிங்கம் கும்பம் விருச்சிகம் இவைகள் தீது. மேஷம் மகரம் மத்திபம் அல்லாதவை நல்லது இரண்டுநாளும், இரண்டுபக்கமும் சேருங் கிழமைகளாகாது. அஷ்டமசுத்தியுண்டாக உச்சிக்கு முன்னே கொள்வதென்றவாறு. 148

வல்விமூன்றிரண்டைந்தொன் பான்பன்னொன்றேழ்மதியன் நல்லன்
புல்லர்மூன்றுறுபன்னொன் றழகியர்பொன்பத்தாறும்
சொல்லியவெட்டுந்தியன் சுவகனெட்டாறேழ்பொல்லான்
நல்லனெட்டொழியப்புந்தி காதிட நவிலுங்காலே.

இ-ள். 3- மிடம், 2- மிடம், 5 மிடம், 9 மிடம், 11- மிடம், 7-மிடம், சந்திரன் நல்லன். பாபக்கிரகம், 3-6-11-மிடம், நல்லன். வியாழம் 10-மிடம், 6-மிடம், 8-மிடம், ஒழிய நல்லன், வெள்ளி 8-மிடம், 6மிடம், 7-மிடம், ஒழிய நல்லன். புதன் 8-மிடம், ஒழிய நல்லன். இந்தச்சுபதினத்தில் கன்ன வேதனஞ்செய்ய உத்தமம். எ-று. 149

அன்னப்பிராசனம்

காலமாறெட்டீராறிற் கலமுருள்கைபூசங்கள்
சீலமாவுத்திரங்கள் சித்திரைசதையமோணம்
கோலமான்றலைபுட்சோதி பனைகுருபுசர்மால்நன் றூண்
மேலுவாவிட்டையொன்பான் மீன்தேளாடொழியமேவே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். ஆருமாதமாதல், எட்டாமாதமாதல், ஆண்டு நிரம்பினாலாதல், பூர்வ பட்சத்திலே ஆகாயம் நிர்மலமானபோது அன்னபிராசனம்பண்ணுவது. (அதாவது சோறூட்டல்) இரேவதி ரோகணி அஸ்தம் புனர்பூசம் பூசம் உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி சித்திரை சதையம் திருவோணம் மிருகசீரிடம் அவிட்டம் சோதி அனுஷம் இவைநன்று. வியாழம் வெள்ளி புதன் இவ்வாரங்கள் நன்று உவாவும் நவமியும், இரட்டித்தபக்கங்களும் ஆகாது. மீனம் மேடம் விருச்சிகம் இவை விலக்கப்பட்டன. அல்லாதவை நன்று. எ-று. 150

அரைநாண்கட்ட கோடியுடுக்க

வாய்ந்த சீர்மகவுக்காண்டு நிரம்பிடவந்தநாளிற்
றேய்ந்துநீர் தன்னிற்றூய மறையினாற்சுத்திசெய்தால்
ஏய்ந்தபொன்னரைநாணகட்டும் எழிற்பெறப்பிறந்தநாட்கே
காய்ந்தவேற்கண்ணாய்கோடி கலிங்கங்கள்கடிது சேர்த்தே.

இ-ள். பிள்ளைபிறந்த 360-ம் நாளிலே குளிப்பாட்டி புண்ணியாகமும் பண்ணி பொன்னரைநாண்கட்டுவது, பிள்ளைபிறந்தநாளிலே கோடிப் புடவையுடுத்துவது. எ-று. 151

சவுளம்

சேருமுத்திரமுநான்கும் சிறந்தவுத்திராடநான்கும்
ஒருமான நலபூசங்களுத்திரட்டாதிமூன்றும்
பாருடனிருத்தையெட்டா றுவாமுதற்பக்கம்பொல்லா
வாரநற்கோள் நன்ருண்டு மூன்றைந்துமயிர் நாட்சொல்லே.

இ-ள். உத்திரம் முதல் நான்கும் உத்திராடம் முதல் நான்கும் என்றதினால், உத்திரம் அஸ்தம் சித்திரை சோதியும், உத்திராடம் திருவோணம் அவிட்டம் சதையமும், மிருகசீரிடம் புனர்பூசம் பூசம் உத்திரட்டாதி மூன்றும் என்றதினால், உத்திரட்டாதி ரேவதி அசுவினியும், ரோகணியும் நல்லது இருத்தை அஷ்டமி சஷ்டி உவா பிரதமையு மொழிந்தவை நல்லது. நற்கோள் வாரங்கள் நன்றென்பது. பிள்ளை பிறந்த மூன்ருமாண்டிலும், ஐந்தாமாண்டிலும் சவுளம் பண்ணுவது எ-று. 152

சவுளத்துக்காகாத நாள்

சொல்லியமகரங்கன்னி துலையெருதியாழ்மீன் நண்டு
நல்லவெண்மதியமாரு டீராறுந்தோறறநாசம்
புல்லர்மூன்ருறுபன்னொன் றினியர்கள்புகரேபொல்லான்
எல்லையிற்குருவீராறு தீதெட்டிலெல்லாந்தீதே.
எல்லையிற்குருவீராறு தீதெட்டிலெல்லாந்தீதே.

இ-ள். மகரம் கன்னி துலாம் ரிஷபம் மிதுனம் மீனம் கற்கடகம் இவை நல்லன். சந்திரன் 6-12 உதையம் பொல்லான். பாபர் 3-ம் 6-ம் 11-ம் நல்லன், வெள்ளி 7-ம் இடம் ஒழிய நல்லன் வியாழம் 12-மிடம், ஒழிய நல்லன். எட்டாமிடத்து எல்லாருந்தீயர். எ-று. 153

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தீயபொன்வெள்ளிமூடந் தெக்கணவயனம்மாசி
ஆயநற்பிறந்தநாட்க ளட்டமராசிக்கூறு
தூய்கதிர்சனிசெவ்வாய்நாள் தொன்மணம்புணர்ந்தவாண்டு
நாயகிகர்ப்பநாளும் நன்மயிர்கழிக்கொண்ணுதே.

இ-ள். பிரகஸ்பதி சுக்கிரன் பிரகாசமில்லாதநாளும், தெட்சணாயனத்திலும், மாசிமாதத்திலும், பிறந்த நாட்களிலும், அஷ்டமராசிகளிலும், ஞாயிறுசெவ்வாய் சனிவாரங்களிலும், விவாகம்பண்ணினவாண்டும், தன்னுடஸ்திரீ கெற்பமுண்டானநாளும், மயிர்வினைகளையப்படாது. (தாயாரிருந்தால் வெள்ளிக்கிழமையாகாது.) எ-று. 154

ஆடிபுரட்டை யைப்பசிமார்கழி
தேடியஞாயிறு செவ்வாய்சனிதனில்
கூடியுரோமங் குறைத்திடவல்லிரேல்
மாடுமக்களும் மைந்தரும்மாள்வரே.

இ-ள். ஆடிமாதம் புரட்டாசிமாதம் ஐப்பசிமாதம் மார்கழிமாதமும், ஞாயிறு செவ்வாய் சனி வாரங்களிலும், சவுளஞ் செய்துகொள்ளலாகாது. மீறிச்செய்வாராகில் மாடுமக்கள், மைந்தர், மனைவி முதல் யாவரும் மாள்வார்களௌன்பதாம். எ-று. 155

வருந்தோஷம்

வெண்பா

இரவியறு திங்கள் எண்டிங்கள் செவ்வாய்
பரவுசனி பன்னிரண்டு திங்கள்—கருதுமயிர்
பூதலத்தி லேவிழுந்தாற் பொல்லாங்கெல்லா மருவும்
மாதவத்தோர் சொன்ன மறை.

இ-ள். ஞாயிற்றுக்கிழமையிற் சவுளகம் செய்துகொண்டால் ஆறுமாதமும், செவ்வாய்க்கிழமையில் வபனஞ்செய்ய, எட்டுமாதமும், சனிக்கிழமையில் மயிர்கழிக்க, ஒருவருடமுந் தோஷமேற்படும் என்று மாதிடம் பொருந்திய சோதிட நிபுணர்கள் ஆய்ந்துசொன்ன வேதமாம். எ-று. 156

வித்தியாரம்பம்

மகவினுக்கைந்திற்பெண்ணை மாவிருபூசஞ்செங்கை
யகலியவோணமாதி மூன்றத்தமாகிமூன்று
பகருமுத்திரங்கள்தோணி பார்நலமிருத்தைபன்மூன்
றிகலுமெட்டுவாவீராறு நீக்கிமேலினிதுகூறே.

இ-ள். பிள்ளைபிறந்த ஐந்தாம் வருடம், உத்தராயணம்வந்தவுடன் ஆசாரியனைப்பூசித்து வித்தியாரம்பம் துவக்குவது. அனுஷம் அசுவினி புனர்பூசம் பூசம் திருவாதிரை திருவோணம் அவிட்டம் சதையம் அத்தம் சித்திரை சோதி உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி ரேவதி ரோகணி இவைநல்லது. இருதைதிரயோதசி அஷ்டமிஉவாவும் துவாதசியும் விலக்கப்பட்டன. எ-று. 157

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கூறியசனிசேய்வாரம் நிலையோரை கொள்ளார்திங்கள்
ஏறியபத்துமாறு மூராறேழியம்பார்புந்தி
சீறிடுமாறில்வெள்ளி யாறேழெட்டணைத்துந்தீயர்
வாறுபன்னொன்றுமூன்று பாபர்நன்றாகுமாய்ந்தால்.

இ-ள். சனி செவ்வாயும் ஸ்திரராசிகளும் விலக்கப்பட்டன. திங்களாகி கங்குற்கிறையவன் உதையம் 10-மிடம் 6-மிடம் 12-மிடம் 7-மிடம் பொல்லான். புதன் 6 மிடம் பொல்லான். சுக்கிரம் 6 மிடம் 7-மிடம் பொல்லான். எட்டாமிடம் எல்லாருந்தீயர். பாபர் 6-3-11-மிடம் நல்லரென்க. (நாலாமிடம் சுத்தமாயிருக்க நன்மையாம்) இனியொன்று சிறப்பித்ததினால் சத்சசாஸ்திரம் சாமுத்தியசாஸ்திரம் காந்தருவநீதி சாஸ்திரம் இவையிற்றுக்குப் புனர்பூசம் நன்று ஆயுர்வேதாகம சர்வசாஸ்திரம் இவையீற்றுக்கு அவிட்டம் நல்லது. சோதிட சாஸ்திரத்துக்கு சோதி நல்லது. கூபசாஸ்திரத்துக்கும் தர்க்கசாஸ்திரத்துக்கும் திருவாதிரை நல்லது. அசுவசாஸ்திரத்துக்கு அசுவினி நல்லது. கன்மசாஸ்திரங்களுக்குத் திருவோணம் நல்லது. யோக சாஸ்திரத்துக்குச் சதையம் நல்லது. எ று. 158

உபநயனம்

ஆய்ந்தமுப்புரிநூலேழில் அணியுநாளனுடமத்தம்
வாய்ந்தவுத்திரங்கள்சோதி மான்றலையுரோணிவாசி
ஏய்ந்தசித்திரைபூசங்கள் தோணிநன்றிருத்தையெட்டும்
காய்ந்தபன்னொன்றுபத்து முதலுவாக்கழிமுற்பக்கம்.

இ - ள். ஏழாம் வயதில் உபநயனம் பண்ணுவது. (அதாவது பூணூற்சடங்கு) அனுஷம் அத்தம் உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி சோதி மிருகசீரிடம் உரோகணி அசுவினி சித்திரை புனர்பூசம் பூசம் ரேவதி இவை நன்று. பக்கங்களில் இருத்தையும் அஷ்டமி ஏகாதசி பிரதமை உவா விலக்கப்பட்டன. எ - று. 159

பக்கம்பின்னைந்துபின்பு பாபர்தம்வாரயோரை
தெக்கணமயனந்திங்கட் குடையனசெம்பொன்புந்த
சுக்கிரனாறிற்சோமன் றேற்றமுமீராறெட்டிற்
புக்கவரேழின் மூன்றில் ஆறுபன்னொன்றுபொல்லார்.

இ - ள். அமரபக்ஷத்துப் பஞ்சமிக்குப் பின்பு பாபவாரங்களினும், அவருடை ராசிகளினும், தெட்சணாயனமும், சந்திரனுக்குடையவும், புதன் வியாழம் வெள்ளியும் 6-மிடம் நல்லர். சந்திரன், உதயமும் 12-மிடம், 8-மிடமும், பொல்லான். எட்டாமிடத்தில் எல்லாக்கோளும் விலக்கப்பட்டன. 3-6-11-மிடம், பாபர் நல்லர். எ-று. 160

பொல்லாதயோகம்விட்டி விதிபாதம்புகர்பொன்மூடம்
சொல்லாதகரணங்கம்பஞ் சூனியந்தூகணங்கள்
இல்லாநாப்பிறந்தநாட்கள் பொல்லாநாளிவையொழித்து
நல்லார்கள்நோக்கமுன்னூல் சேர்த்தினன்மறையினாலே.

இ-ள். பொல்லாத யோகங்களும், விஷ்டியும், விதிபாதமும், சுக்கிர பிரகஸ்பதி மூடங்களும், சூனியம், ஸ்தூகணம், குருட்டுநாள், பிறந்த நாட்களொழித்து பொருந்தாதநாள் தவிர சுபக்கிரகங்கள் நோக்குண்டாக ஆகாயம் நிர்மலமாகக்கொள்வது. எ-று- 161

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

முடி சூட்டல்

கோதில்மான் றலையுரோணி குதிரையுத்திரங்களத்தம்
சோதிசித்திரைபூசங்கள் தோணியோட னுடமோணம்
ஏதமிலவிட்டம்நன்ரு மிரண்டைந்தேழ்பன்மூன்றிரா
ரேதியமூன்ரும்பக்கம் உயர்முடிசூட்டல்நன்றே.

இ-ள். மிருகசீரிடம் ரோகணி அசுவினி உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி அத்தம் சோதி சித்திரை புனர்பூசம் பூசம் ரேவதி அனுஷம் திருவோணம் அவிட்டம் இவை நன்று. பக்கங்களில் துதிகை பஞ்சமி சத்தமிதிரையோதசி துவாதசி திரிதிகை இவை நன்று. எ-று. 162

நன்றுநற்கோட்கள்வாரம் அங்கிஷம்நவிலுமோரை
கன்றிய தீக்கோட்டீது கன்னியுந்துலாமுமாகா
வன்றிறல்முடிசூட்டோரை யுடையவாள்கோளை நற்கோள்
நின்றிடி அறவுநன்று நோக்கிடவறிவுண்டமே.

இ-ள். இவர்கள் நட்சத்திர ஹோரைகளினும், சுபவாரங்களிலும் கன்னிதுலாமொழிய நன்று. அபிஷேகம்பண்ணும்போது உதிக்கிற ராசியுடைய கோளை நற்கோள் மித்திர ஸ்தானத்தில் நின்று நோக்கில் பந்துக்களையுடையதாம். எ-று. 163

உண்டாயவுச்சம்நின்ற கோளுச்சம்நோக்குமாகில்
கொண்டானென்பிரநாடெல்லாங் கோளவைநீசம்நன்று
தண்டாதுநீசம்நோக்கிற் சாலநோய்கொண்டுசாவர்
பண்டாவுமொழியாய்வெய்ய பகைநோக்கிற்பகையாம்பாரே.

இ-ள். அபிஷேகம் பண்ணுகிறவன் ராசியுடையகோள், உச்ச ஸ்தானத்திலே நின்று உச்சஸ்தானத்துக்கோளை நோக்குமாகில் பிறநாடெல்லாங்கொள்ளுமென்பது அந்தக்கோள் நீசக்கோளை நோக்குமாகில் நோய்கொண்டு மரணமென்பது. சத்துருஸ்தானத்திலே நின்று. சத்துருஸ்தானத்தின் கோளை நோக்குமாகில் சத்துருக்கள் பலருமுண்டாம். எ-று. 164

பார்த்திடிற்றீக்கோளாறும் பன்னொன்றுமூன்றும்நல்லர்
சீற்றவேழுதையமைந்துஞ் சிறந்தபன்னொன்ரேடொன்பான்
ஏற்றநற்கோள் கள்நன்ரு மெட்டிடமெல்லாம்பொல்லார்
ஆற்றலையுடையமன்ன ரணிமுடிசூடும்நாளில்.

இ-ள். பாபர் 6-11-3-ம் நல்லர். சுபர் 7-உதையம் 5-11-9-ம் நல்லர், அஷ்டமத்தில் எல்லாரும் பொல்லார். இந்த சுபதினத்தில் முடிசூட்டல் நன்று. எ-று. 165

உழவு செய்ய.

பார்கிழங்குத்திரங்கள் படகிருபூசமத்தம்
சீரியவாகுமொன்பா னிரட்டித்தபக்கந்தீதாங்
கூரியமகரம்நண்டு முண்டைமீன்மிதுனம்நன்ரும்
காரியுங்கதிருந்தீதாம் செய்யுககருதுவாற்கே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். ரோகணி மூலம் உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி இரேவதி புனர்பூசம் அஸ்தம் இவைநன்று. நவமியும், இரட்டித்த பக்கங்கணுமாகாது இராசிகளில் மகரம் கடகம் ரிஷபம் மிதுனம் மீனம் இவை நன்று. சனி ஞாயிறு ஆகாது. பூர்வபட்சத்திலே ஏகாக்கிரசித்தனாய் தானஞ்செய்து சில புஷ்பங்களினாலும், நீராலும், பூமியை அருச்சித்து கிருஷியாரம்பஞ் செய்வது. எ-று. 166

விதைக்க

செப்பிடுமூலமத்தம் ரேவதியனுடந்தீபம்
தப்பிலுத்திரங்களோணம் மகமுறஞ்சதையம்பூசம்
ஒப்பிலாவுரோணியிந்நா ளுத்தமம்புனர் தம்விட்டம்
ஐப்பசிமகசிரங்கள் மத்திமம்விதையணங்கே.

இ-ள். மூலம் அத்தம் இரேவதி அனுஷம் சோதி உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி திருவோணம் மகம் விசாகம் சதையம் பூசம் ரோகணி இந்நாட்கள் உத்தமம். புனர்பூசம் அவிட்டம் அசுவினி மிருகசீரிடம் மத்திமம். எ-று. 167

அணங்குகேளஞ்சேழ்பன்மூன் றமைந்தபன்னொன்றுமூன்றும்
இணங்குமூன்றுவாவும்நன்று மீரைந்துமிரண்டுமாறும்
குணங்கள் மத்திமமாங்குண்டை நண்டரிமகரமீனம்
வணங்குநன்றென்றுவிணை குடந்துலாஞ்சமம்வழுத்தே.

இ-ள். பஞ்சமி சத்தமி திரையோதசி ஏகாதசி திரிதிகை பூரணை இவை உத்தமம். தசமி துதிகை சஷ்டி இவை மத்திமம். ரிஷபம் கடகம் சிங்கம் மகரம் மீனம் இவை உத்தமம். மிதுனம் கும்பம் துலாம் இவை மத்திமம். எ-று. 168

வழுத் திடில்நற்கோள்வார வுதையநன்றெட்டிற்கோளைக்
கழுத்திடுமருக்கன் வாரங் காலமேநெல்லைவித்து
ஒழித் திடிற்சனியின்வார முச்சியிலெள்ளைவித்து
கொழித்தசேய்வாரம்வித்துக் கொள்ளுடன் வரகுவித்தே.

இ-ள். நற்கோள்வாரம் நன்று. தீக்கோள்வாரந்தீது, எட்டாமிடத்தில் எல்லாருந்தீயர். ஞாயிற்றுக்கிழமை உதையத்திலே நெல்லை விதைக்கலாம். சனிக்கிழமையினுச்சியில் எள்ளைவிதைக்கலாம். செவ்வாய்க் கிழமை உதையத்திலே கொள்ளும் வரகும் விதைக்கலாம். எ-று. 169

கூறிய முதல்நாள்நன்று கரும்பிடக்கொடிக்காற்காயில்
ஏறியமூலம்நன்ரும் எள்விதைக்கனுடஞ்செச்காம்
மாறிலாமரங்கள் வைக்க வுரோணியாம்வழுதலைக்குத்
தேறியபரணிநன்ருஞ் சித்திரைபயறு வித்தே.

இ-ள். கரும்பிட அசுவினி, கொடிக்காலுக்கு ஆயிலியம் மூலம் எள்ளு விதைக்கவும், அனுஷம சதையம் மரம்வைக்க, ரோகணி வழுதலைவைக்கப் பரணி, பயிறுக்குச் சித்திரை, இந்நாட்களில் இப்பயிரிடுவது. எ-று 170

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இதுவுமது.

மேல் நோக்கு நாள்

ஓணமாதிரை பூசமுரோகணி
யேணமுத்திர மூன்றுசதையமே
ஆணமான அவிட்டமோடொன்பதும்
நாணமின்றிமேல் நோக்கியநாட்களே.

இ - ள். திருவோணம் திருவாதிரை பூசம் ரோகணி உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி சதையம் அவிட்டம் இவ்வொன்பதும் மேல்நோக்கிய நாளென்னும் ஊர்த்தமுகநட்சத்திரம், இந்த நட்சத்திரத்தில் மாடலா வாழை கமுகு தென்னை பனை நெல் வரகு சேழ்வரகு கம்பு சோளம் கடலை துவரை ஆமணக்கு முதலாகிய மேல்முகப்பயிர்கள் செய்வதுமன்றி, ஏர் வைக்க கொடி மரம் மதில் வாசற்படி விதி யானை குதிரையேறுதல், கொட்டாரம் பந்தல் சாலை சோலை தோட்டம் கிரயம் விற்கிரயம வியாபாரம் இராஜதெரிசனம் பட்டாபிஷேகம் மாடமாளிகை கூடகோபுரம் மெத்தை வீடுகள் கட்டவும், கிரகபிரவேசம் உத்தியோகஞ்செய்யவும், ஆபரணம் வாங்கவும் இவைமுதலியது செய்ய உத்தமம் எ று. 171

பக்க நோக்கு நாள்

போதமாம்படர் நாட்சோதிசித்திரை
பேதமின்றிய அசுவினிமான்றலை
ஆதியஸ்தம் அனுஷமும்ரேவதி
நீதிநற்புனர் பூசமுங்கேட்டையே.

இ - ள். சுவாதி சித்திரை அசுவினி மிருகசீரிடம் அஷ்தம் அனுஷம் ரேவதி புனர்பூசம் கேட்டை இவ்வொன்பதும், பக்கநோக்கிய நாளென்னும் புறமுக நட்சத்திரம் இந்த நட்சத்திரத்தில் சுவர்வைக்க நிலம் வாங்கிப்பயிரிட பூசினி பாகல் அவரை முதலாகிய கொடிவகை பயிர்களும் பட்சிகள் வளர்க்க, கன்று காலிவாங்க, கொட்டாரங்கட்ட, யாத்திரைபோக யானை குதிரை கழுதை ஒட்டகம் பசு எருமை மாடு, ஆடு முதலிய நாலுகால் ஜீவன்களும், பலவிதவண்டிகளும், கிரயம் வாங்குதல், மேய்க்குதல், ஏத்தம உழவு விதை விதைக்க கால்வாய் வெட்ட, வாசற்கால் தூண் முதலியது நாட்டுதல் இவை யாரம்பிக்க உத்தமம். எ-று. 172

கீழ் நோக்கு நாள்

பரணிகார்த்திகை பாம்பும்விசாகமும்
முரணிமுப்பூரம் மூலம்மகத்தொடு
தரணிமீதினிற் ருனிவையொன்பதும்
கிரணமன்றிய கீழ்நோக்குநாட்களே.

இ - ள். பரணி கார்த்திகை ஆயிலியம் விசாகம் பூரம் பூராடம் பூரட்டாதி மூலம் மகம் இவ்வொன்பதும் கீழ்நோக்கிய நாளென்னும், அதோமுக வெற்றிலைவள்ளி சிறுவள்ளி ஆள்வள்ளி கருணை உருளை சேம்பு முதலாகிய கிழங்குவகைச் செடிகளும், வெங்காயம் வெள்ளைப்பூண்டு முதலாகிய பூண்டு வகைப் பயிர்களும், மஞ்சள் இஞ்சி முதலிய வேர் வகைகளும், குளம் கிணறு புதையல் களஞ்சியம் வேலி சொக்கட்டான் தானியவகை வைக்கவும் சங்கு ஸ்தாபனம் கிரகப்பிரவேசம் கணிதம் ஆரம்பிக்கவும், இவைகளில் முதற்சாமம், உத்தமம். 2-ம் சாமம் சந்தோஷம். 3-ம் சாமம் மத்திமம். 4-ம் சாமம் அதமம், உத்தமமொன்றே சிலாக்கியம். எ-று. 173

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கதிரறுக்க

வித்தகமகமுரோணி விசாகமா திரையோடோணம்
அத்தமேபரணிசாவ வழகிதா மிருத்தையாகா
வொத்தபொன் திங்கள்புந்தி யுதையவாரங்கள் நன்ரும்
குத்துமேறரிதேள் நண்டு குடங்கதிரறுக்க நன்றே.

இ ள். மகம் ரோகணி விசாகம் திருவாதிரை திருவோணம் அஸ்தம் பரணி அவை நன்று. இருத்தையாகாது. வியாழம் திங்கள் புதன் இந்த வாரங்களும் இவர்களுதயங்களும், நன்று. ரிஷபம் சிங்கம் விருச்சிகம் கற்கடகம் கும்பம் இவை கதிரறுக்க நன்றென்பது. எ-று. 174

நவபோஜனம்

நன்றிருபூசம்பார்மா நன்கலமோணபுட்செக்கு
ஒன்றிய நவ்விமூலம் முறம்பனை யுத்திரங்கள்
துன்றுசித்திரை யைந்தானஞ் சபரின்பம்புதிதூண்தூய்தாங்
கன்றுவாவிருத்தைமீன்தேள் மறிதவிர்காந்தட்கையாய்.

இ - ள். புனர்பூசம் பூசம் ரோகணி அசுவினி இரேவதி திருவோணம் அவிட்டம் சதையம் அஸ்தம் மூலம் விசாகம் அனுஷம் உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி சித்திரை மிருகசீரிடம் இவைநன்று. நற்கோள் வார உதையங்கள் நனறு. இருத்தை உவாவும், மீனம் விருச்சிகம் மேடம் இவை தவிர மற்றுள்ளவையெல்லாம் நவபோசனத்துக்கு நன்று. (கதிரறுப்பாரு மிதுவே காலமாகக் கொள்வர்.) எ-று. 175

விருந்துண்ண

வெண்பா

வெள்ளிசனி திங்கள் விருந்துண் புதனுகும்
கள்ள வியாழங் கசப்பிக்குந்—தெள்ளுகதிர்
தீராப் பகைகாட்டுஞ் செவ்வாய் தனக்குமோ
வாராப் பகையும் வரும்.

இ - ள். வெள்ளி சனி திங்கள் புதன் இந்நான்கு வாரமும் விருந்துண்ண நன்மையாம். வியாழம் ஞாயிறு செவ்வாய் இம்மூன்று கிழமைகளில் புதிதாய் வந்தோர்க் குணவு கொடுத்தால், தீராப்பகையும், போராட்டமான கலகமும், மனச்சஞ்சலமு முண்டாகும். எ று. 176

பரிகாரம்

செவ்வாய்க்குப் பாலாந் தினகரற்கு நெய்யாகும்
மெய்யாம் வியாழம்வெந் நீராகும்—ஐயாகேள்
இன்னு ளொருவிருந்தை யிட்டிட வேண்டிட்டால்
சொன்னோம் பரிகாரந் தான்.

இ - ள். விருந்துண்ண விரும்பிடில் செவ்வாய்க்குப் பரிகாரம். பாலுண்ணல், ஆதிவாரத்திற்கு நெய்யுண்ணல், வியாழக்கிழமைக்கு வெந்நீருண்ணல், மிக்க நன்மை யுண்டுபண்ணும். எ-று. 177

தானியமீட்டுவைக்க

கைவருமத்தஞ்செங்கை மகமுருளனுடங்கங்குற்
யொய்யிலுத்திரங்களோணம் மகசிரஞ்சனிபொன்வாரம்
தையல்மாவிருத்தைவிட்டி சரராசியொழித்தலாகிற்
தையலாய்குளிகன் றன்னில் தாளமைதாவியந்தான்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இ-ள். அத்தம் திருவாதிரை மகம் ரோகணி அனுடம் பரணி உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி திருவோணம் மிருகசீரிடம் இவை நன்று. சனியும் வியாழமும் வாரத்தில் நல்லது. இருத்தை சஷ்டியும் சரராசியுந்தீது. மற்றவையிற்றில் குளிகனிலே, கருப்பவதியும், கன்னிகையும், அமங்கலையும், அல்லாத சுமங்கலிகளால் பூசித்து களஞ்சியத்தில் போடும்படி செய்வது உத்தமம். எ-று. 178

தானியமெடுக்க வாங்க

தானமாவத்தஞ்சோதி சதைய முத்திரங்கள்விட்டம்
ஊனமில்விசாகந்தோணி யுருளிருபூசமோணம்
ஆனசித்திரையைந்தானம் அனுட நாள்மகமூலத்தில்
வானுறைசனிபொன்கூடில் வைத்ததானியங்கள்வாங்கே.

இ-ள். அசுவினி அஸ்தம் சுவாதி சதையம் உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி அவிட்டம் விசாகம் இரேவதி ரோகணி புனர்பூசம் பூசம் திருவோணம் சித்திரை மிருகசீரிடம் அனுடம் மகம் மூலம் இவை நன்று. சனி குருவாரம் நன்று. இவர்கள் உதையாங்கிஷங்களிலே வைத்த தானியம் எடுக்க வாங்க உத்தமம். எ-று. 179

வாகனமேற்றல்

நான்மறையதனுகிற்சிங்கம் ஞாயிற்றில்முன்னுவாவில்
தானமர்தருநாளோணந் தையல்ஞாயிற்றுவாவில்
ஊனமிலத்தஞ்சோனு ளோங்குவாகனஞ்சேய்மீனம்
மானனுயமிர்தநாளில் மயிர்தனைக்குறைத்தல்மாண்பே.

இ-ள். ஆவணிமாதத்திலே, ஆதிவாரத்தில் பூரணையோடு கூடின வோணமும், பரட்டாசிமாதத்தில் அஸ்தமும், அவிட்டமுங்கூடின பௌரணையில் மீனத்திற் செவ்வாய்நிற்க, உவா கன்மத்துக்குத் தந்தான் சுபக்கிரங்களிலே சவுளத்துக்குச் சொன்ன காலங்களிலே வாகனங்கொள்வது. எ-று.

பூஷணம்பூண

அழகியகுதிரையத்தஞ் சித்திரையனுடம்பூசந்
தொழில்கொள்மான்றலைபார்தோணி சுங்கன்மால்சனிபொன்திங்கள்
எழில்கொள் பூரணையேநந்தை யெருதியாழ்தனு மீன்கன்னி
தொழுதுபொன் பூணுமாதற் கணியெலாம்புகழ்ந்துகாணே.

இ-ள். அசுவினி அத்தம் சித்தரை அனுடம் பூசம் மிருகசீரிடம் ரோகணி ரேவதி இந்நாட்களிலே வெள்ளி புதன் சனி வியாழம் திங்கள் இவ்வாரங்களிலே, பக்கம் பூரணை நந்தையிலே இராசிகளில் ரிஷபம் மிதுனம் தனுசு மீனம் கன்னி இவையில் பொன்பூண நன்று. இது ஸ்திரீகளுக்கு விசேஷமான பூஷணம் வருவதுடன் அழகுமுண்டாம். எ-று. 181

கோடியுடுக்க

பூட்டுமுத்திரங்கள்தோணி புரவிபாரிருபூசங்கள்
ஆட்டியவத்தமாதி யைந்துமேலவிட்டம்நற்கோன்
சூட்டியவாரம்நன்ருந் துயரமெட்டிருத்தைசிங்கம்
கோட்டியகேள்வன் ... நாட்கூடலாகாதே.

CC0 Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இ-ள். உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி ரேவதி அசுவினி ரோகணி புனர்பூசம் பூசம் அஸ்தம் சித்திரை சோதி விசாகம் அனுடம் அவிட்டம் இவை நன்று. நற்கோள் வார உதையங்கள் நன்று. அஷ்டமி இருத்தை சிங்கம் மேஷம் கற்கடகம் துலாம் மகரம் இவையீற்றில் கோடிப் புடவை யுடுக்க லாகாது. எ - று. 182

சாத்திடுகூறைநற்கோ ளுதையத்துந்திண்ணியோர்கள்
ஏத்துமூன்ருறுபன்னென் றினியரேழ்மிகமால்நல்லன்
நீத்திடுமெட்டிற்கோளை நின்றபன்னிரண்டுநான்கும்
ஆத்தவண்புகரோன்றிய னுடைமாட்டதிகநல்லாய்.

இ-ள். நற்கோள் வாரவுதையங்கள் நன்று, பாபர்-3--6-11-மிடல், நல்லர். புதன்-7-மிடம், நல்லன். எட்டாமிடத்து எல்லாரும்பொல்லார். 12-4-ல்- வெள்ளி பொல்லான். அல்லாதவை யெல்லாம் நன்று. எ-று. 183

இதுவுமது

காரியிலழுக்கதாகும் சுதிரவன் பீடைகாட்டும்
மாரியில்நனையுந்திங்கள் வன்புதன்கந்தையாகும்
வீரியமில்லைச்செவ்வாய் வெள்ளியில்மடந்தைசேர்வள்
கூரியவியாழம் நன்ருங் குலவியவாடைசாத்த.

இ-ள். நல்லாரையும் பொல்லாரையும் எல்லாரையும் வல்லாண்மையாய் ஆட்டிவைக்கும் சனிபகவான் வாரமாகிய சனிக்கிழமையில், கோடியுடுத்தினுல், தேடியழுக்கடையும். கதிரவன் நாளாகிய ஞாயிற்றுக் கிழமையில் ஆடையணிந்தால் பீடைகாட்டும். திங்கட்கிழமையில் உடையுடுத்தினுல் தங்கள் தேகமெல்லாம் நனையும்படி மழைபெய்யும். புந்திவாரத்தில் கந்தை கட்டினுல் சிந்தைமகிழக் கந்தையாகும். செவ்வாக் கிழமையிற் சேலையுடுத்தினுல் எவ்விதமும் வீரியபராக்கிரமங் கிடையாது. வெள்ளிக்கிழமையில் வெள்ளாடைகொண்டால் உள்ளமகிழ ஒண்டொடி சேர்வள். பொன்னன் வாரமாகிய வியாழக்கிழமையில் வேஷ்டியுடுத்தினுல் நன்னயமாக நன்மையை யுண்டுபண்ணும். எ று. 184

இதுவுமது

பருதியிற்கடகங்கும்பம் பார்மதிமீனமேஷம்
குருதியிற்றனுசுகன்னி கோள்புதன் மிதுனமாகும்
சுருதிபொன்னரியும்புல்லுஞ் சுக்கிரன் துலாமுந்தேளும்
வருசனிமகரமாகும் வாரத்திற்கோடிசாத்தே.

இ-ள்.	ஞாயிற்றுக்கிழமை	கடகம்-கும்பம்.
	திங்கட்கிழமை	மீனம்-மேஷம்.
	செவ்வாய்க்கிழமை	தனுசு-கன்னி.
	புதன்கிழமை	மிதுனம்.
	வியாழக்கிழமை	சிங்கம்-இடபம்.
	வெள்ளிக்கிழமை	துலாம் விருச்சிகம்.
	சனிக்கிழமை	மகரம்.

இவை கூடிய காலத்தில் கோடிசாத்தல் நலமெனச் சிலர் சொல்லுவர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மாடுவாங்கக் கூடாநாள்

உத்திரம் அஸ்தத்தோடும் ரேவதிமூலத்தோடும்
சித்திரைபரணியோடும் தேய்பிறைமூன்றுநாளும்
கத்தவர்காலிகொள்ளார் கருதியேகொள்வாராகில்
வித்தவன் வீடுபாழாம்கொண்டவன் மாடுசாவாம்.

இ-ள். உத்திரம் அஸ்தம் ரேவதி மூலம் சித்திரை பரணி அரை பக்கத்து பிரதமை துதியை திரிதிகை புதன் வெள்ளி வாரத்தில் மேற் சொன்ன நாளும். பக்கமும் வரும்போது பசு எருமை காளை முதலிய மாடுகள் வாங்கவும் கொடுக்கவுங் கூடாது கற்றவரென்று சிறப்பித்ததினல், பயநாளாகிய திருவாதிரை ஆயிலியம் கேட்டை மூலமும், உக்கிரநாளாகிய பரணி மகம் பூரம் பூராடம் பூரட்டாதியும் விலக்கப்பட்டன. இவைகளில் மீறிக் கொண்டவர்களும், கொடுத்தவர்களும், எக்கெதியாவர்களென்றுல் வித்தவன் வீடு பாழாம். கொண்டவன் மாடுசாவாம். (என்பது கருத்து.) எ - று.

மாடுவாங்கக் கொடுக்கநாள்

வாசியுமுருளைபூசம் வயிரமும்பனையினேடு
நேசிபக்கத்திலேந்தேழ் நிகழ்பத்துப்பனமூன்ருகும்
மாசிலாமங்கைசிங்கம் மகரமுந்தனுசுமேலாம்
தேசிகன்சேய்சுன்பானு திங்களில்மாடுகொள்ளே.

இ-ள். அசுவினி ரோகணி பூசம் திருவோணம் அனுஷம் பூர்வ பக்கத்துப்பஞ்சமி சப்தமி தசமி திரயோதசி திதிகளும், கன்னி சிங்கம் மகரம் தனுவிராசிகளும், வியாழம் செவ்வாய் சனி ஞாயிறு திங்கள்வாரங் கூடிய சுபதினத்தில், எட்டாமிடம் சுத்தமாக இருக்க, கனறு காலிமாடுகளை விற்கவும் வாங்கவும் செய்ய உத்தமம். எ-று. 186

———

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உ

வேலுமயிலுந்துணை

சாதகசாராம்சம்

திடமுறவே அவரவர்சா தகத்தின் நேர்மை
செப்புதற்குத் தென்பொதிகை வெற்பில் வாழுங்
குடமுனிமுன் னுரைத்தபடி கிரகம் நிறகும்
குறிப்பறியும் வகைவிபரங் கூறச் செம்பொன்
வடவரையிற் பாரதம்வி யாசன் சொல்ல
மருப்பொன்றை யொடித்துமனம் வரைந்து வைத்த
கடகரியின் முகத்தானும் நாவி லுற்ற
கலைமகளும் மலைமகளுங் காப்புத் தானே.

இ-ள். வேதங்களில் ஐந்தாம் வேதமாகியும், இதிகாசத்திலொன்ருகியும், விளங்காநின்ற பாரதக் கதையைப்பூரணமாக வியாசபகவான் விளம்ப, தன் மருப்பையொடித்து விருப்பமாய் விரைந்து பருப்பதத்தில் வரைந்த விநாயக மூர்த்தியையும், எந்நாவிற் குடிகொண்டிருக்கும் கலைமகளாகிய சரஸ்வதியையும், எந்தநாளும் வந்தெனக்குதவிபுரியும், சுந்தர மலைமகளாகிய பார்வதியையும் வணங்கித்தொழுது, தென்பொதிகை மலையில் இன்பமாய்வாழும் அகஸ்திய முனிவாருளிச்செய்த தென்மொழியாகிய செந்தமிழால், இவ்வுலகிலுற்பத்தியான பலமனிதர்களும், அவரவர்கள் நன்மை தீமைகளை அனுபவிக்கவேண்டி கோட்கள் நிற்குங் குறிப்பையும் ஜாதகத்தின் நேர்மையுங் கண்டு பலாபலன் விண்டு சொல்லுவோம். எ-று. 187

குரு வணக்கம்

வெண்பா

தந்தைதா யாவானும் சார்கதியிங் காவானும்
அந்தமிலா வின்பநமக் காவானும்—எந்தனுயிர்
தானகு வானும் சரணகு வானுமருட்
கோனகு வானுங் குரு.

இ-ள். தந்தைக்குத் தந்தையாயும், தாய்க்குத் தாயாயும், சகல ஐசுவரியத்துக்கும் ஆதரவாயும், சற்றும் எல்லைக்கடங்காப் பேரின்பத்தைத் தருபவராயும், உடல்பொருள் ஆவி மூன்றுக்கும் உற்றதுணையாயும், சதாபாத தரிசனந்தந்து பாதுகாத்தருள்புரிபவராயும், எப்பொருளுக்கும் இறைவராயும் இருப்பவரெவரோ? அவரே எனக்கு ஆசான். அவர் பதத்தைப் பணிந்து வணங்குவேன். எ-று. 188

நவக்கிரக வணக்கம்

இரவிமதி சேய்மால்பொன் னேர்வெள்ளி நாரி
அரவுசிகி மாந்தியிவ ரம்சம்—பரவுநெறி
யோர்ந்து குருமுனிக்கன் றோதுகுகன்சரணம்
ஆய்ந்துரைப்பேன் நூல்வழியே யான்.

CC-0. In Public Domain. Digitized By Muthulakshmi Research Academy

இ-ள். சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் வியாழம் சுக்கிரன் சனி இராகு கேது குளிகன். இவர்கள் இருக்கும் இடமும், அவர்கள் நடாத்துந்திடமும், நட்பாட்சி யுச்சம்பகை நீசமறிந்து. அகஸ்தியருக்கு ஆறுமுகக்கடவுள் அருளிச்செய்த சோதிடசாஸ்திரத்தையுணர்ந்து இங்கு யானுரைப்பேன்.

பிள்ளைப் பிறப்பு

நன்றுநற்குழவிதோன்றும் பொழுதினில்நன்னீராடிக்
கன்ருெடுபசும்பொன்பூமி கலைபலமறையோர்க்கீய்ந்து
சென்றுமைந்தனையெடுத்துத் திருமுகங்கண்டுசெவ்வே
ஒன்றியசாதகங்க ளோலையிலெழுதிவைப்போம்.

இ-ள். பிள்ளை பிறந்தபோது பிதாவானவன் ஸ்நானஞ்செய்து பிராமணருக்கு, பசுவுங் கன்றும் பொன்னும் ஆடையும் பூமி முதலியது களில் தம்மாலியன்றமட்டுந் தானம்பண்ணி அப்பால் அப்புத்திரர் முகங் கண்டு சாதகமெழுதிவைப்பது நன்மை. எ-று. 190

செப்பியதோர் பலபாகம் பகரவேண்டிச்
செங்கதிரோன் முதல்நவக்கோள் செறிபலங்கள் தெரிந்தே
ஒப்புடனே சனித்தநவக் கிரகபுடங்கண்டே
உயர்தூமன் முதலைவர் குளிகாதிநால்வர்
தப்பறவே யெண்ணிலக் கினபுடமுமாகச்
சாற்றிடுபத் தொன்பதெனத் தகும்புடங்கள்வரைந்தே
இப்புவியி லுரைத்தவற்கே சித்திக்கும்பலன்கள்
எனச்சுருதி மொழிப்புலவ ரியம்பினர்கடாமே.

இ-ள். இப்புவியின்கண் உற்பத்தியாகிய ஒரு ஜாதகனுக்குச் செப்புதற் கரிதாகிய பலாபலன்களைச்சொல்ல விரும்பினுல் சூரியன் முதலாகிய ஒன்பது கிரகங்களின் பலன்களைத் தெரிந்தும், உயர்வான லக்கினமுதல் (மேலே சொன்ன) நவக்கிரக ஸ்புடங்கண்டும், தூமாதி பஞ்சக் கிரகங்களையும். குளிகன் முதல் நான்கு கிரகங்களையும், லக்கின மும், ஆகப்பத்தொன்பதின் ஸ்புடங்களையும, கணக்கிட்டு வரைந்து தொலலுலகிற் சொல்லுகிறவர்களுக்கே பலன்கள் சித்தியாகுமென்று ஆறுசாஸ்திரங்களையும் நேராயுணர்ந்த பெரியோர்கள் சொன்னர்கள். எ று. 191

இயம்புசன்ம மனை நவாங் கிசபங்கைந் ததனில்
இனிது திக்கி ன வக்கிர க மிருந்தபடி சரியே
நயம்பெறுமற் றங்கிசையி லுதித்திடினே யந்த
நவக்கிரக மிருக்குநக்ஷத் திரபத மறிந்தே
செயம்பெறவே நின்றமனை வீடடுத்த வீட்டிற்
செறிந்திருக்கும் விபரமெல்லாந் தெரிந்தெண்ணிக் கண்டே
பயன்பெறுஞ்சொற் பலபாகம் லக்கினமே முதலாய்ப்
பன்னிரண்டு வீட்டுக்கும் பலன்க ளறிந்துரைப்பாய்.

இ-ள். இக்குவலயத்தில் விக்கினமில்லாது சொல்லும், லக்கின வீடானது நவாங்கிஷத்தில், ஐந்தாவது பங்கில் உதித்தால் நவக்கிரகங் கள் இந்த விதம் சரியாகவே இருக்கும். நன்மைபெற்ற மற்ற அங்கிஷத் தில் வந்தால் அந்தந்தக்கிரகங்கள் இருக்கும் நட்சத்திரங்களின் பாதத்தைத் தெரிந்து செயம் பெறும்படி நிற்கின்ற வீடு அடுத்தவீடு களில் நெருங்கியிருக்கும் விவரங்களெல்லாம் கணித முறையாய்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

எண்ணித் தெரிந்து பயன்பெறும்படி சொல்லக்கூடிய பலாபலன்களை லக்கினமுதற்கொண்டு பன்னிரண்டு வீட்டிற்கும், தெரிந்து சொல்லக் கடவாய். எ-று. 192

வேறு

உரைசெறிகிரக நட்பாட்சி யுச்சங்க ளுறும்பகை நேசமுஞ்சமமும், நிறைபெறு மனையும் பார்வையுந் தொழிலும் நிகழ்த்து காரகமுமா ரகமும், வரவுறு மரபும் நிறமுமெய் வடிவும் வலிசெறி பலங்க டுர்ப்பலமும், புர வுறத்தேர்ந்து கண்டிடும்புலவர் புகன்றுள பலன்கள் சித்திக்கும்.

இ-ள். நெருங்கி யுறைகின்ற கிரகங்களின் நட்பு ஆட்சி உச்சம் பகை நீசம் சமம் இருக்கும் வீட்டின் நிலைமை பார்வை தொழில் காரகங்கள் மாரகம் ஜாதி நிறம் உருவம் வலிவுள்ளபலங்களும், துர்ப்பலங்களும், குற்றமறத்தேர்ந்து கணக்கிட்டுக் காணக்கூடிய சோதிடப்புதவர்கள் சொல்லும் பலன்கள் சாதகர்களுக்கு உண்மையாய்ச் சித்தியாகும் என்பதாம். எ-று. 193

துவாத பாவக பலன்

முதலாவது பாவகம் (கீர்த்தி)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

சீர்பெருஞ்சன்ம லக்கினத்ததிபர் சேர்ந்தினிதிருந்திடு மந்தப், பேர்தருபலன்கண் மெய்நிறஞ்சொரூபம் பெருநிதியுதரமத்தகமும், ஏர் பெருமுபாங்கஞ் சிந்திதங்கிலேச மிலக்கணங்கீர்த்தி மூர்த்திகளும், பார் தருஞ்சுபசந் தோஷமும்வயதும் பகர்தனுத்தானமென்றுரைக்கும்.

இ-ள். சிறப்புற்ற ஜென்மலக்கினத்ததிபதியும், அவரோடுசேர்ந் திருக்கும், மற்றக்கிரகங்களாலும் கொடுக்கக்கூடிய பலன்களாவன தேகத்தின் நிறம் ரூபம் செல்வம் வயிறு சிரசு, அழகிய மற்ற உருப்புகள் சிந்தித்தல் கிலேசம் இலக்ஷணம் சிறப்பு உபாசனாமூர்த்தி, பெரியோர் களால் வரும் சுப சந்தோஷங்களும், ஆயுசும் ஆகிய இவைகள் இத் தன்மைத் தென்று உரைப்பது லக்கினமென்று சுருதிகள் சொல்லும். எ-று.

2. இரண்டாவதுபாவகம். (நேத்திரம்.)

உரைத்திடுஞ் சவுபாக் கியந்தனங் குடும்ப மொளிசெறி நேத்திரம் வித்தை, தரைப்பெருஞ் செல்வமுடன் புகல் வாக்கு சாந்திரக் கேள்விகண் முற்றும் விஉரத்தெழு கமன மனமுமுத் தேச மேம்பட விரும்பு செம் பொன்னும், நிரைத்திடு நவரத்தின மிரண்டிடத்தினிலைமை கண்டுரை செய்வர் நின்றே.

இ-ள். இரண்டாமிடத்தின் அதிபதி அத்துடன் சேர்ந்தவர்கள் இவர்களின் நிலையைக்கண்டு சுபபாக்கியம் தனம், குடும்பம் பிரகாசம் பெற்றநேத்திரம் கல்வி புதையற்செல்வம் வாக்கு, சாஸ்திர விசாரணை களில் பற்றுகின்றமன வியல்பு மனசு, அதின் நினைப்பு மேம்பாடு செய்யும், பசும்பொன்னும், வரிசைப்படும் நவரத்தினம்,(ஆகிய இவைகளை) நிதானித்தறிந்து ஆன்றோர்கள் சொல்வார்கள். எ-று.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

3. மூன்ருவது பாவகம். (சகோதரம்.)

நின்றிடு மூன்ரு மிடத்தினி னிற்கு நிருபரா லுரை செய்யும் பலன்கள், வென்றிகொள் போக மடிமையாள் கானம் வீரியஞ் சத் துவந்துணைவர், பொன்றிடாதணிய காதுநோய் கன்னபூடணம் புசித் திடுங் கலன்கள், துன்றுவிக் கிரமஞ் சேவகா விருத்தி சூழ் தயிரியங்களுஞ் சொல்வர்.

இ-ள். மூன்ருமிடத்தில் நிற்கும் கிரகங்களாலும், அதிபதியாலும், பார்த்தவர்களாலும், நிதானித்தறிந்து உரைக்கும் பலன்களாவன, வெற்றி ஏற்படும் போகம் அடிமையாட்கள் சங்கீதகானங்கள் தைரியம் பொறுமை பிந்திய சகோதரர் நிலைத்தல், காதுநோய் கர்னபூஷணம், சாப்பிடக்கூடிய பாத்திரங்கள் நெருங்கி விலைகூறுதல் சேவகத்தொழில், தன்னைச்சேர்ந்த தைரியத்தின் நிலைமை (ஆகிய இவைகளைப்) பலனுக சொல்லுவார்கள். எ-று.

4. நான்காவது பாவகம். (மாது∴.)

சொல்லிய வித்தை வாகனஞ் சுபங்கள் சூழும்வியா பாரமுமனையும், வெல்லு மேம்பாடுஞ் சவுக்கிய மன்னை விரும்பு நல்லுற வினராகும். நல்ல நிட்சேபம் பரவிஷயங்க ணறைகமழ் பாற்பசு கன்று வல்லதோர் தேவ தானமிப் பலனை வழுத்து நான் காமிடங் கொண்டே.

இ-ள். நான்காமிடத்தையும், அவ்வதிபனேடு சேர்ந்தவர்கள் பார்த்தவர்கள், இவர்களைக்கொண்டு அறியும் பலன்களாவன. சாஸ்திரக் கல்வி வாகனம் சுபகாரியங்கள், ஏற்கனவேயுள்ள வியாபாரம் வீடு மனை வெற்றியாற் கீர்த்தி சௌக்கியம் தாய் உறவினர் நன்மையான பூமி அன்னிய விஷயங்கள் சுகந்தம் பால் பசு கன்று பலம்பொருந்திய தேவஸ்தானம் ஆகிய இவைகளைச் சொல்லுவார்கள். எ-று. 197

5. ஐந்தாவது பாவகம். (புத்திரர்.)

கொண்டதோர் மாமன் பிதாப் பெறும் புதல்வர் குலவபூருவஞ்செய் புண்ணியமும். தண்டமிழ் வாணர் புகல்பிர பந்தந் தரித்திடுங் கர்ப்ப மந்திரங்கள், மிண்டிய வித்தை விதரணம் புத்தி விரும்புமிப் பலனெலா மறிந்தே கண்டுரைத் திடுவரைந் தாமிடங் கொண்டே கற்றுணர்ந் தருளு மாதவரே.

இ-ள். ஐந்தாமிடத்தைக்கொண்டும் அவ்வதிபனேடு சேர்ந்தவர் கள் பார்த்தவர்கள் இவர்களைக்கொண்டு அறியும்பலன்களாவன. தாயோடு கொண்டமாமன் பிதாபெற்ற பிள்ளைகள் பூர்வத்திற் செய்த புண்ணியம் வித்வான்களாற் புகழப்பட்ட பிரபந்தம் கெற்போற்பத்தி மந்திரங்கள் ஜாலவித்தை யூகித்தறியும் புத்தி விரும்பல் (ஆகிய பலன் களைக்) கற்றுணர்ந்த பெரியோர் தெரிந்து சொல்லுவர். எ-று. 198

6. ஆருவது பாவகம். (சத்துரு.)

மாதுகேள் வியாதி சத்துரு பீடை மற்றுமா யுதங்களா லிரணம், ஓதிய ஞாதியால் வருதுன்பம் யுத்தமெய் வாதை பொன் கண்டம், சேதமாங் கள்வர் புனல்மடந் தையரால் பெருகுபாம் பாலுநோயுளது, நீதிசேர் பிரதா னிக்கமுஞ் சிறையு னிலைமையாருமிடங் குறித்தே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். ஆறுமிடத்தையும் அவ்வதிபனையும் சேர்ந்தவர்கள் பார்த்தவர்களைக்கொண்டும் சொல்லும் பலன்களைப்பெண்ணே கேட்பாயாக, வியாதி சத்துருக்களால் ஏற்படும் சங்கடம் ஆயுதத்தாலுண்டாகுங்காயங்கள் தாயாதிகளாலுண்டாகும் துக்கம் சண்டை அதனுல் ஏற்படும் நோவு பொன் சேதம் திருடர்களின் தொந்தரவு நீர்த்தத்து பெண்களால் ஏற்படும் நோய் பாம்பு (விஷநீர்) சம்பந்தமாய் ஏற்படும் கண்டங்கள் நியாயமான பிரதானிக்கல் சிறைப்படுதல் ஆகிய பலனைச் சொல்லுவர். எ-று. 199

7. ஏழாவது பாவகம். (களத்திரம்.)

குறித்திடுங் கமன மணமடந்தையர்க்குங் குமரர்கடமக்குநல்லின்பம், நிறுத்திடு விபகாரந்தமர் கூட்டம் நேமியோருதவுசன் மானம், பிறித்தறி வியாபாரம் மணம் புரிநாள் பின்மனையாள்வியம் பெறுதல், மறிக்கயல் விழியா யேழிடங் கொண்டு வழுத்துவர் மறைமொழிப்புலவர்.

இ-ள். மீனைப்போன்ற விழியை யுடைய மானே கேட்பாயாக, ஏழாமிடத்தையும் அவ்வதிபனையும் அத்துடன் சேர்ந்தவர்கள் பார்த்தவர்களைக் கொண்டு குறித்திடுங்கமனம் மணம் பெண்களுக்கும், ஆடவர்களுக்கும் ஏற்படும் இன்பம் வழக்குத்தீர்த்தல் முதலிய விவகாரம் பந்துக்கள் சேர்க்கை பிரபுககள் சன்மானம் புதிதாய் ஏற்படுத்திய வியாபாரம் கல்யாணமுடிய நாள் மனைவியின் தீர்க்கம் ஆகிய இவைகளை வேதமுணர்ந்த வித்துவான்கள் சொல்லுவார்கள். 200

8. எட்டாவது பாவகம். (ஆயுள்.)

புலவுறும் படையால் வாதைசேர் யுத்தம் பொருப்பின்மே லேறி வீழ்ந்திடுதல், நிலைபெறும் வியாதி விக்கினங் கிலேசம் நீள் பல துன்பமோ டிரணம், சிலவினுல் நட்ட மாம்விழுக் காடுசெறி பகை மரணமித் தனையும் உலகினிலுயர்ந்தோ ரட்டமபலன் கண்டுரை செய்வா ருண்மை பெற்றிடவே.

இ-ள். எட்டாமிடத்ததிபன் அவனோடு சேர்ந்தவர்கள் பார்த்தவர்கள் இருந்தவர்கள் இவர்களைக்கொண்டு சொல்லும் பலன்களாவன, கூர்மையான ஆயுதங்களால்வாதை சேர்ந்து செய்யும் யுத்தம் மலையின் மேலேறி வீழ்ந்திடுதல் (தொழுநோய்) நீங்காத வியாதி விக்கினம் விசாரம் நெடுநாள் துன்பம் புறப்பாடு முதலிய ரணங்கள் செலவு நஷ்டம் அவமான முண்டாக்கும் பகை மரணகாலம் (ஆகிய இவைகளை) உலகத்தில் உயர்ந்தோர் உண்மை பெறும்படி சொல்லுவார்கள். 201

9. ஒன்பதாவது பாவகம். (பாக்கியம்)

பெற்றிடுந் தந்தை மகப்பெயர் தருமம் பெருமைசேர் பாக்கிய மடங்கள், உற்றதோர் பரம புண்ணியங் குளமும் உயர்திரு பணியுபதேசம், வெற்றிசேர் நீர்க்கா வணம்புகழ் கூபம் விரும்பிய செல்வமீதெல்லாம் கற்றறிந்தோர்க ளொன்பதா மிடத்தாற் கருணையும் பெற மொழிந்திடுவார்.

இ-ள். ஒன்பதாமிடத்ததிபதி அவனோடு சேர்ந்தவர்கள் பார்த்தவர்கள் இருந்தவர்கள் இவர்களைக்கொண்டு பெற்றதகப்பன் வம்மிசவிருத்தி தருமகாரியங்கள் பெருமையைத் தரத்தக்க பாக்கியம் தர்மசத்திரங்கள் கட்டுதல் அன்னதானம் குளம் தடாகம் உண்டு பண்ணுதல் மேலான

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆலயத்திருப்பணி குருஉபதேசம் சோலைகள் நந்தனவனம் பெருமை கிணறு நினைக்கப்பட்டசெல்வங்கள் (ஆகிய இவைகளை) சோதிட வல்ல வர்கள் கிருபையைப்பெரும்படி சொல்லுவார்கள். எ-று. 202

10. பத்தாவது பாவகம். (கர்மம்.)

மொழிந்திடும் பலபுண்ணியம்புவி யாள்வன் முயன்று பட்டணங் கடாபித்தல் பொழிந்திடுங் கரும மிரக்கமெஞ் ஞானபூசனை மனைபிதாப் பவங்கள், ஒழிந்திடு மினிய தேவதா பத்தி யுயர் சவுரியம்புர தாபம், இழிந்திடு மிரவு கருப்பமுண் புடைவையிவை பத்தா மிடப்பெயரென்னே.

இ-ள். பத்தாமிடம் அவ்வதிபதி இருந்தவர்கள் பார்த்தவர்கள் இவர்களைக்கொண்டு சொல்லும் பலன்களாவன, பலவித புண்ணியங்கள் அரசாளுதல் பட்டணங்கள் உண்டாக்குதல் நெருங்கிய முயற்சி கருணை பூசனை மனையுண்டாக்குதல் (பகீரதனைப்போல்) பிதா பாவங்களை நீக்கக் கூடிய தேவதா உபாசனை மிகுந்த பராக்கிரமம் கீர்த்தி இழிவாகிய யாசிப்பு கர்ப்பம் உண்டாகுதல் உணவு வஸ்திரம் (ஆகிய இவைகளைச்) சொல்லுதலாம். எ-று 203

11. பதினோராவது பாவகம். (லாபம்.)

என்னுமூத் தவர்சே வித்திடும் பேர்களிளங்கொடி மனைவி பொன் வித்தை, மின்னிய லாபம் பயிர்பரி வேழம் விளங்குநல்லறிவு தண்டிகையும், உன்னிய மனத்திற்றுக்கமுந் தீரும் உத்தரீயஞ்செறி வகையும், பன்னிய பதினோ ராமிடங் கொண்டு பரிந்தருள் புரிவர்பாவலரே.

இ-ள். பதினோராமிடம் அவ்வதிபதி அத்துடன் சேர்ந்தவர்கள் பார்த்தவர்கள் இவர்களைக்கொண்டு மூத்தசகோதரம் சேவை செய்யத்தக்க வர்கள் பின்மனையாள் பொன்னாலும் வித்தையாலும் லாபம் பயிர்த்தொழில் குதிரை யானை பல்லக்கு பிரகாசிக்கின்ற நல்லவிவேகம் துக்கநிவர்த்தி அங்கவஸ்திரம் நீங்காது இருக்கப்படுதல் (ஆகிய இவைகளைச்) சோதிட வல்லவர்கள் இன்பமான கருணையுடன் சொல்லுவார்கள். எ-று. 204

12. பன்னிரண்டாம் பாவகம். (விரயம்.)

பாவமந் நியதே சத்திலுத் யோகம் பணச்செலவுடனுறும் போகம், மேவிய சயன சவுக்கியம வ்வாதம் விளைந்திடுந் தொழில புரி கன்மம், ஆவதோர் தானம் புண்ணியந் தியாக மருண்மகஞ் சர்வதோ விருத்தி, சேவலங் கொடி யோனருளினற் பெரியோர் செப்புவர் துவாதச பலனே.

இ-ள். பன்னிரண்டாமிடம் அவ்வதிபதி அத்துடன் சேர்ந்தவர்கள் பார்த்தவர்கள் இவர்களைக்கொண்டு அந்நியதேச சஞ்சாரத்தொழில் பொருள் விரயம் அதனுல் போகம் அனுபவித்தல் சயனம் (புசித்தல்) (சௌக்கியம்) அதாவது (ஸ்திரீ சம்போகம்) விவகாரம் உண்டாகுந் தொழில் மறுமையிலடையுங்கதி தரத்தக்க தொழில் மறுமையிலடையுமிடம புண்ணியம் ஈகை தயை யாகம் நீங்காத எணணம் (ஆகிய இவைகளை) முருகக்கடவுளின் கிருபையால் இத்துவாதசப்பலன்களைப் பிரியமாய்ப் பெரியோர்கள் சொல்லுவார்கள். எ-று. 205

இலக்கின நிச்சயம்

சந்திர னிருந்த ராசி தனககுளோ னிருந்த வீட்டுக்
கந்தவொன் றைந்து மொன்பான் அதுவேலக் கினமதாகும்
வந்தன பிசகி லந்த மதிநின்ற வீட்டி னற்கு
இந்தவே முதற்கொன் றைந்து மொன்பது முதையமாமே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். சந்திரன் இருந்த இராசிக்குடையவன் இருக்கிறவிட்டுக்குத் திரிகோணலக்கினமாக இருக்கவேண்டும். அப்படியில்லாவிட்டால் சந்திரனுக்கு ஏழாம் ராசிக்குத் திரிகோண விராசியாயிருக்கவேண்டும் சரியாயிருந்தால் இலக்கினம் நிச்சயமாம் குளிகனுக்கும் இப்படியேபார்க்க. எ-று. 206

வேறுவிதம்

(வசனம்) குழந்தைபிறந்ததும் கண்ட நாழிகையோடு ஞாயிறு முதல் அன்று வாரமும், பிரதமைமுதல் அன்றுதிதியும், அசுவினி முதல் அன்று நட்சத்திரமும், மேஷம் முதல் அன்றுதயலக்கினமுஞ் சேர்த்துப் பதினறிற்பெருக்கி, இருபத்தேழிற் கழித்தமீதம் எத்தனை வருகிறதோ அதைப் பூர்வபட்சமானல் அசுவினிமுதல் எண்ணியும், அமரபக்ஷமானல் சித்திரை முதலெண்ணியும் பார்க்கப் பிறந்த நட்சத்திரம் வரும் அல்லது அதற்குத் திரிகோண நட்சத்திரம் வந்தாலும் வரும்.

பிரசவித்த வீடு முதலியனவறிய

சேயுதிக்கும் மனையிருக்குந் திசைமகரங் கடகம்
 சென்மலக் கினமாயி னுந்தெற்கு மூலை
ஆயசிங்கங் கன்னிதனு சேன்மிதுனம் வடக்காம்
 அன்புடனே யிடபமேற் காகுமதன் மேலே
வேயுதிக்குந் தோளணங்கே கும்பவிருச சிகங்கோல்
 விளங்கமரர் வேந்தனுர் திசையெனவே விளம்பாய்
தேய்பிறைக்கு நெய்தீபத் தில்லைவளர் பிறைக்கே
 செப்பிடுவாய் நெய்விளக்கின் னிறையுமெனத் தேர்ந்தே.

இ-ள். பாங்காயுயர்ந்த மூங்கிலையொத்த தோள்களையுடைய பெண்ணே? மகரம் கடகம் லக்கினமானல் மனையில் தெற்குமூலையில் குழந்தை பிறக்குமென்றும், சிம்மம் கன்னி தனுசு மீனம் மிதுனம் (இவைகள்) லக்கினமானல், மனையில் வடபக்கமென்றும், ரிஷபலக்கினமாகில் மனையில் மேற்குப் பக்கமென்றும், கும்பம் விருச்சிகம் துலாம் (ஆகிய இவைகள்) லக்கினமாகில் மனையில் இந்திரதிசையாகிய கிழக்குப்பக்கமென்றும், குழந்தை பிறக்குங்காலத்தில் தேய்பிறைச்சந்திரனுகில் எண்ணெய் குறைந்த தீபம் பக்கத்திலுண்டென்றும், பூரணச் சந்திரனுகில், எண்ணெய் நிறைந்துள்ள தீபம் பக்கத்திலுண்டென்றும் தேர்ந்து சொல்லவேண்டுமென்பதாம். எ-று. 207

நிறைந்த பெண்ணும் லக்கினத்தி னுதியேயாயின்
 நீண்டிருக்குங் குறைந்திருக்கு மேலந்த மாயின்
பிறந்தருளும் லக்கினமே சரமாயிற்றீபம்
 புறம்பாகு முபயமெனிற் பேரிருளாமென்ப
அறைந்தசனி யங்கிசவீ டாகிலதிற் காரி
 யம்புலியைப் பார்க்கவிரு ளகமதே யாகும்
சிறந்தமதிக் குஞ்சேய்க்கு மங்கிசவீ டாயிற்
 செய்யசனி பார்க்கிலோ சேர்வள் புலந்தெரிவை:

இ-ள். வரிசை பெற்ற பெண்ணிராசியாகிய இரட்டைராசியின் முற்பாகமாயிருந்தால் தீபம் நீண்டு வளர்ந்தெரியும், பிற்பாகமாயிருந்தால் குறைந்தெரியும், பிறந்தலக்கினம் சரராசியாகில் தீபம் பின்பக்க

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மிருக்கும், உபயராசியாகில் தீபமில்லாமல் பெரிய இருளாயிருக்கும், லக்கினம் சனி அங்கிஷ வீடாயிருந்து சந்திரனைப் மார்க்க இருள் வீடாயிருக்கும். சந்திராங்கிஷமும், செவ்வாய் அங்கிஷமும், அவ்விலக்கினத்திற் பொருந்தியிருக்க, அதைச்சனி செவ்வாய் பார்க்கில், அப்பெண்ணனவள் வயற்காட்டிற் பிரசவிப்பாள். எ-று.

தெரிவைக்குந் துன்பமில்லை லக்கினத் தாதிக்கே
திடமுடனே யந்தமெனிற் றேன்மொழிக்குத் துன்பம்
மருவியலக் கினமுதற்சந் திரனிருக்கு மட்டும்
மன்னுதொகை மடவார்கண் மருவியரு கிருப்பர்
சருவியநற் சுபர்காணிற் ருன்றேன்றும் விரவிற்
சனிகுசன்பார்த் திடிற்ருனே சஞ்சலமுற் றிடுமே
பெருமையுட னிருந்தகோ ணிறங்குழவி தனக்கே
பெறுமென்றே பெரியோர்க ளுரைப்பர்மிகத் தானே.

இ-ள். இந்தவுலகில் வந்துதித்தமாக்கள் எந்த லக்கினமாயிருந்தாலும், ஜென்மலக்கினம் முற்கூறிற் பிரசவித்தால் தாய்க்கு கஷ்டமில்லை. பிற்கூருகிய அந்தத்திற் பிரசவித்தால் கஷ்டப்பிரசவமாகும். ஜெனனமானலக்கின முதல் சந்திரனிருக்கும் லக்கினம் வரையிலும் உள்ள கிரகத்தொகை எத்தனையோ அத்தனை பெயர்கள் பிரசவிக்கும் ஸ்திரிக்குப்பக்கத்தில் இருப்பார்கள். லக்கினத்தை சுபர்கள் பார்த்தால் சீக்கிரத்தில் பிரசவமாகும். சனி செவ்வாய் பார்த்தால் கஷ்டத்தோடு பிரசவிக்கும். பெருமையோடு லக்கினத்திலிருந்ததுவும், பார்த்ததுவுமான கிரகங்களின் நிறத்தையும் அடையாளத்தைப் பொருந்தி அக்குழந்தை பிறக்குமென்று பெரியோர்கள் விசெஷமாகச் சொல்லுவார்கள். எ-று. 209

தானருகே யிருந்தமட வார்பருவங் கூறில்
சனியிருந்து கண்டாக்காற் றலைநரைத்த கறுப்பி
ஈனமில்லாக் குசனிருந்து காணின்முது வயதே
யிசையுநிறஞ் சிவப்பாக விருப்பளமங் கலையாம்
நானிலமேற் குருவெள்ளி சசியிருந்து கண்டால்
நாரிசுமங் கலைவாலை நற்புதன்மத் திமையாம்
மானிலமேற்பாம்பிருந்தா லனுசாரமடந்தை
மகவுநாலேதரித்து வந்திடுங்கண்டீரே.

இ-ள். ஜென்மலக்கினத்தில் சனியிருந்தாலும் பார்த்தாலும் பக்கத்தில் நரைத்த தலையையுடைய கறுத்தநிறமான பெண் இருப்பாள். செவ்வாய் இருந்தாலும் பார்த்தாலும் சிவப்புநிறமுள்ளவளும் அமங்கிலியும், அதிகவயதுள்ளவளுமான பெணபக்கத்தில் இருப்பாள். (குரு சுக்கிரன் சந்திரன் ஆகிய இவர்கள்) லக்கினத்தில் இருந்தாலும், பார்த்தாலும். சுமங்கிலியும் வாலைப்பருவமுமுள்ள பெண்பக்கத்திலிருப்பாள். புதன் இருந்தாலும் பார்த்தாலும், மத்திபவயதுடைய பெண் பக்கத்திலிருப்பாள். இப்புவியின்கண் இலக்கினத்தில் ராகு கேதுக்கள் இருந்தாலும் பார்த்தாலும், அநாசாரமுள்ளபெண் பக்கத்திலிருப்பாள். அல்லாமலும் மாலைசுற்றிச் குழந்தை பிரசவிக்குமென்றும் அறிக இங்ஙனம் லக்கினத்தைப்பார்ப்பதுபோல் லக்கினாதி பதியையும் பார்த்துணர்க. சூரியன் உதயகாரகனுனபடியால் இங்ஙனம் சொல்லாதொழிந்தது. ஆகையால் இப்பலன்களைக் கவனிக்கும்பொழுது சூரியனையும் ஒட்டிக் கொள்க. பல்லுப்போன கிழவியென்று சொல்லுவாருமுளர். எ-று. 210

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கண்டுமொழிமாரவின் றன்பருவங்காரி
கதிர்குருஷவருங்கண்டா லாம்விருத்தையாகும்
மண்டுவெள்ளிசேய்பார்க்க வயதுநடுவாகும்
மதிபுதனுங் கண்டாக்கா லவள்வாலையாவாள்
மிண்டுமுடவன்னிருந்தால் வீடுபுராதனஞ்சேய்
மேவில்வெந்துகட்டினதோர் வீடாகுமென்னே
பண்டுசசிபார்க்கிலகம் புதியதேயாகும்
பரிதிக்குமரந்திரண்ட பதியெனச்சொல்வாரே.

இ-ள். மாதாவின் வயதுகண்டு சொல்லுமிடத்து தாய்தானத்தில், சனி சூரியன் குரு இவர்களிருந்தாலும் பார்த்தாலும் (விருத்தை) வயது சென்றவளா யிருப்பள். சுக்கிரன் செவ்வாய் பார்க்க நடுவயதுள்ள வளாம் சந்திரனும் புதனுமிருந்து கண்டால் வாலைப்பருவமாயிருப்பாள். நான்காமிடத்தில் சனியிருந்தாலும் பார்த்தாலும் பூர்வீகவீடாம். செவ்வாயாகில் தீயில் வெந்து மறுபடி கட்டியவீடாகும். சந்திரனாகில் புதிதாய்க்கட்டிய வீடாகும். சூர்யனாகில் மரம் நெருங்கும்படி கட்டிய வீடென்றும் சொல்லுவார்கள்.

சொல்லுபுதன் பார்த்திருந்தாற் சித்திரவீடாகும்
சுக்கிரன் பார்த்திருந்தக்காற் சுசிவீடதாகும்
வில்லரசனிருந்துகண்டாற் கெட்டியகமாகும்
மின்னனையார்விரும்புசுவை வெய்யவெனவுறைப்பாம்
நல்லமதிக்குப்பாகுஞ் சேய்துவர்ப்பைநாடும்
நாலுவகைச்சுவைபுதனே நல்குவிப்பனிப்பால்
வல்லலறுங்குருமதுரம் வெள்ளிபுளிப்பாகும்
மணிகாரிகசப்புலக் கினத்திசைதொட்டென்னே.

இ·ள். அறிஞனென்று சொல்லப்பட்ட புதன் இருந்தாலும் பார்த்தாலும், சித்திரவீடாம் சுக்கிரனிருந்து பார்த்தால் சுத்தமான வீடாம். ஒளியுள்ள வியாழனிருந்து பார்த்தால் கற்காரையாற் கட்டிய வீடாகும், பிரசவமான பெண்கள் விரும்பககூடிய ருசிபாகங்களை விரைவுடன் சொல்லுமிடத்து சூரியனிருந்தால் காரமும், சந்திரனிருந்தால் உப்பும், செவ்வாயிருந்தால் துவர்ப்பும், புதனிருந்தால் நால்வகைச் சுவையும், குருவிருந்தால் தித்திப்பும், சுக்கிரனிருந்தால் புளிப்பும், சனியிருந்தால் கசப்பும், (ஆகியருசிகளை) விரும்புவாள். இதை லக்கினம் திசை புத்தி சித்திர விவரங்களைக் கவனித்துச் சொல்லுக. எ·று. 212

திரசரராசியிற்சுங்க னிருக்கவிளக்கசையுந்
திங்களைப்பாவர்கள் பார்க்கிற் றீர்க்கமறுந்தீபம்
உரைமருவும்லக்கினத்துக் கிருபாலும்நான்கும
ஓதுமனைதனிலிருந்தா ருடன் கூடியிருப்பர்
இரவிபுந்திபங்குகேந் திரத்திருக்கிற்கிழக்காம்
இரணியன் கேந்திரத்தேறி யிருந்திடிலுத்தமரே
அரவுசெவ்வாய்சன் மத்தி லுறிலுந்தெற்காகும்
அணியுமனைசேர்காரிக் கமமேற்குவாசல்.

இ-ள். திரவிராசியிலும் சரவிராசியிலும் சுக்கிரனிருக்க விளக்கு அசைந்து எரியும். சந்திரனைப் பாவர்கள் பார்த்தால் விளக்கணையுமாம். முறையாய்ச்செனித்த லக்கினத்திற்கு இரண்டாமிடம் பன்னிரண்டா

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மிடம் பன்னிரண்டாமிடம் நான்காமிடம் (ஆகிய இவ்விடங்களிலுள்ள) தொகைப்படி பிரசவிக்கும் போது பெண்கள் கூடவிருப்பார்கள். சூரியன் புதன் சனி கேந்திரம் பெற்றிருந்தால் வடக்குவாசலும் இராகு கேது செவ்வாய் ஜென்மத்திலிருந்தால் தெற்குவாசலுமாம், அழகியமனை ஸ்தானமாகிய நான்காமிடத்தில் சனிநின்றால் மேற்குவாசலாக இருக்கு மெனவறிக. எ-று. 213

வாசமுறும்மூன்றுறிற் பதினொன்றிற்பாவர்
வந்திருக்கச்சனிபத்தா மனையதனிற்சார
நீசமடந்தையரிருந்து புரிவர்பரிகாரம்
நீண்டசனிசுபர்மனையில் நேரில்நல்லோர்காணில்
ஆசுறுமினத்தொழில்செய் நாரியருகிருப்பார்
ஆமென்றேசுருதியறிந் துரைத்தநல்லோராய்ந்தே
தேசுறுநற்கலைநிறையுந் திங்கள்முகமயிலே
செப்பினரிப்பலபாகந் தெரிந்துகொளத்தானே.

இ-ள். அழகுபொருந்திய சோடசகலை நிறைந்த சந்திரன்போன்ற முகத்தையுடைய பெண்ணே! மூன்று ஆறு பதினோராமிடம் பாவருடைய வீடாக அதிற் பாவர்கள் இருக்க சனிபத்தாமிடத்தில் இருக்க கீழ் குலத்துப் பெண்களிருந்து பரிகாரஞ் செய்வார்கள். சனி சுபர்மனையி லிருந்து நல்லோர்களால் பார்வை பெற்றால் குற்றமுள்ள அற்பத் தொழிலையுடைய பெண்கள்பக்கத்தில் இருப்பார்கள் என்று சாஸ்திர ஆராய்ச்சியுள்ள பெரியோர்கள் இப்படி பலபாகந் தெரிந்து கொள்ளும் படி சொல்லுவார்கள். எ-று. 214

பாலாரிஷ்ட தோஷம்

குமார சுவாமியத்திற் சொல்லியது

அதிசயமான பொதிகைவரையிலுள்ள அகஸ்தியமாமுனியே? ஆயர்த் தாயம் கேட்பாயாக. சத்தியோமரணம் அறியவேண்டில், 5-9-ல் வியாழ னிருக்க, இவனுக்குக் கேந்திரம் செவ்வாயிருக்க, மேடவிருச்சிகம் பிறக்கப் பாவர் மறையினும், தேய்மதி 1-8-ல் இருக்க, பூசம் பூராடம் பிறக்க, 10-12-ல் சனியிருக்கிலும், 1-7 ல் சனியிருக்கப் பாவர் பார்க்கச் சுபர்கேந் திரம் விட்டிருக்க, அனுஷம் ரேவதி கேட்டை இவை லக்கினோதயமாகப் பிறக்கிலும், * அபுத்தமூலம் பிறக்க, விட கடிகை யுதையமாகிலும் சத்தி யோ மரணமாம். மூலநட்சத்திரம் முதல்நாழிகை முதல் இரண்டுநாழி கைவரைக்கும், அபுத்தமூலம் என்று சொல்லப்படும்.

இலக்கினத்திற்கு 8 ல் அமரமதியிருக்க, 7-ல் சேய்நிற்க, லக்கினேசன் பெலகீனமாக, லக்கினங்கிரசம் 2-ல் இருக்கப் பூசம் பூராடம் பிறக்கிலும், அமரபட்சத்துச் சந்திரன் விருச்சிகத்திலிருக்க, 1-7 ல் சனியிருக்க, செலராசி உதையமாகச் சுபர் கேந்திரத்திலிருக்கிலும், 5-மிடம், கடக மாகிச் சேயிருக்க, அமரமதி 6-8-12 ல் இருக்க, 5-9-ல் ரவி குரு கூடிலும், அமரமதி சேர்ந்திருக்கப் பாவர் 8 ல் கூடச் சுபர்கேந்திரம் விட்டிருக்கிலும், வயது 2-நாளென்ப.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மூன்றுநாள்முதல் எட்டுநாள் வரை ஆயுள்

சுபர் 8-ல் இருக்கச் சென்மநட்சத்திரத்துக்கு, மூன்ரும் நட்சத்திரத்தில் ரவிமதிகூட இவர்க்கேழில் ராகுவிருக்கில் மூன்ரு நாள் மரணம். லக்கினம் மீனமாக ரவிமதிமூன்றிலிருக்கச் சேய் கடகாங்கிசமேறில் நான்காம்நாள் மரணம், ரவி 4-8-ல் இருக்க 5-9 ல் பாதருடன் கூடிச் சந்திரன் இருக்கில் ஐந்தாம்நாள் மரணம். மதிக்கு 7 ல் ரவிசேய்கூட லக்கினேசன் பதனமாகிய 6-8-12-ல் இருக்க ஆரும் நாள்மரணம். மேடமுதற் கன்னிவரையுள்ள ராசி சென்மலக்கினத்துக்கு நாலாமிடமாகிப் பாவர்நிற்கிலும், அல்லது துலா முதல் மீனவரைக்குள்ள ராசி மதிக்கு எட்டாகிப் பாவர்நிற்கிலும் ஏழாம்நாள் மரணம். கெண்டாந்தம் பிறக்கப் பாவருடன் மதிகூடச் சென்மலக்கினம் சற்பமுகூர்த்தமாகில் எட்டாம்நாள் மரணம். (கெண்டாந்தம்-சற்பமுகூர்த்தம்) இவைகளைப் பின்ருற் சொல்வோம்.

ஒன்பதுநாள்முதல் மூன்றுமாதம்வரை ஆயுள்

அமாவாசி பிறக்க லக்கினம் உருத்திரமுகூர்த்தமாகில் ஒன்பதாம் நாள் மரணம். 8-ல் ரவி, 4-ல் சேய். 2-ல் சனி, 12-ல் லக்கினேசனிருக்கில், பத்தாம்நாள் மரணம். 8-ல் சனி, 5 ல் சேய், 1-ல் கேது இருக்கில், இருபதாம்நாள் மரணம். ரவிசனிகூடி லக்கினத்திலிருக்கச் சேய்பார்க்கில் மாதம் ஒன்றில் மரணம். ரவி சனி சேய் கூடி இடபதுலாம் எட்டாகி இருக்கில் மாதம் இரண்டில் மரணம். ரவியும் லக்கினேசனும் யுத்தத்திற் கூடிக் கிரகங்களினுல் அபசெயப்பட்டு 7-ல் இருக்கில் மாதம் மூன்றில் மரணம்.

நான்குமாதமுதல் பதினெருமாதம்வரை ஆயுள்

4 ல் ரவிநிற்க, 8 ல் லக்கினேசனும் ராகுவும் இருக்கில் மாதம் நான்கில் மரணம். பூராடத்திற் கேதுவிருக்க, அதுவே சென்மலக்கினமாகில் மாதம் ஐந்தில் மரணம். 2-6-8-12-ல் பாவரிருக்க, 7-ல் ரவிநிற்கில், மாதம் ஆறில் மரணம். எட்டுக்குடையவனும் சேயுங்கூடி லக்கினத்திலிருக்க லக்கினேசன் பெலகீனமாகில் மாதம் ஏழில் மரணம். 6-8-12-ல் லக்கினேசனும், ராகுவுங்கூடியிருக்கில் மாதம் எட்டில் மரணம். 4-ல் சேய், 8 ல் ராகு, 12-ல் சனியிருக்கில் மாதம் ஒன்பதில் மரணம். 1-ல் சனி, 7-ல் ரவி மதி சேய்கூடில் மாதம்பத்தில் மரணம். லக்கினம் மீனமாக, 4-ல் கேது, 5-ல் சேய், 7 ல் ரவியும் இருக்கில் மாதம் பதினென்றில் மரணம்

ஒருவருஷமுதல் ஏழுவருஷம்வரை ஆயுள்

இடபம் துலாம் எட்டாகிச் சேயிருக்கில் வருஷம் ஒன்றில் மரணம் மேடவிருச்சிகம் எட்டாகிச் சனிவக்கரிக்கச்சேய்பார்க்கில் வருஷம் இரண்டில் மரணம் மேட விருச்சிகம் எட்டாகிக் குருவிருக்க லக்கினத்திற் குளிகனிருக்கில் வருஷம் மூன்றில் மரணம். 4-ல் அமரமதியிருக்க, இவனுக்கு 6-ல் லக்கினேசனிருக்கச் சேய்பார்க்கில் வருஷம் நான்கில் மரணம். கடகம் பதனமாகிய 6 8-12 ஆகப் புதனிருந்து சந்திரனைப் பார்க்க லக்கினத்திற் சேயிருக்கில் வருஷம் ஐந்தில் மரணம். லக்கினத்தில் மதி சேய் சனி ராகு கூடில், வருஷம் ஏழில் மரணம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

எட்டுவருஷமுதல் பதின்மூன்றுவருஷம்வரை ஆயுள்

மதி கேதுவைக்கூடி 7-ல் இருக்க 1-3-ல் பாவரிருக்கில் வருஷம், எட்டில் மரணம். லக்கினம் சற்பத்திரேக்காரணமாக இதிற்சனி பாவருடன் கூடியிருக்கில் வருஷம் ஒன்பதில் மரணம். ரவிமதி 7-ல் இருக்கப் பாவர்பார்க்க, லக்கினுதிபதியும், ராகுவுங் கூடியிருக்கில் வருஷம் பத்தில் மரணம். லக்கினேசனுக்கு 7-ல் கேதுவிருக்க 1 ல் மதியிருக்க, 4-ல் ரவியிருக்கில், வருஷம் பதினொன்றில் மரணம். இடபதுலாம் ஏழாகி அமரமதியிருக்க, ஆறில் சேயிருக்கில் வருஷம் பன்னிரண்டில் மரணம். ரவி மதி சனி சேய் கூடில் வருஷம் பதின்மூன்றில் மரணம் என்பதாம்.

பதினலு வருஷமுதல் இருபத்தொரு வருஷம் வரை ஆயுள்

மிதுனங் கன்னி மதிக்கேழாக இதில் ரவி சேய் கூடில் வருஷம் பதினன்கின் மரணம். அமரமதிரவி சேய் கூடி இருக்கில் வருஷம் பதினைந்தில் மரணம். லக்கினேசன் பெலகீனமாகி மதிக்கு 12 ல் இருக்கில் வருஷம் பதினறில் மரணம், லக்கினேசன் சந்திரனைக் கூடாமற் பாவதத்தியமாகச் சனிபார்க்கில் வருஷம் பதினேழில் மரணம். புதன் ரவி சேய்கூடில் வருஷம் இருபதில் மரணம். மதி சிங்கத்திலிருக்கச் சேய் சனி 8-ல் இருக்கச் சுக்கிரன்பார்க்கில் வருஷம் இருபத்தொன்றில் மரணம். என்பதாம்.

22-ஆமுதல் 32-ஆவரை ஆயுள்

சனி விருச்சிகாங்கிஷமேற ரவிபார்க்கில் வருஷம் இருபத்திரண்டில் மரணம். லக்கினம் துலாமாகச் சனியாங்கிஷமேறக் குரு பார்க்கில் வருஷம் இருபத்துமூன்றில் மரணம். லக்கினம் கன்னியாகச் சனியாங்கிஷமேறப் புதன் பார்க்கில் வருஷம் இருபத்து நான்கில் மரணம். லக்கினம் சிங்கமாகச் சனியாங்கிஷமேற ராகு பார்க்கில் வருஷம் இருபத்தைந்தில் மரணம். லக்கினம். கன்னியாகச் சனியாங்கிஷமேறக் கேது பார்க்கில் வருஷம் இருபத்தாறில் மரணம். லக்கினம் மிதுனமாகச் சனியாங்கிஷமேற லக்கினேசன் பார்க்கில் வருஷம் இருபத்தேழில் மரணம். 1-8-க்குடையவர்கள் கிரகமாறில் வருஷம் இருபத்தெட்டில் மரணம். லக்கினம் விருச்சிகமாகி ரவி குருவிருக்க 8-க்குடையவன் 7-ல் இருக்கில், வருஷம் இருபத்தொன்பதில் மரணம். லக்கினேசனும் வியாழனும் 8-ல் இருக்கில் வருஷம் முப்பதில் மரணம். ஏழிற் சேயிருக்கச் சனி லக்கினேசனைக்கூடில் வருஷம் முப்பத்தொன்றில் மரணம். லக்கினேசன் பதனமாகிய 1-8-8-12-ல் இருக்கில்வருஷம்முப்பத்திரண்டில் மரணம் என்பதாம்.

அற்பஆயுள் தீர்க்கஆயுள் மத்திமஆயுள்

எட்டுக்குடையவன் பெலக்க, லக்கினேசன் பெலகீனமாகிலும், 5-ல் ராகுவிருக்க, அதற்குடையவன் திசையிற் பிறக்கிலும், ரவிக்கு லக்கினேசன் சத்துருவாகிலும், சனியும், 1-5-8-10-க் குடையவர்களும் பெலகீனமாகவும், சுபர் பெலகீனமாகப் பாவர் பெலகீனமாகவும், சுபர் பெலகீனமாகப் பாவர் பெலக்கினும், 1-5-8-ல் பாவரிருக்கிலும் அற்பாயுளாம். இவையல்லாதவெல்லாம் தீர்க்காயுளாம். இவை இரண்டுங்கூடிக் கலக்கில் மத்திமாயுளாம். சத்தியோ மரணந்தொட்டு அற்பாயுள் வரையுஞ் சொன்ன பலத்துக்கு லக்கினுதிபதி பதனமாகிற் பலன் சொல்லுக என்பதாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சர்ப்பமுகூர்த்தம் உருத்திரமுகூர்த்தம்

உதித்து-2-ம் நாழிகை சர்ப்பமுகூர்த்தம், 4-ம் நாழிகை உருத்திர முகூர்த்தம் என்றிரியவும்.

அமாவாசை தோஷம்

கட்டளைக் கலிப்பா

நாதர் முன்னுவாப் பத்திற்சேய் நோயதாம்
நந்தி ரண்டிற்ருய் முப்பதிற் றந்தைநோய்
சேதம் நாற்பத்தின் மாமனைம் பத்தினிற்
சேய தாமாறு பத்தினில் பின்மையே
போதுமா மக மூலமுற் காலினிற்
புதல்வர் நோயிரு கான்மூல மாதுருந்
தீ தரும் பேறு மூன்றில் நால் நல்லதே
செய்ய சற்குரு தாளுறத் தேடுமே.

இ-ள். அமாவாசை ஆதியந்தநாழிகை 60-யும் 6-பங்குசெய்தால் பங்கு 1-க்கு 10-நாழிகை ஆகின்றது. அதில் குழந்தை பிறக்கில், முதல் 10-நாழிகைக்கு பிறந்த சிசுவுக்குத் தோஷம். 2ம் 10-நாழிகைக்கு மாதாவுக்கு தோஷம். 3-ம் 10-நாழிகைக்கு பிதாவுக்குத் தோஷம். 4ம் 10-நாழிகைக்கு மாமனுக்குத் தோஷம். 5-ம் 10-நாழிகைக்கு பிள்ளைக்குத் தோஷம். 6-ம் 10-நாழிகைக்கு யாவருக்கும் நல்லது.

இனி நட்சத்திர தோஷமறிய

அசுவினி -	மகம் -	மூலம்	1.	கால் பிறந்த குழந்தைக்குத்	தோஷம்.
,,	,,	,,	2.	கால் பெற்ற தாய்க்குத்	தோஷம்.
,,	,,	,,	3.	கால் தனம் பொருள்	சேதம்.
,,	,,	,,	4.	கால் யாவருக்கும்	நல்லது.

கட்டளைக் கலிப்பா

தேறுங் கோட்டை யொன் ருகிற்ருய் பாட்டியும்
செப்பி ரண்டினிற் ருய்பாட்டன் மூன்றினிற்
கூறு மாமன் நாலைந்திற்ருய் மைந்தர் போம்
குலவு மாறிற் பொருட்சேத மேழினில்
மீறு வங்கிஷஞ் சேதமா மெட்டினில்
மிக்க மூத்த தமக்கை மரிக்குமே
சீறு மொன்பானிற் பாரியின் றந்தையாம்
செய்ய பத்தாறிற் றந்தைக்குச் சேதமே.

இ-ள். கேட்டை நட்சத்திரம் ஆதியந்தமான நாழிகை அறுபதையும் பத்துப்பங்கு செய்தால் பங்கொன்றுக்கு ஆறு நாழிகையாகும். அதில் பிள்ளை பிறந்தால், முதற்பங்கானுல் தாயைப்பெற்ற பாட்டியையும், 2-ம் பங்கானுல் தாயைப்பெற்ற பாட்டனையும், 3 ம்பங்கானுல் தாய் மாமனையும், 4-ம் பங்கானுல் பெற்ற மாதாவையும், 5-ம் பங்கானுல் பிறந்த பிள்ளையையும், 6-ம் பங்கானுல் வங்கிஷத்தையும் பொருளையும், 7-ம் பங்கானுல் இரு வங்கிஷத்தையும், 8-ம் பங்கானுல் மூத்த சகோதரங்களையும், 9-ம் பங்கானுல் பெண்கொடுத்த மாமனையும், 10-ம் பங்கானுல் பிதாவையும் சர்வத்தையும் நாசம்பண்ணும். இதற்குச்சாந்தி, பார்வதிக்கு, அபிஷேகஞ்செய்ய நன்மையுண்டாகும். 216

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கட்டளைக்கலிப்பா

சாற்றும் ஆயி லியம்மூதற் கால்நலம்
தனமும் போம்ரண்டின் மூன்றிற்றாய் தந்தைநால்
ஏற்ற ரேவதி நாற்காலிற் றந்தைநோய்
இனிய வுத்திரம் முன்காற் பிதாவுறும்
தேற்றங் கௌவை பரணிநான் மூன்றினிற்
செய்ய வாண்பிதா பெண்பெறிற் றுயர்நோய்
போற்றும் நற்கோட்கள் நோக்கிடிற் கேடிலை
புனிதர் நற்றொடுக் காடர் புரிந்ததே.

இ-ள். ஆயிலியம் முதற்பாதம் யாவருக்கும் நன்மையாம். ஆயிலியம் 2-ம் பாதம் பொருட்சேதம். ஆயிலியம் 3-ம் பாதம் மாதுர் கண்டம். ஆயிலியம் 4-ம் பாதம் பிதுர் கண்டம். ரேவதி 4-ம் பாதம் தந்தைக்கு நோயுண்டாம். உத்திரம் முதற்பாதம் மாதாபிதாவுக்குக் கண்டம். ஆயிலியம்-பரணி 3-ம் பாதம் ஆண்பிறக்கில் பிதுர்கண்டம். ஆயிலியம் பரணி 3-ம் பாதம் பெண்பிறக்கில் மாதுர்கண்டம். உடல் உயிரைச் சுபர்கள் நோக்கில் தாய் தந்தையர்க்குத் தோஷமில்லையாம். அசுவினி மகம் மூலம் 2-நாழிகை முன்னும் ஆயிலியம் கேட்டை ரேவதி 2-நாழிகை பின்னும் அதிகதோஷம். எ-று.

புரிந்த ரேவதி யந்தமுன் ருண்முதற்
போந்த கேட்டையு மூலமு மிந்நிலை
தெரிந்த பாம்பந்த மாகிமுன் னுழிகை
செய்ய ரெண்டினிற் பிறந்தவர் தீயரே
தெரிந்து ஆவின்பின் கானடு முன்னிறச்
சேயை வாங்கிப் பசுத்தான மீந்துபின்
வருந்தி வீமேசர் தாளை வணங்கியே
வளர்க்கப் பிள்ளை மகிழ்வுடன் வாழுமே.

இ-ள். இரேவதி 4-ம் பாதம், அந்தத்தில் 2-நாழிகையும், கேட்டை மூலம் 3-ம் பாதம், அந்தத்தில் 2-நாழிகையும், ஆயிலியம் 4-ம் பாதம், அந்தத்தில் 2-நாழிகையும், இந்த வேளைகளிற் பிறந்த பிள்ளைக்கு வெகு தோஷமுண்டு, இந்தத் தோஷம் தீருதற்குப் பரிகாரம், சாதுவான கறவைப் பசுவைப் பின்னங்கால் நடு அடிமூலை தாங்க முன்னங்கால் நடுவாகப் பிள்ளையை வாங்கிப் பசுவின் முகத்தில் வைத்து இந்தப் பிள்ளையைப் பசுயீன்றதாகப் பார்த்து ஈன்ற மாத்திரம் பசுவைத் தான மீந்து இப்படிக் கோமுகசாந்தி பண்ணினுல் நன்மை. எ-று. 218

ரோகணி நட்சத்திரம் மாமனுக்காகாது. ஆயிலியம்-மூலம் மாமிக்காகாது. விசாகம் மைத்துனனுக்காகாது. கேட்டை தமையனுக்காகாது. பூசம்-பூராடம் முதற்பாதம் தந்தைக்கும், பூசம்-பூராடம் 2-ம் பாதம் தாயாருக்கும், பூசம் பூராடம் 3-ம் பாதம் தாய் மாமனுக்கும், பூசம்-பூராடம் 4-ம் பாதம் பிறந்த பிள்ளைக்கும் தோஷமாம். மூலநட்சத்திரம், ஆதியந்தமான நாழிகை அறுபதையும், பன்னிரண்டு பாகமாகச் செய்தால் பங்கு ஒன்றுக்கு ஐந்து நாழிகையாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அதிற்பிறக்குங் குழந்தைகளுக்கு

முதற் பங்காஞல் பிதுருக்குத் தோஷம். 2-ம் பங்காஞல் மாதுருக்குத் தோஷம். 3-ம் பங்காஞல் மூத்தசகோதரத்துக்குத் தோஷம். 4 ம் பங்காஞல் மூத்தசகோதரிக்குத் தோஷம். 5-ம் பங்காஞல் மாதுலருக்கு தோஷம். 6-ம் பங்காஞல் சிறியபிதாபெரியபிதாவுக்குத் தோஷம். 7-ம் பங்காஞல் சிறியமாதாபெரியமாதாவுக்குத் தோஷம். 8-ம் பங்காஞல் பாக்கியத்துக்குத் தோஷம். 9-ம் பங்காஞல் பிறந்த பிள்ளைக்குத் தோஷம். 10-ம் பங்காஞல் தரித்திரம் அதிகமாயிருக்கும். 11-ம் பங்காஞல் இராச்சியத்துக்குப் பங்கம். 12-ம் பங்காஞல் சம்பத்தை யுண்டாக்கும்.

கெண்டாந்தகாலம்

கெண்டாந்த தோஷமசு வினிக்கிரட் டாகும்
கேட்டையத்தந் தனக்கொன்ரும் மகத்துக்கோ ரெட்டாம்
தண்டாச்சித் திரைமூலம் நாலாண்டதாகும்
சாற்றரிய வாயிலியம் வருடமிரண் டென்பார்
கண்டாருந் திரமாத மிரண்டாகும் பூசம்
கருதுதிங்கள் மூன்ருகும் பூராடந் தனக்கே
கொண்டாடும் மாத மொன்பான் றன்னிலே பிதுர்க்குக்
கொடிதாகு மரிட்டமெனக் கூறினர்கற் றுணர்ந்தோர்.

இ-ள். அசுவினிக்கு-ஞூ-16. கேட்டைக்கும், அஸ்தத்துக்கும், ஞூ-1. மகத்துக்கு-ஞூ-8. சித்திரைக்கும், மூலத்துக்கும், ஞூ 4. ஆயிலியத்துக்கு-ஞூ-2. உத்திரத்துக்கு-மீ-2. பூசத்துக்கு-மீ-3. பூராடத்துக்கு மீ-1. இந்த ஆண்டு மாதங்களில் தந்தைக்கு அரிட்டமுண்டாகு மென்று கற்றுணர்ந்த பெரியோர்கள் தெரிந்து சொல்வார்கள். எ-று. 219

இவ்விதம் ஞூ மீ-கழிந்தபின் சிசுவுக்கு ஆயுள் தீர்க்கமென்றறிய வேண்டியது.

வேறு விதம்

அசுவினி	முதற்பாதம்	ஆயிலியம்	நாலாம்பாதம்
மகம்	முதற்பாதம்	கேட்டை	நாலாம்பாதம்
மூலம்	முதற்பாதம்	ரேவதி	நாலாம்பாதம்

அசுவினி மகம் மூலம் இவற்றின் ஆரம்பத்தில் 9-நாழிகையளவும், ஆயிலியம் கேட்டை ரேவதி இவற்றின் அந்தத்தில் 8-நாழிகையளவும் உள்ள காலத்தையே கெண்டாந்த மென்பர்.

ரோகணி புனர்பூசம் மகம் அஸ்தம் இந்த நட்சத்திரங்களில் நட்சத்திரந்தொடங்கி (7-க்கு) நாழிகைக்குமேல் (7-க்கு) நாழிகைவரை கெண்டாந்த காலமென்பர்.

பரணி மிருகசீரிடம் பூசம் பூரம் சித்திரை இந்த நட்சத்திரங்களில், நட்சத்திரந்தொடங்கி 55-நாழிகைக்குமேல் 5-நாழிகை வரைக்கும் கெண்டாந்த கால மென்பர்.

கார்த்திகை திருவாதிரை ஆயிலியம் உத்திரம் சுவாதி இந்த நட்சத்திரந்தொடங்கி 21-நாழிகைக்குமேல் 9-நாழிகைவரைக்கும் கெண்டாந்தகால மென்பர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

விசாகம் மூலம் திருவோணம் பூரட்டாதி இந்த நட்சத்திரந் தொடங்கினது முதல் 8-நாழிகைவரைக்கும் கெண்டாந்த மென்பர்.

அனுஷம் பூராடம் அவிட்டம் உத்திரட்டாதி இந்த நட்சத்திர முடிவில் 8-நாழிகைவரைக்கும் கெண்டாந்த மென்பர்.

கேட்டை உத்திராடம் சதயம் ரேவதி இந்த நட்சத்திரந் தொடங்கி 20-நாழிகைக்குமேல் 10-நாழிகைவரைக்கும் கெண்டாந்தமென்பர்.

மாதா பிதா தோஷம்

கதிரவற் கிரண்டீ ராறிற் காரியுந் தந்தைக் காகா
மதிதனக் கிரண்டீ ராறில் மந்தனும் மாதுர்க்காகா
கதிர்குசன் அரவங் கூடிக் காரகத் தானம் நிற்க
அதிகமாந் தந்தை தாய்க்கு அரிட்டமென் றுரைக்க லாமே

இ-ள். கதிரவனாகிய சூரியனுக்கு இரண்டுபன்னிரண்டில் காரியாகிய சனிபகவான் நிற்கில் தந்தைக்குத்தோஷம். மதியாகிய சந்திரனுக்கு, இரண்டுபன்னிரண்டில் மந்தனாகிய சனிபகவான் நிற்கில் தந்தைக்குத்தோஷம். மதியாகிய சந்திரனுக்கு, இரண்டுபன்னிரண்டில் மந்தனாகிய சனிபகவான் நிற்கில் தாய்க்குத்தோஷம். கதிராகிய சூரியன், குஜனாகிய செவ்வாய், அரவாகிய ராகு (அல்லது) கேது இவர்களில் எவர்களாவது ஒன்றுகூடி காரகத்தானமாகிய நாலாமிடம் ஒன்பதாமிடத்தில் நிற்க அன்னை தந்தைக்கு அரிட்டமென்று சொல்லுவாயாக. எ-று. 220

வெண்பா.

பூராடம் முக்காலும் பூசத் திடையிரண்டும்
சீராகச் சித்திரையிற் செல்லரையும்—நேராக
உத்திரத்துக் காலும் உயிரிழப்பர் தந்தைதாய்
புத்திரனைப்பெற்றெடுத்த போது.

இ-ள். பூராடம் மூன்றும்பாதமும், பூசம்-இரண்டு மூன்றும் பாதமும், சித்திரை-முதற் பாதம், இரண்டாம்பாதமும், உத்திரம்-முதற்பாதமும், தாயானவள் சேயாகிய பெண்குழந்தையைப் பெற்றால், பெற்றதாய்க்குக் கெண்டமாம். இந்த நட்சத்திரப்பாதங்களில் ஆண்குழந்தைபிறந்தால் தந்தைக்குக்கெண்டமாம். எ-று. 221

மேலும் லக்கினம் ஐந்து எட்டு பன்னிரண்டில், இந்நான்குவகைத் தானத்தில், சூரியன் செவ்வாய் சனி யிருந்தால், பிதிர்தோஷமாம். இப்படிக்கிரகமிருக்க ஆயிலியம் நான்காம் பாதமும், அசுவினி முதற்பாதமுமாகியதிற் குழந்தை பிறந்தால் பிதிர் கெண்டமாம்.

உ-.தயராசிக்கு	5-10-ல்	சூரியனிருந்தால்	பிதாவுக்கும்
,,	5-10-ல்	சந்திரனிருந்தால்	மாதாவுக்கும்
,,	5-10 ல்	செவ்வாயிருந்தால்	மாமனுக்கும்
,,	5-10-ல்	சனியிருந்தால்	பிறந்தசிசுவுக்கும்,

தோஷமுண்டு. சுபக்கிரகம் நோக்கில் தோஷ நிவர்த்தி.

புருஷகண்டம்.

வயதுகள் 12-16-22-28-32-34-4-42 44-48-57-60 ஆகப்பன்னிரண்டும் புருஷகண்டம். இதன்மேல் நித்திய கண்டமும், இலக்கி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஜேதய வயதும், காலசக்கிரத்துப் பாய்ச்சலும், அஷ்டவர்க்கவயது கண்டமும் தினகண்டமும் சூரியாதி கிரகங்களுக்குச் சொன்ன திசைவேதையும், கோசரத்துற்பலமுங்கூடிச்சேருங்காலம் மரணகாலமென்பதாம்.

லத்தைவேதைகள் அறியும்படி.

சூரியன் செவ்வாய் சனி இவர்களிருந்த நட்சத்திரத்திற்கு 12-14-28-ல் யாதாமொருவனுக்கு ஜென்ம நட்சத்திரமாகில் வேதையுண்டாமென்றறியவும். வேதைமட்டும் பலன் கெடாது. லத்தையுங்கூடச்சேரவேண்டும். (லத்தையறியும்படி) சூரியனிருந்த நட்சத்திரத்திற்கு 12-ம் நட்சத்திரம் லத்தையாம். இதற்கு நாள் 13-நாழிகை 20-வியாழனிருந்த நட்சத்திரத்திற்கு 6 ம் நட்சத்திரம், மீ-5 நாள் 10 செவ்வாயிருந்த நட்சத்திரத்திற்கு 3-ம் நட்சத்திரம் வரில் வருடம்-1. மாதம் 1. நாள்-10. இராகு கேது இருந்த நட்சத்திரத்திற்கு. 20-ம் நட்சத்திரம் வரில், மாதம் 8. இதன்பலன்கள் அன்னியோன்னியவிரோதம், அகால போஜனம், தேசபீடை, பெரிய மனுஷாள் பகை இவ்வித சாமானிய பலன்கள் நடக்கும்.

முதலாம் பாவகம்

இலக்கின பலன்

ஆடரியேறில் வெய்யோ னமர்ந்திடின்மற்றக்கோட்கள்
நாடியேயுபயலக்கி னத்திலும் பலமாய்நண்ணில்
கூடியகுழவிரண்டாங் குசனேழிற்கதிரோனெட்டில்
நீடிடிற்சரத்தின் மற்றோர் நின்றிடிற்பலன்களில்லை.

இ-ள். மேட சிம்ம இடபராசிகளில் சூரியனும் மற்றக்கிரகங்கள் உபயராசிகளிலும், பலம் பெற்று நின்ருல், இரட்டைப்பிள்ளையாம். செவ்வாய் ஏழிலும், சூரியன் எட்டிலும் இருக்க, மற்றக்கிரகங்கள் சரவிராசியிலிருக்கப் பலன்களில்லையாம். எ-று. 222

சந்திரன் பாவராசி தனிற்குசன்றிரயக்காணத்
துந்திடிற்சிக்கிரண்டி லுறுபன்னிரண்டினல்லோர்
வந்துதானிருக்கிற்பெற்ற மகவுடன்பிறக்கும்பாம்பு
செந்திருமாதேபாம்பாய்ச் செனிக்கினுஞ்செனிக்குந்தானே.

இ·ள். இந்தவுலகில் சிந்துவில் வந்தவதரித்த செந்திருமாதாகிய இந்திரைக்கு நிகரான சுந்தரமுடைய பெண்ணே ? சந்திரன் பாவர்களின் வீட்டிலும். செவ்வாய் திரேக்காணத்திலும், கேதுவுக்கு இரண்டாமிடத்தும் பொருந்தி யிருக்கப் பன்னிரண்டாமிடத்தில் நல்லோர் இருக்கப் பிள்ளையுடன் பாம்புங் கூடவே பிறக்கும் அல்லது பாம்பாகவே பிறந்தாலும் பிறக்குமாம்.

நாலிடத்ததிபன்பாக்கி யாதிபனிலக்கினத்தில்
சாலவேநல்லோர்பார்க்கத் தானுறில்ராசபூச்சியன்
கோலியசனியொன்றேழிற் குசனுறச்சங்கனிந்து
மாலிவன் வியத்துணிற்க மருவுவன்றகப்பனூரில்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். நாலு ஒன்பதுக்கு அதிபர்கள் லக்கினத்திலிருக்க, நல்லோர் பார்வைபெற்றிருந்தால், இராஜபூசிதையுடையவன். லக்கினத்திற் சனியும், ஏழாமிடத்திற் செவ்வாயுமிருக்கச் சுக்கிரன் சந்திரன் புதன் பன்னிரண்டாமிடத்தில் நிற்கத் தகப்பனூரில் தங்கியிருப்பவனும். எ-று. 224

பண்ணும்லக்கினத்தையிந்து பாராமலிருக்கவிந்து
நண்ணியராசிலக்கி னஞ்சரராசியாக
ஒண்ணியசுதன்சராங்கி சம்பெறவுதித்தானுகில்
திண்ணமாய்த்தகப்பன்தேசாந் திரத்தினிறறிரிவன்ருனே.

இ-ள். இலக்கினத்தைச் சந்திரன் பார்க்காமலும், சந்திரன் நின்ற ராசிசரமானுல் செவ்வாயும், சாராங்கிஷத்திலிருக்கப்பிறந்த ஜாதகனுடைய தகப்பன் தேசாந்திரியாய்த் திரிவான். எ-று. 225

பரிதிக்கோரிரண்டிற் பாவக் கிரகங்கள்பாவராகி
யருவிடிற்றந்தைதேசாந் திரத்துறும்மற்றும்பாவர்
உரிமையாம்பாவராசி யுறிற்கதிர்க்கைந்தேழொன்பான்
பெரும்பாவர்நிற்கத் தந்தை சிறையுளான்பரதேயத்தில்.

இ-ள். சூரியனுக்கு, இரண்டாமிடத்திற் பாவக்கிரகங்கள், பாவர்களுடைய வீடாயிருந்து அதிலிருந்தால் தகப்பன் தேசாந்திரியாவன் பாவக்கிரகங்கள் பாவராசிகளில் நின்றும், சூரியனுக்கு ஐந்து ஏழு ஒன்பதாமிடங்களில் பெரும் பாவக்கிரகங்கள்நிற்க தகப்பன் தேசாந்திரத்திற் போய்ச் சிறைப்பட்டிருப்பான். எ-று.

சேய்க்குப்பன்னென்றிலிருந்து சேர்கிறோகுழவிக்கீனம்
ஆக்கிய நல்லோர்காணி றவனேமற்ருேர்வளப்பர்
வீக்கியபாவர்காணில் வியமதாங்குழவியேகும்
பாக்கியரிந்தைக்காணிற் றகபபன்வாழ்பதியிற்சென்பம்.

இ-ள். செவ்வாய்க்குப் பதினேராமிடத்தில் தெவ்வாகிய சந்திரனிருந்தால், ஒவ்வாகுவ்வாவென்றழும் குழந்தைக்குக்குற்றமாம். சுபக்கிரகங்கள் பார்த்தால் அக்குழந்தையை அந்நியர்கள் வளர்ப்பார்கள். பாவக்கிரகங்கள் பார்த்தால் குழந்தை மரிக்கும். பாக்கியாதிபதி சந்திரனைப்பார்த்தால் தகப்பன் குடியிருக்கிற இடத்திற் குழந்தைபிறக்கும். எ-று. 227

நீசத்தான த்தினல்லோர் நின்றுசந்திரனைக்காண்கில்
பேசுவர்மரத்தின்கீழே பிறந்திடும்பிள்ளையென்றே
பூசவ செய்பாபர்நீசம் பொருந்தியசசியைக்கணிால்
ஏசுறுநீசர்வீட்டிற் பிறந்தசேயெனச்சொல்வாரே.

இ-ள். நீசஸ்தானத்தில், நல்லோர்கள் வசமாயிருந்து சந்திரனைப் பார்த்தால் மரத்தின்கீழ் பிறந்த பிள்ளையென்றும், பாவக்கிரகங்கள் நீசம் பெற்று சந்திரனைப்பார்த்தால் நீசர் வீட்டிற்பிறந்த பிள்ளையென்றும் சொல்லலாம்.

இந்துவும்நல்லோரேக ராசியிலிருக்கிற்காண்கில்
பந்தமாமனிதரில்லாப் பதியிலுற்பவிக்கப்பண்ணும்
சந்திரற்கேழிற்காரி தபனனுக்கேழிற்சேயும்
வந்திடத்தந்தைத்தாய்க்கு வருதமுமரிட்டமாமே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். சோமானும், சுபக்கிரகங்களும், நேமமாய் ஒரேவீட்டில் நின்ருலும், ஒன்றுக்கொன்று பார்த்தாலும், காட்டில் உற்பவமாம். சந்திரனுக்கு ஏழாமிடத்தில் மந்தனும், விரிச்சிகனுக்கு ஏழாமிடத்தில் எரிச்சகனும் நிற்க, தாய் தகப்பனுக்கு நோய்வருத்தமும் தோஷமும் உண்டாகும். எ-று. 229

சவுரிக்கேழிடத்திற்செவ்வாய் தானுநிற்குழவிச்சீனம்
பவுரிகொளிலக்கினுதி பாவரோடிசைந்தாறெட்டில்
உவமிகுபன்னிரண்டி லுற்றிடில்ரோகவானும்
நுவல்சென்மலக்கினுதி பலமிலா திருக்கில்நோயாம்.

இ-ள். சவுரியாகிய சனிக்கு ஏழாமிடத்திற் செவவாய் நின்ருல் குழந்தைக்கு ஈனமாம். லக்கினுதிபதி பாவர்களோடு சேர்ந்து மறைவு ஸ்தானமாகிய ஆறு எட்டு பன்னிரண்டில் நின்ருல் ரோகமுள்ளவனும். லக்கினுதிபதி பலமில்லாதிருக்கில் நோயுடையவனும். எ று. 230

ஆறுடனிரண்டிடத்தி னதிபனுங்குசனுமூன்றில்
வீறுடனிலக்கினத்தின் மேவிற்காதறுமருதேல்
சீறியசெவியில் ரோகஞ் சேருநற்கணக்கன்வீட்டில்
பேறுடன்காரிநிற்கில் நபுஞ்சனுய்ப்பிறப்பன்காணே.

இ-ள். ஆறு, இரண்டுக்கதிபதியுடன் அங்காரகன்கூடி மூன்ருமிடத்தில் அல்லது லக்கினத்தில் நின்ருல் காது அறுபடுமென்றும், இல்லாவிட்டால் செவிரோக முண்டாமென்றுஞ் சொல்லவேண்டும். புதன் வீட்டில் சனி நின்ருல் பேடியாயும் பிறப்பான். எ று. 231

புந்திவீட்டினிற்பிறக்கப் புதனுருமிடத்தினிற்க
அந்தவாருமிடத்தி னதிபன்லக்கினத்தினிற்க
நிந்தையாமலியுமாவன் நிலவுசன்மாதியோடும்
மந்தனும்புதனுங்கூடில் வடிவினிற்குள்ளனுவன்.

இ-ள். புதனுடைய வீடு லக்கினமாய் புதன் ஆருமிடத்தில் நிற்க, ஆருமிடத்ததிபன், லக்கினத்தில் நிற்க, நிந்தை செய்யக்கூடிய அலியாய்ப்பிறப்பான். சந்திரன் ஜென்மாதிபதியோடு சனியும் புந்தியுங் கூடி நிற்கில் குறள் வடிவமாவன். எ று. 232

வடிவுள தகரிற்றேளின் மங்கலனிருக்கவேதான்
முடவன்லக்கினத்தினிற்க மூன்றினிற்பிருகுமேவ
உடல்சிறுகுள்ளனுவ னுயர்குசனேரையாகில்
அடல்சனிதிரயக்காண மாகிடிற்சிறையிலொன்றும்.

இ-ள். மேஷத்திலும், விருச்சிகத்திலும், மங்கலனுகிய செவ்வாயிருக்க, சனி தனியாய் லக்கினத்தில் நிற்க, மூன்ருமிடத்திற் பிருகுவாகிய சுக்கிரனிருக்க, சிறுத்த உடலோடுகூடிய குள்ளனுவன். குஜனேரையும், சனி திரேக்காணத்திலிருக்கப் பிறந்தவன் சிறையிலடைபடுபவனுமாவன்.

வே று.

ஒன்றேழெட் டொடுவியத்திற் சசிபாவ ருடனே
உத்தமர்நோக் கறநிற்கி லுயருங்கேந் திரத்தில்
நன்றியலின் றிப்பிறக்குஞ் சேய்குருடு தானே
நவில்வியமெட் டாருதி பாவர்களே யாயின்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வென்றியோடெங் கிருக்கிலவன் றுர்ப்பலனே யாவன்
மேவியசன் மாதிபதி தான்பாவ னுகிக்
கொன்றைமுடி யோனருளா லேவியமாறெட்டிற்
கூடினன்மை யென்றென்றே கூறுபவர்பா வலரே.

இ-ள். ஒன்று ஏழு எட்டு பன்னிரண்டாமிடங்களில், சந்திரன் பாவருடனிருந்து, சுபர்கள் பார்க்காமலும், அந்தச் சந்திரனுக்குக் கேந்திரத்திற் சுபர்களில்லாமலும் பிறந்த குழந்தை குருடாம், ஆறு எட்டுப்பன்னிரண்டுக் குடையவர்கள் பாவர்களாகி எவ்விடத்திருந்தாலும், துர்ப்பலமுடையவனுவன். ஜென்மாதிபதி பாவனுய், ஆறு எட்டு பன்னிரண்டாமிடங்களில் நின்ருல் கொன்றைமாலையணிந்த பரமனருளால், நன்மையென்றே பெரியோர்கள் சொல்லுவார்கள். எ-று. 234

பாவர்கள்சன் மத்தினிலுஞ் சன்மத் தாதி
பலமின்றிப் பயிலநோய் கேந்திர கோணத்
தீவர்களுற் ருற்கோபி யாவன் சென்மத்
திறைநின்ற வீட்டோனெட் டாறி ராறில்
மேவிதுர்ப் பலன்சன்ம கன்ம னெட்டோன்
மிகைச்சனியிந் நால்வர் திசை யெய்தும் போதும்
ஏஃடுந்துர்ப் பலர்திசைக்குட் சனிசஞ் சாரம்
எய்திடிலோ வரிட்டமென விளம்பு மாறே.

இ-ள். பாவக்கிரகங்கள் ஜென்மத்திலும், ஜென்மாதிபதி, பலமில்லாமலுமிருக்கப் பிறந்தவன், ரோகமுடையவனும். லக்கினுதிபதி கேந்திர கோணங்களிலிருந்தால், கோபமுடையவனும். லக்கினுதிபதியிருந்த வீட்டோன் மறைவுஸ்தானமாகிய, ஆறு எட்டு பன்னிரண்டில் இருந்தாலும் துர்ப்பலனும். லக்கினம் கன்மம் எட்டு இவர்களுடைய சனி திசையிலும், துர்ப்பலர் திசைகளில் சனிபுத்தி வரும்போதும் அரிட்டமாம். எ-று. 235

ஆறிற்செங் கதிரதற்கேழ் சனிசெவ்வாய் நிற்கில்
அரிட்டமா குங்காரி யரவொடுசென் மத்தும்
வீறுசெவ்வாய் நான்கிற்செங் கதிரோ னேழின்
மேவியநா டனிலுடனே வியமதே யாகும்
கூறுசசிக் கிருபாலுந் தீடேயாரே நிற்கில்
குழவியொடன் னைக்கரிட்ட மேகூற லாகும்
சீறுகர்க்கி லக்கினமாய் மூன்ருறிற் றீயோர்
செம்மையோர் பன்னிரண்டிற் றீதென்ப ரருளோர்.

இ-ள். ஆருமிடத்தில் சூரியனும், அதற்கேழாமிடத்தில் அங்காரகனும், சனியுமிருந்தால் அரிட்டமாம். சனி ராகுவுடன்சேர்ந்து. ஜென்மலக்கினத்திலும், நாலிற் செவ்வாயும் ஏழிற்சூரியனும் நிற்கப் பிறந்தவன் உடனே இறந்துவிடுவன். சந்திரனுக்கு இரண்டு பக்கமும் பாவக்கிரகங்கள் நிற்கில் குழந்தைக்குந் தாய்க்கும் அரிட்டமாம். கர்க்கடகம் ஜென்மலக்கினமாக மூன்ருமிடத்திற் பாவர்களும், பன்னிரண்டாமிடத்திற் சுபர்களும் நின்ருல் தீமையென்று நேர்மையுள்ள பெரியோர்கள் நிகழ்த்துவார்கள். எ-று.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வே று.

அருள்சன் மலக்கினுதி பாவனுய்வியமாறெட்டில்
மருவின்மெய்தனக்கு நன்மை வருஞ்சவுக்கியமுமுண்டாம்
உருவமாமிலக்கினுதி யுத்தமத்ததிபனுகிப்
பெருமைசேரைந்தொன் பானிற் பலனெனவிரவிற்சொல்வாய்.

இ-ள். லக்கினுதிபதி அக்கிரமப்பாவியாய், ஆறு எட்டு பன்னிரண்டாமிடத்திலிருக்கத் தேகசுகமும், யோகபாக்கியமு முண்டாகும். லக்கினுதிபதி சுபராய் ஐந்து ஒன்பதாமிடங்களில் நின்ருல் நல்ல பலனென்று சொல்ல வேண்டும். எ-று. 237

வே று.

விரவியதோர் சரீரகா ரகனும் வெய்யோன்
வியமாறெட் டிற்சனிதன் வீட்டி லுற்ருல்
உருவு குறைந் திடுமங்கத் தூனமாகும்
ஒன்பதுபன் னென்றிரண்டி லுற்றிட்டாலும்
பரவியதோ ரரிமேஷத் துறினு மெய்யிற்
பழுதறவே சவுந்தரிய பரனு மாவன்
வரியுலவுங் குழற்கொவ்வை மதுரச்செவ்வாய்
மட்டுலவுஞ் செங்கமல மலரின் மானே.

இ-ள். வண்டுகள் மொய்க்குங் கொண்டையும், மதுரம் பொருந்திய செவ்வாயும், விண்டுவுக்குகந்த விமலைக்கொப்பாகியும் விளங்கி மண்டலத்தோர் கொண்டாடும் பெண்டுகளிற் சிறந்த பெண்ணே கேட்பாயாக. சரீர காரகனுகிய சூரியன் 6-8-12 ஆமிடம், சனிவீடாகி அதிலிருந்தால், அச்சாதகன் அங்கவீனனுவான். சூரியன் 2 9-11 ஆமிடங்களிலும் சிம்மம் மேஷத்தில் நின்ருலும் ஆகமாகிய தேகத்திற் பழுதற்ற சவுந்தரியவானுயிருப்பன்.

வே று.

இடபமேடநண் டிம்மூன்றிராசியும்
அடரும்லக்கின மாகவதனுளே
தொடருமாவிட ராகுறச்சூழ்ந்திடப்
படரு முத்தம மென்று பகர்வரே.

இ-ள். இடபம் மேடம் கடகம் இவை லக்கினமாகி அதில் இராகுவிருக்க, உத்தமமென்று சித்தசுத்த முள்ளவர்கள் சொல்லுவார்கள். எ-று.0

பகருலக்கின மன்பத்தில்ரெண்டினில்
வகையினிற்க வலதுலாபாதியும்
இகலிற்பத்தி லிரண்டிலிருந்திடத்
துகளினுலைந்திற் ரேன்றுஞ்சுகமதே.

இ-ள். லக்கினுதிபதி முக்கியமாய் பத்து இரண்டாமிடத்தில் நிற்க, அல்லது பதினேராமிடத்ததிபதி, இரண்டுபத்தாமிடத்தில் நிற்க, இருபது வயதிற் சவுக்கிய முண்டாகுமென்று சொல்ல வேண்டும். எ-று, 240

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வேறு.

சுகந்தருஞ் சன்ம லக்கினஞ் சரமாய்த்
　　தோன்றிலா பத்தின திபனும்
மிகுந்திடுந் திரமேற் பாக்கியா திபனும்
　　விரும்பிய உபயலக் கினமேல்
உகந்திடு மேழா மதிபதி மூவ
　　ருறுதிசை வாதைசெய் விக்கும்
பகர்ந்திடு மூவர் பதியுமிம் மூவர்
　　பற்றிய விடங்களுந் தீதே.

இ-ள். ஜென்மலக்கினம் சரராசியாகி,பதினோராமிடத்தில் அந்தலக்கினதிபதியும். திரவிராசியிற்பாக்கியாதிபதியும், உபயவிராசியில் ஏழாமிடத்ததிபதியும், இருந்து இம்மூவர்திசைகள் நடக்குங் காலங்களில் துன்பமுண்டாக்கும், அன்றியும், இம்மூவர்களின் வீடுகளும், இவர்கள் இருக்கின்ற இடங்களும், தீமையைத்தானே வெகு நேர்மையாயுண்டாக்கும். எ-று 241

தீதறுஞ் சென்ம காலையி லெட்டிற்
　　செங்கதிர் நிற்கிலோ சுரமாம்
கோதறு திங்க ளுறிற்சல கண்டங்
　　குசனுறி லாயுத பீடை
சோதிசேர் புந்தி வியாதிபொன் மிருத்தியு
　　சுக்கிர னுறிற்றரித் திரமாம்
ஓதிய சனிதா யர்க்குறுந் தோஷ
　　மொருவரும் நிற்கவொண் ணுதே.

இ-ள். ஜென்மலக்கினத்திலும், எட்டாமிடத்திலும். சூரியன் நிற்கில் சுரமும், சந்திரன் நிற்கில் ஜலகண்டமும், செவ்வாய்நிற்கில் ஆயுதபீடையும், புதன் நிற்கில் வியாதியும், குருநிற்கில் அவமிருத்தும், சுக்கிரன்நிற்கில் தரித்திரமும், சனிநிற்கில் தாய்க்குத் தோஷமு முண்டாகுமாம். (ஆகையால்) எட்டாமிடத்தில் திட்டமாய் ஒருவரும் நிற்கக்கூடாதென்பதாம். எ-று. 242

தேவர்க ளமுத சந்திரன் முதலாய்
　　செங்கதி ரளவுமட் டெண்ணி
மேவியு தொகையை மூன்றினிற் கழித்து
　　மீந்ததொன் றுக்கவன் பிதாவில்
ஏவிய தாழ்ச்சி யிரண்டதே யாயி
　　னினியதா தைக்கிணை யோகம்
பூவினமூன் றுறிற் பிதாவினுக் கதிகம்
　　புத்திரற் சென்றறிந் திடுமே.

இ-ள். சந்திரன் நின்ற ராசிமுதல் சூரியன் நின்ற ராசிவரையுமெண்ணி, அத்தொகையை மூன்றுல் வகுத்த மிச்சம். (1) ஆனுல், பிதாவுக்குக் கீழ்ப்பட்ட யோகமும், (2) ஆனுல், பிதாவுக்குச் சமானமானயோகமும், (3) ஆனுல், பிதாவுக்கு மேற்பட்ட யோகமுமாமென்று அறியவேண்டும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வே று.

அறிந்தலக்கினத் தாதிபனுச்சமே
செறிந்துகேந்திரஞ் சேர்ந்துநல்லோருடன்
உறைந்துதூய ருறைமனையுற்றிட
நிறைந்தசீவன் பெறுவதுநிச்சயம்.

இ-ள். லக்கினுதிபதி உச்சமும், கேந்திரமும், சுபரோடும், சுபர்வீடும், பெற்று நிற்கில், நிறைந்த ஆயுளுள்ளவனென்று நிச்சயமாய்ச் சொல்ல வேண்டும். எ-று. 244

வே று.

நித்தியமாய்ச் சன்மாதி பதி திரலக் கினத்தும்
நீடு திர வங்கிசத்து மவைதான்கேந் திரமாய்
இச்சையுட னிருக்கிலவ னிருந்ததலந் தன்னில்
இனியவெகு பலன் பெறுவ னவைசுபரங் கிஷமாய்
அச்சமற நிற்கிலவன் சீவபரி யந்தம்
ஆபரணத் துடன் கூடி யம்புவியில் வாழ்வான்
மெச்சியசன் மாதிபல மறக்கேந் திரத்தின்
மேவிற்கோ பியுமாகி வியாதியுமுற் றிடுவன்.

இ-ள். ஜென்மலக்கினுதிபதி திரலக்கினத்திலும், தரவங்கிஷத்திலும் இருந்து அந்த இடமே கேந்திரஸ்தானமாகில், சேர்ந்த இடத்திலேயே வந்தவர் சந்தோஷிக்க, மிகமேன்மையாய் அதிக பலன்களை யடைவன். அந்த இடம் சுபாங்கிஷமாயின், சீவபரியந்தம், ஆபரணத் தோடுங்கூடி பூமியில் வாழ்வன். லக்கினுதிபன் தக்கபலமற்று மெய்க்கக் கேந்திரத்திலிருந்தால் கோபமுடையவனும் வியாதியுடையவனுமாவன். எ-று. 245

உற்றிடுஞ்சென் மத்தாதி யீரைந்தி லிருக்க
உண்மையுடன் பத்தாதி யுறுபலவீ னனுமாய்ப்
பற்றிவிய மாரெட்டிற் சுபர்நோக்க நிற்கில்
பயில்தத்து புத்திரனும் பகருவெகு வயதே
வெற்றிகொளும் லக்கினத்தின் மிகுபாவ ரிருக்க
மேவியசன் மாதிபதி மிகுபலவா னுகக்
குற்றமுறும் பிணிகொள்வன் சுபர்சன் மங் கண்டால்
குணமாமப் பிணிவேறு கொடுமையுஞ்செய் யாதே.

இ-ள். லக்கினுதிபதி பத்தாமிடத்திலிருக்க, பத்தாமிடத்தோன் பலவீனமாய் 6-8-12-ஆமிடத்தில், சுபர்கள் பார்வை பெற்று நிற்கில், தத்துப்புத்திரனுகி வெகு வயது ஜீவிப்பவனுவன். லக்கினத்தில் உக்கிரமாய்ப் பாபக்கிரகங்களிருக்க, அந்த லக்கினுதிபதி, அதிக பலவானுக இருந்தால் குற்றந்த ரத்தக்கொடிய நோயை யுடையவனும். சுபக்கிரகங்கள், ஜென்மலக்கினத்தைப் பார்த்தால் பிணிதீர்ந்து, சுகமடைவான். எ-று. 246

செய்யபுதன் பாவராங் கிசையினின் ருலும்
செறிந்தந்த வுபயவங் கிசத்திலா னுலும்
ஐயமற வேநிற்கிற் பிள்ளையிரட் டையதாம்
ஆந்தனுவே லக்கினமாய்ப் பிற்பாதி யாகில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பையவதில் நின்றவர்சிங் காங்கிஷத்திற் ருனே
பரிந்துநிற்கப் புதன்சனியப் பதியதனைப் பார்க்கத்
துய்யகருக் கொண்டிருந்த பையுடனே கூடத்
தோன்றவே சிறுகுழவி தான்ரேன்றுந் தானே.

இ-ள். புதன் பாவாங்கிஷத்தில் நின்ருலும், உபயவங்கிஷத்தில் நின்ருலும், இரட்டைப்பிள்ளையாம். தனுசு லக்கினமாகி, அதிலும், பிற் பாதியாயிருந்து அதில் நின்றவர் சிங்காங்கிஷமேறியிருக்க, சனியும் புதனும், அவ்வீட்டைப் பார்க்க, கருப்பையோடுசேர்ந்து, பிள்ளையும், கூடவே வெளிப்படுமாம். எ-று. 247

தோன்றுஞ்சன் மத்திரவி புதன்வெள்ளி யரசன்
தொடர்ந்தேயுற் றிடில்வலப்பக் கத்தின்மறுச் சொல்லே
ஊன்று செவ்வாய் திங்கள்சனிக் குலவுமிட பக்கத்
துறையுமறு வென்றென்றே யுரைப்பரதைக் கேண்மின்
ஏன்றசுடர்க் கதிபனுற்ருல் வயிற்றின்மதி சிரத்தில்
இயல்செவ்வாய்க் கிருப்பிடத்தி லெழிற் புதன்பக் கத்தில்
ஆன்றமறு வரசனுக்கு முகத்தில் வெள்ளி துடையில்
அருஞ்சனிக்குக் காலிடத்தி லாமறுவா மென்னன.

இ-ள். தோன்றும்படியாக ஜென்மலக்கினத்தில் சூரியன் புதன் சுக் கிரன் வியாழன் இவர்களிருந்தால் வலப்பக்கத்தில் மறுத்தோன்றும், செவ்வாய் சந்திரன் சனி இவர்களிருந்தால் இடப்பக்கத்தில் மறுத் தோன்றுமாம். இதன் விவரமகேட்கில் சூரியன் நின்ருல் வயிற்றிலும், சந்திரன் நின்ருல் சிரசிலும், செவ்வாய் நின்ருல், இருப்பிடத்திலும், புதன் நின்ருல் பக்கத்திலும், வியாழன் நின்ருல் முகத்திலும், சுக்கிரன் நின்ருல் துடையிலும், சனி நின்ருல் காலிலும் மறுவென்று சொல்ல வேண்டும். எ-று. 248

மறுவிலாச் செங்கதிர்நின் றிடத்தனுவிற் பிறந்தான்
வார்த்தைபிர சண்டனதி சூரனுமா யிருப்பன்
உறுகலையீ னன்றனமு மில்லாசிங்கத்தில்
உதித்தவனிராக் கனிலான்மே டத்திரவி நிற்கப்
பிறந்தவன்கண் டத்திமிராய்த் தன ந்திரளசர்ச்சிப்பன்
பிறைவீடே லக்கினமாய்க் கதிருக்கப்பிறந்த
சிறுவன்விழி யுன்னதவான் றிரவியவான்கோலே
சென்மமாய்க் கதிர்நிற்கத் திரவியங்கண் ணிலனே.

இ-ள். தனுசே யிலக்கினமாக, அதிற்சூயன் இருக்கப் பிறந்தவன் மதுரவார்த்தைப்பிரசண்டனும் அதிசூரத்துவமுடையவனும், அந்தமில் லாதவனும் வத்திரமில்லாதவனுமாவன். சிங்கவிராசி லக்கினமாகிஅதிற் சூரியனிருக்கப்பிறந்தவன் பருத்தகழுத்துள்ளவனும், திரவியந்தேடிச் சேர்ப்பவனுமாவன்.கடக லக்கினமாய் அதிற் சூரியனிருக்கப் பிறந்தவன், உன்னதகண்களையுடையவன், பொன்னைத்தேடுந் திரமுள்ளவன், துலா லக்கினமாய் அதிற் சூரியனிருக்கப் பிறந்தவன் திரவியமும், கண்ணுமில் லாதகுருடனுமாவன். எ-று. 249

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வேறு.

கண்ணூரிடபந்தகர்சிங்கங் கண்டசன்மலக்கினமாய்ப்
பண்ணூர்சனிசெவ்வாய் கூடிப் பார்க்கிற்கொடிரெண்டுளதாகும்
தண்ணூர்செவ்வாய்கண்பார்வை தான்செங்கொடியோன்றேசுற்றும்
எண்ணூர்சவுரிபார்வைக்கே யிருக்குங்கரியகொடியொன்றே.

இ—ள். இடபம் மேடம் சிம்மம் இவைகள்ஜென்மலக்கினமாய், அதிற் சனி செவ்வாய் கூட அல்லது பார்க்க, இரண்டு கொடிச்சுற்றிப் பிறக்குமாம். செவ்வாய்பார்த்தால் செங்கொடியொன்றே சுற்றிப் பிறக்கும். காரிபார்க்கக் கருங்கொடியொன்றே சுற்றிப் பிறக்குமாம். எ-று. 250

கொடிய பாம்பினுடனிரவி கூடியிருக்கிற்கொடி தலையாம்
நெடியசென்மமெட்டாதி நெருங்கில்ரோகசரீரனுமாம்
படியிற்செவ்வாய்சனிசென்மம் பற்றியிருக்கிற்கல்லெரிப்பாம்
உடனேயவன்றன்விழிதனக்கே யுறக்கம்மிகுதியுண்டாமே.

இ-ள். இராகு கேதுகளுடன், சூரியனுங் கூடி நின்றால் தலையிற் கொடிசுற்றிப் பிறக்குமாம், ஜென்மாதிபனும் அஷ்டமாதிபனும் கூடியிருக்கில் வியாதியுடையவனும். செவ்வாய் சனி ஜென்மத்தில் நின்றால் கல்லெரிப்பு நோயும், அதிக தூக்க முடையவனுமாவன். எ-று. 251

உண்டாஞ்சன் மந்திரமாயி னதிலேசன்மத்தோனு முறப்
பண்டேசனித்தகிராமத்தின் பதியாயிருப்பனட்டமத்தான்
மிண்டார்திரமாகிச்சனித்த வீட்டினின்மரிப்பன் சன்மசரம்
கண்டால்விதேசசஞ்சாரங் காணுமென்றேகருதிடுமே.

இ-ள். ஜென்ம லக்கினம் திரராசியாகி, அதிலேலக்கினாதிபதியிருக்க, ஜெனித்த கிராமத்திலேயே குடியிருப்பவனும். அஷ்டமம், திரராசியாகிற் பிறந்த வீட்டிலேயே மரிப்பான். ஜென்மலக்கினஞ் சரராசியாகில் அந்நிய தேச சஞ்சாரியாவன், என்று எண்ணவேண்டும். எ-று. 252

கருதுஞ்சன்மமுபாயமதாய்க் கண்டாற்சிலநாள்விதேசத்தில்
பரிதிசன்மாதிபனாகிற் பரவுங்கிரியிற்சஞ்சாரம்
சிரரோகஞ்சற்றுண்டென்பர் செவ்வாய்சன்மாதிபனாகில்
உருவாயுதத்தாலக்கினியா லுறுநோய்காட்டுமுண்மையிதே.

இ-ள். ஜென்ம லக்கினம் உபயவிராசியாகில் சிலநாள்சுயதேசத்திலும், சிலநாள் அந்நியதேசத்திலும் வாசஞ்செய்வன், சூரியன் லக்கினாதிபதியாகில் மலைகளிற்சஞ்சாரஞ் செய்பவனும், தலையிற் கொஞ்சநோயுள்ளவனுமாம். செவ்வாய் லக்கினாதிபதியாகில் ஆயுதத்தாலும், அக்கினியாலும் பொருந்தியநோயுண்டாவது உண்மையாகுமாம். எ-று. 253

உண்மைப்புதன்சன்மாதிபனே லுளதுவித்தைகணிதமுடன்
வண்மையாபாரத்தொழிலே வரு · பொன்வெள்ளிமனையானால்
பண்மைசுருதியுணர்தனவான் பாங்கிற்சனித்தபதிநீங்கான்
தண்மைபாராச்சுபகர்ம்மத் தலைவனென்றேசாற்றிடுமே.

இ-ள். புதன் ஜென்மாதிபதியாயிருந்தால், வித்தைகணிதம், வியாபாரத்தொழில், ஆகிய இவைகளுள்ளவனும். வியாழன், சுக்கிரன் வீடாகில் சங்கீதம், சாஸ்திரங்கள், கற்றவனும், தனவானும், பாங்குடையவனும்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஜெனித்தபதியைவிட்டு நீங்காதவனும், குணத்தைச் சொல்லுமிடத்து சுபகர்மங்கள் செய்யுந் தலைவனென்றுசோதிடசாஸ்திரஞ் சொல்லுமாம். எ-று. 254

சாற்றுமதிசன்மாதிபனே சரீரகாந்தியுளசுகவான்
நேற்றிச்சரக்கைவிற்றுண்பன் திலவுசன்மத்தைப்பார்க்கில்
போற்றுந்தந்தையருகிருக்கச் சனித்தானென்றேபுகல்வார்கள்
ஆற்றுஞ்சரத்தின் மதியிருக்க வந்தான்றந்தையன்றெனவே.

இ-ள். சந்திரன் ஜென்மாதிபதியாகில், சரீரகாந்தியும், சுகமுள்ளவனும், நேர்த்தியான வியாபாரஞ்செய்து பிழைக்கிறவனுமாவன். சந்திரன் ஜென்பலக்கினத்தைப்பார்த்தால், தந்தை பக்கத்திலிருக்கப் பிறந்தவனென்றும், சரவிராசியிற் சந்திரன் நின்றால், அன்றுதினம் அயலிடத்திலிருந்து வந்தான் என்றும் சொல்லவேண்டும். எ-று. 255

எனவும்வெள்ளிபுதனடுவி விந்துவிருக்கவந்தருகே
வினவிற்றந்தையிருந்திடுவன் வெய்யோன்சரத்தின்மதிபத்தில்
தனதாயிருக்கப்பிதாவிருக்குந் தலத்திற்சனித்தான்றனென்பர்
சினமார்சனிசன்மத்தேழிற் செவ்வாயேனும்பிதாதேசம்.

இ-ள். சுக்கிரன், புதன், இவர்களுக்கு நடுவில் சந்திரனிருக்க, பக்கத்திலிருந்து தகப்பன் வினவிக்கொண்டிருக்கப் பிறந்தவன், சூரியன், சரவிராசியிலும், சந்திரன், பத்தாமிடத்திலும் நிற்க, பிதாவின் சொந்த வீட்டிற் செனித்தவன், சனிலக்கினத்திலும், செவ்வாய் ஏழாமிடத்திலும், நிற்கப் பிதா அன்னியவிடங்களில் இருக்கப் பிறந்தவனும் எ-று. 256

தேசார்மனிதலக்கினமாய்ச் செவ்வாய் பார்க்கச்சனித்தவனும்
மாசாரீமக்கரையென்றே வழுத்தலாமுஞ்சனிசெவ்வாய்
நேசார்திரிகோணத்தின்மதி நிற்கப்பிறந்தநேயனையே
கூசாளன்னையெறிவளிந்தைக் குருநோக்கிற்கைக்கொள்வானே.

இ-ள். மிதுனம் கன்னி துலாம் கும்பம் லக்கினமாகச் செவ்வாய் பார்க்க, ஈமக்கரையிற் பிறந்தவனென்று சொல்ல வேண்டும். சனி செவ்வாயின் திரிகோணத்தில், சந்திரன் நிற்கப் பிறந்த ஜாதகனை கூசாமல், தாய் எறிந்து விடுவாள். சந்திரனைக் குருபார்க்கில் குழந்தையைச் கைக்கொள்வளென்று சொல்லவேண்டும். எ-று. 257

கொள்ளும்பாவமதிசன்மங் குறுகச்செவ்வாய்சனியேழில்
மெள்ளவிருக்கிற்குருநோக்க விரும்பியெடுத்தார்வளர்க்கவுய்வன்
தெள்ளும்புதன்பாம்பரசன்மதி சேர்ந்துசன்மத்திருந்திடவே
பிள்ளைபிறக்கில்வம்சத்தைக் கெடுப்பனென்றுபேசுவரே.

இ-ள். பாவச்சந்திரன் லக்கினத்தில் இருக்க, சனி செவ்வாய் ஏழாமிடத்திலிருக்க, குரு பார்வை பெற்றால், எடுத்தவர்கள் வளர்க்க வளர்வான். புதன் பாம்பு வியாழன் சந்திரன் சேர்ந்து ஜென்ம லக்கினத்திலிருக்கப் பிறந்தவன் வம்மிசத்தைக் கெடுப்பவனாவான். எ-று. 258

பேசும்லக்கினஞ்சசிலக்கினம் பிறங்கத்தூமனிருந்திடவே
வீசும்வாணாள்குறையும்விதி பாதனிருக்கிற்புகழ்நாசம்
மாசில்பரிவே [illegible]
மேசின்குலங்கணசிக்குதுசன் மேவிற்றனம்போமெனப்பேசே.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இ-ள். ஜென்மலக்கினம், சந்திராலக்கினம், இவைகளில் தூமனிருந்தால் ஆயுட்குறையும், விதிபாதனிருந்தால் கீர்த்திநாசமும், பரிவேடனிருந்தால் புத்திபேதமுமாம். இந்திரதனுசு நின்றால் குலங்கள் விருத்தி குறைவுறும், தூமகேது நின்றால், தனநாசமடைவனென்று சொல்ல வேண்டும். எ-று.

வேறு.

பேசுலக்கினமீனண்டிற் பிறந்தவர் தங்கட்கெல்லாம்
பாசமாய்மகாதிசையின் பலன்களைப்பார்க்கும்போது
தேசுறுசுரியபாம்பின் றிசைவரிற்பாக்கியங்கள்
தூசுபொன்சோபனம்நற் சுபபலன்பெறுவர்தாமே.

இ-ள். ஜலராசியாகிய, மீனம் கடகம் ஜென்மலக்கினமாகப்பிறந்தவர்களுக்கு, இராகு திசாபுத்திகாலங்களில் தேடவேண்டிய பாக்கியங்களும், ஆடையாபரணச்சேர்க்கையும் கூடும். மனைவி மக்கள் சுபசோபனங்களாகிய, திருக்கல்யாண வைபவங்களும்; மாடாடுவாகனுதியாளடுமை முதலிய சுபபலனடைவார்கள். எ-று. 260

தார்செறிமகரங்கன்னி தனிற்பிறந்தோர்கட்கெல்லாம்
பார்செறிமகாதிசையின் பலன்களைப்பார்க்கும்போது
சீர்பெறுகேதுவான திசைவரும்போதுசெல்வம்
ஊர்திசாரரசராற்சன் மானமுண்டாங்கண்டீரே.

இ-ள். லக்கினம் மகரம் கன்னியாகப் பிறந்தவர்களுக்கு, கேது திசாபுத்திகளில் செல்வமும், செங்கோல் செலுத்தும அரசர்களாலும், ராஜசன்மானங்களும், உண்டாகுமென்று இப்புவியோர்க்குச் செப்புவார்கள். எ-று.

வேறு.

பேசும்சன்மஞ்சரராசி யிரியாச்சரத்திலாதிபனும்
பாசஞ்சரத்திலுறத்தோன்றிற் பார்க்கிற்றூலசரீரனுமாம்
வீசுலக்கினஞ்சரமாயவ் வீட்டுக்குடையோன்சரத்திருக்க
தேசம்விடுத்தேசசஞ்சாரந் திகழத்திரிவனெனச்சொல்வாய்.

இ-ள். ஜென்மலக்கினம் சரமாகி, அவ்வதிபனும், சரவிராசியிலிருந்து, லக்கினத்தைப்பார்க்க, தூல சரீரமுள்ளவனும். லக்கினம் சரவிராசியாய், லக்கினுதிபதி சரவிராசியிலிருக்க, தேசம்விட்டுத் தேசம் சஞ்சாரஞ் செய்பவனென்று சொல்லவேண்டும். எ-று. 262

அஷ்டவர்க்கம்

ஆதித்தன்றனக்காறெட்டா மம்புலிக்கதன்மேலொன்றும்
வாதிக்குஞ்செவ்வாய்மந்தன் றனக்குமாமுப்பத்தொன்பான்
போதிக்கும்புதற்கைம்பானே டொருநான்குபொன்னேழெட்டாம்
கோதற்றபுகர்க்கைம்பானே ரிரண்டட்டவர்க்கங்கூறே.

இ-ள். சூரியனுக்கு (48) சந்திரனுக்கு (49) செவ்வாய்க்கு (39) புதனுக்கு (54) குருவுக்கு (56) சுக்கிரனுக்கு (52) சனிக்கு (39) மாக அஷ்டவர்க்கப் பரலாகுமென்று சொல்லுவாயாக. எ-று. 263

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வே று.

கூறிய விரவி தனிலரி சேய்சுன்
குலவுமொன் றிரண்டுநான் கோரேழ்
கூடிரு நான்கொன் பான்பது பன்னொன்
ருமதிக் கோவொரு மூன்றும்
ஆறுபத் துடன்பன் னொன்றதாம் புந்திக்
கானமூன் றைந்துட னுலும்
அடுத்திடு மொன்பான் பத்துபன் னொன்றீ
ராறு பொன்னைந்துமோ ராறு
வீறுறு மொன்பா னேடுபன் னொன்றே
விளங்கிய புகரினுக் காறு
மேவுமே ழீரா ருகும்லக் கினமோ
விரும்புமூன் ரும்வரு நான்கும்
ஆறுமீ ரைந்தும் பத்துட னொன்றீ
ராறிரண் டாகுமென் றறைவாய்
அனநடை மயிலின் சாயன்மான் விழியு
மகைநிகர் தோளுடை யணங்கே.

இ-ள். சூரியனட்டவர்க்கப்பரல் 48-க்கு விவரம்.

சூரியன்	1-2-4-7-8-9-10-11	ஆ 8-ம்
சந்திரன்	3-6-10-11	,, 4-ம்
செவ்வாய்	1-2-4-7-8-9-10-11	,, 8-ம்
புதன்	3-5-6-9-10-11-12	,, 7-ம்
குரு	5-6-9-11	,, 4-ம்
சுக்கிரன்	6-7-12	,, 3-ம்
சனி	1-2-4-7-8-9-10-11	,, 8-ம்
லக்கினம்	3-4-6-10-11-12	,, 6-ம்
		ஆ 48.ஆம்.

264

மதியினி லிரவி மூன்றுட னுறேழ்
வருமெட்டு பத்துபன் னொன்ரும்
மதியொன்று மூன்று மாறுட னேழு
மன்னுபத் துடன்பதி னொன்றும்
துதிகுச னிரண்டு மூன்றுட னைந்தா
ஞென்பதீ ரைந்துபன் னொன்றும்
சொல்லுமாற் கொன்று மூன்றுநான் கைந்துந்
தொடருமே ழெட்டுமீ ரைந்தும்
பதினொன்றும் பொன்னிற் கொன்றிரண் டொருநான்
காகுமே ழெட்டுப்பத் துடனே
பகருபன் னொன்ரும் புகர்க்குமூன் ஞெருநான்
கைந்துட னேழுமொன் பானும்
அதிகமாம் பதுபன் னொன்றுசுன் மூன்று
மைந்திரு மூன்றுபன் னொன்ரும்
அமருலக் கினமூன் ருறுமீ ரைந்து மாம்பதி
னென் றென் றறைவாய்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இ - ள். சந்திரனட்டவர்க்கப்பரல் 49-க்கு விவரம்.

சூரியன்	3—6—7—8—10—11	ஆ. 6-ம்
சந்திரன்	1—3—6—7—10—11	,, 6-ம்
செவ்வாய்	2—3—5—6—9—10—11	,, 7-ம்
புதன்	1—3—4—5—7—8—10—11	,, 8-ம்
வியாழன்	1—2—4—7—8—10—11	,, 7 ம்
சுக்கிரன்	3—4—5—7—9—10—11	,, 7-ம்
சனி	3—5—6—11	;, 4-ம்
லக்கினம்	3—6—10—11	,, 4-ம்

ஆ. 49-ஆம். 265

சேயினி லிரவி மூன்றைந் திருமூன்று
செப்பிய பத்துபன் னென்றும்
செழுமதி யொருமூன் றுறுபன் னென்றுஞ்
சேர்குச னென்றிரண் டொருநான்
காயவே ழிருநான் கொருபது பன்னென்
றுகுநற் புலவன்மூ வைந்தே
அழகுறு மிருமூன் றெருபதி னென்று
மணிகொள்பொன் மூவிரண் டீரைந்
தேயபன்று சுக்ரா னென்றீ கிரற்கோ
வியலிரு மூன்றெட்டுப் பதினென்
றேதமற் றிடுமீ ராறுமந் தனுக்கொன்
றீரிரண் டேழ்முத லைந்தெண்
தூயலக் கினத்திற் கொன்று மூன்றுறு
சொலத்தகு பத்துபன் னென்றும்
தோடிவர் செவியைத் தாவிமீண் டிகலுந்
துணைவிழிப் பணைமுலை மயிலே.

இ - ள். செவ்வாயட்டவர்க்கப்பரல் 39-க்கு விவரம்.

சூரியன்	3—5—6—10—11	ஆ. 5-ம்
சந்திரன்	3—6—11	,, 3-ம்
செவ்வாய்	1—2—4—7—8—10—11	,, 7-ம்
புதன்	3—5—6—11	,, 4-ம்
வியாழன்	6—10—11—12	,, 4-ம்
சுக்கிரன்	6—8—11—12	,, 4-ம்
சனி	1—4—7—8—9—10—11	,, 7-ம்
லக்கினம்	1—3—5—10—11	,. 5-ம்

ஆ. 39-ஆம். 266

புந்தியி லிரவிக் கைந்திரு மூன்றெருன்
பான்மதி னென்று பன் னிரண்டாம்
புகழ்மதி யிரண்டீ ரிரண்டிரு மூன்றெட்
டொருபது புகல்பதி னென்றும்
உந்துசேய் மந்தற் கொன்றின் டொருநான்
[illegible]

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

உயர்புதற் கொன்றேர் மூன்றுதல் லைந்தா
றௌன் பஃ தாதிநான் கெண்ணும்
சந்தமார் பொன்னுக்காறிரு நான்கு
சாற்றுபன் னென் றுபன் னிரண்டே
தருபுகர் தனக்கொன் ருதியைந் தெண்ணுந்
தானெட் டொன் பதுபதி னென்றும்
தந்தலக் கினத்திற் கொன்றிரண் டொருநான்
காறிரு நான்கு சார்பத்துத்
தகுபதி னென்ருந் தன்மல ருகறைபொன்
றன்னைநேர் தார்குழ லாளே.

இ-ள். புதனட்டவர்க்கப்பரல் 54-க்கு விவரம்.

சூரியன்	5-6-9-11-12	ஆ.	5-ம்
சந்திரன்	2—4—6—8—10—11	,,	6-ம்
செவ்வாய்	1—2—4—7—8—9—10—11	,,	8-ம்
புதன்	1—3—5—6—9—10—11—12	,,	8-ம்
வியாழன்	6—8—11—12	,,	4-ம்
சுக்கிரன்	1—2—3—4—5—8—9—11	,,	8-ம்
சனி	1—2—4—7—8—9—10—11	,,	8-ம்
லக்கினம்	1—2—4—6—8—10—11	,,	7-ம்
		ஆ.	54-ம்

267

பொன்னினி விரவிக் கொன்ருதி நான்கெண்
புகலுமே ழாதியைந் தெண்ணும்
புதுமதிக் கிரண்டே ழைந்தென்பான் பதினென்
ருய்ப்புகல் சேய்தனக்கொன்று
துன்னிரண் டொருநான் கேழிரு நான்கீ
ரைந்துபன் னென்றுபுந் திக்கோ
சொல்லுமொன் றிரண்டு நான்குநல் லைந்தோ
ராறென்ப தாதிமூன் றெண்ணும்
நன்னயப் பொன்னுக் கொன்ருதி நான்கெண்
ணவிலுமே ழெட்டொரு பஃது
நாட்டுபன் னென்ரும் புகர்க்கிரண டைந்தா
றௌன்பஃ தாதிமூன் றெண்ணும்
சுன்னினுக் கொருமூன் றைந்திரு மூன்றி
ராறுலக் கினத்தினுக் கொன்று
துய்யரண் டொருநான் கைந்திரு மூன்றே
ழொன்பஃ தாதிமூன் றெண்ணும்.

இ-ள். வியாழன் அட்டவர்க்கப்பரல் 56-க்கு விவரம்.

சூரியன்	1—2—3—4—7—8—9—10—11	ஆ.	9 ம்
சந்திரன்	2—5—7—9—11	,,	5-ம்
செவ்வாய்	1—2—4—7—8—10—11	,,	7-ம்
புதன்	1—2—4—5—6—9—10—11	,,	8-ம்
வியாழன்	1—2—3—4—7—8—10—11	,,	8-ம்
சுக்கிரன்	2—5—6—9—10—11	,,	6 ம்
சனி	3—5—6—12	,,	4 ம்
லக்கினம்	1—2—4—5—6—7—9—10—11	,,	9 ம்
		ஆ.	56-ஆம்.

268

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

புகரினி லிரவிக் கெட்டுபன் னொன்றி
ராறுதிங் கட்கொன்று முதலாப்
புகலுமைந் தெண்ணு மெட்டுமொன் பான்பன்
னொன்றுபன் னிரண்டதாஞ் சேய்க்குத்
தசவுறு மூன்று நான்கிரு மூன்றொன்
பான்பதி னொன்றுபன் னிரணடாம்
சார்புதன் மூன்றைந் தாறுநல் லொன்பான்
றங்குபன் னொன்றுபொன் னவர்க்கு
இகலறு மைந்தெட் டொன்பஃ தாதி
யேற்றமுன் றெண்ணதாம் புகருக்
கியலுமொன் றுதி யானவைந் தெண்ணு
மெட்டுமுன் னுனநான் கெண்ணும்
நகருமந் தற்கு மூன்றுநான் கைந்தும்
நவிலுமெட் டாதிநான் கெண்ணும்
நாட்டுலக் கினமொன் றுதியைந் தெண்ணும்
நாலிரண் டொன்பான்பன் னொன்றே.

இ-ள். சுக்கிரனட்டவர்க்கப்பரல் 52-க்கு விவரம்.

சூரியன்	8—11—12	ஆக	3-ம்
சந்திரன்	1—2—3—4—5—8—9—11—12	,,	9-ம்
செவ்வாய்	3—4—6—9—11—12 (5)	,,	6-ம்
புதன்	3—5—6—9—11	,,	5-ம்
வியாழன்	5—8—9—10—11	,,	5-ம்
சுக்கிரன்	1—2—3—4—5—8—9—10—11	,,	9-ம்
சனி	3—4—5—8—9—10—11	,,	7-ம்
லக்கினம்	1—2—3—4—5—8—9—11	,,	8-ம்
		ஆக	52-ஆம்

269

சனியினி லிரவிக் கொன்றிரண் டொருநான்
கேழுட னெட்டுநற் பத்து
தங்குபன் னொன்ரு மம்புலி மூன்ரு
ரும்பதி னொன்றுசேய் தனக்கே
இனியமூன் றைந்தா றீரைந்து பதினொன்
றீராற த்ாகும்புந் திக்கோ
இயலுறு மாறு மெட்டாதி யைந்தெண்
ணிமையவர் குருவினுக் கைந்து
நனியுமோ ராறு பதினொன்றீ ராறுங்
கவிக்குநல் லாறுபன் னொன்று
நாட்டுமீ ராருங் கனவரை வசன
மாமுகை நேர்முலை யாளே
புனைகரு மேனிச் சனியொரு மூன்றைந்
தாறுபன் னொன்றெனப் புகல்வர்
போற்றும்லக் கினத்திற் கொன்றுமூன் றொருநான்
காறுபத் துப்பதி னொன்றே.
இ-ள், சனி அஷ்டவர்க்கப்பரல் 39-க்கு விவரம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சூரியன்	1—2—4—7—8—10—11	ஆ.	7-ம்
சந்திரன்	3—6—11	,,	3-ம்
செவ்வாய்	3—5—6—10—11—12	,,	6-ம்
புதன்	6—8—9—10—11—12	,,	6-ம்
வியாழன்	5—6—11—12	,,	4-ம்
சுக்கிரன்	6—11—12	,,	3 ம்
சனி	3—5—6—11	,,	4-ம்
லக்கினம்	1—3—4—6—10—11	,,	6 ம்
		ஆ. 39-ஆம்.	270

இந்தப்படி அந்தந்தக்கிரகங்களுக்குச் சொன்ன பரலை அந்தந்தக் கிரகங்களிருக்கிற வீடு முதலாகக்கொண்டும் லக்கினத்தைத் தொட்டும் எண்ணிப்போடுவது.

திரிகோணசோதனைக்குமுன் கிரகம் 1-க்கு ராசி 1-ல்-3 பாலுக்குள் ளிருந்தால் அற்பபலன். 4-இருந்தால் சமபலன், 5-முதல்8 வரையிலிருந் தால் விசேஷபலன்.

விபரம்

1-க்கு திரவியநாசம்.	5-க்கு தனவரத்துவிவாகசித்தி.
2-க்கு அவமானம் பீடை.	6-க்கு வித்தியாலாபம்.
3 க்கு சஞ்சலம் வித்தைநாசம்.	7-க்கு ஐஸ்வரியம்.
4-க்கு லட்சுமீகரம்.	8-க்கு ராஜயோகம்

பரல் குறைந்திருக்கிற ராசியில் சூரியன்வரும்போது தீமை. பரல் குறைந்திருக்கிற ராசியில் சூரியன்பகை நீசமானால் அதிகநஷ்டம். பரல் அதிகப்பட்ட ராசியில் சூரியன் வரும்போது லாபமுண்டாம்.

லக்கினாதிபதி லக்கின கேந்திரத்தில் 5-6-பரலுடனிருந்தால் அதிக லாபம். உட்சமும் ஆட்சியும் நட்புமாக இருக்கும்கிரகங்கள். 4-பரலுக்கு மேலான பரலுடன் லக்கினகேந்திரம் பெற்றால் அதிக ராஜயோகமாம்.

சூரியன் நின்ற ராசிக்கு 9-ம்ராசியின் பரலை எண்ணிக் கண்ட தொகை. பிதாவின் சகோதரராம். அந்தப்பரல் பெண் கிரகங்கொடுத் ததானால் சகோதரியென்றும், புருஷகிரகங்கொடுத்ததானால் சகோதர னென்றும் அனுக்கிரகங் கொடுத்ததானால் சகோதரமில்லையென்றுங் கொள்ளவேண்டும்.

லக்கின முதல் 4-ராசிப்பரலைக் கூட்டிக்கண்டதொகைமுதலாங் கண்ட மாம்.5 ம் ராசிமுதல் 8-ம்ராசிவரையிற் கண்டதொகை இரண்டாங் கண்ட மாம். 9-ம் ராசிமுதல் 12-ம ராசிவரையிற் கண்டதொகை மூன்றாங் கண்டமாம். இந்த மூன்று கண்டத்தில் முதற்றொகை அதிகமானால் பாலியத்திலும், இரண்டாந்தொகை அதிகமானால் வயோதகத்திலும், சவுக்கியமாம். இராவிழிப்பு ராசிப்பரல் அதிகமானால் இரவிலும், பகல் விழிப்பு ராசிபரல் அதிகமானால் பகலிலும் வெற்றி யுண்டு,

மேடம்-இடபம்-மிதுனம்-கடகம்-தனுசு-மகரம்-இராவிழிப்பு.
சிங்கம்-கன்னி துலாம்-விருச்சிகம்-கும்பம் மீனம்-பகல்விழிப்பு.

இப்படியே திக்குபரலுக்கும், ஆண்-பெண்-ராசிகளின் பரலுக்கும், உயர்ந்ததைப்பற்றி பலன சொல்லவும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பத்தாமிடம், பனிரண்டாமிடம், பரல்குறைந்தும், பதினோராமிடப் பரல் அதிகமாகவுமிருந்தால் இராஜயோகம்.

பதினொன்றிற் பரல் குறைந்தும், பனிரண்டிற் பரல் அதிகமாகவுமிருந்தால் வரவுக்குமிஞ்சின செலவாம்.

பத்திற் பரல் குறைந்தும். பனிரண்டிற் பரல் அதிகமாகவுமிருந்தால், செய்தொழிலில் லாபமில்லை, இவன் யெடுத்தக்காரியம் முடியாது.

சூரியன் அஷ்டவர்க்கபலன்

ஜென்ம லக்கினத்திலும், சந்திராலக்கினத்திலும், பரல் குறைந்திருந்தாலும். சூரியன் நீசமாகவிருந்தாலும், பிதாவுக்கரிஷ்டம். 5 9-ம், ராசியில், 13-க்குக் குறைந்த பரலோடு சூரியன் நின்றால் பிதாவுக்கு 2-5-ல், 3- பரலோடு சூரியனிருக்க, 9-ல், ராகுவிருக்கப் பிதாவுக்கு 5-வதுத்தில் நிரியாணம் குறைந்த பரலோடு 5-ல், சூரியன் சந்திரன் செவ்வாய் சனியிருந்தால், ஜாதகனுடைய பிதா மாதா சகோதரருக்கும் அரிட்டமாம்.

சந்திரன் அஷ்டவர்க்கபலன்

சந்திரன் நின்ற ராசிக்கு நாலாம் ராசிப்பரலை எண்ணிக் கண்ட தொகை மாதா சகோதரர். இதுவும் முன்போலப் பெண்கிரகங் கொடுத்தது, ஆண்கிரகங் கொடுத்ததுங் கண்டு சொல்லலாம். லக்கினத்துக்கு நாலாம் ராசியைக் கொண்டும் சொல்வது, லக்கினத்திலும், சந்திராலக்கினத்திலும், பரல் அதிகமாகவிருந்து அதில் சுபரிருந்தாலும், பார்த்தாலும், அதிபதி பலத்தாலும், மாதாவுக்குத் தீர்க்காயுள். ஏகாதிபத்திய சோதனையானபின் சந்திரன் நின்ற ராசியின் பரலையும் லக்கினமுதல் நாலாம் ராசிப்பரலையும் பெருக்கி 27 ல் கழித்த மிச்சத்தில் பூர்வபட்சத்தில் பிறந்தவனுக்கு அச்சுவினி முதலாகவும், அமரபட்சத்தில் பிறந்தவனுக்கு அவிட்ட முதலாகவும் எண்ணிக்கண்ட நட்சத்திரத்தில் சனி வருங்காலம் மாதாவுக்குப்பீடை சந்திரன் வருங்காலம் சுகம்.

செவ்வாய் அஷ்டவர்க்கபலன்

செவ்வாய் நின்ற ராசிக்கு மூன்றும்ராசிக்கதிபதி நின்ற ராசியின் பரலையெண்ணிச் சகோதரபலன் சொல்லவும். செவ்வாய் நின்ற ராசிக்கு மூன்றும் விராசியின் பரலைக்கொண்டு இளையசகோதரம் சொல்லவும். இதுவும் முன்போல ஆண்பெண் கிரகங்களாற் சொல்லவும், செவ்வாய் நின்ற ராசியின் சோத்தியப்பரலை, மூன்றும் ராசிப் பரலால் பெருக்கி இருபத்தேழில் கழித்து முன்போல வளர்பிறை தேய்பிறையறிந்து எண்ணிக்கண்ட நட்சத்திரத்தில் சனிவரச் சகோதரபீடை குருவரச் சகோதர சவுக்கியம்.

புதன் அஷ்டவர்க்கபலன்

புதன் கேந்திரத் திரிகோணங்களில் 5-க்கு மேற்பட்ட பரலோடிருக்கக் குருபார்க்க நல் வித்தையுண்டு. இரண்டுக்கதிபதி 5 பரலோடு பகை நீசம் நீங்கின விடத்திலிருக்கக் கணிதமும், சிற்பமும்வரும். புதனிருக்கும் ராசிக்கதிபதி சுபனாய்க் கேந்திர திரிகோணமேற அதில் ஐந்து பரலுக்குமேலிருந்தால் வித்துவானும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

குரு அஷ்டவர்க்கபலன்

குரு நின்ற ராசிக்கு ஐந்தாம் ராசிப்பரல் எத்தனையோ அத்தனை புத்திருண்டு. இதையும் முன்போலவே, ஆண் பெண் சொல்லவும், லக்கினத்துக்கு ஐந்தாம் ராசியினாலும் சொல்லலாம். குரு பலவானாக விருக்க வேண்டும். லக்கினத்திலும் ஐந்தாமிடத்திலும் பாபக்கிரகமிருந்தால் புத்திர ஹானி, லக்கினத்துக்கு ஐந்தில் மூன்று பரலிருந்தால் அற்பப் புத்திர யோகம். ஐந்தாம் ராசி சமுதாயப் பரலை சோதியப் பரலாலே பெருக்கி இருபத்தேழில் கழித்த மிச்சம் முன்போல அசுவினி அவிட்டமுதலாக எண்ணிக் கண்ட நட்சத்திரத்தில் குருவருங்காலம் புத்திரருண்டாம்.

சுக்கிரன் அஷ்டவர்க்கபலன்

சுக்கிரன் நின்ற ராசிக்கு ஏழாம் ராசியில் எத்தனை பரலிருக்கிறதோ அத்தனை களத்திரமாம், அது சூரியன்கொடுத்த பரலாயின் பிதுர்வர்க்கத்திலும், சந்திரன் கொடுத்த பரலாயின் அன்னியவர்க்கத்திலும், களத்திர முண்டாம. லக்கினத்துக்கேழில் சுக்கிரனிருந்தால் நல்ல களத்திரம், சனியிருந்தால் ரோககளத்திரம், புதனிருந்தால் களத்திரயீனம், செவ்வாய் சூரியனிருந்தால், காந்தர்வ களத்திரமாம்.

சனி அஷ்டவர்க்கபலன்

லக்கினத்துக்கு எட்டாம் ராசியிலிருந்த சமுதாயப் பரலையும், சனி நின்றராசியின் சோத்திய பரலையும் பெருக்கிக் கண்டதொகை வருஷத்தில் ஜாதகனுக்கு தத்து. மேற்படி தொகையை இருபத்தேழில் கழித்து மிச்சத்தை அசுவனி அவிட்டம் முதலாக முன்போல எண்ணிக் கண்ட நட்சத்திரத்தில் சனிவருங்காலம், நிரியாணமாம்.

சோத்தியப்பரலென்று சொல்லாதவைகள் சமுதாயப் பரலாம். முன் சொன்னதில் அமரபட்சத்துக்கு அவிட்டம் முதலெண்ணக்கூடாது. சித்திரை பின்னரை முதலாக எண்ணிக்கொள்வது பலிதம்.

அஷ்டவர்க்கத்தொகை எட்டுக்கும் விபரம்

சூரியன் - பிதா ஒன்பதாமிடம்
சந்திரன் - மாதா நாலாமிடம்.
செவ்வாய் - சகோதரம் மூன்றுமிடம்.
புதன் - மாமன் வித்தை இரண்டாமிடம்.
வியாழம் - புத்திரன் ஐந்தாமிடம்.
சுக்கிரன் - களத்திரம் ஏழாமிடம்.
சனி - ஜாதகன் எட்டாமிடம்.
இப்படி அறிவது.

காரகர் தானாதிபதி தானத்தைப் பார்த்தவன் இருந்தவன் இவர்களுடைய திசைபுத்தி சித்திரங்களில் சூட்சித்து விபரீதமுதலான கோட்சார வேதைகளும், அறிந்து சொல்லவும். முன்கண்ட நட்சத்திர ராசியில் வியாழம் வருகிற நாள்முதல் போகிற நாளளவும், இதுபோல் சூரியனுக்கு மாதமும், சந்திரனுக்கு இரண்டேகால் நாட்களும், இதுவுமல்லாமல் ஜாதகன் திதி வாரம் நட்சத்திரம் கூடி வரும்போது நன்மை தீமை யோசித்துச் சொல்லவும்.

அஷ்டவர்க்கமிட்டவுடனே இராசி குணகாரம்

இடபஞ் சிங்க மீரைந்தா மியன்மே டங்கோ லோரேழாம்
கடகம்மார் நான்கும மீனங் கருதுமீ ராறே யாடம்
மடஞ்சேர் கன்னி சுருவைந்தா மன்னுந் தனுவொன் பானாகும்
குடம்பன் [illegible]

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இ-ள். ரிஷப சிங்கத்துக்குப் பத்திலும், மேட துலாத்துக்கு ஏழிலும், கடகத்திற்கு நாலிலும், மீனத்திற்குப் பன்னிரண்டிலும், கன்னி மகரத்துக்கு ஐந்திலும், தனுசுக்கு ஒன்பதிலும், கும்பத்துக்குப்பதினொன்றிலும், மிதுன விருச்சிகத்துக்கு எட்டிலும், பெருக்கிக் கண்ட தொகை ராசிகுணகாரமாம்.

கிரக குணகாரம்.

நற்ற வக்குரு பத்துசேய்
உற்ற வெட்டுதற் சுக்கிரன்
முற்ற வேழுமோ ரைந்துமே
மற்றை யோர்குண காரகம்.

இ-ள். குருவிருந்த ராசிப்பரலை பத்திலும், செவ்வாயிருந்த ராசிப் பரலை எட்டிலும், சுக்கிரனிருந்த ராசிப்பரலை ஏழிலும், மற்றக்கிரகங்களாகிய சூரியன், சந்திரன், புதன், சனி இருந்த ராசிப்பரல்களை ஐந்திலும் பெருக்கிக் கண்டதொகை கிரககுணகாரமாம். எ-று. 272

திரிகோண சோதனை.

கோணம்மூன்றி ற்பரல்சரியாக் குலவின்மூன்று மெடுத்திடுக
கோணந்தனிலொன்றிற்குறையிற் குறைந்தபடியே குறையிரண்டும்
கோணந்தனிலொன்றிற்பரலே கூடாதிருக்கிற்சோதனையக்
கோணந் தனக்குமில்லையெனக் கூறுவன சமலர்மானே.

இ-ள். வனசமலரில் வசிக்கும் இலட்சுமி போல்பவளே ? திரிகோண ராசிகள் மூன்றிலும், பரல் சரியாயிருந்தால் மூன்றையும், எடுத்துவிடவும் ஒரு ராசியிற் குறைந்திருந்தால் அப்படியே மற்றைய விராசிப் பரலையும்|குறைத்துவிடவும, ஒருராசியில் பரலில்லாதிருந்தால், திரிகோண சோதனையில்லை யாம். திரிகோணமேன்பது 1-5-9, அதாவது மேட சிம்ம தனுசு, ரிஷபகன்னியாமகரம், மிதுனதுலா கும்பம், கற்கே விருச்சிகமீனம். எ-று. 273

ஏகாதிபத்திய சோதனை

மானேயிரண்டுமனை தனிலும் மருவிக்கோள்களின்றாலும்
தேனேகோணின் றிடுமனையிற் பரலுற்றொன்றினிலதெனினும்
வானுரிரண்டிற்கோளின்றி மன்னுமொன்றிற்பரலுறினும்
கானர்சிங்ககடகடகத்திற் கனமேசோதித்திடுதலில்லை.

இ-ள். மானையொத்த சாயலையுடையபெண்ணே ? இரண்டுமனைகளிலும், கிரகங்கள் நின்றாலும், கிரகங்கள்நின்ற மனையிற் பரலிருந்து, இன்னொன்றிலில்லையானாலும், இரண்டு மனையிலும், கிரகமில்லாமல் ஒன்றிற் பரலிருந்தாலும், கர்க்கடகம் சிம்மத்திற்கும், சோதனையில்லையாம். (மேட விருச்சிகம் ரிஷபதுலாம் மிதுனங் கன்னி தனுசு மீனம் மகரகும்பம் இவை, ஏகாதிபத்தியமாம்.) எ-று. 274

இல்லாதிரண்டுராசியிற்கோ ளிய லும்பரல்கள் சரியுறினும்
வல்லாக்கோளுற்றிடுமனைபா ழாகிமற்றொன்றுற்றிடினும்
வில்லாக்கோளுற்றிடும்பரற்கு மேவுமெதிரிற்சமன்குறையேல்
அல்லார்குழலாய்ப்பரலை யகற்றுமென்பா ரறிவோரே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். இரண்டு ராசிகளிலும், கிரகமில்லாதிருந்து, பரல்கள் சரியாயிருந்தாலும், கிரகமிருந்தராசியில், பரலில்லாமல், மற்றராசியில் பரலிருந்தாலும், கிரகங்கள் நின்ற பரலுக்கு எதிரில், பரல் சமனுயிருந்தாலும், குறைவா யிருந்தாலும் அப்பரலையும் எடுத்துவிடவும். எ-று. 275

ஓராய்கோளோர்மனையுறமற் றெருன்றிலதிகப்பரலுறினும்
சீரார்கோளின்றிப்பரல்கள் சேர்ந்தொன்றிற் கொன்றதி கமதே
வாரார்கொங்கைமதிவதன மனேர்விழிநன்மடமாதே
ஏரார்பரலைநேரக விருக்கச்செய் வாயெனவுரைத்தார்.

இ-ள். கச்சையணியுங் கொங்கையும், இச்சைதருமுகத் திங்களும்; மச்சமும் மானும்போன்ற கண்களுமுடைய பெண்ணே கேட்பாயாக, ஒரு ராசியிற் கிரகமிருக்க, மற்றராசியில், அதிகப்பரலிருந்தாலும், இரண்டுரா களிலும, கிரக மில்லாமல் ஒன்றுக்கொன்று பரல, ஏறறக்குறைச்சலா யிருந்தாலும், குறைந்தபடி சரிசெய்து கொள்ளவும். எ-று. 276

சர்வாஷ்டக வர்க்க சமுதாயபரல்

உரைத்தகோள்க ளுறுஞ்சமுதாயமாய்
விரைத்தவர்குழ லவ்வவ்விராசியில்
நிரைத்தபிந்தையொன் ருச்செறித்திட்டதே
திரைத்தநற்சரு வாட்டகஞ்சேருமே.

இ-ள். காசினியதனில் வாசனைகமழும் கூந்தலையுடைய மாசற்ற பெண்ணே? கேட்பாயாக. கிரகங்களின் வரிசைக்கிரமமாய், பன்னிரண்டு இராசிகளிலும் நிரம்பிய பிந்துகளையெல்லாம், அந்தந்தக்கிரமப்படி, அந்தந்தராசிகளில் ஒன்றாகச் சேர்த்தது, சருவாங்க அட்டவர்க்கமாம். இதை பன்னிரண்டு ராசிகளிலுங்கூட்ட முந்நூற்றிமுப்பத்தேழு ஆகும் எ று. 277

இலக்கினமாதி நந்நான்கு வீட்டி லிருந்திடு பரல்களைக்கூட்டி, உலப்புறு மூன்று தொகையினின் முறையே யுயர்பரலைக்கொடு பலன்கள், நலப்பறு வயதை மூன்று கூறிட்டே நயம்பெற மொழிந்திடவேண்டும், சிலைப்புரு வத்தண் மதிநுதற் கருங்கட் செய்யவாய்ப் பைந்தொடியாளே.

இ-ள். வில்லைப்போன்ற புருவமும், வல்லைப்போன்ற நுதலும், கொவ்வைக் கனிபோன்ற செவ்வாயுமுடைய பெண்ணே கேட்பாயாக? சர்வாங்க அஷ்டவர்க்கத்தின் விவரம். லக்கினமுதல் நந்நான்கு ராசியாகக்கூட்டிமூன்று தொகையாக வைத்து பங்கென்பது, மேடம்முதல் கர்க்கடகம்வரை முதலாம்பங்கு, சிங்கம்முதல் விருச்சிகம் வரை இரண்டாம்பங்கு, தனுசு முதல் மீனம்வரை மூன்றும் பங்கு, இதுபோல் ஆயுளையும், மூன்றுபங்கு வைத்து எந்தப்பங்கில் தொகை அதிகப்படுகிறதோ, அந்தப்பங்கு வயதில் நற்பலனும், எந்தப்பங்கில் தொகை குறைவு படுகிறதோ அந்தப்பங்கு வயதிற் பலன் குறைந்தும். எந்தப்பங்கில் சமமாகிறதோ, அந்தப்பங்கு வயதில் சமமான பலனுமுண்டாமென்று சொல்லுக. சிலர் இலக்கினற்முதற் கொண்டும பார்ப்பர்.) எ-று. 278

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சர்வாஷ்டகவர்க்கப்பரல் 337-க்கு விவரம்.

சூரியன்	3—3—3—3—2—3—4—5—3—5—7—2	ஆ.	43-ம்
சந்திரன்	2—3—5—2—2—8—2—2—2—3—1—8	,,	39-ம்
செவ்வாய்	4—5—3—5—2—3—4—4—4—6—7—2	,,	49-ம்
புதன்	3—1—5—2—6—6—1—2—5—5—7—3	,,	46-ம்
வியாழன்	2—2—1—2—3—2—4—1—2—4—7—3	,,	33-ம்
சுக்கிரன்	2—3—3—3—4—4—2—3—4—3—6—3	,,	40-ம்
சனி	3—2—4—4—4—3—3—4—4—4—6—1	,,	42-ம்
லக்கினம்	5—3—5—5—2—6—1—2—2—6—7—1	,,	45-ம்
		ஆ.	337-ஆம்.

சர்வாஷ்டகவர்க்கப்பரல் 337-ல் ராசி கல் 30-க்கு மேலிருந்தால் பூரணம், 25-க்குக் கீழிருந்தால் மத்திபம், 20 க்குக் கீழிருந்தால் அற்பமாம்.

மீனம் முதல் நாலுராசியும், பிரதம கண்டம். கடகம் முதல் நாலு ராசியும், துதிகைகண்டம். விருச்சிகம் முதல் நாலுராசியும் திரிகைகண்டமென்பதாம்.

ஆக இந்த மூன்று கண்டத்திலும், தலைகடை பெருத்து நடு சிறுத்திருந்தால் டமரகயோகம். தலைகடை சிறுத்து நடு பெருத்திருந்தால், மத்தளயோகம். முன்சிறுத்து நடு பெருத்து பின் அதிலும் பெருத்திருந்தால், எக்காளயோகம். முன் பெருத்து நடு சிறுத்து பின் கொஞ்சம் பெருத்தால், வீணையோகம். முன் அதிகமாகப் பெருத்து நடுசிறுத்து பின் அதிலுஞ் சிறுத்திருந்தால் பருவத யோகம். முன் சிறுத்து நடுவும் பின்னும் ஏற்றத் தாழ்ச்சியாயிருந்தால் வாசியோகம். மூன்று கண்டமும் சரியாயிருந்தால், சர்வாங்க யோகமென்பதாம்.

சர்வாங்க அஷ்டவர்க்கத்தில் பார்ப்பது, திரிகோணராசி பிந்துகள் உயர்ந்தால் சுப பலன். அதிகம் குறைந்தால் குறைவானபலன். மற்றைத் தானங்களுக்கும், லக்கினத்திரிகோணம் பிந்துகள் சவுக்கியம். இரண்டாந் திரிகோணம், சேவகா விருத்தி. மூன்ருந்திரிகோணம், ஜனங்களை ரட்சிப்பன். நாலாந்திரிகோணம், ஜனங்களை உபத்திரம் பண்ணுவன்.

9-மிடம் தருமம். 2-மிடம் அர்த்தம். 7-மிடம் கர்மம். 8-மிடம் மோக்ஷம்.

4-மிடம் கிரகம். 4-மிடம் வாகனம். 3 மிடம் ஆபரணம். 2 மிடம் கிரமமான வார்த்தை. 1-மிடம் கிரமமான நட்பு.

1—4—7—10—5—9	இந்த ஆறும்	லோகசிந்தனை.
2—3—6—8—11—12	இந்த ஆறும்	மோட்சசிந்தனை.
1—4—7—10	இந்த ஜென்மம்	சகோதரங்களும்.
2—5—8—11	பூர்வ ஜென்மம்	பிதாபாட்டன்.
3—6—9—12	வருகிற ஜென்மம்	புத்திரன்.

இரண்டாமிடமுதல் ஆருமிடம்வரைக்கும் அஞ்சும் பிதுர்பாரம்பரை எட்டாமிடமுதல் பனிரண்டாமிடம்வரைக்கும் அஞ்சும் மாதுர்பாரம்பரை இவை ஒற்றைக்கு ரெட்டையானல் மாறிக்கொள்ளவும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

செவ்வாய்-சுக்கிரன் — இராசத குணம்
சூரியன்-புதன்-சனி — தாமத குணம்
சந்திரன்-வியாழம் — சாத்வீக குணம்

சகல குணமும் பிந்துவினுலே முன்சொன்ன பலன்களெல்லாம் பார்த்துக்கொள்ளவும்.

வேறு.

இரவிக்கொன் பான்ம திக்கும் புந்திக்கு மீரி ரண்டாம்
குருவினுக் கைந்து சேய்க்கு மூன்றுசுக் கிரனுக கோரேழ்
வருசனிக் கிருநான் காகு மிராசியின் சமுதா யத்தை
விரவுசோத் தியத்தாற் ருக்கி மேவுமூ வொன்பாற் சிந்தே.

இ-ள். சூரியனுக்கு ஒன்பதும், சந்திரனுக்கு நான்கும், செவ்வாய்க்கு மூன்றும், புதனுக்கு நான்கும், குருவுக்கு ஐந்தும், சுக்கிரனுக்கு ஏழும், சனிகக்கு எட்டும, ஆம். ராசியின் சமுதாயத்தை சோத்தியப்பரலாற் (சுத்தபிண்டம்) பெருக்கி, அத்தொகையை, இருபத்தேழுக்கு சொடுத்தே. எ-று. 279

(இராசி குணகாரம், கிரக குணகாரம் இவ்விரண்டையும் சேர்த்து, சோத்தியம், அல்லது சுத்தபிண்டமாம்.)

வருபலன் வளர்பி றைக்கோ மகிழசு பதிமுன் னுகத்
திருவறு தேய்பி றைக்கே சேரவிட் டம்முன் னுக
விரவுட னெண்ணிக் கண்ட நாள்குரு மேவுங் காலம்
பரவுநற் பலன்சுன் கூடிற் பகர்கார கர்க்குக் கண்டம்.

இ-ள். மீதம் வருவதை, பூர்வபக்ஷமானுல், அசுபதிமுதலும், அமர பக்ஷமானுல், அவிட்டம் முதலும எண்ண, எந்தராசிவருகிறதோ, அந்த ராசியில் குருவருங்காலம், அந்தக்காரகர்களுக்கு நற்பலனும், சனிவருங் காலம் துர்ப்பலனு முண்டாம். எ-று.

தான்சமு தாய முப்பான் மேலுறிற் பூர்ணஞ் சாற்றும்
ஆனவை யைந்தின் மீதி லடித்திடின் மத்தி மந்தான்
ஈனமா மிதன்கீ ழற்ப மாம்பலம் வியமீ ரைந்தில்
வான்பரல் குறைந்தி லாபம் வருஞ்சன்ம முயரில் யோகம்.

இ-ள். ஒவ்வொரு ராசிகளின் சமுதாயம், முப்பத்துக்குமேலானுல், பூரணபலனும், இருபத்தைந்துக்குமேலானுல், மத்திமபலனும், அதறகுக் கீழ்ப்பட்டால் அற்பபலனுமாம. பத்து பனிரண்டில் பரல குறைந்தால் லாபமும், லக்கினத்தில் பரல் கூடியிருந்தால் யோகமு முண்டாம். எறு. 281

பதினொன்றில் வியமிகுந்தாற் பகர்ந்திடுசெலவுமேலாம்
துதிபெறுபத்தின்மேலாம் வியமெனிற்சகடந்தோற்றும்
வதியுமாறெட்டீராறின் மன்பரற்றெகைக்குமேலாய்ப்
பதிபுகழிரண்டொன்பான்பன் னொன்றுறிற்பகர்வயோகம்.

இ-ள். பதினொன்றில் பரல் குறைந்து பனிரண்டில் பரல் அதிகமாயின், செலவு அதிகமாம் பத்தாமிடத்துப்பரலுக்கு பனிரண்டாமிடப்பரல் அதிகமாயின் சகடமாம். ஆறு எட்டு-பனிரணடாமிடம்பரலுக்குமேல், இரண்டு-ஒன்பது. பதினோராமிடப்பரல் அதிகமாயின் யோகமாம். எ-று. 282

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆயுசுபலன் கணிதம் பண்ணவும்

குணகாரத் தொகையிரண்டை யொன்ருய்க் கூட்டிக்
குலமுந் நூற் றிருபானுன் கதனிற் ருக்கும்
கணமதனை முந் நூற்ரே டறுபா னை ந்தில்
கழித்துவருஞ் சேடத்தை மூவொன் பானில்
உணக்கமற வேகழித்த பலனுமண் டாகும்
உயர்சேடந் தனையீரா றதனிற ருக்கி
இணக்கமுடன் முன்போல வியற்றிக் கொண்ட
வீவுமதி சேட முப்பா னேயத் தாக்கே.

இ-ள். இராசி கிரக குணகாரத்தொகைகளிரண்டையுங்கூட்டி(முந் நூற்றிருபத்துநான்கால்) பெருக்கி வந்த தொகையை (முந்நூற்றறுபத் தைந்துக்குக) கொடுத்து. மீந்ததொகையை (இருபத்தேழுக்குக்) கொடுக்க வருவது வருஷமாம். மீதத்தை (பனிரண்டால்) பெருக்கி (இருபத்தேழுக் குக) கொடுகக வருவது மாதமாம். அம்மீதத்தை (முப்பதால்) பெருக்கி. எ-று. 283

தாக்குதொகை தனைமுன்போ லீந்த பேறு
தானுளாஞ் சேடத்தை யறுபான் றன்னில்
தாக்கிவரும் பேறுகன்ன லாமிவ் வாறே
தான்காணு வாய்மற்றை விநாடி யாதி
போக்கருமவ் வவர்வருட மாத மாதி
புறம்பாக வைத்ததனை யரணஞ் செய்யும்
தாக்கணங்கே வகையதனை விரித்துச் சொல்வர்
சாதகநூ லுணர்ந்தபெரி யோர்க டாமே

இ-ள். (27)க்குக் கொடுக்க வருவதுநாளாம். அதில் மீந்த தொகையை (60)ஆல் பெருக்கி (27)க்குக் கொடுக்க வருவது. நாழிகையாம். இம்முறைப்படி விநாடி, கலை, விகலையாக்குக. இப்படியாகக் கிடைத்த வரு-மீ-வ நாள் நாழிகை முதலியதை புறம்பாகவைத்து, இதை அரணஞ் செய்யும் விவரத்தை சோதிடங் கற்ற பெரியோர் விரித்துச் சொல்வர். எ-று. 284

வே று.

ஓர்மனை தனிலிரண்டு கோள்கள் நின்றிடினும்நீசம்
ஏரறுமத்தமானம் பகையினுங்கடகத்தேனும்
ஆர்மதிகூடினுலு மலதுநேர்நோக்கினுலும்
தார்குழலாளேயக்கோ ளாயுளிற்பாதிதள்ளே.

இ-ள். ஒருவீட்டில் இருகிரகமிருந்தாலும், நீசம்-அஸ்தமானம்-பகை -பெற்ருலும், கடகத்தில் சந்திரனிருந்தாலும், பார்த்தாலும், பாதி வருஷ மாதங்களைத் தள்ளுக. எ-று. 285

தள்ளுநண்டதிற்சுபக்கோ டங்கிஷன்மூன் றிலொன்று
தள்ளுநட்பதனினின்ற கோளுக்குநான்கிலொன்று
தள்ளுபாபக்கோ ணீசம் பகையுறிலெட்டிலொன்று
தள்ளுபாபக்கோணட்புத் தானுறினுன் கிலொன்றே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். கர்க்கடகத்தில், சற்கோளாகிய சுபர் தங்கிடில், மூன்றிலொன்று தள்ளவும், நட்புக்கோள் நின்றிடில் நான்கிலொன்று தள்ளவும், பாவக்கிரகங்கள் பகை நீசம் பெற்றிருந்தால் எட்டிலொன்றுதள்ளவும், பாவக்கிரகங்கள் நட்புப் பெற்றால், நான்கிலொன்று தள்ளவுமாம். எ-று. 286

ஒன்றியகோள்கணின்ற வோரைக்குவியத்திற்பாவர்
நின்றிடிலவர்கொடுத்த வாயுள்களெல்லாம்நீங்கும்
துன்றுபன்னொன்றிற்பாதி சொல்பத்தில்நான்கிலொன்று
நன்றுபாக்கியமெட்டொன்று நவிலெட்டிற்பதினொன்றே.

இ-ள். கிரகங்கள் நின்ற ராசிக்கு (12)ல், பாவர்கள் நிற்கில், ஆயுள் பூராவையுந் தள்ளவும், (11)ல், பாவர்கள் நின்றால் அரைவாசிதள்ளவும். (10)ல், பாவர்கள் நிற்கில் நான்கில்ஒன்று தள்ளவும்; (9)ல் பாவர்களிருந்தால் எட்டிலொன்று தள்ளவும், (7)ல், பாவர்கள் நிற்கில் பதினொன்று தள்ளவும். எ-று. 287

ஆம்பகைசுபக்கோளாயின் பாபருக்கறைந்தவெண்ணில்
தாமதிற்பாதிநீங்குஞ் சார்பாபராட்சியுச்சம்
ஏழுறிலரணமில்லை விரும்புகோளாட்சியுச்சம்
வாமமார்குழலாய்பத்தி னொன்றுமேற்கூட்டுவாயே.

இ-ள். முன்பாட்டிற் சொன்ன கோட்கள் சுபக்கோளாகில், பாவக்கோளுக்குச் சொன்னதொகையில் பாதிதள்ளவும். பாபக்கிரகங்கள், ஆட்சி, உச்சம்-பெற்றால், அரணமில்லைஉள்ளபடி தொகையும், சுபக்கிரகங்கள் ஆட்சி, உச்சம் பெற்றால் பத்திலொன்று ஏற்பட்ட ஞ-மீ-த் தொகையுடன் கூட்டிக் கொள்ளவுமாம். எ-று. 288

காலச் சக்கரம்

வெண்பா.

சேய்க்கேழு பொன்பத்துச் சேரிரவிக் கைந்தாகும்
மாய்த்தபுகர்க் கீரெட்டாம் மாலுக்கோ—ஏய்த்தொன்பான்
சந்திரற்கு மூவேழாஞ் சாற்றுஞ் சனிக்கொருநான்
கிந்தமுறை ராசிகளுக் கெண்.

இ-ள். செவ்வாய்க்கு (7) குருவுக்கு (10) சூரியனுக்கு (5) சுக்கிரனுக்கு (16) புதனுக்கு (9) சந்திரனுக்கு (21) சனிக்கு (4) இப்படியே அவரவர் ஆட்சி ராசிகளுக்கு ஆண்டாகிய வருஷங்களாம் எ-று. 289

கேள் சகடு மான்றலையாழ் கேடின் மகமூன்றும்
நீள் சுளகு தேள்கேட்டை நேரோணம்—வாள விட்டம்
செக்குமிட வோட்டாகுஞ் சேராய் பதினைந்தும்
இக்குமொழி யாய்வலவோட் டே.

இ-ள். விரும்பிய கருப்பினும் மேன்மை பொருந்திய மொழியையுடைய பெண்ணே? கேட்பாயாக. உரோகணி-மிருகசீரிடம்-திருவாதிரை-மகம் பூரம் உத்திரம் விசாகம் அனுஷம் கேட்டை திருவோணம் அவிட்டம் சதயம் ஆகிய, இப்பன்னிரண்டு நட்சத்திரங்களும், இடவோட்டாம் அசுபதி பரணி கார்த்திகை புனர்பூசம் ஆயிலியம் அத்தம் சித்திரை சுவாதி மூலம் பூராடம் உத்திராடம் பூரட்டாதி ரேவதி இப் பதினைந்தும், வலவோட்டு நட்சத்திரங்களாம். எ-று. 290

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஏயபரி யாரலெரி யேதமறு சோதியா
வாயவத்த மூலமுத்தி ராடமுடன்—தூயகடை
நாள்புரட்டை யிரைந்தி னன்முதற்காற் காடாதி
நீள்தனுவீ ருகவரு நோ.

இ-ள். அசுபதி கார்த்திகை புனர்பூசம் ஆயிலியம் அஸ்தம் சுவாதி மூலம் உத்திராடம் பூரட்டாதி ரேவதி இந்த 10 நட்சத்திரங்களின் முதற் காலுக்கு மேடமுதல் தனுசுவரையுள்ள 9 இராசிகளாம் மேடச் செவ்வாய் முதல் தனுசு வியாழன்வரையுள்ள 100 ஆண்டு மாம். எ-று. 291

நேரிரண்டாங் காலுங்கு நீண்மகரங் கும்பஞ்சேல்
சீரறுதேள் கோலரிவை தேர்கடகம்—வார்சியம்
தண்டாகு மூன்ருங்கா ருனிடப மேடமீன்
கொண்டகும்ப மான்றனுசு கூறு.

இ-ள். இரண்டாங்காலுக்கு, மகரம் கும்பம் மீனம் விருச்சிகம் துலாம் கன்னி கர்க்கடகம் சிம்மம் மிதுனமாம். (இவைக்கேற்பட்ட கிரகங்களின் ஆண்டு 85.) மூன்ருங்காலுக்கு இடபம் மேடம் மீனம் கும்பம் மகரம் தனுசு (மேடம் இடபம் மிதுனமும் இவைக்கேற்பட்டகிரகங்களின் ஆண்டு 83.) எ-று.

கூறுமே டம்மிடபங் கோல முதுனமாம்
வீறுநாற் காலுக்கு மேவலவன்—நாறுமலர்க்
கோதாய் முதலாகக் கொண்மீன ராசிவரை
ஏதமாறு புத்திக் கினம்.

இ-ள். நாலாங்காலுக்கு கர்க்கடகமுதல் மீனம்வரையும், உள்ள ராசியும் (அவைக்கேற்பட்ட கிரகங்களின் ஆண்டு 86.) எ-று. 293

இனமார் பரணி யெழிற்பூசஞ் சித்திரையோ
டனமேநா ளுத்திரட் டாதி—யெனுமைந்தின்
முற்காறேள் கோலரிவை முன்னுகட கஞ்சியம்
மிக்கதண்டே ருடுமீ னம்.

இ-ள். பரணி பூசம் சித்திரை பூராடம் உத்திரட்டாதி ஆகிய 5 நட்சத்திரங்களின் முதற்கால் விருச்சிகம் துலாம் கன்னி சிம்மம் கர்க்கடகம் மிதுனம் ரிஷபம் மேஷம் மீனமாம். (இவைக்கேற்பட்ட கிரகங்களின் வருஷம் 100.) எ-று. 294

மீயிரண்டோ கும்பமான் வின்மேடந் தொட்டரிவை
ஆயாரு மூன்றிற்கோல் தொட்டாறும்—ஏயதேள்
கோலரிவை யாகுங் குளிர்சியந் தண்டுமுதல்
ஏலவின் மட் டாமிடமா யீறு.

இ-ள். இரண்டாங்காலுக்கு, கும்பம் மகரம் தனுசு மேஷம் ரிஷபம் மிதுனம் கடகம் சிங்கம் கன்னியாம் (இவைக்கேற்பட்ட கிரகங்களின் வருஷம் 85.) மூன்ருங்காலுக்கு, துலாம் விருச்சிகம் தனசு மகரம் கும்பம் மீனம் (விருச்சிகம் துலாம் கன்னியாம்.) இவைக்கேற்பட்ட கிரகங்களின் வருஷம் 83 நாலாங்காலுக்கு, சிம்மம் ரிஷபம் மேடம் மீனம் கும்பம் மகரம் தனுசுமாம் (இவைக்கேற்பட்ட கிரகங்களின் வருஷம் 68.) எ-று.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஈருமு ரோணிமக மேர்சுளகோ ணம்மிவற்றின்
விருமுற் காற்குவில் லாதிதண்டும்—கூறுசிங்கம்
நண்டிரண்டாங் காலகன்னி நற்கோறேண் நான்கும்
அண்டுசுரு விற்றேள்கோ லாம்.

இ-ள். உரோகணி மகம் விசாகம் திருவோணம் ஆகிய 4 நட்சத்திரங்களின் முதற்காலுக்கு, தனுசு மகரம் கும்பம் மீனம் ரிஷபம் மிதுனம் சிம்மம் கர்க்கடகமாம். (இவைக்கேற்பட்ட கிரகங்களின் வருஷம் 86.) இரண்டாங்காலுக்கு, கன்னி (துலாம் விருச்சிகம் மீனம் கும்பம் மகரம் தனுசு விருச்சிகம் துலாமாம். (இவைக்கேற்பட்ட கிரகங்களின் ஞு 83.)

ஆமூன்றுங் காலுக் கரிவையரி நண்டுதண்டும்
வாமுடப் மாடுதனு மான்குடமாம்—தேமொழிகேள்
மீனு டெருதுமிது னஞ்சிங்கம் நண்டரிவை
தானுங்கோ றேள்கடைக்கால் சாற்று.

இ-ள். மூன்றுங்காலுக்கு, கன்னி சிம்மம் கர்க்கடகம் மிதுனம் இடபம் மேடம் தனுசு மகரம் கும்பமாம் (இவைக்கேற்பட்ட கிரகங்களின் ஞு 85.) நாலாங்காலுக்கு, மீனம் மேஷம் இடபம் மிதுனம் கர்க்கடகம் சிம்மம் கன்னி துலாம் விருச்சிகமாம். (இவைக்கேற்பட்ட கிரகங்களின் ஞு 100)

சாற்று மகரசிரம்யாழ் சார்பூர முத்திரமும்
போற்றுமனு டங்கேட்டை போரவிட்டம்—ஏற்றமுதற்
காலுக் கிடமாக் கயலாதி ஞண்டுலரை
கோலக் குருவிமுலையாய் கூறு.

இ-ள். மிருகசீரிடம் திருவாதிரை பூரம் உத்திரம் அனுஷம்-கேட்டை அவிட்டம் சதயம் ஆகிய 8 நட்சத்திரங்களின் முதற்காலுக்கு, மீனம்-கும்பம்—மகரம் தனுசு விருச்சிகம் துலாம் கன்னி சிம்மம்கர்க்கடகமாம். (இவற்றின் கிரகங்களின் ஞு 86) எ-று. 298

கூறுதண்டு குண்டைமறி கூன்சிலைதொட் டேறளவும்
வீறுமிகு காற்காமே லாங்காற்கு—மீறும்
அரிமதியாம் பெண்கோறே ளாமீன் குடமாம்
சுரிகுழலா யாமெனமே சொல்.

இ-ள். இரண்டாங்காலுக்கு, மிதுனம், ரிஷபம் மேஷம் தனுசு மகரம் கும்பம் மீனம் மேடம் ரிஷபமாம் (இவற்றின் கிரகங்களின் ஞு 83.) மூன்றுங்காலுக்கு, மிதுனம் சிம்மம் கர்க்கடகம் கன்னி துலாம் விருச்சிகம் மீனம் கும்பம் மகரமாம். (இவற்றின் கிரகங்களின் ஞு 85.)—எ-று. 299

சொல்லும்நா லாங்காற்குத் தூயதனு வாதியாய்
வல்லதக ரொன்பான் மனைவரையும்—நல்லாய்
இடவோட்டாக் கொள்வரீ ராறுகா லுக்கும்
விடமார்தே ளாதிவின்மட்டே.

இ—ள். நாலாங்காலுக்கு, தனுசு விருச்சிகம் துலாம் கன்னி சிம்மம் கர்க்கடகம் மிதுனம் ரிஷபம் மேடமாம். (இவற்றின் கிரகங்களின் 100) விருச்சிகம் முதல் தனுசுவரை 12 இராசியும் இடவோட்டமாம்—எ-று.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மட்டாருஞ் சக்கரத்தின் வாறுண்டிற் கும்புத்தி
தொட்டாரு மாண்டிற்குந் தோகாய்கேள்—நட்டார்
தொகைதம்மை மாறிச் சொலுந்திசையாண் டுக்கி
மிகைவரும்பே றேபுத்தி மேல்.

இ—ள். காலசக்கரத்தின், திசைநாதனுக்கும், புத்திநாதனுக்கும், உள்ள வருஷத்தொகை யிரண்டையும் பெருக்கி காலசக்கரமொத்த வருஷத்தொகையில் வகுக்கவரும் ஈவேபுத்தி காலமாம்—எ—று. 301

மேடந் தனுமீனம் விர்ச்சிகஞ்சிங் கக்கதியாம்
நாடரிவை நண்டுசிங்கம் நற்றண்டு—கூடும்
தவளைக் கதிவலநேர் தான்சர்ப்ப வோட்டம்
திவளிடமே மர்க்கடமாச் செப்பு.

இ—ள். மேஷம் தனுசு மீனம் விருச்சிகம் இவைசிங்கக் கதியாம், கன்னிகர்க் கடகம் சிங்கம் மிதுனம் இவை தவளைக்கதியாம். இவை வலப் பக்கம் மாறினல் சர்ப்பவோட்டமாம் இடப்பக்கம்மாறினல்வானரகதி யாம்—எ—று.

செப்புவல வோட்டுக்குச் சேர்தொட்ட லக்கினமெய்
ஒப்பரிய சீவன் விடு மோரையே—தப்புமிட
ஓட்டிற்கு மாரு யுரைவயிற்றி லேசுபர்கள்
கூட்ட முறின் நற்பலனே கூறு.

இ—ள். வலவோட்டு நட்சத்திரங்களுக்கு ஆரம்பராசி உடலாம் கடைசி ராசி உயிராம் இடவோட்டு நட்சத்திரங்களுக்கு கடைசி ராசி உடலாம் ஆரம்பராசி உயிராம் ஆருமிடத்திற் சுபர்கள் கூடி நின்ருல் நல்ல பலனுண்டாம்.

இதுவுமது வேறுவிதம்

கால சக்கரம் வலவோட்டு நாள்15—ல்,

அசுவினி புனர்பூசம் அஸ்தம் மூலம் பூரட்டாதி ஆக ஐந்தும் வலவோட்டு முதல்நாள். அசுவினிக்கத்தபடி.

பரணி பூசம் சித்திரை பூராடம் உத்திரட்டாதி ஆக ஐந்தும் வலமோட்டு நடுநாள், பரணிக்கத்தபடி.

கார்த்திகை ஆயிலியம் சுவாதி உத்திராடம் ரேவதி ஆக ஐந்தும் வலவோட்டு கடைநாள் கார்த்திகைக்கத்தபடி.

ரோகிணி மகம் விசாகம் திருவோணம் ஆக நான்கும் இடவோட்டு முதல்நாள். ரோகணிக்கத்தபடி.

மிருகசீரிடம் பூரம் அனுஷம் அவிட்டம் ஆக நான்கும் இட வோட்டு நடுநாள், மிருகசீரிடத்துக்கத்தபடி.

திருவாதிரை உத்திரம் கேட்டை சதயம் ஆக நான்கும் இட வோட்டு கடைநாள். திருவாதிரைக்கத்தபடி.

மேடச்செவ்வாய் ௵ 7. ரிஷபச்சுக்கிரன் ௵ 16. மிதுனபுதன் ௵ 9. கடகச்சந்திரன் ௵ 21. சிங்காதித்தன் ௵ 5. கன்னிபுதன் வருஷம் 9. துலாச்சுக்கிரன் வருஷம் 16. விருச்சிகச்செவ்வாய் வருஷம் 7. தனுசு வியாழன் வருஷம் 10. மகரச்சனி வருஷம் 4. கும்பச்சனி வருஷம் 4. மீன வியாழன் வருஷம் 10. ஆக ராசி 12க்கும் வருஷம் 118. ஆ[illegible]ம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இடவோட்டுக்கடை வலவோட்டு முதலாகவும், வலவோட்டுக்கடையிடவோட்டு முதலாகவும் மாறி நடத்தவும்.

காலசக்கிரம்.

இலக்கியதோர் மேடசிங்கந் தனுசுக்கே நூறும்
இடபகன்னி மகரத்துக் கெண்பத்தஞ் சாகும்
துலக்குமிது னந்துலாங் கும்பத்துக் கேதான்
தொகைவருட மெண்பத்தி மூன்றுண்டு சொல்வார்
நலங்கிளருங் கர்க்கடகம் விருச்சிகமீ னுக்கே
நண்ணுமெண்பத் தாறுண்டு நயந்துண்ப தாகும்
பொலங்குழையாய் வலவோட்டு இடவோட்டு வென்னும்
பொருந்து திசை வருடத்திற் புத்தியிவை யென்பார்.

இ-ள்.	மேட சிங்கந் தனுசுக்கு	வருஷம்	100.
	இடப கன்னியா மகரத்துக்கு	வருஷம்	85.
	மிதுன துலாங் கும்பத்துக்கு	வருஷம்	83.
	கடக விருச்சிக மீனத்துக்கு	வருஷம்	86.

வலவோட்டுக்கும் இடவோட்டுக்கும் இதுவே வருஷம் என்றுசொல்வர். எ-று.

அரிதாங்கா லச்சக்கரத் திசைநடக்கும் போதில்
அனேககெதி யாம்நடக்கும் அதிற்சிறிது சொல்வாம்
துரிதமாய்ச் சலகெதியு முடன் துரக கெதியுஞ்
சொல்லியசிங் காலோக கெதியல் லாது
வரிவுறுக்குக் குடகெதியும் யூககெதி பாயும்
மண்டுக கெதிசர்ப்ப கெதியெனவும் பகரும்
விரிவுமவ் வேழுகெதி தன்னில்வரு பலனும்
விளங்கியசக் கிரதிசையின் மெய் பலனைக்கேளிர்.

கெதா

இ-ள் இடமாவது வலமாவது அடுத்து நடப்பது சலகெதி மீனத்தில் நின்று விருச்சிகத்தில் பாய்ந்தாலும், தனுசில் நின்று மேடத்திற் பாய்ந்தாலும், சிங்காலோககெதி, விருச்சிகத்தில்நின்று மீனத்திற் பாய்ந்தாலும், மேடத்தில் நின்று தனுசிற் பாய்ந்தாலும், துரககெதி, கடகத்தில் நின்று சிங்கத்திறபுரள சர்ப்பகெதி, சிங்கத்தில்நின்று கடகத்திற்புரள யூககெதி. மிதுனத்தில் நின்று சிங்கத்திற் பாய்ந்தாலும், சிங்கத்தில் நின்று மிதுனத்திற் பாய்ந்தாலும், குக்குடகெதி, கன்னியில் நின்று கடகத்திற் பாய்ந்தால் மண்டுககெதியாம். எ-று.

தத்து

மேடத்திலிருந்து தனுவில் தத்தும்போது பிதிர்பந்துப் பீடை தன்னைக்குறித்துப் பயமடைதல், ஆயுதபயம்.

விருச்சிகத்திலிருந்து மீனத்தில் தத்தும்போது சுரபீடை சோரபயம், திரவியசேதம். அலைச்சல், பயம்.

தனுவிலிருந்து மேடத்தில் தத்தும்போது மரணபயம் பிதிர் வழிக்கிலேசம், இடம்பெயர்தல், சொருட்குறைவு.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மீனத்திலிருந்து விருச்சிகத்தில் தத்தும்போது அக்கினிபயம் ஆயுதபயம், விஷபயம், ராஜபயம், வயிற்றிலே வெப்பு வலிப்பு முதலிய பீடை.

கன்னியிலிருந்து கர்க்கடகத்தில் தத்தும்போதுஜலபயம். வகூ ரிமுதலியபிணி களத்திரபீடை, மாதாவழி மாமன் பந்துப்பீடை.

சிங்கத்திலிருந்து மிதுனத்தில் தத்தும்போது. பிதிர் பந்துப் பீடை, குடும்பபிணி, வியாதி, மனக்கிலேசம் சித்தப்பிரமை.

கர்க்கடகத்திலிருந்து கன்னியில் தத்தும்போது குடும்பபிணி பந்துஜனக் கலக்கம், காரிய நஷ்டம்.

மிதுனத்திலிருந்து சிங்கத்தில் தத்தும்போது மனக்கிலேசம் பிதிர் பந்துப்பீடை, தேகத்திலே தழும்பு, முதலியவையும் உண்டாம்.

காலச்சக்கர தேசாதிபர்கள் ஜெனனகாலத்திலே நட்பு, ஆச்சி உச்சராசிகளிலே சுபஸ்தானாதிபர்களாக இருந்தால் தங்கள் தெசை களிலே சுபபலனைச் செய்வர்.

ஜெனனகாலம், பகை நீசராசிகளிலே குரூரஸ்தானாதிபர்களாக இருந்தால் தெசைகளிலே பாப பலனைச் செய்வர்.

வலவோட்டு முதனுள் அசுவினி முதற்பாதத்திற்கு மேடச் செவ்வாய் தெசை வருஷம் 7.

மேடச்செவ்வாய் முதல் தனுசு வியாழம்வரை. இராசி 9 க்கு காலச்சந்திரதிசை அபகாரவருஷம் 100-க்கு யீவுநாள் 25. நாழிகை 12. மேடம் உடல் தனுசு உயிர்.

மேடச் செவ்வாய் புத்தி மாதம் 5. நாள் 26. நாழிகை 24-க்கு பலன், தேகபிணி, பொருள்நட்டம், தானியசேதம், களத்திர பீடை, சத்துருபயம், சோரபயம், அக்கினிபயம்.

இடபச் சக்கிரன் புத்திவருடம் 1, மாதம் 1, நாள் 13. நாழிகை 12-க்கு பலன், தாபசுரம் சத்துருபயம், சோரபயம், பொருள் நட்டம். கன்று காலிசேதம், வாகன விரோதம்.

மிதுனபுதன் புத்தி மாதம் 7. நாள் 16-க்கு நாழிகை 48-க்கு பலன். தேகவுஷ்ணம், வாக்கு விரோதம், மிருகபயம், பொருள் விரையம்.

கடகச்சந்திரன் புத்தி வருடம் 1. மாதம் 5. நாள் 19. நாழிகை 12-க்கு பலன். சரீரசுகம், பந்துஜனப்பிரியம், நவமணிவியாபாரம், தனதானிய வஸ்திரம் லாப சுபம்.

சிங்கச் சூரியன் புத்தி மாதம் 4. நாள் 6-க்கு பலன். ஜெயம், ராஜசன்மானம், மனையலங்காரம், பொன்வரவு, எடுத்தகாரியம் செய்து முடித்தல்.

கன்னி புதன் புத்தி மாதம் 7. நாள். 16. நாழிகை 48-க்கு பலன். வாகன கட்டம், மனஸ்தாபம், சரீரபீடை, சோரம் அன்னியதேசம், துலை தூரப் பிரயாணம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

துலாச் சுக்கிரன்புத்தி வருடம் 1. மாதம் 1. நாள் 13. நாழிகை 12-க்கு பலன். தானியச்செலவு, சரீரநோய், பிரயாணம், அலைச்சல், களத்தி பீடை.

விருச்சிகச் செவ்வாய் புத்தி மாதம் 5. நாள் 26. நாழிகை 24-க்கு பலன். விஷபயம், சோரபயம், சத்துருபயம், மனப்பீடை, தேக உஷ்ணம்.

தனுசு வியாழன் புத்தி மாதம் 8, நாள் 12-க்கு பலன். ராஜவெகுமானம், பூமிலாபம், குருபத்தி விசுவாசம், மனசந்தோஷம், ஆக வருஷங்கள். 7

அசுவினி இரண்டாம்பாதத்திற்கு, இடபச்சுக்கிரன் தெசை ௵ 16. இடபச்சுக்கிரன் காலச்சக்கரவருடத்தில் அபகாரம் 85-க்கு யிவு மாதம் 2. நாள் 7. நாழிகை 45. விநாடி ஐம்பத்திரண்டேமுக்காலே¾ னுவீசம் மகரம் உடல் மிதுனம் உயிர்.

மகரச்சனி புத்தி மாதம் 9. நாள் 1. நாழிகை 3. விநாடி 32-க்கு பலன். சத்துருஜெயம், பந்துக் கூட்டம், மனச்சந்தோஷம், ஆடல் பாடல்களிற் பொழுதுபோக்கு, சுகமான இடங்களிலே வாசஞ்செய்தல், அதிகாரம் உறவு.

கும்பச்சனி புத்தி மாதம் 9. நாள் 1. நாழிகை 3. விநாடி 32-க்கு பலன். சத்துருபயம், சோம்பல், துக்கசம்பவம், மனப்பீடை, பலவிடங்களிலுந் திரிதல்.

மீன வியாழன் புத்தி வருடம் 1. மாதம் 10. நாள் 17. நாழிகை 37 விநாடி 49 க்கு பலன். விவேகம், கல்வித்தேர்ச்சி, திரவியவிருத்தி சிநே விருத்தி, ஆசாரக்கிரமம்.

விருச்சிகச் செவ்வாய் புத்தி வருடம் 1. மாதம் 3. நாள் 24. நாழிகை 21. விநாடி 11-க்கு பலன். சிங்ககதியானதத்துவரும். அரவு தீயவர்இடையிலில்லாதிருப்பின் தீங்கில்லை. மனத்துக்கம். சுரபீடை, பித்தாதிகாரம், அலைச்சல்.

துலாச்சுக்கிரன் புத்தி வருடம் 3. மாதம் 0. நாள் 4. நாழிகை 14. விநாடி 7-க்கு பலன். காரியசித்தி பலனடைதல். மனத்திடம், பூமிலாபம். பந்துஜன சுகம், சவுக்கியம்.

கன்னி புதன் புத்தி வருடம் 1. மாதம் 8 நாள் 9. நாழிகை 52. விநாடி 56-க்கு பலன். சந்தோஷமான காரிய சம்பவம். தன்னுடைய சிநேகிதர்களுக்கு அனுகூலம் பொருட்பலன்.

கடகச்சந்திரன் புத்தி வருடம் 3. மாதம் 11. நாள் 13. நாழிகை 3. விநாடி 32-க்கு பலன். மண்டூககதியாகதத்துவரும். அரவுதீயவர் இடையிலில்லாதிருப்பின் தீங்கில்லை. ஜலபயம், கருப்பச்சேதம், பகை, பிரயாணம், அலைச்சல், தந்தரோகம் பொருட்குறை, காமாலை, நகச்சுற்று, வாதபத்தியம், மாதுரு ஸ்திரீவர்க்கபீடை.

சிங்காதித்தன் புத்தி மாதம் 11. நாள் 8. நாழிகை 49. விநாடி 25-க்கு பலன். சர்ப்பகதி, விஷநீர், கபாலரோகம், நேத்திரரோகம், வயிற்றுவலி, தேகஉஷ்ணம், அபஜெயம், பொருள் நட்டம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மிதுன புதன் புத்தி வருடம் 1. மாதம் 8. நாள் 9. நாழிகை 52. விநாடி 56-க்கு பலன். குக்குடகதியாகத்தத்துவரும். அரவு தீயவர் இடையில் இல்லாதிருப்பின் தீங்கில்லை. தேகத்திலே வைசூரி போன்ற உஷ்ண ரோகங்க ளுண்டாதல், ஸ்திரீகலகம், பந்துபகை, ஆ௳ ௵ 4.

அசுவினி மூன்றும் பாதத்திற்கு மிதுனபுதன் தெசை ௵ 9, மிதுன புதன் காலச்சக்கர வருடத்தில் அபகாரம் 83-க்குயீவு மாதம் 1. நாள் 9. நாழிகை 2 விநாடி பத்தே அரைக்கால் இடபம் உடல் மிதுனம் உயிர்.

இடபச் சுக்கிரன் புத்தி வருடம் 1. மாதம் 8. நாள் 24. நாழிகை 34. விநாடி 42-க்கு பலன். வாகனம், இரத்தினாபரணம், விவாகாதி சுப பலன், துஷ்டக்கிரியைகளை விடுதல், சௌக்கியம் வரவு விவேகம்.

மேடச் செவ்வாய் புத்தி மாதம் 9. நாள் 3. நாழிகை 15, விநாடி 11—க்கு பலன். காலில்ரோகம், புத்திரபீடை, புண், பிற்கூறில் இராச வெகுமானம், நன்மை.

மீன வியாழன் புத்தி வருடம் 1. மாதம் 1. நாள் 0. நாழிகை 21. விநாடி 41-க்கு பல்ன். கீர்த்திப் பிரசித்தம், தெய்வபக்தி, குருபக்தி, புத்திர லாபம், வஸ்திராபரணலாபம்.

கும்பச்சனி புத்தி மாதம் 5 நாள் 6. நாழிகை 8. விநாடி 40 க்கு பலன். தலைவலி உதரவலி. சூலைரோகம், சீதளசுரம், சோர்வு, புத்தி பேதம், மனத்துன்பம்.

மகரச்சனி புத்தி மாதம் 5. நாள் 6. நாழிகை 8. விநாடி 40—க்கு பலன். அலைச்சல் தேகபீடை, மனக்கிலேசம். மிருகபயம், கருப்பபீடை, சிநேக விரோதம்.

தனுசு வியாழன் புததி வருடய் 1. மாதம் 1. நாள் 0. நாழிகை 21. விநாடி 41—க்கு பலன். தேவபக்தி, குருபுத்தி, பூமிப்பலன். புத்திர பலன். வாகனபலன், வஸ்திராபரணபலன்.

மேடச் செவ்வாய் புத்தி மாதம் 9. நாள் 3. நாழிகை 15. விநாடி 11—க்கு சிங்ககதியான ததுத்வரும், தெற்குப்பக்கம் பிரயாணம். அரவு தீயோர் இடையிலில்லாதிருப்பின் தீங்கில்லை. தன்னைக்குறித்துப்பயம், ஷாருட் சேதம், அவமிருத்துப்பீடை.

இடபச் சுக்கிரன் புத்தி வருடம் 1. மாதம் 8. நாள் 24. நாழிகை 34. விநாடி 42—க்கு பலன். இரத்தினாபரணபலன். சுகம், சத்துரு ஜெயம், ஸ்திரீ யினாற் பயம்.

மிதுன புதன் புத்தி மாதம் 11. நாள் 21. நாழிகை 19. விநாடி 32—க்கு பலன். வியாபாரலாபம், ஜனப்பிரியம், குருபக்தி, நற்புத்தி, இராஜசன்மானம், ஆக வருடங்கள் 9.

அசுவினி நாலாம்பாதத்திற்கு, கடகச்சந்திரன் தெசை ௵21. கடகச்சந்திரன் காலச்சக்கர வருடத்தில் அபகாரம். 86 க்கு யீவு, மாதம் 2. நாள் 27. நாழிகை 54. விநாடி 25. கடகம், உடல், மீனம், உயிர்.

கடகச்சந்திரன் புத்தி வருடம் 5. மாதம் 1. நாள் 16. நாழிகை 2. விநாடி 48-க்கு பலன். சந்ததிவிருத்தி, பெரியோர்கள் விருப்பமாதல், ரோகசாந்தம், இராஜதயவு.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சிங்காதித்தன் புத்தி வருடம் 1. மாதம் 2. நாள் 19. நாழிகை 32. விநாடி 6-க்கு பலன். சத்துருநாசம், வியாதி சாந்தம், காரிய சித்தி, தனலாபம், ஜலகண்டமுண்டாகிப் பின்பு சாந்தம்.

கன்னி புதன் புத்தி வருடம் 2. மாதம் 2. நாள் 11. நாழிகை 9. விநாடி 46-க்கு பலன். கல்வித்திருத்தம், புத்திரபலன், பூமிபலன். வெண்கலம் முதலிய பாத்திரங்கள் சேருதல்.

துலாச் சுக்கிர புத்தி வருடம் 3. மாதம் 10. நாள் 26. நாழிகை 30. விநாடி 42-க்கு பலன். களத்திரசுகம், கப்பல் முதலியவைகளால் நடத்தும் வியாபாரபலன், பூமிலாபம், ஆபரணலாபம்.

விருச்சிகச் செவ்வாய் புத்தி வருடம் 1. மாதம் 8. நாள் 15. நாழிகை 20. விநாடி 56-க்கு பலன். சத்துருபயம், சோரபயம், தலைபாரம், பித்தம் பயித்திய முறைப்பாடு, அக்கினி வாதை.

தனு வியாழன் புத்தி வருடம் 2. மாதம் 5. நாள் 9. நாழிகை 4. விநாடி 11-க்கு பலன். இராஜானுகூலம், வித்தைபூமி ஸ்திரீ, ஆடையாபரணலாபம், பந்துஜன சவுக்கியம்.

மகரச் சனி புத்தி மாதம் 11. நாள் 21. நாழிகை 37. விநாடி 40-க்கு பலன். அங்கரோகம், கலகம், புத்திரசேதம், மனோதுக்கம், பொருட்சேதம்.

கும்பச் சனி புத்தி மாதம் 11. நாள் 21. நாழிகை 37. விநாடி 40-க்கு பலன். கரப்பான்வியாதி, பொருட்சேதம், கலகம், சிறைப்பயம் பசாசு பயம் பந்து சேதம், சோகபயம்.

மீன வியாழன் புத்தி வருடம் 2. மாதம் 5. நாள் 9. நாழிகை 4. விநாடி 11-க்கு பலன். கல்வித்திருத்தம், பொருட்பலன், புத்திரபலன், வஸ்திராபரணபலன், தனதானியச்சேர்க்கை, வெகுமானம் பெறுதல், கீர்த்திப்பிரதாபம். ஆக வருடங்கள் 21.

வலவோட்டு இடைநாள்

பரணி முதற்பாதத்திற்கு, சிங்காதித்தன் தெசை வருஷம் 5. பரணி முதற்பாதம் காலச்சக்கிரவருடம் 5-ல் அபகாரம் வருடம் 100-ல் யிவுநாள், 18. விருச்சிகம், உடல், மீனம், உயிர்.

விருச்சிகச் செவ்வாய் புத்தி மாதம் 4. நாள் 6-க்கு பலன், பூமிப்பலன் இரத்தினலாபம், சத்துருவிருத்தி, பித்தரோகம், வைராக்கியம், முன் தொடர்பாக வரின் தத்து.

துலாச் சுக்கிரன் புத்தி மாதம் 9. நாள் 18-க்கு பலன். சிரசில் வேதனை, கண்டரோகம், களத்திரசுகம், தானியநட்டம், சத்துருபயம், கன்றுகாலி மத்திபம்.

கன்னி புதன் புத்தி மாதம் 5. நாள் 12-க்கு பலன். சத்துருஜெயம். பித்தமயக்கம், சொறிகரப்பன், கீர்த்தி, சவுக்கியம், வித்தை, புத்திர வஸ்திரம், பூமிலாபம்.

கடகச் சந்திரன் புத்தி வருடம் 1. மாதம் 0. நாள் 18. நாழிகை 0 க்கு பலன். மண்டுகசுதியாகத்தத்து. அரவு தீயவர் இடையில் இல்லாதிருப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பின் தீங்கில்லை. ஜலகண்டம், களத்திரபீடை. வயிறு பேதி, பந்துஜன நட்டம், மனத்துன்பம், துர்ச்சனம், நேசம், ஸ்ரீ பிதுர்கண்டம், வாத ரோகம், சிரோபாரம், சரீரசுகம்.

சிங்காதித்தன் புத்தி மாதம் 3-க்கு பலன். சர்ப்பகதியாகத்தத்து, கிழக்குப்பிரயாணம், சிலந்தி, வாதபித்தசிலேட்டுமரோகம், முன் நட்ட மான சில பொருள் சேருதல், பூமி புத்திரலாபம்.

மிதுனபுதன் புத்தி மாதம் 5. நாள் 12-க்கு பலன். குக்குடகதியாகத் தத்து வரும். அரவுதீயவர் இடையிலில்லாதிருப்பின் தீங்கில்லை. களத்திர பிணி, பிதிர்வழிப்பீடை, சோரபயம், தனச்சேதம், புத்திக்குறை வாகச் சில காரியங்களைச் செய்தல், மனஸ்தாபம் அவமானம்.

இடபச் சுக்கிரன் புத்தி மாதம் 9. நாள் 18-க்கு பலன். அலங்காரம் அழகு, ஆபரணலாபம், யாத்திரைப்பலன், சோர்பயம், தனச்சேதம், மனோபயம்.

மேடச் செவ்வாய் புத்தி மாதம் 4. நாள் 6 க்கு பலன். அரசர்பயம், கைப்பொருள் சேதம், மனோபயம், பகை.

மீன வியாழன் புத்தி மாதம் 6-க்கு பலன். குதிரை முதலிய வாகன பலன். ஆபரணாதிவரவு, மனச்சந்தோஷம், சத்துருஜெயம்.

பரணி இரண்டாம்பாதத்திற்கு, கன்னி புதன் தெசை வருஷம் 9. கன்னி புதன் காலச்சக்கிரவருடம் 9-ல் அபகாரம் 85-க்கு மாதம் 1. நாள் 7. விநாடி முன்றரையோ மூன்றுவீசம். கும்பம், உடல் கன்னி உயிர்.

கும்பச் சனி புத்தி மாதம் 5. நாள் 2. நாழிகை 28. விநாடி 14-க்கு பலன். கிரகபீடை, சத்துருபயம், சோராக்கினிபயம், தனச்சேதம்.

மகரச் சனி புத்தி மாதம் 5. நாள் 2. நாழிகை 28. விநாடி 14-க்கு பலன் விஷநீர், சுரம், சோரர், பிசாசு முதலியவற்றுற் பீடை, விரோதம், மனக்கிலேசம், வயிற்றுவலி, சண்டை சச்சரவு

தனுசு வியாழன் புத்தி வருடம் 1, மாதம் 0. நாள் 21. நாழிகை 10. விநாடி 35-க்கு பலன். கல்வித்திருத்தம், பொருள் விருத்தி, தெய்வபக்தி, குருபக்தி, பொன் வஸ்திராபரணலாபம்.

மேடச் செவ்வாய் புத்தி மாதம் 8. நாள் 26. நாழிகை 49. விநாடி 25-க்கு பலன். சிங்ககதியாகத் தத்துவரும். அரவு தீயவர் இடையில் இல்லா திருப்பின் தீங்கில்லை. பிதாவழிப் பந்துப்பீடை, இராஜகோபம், அனல் சுரம் வைசூரி நீர்ப்பாடு பந்துஜன சேதம்.

இடபச் சுக்கிரன் புத்தி வருடம் 1. மாதம் 8. நாள் 9. நாழிகை 52. விநாடி 56-க்கு பலன். சரீரசுகம், புத்திரபந்துச்சிறப்பு, ஆடுமாடுமுதலி யவை விருத்தி.

மிதுன புதன் புத்தி மாதம் 11. நாள் 13. நாழிகை 3. விநாடி 32-க்கு பலன். துர்க்கிரியைசம்பவித்தல், இரத்தினம் முதலியவை லாபம், புத்திர பலன் சந்தோஷம்.

கடகச் சந்திரன் புத்தி வருடம் 2. மாதம் 2. நாள் 20. நாழிகை 28. விநாடி 14-க்கு பலன். காமாலை, சுரம், விஷநீர். கன்றுகாலிதேசம், வாகன பயம், பாவசிந்தை.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சிங்கச் சூரியன் புத்தி மாதம் 6. நாள் 10. நாழிகை 35. விநாடி 18-க்கு பலன். மந்திரசித்தி, காரியலாபம், சத்துருவேதனை, ஜலகண்டம்.

கன்னி புதன் புத்தி மாதம் 11. நாள் 13. நாழிகை 3. விநாடி 32-க்கு பலன். தெய்வபூசை, விவாகாதிசுபபலன், போஜன சவுக்கியம, மிகப்பொருட்பலன்.

பரணி மூன்றும் பாதத்திற்கு, துலாச்சுக்கிரன் தெசை வருஷம் 16. துலாச்சுக்கிரன் காலச்சக்கிர வருடம் 16-க்கு அபகாரம் 73-க்கு யிவு மாதம் 2. நாள் 9. நாழிகை 13. விநாடி ஐம்பத்தொன்ணேகால். துலாம், உடல், கன்னி, உயிர்.

துலாச் சுக்கிரன் புத்தி வருடம் 3. மாதம் 1. நாள் 0. நாழிகை 21. விநாடி 41.க்கு பலன். இனியசங்கீதம் முதலியவை கேட்டல், வாசனுதி பரிமள திரவிய விருத்தி, சுபசோபன் சம்பவம் வேளாண்மை, வியாபார விருத்தி, புத்திரலாபம், வெற்றியான பலன்.

விருச்சிகச் செவ்வாய் புத்தி வருடம் 1. மாதம் 4. நாள் 5, நாழிகை 46. விநாடி 59-க்கு பலன். விஷம், சுரம், மனோபயம், சகோதரபீடை, பிதிர்பீடை,

தனுசு வியாழன் புத்தி வருடம் 1. மாதம் 11. நாள் 3. நாழிகை 58. விநாடி 33-க்கு பலன். பாக்கியம் புத்திரலாபம், தானியபலன், கீர்த்தி, பட்டப்பேறு.

மகரச் சனி புத்தி மாதம் 9. நாள் 7. நாழிகை 35. விநாடி 26-க்கு பலன். இராஜவிரோதம், வானியச்சேதம், பிதிர்பீடை, பூமிபயிர்நட்டம், கைகால்வாதம், சிறைப்பயம், வழக்கு.

கும்பச் சனி புத்தி மாதம் 9. நாள் 7. நாழிகை 35. விநாடி 26-க்கு பலன். துஷ்டர் சிநேகம், திரவியச்சேதம், புத்திபீடை, சோரசத்துருபயம்.

மீன வியாழன் புத்தி வருடம் 1. மாதம் 11. நாள்,3. நாழிகை 58. விநாடி 33-க்கு பலன். அரசராலே ஜீமனம், விருந்து, பூமிலாபம், தானிய விருத்தி, மனச்சந்தோஷம், புத்திரலாபம்.

விருச்சிகச் செவ்வாய் புத்தி வருடம் 1. மாதம் 4. நாள் 5. நாழிகை 46. விநாடி 59-க்கு பலன். சிங்கததியாகத் தத்து. அரவு தீயவர் இடையே இல்லாதிருப்பின் திங்கில்லை. ராஜபயம், அஸ்திசுரம், வயிற்றுவலி உஷ்ணம் சத்துரு விஷயத்தாற் பயம், புத்திரலாபம், பிதர்பீடை, பூமி தனநாசம்.

துலாச் சுக்கிரன் புத்தி வருடம் 3. மாதம் 1. நாள் 0. நாழிகை 21. விநாடி 41-க்கு பலன். பயிர்விருத்தி, வியாபார பலன், வாகனபலன், வஸ்திராபரணபலன், விவாகாதிசோபனம்

கன்னி புதன் புத்தி வருஷம் 1. மாதம் 8. நாள் 24. நாழிகை 34. விநாடி 42 க்கு பலன். ஆரோக்கியம், பொருள்வரவு, சந்தோஷம், புத்திரலாபம்.

பரணி நாலாம்பாதத்திற்கு. விருச்சிகச் செவ்வாய் தெசை வருஷம் 7. விருசசிகச்செவ்வாய் காலச்சக்கி வருடம் 7-ல் அபகாரம் 86-க்கு யிவு நாள் 29. நாழிகை 18. விநாடி எட்டேகாலே அரைக்கால். கடகம், உடல், தனுசு, உயிர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கடகச் சந்திரன் புத்தி வருஷம் 1. மாதம் 8. நாள் 15. நாழிகை 20. விநாடி 56-க்கு பலன். களத்திரபிணி, பூமிப்பலன், ஆபரணாதி தன தானிய லாபம், சத்துருஜெயம். (தத்து)

சிங்காதித்தன் புத்தி மாதம் 4. நாள் 26. நாழிகை 30. விநாடி 42-க்கு பலன். வலப்பாரிசத்திலே நோய், கிழக்குயாத்திரைஜெயம், தனதானியம் இரத்தினாபரணலாபம்.

மிதுன புதன் புத்தி மாதம் 8. நாள் 23. நாழிகை 43 விநாடி 15-க்கு பலன். குக்குடகதியாகத்தத்து, அரவுதீயோர் இடையில் இல்லாதிருப்பின் தீங்கில்லை, வயிற்றிலே வாயுமுதலிய பிணி, உஷ்ணம், பொருட்சேதம், பசி.

இடபச் சுக்கிரன் புத்தி வருடம் 1. மாதம் 3. நாள் 18. நாழிகை 50. விநாடி 14-க்கு பலன் பொருட்சேதம், களத்திரபீடை. வாகனநஷ்டம், தேகபிணி, மந்திரமோதல்.

மேடச் செவவாய் புத்தி மாதம் 6. நாள் 25. நாழிகை 6. விநாடி 59-க்கு பலன். அரசர்பகை. ஆயுதபயம், அக்கினிபயம் பொருட்சேதம்.

மீன வியாழன் புத்தி மாதம் 9. நாள் 23. நாழிகை 1. விநாடி 24-க்கு பலன். குருபக்தி, ஞான அறிவு, புத்திரராதியோர்க்கு வித்தைப் பலன், திரவிய விருத்தி.

கும்பச் சனி புத்தி மாதம் 3. நாள் 27. நாழிகை 12. விநாடி 33-க்கு பலன். தனலாபம், பகை நிவாரணம். நீசதுஷ்ட ஸ்திரீகள் சகவாசம் ரோகமுண்டாம்.

மகரச் சனி புத்தி மாதம் 3. நாள் 27. நாழிகை 12. விநாடி 33-க்கு பலன். பகை, பொல்லாங்கு; கலகம், சத்துருபகை, மனக்கிலேசம், வீண் வியாச்சியம்.

தனுசு வியாழன் புத்தி மாதம் 9. நாள் 23. நாழிகை 1. விநாடி 24 க்கு பலன். ரோகபரிகாரம், வைராக்கியம், பித்தம், பந்துக்கள் பிரீதி.

வலவோட்டு கடைநாள்.

கார்த்திகை முதற்பாதத்திற்கு, தனுசுவியாழன் தெசை வருஷம் 10. கார்த்திகை முதற்பாகம் காலச்சக்கிரவருடம் 10 க்கு அபகாரம் 100-க்கு யீவுமாதம் 1. நாள்6. மேடம், உடல் தனுசு உயிர்.

மேடச் செவ்வாய் புத்தி மாதம் 8. நாள் 12-க்கு பலன். பூமிலாபம், அச்சமில்லாமை, (தத்து) சுகமனுபவித்தல்; பிறராலே குற்றம் கேட்டல்

இடபச் சுக்கிரன் புத்தி வருஷம் 1, மாதம் 7, நாள் 6—க்கு பலன் கற்றோர்க்குபகாரம், தனச்சேதம், சத்துருபயம்.

மிதுன புதன் புத்தி மாதம் 10, நாள் 24—க்கு பலன், வேதியாற்ற னச்சேதம், வஞ்சகம், மனத்துக்கம். உற்றார்பீடை.

கடகச்சந்திரன் புத்தி வருஷம் 2, மாதம் 1, நாள் 6-க்கு பலன் சத்துருகேடு, தாயாதிபொருள் தனக்குச்சேரும் இராஜ வெகுமானம், தரும விருத்தி, சுபக்காரியச் சந்தோஷம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சிங்காதித்தன் புத்தி மாதம் 6—க்கு பலன், கலகம், ரோகம், பிரயாணம், பூமிலாபம், இராஜசன்மானம், தானியலாபம்.

கன்னி புதன் புத்தி 10, நாள் 24—க்கு பலன், பந்து ஜனப்பகை, தரித்திரம் பெண்களாற் கலகம், சண்டைச்சரவு.

துலாச் சுக்கிரன் புத்தி வருஷம் 1, மாதம் 7, நாள் 6—க்கு பலன் தனம் விரையம், சத்துருபயம், கன்றுகாலிபீடைகள்.

விருச்சிக செவ்வாய் புத்தி மாதம் 8 நாள் 12—க்கு பலன் கீர்த்திப் பிரதாபம், மன்னர்கோபம், தனச்சேதம், சிறைப்பயம் உஷ்ணம் வைராக்கியம்.

தனுசு வியாழன் புத்தி வருஷம் 1—க்கு பலன் சந்தோஷம் இராஜ வெகுமானம், வித்தை தன தானியலாபம், வைராக்கிய சித்தம்.

கார்த்திகை இரண்டாம்பாதத்திற்கு, மகரச்சனி தெசை ௵ 4, கார்த்திகை இரண்டாம்பாதம் காலச்சக்கிர வருடம் 4-க்கு அபகாரம் 86-க்கு ௵ நாள் 17, நாழிகை 20, விநாடி ஐம்பத்தேழே முக்காலே மாகாணி, மகரம், உடல், மிதுனம், உயிர்.

மகரச் சனி புத்தி மாதம் 2, நாள் 7, நாழிகை 45, விநாடி 53—க்கு பலன். உஷ்ணசுரம், புத்திரகலகம், தேசகலகம், மனசஞ்சலம்.

கும்பச் சனி புத்தி மாதம் 2, நாள் 7, நாழிகை 45, விநாடி 53—க்கு பலன். ஆகாரவிருத்தி, அனுபோகம், சுகம்.

மீன வியாழன் புத்தி மாதம் 5 நாள் 19, நாழிகை 24, விநாடி 42—க்கு பலன். புத்திரபௌத்திரவிருத்தி, அதிகலாபம்.

விருச்சிகச் செவ்வாய் புத்தி மாதம் 3, நாள் 28, நாழிகை 35, விநாடி 18—க்கு பலன். சிங்ககதியாகத் தத்துவரும், அரவு தீயவர் இடையிலில்லா திருப்பின் தீங்கில்லை, உயிர்ப்பயம், தெற்குத்திக்கில் பிரயாணம் தனச்சேதம், மனத்துன்பம், சத்துருபகை, கலகம், ஆயுதபயம்.

துலாக் சுக்கிரன் புத்திர மாதம் 9, நாள் 1, நாழிகை 3, விநாடி 32—க்கு பலன். நல்லோர் சிநேகம், புகழான செல்வம், புத்திரலாபம், நல்லவர் நேசம். வியாதி சாந்தம்.

கன்னி புதன் புத்தி மாதம் 5, நாள் 2, நாழிகை 28, விநாடி 14—க்கு பலன். தனலாபம், கல்வி, புத்திரவிருத்தி, பந்துஜன உபகாரம்.

கடகச் சந்திரன் புத்தி மாதம் 11, நாள் 25, நாழிகை 45, விநாடி 53-க்கு பலன் மண்டுககதியாகத்தத்து, பிதிர் மாதுர்பீடை பந்துஜனகலகம் விஷபேதி முதலியவை. கெர்ப்பசலனம், ஜலகண்டம், தெற்குத்திக்கில் பிரயாணம், பகை, காரியநாசம்.

சிங்காதித்தன் புத்தி மாதம் 2, நாள் 24 நாழிகை 42 விநாடி 21-க்கு பலன், சர்ப்பகெதி, கிரந்திரோகம், புத்திரபீடை, மிருகபயம், பொருட்சேதம், சத்துருபயம்.

மிதுன புதன் புத்தி மாதம் 5, நாள் 2 நாழிகை 28 விநாடி 14 க்குக் குடகதியாகத்தத்து, கிழக்குப் பிரயாணம், சிரரோகம், நல்லோருறவுசத்துரு நிவாரணம், கெர்ப்பசலனம், தனம், செல்வம், மனநோய் தீரும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கார்த்திகை மூன்றும்பாதத்திற்கு, கும்பச்சனி தெசை வரு 4 கார்த்திகைமூன்றும்பாதம் காலச்சக்கரவருடம் 4-க்கு அபகாரம் 83-க்குயீவுநாள் 17, நாழிகை 20 விநாடி ஐம்பத்தேழே முக்காலே மாகாணி, இடபம், உடல் மிதுனம், உயிர்.

இடபச் சுக்கிரன் புத்தி மாதம் 9, நாள் 7 நாழிகை 35 விநாடி 25-க்கு பலன் உத்தியோகமுயற்சி, புத்திரசம்பத்து, பசுமுதலிய ஜீவபயம் பிரபலம்.

மேடச் செவ்வாய் புத்தி மாதம் 4 நாள் 1 நாழிகை 26 விநாடி 45-க்கு பலன் பிணி பீடை துன்பம் வனம் முதலிய இடங்களிற் சஞ்சாரம்.

மீன வியாழன் புத்தி மாதம் 5, நாள் 23, நாழிகை 29, விநாடி 38 க்கு பலன். பொன்னுடையாபரணம், புத்திரலாபம், தயை உடைமை.

கும்பச் சனி புத்தி மாதம் 2, நாள் 9, நாழிகை 23, விநாடி 52 பலன். விரோதம், வழக்கு, சண்டை, பிணி, தனம், புத்தி தேகம் பீடைதுக்கம்.

மகரச் சனி புத்தி மாதம் 2, நாள் 9, நாழிகை 23, விநாடி 52-க்கு பலன். வடக்குத் திக்கிற் விரயாணம், புத்திரபீடை, ராஜகோபம், பகை விரோதமுண்டாம்.

தனுசு வியாழன் புத்தி மாதம் 5, நாள் 23, நாழிகை 29, விநாடி 38-க்கு பலன். தனம், தானியம், செல்வம், புத்திரலாபம், காரியசித்தி, சந்தோஷபலன்.

மேடச் செவ்வாய் புத்தி மாதம் 4, நாள் 1, நாழிகை 26, விநாடி 45-க்கு பலன். சிங்கதியாகத் தத்து, அரவு தீயவர் இடையில் இல்லா திருப்பன் தீங்கில்லை. தெற்குத்திக்கிற் பிரயாணம், பயம், பீடை, மிருக பயம், கண்ணோய், கால்வலி, பொருட்சேதம். வைராக்கியம்.

இடபச் சுக்கிரன் புத்தி மாதம் 9, நாள் 7, நாழிகை 35, விநாடி 25-க்கு பலன். முற்கூறு, களத்திரபிணி, மனத்துன்பம், பிற்கூறு பொருள் வரவு, சந்தோஷம்,

மிதுன புதன் புத்தி மாதம் 5, நாள் 6, நாழிகை 8, விநாடி 40-க்கு பலன். கல்வி, போஜனாதிகளாற் சந்தோஷம், தனதானிலாபம், ஞானம், இராஜபிரியம்.

கார்த்திகை நான்காம்பாதத்திற்கு, மீனவியாழன் தெசை வருஷம் 10, கார்த்திகை நான்காம்பாதம் காலச்சக்கிரவருடம் 10-க்கு அபகாரம் 86-க்குயீவுமாதம் 1, நாள் 11, நாழிகை 51, விநாடி முப்பத்தேழரையோ அரைக்கால், கடகம் உடல் மீனம் உயிர்.

கடகச் சந்திரன் புத்தி வருடம் 2, மாதம் 5, நாள் 9, நாழிகை 4 விநாடி 10 க்கு பலன். சுகபோஜனம், விசேடமானகளத்திரபலன், நல்ல வீடு, பகை நிவாரணம் ஆபரணலாபம்.

சிங்காதித்தன் புத்தி மாதம் 6, நாள் 29, நாழிகை 18, விநாடி 8-க்கு பலன் கலகம், விரோதம், வழக்குவருதல், பூமி, செல்வம், கீர்த்தி, உத்தியோகம, அதிகாரம் இவற்றொன்று விரைவில் அழிதல், சுபபலனிலாது அசுபபலனை நடக்கும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கன்னி புதன் புத்திவருடம் 1. மாதம் 0, நாள் 16, நாழிகை 44, விநாடி 39-க்குபலன். அபிமானம், கீர்த்தி, தனலாபம் இராஜ வெகுமானம் சிவஞானவிசாரம், சுகபோஜனம்,

துலாச் சுக்கிரன் புத்தி வருடம் 1, மாதம், 10, நாள் 8. நாழிகை 46, விநாடி 3 க்கு பலன். தெய்வபக்தி, குருபக்தி, பிராமணபக்தி, களத்திரலாபம், சுகபோஜனம், வெற்றி, தனலாபம்.

விருச்சிகச் செவ்வாய் புத்தி மாதம் 9, நாள் 23, நாழிகை 1. விநாடி 24க்குபலன். சத்துருபயம் புத்திசபலம் பித்தரோகம பந்துஜன சந்தோஷம்.

தனுசு வியாழன் புத்தி வருடம் 1, மாதம் 1. நாள் 28, நாழிகை 36, விநாடி 17-க்குபலன். சுகபோஜனம், இரத்தினாபரணவரவு, பந்துஜனசுகம் சுபசோபன சம்பவம்.

மகரச் சனி புத்தி மாதம் 5, நாள் 17, நாழிகை 26. விநாடி 31-க்கு பலன், ஸ்திரீகலகம், சூது வித்தையினுற் பொருள்வரவு, துஷ்டகீர்த்தி.

கும்பச் சனி புத்தி மாதம் 5, நாள் 17, நாழிகை 26, விநாடி 31-க்கு பலன். ஆசாரம், தேசசஞ்சாரம் களத்திரவிரோதம், பொருளிட்டலினுல் வரும் லாபம். நஷ்டமாதல்.

மீன வியாழன் புத்தி வருடம் 1, மாதம் 1, நாள் 28, நாழிகை 36 விநாடி 17-க்கு பலன். பசுவாகனலாபம். கீர்த்தி, வேத ஒழுங்கான ஆசாரம், தெய்வபக்தி, புண்ணிய தீர்த்த பலன். இராஜசேவை.

இடவோட்டு முதல்நாள்

ரோகணி முதற்பாதத்திற்கு, விருச்சிகச் செவ்வாய் தெசை வருஷம் 7, ரோகணி முதற்பாதம் காலச்சக்கரவருடம் 7 க்கு அபகாரம் 86-க்குயிவு நாள் 29, நாழிகை 18, விநாடி எட்டேகாலே அரைக்கால். தனுசு உடல் கடகம் உயிர்.

தனுசு வியாழன் புத்தி மாதம் 9, நாள் 23, நாழிகை 1, விநாடி 24-க்கு பலன். இராஜ அனுகூலம், முத்துமுதலிய ரத்தினபலன், சிவஞான விருப்பம். கருவிபயம், ரோகம்.

மகரச் சனி புத்தி மாதம் 3, நாள் 27. நாழிகை 12, விநாடி 33-க்கு பலன் கலகம், சத்துருபயம், காவல், ஆபத்து, தேகரோகபகை.

கும்பச் சனி புத்தி மாதம் 3, நாள் 27 நாழிகை 12. விநாடி 33-க்கு பலன் வேசிபோகம் திரவியலாபம் சவுக்கியம் பகைவர் உறவாகுதல் ரோகநிவர்த்தி.

மீன வியாழன் புத்தி மாதம் 9, நாள் 28, நாழிகை 1, விநாடி 24-க்கு பலன், தனலாபம், தெய்வபக்தி, குருபக்தி, வெகுஜனநேசம்.

மேடச் செவ்வாய் புத்தி மாதம் 6, நாள் 25, நாழிகை 6, விநாடி 50-க்கு பலன், ராஜவிரோதம், விஷபயம், துக்கம், ஆயுதபயம், அக்கினிபயம்.

இடபச் சுக்கிரன் புத்தி வருடம் 1, மாதம் 3, நாள் 18. நாழிகை 50, விநாடி 14-க்கு பலன் மந்திரபீதி தேகபீடை கன்னிகாவி திரவியச்சேதம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மிதுன புதன் புத்தி மாதம் 8, நாள் 28, நாழிகை 43, விநாடி 15-க்கு பலன். புத்திக்குறைவு, களவுபயம், கன்றுகாலி திரவியக்குறைவு.

சிங்காதித்தன் புத்தி மாதம் 4, நாள் 26. நாழிகை 30, விநாடி 42-க்கு பலன். மண்டூககதியாகத்தத்து, அரவுதீயோர் இடையில் இல்லா திருப்பின் தீங்கில்லை, வாதபிணி, உஷ்ணசுரம், ஷ்திரீசோபம், பொருள் நட்டம்பிற்கூறு நற்பலனுண்டாம்.

கடகச் சந்திரன் புத்தி வருடம் 1, மாதம் 8, நாள் 15, நாழிகை விநாடி 56-க்கு பலன் யூககெதி, புத்திரபலன், தர்னியபலன், பூமிலாபம், சுகபோஜனம், கிழக்குப் பிரயாணம், சோரபயம்.

உரோகணி இரண்டாம்பாதத்திற்கு, துலாச்சுக்கிர தெசை வருஷம் 16 உரோகணி யிரண்டாம்பாதம், கரலசசக்கரவருடம் 16-க்கு அபகாரம் வருஷம் 83 க்குயீவுமாதம் 2, நாள் 9, நாழிகை 23, விநாடி ஐம்பத் தொண்ணேகாலே மாகாணிக்கு கன்னி உடல் துலாம் உயிர்.

கன்னி புதன் புத்தி வருஷம் 1, மாதம் 8, நாள் 24, நாழிகை 34, விநாடி 42 க்கு பலன், தனதானியவிருத்தி, புத்திரலாபம், ஆரோக்கியம் உற்சாகம்.

இ-ள். மந்தரமலைக்கு நிகரான சுந்தரமுள்ள தனத்தாளே கேட்பாயாக. பாதியாகிய கேதுதிசையில், சோதியாகிய சூரியபுத்தி (126) நாள் (4 மாதம் 6 நாள்) இதில் சுயதேசம் சென்று வருதல், தேகத்தில்சுரம் தலைநோவு, மனதிற் கிலேசங்களுமுண்டாம். எ-று. 387

சாதககேதிலிந்து தன்புத்தியேழுமாதம்
மாதரால்வழக்குச்சண்டை மைந்தர்க்குப்பீடையுண்டாம்
போதவேகன்றுகாலி பொன்னுமாபரண முண்டாம்
சீதளமுகத்தினாளே தீங்குவந்தகன்று போமே.

இ-ள். கண்டவர்விண்டுரைக்கலாகா. முண்டகமுகத்தையுடைய ஒண்டொடியே கேட்பாயாக பாதியாகிய கேதுதிசையில் தேதியாகிய சந்திர புத்தி (210) நாள் (7 மாதம்) இதில் பெண்களால் வழக்குச்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சண்டை, புத்திர பீடையுண்டு, கன்றுகாலி ஆபரணமுண்டாம், நஷ்டம் வந்து விலகுமாம்.

கடையரவதனிற்செவ்வாய் கலந்திடுமாதம்நாலு
இடையுறுமிருபானேழ்நா ளிடர்பயமர்த்தஹானி
படையுறுவழக்குச்சண்டை பலபலவிரோதமாகும்
நடையுறும் பெண்ணாற்கேடு தழல்பயமிகவுண்டாமே.

இ-ள். மூலனாகிய கேதுதிசையில் வேலனாகிய செவ்வாய் புத்தி (147) நாள் (4 மாதம் 27 நாள்) இதில் தடுமாறி விழுதலான பயம், பொருட் சேதம், அடிபிடிகலகம், வழக்கு பற்பல விரோதங்கள், பெண்ணால் கெடுதலும் அக்கினி பயமு முண்டாம். எ-று. 389

கேதுவிலிராகுபுத்தி கேள் பன்னிரண்டுமாதம்
மீதியீரொன்பா நாளும் விஷபயம்வந்துதீரும்
மாதர்கடமக்குப்பீடை மன்னவனசமாவான்
போதவேயர்த்தநாசம் புகழ்நிலைநின்றிடாதே.

இ-ள். துக்கிரனாகிய கேதுதிசையில் உக்கிரனாகிய இராகுபுத்தி (378) நாள் (1 வருடம் 18 நாள்) இதில் விஷத்தாற்பயம், பெண்களுக்குப் பீடை அரசன் கேடு, பொருட்சேதம், புகழ்நிலையாது, (அவமான முண்டாம்.) எ-று.

பரிவுளகேதுவுக்குள் பாங்குள்ளமன்னன் புத்தி
ஒருபதினொன்றுநாட்க ளோராறுமர்த்தலாபம்
மருவியமன்னர்சேர்த்தி விஷபயம்வந்துதீரும்
திருவெனமனையாள்சேர்வள் செல்வமும்மிகுதியாமே.

இ-ள். வெங்கயனாகிய கேதுதிசையில் புங்கயனாகிய குருபுத்தி (236) நாள் (11 மாதம் 6 நாள்) இதில் திரவியலாபம், ராஜசேர்க்கை விஷபயம் வந்து விலகும். மனைவி சேர்க்கை, செல்வமும் மிகவுமுண்டாம். எ-று.

சதியுறுகேதுவுக்குட் சனிபுத்தியானமாதம்
பதின்மூன்றுநாளொன்பானும பலபொருட்சேதமாகும்
அதிதலம்பேதமாகும் அங்கத்திற்சொறிசிரங்கு
மதிமுகத்தரிவைபீடை மனமதுகிலேசமாமே.

இ-ள். பொருதியாகிய கேதுதிசையில் மிகுதியாகிய சனி புத்தி (399) நாள் (1 வருடம் 1 மாதம் 9 நாள்) இதில் பலவகையான பொருட் சேதம, தலபேதம், தேகத்திற் சொறிசிரங்கு, மனைவிபீடை, மனக்கிலேசம் உண்டாம். எ-று. 392

குலமுளகேதிற்புந்தி குறித்திடும்புத்திமாதம்
நலமுறுமத்துமொன்று நாளிருபத்தேழுக்கும்
தலமது விட்டுப் போகுந் தமரினாற் பயமுண்டாகும்
நிலைமையாய்ப் புத்திர சோபம் நினைத்தது முடிந்திடாதே.

இ-ள். நோமனாகிய கேதுதிசையில் சாமனாகிய புதன் புத்தி 357 நாள் 11 மாதம் 27 நாள் தலம் விட்டுப்போதல் சுற்றத்தாரால் பயம், புத்திரரால் சோபம் நினைத்தகாரியம் முடியாது. எ-று. 393

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சுக்கிர திசாபுத்திபலன்

வண்மையாம் புகரில் வெள்ளி மாதங்கள் நாற்பதுக்கும்
உண்மையாம் பணிகண் முத்தும் உயர்குடை புரவியானை
தண்மையாம் புண்மை நீங்கி நாளிலே தனமுஞ்சேரும்
எண்மையங் கிசத்திற் றுக்க மெய்துமை ' பசியிற்றனே.

இ-ள் ஒள்ளியோனுகிய சுக்கிரம்சையில் வெள்ளியோனுகிய சுக்கிர புத்தி 1200 நாள் 3 வருஷம் 4 மாதம் இதில் ஆபரணங்கள் முத்துக்குடை குதிரை யானை பெருந்தகைமை பொருட்சேர்க்கை ஐப்பசி மாதங்களில் களத்திரவழித்துக்கங்க ளுண்டாம் எ-று. 394

சிறந்திடும் புகரிற் பானு திங்களீ ராறுந் துன்பம்
குறைந்திடுந் தனமும் நாளிற் கொடும்பகை யரசராலே
பறந்திடு மனையாள் மக்கள் பலருடன் வழக்கா மென்க
உறைந்திடு தெய்வ முள்ளு முறவது பகைய தாமே.

இ-ள் பிருதியாகிய சுக்கிரதிசையில் பருதியாகிய சூரியபுத்தி 360 நாள் 1 வஷ இதில் துன்பம் தனக்குறைவு அரசராற் கொடுமையானபகை மனையாள் மக்களுடன் வழக்கு தெய்வங்கள் சுற்றத்தார்களுக்கும் பகையு மாம்-

மருவிய புகரிற் சோமன் மாதமோ ரிருப துக்கும்
கருதிய கரும நாளில் வந்துகை கூடு மென்க
அருகுறு மனையா ளாலே யடர்பகை வந்து தீரும்
சருவிய வின்ப மாதர் தம்மொடு மிணக்க மாமே.

இ-ள். நங்கயனுகிய சுக்கிரதிசையில் சங்கயனுகிய சந்திரபுத்தி 600 நாள் 1வஷ 8 மீ" இதில் நினைத்த காரியம் கைகூடும் மனைவியாலே பகை வந்து விலகும் இன்பமும் மாதரிணக்கமு முண்டாம். எ-று. 396

புண்ணிய புகரிற் செவ்வாய் புகல்திங்க ளீரே ழுக்கும்
நண்ணிய பூமி யுண்டாம் நாரியாற் கரும நாசம்
எண்ணிய தேவர் சேவை யிருவராற் பகையுண் டென்னும்
கண்ணினேய் மெற்யிற் குட்டங் கண்ட து தீருந் தானே.

இ-ள். தாமனுகிய சுக்கிர திசையில் பூமனுகிய செவ்வாய் புத்தி 42- நாள் 1 வஷ 2 மீ" இதில் நல்லபூமியுண்டா ல் பெண்களாற் காரியங்கெடுதி ஆலயதெரிசனம் ஸ்திரீபூமான்கள் இருவருக்கும்பகை கண்ணில்நோய் தேகத்திற் குட்டங்கண்டு விலகும் எ று. 397

திருந்திய புகரில் ராகு திங்களோர் முப்பத் தாறும்
பொருந்திய முனியைப் போலே பூமியிற் றவசு செய்வன்
வருத்தியே மைந்த ராலே வருங்கல கங்கண் மெத்த
அருந்திய மருந்தி னலே விஷமதா யலேவன் ருனே.

இ-ள். காந்தனுகிய சுக்கிரதிசையில் கூந்சனுகிய இராகு புத்தி 1080 நாள் 3 வருஷம் இதில் முனியைப்போல் தனிமையாய்த் தபசுசெய்தல் கனிவாக இருந்த மைந்தரால் கலகங்களுண்டாம் இனிவாயருந்திய மருந்து அனியாய விஷமதாய் அலேபவனுமாம். எ-று. 398

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

முன்புறு புகரின் மன்னன் முப்பத்தி ரண்டு மாதம்
இன்புறு தானி யங்க ளெய்தூமே யர்த்த லாபம்
அன்புறு மறையோ ராலே அதிசய மிகவு முண்டாம்
மன்புகழ் தோணி விட்டத் திசையினில் வருத்த மாமே.

இ-ள். உரிச்சிகனுகிய சுக்கிரதிசையில் புரிச்சிகனுகிய வியாழபுத்தி 960 நாள் 2 வருஷம் 8 மீ' இதில் தானியங் கிடைக்கும் பொருள் லாபம் மறையவர்களால் விசேடம் ரேவதி அவிட்டதிசையில் சங்கடமாம். எ று.

சாலவே வெள்ளி தன்னிற் சனிமா தம் முப்பத் தெட்டும்
மூலமாம் நோயி னுலே முயங்கியே மீளுங் கைகால்
வேலெனும் விழியாய் துன்ப மெய்யினில் ரோக முண்டு
ஆலமாம விஷம்போ லன்ன மரோசிக மாகுந் தானே.

இ-ள். சுந்தரியாகிய சுக்கிரதிசையில் மந்தரியாகிய சனி புத்தி 1140 நாள் 3-வருடம் 2-மாதம் இதில் மூல நோய் கைகால் முடக்கப்பட்டு மீளுதல் துன்பங்கள் தேகத்தில் ரோகம் அன்னமரோசிப்பும் உண்டாம். எ-று. 400

வெள்ளியிற் புந்தி மாதம் விரும்புமுப் பத்து நான்கும்
தெள்ளிய மனையாள் மக்கள் சீருடன் பொருளுண் டாகும்
வள்ளிய கல்வி ஞானர் வாக்கினுற் பாட லாகும
நள்ளிய சிவப்ப னுலே நன்மைகள் பலவுண் டாமே.

இ-ள் சுக்கிரதிசையில் சக்கிரனுகியபுதன் புத்தி 1020 நாள் 2வருடம் 10 மாதம் இதில் மனைவி மக்கள் செல்வம் பொருள் இவைகளுண்டாம் கல்வி ஞானம் சங்கீதம் பாடல் சிவப்புநிற முடையவர்களால் பல நன்மைக ளுண்டாகும். எ-று. 401

இட்டமாம் வெள்ளி தன்னிற் கேதுவீ ரேழு மாதம்
துட்டமா மிருகத் தாலே துன்பமு மிகவுண் டாகும்
அட்டமா மனையா டன்னில் அனுபோகத் தாலே நோயாம்
திட்டமாய் விஷந்தான் வீட்டிற் றீண்டியோமீளுந்தானே.

இ-ள். சுக்கனுகிய சுக்கிரதிசையில், துக்கனுகிய கேது புத்தி 420 நாள் 1-வருஷம் 2 மீ' இதில் துட்டமிருகத்தால் துன்பம், மனையாளனு போகத்தால் தணியாதநோயாம், வீட்டில் விஷந்தீண்டி மீளுதலுமுண் டாம். எ-று. 402

புத்தியின் பலன்க டம்மை மப் பொதுமையா யுரைத்தா ரேனும்
சித்தமாய்க் கோள்கள் நின்ற திரிகோணங் கேந்திர முச்சம்
தத்திய வியமா றெட்டுப் பகைநீசந் தான்சே ரம்சம்
ஒத்தநல் லாதி பத்தியம் வர்க்கமோ டவஸ்தை வக்கிரம்.

இ-ள். புத்தியின் விவரங்களைப் பிரித்துப் பொதுப்பலனுகச் சொன் னுர். ஆயினும், கிரகங்கள் நின்ற 1, 5, 9, ஆனதிரிகோணம், 1, 4, 7, 10, ஆனகேந்திரம், 2, 5, 8, 11, பணபரம், 3, 6, 9, 12, ஆபோக்கிலீயம் உச்சம். (அதியுச்சம்) 6, 8, 12, ஆமிடங்கள், மறைவு, பகை, க்ஷேத்திரம், நீசம், (அதிநீசம்) சேர்ந்த அம்சங்கள் (நவாங்கிஷம், ஓராங்கிஷம், திரேக்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கானம், சத்தமாங்கிஷம், தசாங்கிஷம், சோடசாங்கிஷம், சஷ்டியாங்கிஷம்) ஆதிபத்தியம், வர்க்கோத்தமங்கள், அவஸ்தை வக்கிரம். எ-று. 403

பாவத்திற்கண்டயோகம் அவயோகந்தன்னைப்பார்த்துப்
பூவருமானே நல்ல பலன்களைப்புகலவேண்டும்
தாவறுசித்திர முட்சித் திரத்திற்கும்புத்திபோல
ஓவறப்பலன்கள்சொல்வ ருயர்மதிவல்லோர்தாமே.

இ-ள். தேவரும், மற்றமூவரும் கற்றயாவருங் கண்டு மயங்கும்பூவருமானேகேட்பாயாக? பாவத்திற்கண்டயோகம், அவயோகம் இவைகளைப் பார்த்துபலன்சொல்லுமிடத்து, சித்திரம், உட்சித்திரம், புத்திபிரித்தது போற்பிரிந்து, குற்றமறப் பலன்களை உயர்ந்த மதியூகிகள் கவனித்துச் சொல்லுவார்கள். எ-று. 404

கோசாரபலன்

ஓதியகோ சரந்திசைசக் கரங்க டம்மில்
உதித்தநவக் கிரகத்தா லுண்டாகும் பலன்கள்
ஆதவன்செவ் வாயிருவர்க் காதியிலே பலன்கள்
அம்புலிக்கும் புதனுக்கும் அனுதினமும் பலனே
பிதகன்சுக் கிரன் பலன்கண் மத்தியத்திற் றருவர்
பெருகுசனி பாம்பிரண்டும் பிற்பலனே தருவர்
சூதுமதக் கரிக்கோடைக் கபலமா முகையைச்
சுந்தரப்பொற் கிரியைவென்ற துணைமுலைமா மயிலே.

இ-ள். சொக்கட்டான் காயும், மதகரிக்கொம்பும், கமலமலர் முகையும், பொற்கிரியையும் வென்ற தனத்தையுடைய பெண்ணே? கேட்பாயாக கோசரதிசைச் சக்கரத்தில் இருக்கும் நவக்கிரகங்களின் பலன்களைச் சொல்லுமிடத்து சூரியன் செவ்வாய் ஆதியிலும் சந்திரன், புதன், எப்போதும் குரு, சுக்கிரன் மத்தியிலும், சனி ராகு கேது கடைசியிலும் பலன் தருவாராம்.

கோசாரவேதை

இரவியைந்தின் மதியெட்டினேழிற்சேய்
பரவுமூன்றிற்பொன் பார்க்கவனாறிலும்
விரவுபுந்திநான் கொன்பானில்ராகுசுன்
உரவுசென்ம முறிற்கடுங்கேடுறும்.

இ-ள். சந்திர லக்கினத்திற்குச் சூரியன் ஐந்திலும் சந்திரனெட்டிலும், செவ்வாய் ஏழிலும் குரு மூன்றிலும் சுக்கிரன் ஆறிலும் புதன் நாலிலும் ராகு ஒன்பதிலும் சனி ஜென்மத்திலுமிருக்கின் கொடுமையான துன்பங்களுண்டாம்

கோசார நற்பலஸ்தானம்

கதிர்பதினொன்றுமூன்று கருதுபத்தாறில்நல்லன்
மதியொன்றுமூன்றோறு மன்னுமேழ்பதுபன்னொன்றும்
பதிபுகழ்சேய்சுன்ராகு பதினொன்றுமூன்ருருகும்
மதிமகற்கிரண்டோராறு மன்னெட்டுப்பதுபன்னொன்றே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். அந்தரியென்னும் சந்திர லக்கினத்திற்கு முந்தரியாகிய சூரியன் 3, 6, 10, 11-லும், சந்திரன் 1, 3, 6, 7, 10, 11-லும், செவ்வாய், சனி, ராகு இவர்கள், 3, 6, 11-லும், புதன் 2, 6, 8, 10, 11-லும், இருந்தால் நன்மையான பலனும். எ-று. 407

பொன்னவன் பதினொன் றொன்பான் பொருந்துமே லைந்தி ரண்டாம், துன்னுசுக் கிரற்கொன் றுதி யைந்துமோ ரெட்டொன பானும், பன்னொன்றீ ராறு தன்னிற் பற்றிடில் நல்ல ராவர், அன் னமே வேதைக் கோட்க ளுநிற்றீய ராவ ரென்னே.

இ-ள். இந்தனாகிய சந்திரலக்கினத்திற்கு, புந்தனாகிய குரு 2. 5. 7 9 11-லும், சுக்கிரன் 1. 5, 8, 9, 11, 12-லும், இருந்தால் நல்ல பலன்களைக் கொடுப்பவர்களாம், வேதைக்கோட்கள் நின்றால் இவர்களுந் தீய பலன்களைக்கொடுப்பவர்களாம். எ-று. 408

வேதை ஸ்தானம்

சூரியற்குரைத்தவீட்டிற் கேழினிற்கோள் நின்றாலும்
கூரியமதிக்கைந்தொன்பான் குலவுமீராறிரண்டும்
ஏர்பெறுமொருநான்கெட்டு மிராகுசன்சேய்தமக்குக்
கார்பெறுங்குழலாயைந்தி ராறொன்பானெனுங்கணக்கும்.

இ-ள், முன் கோசாரத்திற் சொன்ன இடங்களில் கிரகங்கள் நிற்க, சூரியனுக்கு 7-லும், சந்திரனுக்கு 2, 4, 5, 8, 9, 12-லும், ராகு சனி செவ்வாய்க்கு 5, 9. 12-லும், எ-று. 408

புந்திக்கைந்தொன்பானொன்றெட் டீராறிற்புனிதப்பொன்னுக்
கந்தமாமெட்டுப்பத்து மூன்றுநான்கீராறும்
சந்தமார்புகருக்கெட்டே ழொன்றுபத்தொன்பதைந்தும்
உந்துபன்னொன்றுமூன்றோ ராறுமுன்முறைக்குவேதை.

இ-ள். புகனுக்கு 1, 5, 8, 9, 12-லும், குருவுக்கு 3, 4, 8, 10, 12 லும், சுக்கிரனுக்கு 1, 3, 5, 6, 7, 8, 9, 10, 11-லும், கிரகங்கள், நிற்கில் வேதையாம். எ-று. 409

மண்டலபலன்

செங்கை முப்பூரம் மூவுத்திரங் கங்குல்பார்
சேர்ந்திடில் நர மண்டலஞ் சொரூபமாம்
பொங்கு மான்றலை பூகம்வி ளக்கோணம்
புனர்தம் மாதோணி தேளஸ்தம் தேவாரம்
அங்கி விட்டம் மகம்விசா கஞ்செக்கு
அரவு மூலம் பயறொடு கேட்டையும்
பொங்கு மரக்கர்கள் மண்டல மாமெனப்
புனித வீமேச நாத ருரைத்ததே.

தேவகணம்	மனுஷகணம்	இராட்சதகணம்.
அசுவினி	பரணி	கார்த்திகை
மிருகசீரிடம்	ரோகணி	ஆயிலியம்
புனர்பூசம்	திருவாதிரை	மகம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பூசம்	பூரம்	சித்திரை
அஸ்தம்	உத்திரம்	விசாகம்
சுவாதி	பூராடம்	கேட்டை
அனுஷம்	உத்திராடம்	மூலம்
திருவோணம்	பூரட்டாதி	அவிட்டம்
ரேவதி	உத்திரட்டாதி	சதயம்

(கணத்தின் நட்சத்திரங்களே மண்டலமென்றுஞ் சொல்லுவர். எ-று. 410

(கணமென்பதும், மண்டலமென்பதும் ஒன்றுதான்.)

உத்த மஞ்சொல்லு மோங்குந்தே வர்கணம்
ஓதும வித்தை பிரபல வாகனம்
வெத்தி யாம்பொருள் வேந்தர் விரும்பிடும்
மேரை பூமியில் மேவும் வெகுதனம்
பத்தியாக நற் புதல்வரைத் தந்திடும்
பாரில் பாக்கியம் பந்து விரும்பிடும்
சத்தி பாகர்வீ மேசுர ராகிய
சங்கரன் உரை செய்த பலன்களே.

இ-ள். அத்திமுகவனை நத்திப்பயின்ற சக்திபாகராகிய வித்தகச்சங்கரன் திருவருளை முன்னிட்டு தேவமண்டலத்தின் பலனைக்கூறுவோம் வித்தைவிவேகம் புத்தி, சத்தி, பிரபலவாகனங்கள், பூமி, பொருள், பூமன்னர் சம்மானம், வெகுதனம் பந்துஜனம் சொந்தம் பாராட்டுதல், நல்ல புத்திரரைப்பெற்று இல்லறத்தில் வாழ்ந்து வருவான். எ-று. 411

நரமண்டலபலன்

பலன் சொல்லில்நர மண்டலத் தான்பலன்
பணிகன் பூஷணம் பாக்கியஞ் சேர்ந்திடும்
தலங்கள் பெற்றிடுந் தர்மபூ சாபலன்
தானங்கள் அன்ன தானமு மோங்கிடும்
புலன்கள் பெற்றிடும் பூமி பிமி பிரபல்லியம்
பூமகள் சேர்வ ளாயுசு விர்த்தியாம்
நலங்களைச் செய்யும் நாற்றிசையின் பலன்
நாடும் வீமேச நாத ரமைத்ததே.

இ-ள். நாற்றிசையும் போற்றும் ஏற்றமுடைய நரமண்டலத்தின் பலன்களைத்திரமாக நவிலுவோம் பணிகள் பூஷணம் பாக்கியம் வாக்கியம் சிலாக்கியம், யோக்கியம், ஸ்தலங்கள் அன்னதானம், சொர்னதானம், பூதானம், கோதனம், முதலிய தர்மபூஜாபலன், பூமிபிரபல்லியம், ஆயுள் விர்த்தியும், மலைமகளும் கலைமகளும்வாழத்தும்படியான திருமகள்கடாக்ஷமும் உண்டாம்.

அரக்கமண்டலபலன்

அரக்கர் மண்டல மான திசைகளில்
அந்திரக் காலச் சக்கரம் வந்திடில்
பெருக்கும் புத்திரன் பெண்ணுடன் நட்டமாம்
பித்த ரோகமும் பேய்பிடித் தாட்டிடும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மரிக்கும் மாதர்கண் மக்கள் பிதாவுடன்
மாரகப் பிணி கோரம தாக்கிடும்
உருக்க வீமேசர் தாளை வணங்கியே
ஓங்கு மிப்படி யுற்ற பலன்சொல்லே.

இ-ள். பெருக்கமுடைய திருக்கையுடைய அரக்கமண்டலத்தின் பலனைப் பேசுவோமாக, அவ்வரக்க மண்டலமான திசாபுத்தி அந்தரகாலங்களில் காலச்சக்கரம் வந்திடில். ஜாதகன் குடும்பத்தில் பித்தரோகம் பிணி, சோரம் பேய் பிடித்தாட்டல் புத்திரன் பெண் மாதுர் பிதா மனைவி மக்கள் முதலியவர்களுக்கு மாரகம் உண்டாகுமென்று வீமேசர் தாளைப்பணிந்து துணிந்து அவனருளைக்கொண்டு சொல்லுவாயாக. எ-று. 413

முதலாம்பாவகம்

சம்பூர்ணம்

——

இரண்டாம் பாவகம்

நேத்திரபலன்

எழிற்கண்ணு திபன்றிக் கோளா யெட்டினிற் சனியோ டிந்தும்
பழிகொளா ருமி டத்திற் பானுவேற் பூனைக் கண்ணும
விழிகள்கோன் பாவ னுய்லக்கி னுதியை மேவி யாறெட்
டொழிவியத் துறிலோ கர்ப்பத் துறுங்குரு டாகத் தானே.

இ ள். காத்திரங்களிற் சிறந்த நேத்திரஸ்தானுதிபதி பாவராய், எட்டாமிடத்தில், திட்டமாய்ச் சனியுஞ் சந்திரனும் சேர்ந்திருந்து, ஆருமிடத்திற் சூரியனுமிருந்தால், பூனைக்கண்ணுகும், நேத்திராதிபதி பாவராய், லக்கினுதிபதியுடன் சேர்ந்து, ஆறு எட்டு பன்னிரண்டா மிடங்களில் இருக்கப் பிறவிக்குருடா மென்க. எ று. 414

சுக்கிர னேத்தி ராதி பதியெனத் தோன்றி யெட்டில்
நிற்கவோ ராறில் வெய்யோன் நிற்கிற்கண் ணேய்பிற் காலம்
தக்கவே றரிமே ஷத்திற் சனிகுசன் ருனுற் ருலும்
மிக்குதா மதரத் தூன மெழிற்கொடி சுற்றித் தோன்றும்.

இ-ள். பங்கமில்லாத சுங்கான பாரிலுள்ளோருக்கு நேத்திராதிபதியாயிருந்து, எட்டாமிடத்திற்போயிருக்க ஆருமிடத்தில், ஆதவனிருக்கப் பிற்காலத்தில், சற்று கண்ணில் நோவுண்டாகும் ரிஷபம் சிம்மம் மேடம் இவ்விடங்களில் சனி செவ்வாய் நின்ருல், உதட்டிற் குற்றமுண்டாம் குழந்தையும் கொடி சுற்றிப் பிறக்கும். எ று. 415

லக்கினத் ததிப னேடு மிரண்டிடத் ததிபன் சுங்கண்
டீக்கெனக் கூட மூன்றிற் செங்கதிர் நிற்கு மாயின்
ஒக்கவே கண்ணில் லாம லுதிப்பனு தித்த னல்லால்
மைக்கணுய் மதிய முற்ருன் மாலைக்கண் ணுகு மென்றே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். லக்கினத்ததிபனோடு, இரண்டாமிடத்ததிபனும், சுக்கிரனும் கூட மூன்றாமிடத்தில். மூளரி நண்பனிருந்தால், கண்ணில்லாமற்பிறப்பான். அன்றியும், முயலின் கூடு மூன்றாமிடத்தில். நிற்க மாலைக்கண்ணனாவானென்க. எ-று. 416

குறைவினைத் திராதி சுங்கன் லக்கினத் தோனுங்கூடி
நிறையமூன் றாமிடத்தி னிற்கினேத் திரநோ யாகும்
நறைகுழ லக்கினாதி யிரண்டிடத் ததிபன் வெள்ளி
அறையவோ ரிடத்தினிற்கி லந்தக னவன் கண்டீர்.

இ-ள். லக்கி னாதிபதியோடு சுக்கிரனும், நேத்திராதிபதியுங் கூடி மூன்றாமிடத்தில் நின்றால், கண்ணோயுண்டாகும், மேற்சொன்ன மூவரும் வேறிடங்களில் நின்றால் குருடனாமென்க. எ-று. 417

வேறு.

நேத்திரத் தானத்தாதி சுங்க னாகி
நிறைசன்மா தியைக்கூடி மூன்றில் நின்றால்
நேத்திரரோ கம்மந்த நேத்தி ராதி
நிலவாகிப் புகருடனே யிரண்டி னின்றால்
நேத்திரந்தா னிசிகடொறு மொளிகொ டாது
நின்றகட கந்தனிலுற் பவித்த போதும்
நேத்திரந்தான் மதிசுங்கன் கூடி நின்றால்
நிகழ்பிறவிக் குருடனுமா நிற்பன் றானே.

இ-ள். நேத்தி ராதிபதியே சுக்கிரனாகி, லக்கினாதிபனோடு சேர்ந்து, பாத்திர பண்டமாகிய மூன்றாமிடத்தில் நின்றால் நேத்திரரோகமாம். அந்த நேத்திராதிபதி, நிசாபதியாகி, சுக்கிரனோடு கூடியிருந்தால், இரவிற்கண் தெரியாது, கற்கடலக்கினமாக கண்ணாதிபன், வெண்கதிரோன் வெள்ளியுடன் கூடி நின்றால் பிறவிக் குருடனவன். எ-று 418

சிங்கமே நேத்திரத்தா னந்தா னாகிச்
செங்கதிர்சுங் கன் கூடிச் சங்கத் தேற
அங்கவரோ டெந்தத்தா னாதிபதி யேனும்
அவரவர்தங் காரகரா யினிம்வந்துற் றாலும்
தங்கியபேர்க் குரியர்தமக் கெய்துநேத் திரநோய்
தனதுபதி யாகிலுச்சந் தானாகி னன்மை
துங்கமதி வியத்துறிலோ விழியொன்றே யூனம்
சூரியனுங் கூடில்விழி யோவிரண்டும் போமே.

இ-ள். சிங்கவிராசி நேத்திரஸ்தானமாகி அதிற்செங்கதிர்ரோன் சுங்கனுமே கூடிநிற்க அவர்களோடு எந்தத்தானாதிபதியேனு எந்தக்காரர்களேனும் வந்து சேர்ந்தால் சேர்ந்த ஸ்தானத்தாருக்கும், காரகர்களுக்கும், நேத்திரநோயுண்டாகும். அப்பதி, ஆட்சி உச்சந்தானாகில், நன்மையேயாம் பூரணச்சந்திரன் புண்ணிய தியாகஸ்தானமாகிய பன்னிரண்டாமிடத்தில் நின்றால் ஒருகண்ணூனமாம் அச்சந்திரனோடு பானுவுங் கூடிப் பனிரண்டாமிடத்திலிருந்தால் இரண்டு கண்களுந் தெரியாத குருடனும். எ-று. 419

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வேறு.

சோதி லங்கினத் திற்குசன் சூழ்ந்திட
ஓது மட்டமத் தோன்கேந்தி ரத்துறப்
போத மட்டமத் திற்பாவர் போந்திட
ஏத நேத்திர நோயும்வந் தெய்துமே.

இ-ள். லக்கினத்தில் வக்கிரனாகிய செவ்வாயிருக்க, அட்டமத்தோன் கேந்திரத்திற்கோ, அவ்வட்டமத்திற் பாவக்கிரகங்களிருக்க, நேத்திரநோயுடையவனும். எ-று. 420

வேறு.

சேருஞ் சுங்கன் சன்மாதி திங்கள் கூடி யாறெட்டில்
நேரும் வியத்திற் பலமற்றே நிற்கின் மாலைக் கண்ணாகும்
ஏருங் கதிரோன் சன்மாதி யிரண்டாமாதி வெள்ளி யொன்றாய்த்
தீரும் வியமா றெ டிலுறச் செப்பும் பிறவிக் குருடனுமாம்.

இ-ள். சுக்கிரன், லக்கினாதிபதி, சோமனாகிய மூவருங்கூடி, மறைவு ஸ்தானமாகிய, ஆறு எட்டு பன்னிரண்டாமிடத்திலிருக்க, மாலைக்கண்ணுடையவனாவன். ஒள்ளியோன் எல்லியோன் உற்ற சன்மாதி நேத்திராதிபதியாகிய இந்நால்வருங்கூடி, மறைவு ஸ்தானமாகிய, ஆறு எட்டு பன்னிரண்டாமிடங்களில் நின்றால் பிறவிக்குருடனென்று சொல்ல வேண்டும்.

ஆமே யிரவி சுக்கிரன்ரெண் டாதி சென்மத் தாதியிவர்
தாமேகூடி யவரவர்க டானந் தனக்கா றெட்டு வியத்
தாமே யிருக்கி லவரவர்க டிட்டிக் கூனஞ் சார்ந்திடுமே
நாமே சொல்வம் பலபார்வை நயனபலன்கண் டெனுஞ் சொல்லாய்.

இ-ள். கண்டெனுஞ் சொல்லை விண்டுரைக்கும் பெண்ணே? அண்டயோனியாகிய சூரியன், மப வடுககுருத்தாகிய சுக்கிரன், தணடமிழ்க்குரிய, இரணடாமிடத்தோன சென்மாதிபதியாகிய இவர்கள்கூடி, அவரவர்கள் ஸ்தானத்திற்கு, ஆறு, எட்டு பன்னிரண்டில் இருப்பார்களாகில் அந்தந்தஸ்தானங்களுக் குடையவர்களின் கணணுக்குக் குற்றமாம் என்று சொல்லவேண்டும. எ-று. 422

சொல்லும் பலனே த் திரத்தானஞ் சூழ்ந்தா ரதிப ராற்பலன்கள்
எல்லோன் செவ்வாய் மேனோக்க விந்துங் குருவுஞ் சமபார்வை
வெல்லும புதற்தம வள்ளக் கும் விழிபக் கதநீத நோக்கியிடும்
நல்ல ராகு சனிதனககே நயனங் கீழ்நோக் காயிடுமே.

இ-ள். நேத்திர ஸ்தானத்தி லிருக்கிற அதிபர்களாற்பலன் சொல்லுமிடத்து ஷ ஸ்தானத்தில்சூரியனும், செவ்வாயும் நின்றால், மேல்பார்வை, சந்திரனும் குருவும் நின்றால், சமபார்வை, புதனும், சுக்கிரனும் நின்றால், பககப்பார்வை சனியும் ராகுவும் நின்றால், கீழ்ப்பார்வை யாகுமென்பதாம்.

இடுஞ்சென் மாதி தனைச்சனிகண் டிடக்கண் ணேயா மிரண்டாதி
உடன்சூ ரியனுங் கூடிநிற்க மற்றுங்குளிக னுடன் சனிதான்
அடைந்நீத நோக்கக் கண்ணேயா மவ்வீ டேசல ராசியெனில்
தொடர்நதீத வாணில் நீர்பரவத் துளிக்கு மவன்றன் விழிதனிலே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். லக்கினாதிபதியைச் சனிபார்த்தால், கண்ணோயுடையவனும், இரண்டாமிடத்தானோடு சூரியன் நிற்கிலும் குளிகனுடன் சனி சேர்ந்து. பார்த்தாலுங் கண்நோயாம். அந்த வீடு சலராசியாகி ஜலக்கிரகங்கள் காணில், நீர்பரவித் ததும்பியிருக்கின்ற கண்களை யுடையவனும், எ-று. 424

சோதி ரவியும் பாவருடன் சூழ்ந்து பலமற் றேவியத்தின்
மீதி லிருக்க வலக்கண்போம் விரவுஞ் செவ்வாய் பலனற்றே
ஏத வியத்தி லுறைந்திடிலோ விடக்கண் ணூன மிவரிருவர்
தீதாம் வியத்திற் கூடிநிற்கத் தெரியா திரண்டு திட்டியுமே.

இ-ள். பானுபாவருடன் கூடி, பலமில்லாமற் பனிரண்டாமிடத்தி லிருக்க, வலக்கண் குருடாம். பௌமன் பலமற்று பாவருடன் கூடிப் பனிரண்டிலிருக்க, இடக்கண் குருடாம், இவ்விருவரும் சேர்ந்து, பனிரண்டா மிடத்திலிருக்க, இரண்டு கண்ணுந் தெரியாதவனும். எ-று. 425

திட்ட முடனே சனிசெவ்வாய் சேர்ந்திரண்டிற் பனிரண்டில்
கிட்டி யிருக்கில் விழிக்கூனங் கிரண ரவிசந் திரன் வியத்தில்
ஒட்டி யிருக்கில் விழிநோயு முற்றந் தானுப் பிறக்கும்வகை
துட்ட ரவிசேய் மதியரசன் சுங்க னவ ரெங்குறினும்.

இ-ள். காரி, செவ்வாய், கலந்து இரண்டு பன்னிரண்டாமிடங்களில் நின்றால், கண்ணுக்குக்குற்றமாம். பதங்கனும், டனிக்கதிரும், பன்னிரண் டாமிடத்தில் நின்றால், கண்ணோயுடையவனும். பிங்கலன், மங்கலன், திங்கள், புங்கவன், சுங்கனுதிய ஐவரும், எங்கேயிருந்தாலும், அல்லது இரண்டு பன்னிரண்டாமிடத்திருந்தாலும், குருடனாய்ப் பிறப்பான். எ-று. 426

எங்கோ னிரவி வெள்ளிபல னில்லா திருக்க வவருடனே
பொங்குஞ் சன்மா திபன்கூடிற் பொருந்திற் பிறவி யந்தகனும்
தங்கு மைந்தா மாருதி தானுஞ் சன்மந் தனிலிருக்கச்
சுங்க னிரண்டா தியைக்கூடிற் சொல்கண் பிடுங்கப் படுங்கண்டீர்.

இ-ள். பகலும், புகரும் பலமற்றிருக்க, அவர்களோடு சென்மதிபன் கூடியிருக்க, அல்லது பார்க்கப்பிறந்தவன் பிறவிக்குருடனும். ஐந்து ஆறுக் குடையவர்கள், ஜென்மத்திலிருந்து சுக்கிரன் இரண்டாமிடத் தோனுடன் கூடிடில் கண்பிடுங்கப்படுவனென்று சொல்லவேண்டும். எ-று 427

காணும்நேத்திரரோகமினிக் கதிர்சேர்மதியுங்காரியிவர்
வேணுமிரண்டிலாறெட்டில் வியத்தில்நிற்கரோகமிகத்
தோணுமிரண்டிற்பன்னிரண்டிற் சோமன் ரிதிகூடினும்
பூணுமெட்டிலிரண்டதனிற் பொல்லாரிருக்கக் கண்ணோயே.

இ-ள். சாயாபதி நிசாபதி சனி ஆகிய இவர்கள் இரண்டு ஆறு, எட்டு, பன்னிரண்டில், நிற்கினும் இரவிமதி கூடி இரண்டு பன்னிரண்டா மிடத்தில் நிற்கினும், இரண்டு எட்டாமிடத்தில் பாவர்கள் பலத்துநிற் கினும், கண்ணோயுடையவனாவன். எ-று. 428

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வே று.

வேல்விழிமாதே விளம்புவலக்கண்
சாலவிரண்ட தாமிடம்கொண்டும்
ஏதுமிடக்கண் ணிராருலும்
சீலசுபாசு பங்களைத்தேர்ந்தே.

இ-ள். அபிலேயும், கயலேயும் போன்ற கண்ணுய்! வலது கண்ணின் பலன் இரண்டாமிடத்தாலும், இடக்கண்ணின்பலன் பன்னிரண்டாமிடத்தாலும், சுபாசுபங்களைத்தெரிந்து சொல்லவேண்டும். எ-று. 429

வாக்கின் பலன்

வே று.

குடும்பத்தானதியோடு குலவியபுதனுங்கூடி
உடன் படவாருந்தானத் தூற்றிடிலூமையாகும்
இடும்புறுமூன்றுமாதி லக்கினததிபன்ருனும
திடம்பெறககூடிலூமை யாகியேதிரிவன்ருனே.

இ-ள். வாக்காதிபனேடு யோக்கிய நிபுணன் ஒன்ருய்க்கூடி ஊக்கமாய் ஆருமிடத்திலிருக்க ஊமையாகும். மூன்ருேனும், இலக்கினத்தோனும் கூடிநிற்கில், ஊமையாய்த்திரிபவனும். எ-று. 430

வே று.

வாக்குத்தா னதியொடு புதனுங்கூடி
வருஞ்சென்ம மூன்ருறின் மருவிலூமை
ஆக்குமவ ருடனெந்தத் தானத்தாதி
யவரவர்தங் காரகரா கிலும்வந்துற்ருல்
ஊக்கமுற வவரவரு மூமையாவ
ருற்றவர்தம் பதியாகி லுச்சமாகில்
வரக்கூன மறமொழிவன் கண்டீர்கண்டும்
வனமுறு முக் கனியுமென வழுத்துமாதே.

இ-ள். வனமுறும் வாழை பலா மா ஆகிய முக்கனியுங் கற்கண்டுங் கசிந்தொழுகும் ரசமே சொற்கொண்டஅற்புதப்பெண்ணே, விற்பன விவேகமுள்ள கண்ணே கேட்பாயாக குடும்பாதிபதி,திடம்பெறும் தேர்ப்பாகனேடுசேர்ந்து கடன்பெறும் மூன்ருறு அல்லது ஜென்மத்திலிருக்கப் பிறந்தவன் ஊமையாவன், அவர்களுடன், எந்தத்தானத்ததிபர்களாவது, காரகர்களாவது சேர்ந்தால், அநதந்தத்தானதிபர்கள், ஊமையாவார்கள். இவ்விடம் ஆட்சி உச்சமாகில், குற்றமில்லாத சொற்றிறமையுடையவனுய்ப் பேசுவான். எ று. 431

வே று

மாதுலமன்னனேடு வாக்குத்தானதி கூடிக்
கோதுறுவியமாறெட்டிற் கூடினுலூமையாவன்
ஓதிய தந்தைதாயமற் ருேர் தானந்தனக்கவ்வாறு
நீதியாயிருக்கிலூமை நிச்சயமென்றுகூறே.

இ-ள். மாதுலமன்னனுகிய புதபகவானேடு வாக்குஸ்தானதிபதி கூடி ஆறு எட்டு பன்னிரண்டில் இருந்தால் ஊமையாவான் தாய் தந்தை சேய்முதலிய ஸ்தானங்களுக்கும், அப்படியே கூறுக. எ-று 432

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கூறியலக்கினுதிசுக்கிரன் கூடியாறெட்
டேறியவியத்தில்நிற்க வூமையாமிரண்டாமாதி
பேறுடனவரைக்கூடி லூமையாம்பின் மற்றோரும்
சிறிடாதவரைக்கூடி லூமையாய்த்திரிவன்றுனே.

இ - ள். சுக்கிரனோடு லக்கினாதிபன்கூடி மறைவுஸ்தானமாகிய ஆறு எட்டு. பன்னிரண்டில் இருக்க, ஊமையாம். இதுவுமின்றி யிரண்டாமிடத்தோன் சேர்ந்திருந்தாலும் ஊமையாம். மற்றக்கிரகங்கள் மறைக்கோளுடன் கூடினாலும் மூங்கையாகத்திரிவன். எ - று. 433

வித்தியாபலன்

வேறு

சனியலாதறுவர் தானுமேகூடிப்
புனிதராயிருக்கப் புலவனுய்க்கவிதை
இனிதெனவுரைத்தே யெண்டிசையெங்கும்
மனுவுடனீதி மன்னனுகுவனே.

இ - ள். ஆயுட் காரணாகிய சனியல்லாது மற்ற ஆறுகிரகங்கள் பூரணமாய் ஒன்றுகூடி யிரண்டிற் சுகமாயிருக்கில், புலவனும், கவிதைசொல்பவனும், கீர்த்தியுடையவனும், நீதியுடைய இராஜனுமாவன். எ - று. 434

வேறு

பொன்புத னிரண்டின் கோவும் பொருந்திய கேந்தி ரத்தில்
பின்றிரி கோண மேறிற் பெற்றிடும் வித்தை லாபம்
இன்பமா யிவரெட் டாறி லிருந்திடி விலை வித்தை
அன்புசேர் கணக்க னுச்ச மா கிநல் வித்தை கூறே.

இ - ள். காண்டற்கரிய, ஆண்டளப்பானும், அனுவழியும், மீண்டும், இரண்டாமிடத்தோனாகிய இவர்கள் கூடி திரிகோணநேத்திரங்களில் நின்றால் வித்தைலாபமுள்ளவனும், ஆறு எட்டில் நின்றால், வித்தையில்லாதவனும், புதன் உச்சமாகில் நல்ல வித்தை யுடையவனென்று சொல்லவேண்டும்.

கூறிய புதனு மேழா மதிபனுங் குருவுங் கூடிப்
பேறுடன் றிரிகோ ணங்கள் கேந்திரம் பிடித்திட் டாலும்
வீறிய தனது வீட்டும் விரும்பிய விரண்டாம் வீட்டும
சீரிடா திருந்த போது திடவித்து வானு மாமே.

இ - ள். சொல்லுக்கு, வல்லமைபெற்ற நல்ல நாயனாகிய தூதுவனும், ஏழாமிடத்தோனும். குருவுங்கூடி திரிகோணநேத்திரங்களில் நிற்கிலும், லக்கினம், இரண்டாமிடம், இதில் நிற்கிலும். பலம்பெற்ற வித்துவானும்.

ஆனகேந் திரத்திற் புந்தி யிருக்கரெண் டாம்வீட் டாதி
தானுமே யுச்ச மாகத் தகும்புக ருபய மேவ
ஊனமின் மூன்றில் நல்லோ ருறவெள்ளி யுச்ச மாக
மானிலத் துதித்த காளை சோதிடம் வழுத்த வல்லான்.

இ - ள். உதயம் ஏழாமிடம் நான்காமிடம் பத்தாமிடமாகிய நேத்திரஸ்தானத்திற் சாந்தமாம். புதனும், உத்தேசமாகிய, இரண்டாமிடத்தோன், உச்சத்திலும், உசனன உபயராசியிலும், மூன்றாமிடத்தில், ஆன்றோராகிய சுபக்கோளிருக்க, சுக்கிரன் உச்சமாகப் பூமியிற் பிறந்தவன், சோதிடஞ் சொல்ல நல்ல வல்லமை யுள்ளவனாவன். எ - று. 437

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வேறு

வல்ல ரெண்டிடத் தோன்குரு சுக்கிரன்
செல்லு மூலத் திரிகோண முச்சமாய்
அல்ல பாவ ரனுகநோக் காவிடில்
நல்ல தர்க்கம் படிப்பன் நலம்பெற.

இ-ள். வல்லமை பொருந்திய வாக்காதிபன். நல்லகுரு. சல்லியனுகிய சுக்கிரன், இவர்கள், மூலத்திரிகோணம் உச்சமாகி பாவர்கள் சேராமலும், பார்க்காமலு மிருக்கப்பிறந்தவன், நன்மையான தர்க்க சாஸ்திரங்களைக் கற்ற வல்லவனுவன். எ-று. 438

நலஞ்சி றந்தரெண் டாம்வீட் டதிபனுங்
குலஞ்செ றிந்த குருவும் பலமதாய்ப்
பலஞ்செ றிந்த புகர்பார்க்க நின்றிடல்
பிலஞ்செ றிந்த விலக்கணம் பேசுவான்.

இ-ள். சாஸ்திரப் பரிசயத்துக்கு நேத்திரமாகிய, இரண்டாம் வீட்டதிபனும், சந்தான காரகனுகிய குருவும், பலம்பெற்றிருக்க, இவர்களைச் சுக்கிரன் பார்க்கப் பிறந்தவன் இலக்கண சாஸ்திரம் கலக்கமறப் பேசுவானென்க.

வேறு

பிரக்கினைசேர் திரிகோண கேந்திரத்தும்
பிரியமுடன் புதனிற்கிற் றமிழ்வித்தை பெருகும்
திருக்குமிலா துயர்செவ்வா யொன் றிருந்த காலை
தெலுங்குவித்து வானுவன் கருங்கோணே நிற்கில்
நிரக்கவே துருக்கரா ரியர்பாஷை தமக்கு
நிபுணவித்து வானுவன் வெள்ளிகுரு மேவில்
திரக்கனமாஞ் சாஸ்திரங்க டமக்குமதி வல்ல
திடவித்து வானென்றே செப்பிடவு மாகும்.

இ-ள். திரிகோண நேத்திரங்களில் தேர்ப்பாகனிருந்தால், செந்தமிழ் வித்தையும், செவ்வாய் நின்ருல், தெலுங்கு வித்தையும், கருங்கோளாகிய ராகு நின்ருல், துருக்க ஆரியவித்தையில் நிபுணனும், சுக்கிரன் குருவிருந்தால், பலசாஸ்திரங்களையும் நலமாகக்கற்று மகாவித்துவானென்று மாநிலமெங்கும் புகழ்வானெனச் சொல்லவேண்டும். எ-று 440

ஆகுமிரண்டாதிபனும் புதனு முச்ச
மாயிருக்கச் சன்மத்தி லரசன் நிற்க
ஏகனுய்ச் சனியெட்டி லுறக்கணித வித்தை
யிவனுக்குக் கோபுராங் கிசத்தின்மந்த னிருக்க
வரகுடனங் காரகனங் கிசத்தரசன் நிற்க
மறையோது வானிரண்டா மாதிகதி ராகத்
தாகமுடன் செங்கதிரைத் தமனியனுங் காணத்
தர்க்கசாஸ் திரம்படிக்குந் தாஷ்டிகனுங் கண்டீர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். இரண்டாமிடத்ததிபனும், புதனும், உச்சமாயிருக்க, ஜென்ம லக்கினத்தில, குருவிருக்கச் சனிதனித்து, எட்டாமிடத்தில் இருக்க, கணித வித்தையுடையவன் கோபுராங்கிஷத்திற் சனியிருக்கச் செவ்வாயங்கிஷத்திற் குருவிருக்க, வேதமோதுகின்றவனும், இரண்டுக்குடையவன் சூரியனாய் அச் சூரியனைக் குருபார்க்கத் தர்க்க சாஸ்திரத்தில் வல்லவனவன் எ-று.

441

கண்டசன்ம லக்கினத்திற் சுக்கிரன் பொன் னிருவர்
கலந்துநிற்க வேந்தனுநற் கதிரோன்றா னும்மே
மண்டியசிங் காங்கிஷத்தி லேறிநிற்க வந்த
மற்றுஞ்சுக் கிரன் கடக வங்கிசத்தின் மன்ன
அண்டியிந்தப் படியிருக்கச் சனித்தானரு னல்ல
அவனிபிற்சாத் திரமாறு மறிந்திடுவா னென்றே
எண்டிசையெங் கும்பரவுங் கீர்த்திமா னாகி
இருப்பனெனக் கலைவல்லோ ரியம்பிடுவர் தாமே.

இ-ள் லக்கினத்திற் சுக்கிரன், குரு கூடியிருக்க அல்லது செங்கதிரோனும், புங்கவனும், சிங்காங்கிஷமேறியிருக்கச் சுக்கிரன், கடகாங்கிஷமேறியிருக்கப் பூமியிற் பிறந்தவன் ஆறுசாஸ்திரங்கற்றவனும், எண் திசையிலும் கீர்த்திபெற்றவனுமாகி யிருப்பனென்று சோதிடவல்லவர்கள் சொல்லுவார்கள்.

வாரேறு முலையாய்கேள் சன்மந் தன்னின்
மதிமகன் சூரியன் குருவு மகிழ்ந்து நிற்கில்
சீரேறு தனம்படைத்துப் புலவ னவன்
செங்கதிர்சுக் கிரன்புத்தி திங்கள் சுன்னும்
பாரார்பொன் னிவர்களொரு வீட்டிற் கூடில்
பரிமளிக்கும் வித்தைபிர பலனு மாகித்
தாரேறு புயவலியன் றனவா னவன்
சாந்தகுண வானுமாய்த் தரையில் வாழ்வன்.

இ-ள். பட்சமுள்ள ஆடவர் இச்சைகொள்ளக் கச்சையிறுக்கிய தனத்தையுடைய பெணணே கேட்பாயாக, ஜென்மலக்கினத்தில், சிந்தை சூரியன் தினகரன், சிகிண்டிசனாகிய இவர்கள் பலத்துநின்றால், சிறப்புப் பொருந்திய செல்வம் பெற்று வித்துவானுமாவன். செங்கதிரோன் சீதகன் தேர்ப்பாகன் திங்கள் பங்குபாதன் புங்கவனாகிய அறுவரும், ஒரு வீட்டில், ஒன்றாய் நின்றால், கண்டவரெல்லாம் சென்று புஷ்பங்களைத் திண்டாரமாகக்கொண்டு வந்து தோளிற்போட்டுக் கொண்டாடும், பிரசங்கவித்தையும், சாந்தபுத்தியும், வேந்தரும், பூமாந்தரும், மேச்சக்கூடிய புயவலிமையும் புகழ்நலமையும் பொருள் பூமி, செல்வமுதலியதற்குத் தலைமையுமாகிப் பூமியில் வாழ்வன்.

தனபலன்

சென்மாதி பதிக்கிரண்டா மிடத்தில் நல்லோ
திறன்மூன்றா மிடத்தீயோர் நான்கில் நல்லோர்
நன்மார்க்க முடனிருந்தாற் றனவான் சன்ம
லக்கினததோ னுபயத்தில் நன்னணினும்பொன் னுளனும்
சன்மார்க்க முடனந்தத் தனபா வத்தில்
தரும்பாக்கிய லாபாதி தரிக்கிற் பார்க்கில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

துன்மார்க்க மறவளகைக் குபேரன் போலத்
தொலேவிலாத் தனம்படைப்ப ரெனச்சொல்வர் சால.

இ-ள். லக்கினதிபனுக்கு இரண்டாமிடத்தில் சுபர்களும், மூன்றுமிடத்தில் பாவர்களும், நான்காமிடத்தில் நல்லோர்களும் நன்மையோடிருந்தால் இன்பசுக தனவானவன். ஜென்மாதிபதி உபயத்திலிருந்தாலும், திரவியமுள்ளவனும். வாக்குஸ்தானத்தில் பாக்கிய லாபாதிபதி தாக்காய்ச் சுபம் பெற்றிருக்கிலும், அல்லது நோக்கிலும், அளகாபுரிக்கு அரசனுகிய குபேரனைப்போலக் குறைவற்றசெல்வமும், நிறைவுற்ற வாழ்வும்பெற்று தரையில் என்றுந் தனவந்தனுக வாழ்வானென்றும சொல்லவேண்டும். எ-று. 444

சாதகன்லக் கினமுதலாய் லக்கி னதி
தானிருந்த வீடளவு மெண்ணிக் கண்ட
ஓதுதொகை லக்கின தி னைத் தொட்டே
உடனெண்ணிக் கண்டவனை பாவர் வீடேல்
ஏதமுறுந் தரித்திரயோ கங்க ளாகும்
இனிமையுளளோர் வீடாயிற் றனவா னுவன்
போதுசன்மந் தனக்கைந்தீ ராறி ரண்டும்
புனிதர்மனை யாகிற்பொன் னுளனே யாவன்.

இ-ள். ஜாதகன் பிறந்த ஜென்ம லக்கினமுதல், லக்கினதிபதியிருக்கும் வீட்டுவரைக்கும் எண்ணி, அந்தத்தொகையை, இலக்கினதிபதியிருந்த வீடு முதல் எண்ண, வரும் இடம் பாவர் வீடாயின் தரித்திரயோகமாம் சுபர் வீடாயின் தனமுள்ளவனும், ஜென்ம லக்கினத்திற்கு, இரண்டு ஐந்துபன்னிரண்டாகியமனை, சுபர் வீடாயின் தனமுள்ளவனுவன். எ-று. 445

வேறு

ஆவன் சன்மத்திற்சனியு மடுத்தநான் கிலம்புவியும்
மேவுமேழிற்செவ்வாயும் விளங்குபத்தில் வெய்யோனும்
கோவும்புதன்சுக்கிரன்றனுங் கூடியொருவீட்டிலிருக்கப்
பூவுக்கரசாய்த்தனவானுய்ப் பொருந்திவாழ்வன் கண்டீரே

இ-ள். பிறந்த லக்கினத்திற் சிறந்தசனியும், அதற்கடுத்த நான்கில், அம்புலியும், ஏழாமிடத்திற் செவ்வாயும், பத்தாமிடத்திற்பானுவும், கோவும், பண்டிதனும் சுக்கிரனும், சேர்ந்து ஒருவீட்டிலிருக்கப் பிறந்தவன் புவிக்கு அரசனுகவும், கவிக்குச் சடையனுகவும், சனிக்குச் சம்பராரியாகவும், சம்பத்தில் குபேரனைப்போலவும் வாழ்வன். எ-று. 446

கண்டுமொழியாயொட்டாறிற் கருதுமூன்றிற்பன்னென்றில்
மிண்டரிருந்துலக்கினத்தைப் பாராதிருக்கமிகுசெல்வம்
கொண்டுவாழ்தற்கனுசாரி குலவியிந்நால்வருநீசம்
அண்டியிருக்கில்நீசர்மனை யணுகிற்றனவானுவானே.

இ-ள். கண்டுபோன்ற இனியசொல்லை விண்டுரைக்கும், பெண்டுகளிற் சிறந்தவளே, சட்டாட்டம தைரியலாபஸ்தானங்களில். பாவக்கிரகங்களிருந்து, லக்கினத்தைப் பாராதிருக்கின், மிகுந்தசெல்வமுடையவனும், இந்நால்வரும், நீசம் பெற்றிருந்தாலும், அல்லது நீசவீட்டில் நேசமாய் நின்றலும், செல்வமுள்ளவனுவன். எ-று. 447

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆவ ரிந்து லக்கினத்துக் கதிப னுச்ச ராசியினும்
மேவ வலது நீசர்மனை விரும்பி யிருக்கிற் றனவானும்
தேவர் தொழுஞ்சந் திரனுடனே யுச்ச நற்கோள் சேர்ந்திடினும்
தாவுங் குடும்ப நுச்சமனை தக்கோர் நிற்கத் தருஞ்செல்வம்.

இ-ள். சந்திரா லக்கினத்ததிபன், வந்தே உச்ச வீட்டிலிருக்க, அல்லது, விந்தையாய் நீசர்கள்வீட்டிலிருக்க, அதிகப்பொருளுள்ளவனும், அச் சந்திரனுடனே உச்சனும், சுபக்கிரகங்களுங்கூடி நின்ருலும், குடும்பத்தானுதிபன், உச்சனுகி அக்குடும்பத்திற் சுபர்கள் நின்ருலும், செல்வமுடையனுவன். எ-று. 448

வேறு

செல்வந்தரும் பத்தாமதி பதிசென்மா திபனும்
வல்வந்த குடும்பாதிபன் வளரங்கிசை மன்னும்
செல்வந்திக முங்கேந்திர மதனிற்சுபர் காணில்
நல்வஞ்சிறு வயதிற்றன பதியாகவு நண்ணும்.

இ-ள். அத்தத்தைக்கொடுக்கும் பத்தாமதிபனும், ஜென்மாதிபனும், குடும்பாதிபனும், அங்கிஷாதிபனும், கேந்திரத்திலிருக்கச் சுபர்கள் நோக்கச் சிறுவயதிற்ருனே செல்வமுள்ள குபேரனைப்போல் வாழ்வன். எ-று. 449

நண்ணிஞ்சென் மத்தாதிபன் நவின்மூன்ரு திபனும்
ஒண்ணிப்பல மாகப்புரு ஷக்கோளுற நோக்க
வண்ணந்தரு மூன்றதிபன் மருவப்பதி காண
அண்ணன்சிறு வன்ருய்பர மாமன் பொனும் வருமே.

இ-ள். ஜென்மாதி பதியும், மூன்ருமதிபதியும், பலம்பெற்றிருக்க, புருஷக்கிரகங்கள் பொருந்த, அல்லது நோக்க, மூன்ருதிபன்சேர அல்லது பார்க்கப்பிறந்த ஜாதகனுக்கு, தமயன், தாய், மாமன் இவர்களுடைய பொருள் வந்துசேரும். எ-று 504

வேறு

வருஞ்சன்ம லக்கினத்து மாமதி யிருந்த வீட்டும்
இருபுறந் தன்னில் நல்லோ ரிருந்திடிற் றனவானுவன்
ஒருமனை தன்னிலுற்ரு லோதிப பலனிற் பாதி
தருமொரு புறத்தி னிற்கிற்றனமுங்காற் பங்கதாமே.

இ-ள். ஜென்மலக்கினத்திற்கும், சந்திராலக்கினத்திற்கும். முன் பின், சுபக்கிரகங்களிருந்தால் தனுதிபதியாவன். (இந்தநான்கிடத்தில்) இரண்டு வீட்டில் சுபர்கள் நின்ருல். அரைப்பங்குபலனும். ஒரு வீட்டிற் சுபர்கள் நின்ருல், காற்பங்கு பலனும் பெறுவார்களென்பதாம். 451

வேறு

பாங்க தாகுமூன் ருமிடப் பார்த்திபன்
ஓங்கு மொன்பதா மாதி யுடனுற
ஈங்கு வர்க்கு மினியசி னேகமாய்
ஆங்கு றத்தமை யன்பொன் னனுகுமே.

இ-ள். மூன்ரு மிடத்தோன், ஒன்பதாமிடத்தோனுடன் கூடி, இருவரும் மித்துருவாயிருந்தால் தமையனுடைய செல்வத்தைத்தானே அடைவனும். எ-று. 452

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வேறு

அனுகு நிதி சேர்வகையா தவனற்ரு தையர்பொன்
அன்னைக்கும் புலிசெவ்வா யாற்றனது பொருளே
நனுகு - த றற்பகைஞர் பொருளரசன் றன்னல்
நல்லுறவோர் நிதிசுங்க னற்குமனை வியரால்
பணமருவு சு காரியினு லடிமையு ளோர் பொருளும்
பண்பொடுசே வித்தவர் பொன் பாங்குடன் வந்தடையும்
குணமொடுலக் கினஞ்சோமன் றனக்குப்பத் தாகும்
குடி வீட்டுக் குடையோனைக் கொண்டுபலன் கூறே.

இ-ள். செல்வஞ் சேருகின்ற விதமாவது, சூரியனுனல். தகப்பன் செல்வமும், சந்திரனுனல் தாய் செல்லமும் செவ்வாயானல தனது செல்வமம். புதனுனல், பகையாளிகள் செல்வமும், குருவானல் சிநேகிதர் செல்வமும், சுக்கிரனுனல் மனைவியர் செல்வமும், சனியானல் அடிமைகள் சேவித்தவர்கள் செலவமும் வந்து சேரும். (இந்த விபரங்களை) லக்கினம் சந்திரன் பத்தாமிடம் இவர்களைக்கொண்டு பலன்களைத் தெரிந்து பலன் சொல்ல வேண்டும் எ று. 453

கூறியலா பாதியொன்ப தாமதிப னுடனே
கூடினுற் பழையதனங் குறுகவந்து சேரும்
பேறு ன்பத் தாமாதி பாக்கியத்துற் றிடினும்
பெருமைசெறி பத்தாதி பிரபலநற் கோளாய்
வீறுடனுக் தமர்மனையி னுறத்தருமத் துடனே
விரவுபிர யாசமற வேநிதியம் படைப்பன்
ஈறில்குரு தனஞ்சேரும் பத்தாதி மெவிந்தே
யிருக்கிலொரு வரைச்சேவித் தெய்துபொருளற்பம்.

இ-ள். லாபாதிபதி பாக்கியாதிபதியோடு சேர்ந்திருந்தால் பழைய பொருள் வந்து சேரும். கன்மாதிபதி தன்மாதிபதி தானத்திலிருந்தாலும் அக் கன்மாதிபதி பிரபல சுபக்கிரகமாகி சுபர்மனைகளிருந்தாலும், தரும நெறியாக வெகு பிரயாசையோடு சம்பாத்தியஞ்செய்து திரவியந்தேடுவான. குருவியத்திலிருந்து பத்தாமிடத்தோன் பலமற்று நின்ருல் அற்பரைச்சேவித்து, சொற்பப்பொருள் சம்பாதிப்பான். எ-று. 454

பொருள்செறிபத் தாமதிபன் பிரபலவுத் தமனுய்ப்
பொருந்திப்பத் தினிலிருக்க யாகாதி கருமம்
அருளுடனே புரிந்துதனந் தேடியினி திருப்பன்
அமர் மூன்ரு மாதிபல மாகச்சன் மத்தோன்
மருளுந்துர்ப் பலனுக லாபாதி மூன்றில்
மருவிலுடன் பிறந்தவர்தன் பொருள் வந்து சேரும்
தெருள்சன்மஞ் சந்திரலக் கினத்திருந்தார் வகையில்
சேர்ந்தவரா ரோவவர்பொன் சேருமிவன் றனக்கே.

இ-ள். பத்தாமிடத்தோன் உத்தம பிரபல சுபனுய் பத்தாமிடத்திலிருக்க, யாகாதி கர்மங்கள் அருளுடனே செய்தும், யோகாதி பதியாய்ப் பொருள் சம்பாதித்து சுகமாயிருப்பன் மூன்ருமிடத்ததிபன் பலமாகலக்கினத்ததிபன் துர்ப்பலமாக லாபாதிபதி மூன்ரு மிடத்தில் இருந்தால்,உடன் பிறந்தார் பொருள் வந்துசேரும். ஜென்மலக்கினதகும் சந்திரலக்கினத்தும், இருந்தவர்கள் வகையில் சேர்ந்த கிரகங்கள் எவ்வெவர்களோ அவர்களுடைய பொருளும் இவனுக்கு வந்துசேரும். எ-று. 455

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தனஞ்சேரும் வகையொன்ப தாமதிபன் றிசையில்
தரும்பத்தா திபன்புசிப்பி லப்போகோ சரத்தில்
இனஞ்சேர்நான் காதிபன்பத் தாமிடத்திலிருக்க
இயல்பத்தா மதிபனுக்கு நாலாம்ரா சியினும்
கனஞ்சேருங் குசனுடைய கேந்திரத்தி லேனும்
கலந்துநிற்கப் புராதனயாங் காணிமனை யதனில்
முனஞ்சேர்பத் தாமதிபன் றிக்கினில்நிட் சேபம்
முதற்கொண்டு வாழ்வரென மொழிந்திடுவர் தக்கோர்.

இ-ள். தன்மாதிபதி திசையில், கன்மாதிபதி புத்தியிலும், அப்போது கோசரத்தில். நாலாமிடத்ததிபன், பத்தாமிடத்திலும், பத்தாமிடத்ததிபன் நாலாமிடத்திலுமாகி செவ்வாய், கேந்திரத்திலேனுங் கலந்து நிற்குங் காலத்தில் புராதன மனையில், பத்தாமிடத்ததிபன் திக்கில புதையல் பெற்று சுகமாக வாழ்ந்திருப்பானென்று சொல்லுவார்கள். எ-று. 456

தக்கரிஷ பத்தின்மதி விருச்சிகத்தி லரசன்
தானிருக்கிற் றனவானுஞ் சுக்கிரன் வீட்டரசன்
மிக்ககுரு விற்தனு மிருக்கவளர் பிறையும்
வேந்தனுடனகூடப் புதனரசன் கூடி
நிற்கலக்கி னத்தன்னிற் சுக்கிரனு மிருக்க
நிறைந்தகன வான்கல்வி நிபுணனுமா யிருப்பன்
சுக்கிரனுச் சம்பெறலக் கினத்தரசன் சிறந்த
சோமனைப்பா வர்கள்காணிற் றுலகுதனம் படைப்பன்.

இ-ள். இடபத்தில் இந்துவும், விருச்சிகத்தில் வியாழனும், இருந்தால். தனவானுவன். பிறகுவீட்டிற் குருவும், மகரத்தில் மங்கலனுமிருக்கப் பூரணச்சந்திரன் ஆரணமோதும். அந்தணருடனிருக்கப் புதனும் வியாழனும் பொருந்தியிருக்க, லச்கினத்திற் சுக்கிரனிருக்க, நிறைந்த கல்வியும் சிறந்த செல்வமுமுடையவனுவான், சுக்கிரன் உச்சம்பெற்று லக்கினத் திற் குருவுமிருக்கப் பூரணசந்திரனைப் பாவர்கள் பார்க்கப் பிரகாசிக்க பெற்ற செல்லமுடையவனுவன்: எ-று. 457

படைத்த வொன்பதாமதிய னுறினிலின் றிடவே
பண்புடைய மாதுலன்றன் பொன்பரிந்து சேரும்
எடுத்தவொன்ப தாமதிபன் பொன்னுகி யாறில்
இருந்தக்கா லம்மாமிக் கிசைந்த பொருள் சேரும்
தொடுத்தவைந்தா மதிபதியுஞ் சுபனுய்ப்பாக் கியத்தில்
சூழ்ந்திருக்கிற் புத்திரிக்குத்து லங்குமணஞ் சூட்டி
அடுத்திருக்கு மருமகன்றே டியதனங்க ளெல்லாம
அடைந்துசுக வானுகி யம்புவியில் வாழ்வன்.

இ-ள். அட்டமாசித்திபெற்ற ஒன்பதுக்குடையோன் சட்டமஸ்தான மாகிய, ஆருமிடத்தி லிருக்கத் தாய்மாமன் சொத்து தானே கிடைக்கும். ஒன்பதுக்குடையவன் குருவாகி ஆருமிடத்தி லமர்ந்திருந்தால், மாமன் மனைவி மாமியின்பொருள் வந்துசேரும். ஐந்தாமிடத்ததிபன் சுபனுய் ஒன்பதாமிடத்திலிருக்க மகளை மணஞ்சூட்டி மகிழ்ந்திருக்கும். மருமகள் தேடிய பொருள்களையெல்லாம் பெற்றுச் சுகவானுய் வாழ்த்திருப்பவனு மாம். எ — று.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அம்புவியிற் குருவும்பத் தாமாதி பதியும்
அன்புறுநற் சுபனுமாய் லக்கினத்தாதிக்கு
இம்புவியின் மித்துருவா யிவருடன் வெய்யோனும்
இசைந்திருக்கிற் பிதாநிதயு மெய்துமிவன் றனக்கே
விம்பமதி யங்கூடி லன்னைசெம்பொன் மேவும்
மேதினிமைந் தன்கூடில் மேவலர்பொன் சேரும்
நம்பியமால் கூடின்மித் துருதனமா மரசன்
நண்ணியுறிற் பிராதாபொன் றுனயந்து சேரும்.

இ—ள். பிரகஸ்பதியும், பத்தாமிடத்ததிபதியும், சுபனும் லக்கினதிப திக்குமிக்கமித்துருவாக, இவர்களுடன் திவாகரனுஞ்சேர்ந்திருந்தால்பிதா செல்வம் இவனுக்குக்கிடைக்கும், இவர்களோடு சந்திரன் சேர்ந்திருந்தால் தாய்செல்வஞ் சேரும். செவ்வாய் சேர்ந்திருந்தால்! சத்துருக்கள் சம்பாத்தி யம் வந்துசேரும் புதன் சேர்ந்திருந்தால் சிநேகிதா திரவியம் வந்து சேரும், குரு சேர்ந்திருந்தால் பிரபுக்கள் பொருளும் வந்துசேரும். எ-று. 459

வேறு

சேருஞ்சுக்கிரன் கூடிற்றெரிவையர்
ஆருமாஞ்சனி யிற்கடுத்தோர்பொருள்
கூருமபாம்புகள் கூடிலினத்தொழில்
சாரவேபுரி வார்தனஞ்சாருமால்.

இ-ள். சுக்கிரன் சேர்ந்திருந்தால் மனையாள்பொருள்வந்துசேரும், சனி சேர்ந்திருந்தால் தன்னை யடுத்தவர்கள் பொருளும், இராகு அல்லது கேது சேர்ந்திருந்தால் ஈனத்தொழில் செய்பவர் தேடுந்திரவியம் வந்து சேரும்.

வேறு

சாரும்பத்தாமதிபன் சுபக்கோளாகத்
தக்கோர்வீட்டிற்பிறையு மரசன்றுனன்றிச்
சேரும்பொன்னவனீச மத்தமனமாகித்
தீயோர்வீட்டினுலிருக்கத் திரவியங்களில்லான்
நேநம்பத்தாமதிபன் நான்கிடத்திலிருக்க
நிட்சேபங்கண்டெடுப்ப னிறைந்தகல்வியாலும்
பாரின்மேவிய தமரோ ரார்தங்களாலும்
பரிவுடன்பொன்சேருமென வேபரிந்துகூறே.

இ-ள். பத்தாமிடத்தோன் உத்தமச்சுபனாகவும், சுபர் வீட்டிற் சந்திரனுங்குருவும், இல்லாதிருந்தால், அவனுக்குத் தனஞ்சேரும், குரு நீசம், அஸ்தமனமாகிபாவர்கள் வீட்டில் இருக்க திரவியமில்லாதவனுவன், பத்தாமிடத்ததிபன் நாலாமிடத்திற்சேரப் புதையலெடுப்பன், அத்துடன் செந்தமிழ்க் கல்வியாலும், சிறந்த சுற்றத்தாராலும், மிக்க திரவியஞ் சேருமென்று சொல்ல வேண்டும். எ-று. 461

வேறு

கூறும்ரெண்டாமிடக் கேந்திரத்தினில்
வீறுமன்னவன் மேவரெண்டாதிபன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஊறுமாறெட்டொ டுவியத்துற்றிடில்
ஏறுந்தந்தை தனஞ்சற்றுமில்லையே.

இ - ள். இரண்டாமிடத்தில், கேந்திரத்தில் குருவிருந்தாலும், இரண்டாமிடத்தோன், மறைவுஸ்தானமாகிய சட்டாட்டம் வியத்தானத்திலிருந்தாலும் தகப்பன் செல்வஞ் சற்றுமில்லையாம். எ - று. 462

வேறு

சாலமதி தனக்கிரண்டிற் சனிதான் நிற்கில்
சந்திரனுர் தனக்குநான் காம்வீட் டாதி
மேலவர்க ளுடன் கூடிக் கேந்தி ரங்கள்
மீதிருந் தாற் றந்தைபொருள் வேற்ருர் கொள்வர்
பாலருக்குச் சேராது பாலன் ருனும்
பாக்கியவா னுகிவெகு பணங்க டேடி
ஞாலமதிற் கீர்த்தியா திபனும் பூமி
ராசரைச்சே வித்திருப்பன் நலமாய்த் தாமே.

இ - ள். சந்திரனுக்கு இரண்டாமிடத்தில் சனியிருக்க, அச்சந்திரனிருந்த வீட்டுக்கு நான்காம் வீட்டதிபன், சத்துருக்களுடன் சேர்ந்து கேந்திரத்திலிருக்கத்தகப்பன் திரவியத்தை, அன்னியர்கள்கைக்கொள்வார்கள், ஜாதகன் வெகுபணங்கள் சம்பாதித்து பாக்கியவானுகி கீர்த்தியுடையவனுய் ராஜர்களைச் சேவித்து நன்மைபெற்றிருப்பான். எ - று. 463

வே று

மேதகு நான்கா மாதி விரவுகேந் திரங்க டன்னில்
ஆதவ னிக்க வேதா னந்தநான் காமி டத்தில்
ஓதிய நல்லோர் மேவி லுறுபிதா தனத்திற் காசு
பா தியு மிவனுக் கில்லை பரதேசத் திடையிற் செல்வன்.

இ - ள். நான்காம் வீட்டதிபன், இருக்குமிடத்திற்குக் கேந்திரத்தில் சூரியனிருந்து, அந்த நான்காமிடத்தில் சுபக்கிரகங்களிருந்தால், பிதா பாக்கியத்தில் அரைக்காசுங்கூடஜாதகனுக்கில்லாமல் பரதேசமார்க்கமாய்ச் செல்வான்

வேறு

ரண்டா மாதி தான்மிகவே யிருந்து கேந்திர மேறிமிகக்
கொண்டே தனத்துக் காரகனுங் குலவி யுச்ச மாகியிவர்
மிண்டா யிருக்கத் தனபதியாய் விளங்கி யிருப்ப னறிவுள்ளோன்
பண்டே சகத்திற் பொன்றேடிப் பதியிலிருப்ப னெனச்சொல்லும்

இ - ள். இரண்டாமிடத்ததிபன், கேத்திரமாயிருக்க, தனகாரகன் உச்சமாகி, இருவருங் கூடியிருக்க, தனபதியாகித் தரணியில் வாழ்ந்திருப்பன்நடுவு நிலைமையுள்ளவன், ஜெகத்திற் பொன்னைச் சம்பாதித்து அகத்தில்வைத்துச் சுகத்திலிருப்பானென்று சொல்லவேண்டும். எ - று. 465

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சொல்லு மிரண்டா மாதிபதி சூழ்ந்துலாபத் தினிலிருக்க
வெல்லும் லாபன் பாக்கியாதி விரும்பி யிரண்டி லுற்றிடவே
நல்லகுணமுந் தருமனுமாய் நான்கு லட்சம் பொன்றேடி
அல்ல லறவே வாழ்ந்துண்டே யவனிதன்னி லிருந்திடுவான்.

இ-ள். குடும்பாதிபதி லாபத்திலிருக்க, லாபாதிபதி பாக்கியாதிபதி யிருவருஞ் சேர்ந்து, இரண்டாமிடத்திலிருக்கப் பிறந்தவன் நல்ல குண முடையவன், தருமசிந்தனையுடையவன், அருமையாய் நான்கு லட்சம பொன்னைத் திறமையாய்ச் சம்பாதிப்பவன், துன்பமுற்று இன்பமுற்று, இகத்திற் சுகத்தோடிருந்து வாழ்ந்திருப்பன். எ-று. 466

இருந்த வில்லே லக்கினமா யிதிலே குருவுந் தானுறவே
பொருந்துந் துலாத்திற் சனியுச்சம் புகலா பாதி நான்கிடத்தில்
திருந்தி யிருக்கத் தனந்தேடித் திகழ்வனீதி தவறுமல்
தெரிந்து பலரை ரக்ஷித்துச் செம்பொன் கோடி தேடுவனே.

இ-ள். வில்லே லக்கினமாக நல்ல குரு அவ்விலமதிலிருக்கச் சொல்லற்கரிய துலாத்திற் காரி உச்சமாக லாபாதிபன் நான்காமிடத்திற் பொருந்தியிருக்கப் பிறந்தவன் வருந்திப் பொருளைச்சம்பாதிப்பன், மேதினியகனில் நீதிதவராதவன், பலரையும் ரட்சிக்கிறவன், கோடிபொன்னைத் தேடிவைப்பவனுமாவன். எ-று. 467

வருமே தனுசு குடமீனம் வாழுங் கன்னி ரிஷபமுடன்
புரமேய் நவகோ ளிருந்தமலை புகுந்தாற் றேவர்க் கரிதாய
திரமே யோக நவகோடி செம்பொன் றேடி ராச்சியங்கள்
உரமே யாள்வன் லக்கினமு மோங்குந் தனுசிற் பிறந்திடவே.

இ-ள். தனுசே ஜென்மலக்கினமாகி, அத்தனுசுடன் கும்பம் மீனம் கன்னி ரிஷபம் ஆகிய இவ்விராசிகளில் நவக்கோட்கள் தங்கியிருந்தால், தேவர்களுக்கும். அரிதாகிய ஒன்பதுகோடி திரவியம் சம்பாதித்து இராஜியம் ஆளுகின்ற அரசனுவன். எ-று. 468

வேறு

ஏய திரேக்காணத் திறைபுகர் கூடிட
தூய லாபாதி சுபவர்க்க மேறிட
ஆய வுலகி லரும்பொருள் கோடிதான்
நேய மாய்த் தேடுவ னென்று மொழிந்திடே.

இ-ள். திரேக்காண லக்கினதிபதியும், சுக்கிரன் கூடியிருக்க, லாபாதிபன் சுபர்வர்க்கமேறியிருக்க, உலகில் கோடிபொன் சம்பாதிப்பனென்று சொல்லவேண்டும். எ-று. 469

கிரகருசி

வேறு

இலகு மிரண்டின் மூன்றிடத்தி
விரவி யுறிற்கார்ப் புடன் சுடுகை
நிலவுக் குச்சீ தளந்து வர்ப்பு
நீடு குசற்குக் குளிர்லம கைப்பே

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அலகு புதற்குச் சகல முமே
யாம்பொன் னுக்கு மதுர மழல்
கலகச் சனிக்கே கஷாய ந் தன்
கமர்சுக் கிரற்குப் புளிகு ளிர்ச்சி.

இ-ள். இரண்டாமிடத்திலும், மூன்றாமிடத்திலும், இரவியிருந்தால் கார்ப்பிலும், சுடுகையிலும், விருப்பமுள்ளவனாயிருப்பன், சந்திரனிருந்தால் துவர்ப்பிலும், சீதளத்திலும் விருப்பமுள்ளவனாயிருப்பன், செவ்வாயிருந் தால் கைப்பிலும், குளிர்ச்சியிலும், விருப்பமுள்ளவனாயிருப்பன். செவ்வாயிருந்தால் கைப்பிலும், குளிர்ச்சியிலும், விருப்பமுள்ளவனாயிருப்பன், பசனிருந்தால் சகலவஸ்துக்களிலும் பிரியமுள்ளவனாயிருப்பன். குருவிருந்தால் இனிப்பிலும், சுடுகையிலும், இச்சையுள்ளவனாயிருப்பன், சுக்கிரனிருந்தால், புளிப்பிலும், குளிர்ச்சியிலும், களிப்புடையவனாயிருப்பன் சனியிருந்தால் கஷாயத்திலும், குளிர்ச்சியிலும், மிகவிருப்பமுள்ளவனாயிருப்பன். எ று.

இரண்டாம் பாவகம்

சம்பூர்ணம்

மூன்றாம் பாவகம்

சகோதரபலன்

துலங்குமூன்றாமிட ந்தன்னாற் றுணைவர்பலனைச்சொல்லுங்கால்
இலங்குமூன்றாமதிப தியு மிருந் தார்கண்டார் தமைக் கொண்டு
நலங்கொளுச்சம்பகைநீசம நட்புமறிந்தேயுரைசெய்யப்
பலன் கொள்பெண்ணாண்கிரகங்கள் பார்த்துத்துணைவர்பலன் சொல்லே.

இ-ள். மூன்றாமிடத்தைக்கொண்டு தோன்றுஞ் சகோதர பலனைச் சொல்லுமிடதது மூன்றாமிடத்ததிபதியும் இருந்தவர்கள் கண்டவர்கள், இவர்களைக்கொண்டு ஆட்சி உச்சம் பகை நீசம் நட்பு இவைகளின் பலன் களைத்தெரிந்து ஆண் பெண் கிரகங்களைக்கவனித்து சகோதரபலன் சொல்ல வேண்டும். எ-று. 471

சொல்லுங்குசன்மூன் றாமிடத்திலிருக்கிற்பார்க்கிற் றுணைவரற்பம்
வெல்லும்பதினொன் றிற்குசனு மேவின்மூத்தோர் மிகவுண்டாம்
வல்லவிரண்டா மிடத்திற்சேய் மருவவுடனே வருந்துணைவர்
நல்லமும்மூன்றாய்ப்பார்த்து நாரியாணித் தனையுன்னே.

இ-ள் செவ்வாய் மூன்றிலிருந்தாலும், பார்த்தாலும், சகோதரர் அற்பம், பதினோராமிடத்திற் பௌமன் இருந்தால் மூத்தசகோதரம் அதிகமுண்டாம் இரண்டாமிடத்தில் செவ்வாய் இருக்க உடனே சகோதரர் தேற்றுவர் இதையும்மூன்றாய்ப்பார்த்து ஆண் பெண் இத்தனையென்று சொல்லவேண்டும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வே று.

உன்னு மூன்ரு மிடத்ததி பன்குசன்
நன்னர் நான்கா மதிபனுங் கூடினும்
தன்ன மூவரும் நான்குறத் தந்துணை
அன்னர் பங்கு மனைவந்து சேருமே.

இ—ள். மூன்ரு மிடத்ததிபனும், நான்காமிடத் ததிபனும், செவ்வாயும், ஆகிய இம்மூவரும், நான்காமிடத்திலிருக்க, தன் சகோதரருடைய பங்குமனை ஜாதகனுக்கு வந்து சேரும். எ-று. 473

வேறு

சேருஞ்செவ் வாய்புடத்தை வைத்து கொண்டுச்
செய்யகருங் கோள்புடத்தை யெடுக்கி லப்போ
நேருமந்த ராசியிற்பொன் மருவும் போது
நிற்குமிளை யோர்க் கரிஷ்டங் கருங்கோடன்னைப்
பாருமந்தப் புடத்திலங்கா ரகனை வாங்கிப்
பண்பொடுநின் றிடுரரசி தனிலரசன் வந்தால்
ஊருமுற்ரு ருர்மறியச் சேட்டன் பார்விட்
டுயர்பரம பதியணுகு மெனவுரை செய்வாயே.

இ-ள். புவிக்கோளாகிய, செவ்வாய் புடத்தை வைத்துக்கொண்டு, கட்செவிக்கோளாகிய ராகுபுடத்தை யெடுக்கில், அப்பொழுதுண்டாகிற ராசியில், குருவரும்போது, இளைய சகோதரர்க்கரிட்டமாம். ராகுபுடத்தை வைத்துக்கொண்டு அதில் செவ்வாய் புடத்தை எடுத்துக்கண்ட ராசியில் குருவரும்போது மூத்த சகோதரர்க்கரிட்டமாமெனச் சொல்லவேண்டும். எ-று.

உரைசெறிமூன் ருமாதி லாபாதி பதிக்கே
உறவாக மூன்ருதி யுயர்ந்தபிர பலனுய்
வரவுடன்மித் திரருடனே கூடியே லாப
மதிலிருக்க வவருடனே வந்துதான் கூடித்
திரமுடனே யிருந்ததொகைப் படிதுணைவ ருண்டாந்
திரிபூமா னெனக்கிரகச் செயலறிந்து பகர்மின்
கரியகுழன் மதிவதனக் காவியங்கண் ணினிய
கனியமுதம் போது மொழியாய் கன்னியாரே.

இ-ள். கரியநிறக் கூந்தலும், களங்கமில்லா மதிவதனமும், காவிமலர் போன்ற கண்களும் கனியும் அமிர்தமும்போன்ற இனியசொல்லையுமுடைய பெண்ணே? மூன்றுக்குடையோன் லாபாதிபனுக்கு மித்துருவாயும், மூன்ருமிடத்தோன் பலவானுயிருந்து மித்துருவுடன்கூடி. லாபஸ்தானத்திலிருக்க, அவருடன் கூடியதொகைப்படி சகோதரருண்டாம், இதில் ஆண்பெண் விவரம் கிரகத்தின் செயலறிந்து சொல்லவேண்டும். எ-று. 476

ஆர்கடகந் தேண்மீன லக்கினத்தைக் கண்டே
அன்புடனே நவபாகம் பண்ணியைந்தாம் பங்கில்
பாரிலுதித் தான்பின்னே பிறந்தகன்னிக்குப்
பக்குவமெப் படியென்னி லக்கடக மாயின்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நாரிவெகு தூலகாய முடைய ளாவள்
நவிறேளா கிற்பேய்போற் கால்குறுகிப் பருத்துச்
சேரவுருக் குலைந்திருப்ப ளாமீன மாகில்
செய்யகான் முடமாகித் திரிந்திடுவ ளென்னே

இ-ள். கடகலக்கினமாய் அதை ஒன்பதுபாகஞ்செய்து, ஐந்தாம்பாகத்திற் பிறந்தவனுச்குப்பின் பிறந்த பெண் குறுங்காலுடையவளாய், உருக்குலைந்துமிருப்பாள், மீனம், ஐந்தாம் பாகத்திற் பிறந்நவனுக்குப் பின் பிறந்த பெண் கால் முடமாகித் திரிவாளென்று சொல்லவேண்டும். எ-று. 477

வேறு

என்னுநன் மூன்ற மதிபதி புடத்தி
லேற்றசேய் புடத்தையுங் கூட்டித்
துன்னிடு மிராசி குருவரும் காலந்
துணையுறு மிப்புடங் கூட்டி
மின்னிய ராசி யங்கிஷ மட்டாய்
மேஷமே முதலவா யெண்ண
மன்னிய துணைவர் தொகைவரும் பாவர்
மருவிடி லழிந்திடுமென்னே.

இ—ள். மூன்றுமதிபதி புடத்தோடு செவ்வாய் புடத்தையுங் கூட்டி கண்டராசியில், குருவருங்காலம், சகோதரமுண்டாம் இப்புடங் கூட்டிய, விராசியங்கிஷம் வரைககும், மேஷமுத லெண்ணிக்கண்ட தொகைப்படி சகோதரத்தின் தொகையாம், இதிற் பாவர்கள் சம்பந்தம் பெற்றால் குறைந்துவிடுமென்று சொல்லவேண்டும். எ—று. 478

வேறு

ஆரு மிடத்தி லாய கருங்கோன்
வீரு யிருக்க மேவு மவன்றிசை
பேருய் வரினும் பெலமுள்ள சகோதரம்
நீரு ரியர்விடு நேவியோ ரறிய

இ-ள். ஆருமிடத்தில் இராகு பலத்திருக்க, அவன்திசைவந்தால் பலத்த சகோதரம் பல்லோரறியப் பூவில் நில்லாதிறந்துபோம். எ—று. 479

வேறு

அறிதாதை யொன்பானுக் கொன்பா னுலும்
அன்னேக்கோ நான்கினுக்கு நான்கி னுலும்
செறி கனிட்டற் கொரு மூன்றின் மூன்றினுலும்
சேட்டனுக்குப் பன்னென்றின் பன்னென் றுலும்
உறுமாமன் றனக்கும்புத் திரற்கு மைந்திற்
கோரைந்தி னுலுமுயர் சகோத ரங்கள்
நறுங்குழலங் கிசராசி யாண்பெண் ணேர்ந்தே
நவிலுவா யத்தொகையி னளவே யென்று.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். வாசனைவீசுங் கூந்தலுடைய பெண்ணே? தகப்பனுக்கு ஒன்பதுக்கு ஒன்பதாமிடத்தைக்கொண்டும், தாய்க்கு நாலுக்கு நாலாமிடத்தைக் கொண்டும், இளைய சகோதரருக்கு மூன்றுக்கு மூன்றுமிடத்தைக்கொண்டும், மூத்த சகோதரருக்குப் பதினொன்றுக்குப் பதினொன்று மிடத்தைக்கொண்டும், மாமனுக்கும், மக்களுக்கும் அஞ்சுக்கு அஞ்சாமிடத்தைக்கொண்டும், சகோதரங்களின் தொகையை சூங்கிஷராசி ஆண் பெண்ணறிந்து இத்தனையென்று சொல்லவேண்டும். 480

கர்னபூஷணபலன்

மூன்று மிடத்திற் சுபக்கிரக முற்றுப் பலமா யுறநோக்க
மூன்று மாதி பலவானு யிருக்க மூன்றி லுச்சருறத்
தோன்று கர்னபூஷணங்கள் சூடி யிருப்பன் சுகமாக
ஆன்ற கர்ணு பரணத்தை யளிப்பா ரிவரென் றறைவாரே.

இ-ள். மூன்றுமிடத்திற் சுபக்கிரகங்களிருக்க, அல்லது பார்க்க, மூன்றுமிடத்ததிபன் பலவாக, மூன்றுமிடத்தில் உச்சரிருக்க, காதில் ஆபரணம் பூட்டிருப்பன் என்று சொல்லவேண்டும். எ-று 481

அறையு மூன்றிற் சுக்கிரனே அமர்ந்தான் முத்துக் கடுக்கனுறும்
இறைவ னிருக்கி லபரஞ்சி யிரவி செவ்வாய்க் கிரத்தினங்கள்
அறையும் புதற்குச் சாமவன்ன மணியுஞ் சேருமிது வல்லால்
நிறையு மதியுற் றிடிற்சகலா பரணம் பெறுவர் நிச்சயமே.

இ-ள். மூன்றுமிடத்திற் சுக்கிரனிருந்தால், முத்துக்கடுக்கனும், குருவிருந்தால், தங்கக்கடுக்கனும் சூரியன் செவ்வா இருந்தால், ரத்தினக் கடுக்கனும், புதனிருந்தால் பச்சைவர்னக்கடுக்கனும், சந்திரனிருந்தால் சகல ஆபரணமும் நிச்சயமாய் அணிபவனென்று சொல்லவேண்டும். எ-று. 482

நிச்சயமாங் காரியுறிற் றிருமேனிக் கடுக்கன்
நீள்கருங்கோ ணீலஞ்செம் பாம்புக்குச் சிவப்பாம்
அச்சமற மூன்றுதி யிருக்கின்ற வீட்டுக்
காதிபல ஞயிருந்தா லணிசெவிப்பூ ணுளதாம்
உச்சிதமா யிவையெல்லாம் மிடக்காதுக் கென்ப
உயரும்லா பாதிபதி யுறைந்தருளும் வீட்டோன்
இச்சையுடன் கேந்திரத்தி னல்லோர்கண் டிடவே
இருக்கில்வலச் செவிவளம்பூ ணியம்பவும் பூண்டிடுமால்.

இ-ள். மூன்றுமிடத்திற்சனியிருந்தால் திருமேனிக்கடுக்கனும் இராகுவிருந்தால், நீலக்கடுக்கனும், கேதுவிருந்தால் சிவப்புக்கடுக்கனுமாம், இவைகள் மூன்றுமதிபதி யிருந்த வீட்டுக்குடையவன் பலமாயிருக்கில் அழகான காதா பரணமுண்டாம், இஃது இடது காதுக்காம், பதினோராமிடத்ததிபதி இருந்த வீட்டதிபன் கேந்திரத்தில் சுபக்கிரகங்கள், பார்வைபெற்றாலும் நின்றாலும் வலச்செவிக்கு வளமான ஆபரணத்தைச் சொல்லவேண்டும். எ-று.

போஜன பாத்திரபலன்

என் ணியரெண் டாமாதி லாபமூன் றுதி
இதமிலாப் பாவியர்கண் டிடத்தனியே நின்றால்
உண்ணவுநற் கலமில்லா னுகந்தரெண்டாம வீட்டில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உயருஞ்செங் கதிரோன்பெற் றுலகிலுள்ளோர் காண
நண்ணியதோர் சனிமேவ ரெண்டாம்வீட் டாதி
நண்பொடுமூன் ருும்வீட்டி னயந்துநிற்கத் தானும்
பண்ணுடனே சுபர்பார்க்கில் வரும்வெள்ளிக் கலமே
பாவக்கோள் விழிநோக்கப் படைப்பதுவெண் கலமே.

இ-ள். இரண்டுமூன்று பதினொன்றுக்குடையவர்கள் தனித்தனியே நிற்கப், பாவர்கள் சேர்ந்தாலும் பார்த்தாலும், உண்ணும் பாத்திரமில்லா தவனுவன். இரண்டாம் வீட்டில் சூரியன் சனியிருக்க, இரண்டாமிடத் தோன் மூன்ருமிடத்தில்நிற்க, சுபர்கள் பார்வைபெற்ருல், உலகோர் காணும்படி வெள்ளிப்பாத்திரங்கள் வந்துசேரும், பாவக்கிரகங்கள் பார்த் தால் வெண்கலப் பாத்திரங்கள் மிகச்சேரும் என்க. எ-று. 483

மூன்ரும்பாவகம்

சம்பூர்ணம்

நான்காம்பாவகம்

வாகனபலன்

சசிவாக னுதி சன்மத் தாதியிம் மூவர் கூடில்
அசுவவா கனமுண் டாகு மவருடன் வெள்ளி கூடில்
வசையிலாந் தோளி யுண்டாம் வாகனத் தானத் தாதி
ஒசிவின் றி வியத்தி லின் றி யுற்றிடிற் சிவிகை யுண்டே.

இ-ள். நிசாபதி, வாகனுதிபதி, லக்கினுதிபதி, ஆகிய இம்மூவருங் கூடி நின்ருல், குதிரைவாகன முடையவனும். இம்மூவருடன் சுக்கிரன் கூடினுல், அந்தோளியுண்டாம், வாகனத்தானத்துக்குடையவன் பலம் பெற்றும், மறையாமலும் நின்ருல்பல்லக்குண்டாம். எ-று. 484

பரிவுடன் பாக்கி யாதி பரிவாக னத்தானத்தில்
குருசுக்கிரனேடு கூடியிருந்திடி லலது நோக்கில்
கருதிய கனக தண்டி கைவரு மிவரோடிந்து
பிரியமாய் நிற்கிற் பூச்சக் கிரக்குடை பெறுவர் தாமே.

இ-ள். குரு சுககிரனேடு பாக்கியாதிபதி நான்காமிடத்திற் கூடி யிருக்க, அல்லது நாடிநோக்கத் தரங்கத்தாற்செய்த தண்டுகையுண்டாம். இவர்களோடு பிரியமாய் அரிச்சிகனுங்கூடப் பூச்சக்கிரக் குடையுடைய வனுமாமென் று சொல்ல வேண்டும். எ-று. 485

பூசக்ரக் குடை தந் தானைப் பொருந்தியே மதிப னிற்கில்
வீசுசா மரையுண் டாகும் மிகுபாக்கி யத்தோன் நான்கோன்
பாசமாம் பத்தி னிற்கப் பத்தாதி பதிசன் மத்தில்
நேசமாய் நிற்கிற் சிங்கா தனமுள னிருபன் பாரில்.

இ-ள். தாழ்வில்லாப் பூரணச்சந்திரனை ஏழுங்குடையோன்கூடி நிற்கில் வீசுகின்ற சாமரையுடையவனும் சுகபாக்கியாதிபதிமிகநேசராய்ச் சித்த மகிழ்ந்து பத்தாமிடத்தில் ஒத்து நிற்கப்பத்துக்குடையவன் ஜென் மலக்கினத்தில் சிநேகமாயிருக்கச் சிங்காசனம் பெற்றிருப்பவனுவன். எ-று. 486

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். வாசனைவீசுங் கூந்தலுடைய பெண்ணே? தகப்பனுக்கு ஒன்பதுக்கு ஒன்பதாமிடத்தைக்கொண்டும், தாய்க்கு நாலுக்கு நாலாமிடத்தைக் கொண்டும், இளைய சகோதரருக்கு மூன்றுக்கு மூன்றுமிடத்தைக்கொண்டும், மூத்த சகோதரருக்குப் பதினொன்றுக்குப் பதினொன்றுமிடத்தைக்கொண்டும், மாமனுக்கும், மக்களுக்கும் அஞ்சுக்கு அஞ்சாமிடத்தைக்கொண்டும், சகோதரங்களின் தொகையை சூங்கிஷராசி ஆண் பெண்ணறிந்து இத்தனையென்று சொல்லவேண்டும். 480

கர்னபூஷணபலன்

மூன்று மிடத்திற் சுபக்கிரக முற்றுப் பலமா யுறநோக்க
மூன்று மாதி பலவானு யிருக்க மூன்றி லுச்சருறத்
தோன்று கர்னபூஷணங்கள் சூடி யிருப்பன் சுகமாக
ஆன்ற கர்ணு பரணத்தை யளிப்பா ரிவரென் றறைவாரே.

இ-ள். மூன்றுமிடத்திற் சுபக்கிரகங்களிருக்க, அல்லது பார்க்க, மூன்றுமிடத்ததிபன் பலவாக, மூன்றுமிடத்தில் உச்சரிருக்க, காதில் ஆபரணம் பூட்டிருப்பன் என்று சொல்லவேண்டும். எ-று 481

அறையு மூன்றிற் சுக்கிரனே அமர்ந்தான் முத்துக் கடுக்கனுறும்
இறைவ னிருக்கி லபரஞ்சி யிரவி செவ்வாய்க் கிரத்தினங்கள்
அறையும் புதற்குச் சாமவன்ன மணியுஞ் சேருமிது வல்லால்
நிறையு மதியுற் றிடிற்சகலா பரணம் பெறுவர் நிச்சயமே.

இ-ள். மூன்றுமிடத்திற் சுக்கிரனிருந்தால், முத்துக்கடுக்கனும், குருவிருந்தால், தங்கக்கடுக்கனும் சூரியன் செவ்வா இருந்தால், ரத்தினக் கடுக்கனும், புதனிருந்தால் பச்சைவர்னக்கடுக்கனும், சந்திரனிருந்தால் சகல ஆபரணமும் நிச்சயமாய் அணிபவனென்று சொல்லவேண்டும். எ-று. 482

நிச்சயமாங் காரியுறிற் றிருமேனிக் கடுக்கன்
நீள்கருங்கோ ணீலஞ்செம் பாம்புக்குச் சிவப்பாம்
அச்சமற மூன்றுதி யிருக்கின்ற வீட்டுக்
காதிபல னுயிருந்தா லணிசெவிப்பூ ணுளதாம்
உச்சிதமா யிவையெல்லாம் மிடக்காதுக் கென்ப
உயரும்லா பாதிபதி யுறைந்தருளும் வீட்டோன்
இச்சையுடன் கேந்திரத்தி னல்லோர்கண் டிடவே
இருக்கில்வலச் செவிவளம்பூ ணியம்பவும் பூண்டிடுமால்.

இ-ள். மூன்றுமிடத்திற்சனியிருந்தால் திருமேனிக்கடுக்கனும் இராகுவிருந்தால், நீலக்கடுக்கனும், கேதுவிருந்தால் சிவப்புக்கடுக்கனுமாம், இவைகள் மூன்றுமதிபதி யிருந்த வீட்டுக்குடையவன் பலமாயிருக்கில் அழகான காதா பரணமுண்டாம், இஃது இடது காதுக்காம், பதினோராமிடத்ததிபதி இருந்த வீட்டதிபன் கேந்திரத்தில் சுபக்கிரகங்கள், பார்வைபெற்றாலும் நின்றாலும் வலச்செவிக்கு வளமான ஆபரணத்தைச் சொல்லவேண்டும். எ-று.

போஜன பாத்திரபலன்

எண்ணியரென் டாமாதி லாபமூன் றுதி
இதமிலாப் பாவியர்கண் டிடத்தனியே நின்றால்
உண்ணவுநற் கலமில்லா னுகந்தரெண்டாம வீட்டில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உயருஞ்செங் கதிரோன்பெற் றுலகிலுள்ளோர் காண
நண்ணியதோர் சனிமேவ ரெண்டாம்விட் டாதி
நண்பொடுமூன் ரும்விட்டி னயந்துநிற்கத் தானும்
பண்ணுடனே சுபர்பார்க்கில் வரும்வெள்ளிக் கலமே
பாவக்கோள் விழிநோக்கப் படைப்பதுவெண் கலமே.

இ-ள். இரண்டுமூன்று பதினொன்றுக்குடையவர்கள் தனித்தனியே நிற்கப், பாவர்கள் சேர்ந்தாலும் பார்த்தாலும், உண்ணும் பாத்திரமில்லா தவனுவன். இரண்டாம் வீட்டில் சூரியன் சனியிருக்க, இரண்டாமிடத் தோன் மூன்றுமிடத்தில்நிற்க, சுபர்கள் பார்வைபெற்ருல், உலகோர் காணும்படி வெள்ளிப்பாத்திரங்கள் வந்துசேரும், பாவக்கிரகங்கள் பார்த் தால் வெண்கலப் பாத்திரங்கள் மிகச்சேரும் என்க. எ-று. 483

மூன்றும்பாவகம்

சம்பூர்ணம்

நான்காம்பாவகம்

வாகனபலன்

சசிவாக ஞதி சன்மத் தாதியிம் மூவர் கூடில்
அசுவவா கனமுண் டாகு மவருடன் வெள்ளி கூடில்
வசையிலாந் தோளி யுண்டாம் வாகனத் தானத் தாதி
ஒசிவின்றி வியத்தி லின்றி யுற்றிடிற் சிவிகை யுண்டே.

இ-ள். நிசாபதி, வாகனுதிபதி, லக்கினுதிபதி, ஆகிய இம்மூவருங் கூடி நின்ருல், குதிரைவாகன முடையவனும். இம்மூவருடன் சுக்கிரன் கூடினுல், ஆந்தோளியுண்டாம், வாகனத்தானத்துக்குடையவன் பலம் பெற்றும், மறையாமலும் நின்ருல்பல்லக்குண்டாம். எ-று. 484

பரிவுடன் பாக்கி யாதி பரிவாக னத்தானத்தில்
குருசுக்கிரனேடு கூடியிருந்திடி லலது நோக்கில்
கருதிய கனக தண்டி கைவரு மிவரோடிந்து
பிரியமாய் நிற்கிற் பூச்சக் கிரக்குடை பெறுவர் தாமே.

இ-ள். குரு சுககிரனேடு பாக்கியாதிபதி நான்காமிடத்திற் கூடி யிருக்க, அல்லது நாடிநோக்கத் தரங்கத்தாற்செய்த தண்டுகையுண்டாம். இவர்களோடு பிரியமாய் அரிச்சிகனுங்கூடப் பூச்சக்கிரக் குடையுடைய வனுமாமென்று சொல்ல வேண்டும். எ-று. 485

பூசக்ரக் குடை தந் தானைப் பொருந்தியே மதிப னிற்கில்
வீசுசா மரையுண் டாகும் மிகுபாக்கி யத்தோன் நான்கோன்
பாசமாம் பத்தி னிற்கப் பத்தாதி பதிசன் மத்தில்
நேசமாய் நிற்கிற் சிங்கா தனமுள னிருபன் பாரில்.

இ-ள். தாழ்வில்லாப் பூரணச்சந்திரனை ஏழுக்குடையோன்கூடி நிற்கில்வீசுகின்ற சாமரையுடையவனும் சுகபாக்கியாதிபதிமிகநேசராய்ச் சித்த மகிழ்ந்து பத்தாமிடத்தில் ஒத்து நிற்கப்பத்துக்குடையவன் ஜென் மலக்கினத்தில் சிநேகமாயிருக்கச் சிங்காசனம் பெற்றிருப்பவனுவன். எ-று. 486

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பரவுவா கனுதிபதி பாக்கியத்தில் நிற்கப்
பாக்கியத்தா னுதிபதி கேந்திரத்தைப் பற்ற
இருவர் நிற்கு மனே நல்லோ ரிருக்குமனே யாயின்
இனியசுபக் கிரகத்தோ டிசைந்துமிகக் கூட
விரவுலக்கி னுதிபதி வாகனகேந் திரத்தில்
மேவுகினுங் கனகதண்டி கையுமிகு தனமும்
மருவுமத யானைவா கனங்களுமுண் டாக
வரங்கொடுப்பன் வாகனகா ரகனுஞ் சுக்கிரனே.

இ-ள். நாலாமிடத்தோன் ஒன்பதாமிடத்திலிருக்க, ஒன்பதாமிடத்தோன் கேந்திரத்திலிருக்க, அதுவும். சுபர்மனையாகி அவ்விருவரையும் சுபக்கோட்கள் கூடியிருக்க, லக்கினுதிபதி நாலாமிடத்தில் நிற்க தங்கச் சிவிகையும், மிகுந்ததிரவியமும் யானைவாகனங்களு முண்டாகுகவென்று வாகனகாரகனுகிய சுக்கிரன் வரங்கொடுப்பன். எ-று. 487

சுக்கிரனுன் காதியுடனே கூடினுலும்
துலங்குமிவ ரிருவர்கேந் திரத்தினிலுற் ருலும்
திக்கென நான் காதிசசி யுடன் லாபத் துறினும்
திறல்பலவா கன முண்டு தீ தகல நான்கில்
தக்ககுரு விருந்திடவே வாகனத்தா னத்தான்
தன்னுடன்சுக் கிரன் கூடிற் றண்டிகையுண்டாகும்
மிக்கசுங்கன் ருன்வாக னுதியே யாகி
மேவுசன்மா தியைக்கூடில் வெறுஞ்சஞ்சார மேயாம்.

இ-ள். சுக்கிரன் சவுக்கியசுகமுள்ள நாலாமிடத்தானேடு கூடினுலும், அல்லது இவ்விருவரும் கேந்திரத்தில் நின்ருலும், நாலாமிடத்ததிபன், சந்திரனுடன் கூடி, பதினேராமிடத்தில் நின்ருலும், பலம் பெற்ற பலவாகன முண்டாம். சற்றுங்குற்றமில்லாது, நாலாமிடத்தில் நற்குருவிருக்க, நாலாமிடத்தோனுடன் சுக்கிரன் கூடியிருக்க, பல்லக் குண்டாம், சுக்கிரன்வாகனுதி பதியாகி லக்கினுதிபனைக் கூடியிருந்தால் வாகனமில்லாமல் வெறுஞ்சஞ்சாரமே செய்வான். எ-று. 488

சாரமுறுஞ் சோமனுக்கு மூன்றிற்சுக் கிரனும்
தானிருக்கச் சுக்கிரனுர் தமக்குமே மூன்றில்
வீரமுறு மதியிருக்க வன்றியே பின்னும்
வினவியொரு வரையொருவர் பார்த்துமே நிற்கப்
பாரமுறுங் குடும்பத்தா னத்தைநல்லோர் நோக்கிப்
பார்த்தாலு மிலக்கினத்தைப் பார்க்கினும்வா கனங்கள்
சேருமிக வென்றென்றே நல்லோர்கள் சொன்னுர்
சிலைப்புருவக் கயலொத்த விழிதெரிவை நேளாய்.

இ-ள். விற்போன்ற புருவமும், மீன்போன்ற கண்ணையுமுடைய பெண்ணே? சோமனுக்கு மூன்றில் காமனிருக்க, அல்லது, காமனுக்கு மூன்றில் சோமனிருக்க, அல்லது இவர்கள். ஒருவரையொருவர் பார்க்க, இரண்டாமிடத்தை யாவது, அல்லது லக்கினத்தையாவது, சுபர்கள் பார்த்தாலும் வாகனங்கள், மென்மேலும் சேருமென்று நல்லோர்கள் சொல்வார்கள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வேறு

நாலிடத் ததிபன் ருனு மிலக்கினத் துறப்பல் லக்கின்
மேலுறுஞ் செல்வ மெய்தி மேதினி தன்னில் தாழ்வன்
கோலிய லக்கி னத்திற் குருவுற வவனை நல்லோர்
சாலவும் பார்க்க மேலாந் தண்டிகை மருவும் வாகாய்.

இ-ள். நாலாமிடத்ததிபன் கோலாகலமாய் இலக்கினத்தில் இருக்க பல்லக்குநடத்துகின்ற செல்வமுடையவனுய்ப் பூமியில் வாழ்வான் லக்கினத்தில் குருவிருக்க அவனைச் சுபர்கள் பார்க்க மேலானதண்டிகை யுடையவனும்.

வேறு

வாக னுதி மருவு மனை தனக்
காக வீரைத் தகத்துக் கதிபனும்
ஏக வீட்டுக் கிறைவனைக் கூடிடில்
போக வான்வெகு பூமிக் கரசனே.

இ-ள். நாலாமிடத்ததிபன் இருக்கின்ற வீட்டுக்கு பத்தாமிடத்தோனும் லக்கினுதிபதியைக் கூடியிருந்தால் போகவானுகவும், வெகுபூமிக்கு வேந்தனுகவும் இருப்பான். எ-று. 492

வேறு

அரசேகேள் வாகனத்தா னுதிநின்ற ராசி
அன்பொடுநல் லோர்வீடாய்ப் பணபரகேந் திரமாய்
உரைசெறியச் சனித்தசிறு குடிசையுமா டரங்காம்
உகந்தருளன் னைக்கின்ப முண்டாம்வா கனத்தோன்
வரிசையாய்ச் சனிகுருவேன் மதகயந்தண் டிகையாம்
வளர்கலைமா மதியாகிற் பூச்சக்ரக் குடையாம்
விரைசெறிசுக் கிரனுகிற் பல்லக்குண் டிரவி
மேவிலெரு தாம்புதற்கு விசித்திர பல்லக் காமே.

இ-ள். வாகனத்தானுதிபதி நின்றவிராசி, சுபர் விடாயும் பணபரம் கேந்திரமாயும், இருக்கச்செனித்த ஜாதகனது சிறு குடிசையும், (பின்னல்) பெரியமாளிகையாம், தாய்க்கு இன்பமுமுண்டாம், வாகனத்தோன் சனி, குருவாகில், யானையும் பல்லக்கு முண்டாம். பூரணச் சந்திரனுகில் பூச்சக்கிரக் குடையாம். சுக்கிரனுகில், பல்லக்குண்டாம், சூரியனுகில் ரிஷபங்களையுடையவனும் புதனுகில், கனிதப்படிசெய்த விசித்திரப்பல்லக்குண்டாம். எ-று.

வேறு

பலன்றரு வாக னுதி பண்பறு புடத்தி னேடு
கலந்துசுக் கிரன் புடத்தைக் கூட்டியே கண்ட ராசி
தலந்தனி லரசன் வந்து தான்செறி கேந்தி ரத்தும்
நலந்திரி கோண மீது நண்ணில்வா கனமுண் டென்பார்.

இ-ள். நாலாமிடத் தோன்புடத்தோடு சுக்கிரன் புடத்தையும், கூட்டிக் கண்டராசியிற் குருநின்ருலும், அல்லது கேந்திர திரிகோணங் களில் நின்ருலும் வாகனமுண்டாம். எ-று. 494

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வேறு

பலர்புகழுஞ் சுக்கிரற்கு மூன்றி லேழில்
பண்புடன்சந் திரனிருக்கச் சசிக்கேழ் மூன்றில்
நலமருவுஞ் சுக்கிரன்று னிருக்க வேதான்
நண்பொடுவா கனமுண்டு நான்கா மாதி
நிலவுநல்லோ ருடன் கூடிச் சந்திரகேந் திரத்தில்
நிற்கில்வா கனமுண்டு நிதியுமிகத் தேடி
உலகினெடு நாளரசன் போலவே வாழ்வன்
உணர்புத்தி மானென்றே யுரைத்தனர் நல்லோரே.

இ-ள். சுங்கனுக்கு மூன்றில் ஏழில் திங்களிருக்க, அல்லது திங்களுக்கு மூன்றில் ஏழில் சுங்கனிருக்க, வாகனமுண்டு நாலாமிடத்ததிபன், சுபர்களுடன் கூடிச் சந்திரகேந்திரத்தி லிருக்க, வாகனமுண்டு, திரவியமும் சம்பாதித்து நெடுநாள் அரசன்போல வாழ்வும் பெற்று, புத்திமானுவானென்று நல்லவர்கள் சொல்லுவார்கள். எ-று. 495

வேறு

உரைத்திடுநான் காமாதி லக்கி னுதி
யுடன் கூடித் தீயோர்க ளுடனுங் கூடி
நிரைந்தொருவீட் டினிலிருக்கத் தானந்த வீடு
நீடுசன்மத் தாதிக்கோ ருச்சமனே யாயின்
நரைத்தபரி வாகனங்க ளுளன்புத்தி மானும்
நண்புடனே மன்னரையெந் நாளுஞ்சே விப்பன்
இரைத் த்டுசன் மாதிபதி நான்காதி நல்லோர்
இவர்மூவர் கேந்திரத்தி லிருக்கிலின்ப முண்டாம்.

இ-ள். பாவரோடு ஆவலாய்ச் சுகாதிபதியும், ஜென்மாதிபதியும் சேர்ந்து, ஒருவீட்டிலிருக்க, அந்தவீடு ஜென்மாதிபதிக்கு உச்சவீடாகின் வெண்குதிரை வாகனங்களுள்ளவன் புத்திமான், இராஜசேவை செய்பவனுமாம். ஜென்மாதிபதி நாலாமிடத்ததிபதி சுபர்கள் இம்மூவர்களுங் கூடி கேந்திரத்திலிருக்கச் சுகமுடையவனும். எ-று. 496

ஆமிரவி மதிநல்லோர் மூவரொன்றுய்க் கூடி
அன்பொடுகேந் திரத்திருக்கின் மதயானை சேரும்
நீமமொடு சன்மாதி பத்தாமா திபனும்
நிறைந்தசுப ருடன்கூடிக் கேந்திரத்தி னிற்கில்
வாமமுறு மதகரிவா கனஞ்சேரும் பருவ
மானசவுந் தரமனையாள் மருவுமறி வினனும்
தீமையிலாச் சன்மாதி லாபாதி நல்லோர்
சேர்ந்துகேந் திரத்திருக்கிற் சிந்துரமுண் டாமே

இ-ள். செங்கதிரோன் வெண்கதிரோன் நல்லோராகிய இம்மூவர்கள் ஒன்றுய்க்கூடி, கேந்திரத்தில் நின்றுல் மதயானையுண்டாம். லக்கினத்தோனும், பத்தாமிடத்தோனும், நிறைந்த சுபர்களோடுகூடி கேந்திரத்தில் நின்றுல் மாலையையுடைய யானைவாகனமுண்டாம். பருவமுடைய அழகியமனையாளும், சேர்வன். அறிவுள்ளவனுமாவன், லக்கினுதிபதியுடன் லாபாதிபனும், சுபருங்கூடிக் கேந்திரத்திலிருந்தால் யானைவாகனமுண்டாம் (செப்புதற்கரிய விப்பிரத்துறையால் அதிகதனம் பெறுவன். எ-று. 497

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உண்டாம்விப் பிரதுரையா லதிகதன முடையன்
உறுசன்மத் திற்பத்தி லுத்தமர்க ளிருக்க
மிண்டாஞ்சன் மாதிபன்பத் தாமதிப னேடும்
விரும்பியே நல்லோர்தா மும்மேவி நிற்க
வண்டாருங் குழலின்மட வாயரச ராலும்
மாணிக்க வகைசேரு மன்னரைச்சே வித்தே
கொண்டாடு சத்திரசா மரைகளமிக வுள்ள
கோமானு குவனென்றே கூறுவர்மே லோரே.

இ—ள். கொண்டலையொத்து வண்டு மொய்க்குங் கூந்தலையுடைய பெண்ணே? கொண்டாடும், ஜென்மலக்கினத்திலும், பத்தாமிடத்திலும், சுபக்கிரகங்களிருக்க, லக்கினதிபன், இரண்டாமதிபன், பத்தாமதிபன், இவர்களோடு, சுபக்கிரகங்கள் சேர்ந்திருக்க, அரசர்களால், மாணிக்க வகைசேரும், இராஜசேவை செய்பவனும், சத்திரங்கள் கட்டி, சாமரை யோடு கூடிய விசேஷகோமானும், அறிவுடையவனும், அதிக திரவிய முள்ளவனும், அரசனுமாவானென்று நூலாய்ந்த மேலோர்கள் கோலா கலமாய்ச் சொல்லுவார்கள்.

கூறுஞ்சன் மாதிபன்பத் தாமிடத்தி லிருக்கக்
குலவுபத்தா திபன்நான்கா மிடத்திற் கூட
வீறுடனுன் காமாதி பதியுச்ச மாகில்
வேந்தனு குவன்சுகவான் வெகுலிலா விநோதன்
பேறுடன்பத் தாமாதி பதிநான்கி னிற்கப்
பெருமையுட னுன்காதி பதிபத்தி னிற்கத்
தேறுசன் மாதிபதி யுச்சமாய் மேவத்
திரசகல வாகனங்கள் சேருமன்னனுமே.

இ—ள். ஜென்மாதிபதி கன்மத்திலும், கன்மாதிபதி சுகத்திலும், சுகாதிபதி யுச்சமுமானுல், வேந்தனும், மிகச்சாந்தனும், சுகமாந்தனும் லீலாகாந்தனுமாவன். பத்தாமிடத்தோன் நாலாமிடத்தோன் நாலா மிடத்தோன் பத்தாமிடத்திலும் நிற்க லக்கினதிபதி உச்சமாக திரமான சகல வாகனமுடையவனுயும் அரசனுயு மிருப்பவனுவன். எ-று. 499

மன்னியரெண் டாமதிபன் லாபத்தி லிருக்க
மற்றுமந்த லாபாதி வந்திரெண்டின் மேவ
உன்னியநான் காமாதி பதியுச்ச மாக
உயர்சகல வாகனங்க ளுளவேந்தனுவன்
சொன்னவிரண் டாமதிபன் லாபாதி யிருவர்
தொடர்ந்திரண்டா மிடத்திருக்கச் சூழ்பத் தாமதிபன்
பின்னுமுச்ச னுயிருக்க வாந்தோளி யுண்டாய்ப்
பேருலகில் வாழ்வரெனப் பேசுவர் நூல் வல்லோர்

இ-ள். குடும்பாதிபதி லாபத்திலும், லாபாதிபதி குடும்பத்திலும் இருக்க, சுகாதிபதி உச்சமாக உயர்வான சகலவாகனங்களுடைய அரச னுவன் லாபாதிபனும் குடும்பாதிபனும், இரண்டாமிடத்திலிருக்க, பத்தா மிடத்தோன் உச்சமாயிருக்க, பல்லக்குடையவனுய், உலகில் வாழ்வா னென்று நூல்வல்லோர் சொல்லுவர். எ-று. 500

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மாதுர்பலன்

வேறு

அன்னை தன் ருனத்தாதி யதிமட்ட மத்திற் காரி
தன்னுடன் கூடிற் பின்கோ சரமன்னைக் கைந்தொன்பானின்
மன்னிய காரிமேவின் மாதாவுக் கரிட்டஞ் சொல்லும்
மின்னிய நற்கோளுச்ச மெய்திடி மெய்திடி னன்காம் நல்லாய்.

இ-ள். அன்னைஸ்தானமாகிய நன்னிலையுள்ள நான்காமிடத்தோன் முன்னம், அஷ்டமத்திற் சனியுடன் கூடியிருக்கக் கோசரத்தில், தாய் ஸ்தானத்திற்கு, ஐந்து, ஒன்பதாமிடத்தில் சனிவருங்காலம், தாய்க்குத் தோஷமாம், சுபக்கிரகங்கள் உச்சம்பெற்றால் நன்மையாம். எ-று. 501

நாலிரண் டேழி டத்தி னதிபராய் நண்ணு மூவர்
நாலிரண் டேழி டத்திற் சனிகுச னுடனே நண்ணில்
நாலிரண் டேழிற் செவ்வாய் நண்ணிடிற் காரி பார்க்கில்
சாலவன் னைக்க ரிட்டஞ் சாற்றுவர் சனியைக் கொண்டே.

இ-ள். நாலு-இரண்டு-ஏழு-இவ்விடத்ததிபர்கள், மூவரும், அந்தந்த இடங்களில், சனி செவ்வாயுடன், சேர்ந்து நின்றாலும், அல்லது, செவ்வாய் நின்று சனிபார்த்தாலும், தாய்க்கு அரிஷ்டமாம். சனியின் பலத்தைக் கொண்டு சொல்லவேண்டும்- எ-று. 502

சனிகுசற் கைந்தே ழொன்பான் றனிச்சசி யுறிற்றாய் நில்லாள்
இனியபொன் பார்க்கி னிற்ப ளிலக்கினத் திந்து நிற்க
முனிபவ ரிந்தை நோக்க முந்துமே ழிடத்திற் செவ்வாய்
தனியுற வந்த பிள்ளை தனைப்பிறர் வளர்ப்பர் காணாய்.

இ-ள். ஆயுட்காரகன், அங்காரகனுக்கு ஐந்து-ஏழு ஒன்பதாமிடங்களில் ஆலோனிருந்தால், மாதா இறப்பள், அதைககுருபார்த்தால், இறக்க மாட்டாள், இலக்கினத்திற் சந்திரனிருக்க, பாவர்கள் சந்திரனைப்பார்க்க, ஏழாமிடந்திற் செவ்வாயிருக்கப் பிறந்தபிள்ளையை அன்னியர்கள் வளர்ப்பார்கள். எ-று.

கதிரவற் கிரண்டிற் பன்னி ரண்டினிற் காரி நிற்க
மதிதனக் கிரண்டிற் பன்னி ரெண்டினின் மந்த னிற்கக்
கதிர்குசன் கூடி மற்றுங் காரிசந் திரனுங் கூட
அதிபனுந் தந்தை தாய்க்கு மரிட்டமென் றுரைகள் பன்னே.

இ-ள். இரவிக்கு, இரண்டுபன்னிரண்டுலும், இந்துவுக்கு இரண்டு பன்னிரண்டிலும், கரியவனாகிய சனியிருந்தாலும், கதிர்குஜனாகிய சூரியன் செவ்வாய் கூடினாலும், காரியமதியாகியசனி, சந்திரன் கூடினாலும் தாய்க்கும் தந்தைக்கும்தோஷமென்று சொல்லவேண்டும் (சூரியனுக்கு இரண்டுபன்னிரண்டில்) சனியும், சூரியனுடன் செவ்வாய்கூடத் தகப்பனுக்கும், சந்திரனுக்கு இரண்டு பன்னிரண்டில், சனியும், சந்திரனுஞ் சனியுங்கூடத் தாய்க்குத் தோஷமாம். எ-று. 504

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வேறு

பன்னிரண்டி லிரண்டினிற் சன்மத்தி லிந்து
பாவருடன் கூடிநிற்கப் பயந்தவன்னைக் கரிட்டம்
அன்னையதி பன்றிசையில் மாதுருதா னத்துக்
கைந்தொன்பா னிற்காரி யணுகிலரிட் டமதாம்
மன்னியமா துருத்தானந் தனக்கட்ட மத்தில்
மந்தனுன் காதிபனு மருவியுறி லரிட்டம்
என்னுநான் கதிபனுட னேசெவ்வா யேனும்
இரவியதா கிலுங்கூடி லிடர்நோய்புந் தியினில்.

இ-ள். பன்னிரண்டு, இரண்டு, ஜென்மலக்கினம், இவைகளில் சந்திரன், பாவர்களுடன் கூடிநிற்க, பெற்றதாய்க்கு அவ்வதிபன்திசையில் அரிட்டமாம். மாதுருத்தானத்திற்கு ஐந்து ஒன்பதாமிடங்களில், சனியிருந்தால், தாய்க்கு அரிட்டமாம் மாதுருதானத்திற்கு அட்டமத்தில் சனியும், மாதுருத்தானுதிபனுங்கூடி நிற்கில், தாய்க்கு அரிட்டமாம். நான்காமிடத்தோனுடன் செவ்வாயாவது அல்லது. சூரியனுவது கூடி நிற்கில் தாய்க்கு புதன் திசையில் துன்பந்தரத்தக்க நோயுண்டாம். எ-று. 505

புந்தியுநான் காதிபனுந் தீயோர் வீட்டிற்
புகழ்கோனேக் கறவருநா ளரிட்ட மாகும்
சிந்தையுட னுன் காதி யுடன்ற னுதி
சேர்ந்தெங்கே நிற்கிலும்பொன் சேத மன்னைக்
கந்தநான் காதியுடன் காரி செவ்வாய்
அணுகிலவர் திசையிலன்னைக் கரிட்ட மாகும்.
வந்து செவ்வாய் நான்கிலுநிற் சனியு மிந்து
மருவியெங்கே நின்ருலு மரணமற்றங் கதமே.

இ-ள். பாங்குள்ள புலவனுகிய, புதனும் நான்குக்குள்ளவனும், பாவர் வீட்டில், சுபர்பார்க்காதிருந்தால், அப்பாவர்திசையில் தாய்க்கு அரிட்டமாம் சுகாதிபதியுடன், தனுதிபதியுஞ்சேர்ந்து எவ்விடத்தில் நின்ருலும், தாய்க்குப் பொருட்சேதமாம், நாலாமிடத்தோனுடன் நீலனுகிய சனி, வேலனுகிய செவ்வாய்கூடி நின்ருலும், அவர்கள் திசையில் தாய்க்கு அரிட்டமாம், செவ்வாய் நாலாமிடத்திலிருக்கசனியும் சந்திரனுங் கூடி யெங்கே யிருந்தாலும், தாய்பழிச் சொல்லோடு மரணமடைவாள். எ-று. 506

வே று.

அத்தங் கமதாய் மாதுருத்தா னுதி வியத்தி லுறநான்கில்
மெய்த்துங் கலைவெண் மதியிருக்க வதற்கேழ் காரி மேவுகினும்
பத்தி செறிசுக் கிரற்கேழிற் பூமிசுதனும் பொருந்தி நிற்கில்
சித்த மன்னை தனக்கரிட்டஞ் சேரும் நற்கோள் செறியினன்ரும்.

இ-ள். மாதுருத்தானுதிபதி, பாவம்பொருந்தி பனிரண்டாமிடத்தில் இருக்க, நாலாமிடத்தில் சந்திரனிருக்க, அதற்கேழாமிடத்தில் சனியிருக்கினும், சுக்கிரனுக்கு ஏழாமிடத்தில் குருதியாகிய செவ்வாய், பொருதியிருக்கினும் தாய்க்கு அரிட்டமாம். சுபக்கோள் சேர்ந்திருந்தால் நன்மையாம். எ-று 507

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

செறியு மிரவி யுடன்காரி சேர்ந்து குடும்பந் தனிலிருந்தே
அறியு மூன்ரு மதிபனையு மன்னை பதிநான் காமிடமும்
பிறிய மறவே சனிபார்க்கப் பெலமற் றிந்தோ டரவிருக்க
மறுதீக் கோணன் காதியுச்ச மாஞு லும்போம் மாதாவே.

இ-ள். தந்தையாகிய சூரியனும், அவன்மைந்தனுகிய சனியுஞ் சேர்ந்து, குடும்பத்திலிருந்து, தைரிய சுகாதிபதியையும், நான்காமிடத்தையும், சனிபார்த்தாலும், அமரச்சந்திரனோடு பாம்பிருந்தாலும், பாவர்களும் நாலாமிடத்தோனும் உச்சம்பெற்ருலும் மாதாமரிப்பள். எ-று. 508

மாதா பதியிற் சசிவெள்ளி மாநா கம்மூன் றுறவதற்கேழ்
மீதா னைந்திற் காரியுற வெய்யோ னுடன்மூன் ருதியைந்தில்
தீதா யிருக்கச் சனியவனைத் தெரிந்து பார்க்கக் குடும்பத்தை
ஏதா னங்கா ரகன்பார்க்க வீன் ருட் கரிட்ட மெனச்சொல்லே.

இ-ள். சொல்லும்படியானமாதுருத்தானத்திற் சோமனும் காமனும் ஈமனும், இம்மூவழிமிக்க, அதற்கேழாமிடம், ஐந்தாமிடம், இதிற் சனியிருந்தாலும், சூரியனுடன்மூன்ரு மிடத்ததிபனுஞ்சேர்ந்து ஐந்தாமிடத்திற்பல மற்றுநிற்க, சனி, இவர்களைப்பார்க்க, குடும்பஸ்தானத்தைச் செவ்வாய்பார்க் கத்தாய்க்கு அரிட்டமாமென்று சொல்லுக. எ-று. 509

சொல்வார் மேட லக்கினத்துக் கன்னை பதியிற் சுங்கபுதன்
உல்லா சங்கள் பெறநிற்க வதற்கே ழரச னுறச்சசிக்கும்
பொல்லா வேழிற் சனியிருக்க வன்னைக் கன்னை போமுச்சம்
நல்லமதியு நல்லோரு மன்னைக் கரிட்டம் நல் காரே.

இ-ள். லக்கினம் மேடமாக, அதற்கு நாலாமிடத்திற் காமனும், சாமனும். பலம்பெற்றுநிற்க, அதற் கேழாமிடத்திற் குருவிருக்க சந்திரனுக்கு ஏழாமிடத்திற் சனியிருக்கத் தாய்க்குத்தாய் (பாட்டி) இறந்துபோவாள், உச்சர்களும், சுபசந்திரனும், சுபர்களும், தாய்க்குத் தோஷஞ்செய்ய மாட்டார்கள். எ-று. 510

நல்கார் சனிசெவ் வாயிரண்டு நான்கா மிடந்தன் னைப்பார்க்கில்
ஒல்கா திருக்கிற் காரகனு மொசிவாய் விரய முற்றிடவே
சொல்லா ளன்னை தனக்குறுநோய் சினத்தே யாவஞ் சேர்ந்துற்ருல்
நில்லா ளன்னை பொன்னேக்கி னிற்பள் சிலநா ணீனிலத்தே.

இ-ள். சனி செவ்வாய் இவர்கள் நாலாமிடத்தைப் பார்த்தாலும், இருந்தாலும், காரகன்பலமற்று, பனிரண்டாமிடத்தில் இருந்தாலும். தாய்க்கு நோயுண்டாம், பாம்புஞ்சேர்ந்து நின்ருல் தாய்க்குத்தோஷமாம், குரு பார்த்தால் சிலநாள் பூமியிலிருப்பள். எ-று. 511

நிலத்தில் நான்கா மிடந்தனக்கோ ரிரண்டா மிடத்தி லிருந்தவர்கள்
பலத்தைக்குடும்பாதிபன் பலத்தைப்பெற்றதாயும் பலன்பெறுவள்
நலத்த நான்கா மதிபனுச்சம் நண்ணி யாணங் கிஷத் திருந்தால்
குலத்துக் கொழுநன் றண்டிப்புக் குள்ளா காளக் கொடிதானே.

இ-ள். நாலாமிடத்திருந்தவர்கள் பலத்தையும் குடும்பாதிபன் பலத்தையும்பெற்றிருந்தால் பெற்றதாயும் பலன்பெறுவாள். நான்காமிடத்ததிபன் உச்சம்பொருந்தி ஆணங்கிஷமேறி யிருந்தால் கணவன் தண்டித்தலுக்கடங்காத தாயாவள். எ-று. 512

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கொடிய கதிரா தவன்புடத்துக் குள்ளம் புலியைத் தான் வாங்கிக்
கடியு மிராசி தனிலரசன் பற்றுங் கால நிரியாணம்
கடிய மதியின் புடத்துக்குள் காரி புடத்தைத் தான்வாங்கி
நெடிய ராசி தனிற்காரி வருநா ளன்னை நிரியாணம்,

இ-ள். சூரியஸ் புடத்திலிருந்து சந்திரன் புடத்தை வாங்கி மீதம் வரும் இராசியில் குருவருங்காலமும், சந்திரஸ்புடத்திலிருந்து, சனிஸ் புடத்தை வாங்கி மீதராசியில் சனிவருங்காலமும் தாய்க்கு அரிட்டமாம். எ-று. 513

ஆணி மதியந் தனக்கேழிற் செவ்வா யுறிலன் னைக்கரிட்டம்
காணி யாமா துருத்தானங் கடக மாகப் பிறைநிற்கில்
பூணும் வயது பூரணமாம் பொல்லா ரிரண்டு புறமிருக்க
ஏணு மதிய நடுவிருக்க வன்னைக் கரிட்ட மிசைந்திடுமே.

இ-ள். திங்களுக்கு ஏழாமிடத்தில், மங்கலனிருந்தால் தாய்க்கு அரிட்டமாம். மாதுருஸ்தானம் கடகமாக, அதிற் சந்திரனிருந்தால் தாய்க்குப் பூரண வயதாகும், இந்துவுக்கு இரண்டுபக்கமும், முந்தப்பாவர்களிருக்க, தாய்க்கு அரிட்டமாம். எ-று. 514

இசைந்த வன்னை பிதாத்தானத் திறைவ ரிரவி யுடன்கூடி
அசைந்தி டாதெட் டாறுவியத் துறினு நீச மாகவுமே
நிசந்தா னுறவே யிருக்கிற்ருய் நின்ற தந்தை யிருவருக்கும்
கசந்தே பிரிய மில்லாத கடின மைந்த னுங்கண்டீர்.

இ-ன். மாதுருபாக்கியத்ததிபர் சூரியனுடன்கூடி, சாதுரிய மறைவு ஸ்தானமாகிய, ஆறு எட்டு பன்னிரண்டில் இருந்தாலும், நீசம்பெற்றிருந்தாலும், தாய் தகப்பனுக்குப் பிரியமில்லாத கசப்போடு கூடிய கடுமைபெற்ற புத்திரனுவான். எ-று. 515

கண்டவன்னைபிதாத்தானக் கடவுளிசைந்தெங் கேயுறினும்
மண்டுமிர விமதிகூடி மாதா தந்தைதானத்தில்
அண்டியிருக்கிற்பிதாவுடனே யன்னைக்கெய்துமனுமரணம்
பண்டுநான்கொன்பதற்கிறைவர் பலத்தாற்பாலன்பரிவுசொல்வாம்.

இ-ள். நாலு ஒன்பதாமிடத்ததிபர்கள் ஒன்றுகூடிஎங்கேயாயினுமிருக்கச் செங்கதிரோனும், வெண்கதிரோனும்சேர்ந்து, சுகபாக்கியத்திலிருக்கப் பிதாவுடன் தாயும் மரணமடைவள். நாலு ஒன்பதாமிடத்ததிபர்கள், பலம் பெற்று நின்ருல் பாலரின் விசேடம் பகருவோமென்பதாம். எ-று. 516

சொல்லுநான் கொன்பதுக்கிறைவர் தொடர்ந்துதனபாக்கியலாபத்
தல்லலறவேயிருந்தாலு மடைவேயுச்சகேந்திரத்தும்
வெல்லுந்திரிகோணங்களினு மேவிற்றந்தைதாய்மைந்தர்
எல்லையில்லாச்சந்தோஷ மெய்தியிருப்பாரென்பாரே.

இ-ள். நாலு ஒன்பதாமிடத்ததிபர்கள், மேலுமொன்ருய்க்கூடி, இரண்டு ஒன்பது பதினேராமிடங்களில், பாபசம்பந்தங்க ளில்லாதிருந்தாலும், இவர்கள் உச்சகேந்திர திரிகோணங்களிலிருந்தாலும் தாய் தகப்பன் ஜாதகன் இவர்கள் அளவில்லாத சந்தோஷத்தோடிருப்பார்களென்று சொல்லுவர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

என்பாரொன்பானுதிபதி யினியபலமாய்ச்சன்மாதி
முன்பாநான்காமாதிபதி மூவர்பலன்களற்றிருக்க
அன்பாயீன்றதாயுதரத் தனுகுங்காப்பத் தந்நாளில்
வன்பாய்வருந்திமரிப்பளென வகுத்தார்சுருதிவல்லோரே.

இ-ள். ஒன்பதாமிடத்ததிபதி, ஊக்கமாகப் பலம் பெற்றும், லக்கினம் இரண்டு நான்காமிடத்ததிபர்கள், பலனற்றுமிருக்கத் தாய் கெர்ப்பந்தரிக்குங் காலத்திலேயே கஷ்டப்பட்டு இறந்துவிடுவாளென்று கூறுவர். எ-று. 518

இந்துசேயாருமாதி யிவர்களுங்கூடி நான்கில்
வந்துதானிருக்கிலீன்ற மாதாவுஞ்சோரம்போவள்
அந்தநான்கொன்பதொன்றிற் கதிபர்கள் கூடுக்கோணம்
நந்துகேந்திரத்தின் மேவத் தாயுடன்கட்டை நண்ணும்.

இ-ள். ஆலோன் அழலோன் ஆருமிடத்ததிபன் இவர்கள் கூடி நாலாமிடத்திலிருக்கில் தாய்சோரஸ்திரியாவள். அந்தநான்கு ஒன்று ஒன்பதாமிடத்ததிபர்கள்கூடி திரிகோண கேந்திரங்களிலிருக்கத்தாயும் சேயும்மாயும் என்க.

க்ஷேத்திரபலன்

பத்துநான் கதிபன் செவ்வா யாறெட்டிற்பன்னிரண்டில்
உற்றநீசத்தானத்தி லுறிற்பங்குமனையுமில்லை
மற்றிவர்பலமுற்ருக்கான் மனைபங்குலாபமுண்டாம்
பெற்றநான் கதிபனுச்சம் பெறின் மாடகூடமுண்டாம்.

இ-ள். பத்து நான்காமிடத்ததிபன்-சத்துவமுள்ள செவ்வாய் இவர்கள் மறைவுஸ்தானமாகிய, ஆறு-எட்டு-பன்னிரண்டாமிடத்தில், நீசம் பெற்று நின்ருல், பங்கு மனை ஜாதகனுக்கில்லையாம், இவர்கள் பலம் பெற்று நிற்கில், மனையின் பங்கில் இலாபமுண்டாம், நாலாமிடத்ததிபன் உச்சம் பெற்ருல் மாடமாளிகையுண்டாம். எ-று. 520

கூடமாளிகைசிங்காரங் கொடுப்பனுன் கதிபனுன்கில்
நீடிவாழ்ந்திடவன்னேனே நெருங்கிநின்றவர்கடாமே
நாடுநல்லோர்களாயி னன்மனைபாவராயின்
ஊடியே வீடுபாழாய்க் கிடக்குமென் றுரை வழங்கும்,

இ-ள். நாலாமிடத்ததிபன்-நாலாமிடத்திற் றங்கியிருக்க, அவனேடு சுபக்கோள் சேர்ந்திருக்க, நல்ல கட்டிடமுள்ள மனையாம், பாவர்கள் கூடியிருக்க, அம்மனை பாழாய்க்கிடக்குமென்று சாஸ்திரஞ்சொல்லும். எ-று.

வழங்கும்நான் காமதிபதியும் வளர்சத்துருநீசத்திலுற
ஒழுங்கும்வியத்தாதிபனத்னததி லுறச்சன்மாதிசெங்கதிரும்
முழங்கும் நான் காதிபன் கூட நல்லோர்நோக்கமுருதிருக்கத்
தழங்கும்பங்குமனையெல்லாந் தானும்பறிபோந்தப்பாதே.

இ-ள். நான்குக்குடையோன் தீங்குள்ளசத்துரு நீசஸ்தானங்களிலும், பன்னிரண்டாமிடத்தோன் இரண்டாமிடத்திலிருக்க, லக்கினுதிபதி, சாயாபதி, நாலாமிடத்ததிபதி, இவர்கள்கூட, சுபர்கள் பார்வையில்லாவிட்டால் ஜாதகன் பங்குமனையெல்லாம் பறிகொடுக்கப்படுவான். எ-று. 522

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தப்பாதாருமதிபதியுந் தான்பத்தேழிலிருந்திடவே .
ஒப்பாஞ்சன்மந்தனிற்செவ்வா யுறையச்சுபக்கோளுறப்பார்க்க
இப்பார்தன்னிற்சத்துருவா சத்துருவா யிருப்பர்மனைபங்குள்ள தெல்லாம்
செப்பார்முலையாயிவன்றனக்குச் சேருந்திண்ண ந்திரனுலே.

இ-ள். ஆருமிடத்ததிபன், ஏழு பத்தாமிடத்திலிருக்க லக்கினத்தில் சுக்கிரனிருக்க, அத்துடன் சுபர்கள் இருக்க, அல்லது நோக்கச் சத்துருக்களின் பங்குமனைகளெல்லாம் ஜாதகனுக்கு திறமாய்வந்து சேருவதுறுதியாம்.

நாலாமிடத்தினுதிபனும் லக்கினுதியுடன் கூடி
மேலாய்நாலிலுறிலொருவன் வீட்டிலிருந்துமிகவாழ்வன்
சேலாநாலாமதிபனுடன் சேரும்பாவரெத்தனையோ
மாலாய்கேளத்தனைவீடு கட்டிச்சேதம்வழங்குவனே.

இ-ள். நாலுக்குடையோனும் லக்கினத்தோனும் ஒன்றுசேர்ந்து நாலாமிடத்திலிருந்தால் ஜாதகன் இன்னொருவன்வீட்டில் பொன் நயத்துடன் நன்னயமாய்வாழ்வன். நாலாமிடத்தானோடு மேலாகச்சேர்ந்த பாவக்கோட்களெத்தனையுண்டோ அத்தனைவீடுகள் ஜாதகன்கட்டி சேதப்படுபவனுமாம்.

வேறு.

வழங்கும்லக்கின மன் பலனின் றியே
முழங்குமாறின் முந் நாளிலுறைந்திடில்
தழங்குஞ்சன்மந் தனைப்பாவர்கண்டிடில்
பழங்கணுமனைப் பங்குமில்லானென்னே.

இ-ள். ஜென்மாதிபன் தன்பலமற்று 6, 12 டில் வீறுடனிருக்க லக்கினத்தை உக்கிரமாகிய பாவர்கள் பார்க்கப் பூர்வீகபங்கு மனையில்லாதவனென்று சொல்லவேண்டும். எ-று. 525

வேறு.

பங்கமில்வியத்தின் மன்னன் பரிந்திரண்டாமிடத்தில்
தங்கநல்வீடுகட்டிச் சகலபாக்கியமுஞ்சேர்ப்பன்
இங்கிதவியத்தோன் றன்னே டெத்தனைகிரகங்கூடும்
சங்கையத்தனையாம் வீடு கட்டிடுசமர்த்தன்ருனே.

இ-ள். பங்கமில்லாத பன்னிரண்டாமிடத்ததிபன் எங்குஞ் செல்லாமல், இரண்டாமிடத்திலிருக்க, நல்லவீடுகட்டி வல்லபமாய்ச் சகலபாக்கியமுஞ் சேர்த்துவைப்பன், அன்னியதேச உத்தியோகமுள்ள, பன்னிரண்டாமிடத்ததிபன்றன்னை எத்தனை கிரகங்கள் கூடியிருக்கின்றதோ அத்தனை வீடு கட்டக்கூடிய சமர்த்தனுவானென்று சொல்லவேண்டும். எ-று. 526

தானமாஞ்சன்மவீடு சரமெனிற்பரதேசத்தில்
ஆனதோர்திரங்களாயின் மருவுவன் சுதேசந்தன்னில்
ஈனமிலுபயமாயின் பரதேசத்திடையிற்பாதி
ஊனமில்சுதேசந்தன்னிற் பாதிநாளுறைவன் கண்டீர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். ஜென்மலக்கினம் சரமானுல், அன்னிய தேசத்திலும், திரமானுல் சொந்ததேசத்திலும், உபயமானுல் பாதிநாள் சுயதேசத்திலும் பாதி நாள் அன்னியதேதத்திலும், வசிப்பவனும். எ-று. 527

கண்டபன்னிரண்டாம்வீடு கருதுநல்லோர்வீடாயின்
திண்டிறன கரந்தன்னைச் சேர்ந்தருகுறவிருப்பன்
பண்டுசூத்திரர்தம்வீடாய் லாபாதிக்குறவுமாயின்
மண்டுசூத்திரரிருக்கும் மனைக்கருகிருந்துவாழ்வன்.

இ-ள், பன்னிரண்டாமிடம் சுபர் வீடாயின், அதிவீரம்பெற்ற சிறந்த ராஜ நகரத்தைச்சேர்ந்து அதிலிருப்பவனும், அது சூத்திர வீடாய் லாபாதிபதிக்கு நட்பு வீடாயின், சூத்திரர்களின் மனையின் பக்கத்திலிருந்து வாழ்வான். எ-று. 528

இருந்தபன் னிரண்டா மாதி யின்றதாய் துணைவர் தந்தை
பொருந்திய மனைவி மக்க டானத்திற் போய்நின் ருலும்
திருந்துமத் தானத் தாதி தன்னுடன் சேர்ந்துற் ருலும்
அருந்துணை யான வீடு மவரவர் தமக்கே யாகும்,

இ-ள். பன்னிரண்டாமிடத்ததிபன் அன்னை முன்னை பின்னைசோதரம், தந்தை தாரம் தாயார் ஆகிய இத்தானங்களில் இருந்தாலும், அந்தத்தானுதிபர்களோடு கூடினுலும், ஜாதகனுடைய வீடு, அவரவர்களுக்கே உரியதாகும். எ-று. 529

பரவிஷயம்

மாலாய் நாலா மிடந்தன்னை மருவிப் பாவ ரினிதிருக்க
மேலாய் நோக்கச் சன்மாதி மீண்டும் பலன்க ளற்றிருக்க
ஏலாம் பாவ ருடன் கூடி யிருக்க நல்லோர் பார்வையறப்
பாலோன் விஷயம் வேறென்றே பண்பி னுரைப்பர் பாரோரே.

இ-ள். நாலாமிடத்திற் பாவரிருக்கப்பார்க்க மேலாம் லக்கினுதிபதி. பலனற்றிருக்க, அல்லது பாவர்களுடன் கூடியிருக்கச் சுபர்கள் பார்வையில்லாவிட்டால் ஜாதகன் தரித்திரவிஷயம் வேறென்றே பெரியோர் சொல்லுவர்.

வேறு

பாரிலுறுஞ் சன்மாதி நான்கா மாதி
பாக்கியத்தா ருதியிவர் மூன்று பேருஞ்
சேரவே யாறிடத்து மலதா ருதி
செறிந்தருளு மங்கிசத்துந் திடமாய் நிற்க
வீரியநா லாதிபதி யுடன்பாம் பேனும்
மிக்கசனி தன்னுடனே மேவி னுலும்
தேரிலிது பரவிஷய மென்று சொல்வர்
சிலைப்புருவக் கயற்கணுறுந் தெரிவை யாரே.

இ-ள். கார்முகம் போன்ற புருவமும், கயல்போன்ற நயனமுமுடைய கன்னியே? லக்கினுதிபதி, சுகாதிபதி, பாக்கியாதிபதியாகிய, இம்மூவரும், யோக்கியமாக ஆறுமிடத்தில் (அல்லது) ஆறுமிடத்தோன்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நவாங்கிஷத்திலிருக்க, நாலாமிடத்ததிபனுடன் ராகு அல்லது கேது வாகிய பாம்போடு சனி சேர்ந்தாலும், பரவிஷயமென்றே சொல்லுவர். எ-று. 531

வேறு

ஆரல் நாலா மிடத்ததிப னவடன் குமரன் சன்மத்தில்
சேர விருக்க வவனுடனே திகழும் பாம்பு செறிந்திருக்கப்
பாரி லறியச் சனித்தவனும் பரவுங் குலபுத் திரனல்லன்
ஏருங் கடைசிக் குலத்துள்ளா னென்பான் றந்தை யென்றிலகும்.

இ-ள். ஆரலாகிய செவ்வாயும், நாலாமிடத்ததிபனும், அவனுக்கு ஐந்தாமிடமாகிய எட்டாமிடத்ததிபனும் ஒன்று சேர்ந்து ஜென்மத்தி லிருக்க அவர்களோடு இராகு (அல்லது) கேது கூடியிருக்க, உலகத்தில் ஜெனித்தவன், குலபுத்திரனல்லவாம். இவன் தகப்பன் கடைசிக் குலத் திற் பிறந்தவனும். எ-று 532

வேறு

இலகியமூன் ருமிடத்திற் குசன்கருங்கோள் கூடில்
எழிற்பகினி சங்கமமா ருதிபனு னுலுஞ்
சலமலியெட் டாதிபனு கிலுஞ்செவ்வா யுடனுஞ்
சசியுடனுங் கூடிலவன் சங்கமமே யாகும்
நலமலியு மிவருடனே கரும்பாம்பு நீசன்
நவில்சனிசூத் திரன்வெள்ளி நண்ணிடில்வை சியனும்
குலவியசூ ரியன்கூடின் மறையவனு மென்றே
கூறினரிப் படிசெரிந்து கொண்டறிய வேண்டும்.

இ-ள். இலகும்படியான மூன்றுமிடத்தில், நிலமகனுகிய செவ்வாயும், இராகுவும், கூடிநின்ருல் தகும் நீயென்று பகினியோடு சம்பந்தப்படு வான். ஆறு எட்டாமிடத்ததிபர்களில் வீறுடன் யாதாமொருவர் சந்திர னுடனுவது. அல்லது, செவ்வாயுடனுவது கூடில், அவள் சங்கமேயாகும், இவர்களுடன், இராகு கூடிநிற்கில் நீசனும், சனி கூடிநிற்கில், சூத்திர னும், சுக்கிரன் கூடிநிற்கில், வைசியனும் சூரியன்கூடிநிற்கில், மறைய வனுமாகிய பரவிஷயமென்று சொன்னுர்கள். இதைத் தெரிந்தறிய வேண்டும். எ று.

வேண்டிடுநா லாமாதி யாருமா திடனும்
மெய்யிற்றுர்ப் பலராக விரைந்துடன்கூ டிடினும்
நீண்டபிறை யும்பிருகுந் துர்ப்பலரே யாக
நின்றிடுநான் காமிடத்தைப் பாவர்கணேக் கிடினும்
பூண்டநா லாதிசசி யொடுகருங்கோள் கூடப்
பொருந்தியசன் மாதிநான் காருன்பா னதிபன்
ஈண்டியவே ழாமிடத்தி லிவர்நால்வர் கூடி
இருந்தக்காற் பரவிஷய மெனப்புகலு வரே.

இ-ள். ஆருமிடத் ததிபர்கள், பலவீனமாகக் கூடியிருக்க, திங்களும், சுங்கனும் திறமற்று நிற்க, நாலாமிடத்தைப் பாவர்கள் பார்க்க, அந் நான்காமிடத்ததிபனேடு, சந்திரன் இராகு, இவர்கள் கூடியிருக்க,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஜென்மம், நான்கு, ஆறு-ஒன்பதாமிடங்களுக்கு அதிபர்களாகிய நால் வருங்கூடி, மாதுருஸ்தானத்துக்கு ஏழாமிடத்திலிருக்க, பரவிஷயமென்று சொல்லுவார்கள்.

வேறு

சிறந்தமதியையுஞ் சன்மமனையையும்
அறிந்தபார்வைக ளரசனுேக்காவிடில்
உறைந்நகதிர்மதி யொன்பதிலுற்றிடில்
பிறந்தசேய்பர சாதகம்போற்றுமே

இ-ள். பிறந்த லக்கினத்தையும், சிறந்த சந்திரனையும், அரிந்தும், ஆண்டளப்பான்நேராகப் பாராதிருந்தாலும், சந்திராதித்தர், தந்தை வீடாகிய ஒன்பதாமிடத்தில் வந்திருந்தாலும் மைந்தன் பிறந்த ஜாதகம் பரவிஷயமென்றே சாஸ்திரஞ் சொல்லும். எ-று. 535

போற்றும்லக்கினம் பொருந்துங்கதிர்மதி
தோற்றியிருக்கத் துரைசூழரசனும்
சாற்றியநீசன் சனிநவாங்கிசையினில்
ஏற்றியிருக்க விதுபரசாதகம்.

இ-ள். சந்திராதித்தர் பிறந்தலக்கினத்துற்ருலும், நேசமாகிய குருநீசமாகி, சனி அங்கிஷம் பெற்ருலும், பரவிஷயமென்றே சொல்வதாம். 536

பரிதியின் கிழமை பண்புறுசோதி
அருகியதுதிகை அமர்ந்திடிலேனும்
பெருகியபுதனும் பெறுநாளிரேவதி
உருகியசத்தமி யுறும்பரசாதகம்.

இ-ள். ஆதிவாரமும், சோதி நட்சத்திரமும் அமரபட்சத்துதிகையுமாயிருந்தாலும், புதவாரமும், இரேவதி நட்சத்திரமும், கிருஷ்ண பட்சம் சத்தமிதிதியுமாக விருந்தாலும் பிறந்தஜாதகம், பரவிஷயமாம். எ-று. 537

உறுஞ்சனிக்கிழமை யுற்றபின்னவிட்டம்
நறுந்துவாதசி நாளினிற்பிறந்தோன்
அறிந்திடுமிதுபர சாதகமென்றே
சிறந்து நூலறிந்தோர் செப்புவர்தாமே

இ-ள். பொருந்திய சனிவாரமும், வருந்திய அவிட்ட நட்சத்திரமும் திருந்திய சுக்கில பட்சத்துவாதசியுங்கூடிய நாளிற் பிறந்தோன் பரவிஷயமாமென்று சிறந்த சோதிடநூலுணர்ந்தவர்கள் சொல்லுவார்கள். எ-று.

மாதுரரிட்டம்

செங்கதிரிருக்குஞ் செவ்வாயங்கிசையில்
தங்கியங்கிசையோன் றன்மனைலக்கினம்
மங்குரிற்சன்ம மதைச்சேய்பார்த்திடில்
பொங்கியசிரசு பொடிபடுவாரே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். ஆதித்தன் அங்காரகனங்கிஷமேறி அச்செவ்வாய் சொட்சேத்திரமாகி, லக்கினத்தில் நின்ருலும், ஜென்மத்தைச் செவ்வாய் பார்த்தாலும் சிறுவன் தாய் சிரசிலடிப்பட்டுப் பொடிபட்டிறப்பாள். எ-று. 539

வெண்பா

மூன்ரு மதிபதியு மூரிச் சனியுடனே
தோன்றியைந் தாமிடத்திற் சூழ்ந்திடினும்—ஆன்றகதிர்
ஆறஞ்சு நாலிடத்துற் ருலவன்ருய் போமென்றே
கூறஞ்சா மாண்டிற் குறித்து.

இ-ள். மூன்றுக்குடையவன், சனியுடன் கூடித்தோன்றும், ஐந்தாமிடத்திலிருக்க, ஆறு ஐந்து நாலு இவ்விடங்களில், சூரியனிருக்கப் பிறந்த ஜாதகன் தாய் அஞ்சாமாண்டிற்றுஞ்சிடுவாள் என்க. எ-று. 540

குறித்ததாய் தந்தை குலவிற் கதிபர்
மறுத்துவர்கள் மாறி வசிகின்—சிறுத்தேநல்
அத்தமன மாடியினு மன்னை யனுமரணம்
சித்தமெனச் சொற்றிடுநீ தேர்ந்து.

இ-ள். நாலு ஒன்பதுக் கதிபர்கள்மேலும், ஒருவர் வீட்டில் ஒருவரென அவர்வீட்டில் இவரும் இவர்வீட்டில் அவருமாகக் கிரகமாறியிருந்த போதிலும், அல்லது, பலங்குறைந்து, அத்தமனமாயிருந்தாலும், தாய் சீக்கிரத்திலிறந்து விடுவாளென்று சொல்லவேண்டும். எ-று. 541

நான்காம்பாவகம்

சம்பூரணம்

ஐந்தாம்பாவகம்

புத்திரபலன்

அஞ்சிற்கஞ்சிற்காரிமதி யங்காரகனேடிரவியுநில்
துஞ்சுமாமன்சுபர்நோக்கிற் றுன்பமில்லைப்பூசத்தில்
விஞ்சுபாதநடுவிரண்டே லன்னைக்கன்னை வியமாகும்
வஞ்சிபிழைக்கினேயரிட்ட மாமன் றனக்கேவருங்கண்டீர்.

இ-ள். ஒன்பதாமிடத்தில், மந்தன் கந்தன் இந்தன் இவர்களுடன் சூரியனிருந்தால் மாமன் இறந்துபோவன் சுபக்கிரகங்களிருந்தாலும் பார்த்தாலும் பூச நட்சத்திரம் நடுப்பாகம், இரண்டாம் பாதத்திற் பிறந்தால், தாயைப் பெற்ற பாட்டி இறந்துவிடுவாள், கொடுமையான சீக்கும், அரிட்டமும் மாமனுக் குண்டாகுமாம். எ-று. 542

மருவுஞ்சன்மலக்கினத்தில் வாழுஞ்சனமா திபனேடும்
அருளுமைந்தாமிடத்ததிப னணுகிற்பார்க்கிலன்புடனே
ஒருவர்தமதுபதியினின்மற் றெருவர்மாருகவுநிற்கிற்
பெருமைப்புதல்வர்பிறந்திடுவர் பிறந்தானமனுக்கஞ்சாரே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். ஜென் மலக்கினத்தில், ஜென்மாதிபதியோடு ஐந்தாமிடத்ததிபன் நிருலும், பார்த்தாலும் அல்லது கிரகமாறியிருந்தாலும், பெருமையான புத்திரர்களுண்டாம் அவர்களும் தீர்க்காயுளுடனிருப்பார்களாம்.

வேறு

அஞ்சாகு மிடத்திலுறும் பாவராற் ஞேஷம்
அணுகும்வகை சனிகுழவிக் கருக்கன் றந் தைக்கே
துஞ்சாத மதிக்கன்னை புதனலன் னைக்காம்
சுற்றமதற் கரசனுற் றந்தைசுற்ற மாகும்
நஞ்சாருங் கரியகோள் சுதற்குச்செவ் வாயேல்
நண்ணிடிலம் மானுக்குத் தோஷமதே யாகும்
மஞ்சாருங் குழன்மடவா யரசனைந்தின் மேவ
வந்திடிற்சந் தானமத் திபமுதித்த ருனே.

இ-ள். மஞ்சாருங் கூந்தலையுடைய வஞ்சியரே? அஞ்சாமற் கேட்பாயாக ஐந்தாமிடத்தி லிருப்பவர்களால் தோஷம் அணுகும்வகை, எப்படியெனில் பஞ்சமத்திற் சனியிருந்தால் மஞ்சனுக்கும், சூரியனிருந்தா தகப்பனுக்கும், சந்திரனிருந்தால் தாய்க்கும். புதனிருந்தால் அன்னைசுற்றத்தாருக்கும் குருவிருந்தால் தகப்பன் சுற்றத்தாருக்கும், இராகுவிருந்தால் புத்திரர்க்கும், செவ்வாயிருந்தால் மாமனுக்கும் தோஷமாம் புத்திரகாரகனுகிய குரு ஐந்திலிருந்தால் புத்திரோற்பத்தி மத்திபமாகுமாம். எ-று. 544

வே று.

உதித்தவொன்றைந்தாமாதி யுற்றவொன்றைந்துருமல்
மதித்ததோர்நோக்கமின்றின் மகவில்லைசுபாங்கிஷத்தில்
பதித்துநிலாயினுண்டாப் பயிலைந்தாமதிபன்மூன்றில்
விதித்திடும்படியேநிற்கின் மேவுபுத்திரர் தாமற்பம்.

இ-ள். உதித்த லக்கினுதிபதி மதித்த ஐந்தாமதிபதி, அவ்வவ்விடங்களிலிராமலும், பாராமலும் இருந்தால், புத்திரரில்லையாம். சுபாங்கிஷம் பெற்று நின்ருல், புத்திரருண்டாம், ஐந்தாமிடத்ததிபன் மூன்ருமிடத்தில் நின்ருல் புத்திர ரற்பமாம். எ று. 545

புத்திரத்தானத்தாதி யேகனுய்ப்புதன்வீடேறில்
புத்திரரில்லைநல்லோர் கூடிடிற்பிறந்துசாவர்
ஒத்திடும்பாவர்சேரின் மகவில்லையெருதுகும்பம்
வித்தகையோரையார்க்கு மகவில்லைவிளம்புங்காலே.

இ-ள். புத்திராதிபன் ஒருவனுய்த்தனித்து புதன் வீட்டிலிருந்தால், புத்திரரில்லையாம், நல்லோர் கூடியிருந்தால் பிறந்து இறந்துவிடுவார்களாம் பாவர்கள் கூடியிருந்தால், புத்திரரேயில்லை ரிஷபம், கும்பம்ஒராலக்கினமாகவுடைய ஜாதகருக்கு புத்திரர்களில்லையென்று சொல்லுவார்கள். எ-று.

விளம்புமேழாமிடத்தோன் மேவுச்சநீசமின்றிக்
களங்கமில்லா திருக்கிற் கருதுமூத்தாளுக்கில்லை
இளங்கொடியாளுக்குண்டா மேழுளோனுச்சநீசம்
வளம்பெருமங்கிசத்தின் மருவிடின்மகவுண்டாமே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். ஏழாமிடத்ததிபன் உச்ச நீசமில்லாமலும், பாவமில்லாமலுமிருந்தால் புத்திரர்கள், மூத்தாளுக்கில்லையாம். இளைய மனைவிக்குண்டாம், ஏழாமிடத்ததிபன் உச்சம் நீசம் சுபாங்கிஷத்திலிருக்கில் புத்திரருண்டாம்.

அஞ்சாமிடத்திற்செங்கதிரோ டரவுங்கூடித்தானிருக்கின்
மஞ்சார்குழலாய் தந்தைக்கும் மைந்தன்றனக்கும்வரும்பகையே
செஞ்சாலிகளுந்திரவியமுஞ் சேதமுண்டாந்திறமையுடன்
துஞ்சாதிருந்ததலங்கள் விட்டுத் தூரப்போவதிலக்கணமே.

இ-ள். அஞ்சாமிடத்திற் செஞ்சுடரோன் நஞ்சாராவாகிய ராகுவோடு கூடியிருக்கில் தகப்பனுக்கும், பகையுண்டாம், தானியங்களும், திரவியங்களும், சேதமுண்டாம், பூர்வீக தலம்விட்டுத் தூயமான வேறிடங்களிற் போம்படியான தன்மையுண்டாம். எ-று. 548

வேறு

லக்கினுதி பதிக்குநாலாதிபன்
ஒக்கநல்லுற வாகவுந்தானுநில்
தக்கதந்தை தனக்குப்பின் மைந்தர்கள்
மிக்கபூமியில் மேவுவர்காணுமே.

இ-ள். லக்கினுதிபதிக்கு, நாலாமிடத்ததிபன், உறவாகவிருந்து கூடிநின்ருல், தகப்பனுக்குப்பின் மைந்தர்கள் பூமியிலிருப்பார்கள். எ-று. 549

வேறு

காணும்லக்கினத்திற்செவ்வாய் தனக்கேழிற்காரிபின்னும்
கோணுமுந்நான் கில்வெய்யோ னிப்படிக்குலவிநின்ருல்
ஆணுடன்பெண்ணுமில்லை யஞ்சாதிபவனுயேழில்
பூணேழோன் பாவனுயை ந் துற்றிடிற்புதல்வரில்லை.

இ-ள். ஜென்மத்திற் செவ்வாயும், சத்தமத்திற் சனியும், வியத்தில் வெய்யோனுமாக நின்ருல், ஆணும் பெண்ணுமில்லையாம். (புத்திரரில்லை) ஐந்து ஏழாமிடத்ததிபர்கள், பாவிகளாய்க் கிரகமாறியிருந்தாலும் புத்திரரில்லையாம். எ-று. 550

புத்திரத் தானத்தாதி பொருந்துமங் கிசையைத் தொட்டு
மெய்த்துலக கினமட் டெண்ணி மேவியே கண்ட லக்கம்
எத்தனை யோதா னந்தத் தொகைப்படி யினிய மைந்தர்
சித்தமாய்ப் பெறுவ ரென்று தெரிந்தவ ருரைசெய்வாரே.

இ-ள். புத்திரத் தானுதிபதியிருக்கும், அங்கிஷை முதல் லக்கினம் வரை, எண்ணிவந்த தொகை எத்தனையோ அத்தனை மைந்தரைப் பெறுவரென்று தெரிந்தவர்கள் சொல்லுவார்கள். எ-று. 551

உரைசெறி யலியோ கங்க ளோண்மதிக் கேழில் வெய்யோன்
பரவியே தானின் ருலும் பயில்சனிக் கேழிற் புந்தி
திரமுட னின்ற போதுந் தீதாமி ரட்டை ராசி
இரவிமே விடச்செவ் வாய்பார்த் திடிவலி யோக மூன்றும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். நிசாகரனுக்கு, ஏழாமிடத்தில், திவாகரன் நின்ருலும், நீல னுக்கு ஏழாமிடத்தில் மாலன்·பலத்துநின்ருலும், இரட்டைராசிகளிற் பிங்கலனிருந்து மங்கலன் பார்த்தாலும், இம்மூன்றுவிதமும் அலி யோகமாம்.

மூன்றும்பின் னுதயராசி முதலொற்றை யாய தற்குள்
நான்றயிந் துற்றபோது மிரட்டையொற் றையிலு மிந்து
தோன்றிடச் செவ்வாய் புந்தி பார்க்கினுஞ் சோமன் காரி
ஆன்றவங் கிசமும் லக்ன மாயிடி னலியு மாமே.

இ-ள். மேலேசொன்ன மூன்றும் பின்னுதயராசிமுதல், ஒற்றை யாய் அதற்குள், அம்புலியுற்றபோது *இரட்டை ஒற்றையாய் அவ்வம் புலி தோன்றிட, அதைச் செவ்வாய் புதன் பார்த்தாலும், சந்திரன் சனி லக்கின நவாங்கிஷம் பெற்ருலும் அலியாமென்க. எ-று. 553

அலியட்ட மாதி யைந்தா மிடத்தினி லிருக்க வைந் தாம்
வலியவீட் டதிப னெட்டின் மருவவே சுபர்நோக் கின்றி
நலியபுத் திரரு மில்லை நவிலைந்தா மதிபன் ருனும்
மெலிவதாய் வியமா றெட்டின் மேவினு மில்லை மைந்தர்.

இ-ள். எட்டாமிடத்தோன் ஐந்தாமிடத்திலும், ஐந்தாமிடத் தோன், எட்டாமிடத்திலும், கிரகமாறியிருக்க, அவர்களைச் சுபர் பாராம லிருந்தால், புத்திரரில்லையாம். ஐந்தாமிடத்ததிபன் பலங்குன்றி, மறைவு ஸ்தானங்களிலிருந்தாலும், புத்திரரில்லையாம். எ-று. 554

மைந்தர்தா னங்கள் காரி புந்திதன் மனையதாக
அந்தவீ டதனைக் காரி குளிகனே டமரிற் பார்க்கில்
சுந்தரத் தத்த னுண்டாஞ் சுபர்பல முடனே யைந்தில்
வந்திட வைந்தோ னேக்க மற்றிடிற் றத்தாய் வாழ்வன்.

இ-ள். புத்திரத்தானமாகிய ஐந்தாம்வீடு புந்தி, மந்தன் வீடாக வும் அந்த வீட்டிலே சனி குளிகனேடு சார்ந்திருந்தாலும், அல்லது பார்த்தாலும், அழகிய தத்துப் புத்திரனுண்டாம். அந்த ஐந்தாமிடத் தில் வந்த சுபர்கள் அதிக பலத்துடனிருக்க, அதை ஐந்தாமிடத்ததிபன் பாராவிட்டால் தத்தாகவே வாழ்வான், என்பதாம். எ-று. 555

வாழ்மீன லக்கினத்துக் கைந்தினின் மன்ன னுச்சந்
தாழ்விலா திருக்கிற் பெண்க டன்னையே பெறுவனைந்தோன்
நீள்குச னுருமாதி மூவரை நேய மில்லார்
சூழவே பார்க்கிற் சத்து ருக்களாற் சுதர்க்குப் பீடை.

இ-ள். லக்கினம் மீனமாக அதற்கைந்தாமிடத்திற்கு குரு உச்ச மாக நிற்கில் பெண்களையே பெறுவன், ஐந்தாமிடத்தோன் செந்தீ வண்ணன் ஆருமிடத்தோன் ஆகிய மூவர்களையும், பகைக்கோட்கள் பார்க்க, அல்லது கூடியிருக்க, சத்துருக்களாற் புத்திரற்குப் பீடையாம். எ-று. 556

* இரட்டை யொற்றை என்பது மிதுன துலாங் கும்பம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வேறு

பீடி லேந்தா மதிபனு மைந்தினில்
நீடு பாவ ருடன்கூடி நின்றிடில்
நாடி நோக்குற நல்ல குழவியும்
வாடுந் தேவதை வஞ்சனை யாலுமே.

இ-ள். ஐந்துக்குடையோன் பாவருடன்கூடி ஐந்தாமிடத்தில் நின்ருலும், அல்லது பார்த்தாலும், நல்ல புத்திரரும், சொல்லற்கரிய தேவதைகளின் வஞ்சனையால் வாடுவார்கள், என்பதாம். எ-று. 557

வேறு

வஞ்சனை நாலினி லன்பிலர் வந்திட வைந்தினின் மன்னனும்
விஞ்சிய காரியோ டங்குற வியமதி லன்பிலர் மிண்டியும்
தஞ்சமெ னுஞ்சிறு மைந்தனுந் தாய்கரந் தன்னி லிறந்திடும்
அஞ்சில் நவந்தனில் வந்துறு மையர் வெகுண்டிட வுங்கெடும்.

இ-ள். நாலாமிடத்திற் பாவர்களும், ஐந்தாமிடத்திற் குருவும் சனியுங் கூடிநிற்கினும், பன்னிரண்டாமிடத்திற் பகைக்கிரகங்கள் பலம் பெற்றிருக்கினும், தாய் கையிற் சேயாகிய சிறுபாலகன் இறந்துபோவன். ஐந்து ஒன்பதாமிடங்களில் வந்திருக்கிற கிரகங்கள் மிகப் பகைக் கிரகங் களானுலும், சாதகன் இறந்துவிடுவான். எ-று. 558

கேடறு புத்திர நாதனுங் கிளர்மதி சுக்கிரன் மூவருங்
கூடிம டந்தையி ராசியிற் கோதைய ரங்கிசை மீதினில்
நீடியி ருந்திடு வோர்களை நேயமி லார்விழி நோக்குறில்
நாடிய பெண் பிள்ளை யேபெறும் நாவலர் கண்டறி வார்களே.

இ-ள். புத்திரத்தானுதிபதியும், பூரணச்சந்திரனும், புகரும், ஒன்ருக, நன்ருய்க்கூடி, பெண்ணிராசிகளிலாவது பெண்ணிராசி வங்கிஷங்களிலாவது, தங்கியிருக்க, அதை நேயமில்லாத சத்துருக்கிரகங்கள் பார்த்தால் (பெண்) புத்திரிகளையே பெறுவான் என்று கணிதங்கற்றவர்கள் கண்டு சொல்லுவார்கள். எ-று. 559

வார்சடை யார்முடி மேலுறும் மாமதி மேவும னைக்குமே
ஏரிபெறு சன்மம னைக்குமே யெண்ணியொ ரைந்துத லத்தையும்
பாரினி லுத்தம ரானவர் பார்வையு நிற்சிறு பாலராம்
காரிமு தற்கொடும் பாவரே காணி லிலைச்சிறு பாலனே.

இ-ள். பாணியை வேணியிற் சூடுந்தானு முடிமேல் தோனுஞ் சந்திரனுகிய மதியிருக்கும், மனைக்கும் ஜென்மமனைக்கும், ஐந்தாம் மனை யெண்ண எந்த விராசி வருகிறதோ, அந்த விராசியைச் சுபக்கிரகங்கள் பார்த்தால், புத்திரருண்டாம். சனி முதலாகிய பாவிகள் பார்த்தால் புத்திரரில்லையாம்.

பாலர் பிறந்திறு மைந்திலே பாரொரு கேது பரிந்துறில்
பாலர் பிறந்திறு மைந்திலே பாழ்கரு நாக மமர்ந்துறில்
சீலசன் மாதியைந் தாமிடஞ் சேரவைந் தாதிதி டம்பெற
வாலிபந் தன்னினின் மைந்தரும் வந்து பிறந்து வளருவார்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். மைந்தர்கள் பிறக்கும், ஐந்தாமிடத்தில் கேதுவிருந்தாலும், இராகுவிருந்தாலும், சந்தேகமில்லாமல் தநயர்கள் பிறந்து சாவார்கள், முக்கியமான லக்கினாதிபதி, தக்க சுபனாய், ஐந்தாமிடத்திலிருக்க, அவ் வைந்தாமிடத் ததிபன், திரம்பெற்று நிற்க, வாலிபத்திலே சிலபுத்திரர் கள், தாலம் பிறந்து மேலுமேலும் வளருவார்கள், என்பதாம். எ-று. 561

வளருஞ்சன் மாதியு மேழுற மற்றுநா லாதியே ழாதியும்
கிளர மகிழ்ந்தொரு வீட்டுறக் கேடர வோரிரண் டாதியும்
தளர்வற வேசன்ம மீதுறத் தான்வரு மைந்தர் சமர்த்தராய்
உளருமி ரண்டிறை யைந்தனி லுறமக வுண்டியை பார்வையே.

இ-ள். ஜென்ம லக்கினாதிபதி உன் மத்தாகிய ஏழாமிடத்திலிருக்க சுகசத்தமாதிபதிகள் மிக நேசமாய் ஒரு வீட்டில் வாசஞ்செய்ய, இரண்டா மிடத்தோன் திரண்ட பலம்பெற்று லக்கினத்திலிருக்க, சமர்த்தான பிள் ளைகளுண்டாம், இரண்டாமிடத்தோன், ஐந்தாமிடத்திலிருக்க, குரு பார்க்கப் புத்திரருண்டாம். எ-று. 562

பாரினி லைந்தா மதிபதி பண்புட னின்றபு டத்தையுஞ்
சூரிய தேவர்பு டத்தையுந் தொகையொடு கூட்டிய ராசியில்
தார்புனை யும்புய ராசனுந் தகைமையு டன்செறி காலமே
வீரிய வானொரு மைந்தனும் மேவுவ னம்புவி மீதிலே.

இ-ள். புடவியில் திடமுற்ற ஐந்தோமிடத்தோன் புடத்தையும், சூரியதேவர் புடத்தையும், கூட்டிக் கண்ட விராசியான கோசரத்தில் சரி யாய், குருவருங் காலம் வீரியமுள்ள புத்திரன் பிறப்பான். எ-று. 563

மீதிலைந் தாதிபு டத்தினி லிரவிம கன்றனை வாங்கியே
போதுறு ராசியின் மன்னுறும் போதிறு மேசிறு புத்திரன்
கோதறு மன்னன் புடத்தினிற் குளிகனை வாங்கிய ராசியில்
ஏதமில் சனிவரு போதிரா தேக மரித்திடும் பாலரே.

இ-ள். ஐந்தாமிடத்தோன் புடத்தில், மந்தன் புடத்தைக் கழித்துக் கண்ட விராசியில் கோசரரீதியாய்க் குருவருங்காலம், புத்திர நிரியாண மாம். குருபுடத்திற் குளிகன் புடத்தைக் கழிக்க வந்த விராசியில் மந்தன் வருங்காலம், மைந்தர் மரணமாம். எ-று. 564

வே று.

அறிந்திடும் பருதி கேந்திரந் தன்னி
லம்புலி யிருந்திடப் பிதாவில்
அற்பமாம் புதல்வர் சரித்திரஞ் சசிதா
னணுகியே பணபரத் திருக்கில்
செறிந்திடுந் தந்தை தனக்கிணை சுதனுந்
திங்களா போக்கிலி யத்தில்
சேர்ந்திடிற் பிதாவி லதிகபுத் திரனுஞ்
செங்கதி ரோனுறும் பதிக்கே
நிறைந்தரு ளைந்தே மொன்பது வியத்தி
னிலவுற நிலவுறு மனைதான்
நீடுநட் பாக்ஷி யுச்சமா யிருக்க
திருபனு மதிதனைக் காண

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உறைந்திடுந் தந்தைக் கதிகமாஞ் செல்வ
முள்ளபுத் திரனெனச் சொல்லும்
உலவுமம் மதியைச் சுக்கிரன் காணி
லுணர்வெகு போகவா னமே.

இ-ள். பிங்கலனுக்குக் கேந்திரத்தில், திங்களிருந்தால் பிதாவுக்குக் குறைந்த புத்தித் தன்மையுள்ள புத்திரனும். சந்திரன் பணபரத்திலிருந் தால் தகப்பனுக்கிணையான மகப்பேரும்; சந்திரன் ஆபோக்கிலியத்திலிருந் தால் தந்தைக்கும் அதிகத்தன்மையுடைய மைந்தனும். ஆதித்தனிருந்த விராசிக்கு (5) (7) (9) (12) ஆ மிடங்களில், அம்புலியிலிருந்து அந்த மனை நட்பு, ஆட்சி, உச்சமாயமைந்து, குருவும், சந்திரனைப் பார்த்தால், தந்தைக்கு மேலான சந்தரனச் செல்வமுள்ள புத்திரனென்றும், அந்தக் கங்குற்கிறைவனைச் சுங்கன் பார்த்தால், பிதாவைப் பார்க்கிலும் சதா சுகபோகங்களையனுபவிப்பாரென்றும் சொல்ல வேண்டும், எ-று. 565

வேறு

போகமா மைந்தா மதிபன் லாபாதி பொருந்தியே மித்துருவாக
வாகுசே ரைந்தா மதிபனுச் சனுமாய் வளம்பெறு சுபனுமேயாயின்
மோகமாய் லாபத் தலத்தினி லிருக்க முறைதவி ராத புத்திரர்கள்
ஆகவே பலருண் டவருடன் கூடு மத்தனை புதல்வருண் டாமே.

இ-ள். அஞ்சாமிடத்ததிபதி, லாபாதிபதி, அதிநட்பாகக் கூடியிருந் தாலும், ஐந்தாமிடத்தோன் உச்சமாய், சுபனுயிருந்தாலும், லாபத் தானத்திலிருந்தாலு, ஒழுக்கமுள்ள புத்திரராயுதிப்பார். ஐந்தாமிடத் தானேடு, எந்தக்கிரகங்கள் எத்தனை பேர்கள் சேர்ந்திருக்கின்றார்களோ அத்தொகைப்படி புத்திரர்களுண்டாகுமென்க. எ-று. 566

ஆமெனுமைந்தா பதிபனுதித்தனனுகிலோ வெகுபிள்ளை யுள்ளதாம்,
ஓமெனு மைந்தா மதிபனும்பாம்பு மொக்கவே யெட்டினிற் கூடில்,
தேமெனுந்தத்துப் புத்திரனவன் றிருந்துமைந்தாதிபனுடனே, தோ
மெனும் பாம்பு மிரவியுங்கூடிற் றெரும்மிரு கங்கள் போ லிருப்பன்.

இ-ள். ஐந்துக்குடையவனும், ஆதித்தனும், அணுகியிருந்தால், வெகு புத்திரருண்டாம். அஞ்சாமதிபதியும், செம்பாம்பும், அல்லது கரும் பாம்பும், சேர்ந்து எட்டாமிடத்திருக்கில், தத்துப்புத்திரனுண்டாம். ஐந்தாமதிபனுடன் சூரியன், இராகு, கேதுக்களுடன் கூடியிருந்தால், புத்திரனில்லாதவனாய் மிருகங்கள்போ லிருப்பவனுமாம். எ-று. 567

இருந்திடுமிதுன லக்கினமாக யினியகோ ளிடத்தினிற் குசனும், பொருந்தியே யிருக்கி லிவனிவன் முன்னேன் புகழ்பெறு தந்தை மூவருக்கும், வருந்திய விரோதம் விளைந்திடும் சொல்லா வஞ்சகராவர் மானிலத்தில், திருந்தியிப் படியல் லாமலே யிருக்கிற்றினமுறவாகி வாழ்த் திருப்பர்.

இ-ள். உதயலக்கினம் மிதுனமாகி துலாத்திற் செவ்வாயிருந்தால், இச்சாதகன் மூத்த சகோதரம் தகப்பன் இம்மூவருக்கும், ஒற்றுமையென் பது சற்றுமிராமல், ஒன்றுக்கொன்று விரோதங்க ளுண்டாக்கிக்கொண்டே யிருக்கும், பொல்லா வஞ்சகராவர். இப்படிமீது இப்படி கிரகங்களில்லா விட்டால் எப்படியும் புகழர் சுகமாய் வாழ்ந்திருப்பர்கள். எ-று. 568

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வேறு

இருந்த பத்தா மிறைவனை ந் தாதிபன்
பொருந்தி மித்துரு வாய்ப்புண் ணியனுமாய்ப்
பரிந்த வுத்தமர் வீட்டுறப் பாலனும்
வருந்தி டான்றனந் தேடிவ ழங்குவான்.

இ-ள். பத்தாமிடத்தோனும் ஐந்தாமிடத்தோனும், மித்துருவாய்-உத்தமராய், சுத்தமுறும் சுபர் வீட்டிலிருக்கச் சற்றும் வருத்தமில்லாமல், பொருத்தமாய்ப் பொருள்தேடி, கருத்துடன் இல்லற தருமம் நடாத்தி வாழ்ந்திருப்பான். எ-று. 569

வேறு

வழங்கியவைந் தாமாதி குசனுங் கூடி
மந்தனுக் குறவைந்தின் மருவி நிற்கில்
முழங்கிடவே தத்துபுத் திரனு மாவன்
முதலைந்தா மாதிகுசன் சனியம்சத்தில்
தழங்குசுன் பார்க்கநிற்கி லன்னியர்கள்
தவரிடத்திற் போய்வளர்வன் சனியம் சத்தில்
அழுங்கிடவே யிரவிதா னேறி யைந்தில்
அருங்குழவி யிலையென்றே யறைய லாமே.

இ-ள், ஐந்தாமிடத்ததிபன், செந்தீவண்ணனுடன் கூடி மந்தன் பார்க்க, ஐந்தாமிடத்தில் நின்றால் தத்துப் புத்திரனுவன், அங்காரகன் ஐந்தாமிடத்ததிபன், சனியங்கிஷத்தில் சனி பார்க்க நின்றால் அன்னிய சுற்றத்தாரிடத்திற்போய் வளர்வான், சனியம்சத்தில் சூரியனிருக்கப் பிறந்தவனுக்குப் புத்திரரில்லையென்று சொல்லவேண்டும். எ-று. 570

வேறு.

நல்லதோ ரைந்தா மதிபதி யிரவி நற்சனி யங்கிஷமேறி, அல்லலார் சனிகண் டிடவுமைந் திடத்தி லமர்ந்திடிற் பரவிஷயத்தால், வல்லமைப் புதல்வ னுளனென மொழிவர் மற்றுமைந் தாமிடந் தன்னில், சொல்லிய குசனுங் காரியங் கிசத்திற் சூழ்ந்திடக் கருச்சுரோணிதமாம்.

இ-ள். ஐந்தாமிடத்ததிபதி கிரகபதியாகிய சூரியன், சனியங்கிஷமேறி, சனி பார்க்கவும், அல்லது அச்சனி, ஐந்திலிருக்கவும், பரவிஷயத்தால், திறமுள்ள புத்திரனுண்டாம், என்று சொல்லுவர், ஐந்தாமிடத்திற் செவ்வாய், ஒவ்வாச்சனியங்கிஷம் பெற்றிருக்க, * கருச்சுரோணிதமாம் 571

ஆனலக்கினத்திற் சந்திரனிருக்க வாறினிற் சுங்கனுற்றிடவும்
தானுறும்புதல்வ னேகனுமிரவி சந்திரனிருவருங்கூடி
ஊனமிலினியகேந்திரத்திருக்கி லுரிமைசெய்யான்பிதாவினுக்கே
ஈனமின்மரண தகனகாலங்க ளிரண்டெனு முபயராசிக்கே.

இ-ள். லக்கினத்திற் சோமனும், ஆறிற்காமனும், இருந்தால் ஒரே பிள்ளையாம், இரவிமதி யிருவருங்கூடி குற்றமில்லாமற் கேந்திரம் பெற்று, உபயவிராசிகளில் நின்றால் பிதாவுக்குமரண தகன காலங்களில் உரிமை, ஈமக்கடன் செய்யாதனுவன். எ-று. 572

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வேறு

நல்லவர்பா ராதிருக்க வைந்தாம் வீட்டில்
நாடுமைந் தாமதிப னுடனண்ணி யேனும்
வல்லகரும் பாம்பிருக்க நாக சாப
வசையினுன் மைந்தரில்லை மறுத்து நாசம்
ஒல்லையுடன் பிரதிட்டை செய்யின் மைந்தர்
உண்டாகு முயருங்கேந் திரகோ ணத்துள்
மல்லல்சுபக் கிரகத்தின் பார்வை யற்ருல்
மைந்தரில்லை செபவோம வகையி னுண்டாம்.

இ-ள். ஐந்தாம் வீட்டிலும், அவ்வீட்டுக்கதிபனும், இராகுவுங்கூடி நிற்க அதைச்சுபர்கள் பாராதிருந்தால், நாகதோஷத்தாற் புத்திரரில்லையாம், சீக்கிரத்தில் நாகப் பிரதிஷ்டை செய்தால், புத்திராஞண்டாகும், கேந்திரகோணங்களில் நின்று சுபர்கள் பார்வையில்லாவிட்டால் புத்திரரில்லையாம், ஜெபம் ஓமம் செய்தால் மகவுண்டாம். எ-று. 573

உண்டாமைந் தாம்வீட்டோ ஞரு மாதி
உடன்கூடி நல்லோர்கண் ணுரும னிற்க
அண்டாத சத்துருசா பத்தி ஞலே
ஆனதொரு மகவில்லை யைந்தாம் வீட்டில்
மிண்டாக வைந்தாதி யிருக்க நல்லோர்
விழிபார்வை யறத்தீயோர் மிகவு நோக்கிக்
கண்டார்க ளெனிற்றெய்வ சாபத் தாலே
காளையர்க ளிலையோம கன்மஞ் செய்ய.

இ-ள். ஐந்தாம் வீட்டோன் ஆருமிடத்தோனுடன்கூடி, சுபர் பார்வையில்லாதிருக்க, சத்துரு சாபகாரணத்தினல், புத்திரரில்லையாம். ஐந்தாமிடத்தில் ஐந்துக்கதிபன் இருக்க, சுபர்கள் பாராதிருக்கப் பாவர்கள் பார்க்க, தெய்வசாபத்தினலே ஓமகர்மஞ்செய்யப் புத்திர ரில்லையாம். எ-று. 574

செய்யதொரு நாலிடத்திற் றீயோர் நிற்கச்
சேருமைந்தா மதிபனுடன் சனியுங் கூடப்
பையவே பன்னிரண்டா மிடத்திற் பாவர்
பற்றிநிற்கத் தாய்சாபம் பால ரில்லை
ஐயமற வோமங்கள் சுபங்க டான
மன்புடனே செய்விக்கு மவர்த மக்குத்
துய்யதிரு மைந்தர்பல ருண்டா மென்று
சுருதிகலை யாகமங்கள் சொல்லுந் தானே.

இ-ள். நாலாமிடத்தில் தீயோர் நிற்க, ஐந்தாமிடத்ததிபனேடு மந்தன் கூடியிருக்க, பன்னிரண்டாமிடத்திற் பாவர்கள் இருக்க, தாய் சாபத்தாற் சேய்களில்லையாம். சந்தேகமகல, ஓமங்கள் ஜெபங்கள், தானங்கள் செய்தால் பரிசுத்தமான அழகிய பலபுத்திரர்கள் உண்டாகுமென்று சுருதி கலையாகமங்கள் சொல்லுமாம். எ-று. 575

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வேறு

சொல்லுமிரண்டிற்பன்னிரண்டிற் சுபக்கோள்பாவர்மனையாயின்
வெல்லும்பாக்கியாதிபதி வியத்திலிருக்கவோரைந்தில்
நில்லும்பாவர்சன்மாதி நின்றேயத்தமனமாகி
ஒல்லிற்கூடிற்குலநாச முண்டாம்புத்திரர் தானுமிலை.

இ-ள். சொல்லும் இல்லறமாகிய, இரண்டும், சல்லாப உல்லாச சயனமாகிய பன்னிரண்டும் பாவர்வீடாய்ச் சுபக்கோட்களிருக்க ஒன்பதாமிடத்ததிபதி பன்னிரண்டாமிடத்திலிருக்க ஐந்தாமிடத்திற்பாவர்கள் லக்கினாதிபதியிவர்கள் அத்தமனமாய்க் கூடியிருக்கப் புத்திரரில்லாமற் குலநாசமுண்டாம்

தானுஞ்சன் மவியமெட்டிற் சனிசேய்பாவருறநிற்க
மானே புதல்வர் தாமில்லை வளஞ்சேர்புந்திசுக்கிரனும்
ஆனபத்திலோரெட்டி லமருமைந்திலெட்டாதி
ஊனபாவர்சன்மாதி யுற்றேபற்றிற்புதல்வரிலை.

இ-ள். ஜென்மம் வியம் எட்டு இவ்விடங்களிற் செவ்வாய்ச் சனி முதலியபாவர்கள் பொருந்தியிருக்கப் புத்திரர்களில்லையாம். சாமனும் காமனும் நேமமாய்ப் பத்து, எட்டாமிடத்திருக்க, ஐந்தாமிடத்தில், எட்டாமிடத்தோன் பாவர்கள், லக்கினாதிபதியிருக்கிற் புத்திரரில்லையாம். எ-று. 577

புதல்வர்காரகன்புடத்திற் பொருந்துமைந்தாதிபன்புடமாம்
இதனைக்கூட்டுமிராசிதனி லேதமற்றகுருவருங்கால்
மதலைதோன்றும்புடங்கூட்ட வருராசியங்கிசைமட்டும்
சிதவின்மேடமுதலெண்ணச் சேய் தான்பாவர்காண்சேதம்.

இ-ள். புத்திரகாரகனாகிய, பொன்னவன், புடத்தையும், ஐந்தாமிடத்ததிபன் புடத்தையும், கூட்டியவிராசியில் தாட்டிகமாய் குருவருங்காலம், புத்திரருற்பத்தியுண்டாம். மேலேகண்ட புடங்கூட்டியவிராசியங்கிசைமட்டும், மேடமுதலாயெண்ண, அவ்விராசியில், செவ்வாயாவது பாவராவது வருங்காலம் புத்திரசேதமுண்டாம். எ-று. 578

வேறு.

சேதமைந்திற் சிறந்தமதியுறில்
நீதிசேர்பிள்ளை யொன்றுறுநேமியில்
போதுமற்றும் பிழைப்பதுதானிலை
வேதமுற்றவ ரோதினரென்பவே.

இ-ள். ஐந்தாமிடத்திற் சந்திரனிருந்தால், நீதியுள்ளசாதுவென, ஒரே பிள்ளைதானிருக்கும், பூமியில் பெற்ற பிள்ளைகளில், மற்றபிள்ளைகள் பிழைக்காதென்று வேதங்கள் கற்ற பெரியோர்கள் சொல்லுவார்கள். எ-று. 579

ஒன்பதாம்வீட்டுக் குடையன்குருவால்
இன்பமாய்ச்சனி யெய்தியேநோக்கிட
அன்புபுந்தியோ டாதவனெங்குறில்
பின்புபிள்ளையை யன்னியர்பேணுவார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ - ள். புங்கவன் தங்குமிடம் ஒன்பதாமிடமாகவும் அங்கவனைப்பங்கு பாதன்சேர்ந்திருந்தாலும், பார்த்தாலும், சண்டனும், பண்டிதனும், அண்டி யெங்கேசேர்ந்திருந்தாலும், பிள்ளையை அன்னியர்கள்பேணி வளர்ப்பார்கள்.

ஐந்தின்வீட்டிற் கதிபதிபாவனாய்
வந்தாறெட்டுப் பனிரெண்டின் மன்னரோ
டுந்தினலுஞ் சுபர்திட்டியுற்றிடில்
நந்தும்பன்னிரண் டாண்டினிளசமே.

இ - ள். சட்டாட்டம வியத்ததிபர்களோடு திட்டமாய் ஐந்துக்குடைய வன் கெட்டபாவனாய்ப் பொருந்தியிருந்தாலும், சுபர் பார்வை பெற்றாலும், ஆண்டு பன்னிரண்டில், அப்பிள்ளை மாண்டுபோகும். எ - று. 581

வேறு

புத்திரனேழாமாதி பொருந்துகேந்திரகோணத்தில்
உற்றிடப்பலவானாகி யோங்குமாறதிபன்றனுஞ்
சித்தமாய்க்கூடினலுந் தெரிசினைப்பார்வையாலுஞ்
சுத்தமாய்ப்புதல்வரில்லை யெனமறைசொல்லுந்தானே.

இ - ள். ஏழாமிடத்ததிபன், வாழுமிடத்திற்குந் கேந்திர திரி கோணங்களில் ஐந்தாமிடத்தோன் பலத்திருக்க, ஆறுமிடத்ததிபன் கூடினலும் பார்த்தாலும் புத்திரரில்லையென்று வேதங்கள் சொல்லும். எ-று. 582

ஐந்தாம் பாவம்.
சம்பூர்ணம்.

ஆறும்பாவம்

சத்துருபலன்

கூறுமாறுமிடத்திற் குறித்திடும்பலன்களாறில்
வீறுநல்லோர்கடாமு மேவிடிற்றுயத்தார்கள்
பேறுடன்வழக்கிட்டுள்ள பெருந்தனம்பிரித்துத்தாவென்
றேறியம்பலத்தினிற்ப ரெதிரிக்கேவலிமையென்னும்.

இ - ள். ஆறுமிடத்துப் பலன்களைப் பூராய்ச் சொல்லுமிடத்திற் கூராய்ச் சுபர்கள் நின்றால், சேராத்தாயாதிகள், தீராவழக்கிட்டுப் பேராத் திரவியங்களைப் போராய்க் கொள்ளை கொள்ள நேராய், அம்பலமேறி வீராய்த்தெம்புடன் நிற்பார்கள், இதில் எதிரிகள் வலிமை பெற்று ஜெயிப் பார்கள். எ - று.

என்னுமம்புவியிலுள்ள யாவர்க்கும்வலியனவன்
துன்னியவிகாதமேதான் சொல்லுவரெவர்கண்டாலும்
மின்னியஞாதியோரை மெலியவேபண்ணுவிப்பன்
கன்னியேயாறினல்லோர் காதலிற்றிருந்தக்காலே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். வியாதிக் கிடமாகிய ஆருமிடத்தில் கியாதியுடைய சுபர்களிருந்தால், பூவிலுள்ள யாவருக்கும் வலியவனுவன் ஜாதகனைக்கண்டால் பேதகமாகயாவரும் விவாதஞ் செய்வார்கள் ஞாதிகளை மெலியச் செய்பவனுமாவன்.

காதலாரு மிடத்திற் கடினரா ந்தீக்கோளிற்கில்
ஓதுபொல்லார்க்குப்பொல்லாங் குரைத்து வேலவனைப்போல
ஏதிலார் தங்கட்கெல்லா மிடியெனவலியனுகிப்
பூதலத்தெவரும்வந்து புகழ்ந்திடப்பொருத்திவாழ்வன்.

இ-ள். சட்டமத்தில், துட்டப்பாவர்களிருந்தால், கெட்டவனுக்குக் கெட்டவனும் நல்லவனுக்கு நல்லவனுயுரைத்து சூரபத்மனை வேரறச் செய்த சுப்பிரமணியக் கடவுளைப்போலச் சத்துக்களை வெற்றிகொள்ளும் வீரனுகிப்பூமியில் யாவரும புகழும்படி பொருத்தமுற்று வாழ்வான். எ-று. 585

பொருந்துசிங்கத்தைக்கண்டு புடைபடுமிபமேபோல
இருந்தசத்துருக்களெல்லா மிரந்துகைகூப்பிநிற்பர்
திருந்தியகுபேரன்போலச் செல்வமுண்டாகப்பாரில்
வருந்திடாதிருப்பனுறின் மருவுதீககோளினுலே

இ-ள். சத்துருத்தானமாகிய. ஆருமிடத்தில் குத்திரமுள்ளபாவக்கிரகங்களிருந்தால், சிங்கத்தைக்கண்டு பங்கப்படும், யானையைப் போல சத்துருக்கள், யாசித்து, நேசித்து, பூசித்து, வணங்கியிருப்பார்கள், அளகாபுரியை அரசாளும் குபேரனைப்போல செல்வமுடையவனுமாய் எந்த நாளும் வருத்தமில்லா திருப்பவனுமாவன். எ-று. 586

கோளினிற்கரியநாகங் கூறுமாறிடத் தினிற்கில்
தாளினிற்றளைகள் பூண்டே தடைபடுங்காவலில்லான்
நாளுமேபலரும்போற்ற நண்ணிடுங்கீர்த்திமானுய்
தேள்முதல்விடங்கள் சற்றுந் தீண்டிடாத்திடவானுமே.

இ-ள். கடனுற்ற ஆருமிடத்தில், திடம்பெற்ற இராகுவிருந்தால், தளைபூணுதல், சிறையிருத்தல், என்னுங் கஷ்டமில்லாதவனும், பலர்களால் துதிக்குங் கீர்த்தியுடையவனும், விஷநோய் சற்றும் அணுகா, திடகாத்திர தேகமுள்ளவனுமாவன். எ-று, 587

திடமுறுமாருமாதி பாவனுய்க்கேந்திரத்தில்
வடிவுறுநல்லோர்காண மருவின் மந்திரியுமாகி
படிமிசையெவரும்போற்றப் பயில்பிரதாபனுகிக்
கொடியவர்தமக்குமுண்டே கூறுவன்குணவானுகும்.

இ-ள். தேகவாதைக்குப் பாகமாகிய ஆறுக்குடையோன் சோகபாவியாய்க் கேந்திரத்தில் நல்லோர்காண நாடியிருந்தால், சொல்லுதற்கரிய வல்லபமுள்ள மந்திரியாயும் தொல்லுலகோர் துதிக்கும், பிரதாபமுள்ளவனுயும், கொடியவர்களைப் படியும்படி தடியாற் றண்டித்துக் கொண்டனைக்குங் குணவானுயுமிருப்பன். எ-று. 588

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ரோக பலன்.

வே று

ஆருகும் வீட்டதிபன் லக்கினத்தா திபனும்
அளரி கதிரோ னுடன்கூடிற் சுரகண்டமாகும்
பேருயிந் துடன்கூடிற் சலகண்டங் குசன்பால்
பெருமையுடன் கூடிலா யுதவிரண கண்டம்
தூருருஞ் சனிகூடில் நீசர் தன்னுற் கண்டம்
சோரரால் வருங்கண்டஞ் சுங்கன்கூ டிடினே
விருதுமடவாரா ற் கண்டங்கண் டங்கேள்
விடவரவைக் கூடிலந்த விஷப்பாம்பா லேதான்.

இ-ள். ஆரும்வீட் டதிபதியும், சீராம் லக்கினுதிபதியும், நேராம் பாரில், சூரியனுடன் கூடினுல், சுரத்தாலும், சந்தரனுடன் கூடினுல், ஜலத்தாலும், செவ்வாயுடன் கூடினுல், ஆயுதத்தாலும், ரணத்தாலும், சனியுடன் கூடினுல், நீசர்களாலும், சுக்கிரனுடன் கூடினுல், சோரர்களாலும், பெண்களாலும், இராகு கேதுக்களுடன் கூடினுல், விஷத்தாலும், பாம்பாலும், கண்டங்களுணடாம. எ-று.

அறந்திகழுஞ் சன்மநா லாதி தாமும்
அட்டமத்தா தியைக்கூடி னுலு மாறில்
உறைந்திடினு முண்டியசீ ரணத்தாற் கண்டம்
உற்றிடும்லக் கினவாக னுதியோடு
செறிந்துசனி யுறில்விஷபட் சணத்தாற் கண்டம்
செப்பியநா லாதியுடன் சனியுஞ் சேர்ந்து
பிறந்திடுலக் கினத்தாதி வீட்டி னிற்கப்
பெறில்விஷபட் சணகண்டம் பேசுஞ்சா தகமே.

இ-ள். லக்கினேசனும், சுகேசனும், ரந்திரேசனைக்கூடினுலும், ஆருமிடத்திலிருந்தாலும, அஜீரணத்தாற் கணடமுண்டாகும், ஜென்மாதிபதி, வாகனுதிபதி இவ்விருவருடன், சனிகூடினுல் விஷபட்சணத்தாற் கண்டமுண்டாம். நாலாமிடத்தோனும் நீலனுஞ் சேர்ந்து பாலன் பிறந்த லக்கினத்திலிருந்தால், தாலமதில் மேலாம் விஷபட்சணத்தாற் கண்டங்களுண்டாகும. எ-று. 590

சாதகலக் கினத்தாதி வாக னுதி
தம்மிருவ ருடன்பாம்புந் தானுங் கூடில்
ஓதியபந் தனமரணம் நல்லோர் வீடாய்
உதித்தலக் கினத்தாதி யோரே ழெய்த
நீதியுட னேழதிபன் லக்கி னத்துள்
நிற்கிலவன் ருதையுட னின்ருேன் ருயாம்
பேதையனு மரணம்பன் னுவடா னென்று
பேசினர்சா தகநிபுணப் பெருமை யோரே.

இ-ள். இலக்கினுதிபதி, வாகனுதிபதி, இவ்விருவரோடு தக்க இராகு (அல்லது) மிக்க கேதுகூட, அச்சாதகன் பந்தனத்தால் மரணமாம். இவர்கள் கூடி நின்றது சுபர் வீடாய், ஜென்மலக்கினுதிபதி, ஏழாமிடத்திலும், ஏழாமிடத்ததிபதி, ஜென்மலக்கினத்திலும், கிரகம்மாறி,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நாலாமிடத்தோனுடனே சேர்ந்திருக்கத் தாய் தந்தைக்கு நோய் அதிகரித்து அடுததடுத்து மாய்வார்களென்று, சோதிடங்கற்ற வல்லவர்கள சொல்லுவார்கள். எ-று.

பெருமைசெறி யாருகு மதிப ஞேடு
பெரும்பாவர் கூடிலக்கி னத்தி லெட்டில்
அருமையுட னுறிற்சித்தப் பிரமைகொண்டே
அங்கத் திலும் விரண மாகும் பின்னும்
உரிமையுள்ள வவரவர்தா னங்க ளெட்டில்
உற்றிடிலிந் நோயென்றே யுரைக்க வேண்டும்.
இருமைசெறி தந்தைதாய் பிராதா மைந்தர்
இவர்க்குமனை வியர்தமக்கு மெனச் சொல்வாரே.

இ ள். பெருமைபொருந்திய ஆருமிடத்தாளுேடு, சிறுமைசெய்யும் பெரும்பாவர்கள் கூடி, அருமையாம் லக்கினத்தில் (அல்லது) அட்டமத்தில் திட்டமாயிருக்கில், பித்தம்பிடித்த சித்தப்பிரமையும், சுத்த அங்கத்தில் மெத்த விரணமு முண்டாகும், இன்னும் இவர்கள்கூடி எந்தெந்தத்தானங்களுக்கு எட்டாமிடத்தில் எவரெவர்களிருக்கின்ருர்களோ அவரவர்களுக்கும், இந்த நோயே உண்டாகும். (உரிமையுள்ளவர்) தாய்தந்தை சேய் தேவிமார் தம்பிதமயன் முதலியவர்களாம். எ று 592

சொல்லியவா ருமிடத்திற் சுபக்கிரக மேவத்
துலங்கியவா ருதிபனுங் கேந்திரத்தி லிருக்க
நல்லவர்கண் டிடின்ஞாதிக் குபகாரஞ் செய்வன்
நாடிங்கா லவனுக்கோர் நலிவுகளு மில்லை
அல்லலறு நீக்கோளே யாயினன் மையதாம்
அடைந்திடுவ னெதிரிகளுக் கேவலிய னுவன்
முல்லைமுகை தரளமணி வீவிருந்து போலும்
முறுவல்செறி கமலமலர் முகமுறுமின் னுளே.

இ-ள். முல்லையரும்பும். முத்துரத்தினமும், புள்ளின் இறகினடி போன்ற பல்லையும், மெல்லிய தாமரை மலர்போன்ற முகமும், உடைய பெண்ணே, ஆருமிடத்திற் சுபக்கிரகம் மேவ, அவ்வாருமிடத்ததிபன், கேந்திர ஸ்தானங்களிலிருக்க, அதைச் சுபக்கிரகங்கள், பார்க்கப் பெற்றிருந்தால், பங்காளிகளுக்கு, உபகாரஞ்செய்பவனும், ஆய்ந்து பார்க்குமிடத்து இச்சாதகனுக்கு துன்பங்களுமில்லையாம், ஆருமிடத்தில், பாவக்கிரகங்களாயின், நன்மையடைந்திடுவன், எதிரிகளுக்கும், வலிமையுடையனுயிருப்பன். எ-று. 593

அலிபலன்

வேறு

இரவியுஞ்சசியுமொருவருக்கொருவ ரிசைந்துபார்த்திடிலலியாகும்
பரவியசனியும்புதனுமேயந்தப் படிவிழிநோக்குறிலலியாம்
வரவிடுசெவ்வாயிரட்டையொற் றையினில்வந்துசூரியனுடன் மருவ
விரவியமதியாணங்கிசத்தேற வெள்ளிவீடாகவுமலியாம்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். உதயனும், உடுபதியும், ஒருவருக்கொருவர் நோக்கினலும், மந்தனும், புத்தியும், ஒருவருக்கொருவர் பாரத்தாலும், செவ்வாய் * இரட்டையொற்றையில் நாட, அவனுடன் ஆதித்தன்கூட, ஆதித்வன் ஆணங்கிஷ்மேற, அதுவும் சுக்கிரன் வீடாயிருக்கப் பிறந்தவன், அலியாவன். எ-று. 594

ஆகியசன்மத்தினின் மதியிருக்க ஆதவன்புதன் சசிமூவர்
வாகுசேரிரட்டைராசியிலிருகக மற்றுமிம்மூவர்கடமையும்
மோகமாயங்காரகனுமேநோக்க முகின்முலைமாதரையிகழ்ந்தே
ஏகமாங்குறியற்றணணர்களாவ ரென்பது திண்ணமென் றுரைக்கும்

இ-ள். ஜென்மலக்கினத்திற் சந்திரனிருக்க, விண்மணி சாமன் சோமன் மூவர்களும் மிதுனத்திலிருக்க இவர்களைச்செவ்வாய்பார்க்க பெண்கள் இகழக் கூடிய குறியின் தன்மை பொருந்தியவர்களாவார்கள் என்பது உறுதியாம்.

ஆறும்பாவம்

சம்பூர்ணம்

ஏழாம்பாவம்

களத்திரபலன்

சாதமுறுங் காலையினிற் சுக்கிரன் றன்னேடு
தக்கபிரகஸ் பதிகூடில் விப்பிரர்கன் னியராம்
சோதிரவி குசன் கூடில் க்ஷத்திரியர் மயிலாம்
சோமனுர் சுதன் கூடில் வைசியர்குலத் தோகை
பூதலமேற் சனிகூடிற் சூத்திரர்கன் னிகையாம்
பொருமிருபாம் புடன்கூடிற் புலையர்குலத் துதித்த
பேதையர்க ளுடன் கூடி யனுராகம் புரிந்து
பிரியாம லிருப்பரெனப் பெறும்வரிசை பெறவே.

இ-ள். ஜென்மலக்கினத்துக்கு, ஏழாமிடத்திற்சுங்கனேடு புங்கவன், கூடினல், பிராமணப்பெண்ணும், பிங்கலன், மங்கலன், கூடில், க்ஷத்திரியப் பெண்ணும் புதன் கூடில் வைசியகுலப்பெண்ணும், சனி கூடில், சூத்திரப் பெண்ணும் ராகு கேது கூடில் புலையர் குலப்பெண்ணும், ஆகிய இவர்களுடன் கூடி, அனுராகம்புரிந்து தனவரிசைபெற்று, மனமொருமித்துப் பிரியாமலிருப்பர்களென்பதாம், எ-று. 597

வரிசைபெறு களத்திரத்தா னதிபனைக் கூடி
வாழ்கிரகமெத்தனையுண் டத்தனைமின் மணப்பன்
உரியகளத் திரந்துக்கா ரகனதிபன் சுபமாய்
உற்றிடினற் கோள் காண்கி லுத்தமமற் றிவர்தாம்
அரியிடத்தும் வியமுறினும் பாவர்களே காண
அமர்ந்திடினு மத்திமமா மரவுசெவ்வா யிருவர்
பிரியமுடன் களத்திரத்துற் றிடின்மடவார்க் கானி
பெருகுசுபக் கோணேக்கம் பெற்றிடிலுத் தமங்கள்.

---

* இரட்டையொற்றை என்பது மிதுனம், துலாம், துன்பம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். களத்திர ஸ்தானாதிபனைக்கூடிய கிரகம், எத்தனையோ, அத்தனைபெண்களை விவாகஞ்செய்வான் களத்திர காரகன் களத்திராதிபன், இவர்கள் சுபர்களாக சுபக்கோள்காண உத்தமமாம். இவர்கள், சிம்மத்திலும் பன்னிரண்டாமிடத்திலும், பாவர்கள் பார்வை பெற்றிருந்தாலும், மத்திமமாம், இராகு, கேது, செவ்வாய் களத்திரத்தானத்திருந்தால், பெண்களுக்குத்தோஷமாம, சுபக்கிரகங்கள் பார்த்தால் உத்தமமாம். எ-று 598

வேறு

களத்திரலக்கினாதி கலந்துதம்மனையினிற்கில்
கிளர்த்தியாய்ப்பலரைக்கூடிக் கிடைப்பதொன்றேவிவாகம்
களத்திரகுடுமபத்தாதி கனபாவர்வெள்ளிகூடில்
வளத்தியாய்மூன்றென்றுநின் மருவிடில்மனைவிக்கினம்

இ ள். களத்திராதிபன், லக்கினாதிபன் கலந்துகூடி நாலாமிடத்தில் நாடி நிற்கில் பல பெண்களைக் கூடியிருந்தாலும், ஒரே பெண்ணைக் கல்யாணஞ் செய்வான். களத்திராதிபன், குடும்பாதிபன், இவர்களுடன் பாவர்களும், சுக்கிரனுங் கூடினாலும், மூன்றாறு லக்கினம், இவைகளிருந்தாலும், மனைவிக்குக் குற்றமுண்டாம் எ-று. 598

ஈனமிலக்கினாதி யேழமாதிபனுங்கூடித்
தானமாம்வியமாறெட்டிற் றானுநில்விவாகமில்லை
ஆனவேழிடங்கள் சுத்தி யாயேழாமதிபனோடு
ஊனமில்பலர்கள்கூடி லொருத்தியென் றுரைவெள்ளிக்கே.

இ-ள். லக்கினாதிபனும், ஏழுக்குடையவனுங்கூடி மறைவு ஸ்தானமாகிய, ஆறு-எட்டு-பனிரண்டாமிடங்களிலிருந்தால், விவாகமில்லையாம். ஏழாமிடம், சுத்தமாம், அவ்வதிபதியோடு, குற்றமில்லாத பல கிரகங்கள் கூடினாலும், சுக்கிரற்கு மட்டும், ஒரே மனைவியென்று சொல்லவேண்டும். எ-று.

வெள்ளிசேயேழினிற்கில் விதவைமா தரைமணப்பன்
ஒள்ளியமதிசேயாரு மதிபனோடுற்றுநான்கில்
தெள்ளிதாய்நிற்கிலேனுஞ் சென்மமொன் பானுலாறும்
வள்ளலிந் நால்வர்கூடின் மற்றுமோர்விஷயமுண்டாம்.

இ-ள். சுக்கிரனும், வக்கிரனும், களத்திரஸ்தானமாகிய ஏழாமிடத்திலிருந்தால், விதவை ஸ்திரீயை மணஞ்செய்துக்கொள்வான். சோமனும், பூமனும், ஆறுமிடத்ததிபனோடு கூடி, நாலாமிடத்திலிருந்தாலும், ஜென்மம், ஒன்பது நான்கு, ஆறு, இவ்விடத்ததிபர்களாகிய, நால்வருங் கூடி நின்றாலும், மற்றுமோர் விஷயமுண்டாம். (மற்றுமோர் விஷயமென்பது) இன்னும் இகழ்ச்சிக்குரியதைக் காட்டுவதாம். எ-று. 600

ஓரேழிற்பாவர்நிற்கக் களத்திரரோகமுண்டு
சூரியனுடனேபாம்பு சூழ்ந்திரண்டிடத்தினிற்கில்
நாரிக்கும்வெகுநோய்காட்டும் நவிலிரண்டாமிடத்தைக்
கூரியர்பார்க்கினிற்கி னேய்கொளுங்குடும்பமேழை.

இ-ள். ஏழாமிடத்திற்பாவர்களிருந்தால், வாழாதிருக்கும்ரோகளத்திரமாம். கதிரவனோடு, கரும்பாம்பு செம்பாம்பு கலந்துஇரண்டாமிடத்திலிருந்தால் வெகுநோயுள்ள களத்திரமாம், அவ்விரண்டாமிடத்தைப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பாவர்கள் பார்த்தாலும் இருந்தாலும் நோயுள்ள பெண்ணும். அதுவும் ஏழைக்குடும்பத்திற் பிறந்த ஏந்திழையாம், எ-று. 601

வேறு

ஏழ்வீட்டி னிற்கதிபன் சரத்தி னிற்கில்
இருமனைவி திரமதனி லிருக்க நன்றே
தாழ்விலா வுபயத்தி லிருக்கின் மாதர்
சாவின்றிப் பலருளராந் தானத் தாதி
வாழிடநோக் கியகோளாற் பலன்கள் கூடும்
மற்றமிலக் கினத்தாதி சுங்கன் வீட்டில்
சூழிகினுஞ்சுங் கனைக்கூடச் சுங்கன் பார்க்கத்
தூயஸ்திரீ லோலனென வேசொல்ல லாமே.

இ-ள். ஏழிடத்ததிபன் வாழிடம், சரவிராசியாகி, அதில் நின்ருல், இரண்டு கவத்திரமாம், திரவியராசியாகி அதில் நின்ருல், ஒரே களத்திர மாம், உபய விராசியாகி, அதில் நின்ருல், சில தருணத்தி லுதவிசெய்யும் மரணமில்லாத பல களத்திரங்களுண்டாம். தானதிபன் இருக்கின்ற இடம் பார்க்கின்ற கோட்களின் திடம், இவைகளாற் பலன்கள் அதிகமாம. லக்கி னுதிபன் சுக்கிரன் வீட்டிலிருந்தாலும் அல்லது கூடினுலும், அல்லது சுக்கிரன் லக்கினுதிபனைப் பார்த்தாலும, ஸ்திரீ லோலனென்று சொல்ல வேண்டும். எ-று. 602

வேறு

சொல்லு மேழா மிடத்திந்து சுக்கிரன்
மெல்ல மேவினு மிக்க சனிகுசன்
அல்லல் தீர வுறின் மனை யாளுமே.
இல்லை வந்ததே வில்லைபு தல்வரே.

இ-ள். சொல்லும், ஏழாமிடத்தில், சல்லியன் அல்லோன் வல்லபமா யிருந்தாலும், நிலமகன், முதுமகன் நின்ருலும், களத்திரமில்லையாம். ஒருக்கால் வந்திருந்தால் அக்களத்திரத்துக்குப் புத்திரரில்லையாம். எ-று.

வேறு

இல்லெழுமிரண்டாமாதி சுக்கிரனிவர்கண் மூவர்
பொல்லரோடெய்தியாறி லெட்டிற்பன் னிரண்டிற்போந்து
சல்லாபமுடனின்ரோர்க டம்முடன்பாவர் கூடில்
சொல்லாருந்தொகைக்குமாலை சூட்டுவன் ரேகைநில்லாள்.

இ-ள். களத்திர குடும்பஸ்தானுதிபதிகளுடன், களத்திரகாரகனுகிய, சுக்கிரன், இம்மூவரும், பாவர்களோடுகூடி, ஆறு-எட்டி-பன்னிரண்டா

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மிடங்களிலிருந்து ஏழு இரண்டாமிடம், சுக்கிரன் வீடாக, அவ்வீட்டைப் பாவக்கிரகங்கள் கூடியிருந்தாலும், நிறைந்த கிரகங்களின் தொகைப்படி அநேகதாரங்களைக் கலியாணஞ்செய்தாலும், ஒரு களத்திரமும் ஸ்திர மில்லையாம்.

நின்றிரண்டே ழாமாதி நிறைந்தகேந்திரகோணத்தில்
ஒன்றியேயிருக்கிலேக தாரமாமுற்றவன்னோர்
வென்றிகொள் பிருகுபாவ ருடன் கூடிமெய்யாறெட்டில்
குன்றிடாதிருக்கில்வேசைக் காந்தனுங்கூறுங்காலே.

இ-ள். இரண்டேழுக்குடையவர்கள் திரண்டு கேந்திரகோணங் களிற் சேர்ந்திருந்தால் ஏகதாரமாம். அவர்கள் பாவருடனும், சுக்கிர னுடனுங்கூடி ஆறு எட்டில் வீறுடன் பலத்திருந்தால் வேசைகளுக்கு, ஆசைத் தாசனுவானெனச் சொல்லுவார்கள். எ-று. 605

கூறியவேழாமாதி குடும்பாதிபதியின்னோர்கள்
ஏறியே திரிகோணற்குங் கேந்திரத்தினிலும்நிற்கப்
பேறுடனவர்கம்வீட்டிற் பிரியமாயிருக்கத்தானும்
வேறுமோர் தாரம்வேண்டான் விரும்புவனேகதாரம்.

இ-ள். களத்திராதிபதி, குடும்பாதிபதி, இவர்கள் கேந்திரகோணங் களில், ஏறிநிற்க, அல்லது சொட்சேத்திரமாயிருக்க, வேறு தாரங்களை விரும்பாமல் ஒரே தாரத்தை விரும்புவான். எ-று 606

தாரகாரகனுமேழா மதிபனுந் தனித்துங்கூடி
ஆரவேபாவர்மத்தி யத்துற வேழிற்பாவர்
சேரவேயிவரைப்பாவர் செறியநோக்குற விருந்தால்
பாரியர்தனக்கரிட்டம் பண்ணுமென்றறிந்துகொள்ளே.

இ-ள். தாரகாரகனும், தாரவீட்டுக்குடைய, ஏழாமிடத்ததிபனும், தனித்தும், அல்லது கூடியும், பாவர்களின் மத்தியில் நின்றாலும், ஏழா மிடத்திற் பாவர்கள நின்றாலும், பாவர்கள் இவர்களைப் பார்த்தாலும், தாரங்களுக்குத் தோஷமுண்டாகுமென்று அறிந்துகொள்வாய் என்ப தாம். எ-று.

கொள்ளுநற்காரிவெய்யோன் கூடிக்கன்னியிலேநிற்கத்
தெள்ளிதாயந்தவீடு சன் மலக்கினமேயாக
மெள்ளவேயரசன்றானு மீனத்தின்மேவிநிற்கத்
துள்ளியமனைவிதானுந் துன்பமுற்றரிட்டமாவள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். காரியும், சூரியுங் கலந்து கூடிக் கன்னியராசியில் நிற்க, அதுவே ஜென்மலக்கினமாக வீரியகுரு. அதற்கேழாமிடமாகிய மீனத்தி லிருக்க, மனைவி துன்பத்தோடு தோஷமடைவாள் என்பதாம். எ-று. 608

ஆமிலக்கினத்துக்கேழி லம்புலிதனக்குமேழில்
பூமலிநல்லோர்பார்வை பொருந்திடி லுண்டாம்பெண்டீர்
தீமையாங்கடினபாவர் திட்டியுண்டானபோது
மாதினையார்கடம்மை மணந்திடாவஞ்சனுமே.

இ-ள். ஜென்மலக்கினத்துக்கும். சந்திரா லக்கினத்துக்கும், ஏழா மிடங்களில், சுபர் பார்வையுற்றிடினும், அங்கு தங்கியிருந்திடினும், களத்திரமுண்டாம். கொடிய பாவர்கள் கெடிய பார்வையுண்டானால், பெண்களைக் கல்யாணஞ் செய்யாதவனும் வஞ்சகனுமாவன். எ-று. 609

ஆமெழாமதிபன் தார காரகனிசமாகித்
தாமிவர்வியமாறெட் டிற் ருனுறமனை விக்கினம்
வாமசுக்கிரன்வாழ்விட்டின் மன்னவன் வியமாறெட்டில்
ஏமமுற்றிருக்கிற்கொண்ட மனைவியர்யார்க்குமீறே

இ-ள். களத்திரஸ்தானுதிபனும். களத்திரகாரகனும் நீ-மடைந்து, மறைவுஸ்தானமாகிய ஆறு எட்டு பன்னிரண்டில் நின்றால் மனைவிக்குத் தோஷமாம். சுக்கிரனிருக்கின்ற வீட்டதிபன், ஆறு-எட்டு-பன்னி ரண்டாமிடத்தில் இருககில் தான்கொண்ட களத்திரங்களெல்லாம், மண்டலத்தில் வாழாமற் சண்டனூருக்கு ஏகுவார்களாம். எ-று. 610

ஈறிலாவேழாமாதி யேதமாம்பாவர்வீட்டில்
தூறதாய்நிற்கிற்பார்க்கிற் கலியாணந்தூரதேசம்
விறதாங்களத்திராதி சுபாங்கிஷமேவிற்கிட்டல்
பேறுடன்றிசைகளேழா மதிபனைப்பிடித்துச்சொல்வாம்.

இ-ள். ஏழாமிடத்ததிபன், குற்றமுள்ள பாவர்கள் வீட்டில் நிற்க, அல்லது பார்க்க, தூரதேசத்திற் கல்யாணமாம். களத்திராதிபன், சுபாங்கிஷமேறில், சமீபத்திலுமாம் களத்திரம் வருந்திசைகளை, ஏழா மதிபனைக் கொண்டு சொல்ல வேண்டும். எ-று. 611

வாமசூரியன்கிழக்கு மன்னுசுக்கிரற்குவன்னி
பூமிசேய்தனக்குத்தெற்குப் பெரும்பாம்புநிருதியாகும்
தாமதசனிக்குமேற்கு சசிக்குவாயு வின்றிக்காகும்
நேமமாம்வடக்குப்புந்தி நிருபற்கீசானதிக்கே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். களத்திர ஸ்தானதிபன், சூரியனாகில் கிழக்கு-சுக்கிரனாகில் தென்கிழக்கு-செவ்வாயாகில் தெற்கு பாம்பாகில் தென்மேற்கு-சனியாகில் மேற்கு, சந்திரனாகில் வடமேற்கு, புதனாகில் வடக்கு, குருவாகில் ஈசானியதிசையாம். எ-று. வடகிழக்கு. 612

வேறு

திக்கென வேழோன் வியத்திலா றெட்டிற்
செறிந்ததி பாவனா யிருக்கத்
தக்கவன் றனைப்பார்த் தவர்களத் தனையுந்
தாரமாங் களத்திரா திபனும்
ஒக்கவே பாவ ருடனுற வேழி
லொருகரும் பாம்புற வதற்கு
மிக்கேந் திரத்திற் பாவர்பார்த் திருக்க
விரும்புவன் நாலுகாற் பெண்ணே.

இ-ள். ஏழாமிடத்ததிபன் பாவனாய், மறைவுஸ்தானமாகிய, ஆறு எட்டு பன்னிரண்டா மிடத்திலிருக்க, அவனைப்பார்த்தவர்கள், தொகைப்படி களத்திரதொகையாம். களத்திராதிபன், பாவருடன்சேர, ஏழாமிடத்தில், இராகுவிருக்க, அதற்குக் கேந்திரத்தில் பாவர்கள் பார்த்து நிற்க, நாலுகாலுள்ள மிருகப்புணர்ச்சியுள்ளவனும். எ-று. 613

பெண்ணிசைந் திடுமே ழாமிடத் ததிபன்
பேரொளிக் கதிருடன் கூடில்
எண்ணிசைந் திடுமெட் டாறினில் வியத்தி
லிருக்கிலவா லிபத்திலே மனையாள்
விண்ணிசைந் திடுவள் களத்திரா திபனு
மிக்கநற் கோளுடன் கூடில்
பண்ணிசைந் தருளு மனைவீதிக் கோனைப்
பார்த்திடிற் பாவியா யிருப்பள்.

இ-ள். ஏழாமிடத்ததிபன், சூரியனுடன்கூடி, ஆறு எட்டுபன்னிரண்டாமிடங்களிலிருக்கில், வாலிபத்திலே கொண்டமனையாளிறந்து போவாள் களத்திராதிபன் சுபக்கிரகங்களுடனேகூடி, நாலு எட்டாமிடத்ததிபர்களைப் பார்த்திடில் பாவக்களத்திரமாம். எ-று. 614

பாவியாஞ் சனியே ழாதிப னாகிப்
பன்னிரண் டாறிரு நான்கில்
மேவிடில் விதவை நாரியைச் சேர்வன்
மிக்கவே ழாமிடத் ததிபன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நாவிரண் டான பாம்பொடுங் கூடி
நாடியெட் டாறினில் வியத்தில்
தாவியே யிருக்கி லீனமாங் குலத்துத்
தையலைச் சேர்வனென் றுரைக்கும்.

இ-ள். ஏழாமிடத்ததிபன் சனியாகிய மறைவுஸ்தானமாகிய, ஆறு எட்டு பன்னிரண்டாமிடங்களில் நிற்கில், விதவைப் பெண்களைச் சேருவான் ஏழாமிடத்ததிபன் பாம்புடன்கூடி, ஆறுஎட்டு பன்னிரண்டாமிடங்களிலிருக்க, ஈனகுலப் பெண்களைச் சேருபவனுமாம் எ-று. 615

உரைக்குமே ழாதி காரிவாழ் மனையி
லுற்றிடக் காரிதான் பார்க்க
இருக்கவே ழிடத்துக் கொன்பதா மதிப
னெட்டிலா யினுஞ்சனி வீட்டில்
பெருக்கவே யிருக்கி லவன்குல மனையைப்
பிறர்தமைச் சேர்ந்தவ ரவர்கள்
பொருள்களை வாங்கி வரசொலிப் புசிக்கும்
புண்ணிய வானெனப் புகலும்.

இ-ள். ஏழாமிடத்ததிபன, சனிவீட்டிலிருந்து சனிபார்வை பெற்றிருக்க ஏழுக்கு ஒன்பதாமிடத்திபன், எட்டாமிடத்திலாவது, சனிவீட்டிலாவது, இருந்தால், ஜாதகன் மனைவியை அன்னியரிடஞ்சேர்ந்து அவரவர்களிடம் பொருள்களை வாங்கிவரும்படிசெய்து உண்ணுகின்ற புண்ணியமுடையவனென்று சொல்லுமாம். எ-று. 616

புகலுமே ழாதி பிரபல னாகிப்
பொருந்துமித் துருக்களைக் கூடி
இகலிலா லாபத் தலத்தினி லிருக்க
விருந்தபேர் தொகைப்படி மனைவி
திகழுட னுளதே யந்தலா பந்தான்
திரமுப யங்களே யாயின்
சுகமுட னிருப்பள் சரமெனிற் சிறிது
தோகையர்க் கரிட்டமே சொல்லும்

இ-ள். சத்தமாதிபதி மெத்தப்பலவானாகி, மித்துருக்களைக் கூடி லாபஸ்தானத்திருந்தால், இருந்த தொகைப்படி சிறந்த மனைவியர்களுண்டாம். அந்த லாபாதிபன், திர உபய ராசிகளாயிருந்தால், சுகமுள்ள தாரமாம் சாவி ராசியாயிருந்தால் சிறிது தோஷமுள்ள தாரமாமென்று சொல்லும். எ-று.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சொல்லிய கன்னி லக்கின மாகச்
சோமனுஞ் சனியுங்கேந் திரத்தில்
மெல்லவே யிருக்கச் சதமனை வியரை
மிகுமணம் புரிந்துபூ பதியாய்
வல்லவ னுவ னேழிற்சுக் கிரனும்
மருவுசன் மத்தினிற் குருவும்
அல்லலற் றிருக்கின் மனைவிய ரனேக
ரவரைரட் சிக்கவு மாட்டான்.

இ-ள். சொல்லுதற்குரிய மெல்லியராகிய கன்னியாலக்கினமாக அல்லோனுகிய சந்திரனும் வல்லோனுகிய சனியுங்கேந்திரத்திலிருக்க நிலையான பெண்களை மணம்புரிந்து பூபதியாகி வல்லவனுவன். ஏழாமிடத்திற் சுக்கிரனும், ஜென்மத்திற் குருவும். துன்டமற்றிருந்தால், அதிகக்னத்திரமும் பெற்று, அவர்களைரட்சிக்க மாட்டாதவனுவன். எ-று. 618

மாட்டினிற் கிறைசுக் கிரன்குசன் சோமன்
மன்னவ னிரவியோ டைவர்
ஈட்டியோ ரிடத்திற் கூடிடின் மனைவி
யிலாமலே பிணியனுய்த் திரிவன்
நாட்டுமிந் திரவி புதன்சனி வெள்ளி
நயந்துவின் மனைவிமக் களையும்
ஓட்டிவிட் டேதே சாந்தரந் தன்னி
லுறுபிணி யுடனுலைந் தலைவன்.

இ-ள். எருதுராசிக்குடைய பிருகுவாகிய நாமன் பூமன் சோமன் பிதகன் ஆதவன் ஆகிய ஐவர்களும், ஓரிடத்திற் கூடியிருந்தால், மனைவியில்லாமல் பிணியாளனுய்த் திரிவான். சோமன் சூரியன் சாமன் சனி காமன் சேர்ந்திருந்தால் மனைவிமக்களையுந் துணிவாய்த் துறத்திவிட்டு தேசதேசங்களில் வாசஞ்செய்து பிணியோடு சங்கடப்பட்டுத்திரிவன். எ-று. 619

அலைவறுஞ் சன்மத் தாதிபன் செறிந்த
வங்கிசா திபன்றன தகத்தில்
நிலைமையா மனைவி குருவருங் காலம்
நிச்சயம மணம்புரிந் திடுவன்
குலமுறுஞ் சன்மந் தனக்குமோ ரேழாம்
ராசியங் கிசத்தினிற் குருவும்
பலமுட னேவந் தனுகிய போதும்
பாரியாய்க் கொள்வனற் பெண்ணை.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். ஜென்ம லக்கினாதிபதியிருந்த அங்கிஷத்துக்குடையவள் வீட்டில் குருவருங்காலம், விவாகஞ் செய்வான். லக்கினத்திற்கு ஏழாமி ராசியங்கி சத்திற் குருபலத்து நிற்கின்ற காலத்தும், நல்ல பெண்ணையே களத்திரமாகக் கொள்வான். எ-று. 620

வேறு

பெண்கொளுங் காலஞ் சந்திர னிருந்த
பெரும்பதிக் கிறைவனற் புடமும்
பிறையுறை மனைக்கே ழாமிடத் ததிபன்
பெற்றநற் புடத்தையுங் கூட்டப்
பண்கொளு மெந்த ராசியோ வந்தப்
பதியிலப் பதிதிரி கோணம்
பற்றியே யரச னுற்றிடு காலம்
பயின்மணம் புரிவனக் குருவும்
எண்கொளு முச்சாங் கிசம்பெறின் மனைவி
யினியளீர்ங் கோதையுஞ் சிறப்பாம்
இரணியன் றனுவாங் கிஷத்துறின் மனைவி
யிரண்டுமீ னங்கிச மேறில்
தண்கொண்மூன் றுமித் திராங்கிஷத் தொருத்தி
சத்துரு வங்கிஷ மேறில்
தையனேய் நீசாங் கிஷத்தினி லரசன்
றரிக்கிலி னங்குலக் கொடிக்கே.

இ-ள். திருமணஞ்செய்யுங்காலம், செப்பும் விபரம் பெருமை பெற்ற சந்திரனிருந்த வீட்டதிபன் புடத்தையும், அவனிருந்த வீட்டிற் கேழாமி டத்ததிபன் புடத்தையும், கூட்டவரும் இராசி எதுவோ? அவ்விடத்தும், அதற்குத் திரிகோணத்தும், குருவருங்காலம், மணம்புரிவான், அந்தக் குருவும். உச்சாங்கிஷமேறியிருக்கில் இனிமையும் சிறப்பும் பொருந்திய பெண்ணும், குரு தனுவாங்கிஷமேறில், இரண்டு களத்திரமாம். மீனங் கிஷமேறில் மூன்று களத்திரமாம். மித்துருவாங்கிஷமேறில், ஒரே களத் திரமாம் சத்துரு வங்கிஷமேறில் நோயுள்ள களத்திரமாம். நீசாங்கிஷ மேறில் மனைவிக்குக் குற்றமுண்டாம், எ-று. 621

கொடியிடை யாய்கே ளிரண்டிடத் ததிபன்
குணகுண சாரநற் புடத்தில்
குலவெம கண்டன் படத்தினை வாங்கிக்
குறித்தரா சியிற்குரு வருநாள்
துடியிடை மனைவிக்கரிட்டமா மின்னஞ்
சொல்லிரண்டாதிபன் புடத்தில்
சூழ்ந்திடுங் குளிகன் புடந்தனை யெடுத்துத்
தோன்றிய ராசியிற் சனியும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வடிவுடன் வருநாள் களத்திரந் தனக்கு
வருநிரி யாணமென் றுரைப்பர்
மத்தின மேழா மதிபதி புடத்தில்
வருகால மிருத்துவை யெடுக்கின்
பிடிபடும் ராசி யந்தரா சிக்கே
பெற்றிடு மாதாமந் நாளில்
பிறைநுதற் றிலத முகமதி கருங்கட்
பெண்ணணங் கேயெனப் பேசே.

இ-ள். இந்திரவில்நுதலும், சிந்துரத்திலதமும், சந்திரவதனமும், அந்தகனம்புபோல், வந்தமர் விழியும் கன்னல் மொழியும், மின்னலிடையு முள்ள பெண்ணேகேட்பாயாக, இரண்டாமிடத்ததிபன், குணகுறைகரப் புடத்தில், எமகண்டன் புடத்தைக் கழித்துக் கண்டராசியில், குருவருங் காலம், மனை விக்குத்தோஷமாம். இன்னும் இரண்டாமிடத் ததிபன் புடத்தில் குளிகன் புடத்தைக் கழித்துக் கண்டராசியிற் சனிவருங்காலமும், மனையாளுக்கரிட்டமாம் ஏழாமிடத்ததிபன்புடத்தில் அவமிருந்து புடத் தைக் கழித்துவரும் இராசி எதுவோ அந்தமாதத்தில் அந்த வாரமே மேற்சொன்ன களத்திரம் தோஷமாகுமென்று சொல்லவும். எ—று. 622

பேசிய விரண்டா மிடந்தனி லிரவி
பெறிதுறில் விடம்புசித் திடுவள்
பிறைகுறைந் திருக்கிற் சலத்தினுற் கண்டம்
பின்குச னுறிலனல் குளிப்பள்
பாசமாம் புந்தி பாவரைக் கூடிற்
பசிதனை பொருத்தொருத் திருப்பள்
பாவரை யரசன் கூடிடின் மகிழ்நன்
பரிகலந் தனைவெறுத் திடுவள்
நேசமாம் பிருகு பாவரைக் கூடி
நின்றிடில் விடம்புசித் திடுவள்
நிறைசனி யிருந்தால் வியாதியா யிருப்ப
ணீண்டதோர் பாம்பிரு வரையும்
தேசுடன் கூடிற் பாசபந் தத்தாற்
சீவனை யொழிக்கவே துணிவள்
தெரிந்தநல் லோர்கள் பார்வையுண் டாயின்
றீர்க்கசீ வன்பெறுந் திருவே.

இ—ள். பேசிடுங் குடும்பத்தானமாகிய, இரண்டாமிடத்தில், மாசில்லா மார்த்தாண்டன் நின்றால், நேசியாகிய மனையாள், விஷத்தைப் புசிப்பள். அமரபக்ஷத்துக்கு முதநண்பனிருக்கில், ஜலத்தினுற் கண்டம்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வக்கிரன் நிற்கில், அக்கினியாற் கண்டம். பண்டிதன் பாவரைக்கூடியிருந்தால், கொண்டமனையாள் பசிபொறித்து ஆகாங்குறைததுண்பள் பாவர்களைத் தேவகுருகூடியிருந்தால் கணவன் எச்சிலைப் பட்சமாயுண்ணுமல், லெச்சைப்பட்டு, வெறுத்திருப்பாள். சுக்கிரன் பாவரைக் கூடியிருந்தால் விஷமருந்துவாள், சனி கூடியிருந்தால் வியாதியாயிருப்பள். இராகு கேதுககள் கூடியிருந்தால் சங்கடததால் தங்கடத்தையொழிக்கத்துணிவள். சிபர்கள் பார்வை பெற்ருல், திர்க்காயுளுடையவளாம். எ-று. 623

திருவளர் மதிசுக் கிரனுமே ழிடத்திற்
செறிந்தத்த மனமதா யிருக்கில்

செலத்துயி ரிறப்ப ளேழிடந் தன்னிற்
செங்கதி ரிருக்கவந தியதாம்

மருவுசூ ரியனுந் தூமனுங் கூடின்
மனைவியை மருவிடா வஞ்சன்

மன்னுசக் கரசா பன்னுறின் மரிப்பள்
வளர்பரி வேடமுற நிடிலோ

சருவியே சண்டைக் காரியா யிருப்பள்
தக்கதோர் குசனுறி லவந்தி

தகைமைசேர் விதிபா தன்னுறிற் கர்ப்பந்
தரித்திடா மற்கலைந் திருப்பள்

ஒருமையாய் நிறைந்த மதியுமோ ரேழி
லுற்றிடின் மைந்தருங் குணமும்

உள்ளமெல் லியலை மணந்தினி திருப்ப
னுண்மையி தெனவுணர்ந் திடுமே.

இ-ள். இந்துவும், சுங்கனும், ஏழாமிடத்திற்கூடி, அஸ்தமனமாயிருக்க, சலத்தாலுயிரிழப்பள், மார்த்தாண்டன், ஏழாமிடத்திலிருக்க மலடியாவள், சூரியனும் தூமனுங்கூடி, ஏழாமிடத்திருக்க, மனைவியை மருவாத வஞ்சகனும். இந்திர தனுவிருந்தால் வந்த மனைவி மரிப்பள். பரிவேடனிருந்தால், சண்டைக்காரியாய் இருப்பள், நிலமகன் நிற்கில் மலடியாம். விதிபாதன் நிற்கில், சதி கர்ப்பந் தரித்திடாமற் கலைந்திருப்பவளாம். பூரணச் சந்திரனிருக்கில் குணமும், பிள்ளைகளையுமுடைய பெண்டாய் மணம்புரிந்திருப்பான். இஃதுண்மையாம் என்று அறிக. எ—று. 624

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உணர்ந்திடும் புந்தி யேழினி லிருக்க
வுருப்பெறும் புதல்வனைப் பெறுவள்
உற்றவே ழாதி யிரவிதூ மனுமே
யுடன்செறிந் தேழினி லிருக்க
மணந்திடு மிகுதி மனைவியத் தனையு
மரிக்குமென் றுரைப்பரே ழிடத்தில்
மன்னுதூ மாதி யைவரி லொருவர்
வந்திடிற் களத்திரர் காணி
அணைந்திடுஞ் சசிலக் கினத்தினுக் கேழு
மப்படிப் பலனென வறிக
ஆனதோர் மதிதன் னங்கிஷத் தேறி
யன்பொடு மேழிடத் திருக்க
குணந்திக ழுந்தார்ச் சுந்தரி நீசர்
குளிர்மனை யேழிட மாகக்
கோதறு கதிரங் கிசமதி யாகிற்
கொழுநரும் பலரெனக் கூறும்.

இவ்' வாழும் புந்தி ஏழாமிடத்திலிருந்தால், அழகுள்ள புத்திரனைப் பெறுவாள் ஏழாமிடத்தோன், ஏழ்பரியோன், தூமன், இவர்கள் கூடி ஏழாமிடத்திலிருக்க, விவாகஞ்செய்த பெண்ணத்தனையும், இறந்துவிடுமாம். ஏழாமிடத்தில் தூமன்-பரிவேடன். இந்திர தனுசு-விதிபாதன், அவமிருத்து இவர்களில் எவர்நின்றாலும், களத்திரத்துக்குக் குற்றமாம். சந்திர லக்கினத்திற் கேழிலும் இப்படியே பலன்களாம். சந்திரன் ஆட்சியங்கிசமேறி, ஏழாமிடமாய் நிற்க, குணமுள்ள அழகிய களத்திரமாம் நீசர் வீடு ஏழாமிடமாக, சந்திரன் சூயியாங்கிஷமேறி யிருக்க, களத்திரத்திற்குப் பலபுருஷர்களாம்.

வேறு

குடும்பங்களத்திரமாருதி கூடிப்புகரும்பாவருடன்
திடமேசன் மந்தனியிருக்கச் சனித்தோன்கமனபரதாரம்
வடிவரஞ்செல்விக்கிச்சிப்பன் வாழும்பாக்கியதானத்தில்
அடவேயிவர்கடாமுற்ரு லையருமிப்படியாமென்பார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். குடும்பாதிபன், களத்திராதிபன், ஆருமிடத்ததிபன், கூடியும் சுக்கிரன், பாவிகளோடுகூடி ஜென்மத்திலிருக்க, பரதாரகமனம் பண்ணுவான். அன்றியும், வடிவுள்ள பெண்களை இச்சிப்பவனுமாவன். ஒன்பதாமிடத்தில், மேற்சொல்லியவர்கள், கூடிநின்ருல், தகப்பனும் இப்படியேயாவன். எ-று. 626

ஆமேசுக்கிரனேழாதி யாருமதிபனுடன்கூடித்
தாமேமூவரொருவீட்டிற் றங்கிப்போகந்தானில்லை
தீமேயிரண்டுமூன்ருதி செறிந்தாறெட்டிற்பன்னிரண்டில்
காமேகூடியிருந்திடுே களரோதங்கள்காட்டிடுமே.

இ-ள். சுக்கிரன், ஏழுக்குடையவன், ஆறுக்குடையவன்கூடி இவர்கள் மூவரும், ஒரு வீட்டிலிருந்தாலும், போகமில்லாதவனும், இரண்டு மூன்ருமிடங்களுக்குடையவர்கள்கூடி மறைவுஸ்தானமாகிய ஆறு, எட்டு, பன்னிரண்டாமிடங்களில் இருந்தால், கண்டத்தில், ரோக முடையவனும். எ-று.

காட்டுஞ்சன் மமேழாதி கண்டகேந்திரகோணத்தில்
கூட்டியிருக்கவவர்வீட்டோன் கொண்டலக்கினந்தான்மேவி
நீட்டும்பலவானிவனென்றே நேசமறிந்தேயவர் திசையில்
ஊட்டும்புசிப்பிலிவன் பாரி யுகந்தேயிவனுடனுமரணம்.

இ-ள். ஜென்ம லக்கினதிபன், ஏழாமிடத்ததிபன் கேந்திர கோணங்களில், கூடியிருக்க, அந்த வீட்டுக்குடையவன், லக்கினத்திலிருந்தால், அவர்கள் திசை புத்திகளில் களத்திரமும், ஜாதகனும், சுகஜன்னி முதலியவைகளா லிறப்பார்கள். எ-று. 628

சத்தமமட்டமாதி தன்னுடன்பாவரேனும்
ஒத்துடனந்தத்தானத் துறுபலபாவரேனும்
சித்தமாம்விபத்தின்மன்னன் சேயுடன்கூடினுலும்
ஒத்தநல்விவாகம்ரெண்டா யுறுமணம்புரிவனென்றே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். ஏழு, எட்டாமிடத்ததிபர்களோடு பாவர்களாயினும், அல்லது அந்த ஏழு எட்டாமிடங்களில், பாவர்களாயினும், பன்னிரண்டாமிடத்தில், புங்கவன் மங்கலுடன் சேர்ந்தாலும், இரண்டு களத்திரமுடையவனும். எ-று.

ஏழிடமிரண்டாமாதி யிருவரிலொருவரேனும்
தாழ்பலவீனராகத் தானுநிலந்தவீட்டில்
ஊழ்பெரும்பாவர்நிற்க வுறுமணமிரண்டுசெய்து
வாழ்பவர்புவியிலென்று வழுத்துவர்மறைவல்லோரே.

இ-ள் இரண்டு ஏழுக்குடையோர், இருவரில் ஒருவர் பலவீனராக விருக்க, அந்த இரண்டு ஏழாமிடங்களில், பெரும்பாவர்கள் நிற்க, இரண்டுகளத்திரமுடையவனென்று சொல்லுவார்கள். எ-று. 630

வல்லதிரண்டில்வெகுபாவர் வந்துற்றுலுமோரேழில்
சொல்லும்பாவர்தானுநிஞ் சுகமாமந்தமனையினிலும்
வெல்லுமிந்த மனையோனை விரும்பிப்பாவர்நோக்கமுற
நல்லமணங்களிரண்டென்று நவில்வர்கணிதநாவலரே.

இ-ள். இரண்டாமிடத்திலாயினும், ஏழாமிடத்திலாயினும், பாவர்கள் நிற்க, அந்த இரண்டு, ஏழாமிடங்களைப் பாவர்கள் பார்த்தாலும், அவ்வதிபர்களை நோக்கினும் இரண்டு களத்திரமுண்டென்று கணித வல்லோர் சொல்லுவர். எ-று. 631

ஏற்றியசன்மம்ரெண்டி லேழினிற்பாவரேனும்
நேர்த்தியாங்களத்திராதி நீசரத்தமனமேனும்
வேற்றுசத்துருவீட்டினம் விரும்பியேநின்றதாயில்
போற்றுவர்களத்திரங்க ளிரண்டெனப்புகலவர் தாமே.

இ-ள். ஜென்மம், இரண்டு, ஏழாமிடங்களில் பாவர்களிருந்து களத்திராதிபன், நீசம், அஸ்தமனம், சத்துரு வீட்டிலுமிருந்தால், இரண்டு களத்திரமாமென்று சொல்லுவார்கள். எ-று. 632

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மேவியகளத்திராதி விரும்புகேந்திரகோணத்தில்
பாவியர்க்ஷேத்ரெநட்பும் பரிந்துறப்பத்தோன்கூடத்
தாவியவேழோனுசைதரிப்பச் சொட்சேத்திரங்கண்டால்
தேவியுமனேகமாகத் திடமணம்புரிவன்ருனே.

இ-ள். களத்திராதிபன், கேந்திரகோணங்களில் பாவியர் வீடாய் நட்புப் பொருந்தியிருக்க. பத்தாமிடத்தோன் கூடியிருக்க, ஏழாமிடத்த திபன் சொட்சேந்திராமிசம் பெறில், அநேக களத்திரங்களைத் திடமாய் விவாகஞ்செய்வான். எ று. 633

ஆனதோரேழிடத்தி லரசனும்பலமதாகி
ஈனமில்பளிங்குதானு மிருந்திடவலுவதாகத்
தேனிகர்குடும்பவாதி சினேகாங்கையிருக்கவேதான்
தான திருபமுள்ள தனபதிநாரியென்றே.

இ-ள். சத்தமத்திற் புத்திரகாரகனாகிய, வியாழபகவான் பலமாகி சுக்கிரனோடு சேர்ந்திருக்கக் குடும்பாதிபன், திடம்பெற்று நட்பாங்கிசையி லிருக்கத் தனவான் புத்திரியும் குணமும், அழகும் வாய்ந்த பெண்ணை திருமணஞ்செய்வன். எ-று. 634

ஏயலாபாதி யேழா னிருவரும் பலமாய்க் கூடித்
தூயகோ ணத்தி ருக்கச் சுபருடைப் பார்வை யாகில்
நேயமா மனேகம் பெண்க ணிறைசீவ னுள்ள ராக
ஆயவே மணங்கள் சூட்டி யவனியி லிருப்பன் ருனே.

இ-ள். இலாபாதிபதி, ஏழாமிடத்ததிபதி, இவ்விருவரும், பலமாய்க் கூடிதிரிகோணம் பெற்றிருக்கச் சுபர் பார்வையாகில் அநேகம்பெண்களை விவாகம் செய்பவன், களத்திரங்களுக்கும், தீர்க்காயுளுண்டாம். எ-று. 635

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இருந்திடு மிரண்டே ழாதி லக்கினகோ புராங் கிசைக்குள்
பரிந்துறும் பத்தா மாதி பண்புட னேழி லுற்றால்
தெரிந்தநற் களத்தி ரங்கள் தேசமெனக் கொள்வ ரென்றே
புரிந்திடுங் கணித நூலின் புண்ணிய ரோதி னாரே.

இ-ள். இரண்டு. ஏழுங்குடையவர்கள், லக்கினங்கிசம் கோபுராங்கிச மேறியிருக்க, பத்தாமிடத்ததிபன் ஏழாமிடத்திலிருக்க பத்துகளத்திரம் விவாகஞ் செய்வானென்று கணிதவல்லவர்கள் சொல்லுவார்கள். எ-று 636

ஓதிய களத்தி ராதி யுயர்சுப ராசி யேறி
மீதுமங் கிசைநல் வீடாய் மேவிடப் பளிங்கு தானும்
நீதியிற் படிபோ லாக நிறையும்பத் ததிப னோடும்
ஓதிய பலவான் கூட மோகனப் பெண்கள் கொள்வான்.

இ-ள். களத்திராதிபன், சுபர் வீட்டிலும், சுபாங்கிஷத்திலும், இருந்திட சுக்கிரனு மிப்படியேயிருக்க, பத்தாமதிபனோடு, பலவான்கள் கூடமோகனப்பெண்களைக் கொள்பவனும். எ-று. 637

கொள்ளுநற் களத்தி ராதி குருவுடன் கூடினாலும்
தெள்ளிய பார்வை யுற்றுத் திடமுள தலனுற் றாலும்
மெள்ளவே பிருகு தானும் வெகுபல மாக வுற்றால்
ஒள்ளிய தான தர்ம முள்ளவன் வருவ டானே.

இ-ள். களத்திராதிபன், குருவோடு கூடினாலும், சுபர்கள் பார்வையுற்றாலும், சுபக்ஷேத்திரம் பெற்றாலும், சுக்கிரன் பலத்திருந்தாலும், தன தருமஞ்செய்யக்கூடிய பெண்ணை விவாகஞ்செய்வான். எ-று 638

வந்த லக்னந் தனுமீனம் வரவே புதனும் பாவருடன்
இந்து நீச மத்தமன மிருந்தங் கிசைகள் சத்துருவின்
சொந்த மங்கிசை யேறுகினுந் தூர்த்தர் பாவர் களத்திரத்தில்
உந்தி யிருக்க வேசியரா யுயர்ந்த குலமுந் தாழ்வாமே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். லக்கினம், தனுசு மீனமாக, புதன் பாவருடனும், சந்திரன் நீசம் அஸ்தனமாகியும், சத்துருவாங்கிஷமேறியிருந்தும், பாவர்கள், களத்திரஸ்தானங்களிலிருந்தாலும் வேசியராய் உயர்ந்த குலத்தையுந் தாழ்வாகக்கூடிய களத்திரமாம். எ-று. 639

ஆமே களத்தி ராதிபதி யரச னாகிப் பாவருடன்
தீமே பரவ ராசியிலுஞ் சிறந்தே யிருக்கப் பாவர்களும்
தாமே நோக்க மானாலுஞ் சனிசே யங்கிசை யுற்றாலும்
போமே சோரம் ரகசியமாய்ப் புறம்பு மசையா தவள்போல.

இ-ள். களத்திராதிபதி, குருவாய், பாவர்களுடன்சேர்ந்து பாவர் வீட்டிலுமிருந்து பாவர்களும்நோக்க, சனியங்கிசையிலுற்றாலும், புறமசையாதவள்போலவிருந்து ரகசியமாய்ச் சோரஞ்செய்பவளான களத்திரமாம். எ-று.

போகுங் களத்தி ராதிபதி புகராய்ப் பாவ ருடன் கூடி
ஏகும் பாவர் பார்த்திருக்க யெழிலார் சத்துரு வங்கிசையில்
ஆகும் பாவ ரங்கிசையி லமர்ந்தே யிருக்க வன்னியர்பால்
தாகமுடனே சஞ்சரித்துச் சமர்த்தாய்ச் சோரஞ் செய்திடுவள்.

இ-ள். களத்திராதிபதி, சுக்கிரனாய்ப் பாவர்களுடன்சேர்ந்தும், பாவர்கள்பார்த்தும், சத்துரு பாவரங்கிசமேறியுமிருக்க, அன்னியர்பால் அனுராகம் புரிந்து, தன்னிகரில்லாச் சாகசச் சோரஞ்செய்கின்ற களத்திரமாம்.

ஏழா மிடத்தோன் பாவருட னிரண்டி லிருக்கச் சேய்பார்க்கச்
சூழும் விபசா ரத்தொழிலாற் சுதனு முண்டா மெனச்சொல்வர்
வாழு மிலக்னத் துடையோனும் வரவா றெட்டிற் பன்னிரண்டில்
தாழ்வா யிருக்கப் பெண்ணிரண்டு தானுங் கொள்வன் தப்பாதே.

இ-ள். ஏழாமிடத்தோன் பாவருடன்கூடி, இரண்டாமிடத்திலிருக்க, செவ்வாய்பார்க்க, வியபிசாரத்தால், புத்திரனுண்டாமென்று சொல்லுவர், லக்கினத்துக் குடையவன், மறைவு ஸ்தானமாகிய ஆறு எட்டு பன்னிரண்டாமிடத்தில் பலமற்றிருக்க, இரண்டுதாரங் கொள்பவனாதும். எ-று. 642

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கொள்ளும் லாபாதி களத்ராதி கூடி ஞலும் பார்த்தாலும்
தெள்ளும் பலவா ஞகியிவர் திரிகோ ணத்தி லிருந்திடினும்
உள்ள விவாக மூன்றென்றே யுரைப்பர் கணித வல்லோர்கள்
கள்ள விடம்போல் விழிமருட்டுங் கருமென் குழனற் காரிகையே.

இ-ள். விடம்போன்ற விழியும், மேகம்போன்ற கரிய கூந்தலுமுடையபெண்ணே? லாபாதிபதி, களத்திராதிபதி கூடினுலும், பார்த்தாலும், பலவான்களாய் லக்கின திரிகோணத்திலிருந்தாலும், மூன்றுகளத்திரங்களுண்டென்று கணித வலவவர்கள் சொல்லுவார்கள், எ-று. 643

லக்கினந் தனக்கேழ் தன்னில் வியத்தினிற் சோமன் ருனும்
புக்கவே பாவரங் கிசையிற் பொருந்தியே யிருந்த காலை
சுக்கிரன் பாவ ரோடுந் துலங்கவே யிருக்க நாரி
கைக்கொளும் புருட ஞய கணவனைக் கொல்வள் கண்டீர்.

இ-ள். ஜென்மலக்கினத்திற் கேழிலும், பன்னிரண்டிலும், திங்களாகிய சந்திரனிருந்து, பாவாங்கிசமேறியிருந்தாலும், சுக்கிரன் பாவரோடுந் துலங்கியிருந்தாலும், கணவனைத் திரணமாய் எண்ணி மரணஞ்செய்ய வழிபார்க்கும் களத்திரமாயிருப்பாள். எ-று, 644

ஏழாம்பாவம்
சம்பூரணம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

எட்டாம் பாவம்

ஆயுட் பலன்

அட்டமத் ததிபன் பாக்கி யாதிப னுகி நிற்கில்
அட்டமத் ததிபன் பாவி யாகிலு மைய மில்லை
அட்டமத் ததிப னுச்ச மாகினு மான நற்கோள்
அட்டமத் ததிபன் றன்னைப் பார்க்கினூ ருண் டிருப்பன்.

இ-ள். அட்டமத்ததிபன் திட்டமாய், பாக்கியாதிபதியாகி நின்ருலும் அவ்வதிபன் கொடிய பாவியாயிருந்தாலும், ஆயுள் தீர்க்கம், சந்தேகமில்லையாம் எட்டுக்குடையவன் உச்சமானாலும், சுபக்கோள் பார்த்தாலும், நூறு வய திருப்பவனுவான். எ-று. 645

பங்கு பாதன் செவ்வாயைப் பற்றிய புசிப்பிற் காரி
தங்கிய திசையிற் செவ்வாய் தானுகந் திடுபு சிப்பில்
அங்கவ னட்ட மாதி திசையினி லவன்பு சிப்பில்
மங்குகோ சரநன் ருயின் வருத்துநோய் மாறுந் தானே.

இ-ள். முதுமகன் திசையில் நிலமகன் புத்தியில், நிலமகன் திசையில் முதுமகன் புத்தியில். அட்டமாதிபன் திசையில் அவன் புசிப்பில் நோயால் வருத்தப்படுவான் கோசரம் நன்ருயின் மாசற நோய்மாறிச் சுகமடைவனே. 646

வேறு.

ஆறெட் டுப் பன்னிரண்டா மதிப ரோடும்
அலதிவர்மூ வர்க்கைந்தொன் பானிலேனும்
வீறிட்ட சனிமேவிற் சரீர பீடை
மேவியவெட் டாதிபன் கேந் திரத்தி லேனும்
பேறிட்ட சன்மாதி பதியுந்துற் பலனுய்ப்
பெறினுலெட் டாண்டென்று பேச லாகும்
கூறிட்ட சன்மாதி பலவா னுயிற்
குலவும்வெகு வயதென்றே கூறலாகும்.

இ-ள். சட்டாட்டம வியத்தானத் ததிபர்களோடும், அல்லது, இம்மூவர்க்கும், பஞ்சமபாக்கிய ஸ்தானத்திலாயினும், சனிநின்ருல், சரீர பீடையாம். அட்டமாதிபன் கேந்திரத்தில் நின்ருலும், ஜென்மாதிபதி பலமற்றிருந்தாலும், 32 வருஷமாயுளென்று, ஜென்மாதிபதி பலவானுகில், வெகுவயதென்றும், சொல்ல வேண்டும் எ-று 647

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வேறு

கூறுங் கடக முதலாறுராசிக் குள்ளே குருவிருக்க
வீறு மகர முதலாறுக் குள்ளே காரி மேவு கினும்
பேறுங் கடக கேந்திரத்திற் பிருகும் புதனும் பெறநிற்கில்
மாரு துறுந்தீர்க் காயுளுடன் வையந் தன்னில் வாழ்வாரே.

இ-ள். சொல்லும். கடகராசி முதல், செல்லும் ஆறுராசிக்குள், நல்ல வியாழனும், மகரவிராசிமுதல், ஆறுராசிக்குள், பகரும், பங்குபாதக ளுகிய சனியும், கடககேந்திரத்திற், காமனும் சாமனும், திட்டமாய்ப் பொருந்தியிருங்கில் அப்பேர்க்கொத்த ஜாதகர்கள் தீர்க்காயுளோடு பூமியில் வாழ்ந்திருப்பார்கள். எ-று. 648

வாழு மகர முதலாறின் மந்த னிருக்கக் கடகமுதல்
சூழும் ராசி யாறுக்குட் சோம னிருக்கக் கேந்திரத்தில்
வீழு மரச னுறிற்றீர்க்க வயதா மெட்டிற் குசனிருக்க
ஏழுங் கதிரோ ரைகளரச ளேழிற் கேந்திர நூருண்டே.

இ-ள் மகரம் முதல் ஆறுராசிக்குள் மந்தனிருக்க, கடகம் முதல் ஆறு ராசிக்குள், சந்திரனிருக்க கேந்திரத்தில் குருவிருக்கத் தீரக்கவயதாகும் எட்டாமிடத்திற் செவ்வாயும், சூரிய ஓரைகளில் குரு ஏழாமிடம் அல்லது கேந்திரம் பெற்றிருந்தாலும் நூறு வயதாகுமாம். எ-று 649

ஆண்ட மிதுன முதலாறி லரச னிருக்கத் தனுமுதலாய்த்
தீண்டு மிராசி யோராறிற் றிரிகோ ணங்கேந் திரந்தன்னில்
நீண்ட புதனுஞ் சுக்கிரனும் நிற்கிற் றீர்க்க சீவனுமாம்
பாண்டி மகரா சன் கொடியைப் பழித்த கருங்கட் பைங்கொடியே.

இ-ள். பாண்டியன் கொடிக்கு நிகராக வேண்டும் மீனைப்பழித்த கருங் கண்களையுடைய பைங்கொடி போல்பவளே? மிதுன விராசிமுதல் ஆறுராசிக்குள் குருவிருக்க, தனுசுமுதல் ஆறுராசிக்குள்ளும் திரிகோண கேந்திரத்தும், புதனுஞ் சுக்கிரனும் பொருந்தி நிற்கில் தீர்க்க வயதாகுமாம் எ-று 650

கொடியே குருசுக்கிரனுன்கா மிடத்திற்குடி கொண்டேயிருக்க
நெடிய ஜென்மலக்கினத்தி னிலவுமிருக்க விவர்க்குநடு
கடியசனிரீச்சுரனிருக்கக் கண்டவயதாமொரு நூறே
பிடியுமிளம் பேட்டன்னமுமுன் பின்னே தொடருநடையாளே.

இ-ள். பிடியானையும், பெட்டையன்னமும், புன்னும் முன்னுந் தன்னைத் தொடரும்படியான நடையையுடைய பெண்ணே? நாலாமிடத்தில் கோலாகலக் குருவும், சுக்கிரனும் ஜென்ம லக்கினத்திற் சந்திரனுமிருக்க, இவர்களுக்கிடையில் சனியிருக்க நூறு வயதாகும். எ-று 651

நடிக்குஞ்சன்மமுதனுன்கா மிடத்துநடுவே நாற்கலையும்
யடிக்கும்புதன்சுக்கிரனரசன் பரிந்தேயிருக்கிற்சதவருஷம்
துடிக்கும்புதனென்றேநின்ருற் றெடர்முப்பத்துமூன்ருகும்
அடுக்கும்வெள்ளிக்கறுபத்தா றரசனிருந்தானூருமே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள் ஜென்ம லக்கினம் முதல், நான்கு விராசிக்குள், தேர்ப் பாகன், குரு, சுக்கிரன், இவர்கள் மூவருமிருந்தாற் நூறு வயதாம். புதன் மட்டுமிருந்தால், முப்பத்தி மூன்று வயதும், புதனுஞ் சுக்கிரனும் பொருந்தியிருந்தால், அறுபத்தாறு வயதும், புதனுஞ் சுக்கிரனுங் குருவுங் கூடியிருந்தால் நூறு வயதுமாமென்க. எ-று 652

ஆமட்டமத்தினுதிபனு மட்டமத்திலமர்ந்திருக்கச்
சோமன்பாவருடன்கூடி யிரண்டாறெட்டிற் சூழ்ந்திருக்கில்
தாமும்வயதைம்பத்தெட்டாந் தருமஞானிதானவன்
காமன் கணையைப்பழித்தயிலைக் கடிந்து மருட்டுங்கண்ணாளே.

இ-ள். காமன் கணையைம் பழித்துக் கதிர்காமன் வேலையுங் கடிந்து மருட்டுகின்ற கண்களையுடைய பெண்ணே! அட்டமாதிபன் அட்டமத்தி லிருக்க, திட்டமாய்ச் சந்திரன், கெட்டவராகிய பாவருடன்கூடி இரண்டு ஆறு எட்டாமிடத்திற் சூழ்ந்திருக்கில், ஐம்பத்தெட்டு வயதாம். தரும ஞானி தானவான் என்க. எ-று 653

கண்ணார்கும்பலக்கினமே கண்டசன்மலக்கின மாய்ப்
பண்ணார தற்கெட்டாங்கிசையிற் பயிலுமரசன் பரிந்து நிற்க
எண்ணார்பாவர்கேந்திரத்தி லில்லாதிருக்கவிவ்வுலகில்
தண்ணார்வருஷமறுபதுக்குந் தானுற்றிடுவர் தப்பாதே.

இ-ள். கும்பம் ஜென்மலக்கினமாய், அதற்கெட்டாமங்கிசையிற் குருவிருக்க, பாவர்கள் கேந்திரத்திலில்லாதிருக்கப் பிறந்தவன், இப்புவி யில் தப்பாமல் அறுபது வருஷம் ஜீவித்திருப்பான். எ-று. 654

தப்பாவில்லேலக்கினமாய்த் தன்னிற்குருவுந்தானிருக்க
இப்பார்குசனிந்தொடுகரும்பாம் பிவர்மூவோருந் தாங்கூட
மெய்ப்பாரெழுசத்தைந்தாகு மேவும் பாவர்கேந்திரத்தில்
ஒப்பார்சன்மத்தாதியெட்டி லுறிலாண்டிருபத்தெட்டாமே.

இ-ள் இப்பாரில் தப்பாமற் பிறந்த ஜாதகன் தனுசு லக்கினமாய் அதில் ஒப்பாருமில்லாக் குரு விருக்க அப்பாலுஞ் செவ்வாய் சந்திரன் ராகு-இவர்கள் மூவருங்கூட எழுபத்தைந்து வயதாம். கெட்ட பாவர்கள் கேந்திரத்திலும், இட்ட ஜன்மாதிபதி, எட்டாமிடத்திலும் நிற்கில் மட்ட டங்கா வயது இருபத்தெட்டாம். எ-று. 655

எட்டாம்பாவரங்கிசையி லினியோரிருக்கக் கேந்திரத்தில்
மட்டார்பாவர் தாமிருக்க வயதுமறுபத்தாறுகும்
செட்டார்சுபரங்கிசை தன்னிற் சென்மாதிபனுந் தானிருக்க
எட்டாறினிலெட்டாதிபதி யிருக்கிலைம்பதென்பாரே.

இ-ள் எட்டாம் பாவரங்கிஷத்தில், திட்டமாய்ச் சுபர்களிருக்க, கெட்ட பாவர்கள், கேந்திரத்திருமிக்கப் பிறந்த ஜாதகனுக்கு, மட்ட டங்கா வயது அறுபத்தாறும். எட்டு நிறைந்த சுபாங்கிசையில் மட்டுல வும் லக்கினுதிபன் திட்டமாயிருக்க எட்டு ஆறு இவ்விடத்தில் எட்டா மிடத்ததிபன் கட்டோடே நிற்கில் ஐம்பது வயதாம். எ-று. 656

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

என்பாரெட்டாமதிபதியும் லக்கினத்திஞதிபனும்
ஒன்பாஞதிநற்கோளே லுயிர்போந்தந்தைக்கருகின்மைந்தர்
அன்பாயிருப்பர்சன்மத்தி லரவுகதிர்சந்திரனிருக்க
வன்பாம்வியத்திற் குருவிருக்கில் வயதுமிருபத்தெட்டாமே

இ-ள் அட்டமாதிபனும் லக்கிஞதிபனும், ஒன்பதாமிடத்ததிபனும், சுபர்களாயின் பிள்ளைகள் அருகிருக்கத் தகப்பனிறப்பன். ஜென்மத்தில் ராகு, கேது சூரியன் சந்திரன் இருக்க, பன்னிரண்டாமிடத்திற் பொன்னவனிருக்கில், அன்னவனுக்கு வயது இருபத்தெட்டாம் எ-று 657

வேறு.

ஆகும்லக்கின மெட்டாதிகூடியே
வாகுகேந்திரத் தெய்தமற் றெட்டினில்
தாகமோடெவ ராயினுந் தானுறில்
ஏகுவன்பன் னிரண்டினிற்கண்டமே.

இ-ள். அட்டமாதிபனும், லக்கிஞதிபனும் ஒன்று சேர்ந்து, ஒன்று நான்கு எழுபத்தாமிடமாகிய கேந்திரத்திலிருக்க அட்டமத்தில் யாரிருந்தாலும் அன்னேனுக்கு இந்நிலத்தில், பன்னிரண்டு வயதிற் கண்டமுண்டாம். எ-று. 658

கண்டவேழெட்டாறிடத்திற் கதித்தநல்லோர் தாமிருக்க
அண்டின்மூன்றிற்பன்னென்றி லசுபருறத்தீர்க்காயுளுண்டாம்
கொண்டவெட்டாதிபனுச்சங் கொளச்சென் மாதிபன்ருனும்
மிண்டியினியோர்காணக்கேந் திரத்திலிருக்கவெகுவயதே.

இ-ள் ஆறு-ஏழு-எட்டாமிடங்களில், கூறுதற்கரிய சுபர்களிருக்க மூன்று பதினேராமிடங்களில், தோன்றும், பாவர்களிருக்கத் தீர்க்காயுளுண்டாம் அட்டமாதிபன் உச்சமாக லக்கிஞதிபன் சுபர்கள் பார்வை பெற்றுக் கேந்திரத்திலிருக்க வெகுவயதாகும். எ-று. 659

தேரும்வயதினளவுரைப்பக்கேண்மின் சன்மாதிபன்றனக்கும்
ஊரும் பரித்தேரோன்றனக்கு முறவா கிற்றீர்க் காயுளுண்டாம்
ஏருஞ் சமமேன் மத்திமமா மெட்டெட் டாண்டே யினிதிருப்பன்
நேரும் பகைய தாகிலற்பம் நிலத்தி ஞலெட் டாண்டிருப்பன்

இ-ள். வையகத்திற் பிறந்த மனுக்களுக்கு, வயதினளவைப் பயிலுமிடத்து ஒயிலான ஜென்மாதிபனுக்கும், ஒற்றையாழியோனுக்கும், உறவாயிருந்தால் தீர்க்காயுளாம் சமமாயிருந்தால் மத்திமவயதாகிய அறுபத்துநான்கு வயதாம் பகையாயிருந்தால் அற்பவயதாகிய முப்பத்திரண்டு வயதாம். எ-று. 660

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நட்சத்திரங்களின் அமுத கடிகையறிய.

அசுவனி	21	சுவாதி	22
பரணி	30	விசாகம்	20
கார்த்திகை	50	அனுஷம்	14
ரோகணி	14	கேட்டை	31
மிருகசீரிடம்	30	மூலம்	14
திருவாதிரை	40	பூராடம்	10
புனர்பூசம்	14	உத்திராடம்	14
பூசம்	16	திருவோணம்	20
ஆயிலியம்	40	அவிட்டம்	14
மகம்	20	சதயம்	20
பூரம்	30	பூரட்டாதி	10
உத்தரம்	33	உத்திரட்டாதி	18
அஸ்தம்	7	ரேவதி	12
சித்திரை	16		

இந்த நாழிகைக்குமேல் நாலு நாழிகை அமுத கடிகையாம்.

நட்சத்திரங்களின் விஷகடிகை யறிய

அசுவனி	50	சுவாதி	14
பரணி	24	விசாகம்	14
கார்த்திகை	30	அனுஷம்	10
ரோகணி	40	கேட்டை	14
மிருகசீரிடம்	14	மூலம்	20-56
திருவாதிரை	11-21	பூராடம்	24
புனர்பூசம்	30	உத்திராடம்	20
பூசம்	20	திருவோணம்	10
ஆயிலியம்	32	அவிட்டம்	10
மகம்	30	சதயம்	18
பூரம்	20	பூரட்டாதி	16
உத்தரம்	18	உத்திரட்டாதி	24
அஸ்தம்	22	ரேவதி	30
சித்திரை	26		

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இந்த நாழிகைக்கு மேல் நாலு நாழிகை விஷமிருக்கும் நட்சத்திரங்களாம்.

இருக்கு மற்ப வயதுள்ளோ னிறப்பன் விடநட்சத்திரத்தில்
வருக்க முடன்பூ ரணவயதோன் மரண வதைநட் சரத்தில்
பெருக்க முடன்மத் திமவயது பிறத்திய தாரை யதுதன்னில்
தருக்கு மற்ப வயதிலற்பஞ் சாற்றக் கேண்மின் றரைமீதே.

இ-ள். அற்பவயதுள்ளவன், விஷநட்சத்திரத்திலும் பூரண வயதுடையவன்' பிரத்தியதாரை நட்சரத்திலும், மத்திம வயதுள்ளவன். பிரத்தியதாரை நட்சரத்திலும் இறப்பார்கள். அற்பவயது, அற்பத்திலற்ப வயது சொல்லக் கேட்பாயாக. எ-று. 661

தருஞ்சன் மாதி பாவாங்கிசந் தரிக்கில் வயதற் பத்திலற்பம்
வருஞ்சன் மாதி சுபாங்கிசத்தில் வரவற் பத்தின் மத்திமமாம்.
அருள்சன்மாதிதனை நல்லோர் காணவற்பத்தினிற்றீர்க்கம்
உருமத்திமந்தீர்க்கந்தனக்கு முளவிப்படிக்கண்டுரைமானே.

இ-ள். ஜென்மாதிபதி பாவாங்கிஷத்திலிருக்கில் அற்பத்திலற்ப வயதாம். சுபாங்கிஷமேறின் அற்பத்தில் மத்திம வயதாம். சன்மாதிபதியைச் சுபர்கள் பார்த்தால் அற்பத்திற் றீர்க்க வயதாம். எ-று. 662

கதிரோனுதயமுதற்சனன காலையளவுங்கடிகைதனை
எதிராவெண்ணியிரண்டரையி லிந்தாலோரைலக்கினமாம்
சதிராய்ச்சன்மவீடொற்றை தானுகிற்சூரியன்முதலாம்
அதிராய்ச்சன்மவீடிரட்டை யாகிற்சன்மமுதற்கரியே.

இ-ள். சூரியோதய முதல் ஜெனனகாலம் வரைக்கும் சென்ற நாழிகையை இரண்டரையில் வகுக்க, எத்தனையாவது பங்கிலொட்டுகிறதோ, அத்தொகைப்படி ஒற்றைராசியாகில் சூரியன் முதலாகவும் இரட்டை ராசியாகில் ஜெனனமான லக்கின முதலாகவும், எண்ணிக்கண்ட விராசி ஓரையாகக் கொள்ள வேண்டும். எ-று. 663

வேறு

சரமதனிற் சரந்தீர்க்கந் திரந்தான்மத் திமமாம்
தங்கியதோ ருபயங்க டானற்ப மாகும்
திரமதனிற் றிரமற்பஞ் சாந்தான்மத் திமமாம்
திரத்திலுப யம்பெறினுந் தீர்க்கவய தாகும்
வருமுபயந் தனிலுபயம் மத்திமமே யாகும்
மற்றுமதிற் சரமாகில் வயதற்ப மாமே.
பெருமையுட னுபயத்திற் திரந்தீர்க்க வயதே
பெற்றிடிற்பூ ரணவயது பெற்றிடுவார் தாமே.

இ-ள். லக்கினம் சரமாக, அஷ்டமாதிபன் சரத்தில் தீர்க்கம். திரத்தில் மத்திமம். உபயத்தில் அற்பமாம். திரத்தில் திரம் அற்பம் சரம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மத்திமம் உபயம் தீர்க்கம் உபயத்தில் உபயம் மத்திமம் சரம் அற்பம். திரம் தீர்க்க வயது பெற்றிடுவரென்பதாம் எ-று. 664

பெறுந்திரிகோ ணங்களிற்கேந் திரத்தினல்லோர் நிற்கப்
பின்னுஞ்சன் மாதிபன்பொன் னுடனுன்கி னிற்க
உறுவதுநூ ருண்டளவு முலகில்மிக வாழ்வர்
உற்றசன்ம மோரெட்டா திபனுமுடன்கூடி
மருவுறவா ருமிடத்திற் சனிபார்க்க நிற்கில்
வாலையிலே வரிட்டமென வேவமுத்த லாகும்
சிறுகுழவி யிலக்கினத்திற் சேயெட்டிற் றிங்கள்
செறியுமிரு வரைக்காரி தெரிசிக்க லரிட்டம்.

இ-ள். திரிகோண கேந்திரங்களிற் சுபர் நிற்க, ஜென்மாதிபன் குருவுடன்கூடி நான்காமிடத்தில் நிற்க நூருண்டளவும், பாராண்டுலகில் மிக வாழ்வர். லக்கினதிபதி, அட்டமாதிபதி இவர்கள்கூடி ஆருமிடத்திலிருக்கச் சனி பார்க்கில் வாலைவயதில் பாலாரிட்டமாம் லக்கினத்தில் வக்கிரனும். எட்டாமிடத்தில் வட்ட நிலவுமிருக்க இவ்விருவரையும் சவுரி பார்த்தால், இப்பாரில் அப்பாலருக்குத் தப்பாமற் பாலாரிட்டமாம். எ-று. 665

வேறு

மானிடருக் கயன்விதித்த வாண்டைமூன் ருக்கின்
வருமுப்பான் மூன்ருகு மஃதற்ப மென்ப
தானறுபத் தாருமத் திமந்தீர்க்க மிதன்மேல்
தாழ்வறமுன் வகுத்திடுபங் கொன்றினைமூன் ருக்கில்
பான்மொழியாய் பன்னொன்ரும் பங்கொன்று தனக்கே
பகர்ந்திடுவா யற்பத்தி லற்பமத்தியந் தீர்க்கம்
ஆனமத்தியந் தீர்க்கத்தை யிவ்வாறே பிரித்து
அறிந்திடுநீ யவரவர்க ளரயுளினைக் கண்டே.

இ-ள். மனிதர்களுக்குப் பிரமன் விதித்த நூருண்டை, மூன்ருகப் பாகிக்க முப்பத்திமூன்ரும். இது அற்ப வயதாம் அறுபத்தாருண்டு மத்திம வயதாம். நூருண்டுவரை தீர்க்க வயதாம். ஒவ்வொன்றையும் மும்மூன்று பங்காக்கப் பங்கொன்றுக்குப் பதினொரு வயதாம். முதற்பங்கு பதினொன்றை அற்பத்தி லற்பமெனவும், இரண்டாம்பங்கு, இருபத்திரண்டை அற்பத்தில் மத்திபமெனவும், மூன்ரும் பங்கு முப்பத்திமூன்று வரை, அற்பத்தில் உத்தமம் எனவும் சொல்லுக. அறுபத்தாறுவரை மத்திமத்தில் உத்தமம் எனவும், நூறு வயதுவரை உத்தமத்திலற்பம், உத்தமத்தில் மத்திமம், உத்தமத்தில் உத்தமம் எனப் பிரித்து அவரவர்கள் ஆயுள்தானத்தைக் கண்டு அறியக்கடவாய் என்பதாம். எ-று. 666

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வேறு

அட்டமா திபனுங் குசனுமே கூடி
யாறுபன் னிரண்டிடத் திருக்கில்
துட்டரா யுதத்தான் மரணமற் றினியோர்
சூழ்ந்துகண் டிடப்படுங் காயம்
எட்டினு திபன்பாம் புடன்விய மெட்டா
றெய்திடிற் கள்ளரா லரிட்டம்
தொட்டலக் கினமென் டாதிசேர்ந் துதகஞ்
சூழ்மனை யுறிற்சல கண்டம்.

இ-ள். எட்டுக்குடையவனும், செட்டுக்குடைய செட்டியாகிய செவ்வாயுங்கூடி, ஆறுபன்னிரண்டாமிடங்களிலிருந்தால், துட்டாயுதத்தால் மரணமாம். மற்றச் சுபர்கள் பார்த்தால், படுகாயமுண்டாம். அட்டமாதிபன், சூராகு கேதுக்களுடன் கூடி சட்டாட்டம வியத்திலிருக்கக் கள்ளரா லரிட்டமாம். லக்கினுதிபனும், அட்டமாதிபனுஞ் சேர்ந்து, சல ராசிகளில் நிற்கச் சலகண்டமாம். எ-று. 667

கண்டவெட் டாதிவாகனு திபனைச்
கலந்துபன் னிரண்டோடா றெட்டில்
மிண்டியநீசர் சத்துரு மனையில்
மேவில்வா கனங்களான் மரணம்
மண்டியெட் டதிபன் காரியங் கிசத்தில்
வகின்மரத் தேறிவீழ்ந் திறப்பன்
அன்றியொன் றெட்டோ னீசரங் கிசம்புக்
காற்சனி வாதமாஞ் சூரும்.

இ-ள். எட்டாமிடத்ததிபன் இட்ட வாசனுதிபனோடு கூடி, ஆறு எட்டு பன்னிரண்டாமிடத்தில் நீசம், அல்லது சத்துரு வீடாக இருக்கில் வாகனத்தால் மரணமாம். அட்டமாதிபன் சனியாங்கிசத்தில் வந்தால், மரத்திலேறி விழுந்திறப்பன், லக்கினுதிபன் அட்டமாதிபன் நீசாங்கிஷம் பெற்றுல் சன்னி வாதத்தினுல் மரணமாம். எ-று. 668

சூரனுங் கால மிர்த்தியோ டெட்டாந்
துறைலக்கி னுதியுங் கூடிற்
பாரமாங் கல்லா கினுமிடி யேனும்
பட்டிறந் திடுவன்மற் றின்னம்
சேரவே யட்ட மாதிநீ சத்திற்
செறிந்துபன் னிரண்டிலா றெட்டில்
வீரமாங் கருங்கோ னேக்கவே குன்ம
வியாதியால் வியமடைந் திடுவன்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். காலமிருத்தியோடு லக்கினுதிபதி, அட்டமாதிபதி, கூடில் பாரக்கல்லினுலாவது, இடியினுலாவது மரணமாம். அட்டமாதிபதி நீச மாகிச் சட்டாட்டமவியத்தில் இருந்து இராகு பார்த்தால், குன்மவியாதியால் மரணமாம். எ-று. 669

அடைந்திடுஞ் சன்மத் தாதிப னேனு
மட்ட மத் தாதிப னேனும்
மிடைந்திடுங் குளிகன் றன்னுடன் கூடி
வியமெட்டா றிடத்தினின் மேவ
நட ந்தகால் கரங்கள் பின்னமே பட்டு
நலிவனந் நோயினுன் மடிவன்
தொடர்ந்துால் லோர்கள் பரிவுடன் காணிற்
சொல்கைகா லூனமுற் றிருப்பன்

இ-ள். லக்கினத்தோனுகிலும், அட்டமத்தோனுகிலும், குளிகனேடு கூடிச் சட்டாட்டம வியத்தில் இருந்தால், அச்சாதகனுக்கு கால் கைகள் குற்றப்பட்டு மெலிந்து. அந்த நோயினுல் இறப்பான் சுபர்கள் பார்த்தால் கைகால் ஊனத்தோடிருப்பன் எ-று. 670

இருந்திடுஞ் சன்மந் தனிற்சனி குளிக
னிருவருங் கூடியே நிற்க
மருவிய வியமா றெட்டிலிந் திருக்க
மன்னுதன் மரணமே யாகும்
பொருந்துமா தித்தன் புடத்திம கண்டன்
புடத்தையுங் கூட்டுமி ராசியினில்
அருந்தவ மன்னன் பொருந்தநோய் கொண்டே
யவனியிற் றுன்பமுற் றிடுவன்.

இ-ள் இருந்திடும் ஜென்ம லக்கினத்திற் பொருந்திடும்படி மந்தனும், மாந்தியும கூடியிருக்க, சட்டாட்டமவியத்திற் சந்திரனிருக்க, தன்னுல் மரணமாகும், சூரியன் புடத்தையும், எமகண்டன் புடத்தையும் கூட்டிக் கண்ட விராசியில், குருவருங் காலம் நோய்கொண்டு பூமியிற் றுன்பமுற் றிருப்பவனும். எ-று. 671

இடும்பையா தித்தன் புடத்துடன் குளிக
னிசைந்திடும் புடத்தையுங் கூட்டி
நடத்தரா சியிற்சூ ரியன்வருங் காலம்
நலியதாஞ் சந்திரன் புடமும்
கடுந்திறற் குளிகன் புடத்தையுங் கூட்டிக்
கண்டரா சியிற்பிறை வருநாள்
அடுஞ்சரங் கடுமா வடுவரி குவளை
யயில்கய லானகண் ணுளே.

இ-ள் வேலோ கடலோ விடமோ கருவண்டோ சேலோ களையோ வென்று செப்புதற்கரிய கண்களையுடைய பெண்ணே கேட்பாயாக. காந்தியாகிய சூரியன் புடத்தோடு மாந்தியாகிய குளிகன் புடத்தையுங் கூட்டிவரும் ராசியில் சூரியன் வரும்போது நோயுண்டாம் சந்திரன் புடத்தையும், குளிகன் புடத்தையுங் கூட்டிக் கண்ட ராசியில் சந்திரன் சேரும்போதும் நோயுண்டாம். எ-று. 672

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நாளினிற் சன்ம லக்கினங் குளிகன்
ரவிலம கண்டகன் முதலாம்
கோளுடன் கால மிருத்துவிந் நாலுங்
கூட்டிய ராசிலக் கினத்தில்
மாளுநா ளாமிந் நால்வரைக் கூட்டும்
வகையிதிற் குளிகலக் கினத்தில்
நீளமட் டளவு மசுபதி முதலாய்
நிறைந்தநட் சத்திரங் கண்டே.

இ-ள் லக்கினம் குளிகன் எமகண்டன் காலமிருந்து, இந்நால்வர் ஸ்புடத்தையுங் கூட்டிக் கண்டராசி லக்கினத்தில் இருக்கின்றகாலமாம். இந்த நால்வரையுங் கூட்டும் வகையாவது. குளிகன் லக்கினத்தின்வரையும் அசுபதி முதலாய்வரும் நட்சத்திரங்கண்டு (அத்தொகையும்) எ-று.

கண்டபின் குளிக னின்றலக் கினத்தின்
கடிகையிற் சென்றமட் டறிந்து
கொண்டது நட்சத் திரங்களைக் கண்டு
குதிரைமட் டெண்ணிமுன் னிருந்த
திண்டிறற் றொகையுங் கூட்டுதல் புடமாந்
தெரிந்துமுன் சொன்னநால் வருக்கும்
மண்டியிப் படியெண் ணியபுடங் கூட்ட
வந்திடு மரணலக் கினமே.

இ-ள். பின் குளிகன் நின்ற லக்கினத்தின் நாழிகையிற் சென்றமட்டு மறிந்துகொண்டு அந்த நட்சத்திரத்தைக் கண்டு, அந்த நட்சத்திரமுதல் அசுபதிவரை எண்ணி, அத்தொகையுங் கூட்டக் கண்ட தொகை ஸ்புடமாம் இதுபோல் முன்சொன்ன நால்வருக்கும், குளிகனுக்குச் சொன்ன முறைப்படியே எண்ணி ஸ்புடங்கூட்ட வந்திடும் லக்கினம் மரணமாகின்ற லக்கினமாம். எ-று. 674

வேறு

லக்கினந் தனக்கெட் டாதிபன் குளிகன்
நவிலிரு பத்திரண் டான
கனிதிரை யக்கா ணுதிபன் காரி
நால்வரு மிருந்தவங் கிசையோன்
தக்கதோர் பலன்க ளன்றியுற் றிடுவோன்
றன்மகா திசைவரு நாளில்
தரித்தலக் கினமிரண் டாமிட மெட்டாந்
தானமும் வியமனை தனிலும்
திக்கெனச் சனியீச் சுரன்வருங் காலஞ்
சீவனுக் கரிட்டமா மென்றே
செப்பினர் வராக மேயரே யந்நாள்
செகத்தினுள் ளோர்களு மறிய
மிக்கதோர் குளிகன் சனிகரு நாகம்
விரிவுசன் மத்தினி லிருக்க
வியத்தினி லட்ட மாதிசன் மாதி
மேவினே யான்மெலிந் திடுவன்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். பிறந்த லக்கினத்திற்குச் சிறந்த அட்ட மாதிபன் குளிகன், இருபத்திரண்டாந் திரேக்காண த்ததிபன் சனி இந்த நால்வரும் இருந்தயங்கிசையோர்கள் பொருந்தப் பலனற்றிருக்கின்றவர்களாகிய, இவர்கள் திசை வருகின்றகாலத்தில் ஜென்மம் இரண்டு எட்டுப் பன்னிரண்டாமிடங்களில், சனிவருங்காலம் ஜீவனுக்குத் தோஷமாம், குளிகன் சனி இராகு ஜென்ம லக்கினத்திலிருக்கப் பன்னிரண்டாமிடத்தில், ஜென்மாதியன் அட்டமாதிபனிருக்க, நோயால் மிக வருந்தி மெலிந்திடுவானென்று, ஜெகத்துள்ளோரறிய முன் வராகமேயர் சொன்னர். எ-று.

வேறு

இடமுறுஞ் சன்மத் தாதியெட் டதிப
னிருவருங் கூடிலா பத்தில்
திடமுடன் லாபத் தாதிமூ வருமாய்ச்
சேர்ந்திடி லவர்கடன் னுடனே
வடிவுட னெவர்பா வாதிக ளேனும்
வந்துதான் கூடினல் வருத்தத்
துடனுயிர் விடும்போ தருகினி லிருப்பர்
சொல்லும்லா பத்திசை மரணம்.

இ-ள். ஜென்மாதிபன், அட்டமாதிபன், லாபாதிபன் இம்மூவரும் சேர்ந்து பதினோராமிடத்திலிருக்க, அவர்களோடு (தந்தை தாய் மைந்தர் மனைவி சொந்த மாமனாகிய) எந்தப் பாவாதிகளேனும், கூடியிருக்கில் ஜாதக னுயிர்விடும்போது, அவர்கள்கூட இருப்பவர்களாம் கொல்லும் பதினோரா மிடத்ததிபன் திசையே, கொல்லும் மரண திசையேயாம் எ-று. 676

மரணகார் கண்ட மறிவது பத்தா
மதிபதி துர்ப்பல னுகக்
கிரணமா ரகப்பேர் வருதிசை யதனிற்
கிட்டிய பொசிப்பவர் பலனய்
முரணுறு மிருவர் தமக்குமே விரோத
மூண்டிடு பகையதா யிருக்கில்
தரணிவிட் டண்டர் பதியினிற் செல்லுந்
தகமையென் றுரைக்கவேண் டிடுமால்.

இ-ள். நிரியாணம் கண்டம் தெரியவேண்டுமாயின், பத்துக்குடையவன் மெத்தத் துர்ப்பலமாக அத்துடன் மாரகப்பேர் வருந்திசையில் பத்தாமிடத்தோன் புத்தியாய் இருவருக்கும் பகையாகவிருந்தால் ஜாதகன் மரணமாவன். 677

வேண்டிடு நான்கா மதிபதி யிடனு
பேவுமெட் டாதிபன் ருனும்
ஈண்டியே தனது வீட்டினி லிருக்க
விறப்பது தாதைவாழ் பதியில்
தூண்டியே வியத்தி லாறினி லிருக்கிற்
றூரதே யத்தினி லிறப்பன்
நீண்டகா தளவுஞ் சென்று கூரயிலே
நிகர்த்திடுங் கருங்கண ரணங்கே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ - ள். வேண்டிவருந்துங் காதளவு நீண்டிடும் வேலாயுதத்தை நிகர்த்த கருங்கண்களையுடைய பெண்ணே கேட்பாயாக, நான்காம் அதிபதியுடன், எட்டாமதிபதிதானும் தனது வீட்டிலிருக்கத் தகப்பன்பதியில் மரணமாம் ஆறுபன்னிரண்டா மிடத்திலிருக்கில், வேறுதூரதேசத்தில் இறப்பான் 678

ஆரணங்கேகேள் பகலுதித் தானுக்
கடற்குளி கன்னுறை வீட்டுக்
கேரணி யைந்தொன் பதிற்சனி வருநா
ளிடுக்கணு மிரவினி லுதித்தால்
சீரணி குளிகற் கேழிடந் தனக்குத்
திரிகோண மதிற்சனி வருநாள்
தாரணி யறியக் கண்டமென் றுரைப்பர்
சாதக நிபுணமா தவரே.

இ - ள் ஆரணங்கே - கேட்பாயாக, தாரணியிற் பகலிற்பிறந்த ஜாதகனுக்கு, குளிகனிருக்கின்ற வீட்டுக்குத் திரிகோணராசியிலும், இரவிற்பிறந்த ஜாதகனுக்கு, குளிகனுக்கு, ஏழாமிடத்துக்குத் திரிகோண ராசியிலும் சனிவருங்காலம், கண்டமுண்டமென்று விண்டு சொல்லுவர் எ - று- 679

மாதவ மேஷ முதற்கரு நாகம்
வாழ்மனை யளவுமட் டெண்ணி
மீதிமீன் மட்டு மிருதொகை தன்னில்
விளங்கவே பெருக்கிமுந் நான்கில்
போதவே கழித்து மீந்தலக் கினத்தில்
புணர்திரி கோணரா சியினில்
ஏதமாங் காரி மருவுநாட் கண்ட
மிவையெலாங் கோசரந் தனக்கே.

இ - ள். மேஷமுதல், பாசராகு வாசஞ்செய்யும் நேசவீடு வரைக்குமெண்ணி மிகுந்தராசியிலிருந்து, மீனவரையுமெண்ணி, இரண்டு தொகையையும் பெருக்கிப் பன்னிரண்டிற்கழித்து, மீந்தராசியின். திரிகோணராசியில் சனிவருங்காலம்கண்டமாம் இனிவயெல்லாம் கோசரந் தனக்கே என்பதாம். 680

தனக்குமோ ரெட்டா மதிபயுடனுந்
தபனனுங் குசனுமே கூடி
எனக்கதிர் குசனு மெட்டினி லிருக்க
விருவரு மெட்டிடம் பார்க்கக்
கனத்துயர் வெற்பி லேறிவீழ்ந் திறப்பன்
காணிவ ரொடுபுகர் கூடில்
சினத்துறு விலங்கு பூண்டுகொண் டிருந்து
சீவனை விடுத்திடு வார்கள்.

இ - ள். அட்டமத்தோனும், அருக்கனும், அங்காரகனும், திட்டமாய், ஒன்றுகூடி, எட்டாமிடத்திலிருந்தாலும், பருதியுங் குருதியும் பொருதியாய் எட்டிலிருந்தாலும், (அல்லது) பார்த்தாலும், மலையிலிருந்து விழுந்து இறப்பான், மேற்சொன்னபகுதி குருதியோடு பிருகுவும் கூடியிருந்தால், இச்சுருதிப்பான், விலங்கு பூண்டிருந்து மரணமாவன். எ - று. 681

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வாருறை முலேயாய் சனிமதி யிருவர்
மருவியட் டமத்தினி லிருக்கக்
காரிசந் திரனெட் டதிபனைக் கூடச்
கண்டிடக் கிணற்றில்வீழ்ந் திறப்பன்
கூரிய செவ்வாய் சனிசசி மூவர்
கூடிமுன் போலவே யிருக்கில்
பாரினிற் றன்கை யாலுயிர் மாய்ப்பன்
பலர்களும் பழித்திடும் படியே.

இ-ள். மீரிட்டா தனத்தை வாரிட்டுமறைக்கும் பேதையே இப் பாதையைக்கேட்பாயாக, மந்தன் சந்திரன் இருவரும்வந்து அட்டமத்திலிருக்க, அல்லது, அவ்விருவரும் செவ்வையாய், எட்டாமிடத் ததிபனைக்கூட, அல்லதுநோக்க, கிணற்றில் விழுந்திறப்பான், தெவ்வும், சனியும், செவ்வாயும், இம்மூவருஞ்சேர்ந்து அவ்வாறு முன்போலவே யிருந்தால், பாரிற்பலர்களும் பழித்திடும்படி, ஒவ்வாதூரிற் றன்கையாலுயிர் மாய்ப்பன். எ-று. 682

படிதருஞ் செவ்வாய் சனியிவ ரெட்டிற்
பரிந்துறி லக்கினந் தன்னில்
கொடியவெய் யோனிந் தெட்டினி லிருக்கக்
கொடுமையாய்ச் சளத்தில்வீழ்ந் திறப்பன்
முடவனுங் கதிரு மெட்டினி லிருக்க
மூண்டிடு மகோதர வியாதி
அடல்சனி கதிர்தேய் பிறையுமெட் டுறையி
லக்கினி யாயுத மரணம்.

இ-ள். கந்தன் மந்தன் சந்திரன் இவர்களெட்டிலும், லக்கினத்திற் செக்கச்சிவந்த சூரியனிருக்கப் பிறந்த ஜாதகன், ஜலத்தில் விழுந்திறப்பான், பிதுர்காரகனும், முதுமகனும், எட்டினிலிருக்க மகோதர வியாதியாலும், பங்குபாதன் செங்கதிரோன், அமரபக்ஷத் திங்கள் இம் மூவருங்கூடி, அட்டமத்திலிருக்க, அக்கினியாலும், ஆயுதத்தாலும், மரணமாம். எ-று. 683

மரணமார் வகையே மொன்பதி லிரவி
மந்தனுங் கூடியே யிருக்கக்
கரணமா றெட்டிற் குசனுற வெய்திற்
கமழ்சுரோ ணிதமெலா முலர்ந்து
திரணமா யெலும்புக் கூடதா யிறப்பன்
தேய்பிறை சனிகுச னெட்டில்
தரணியோ ரறியப் பாசபந் தத்தாற்
றன்னுயிர் மாய்ப்பனென் றுரைப்பார்.

இ-ள். ஏழு ஒன்பதாமிடங்களில், வாழுஞ் சூரியனும், சனியங் கூடியும் செவ்வாயெட்டிலு மிருந்தால் உதிரம் வற்றி யுடலுமுலர்ந்து எலும்புக் கூடுபோலிருந்து இறப்பான் தேய்பிறைச் சந்திரன் மந்தன் கந்தன் இவர்கள் அட்டமத்திலிருக்கத் திட்டமாய்ப் பாசபந்தத்தால் தன்னுயிரை மாய்ப்பவனுமாவன். 684

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உரைத்திடும் பாவ ரொன்பதி லேழி
லுயைந்திட வட்டமந் தன்னில்
நிரைத்திரை யங்கா ஞதிப னிருக்க
நீடுமிம் மூன்றுவீட் டிஃனயும்
விரைத்திடு நல்லோர் பார்வையற் றிருக்க
விலங்குட னிருந்தவன் றனது
கரத்தினுற் சீவன் றனைவிடுத் திடுவன்
கானெனச் சொல்லுவர் கண்டாய்.

இ-ள். பாவக்கோட்கள் தாவும் ஏழு ஒன்பதாமிடத்திலிருக்கத் திரேக்காணுதிபன், அட்டமத்திலிருக்க, இம்மூன்று விட்டையும், சுபர்கள் நாட்டமாய்ப் பார்க்காதிருக்க, விலங்கு பூண்டிருந்து அவன் கையிறை லுயிரை மாய்ப்பவனென்று சொல்லுக. எ-று. 685

கண்டலக் கினங்கள் கன்னியா யிதனிற்
கருதிடாப் பாவரு மிருக்க
எண்டிசை புகழ்மீ னத்தினிற் பாவ
ரிருந்திட வட்டமந் தன்னில்
மண்டிய பிறையுஞ் சுங்கனு மிருக்கின்
மாதர்செய் வாதையான் மடிவன்
கெண்டையம் பயின்மா வடுவிடம் போற்கட்
கிஞ்சுகம் போலுமென் மொழியாய்.

இ-ள். நஞ்சும் அஞ்சும் வேல் சேல் போன்ற விழியும், கிஞ்சுகம் போன்ற மென்மொழியுமுடைய பெண்ணே, கன்னியா லக்கினத்தில், வன்நெஞ்சுடைய பாவிகளும், மீனத்தானத்தில் தோணப்பாவர்களும் அட்டமத்தில் வட்டச்சந்திரனும், இட்டச்சுக்கிரனு மிருந்தால் மங்கையர் செல்கின்ற சங்கடத்தால் இறப்பவனும். எ-று. 686

மொழிகதிர் சனிதேய் பிறைகுச னுல்வர்
முயற்சியாய்க் கூடிலக் கினத்தில்
பொழிதிரி கோணத் தன்னிலே மேவப்
புண்ணியர் கண்டிடா திருக்கக்
கழிபடும் புகையாற் றீயினுற் கொள்ளிக்
கட்டையான் மருவலர் சுடவே
அழிபடு மெய்யில் வருத்தமுற் றிறப்ப
னவன்றலை நாள்விதி வசமே.

இ-ள். தினகரன் சனி தேய்பிறைச் சந்திரன் செவ்வாய் இந்நால் வருங்கூடி லக்கினத்திலும், திரிகோணவிராசியிலுமிருக்க, சுபர்கள் பாரா திருக்க சத்துருக்களால், தீயாலும், புகையாலும், கொள்ளிக்கட்டை யாலும். சுடுபட்டு விடுபட்டு வடுபட்டு தேகங்கெட்டு வருத்தப்பட்டு இறப்பான். எ-று. 687

வசமுட னெட்டிற் கதிர்சனி செவ்வாய்
மருவவே லக்கினந் தன்னில்
இசைபுதன் றேய்ந்த பிறைகரு நாக
மிருக்கின்மெய் புழுத்துடன் மடிவன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

புசபல காரி தேய்பிறை யெட்டிற்
பொருந்திடி லவர் தமைச் செவ்வாய்
நிசமுடன் பார்க்கி லரசனற் கிருமி
நிறைந்திடுந் துயரிஞ விறப்பன்.

இ-ள். எட்டாமிடத்தில் கட்டாகச் செங்கதிரோன் சனி செவ்வாய் சேர்ந்திருக்க, லக்கினத்தில் தேய்பிறைச் சந்திரன் தேர்ப்பாகன் இராகு இவர்களிருந்தால் தேகம் புழுத்திறப்பான். திறமைபெற்ற சனியும், தேய்பிறைச் சந்திரனும், அட்டமத்திலிருக்க, அவர்களைச் செவ்வாய் பார்க்க, கிருமி நிறைவால் இறப்பான். எ-று 688

மருவிய பத்திற் சூரிய ஞறின்
மங்கலன் வியத்தினிற் காரி
விரவிய விரண்டிற் கரியகோ ளிருக்க
மேவலர் சூனிய குணத்தால்
சருவிய குளிசக் கட்டினல் வருந்திச்
சஞ்சல முற்றிருந் தவன்றன்
கருவிகள் பிரிந்தே சோபமுற் றிறப்பன்
காசினிக் கன்றிடுங் காலே.

இ-ள். பத்தாமிடத்திற் பருதியும், ஆருமிடத்திற் குருதியும், பன்னிரண்டாமிடத்திற் சனியும், இரண்டாமிடத்தில் முரண்டுள்ள ராகுவுமிருந்தால், சத்துருக்கள், சூனியத்தாலும், குளிசக்கட்டினுலும், காசினிக்குள் வாசியுமடங்கி தத்துவங்கெட்டு மெத்த வருத்தப்பட்டு இறப்பான். எ-று. 689

காலேயோ ரேழிற் சூரியன் செவ்வாய்
கருதுமெட் டிற்சனி யாறில்
சாலவே குறைந்த பிறையுறச் சன்மந்
தன்னிலே ழெட்டினிற் புதனுஞ்
சீலமா யிருக்கி லிடியினுன் மடிவன்
றிரயக்கா ணுதிபர் தன்னில்
மேலிரு பத்தி ரண்டுளாந் தனது
வீடுலக் கினமென விளம்பும்.

இ-ள். ஏழாமிடத்திற் பருதியும், குருதியும், எட்டாமிடத்திற் சனியும், ஆருமிடத்தில் அமரபக்ஷச் சந்திரனும், ஜென்மம், ஏழு, எட்டாமிடத்திற் புதனும் இருந்தால், இடியினுல் இறப்பான் திரேக்காணமாவது லக்கினமுதல் ராசி ஒன்றுக்கு மும்மூன்று திரேக்காணமும், ஏழுராசிவரையும், இருபத்தொரு திரேக்காணமும், அதன்மேல் வருவது, 22-ந் திரேக்கான லக்கினமாம், (ஒவ்வொரு கிரகங்களுக்கு மிப்படியே) எ-று, 690

விளம்புமா றெட்டுப் பன்னிரண் டதிபன்
மேவிய பாவிதா ஞகில்
உளஞ்செறி யற்பா யுள்சுபர் பார்க்கி
லோதிய தீர்க்கமா மென்றே
களஞ்செறி நல்லோர் பாவரு மாகிக்
கண்டது மத்திம வயதே
இளம்பிறை நுதல்வேற் பொருகயற் கண்ணுக்
கிசைந்திடு விழியிஞ ரணங்கே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். சட்டாட்டம வியத் ததிபர்கள் கெட்டபாவர்களாகில், அற்பாயுளாம், சுபர்பார்த்தால் தீர்க்காயுளாம். சுபரும் பாவருங் கலந்து பார்த்தால் மத்திம ஆயுளாம். எ-று. 691

நாளெனும் வியமா றெட்டினி லதிப
னன்றுகேந் திரத்தினி லிருக்கில்
வாள்விழி யணங்கே யற்பவா யுசுத்தான்
மத்திமம் பணபரத் திருக்கில்
தாள்செறி யணங்கே யாபோக்கி லியந்
தானுறி லாகுநா ளுண்டே
கோளினிற் குளிகன் மனைவருங் காரி
குலவிய நாள்களுந் தீதே.

இ-ள் சட்டாட்டம வியத்ததிபர்கள் திட்டமாய்க் கேந்திரங்களிலிருந்தால், அற்பாயுள், பணபரத்திலிருந்தால், மத்திமவாயுள், ஆபோக்கி லியத்தி லிருந்தால், தீர்க்காயுளாம் கோசரத்துக்குக் குளிகனிருந்த வீட்டிற் சனிவருங்காலம் தீமைகளுண்டாம். கேந்திரமென்பது 1-4-7-10 மிடங்கள், பணபரமென்பது 1-5-3-11 மிடங்கள், ஆபோக்கிலியமென்பது 3-6-9-12 மிடங்கள். எ-று. 692

தீதெனும் வியமா றெட்டினி லதிபன்
னிவர்களிற் பலன்களு மில்லாப்
போதுறுந் தனக்கே யவன்மகா திசையிற்
பொருந்திய கண்டகா லமதாம்
ஈதினில் வியமா றெட்டினி லதிபன்
மேவிய திசைகளுங் கூடி
ஏதுறு நடக்கு மவர்திசை யந்தத்
தியல்புடன் கண்டகா லமுமாம்.

இ-ள் தீதென்று சொல்லாநின்ற ஆறு எட்டுப் பன்னிரண்டாமிடத்ததிபர்கள். பலனற்று யாதொரு பலன்களுந் தராதபோது தனக்கே, அவன் மகாதிசைகளிற் கண்ட காலங்களாகும் இதிலும், மேற்சொன்ன ஆறு எட்டுப் பன்னிரண்டாமிடத்ததிபர்கள், புத்திகள் கூடிய காலத்தின் கடைசியிலும் கண்டங்க ளாகுமென்பதாம் எ-று. 693

காலமாம் பரிதி லக்கின திகளுங்
கருதுமித் துருவதே யாயின்
தூலமாந் தீர்க்க வயதென வுரைப்பர்
சொல்லிய சமமதே யாயின்
மூலமா மத்தி மம்பகை யாயி
னுறுவது முப்பத்து மூன்றே
கோலமாம் லக்கின நவாங்கிசை பதிக்குக்
கூரிய சனிவரிற் றுன்பம்.

இ-ள் சூரியனும், லக்கினதிபனும், மித்துருவானால் தீர்க்க வயதாம். சமமாயின் மத்திம வயதாம், பகையாகில் முப்பத்திமூன்றுவயதாம், லக்கின நவாங்கிஷ வீட்டுக்குச் சனிவருங் காலம் துன்பமாம். எ-று.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

துன்பமே யில்லா வுச்சலக் கினத்தைத்
தொடர்ந்துமுப் பதுபங்க தாக்கி
வன்பொடு சூரி யன்பத்தரம் பங்கு
மதிமூன்று குசனிரு பத்தெட்
டின்பமாம் புதன்மூ வைந்துபன் னேழா
மெழிற்குரு புகரிரு பத்தேழ்
வின்சதி சனியும் பூரண வயதே
நீசமா மற்பமென் றுரையே.

இ-ள். துன்பத்தைப் போக்கி இன்பத்தைத் தராநின்ற உச்ச லக்கினத்தை முப்பது பங்காக்கி சந்திரன் ஒன்று முதல் மூன்றுபங்கு வரையும். சூரியன் பத்துப்பங்கு வரையும், புதன் பதினைந்துபங்கு வரையும், குரு பதினேழு பங்குவரையும், சுக்கிரன் இருபத்தேழு பங்குவரையும், செவ்வாய் இருபத்தெட்டு பங்கு வரையும், சனி முப்பது பங்கு வரையுமுள்ள பங்குகளிலிருக்கப் பூரண வயதாம், இது நீசமானால் அற்ப வயதாம். எ-று. 695

சென்மதா ரகைக்கா றெட்டுநட் சத்திரத்
திசையதா மாரக மதனுள்
வன்மமோ ரெட்டிற் கெட்டாறு மின்னம்
வருமாறி னுக்குமா றெட்டாம்
பன்மைதா ரகையின் றிசையின்மா ரகமாம்
பார்க்கவே யிரட்டியாய் வந்தால்
தின்மைகா லமுமா மவருடை புசிப்பிற்
சேதமே யாகுங்கண் டாயே.

இ-ள் ஜென்ம நட்சத்திரத்தைத் தொட்டு, ஆறு எட்டாவது நட்சத்திரத்தையும். எட்டாவது நட்சத்திரத்திற்கு, ஆறு எட்டாவது நட்சத்திர திசையும், ஆருவது நட்சத்திரத்திற்கு, ஆறு எட்டாவது நட்சத்திரத் திசையும் மாரகமாம், இது இரட்டை நட்சத்திரத் திசையாக வரில் கெட்ட பலன்களாம், மேடபுத்தி வந்தால் மாரகமாம். எ-று. 696

வேறு

கண்டசன் மஞ்சரராசி கருதியாருதிபன்பார்க்கக்
கொண்டசெவ்வாய்லாபத்திற் கூறுந்திரராசிக்குடையோன்
பண்டேயொன்பதினிலிருக்கப் பாக்கியாதிதிரத்திலுற
உண்டாஞ்சத்துருநாகத்தா லோமம்பண்ணவருமரணம்.

இ-ள். ஜென்ம லக்கினஞ் சரவிராசியாக. அதை ஆறுக்குடையவன் பார்க்க, செவ்வாய் லாபத்திலிருக்க' திரராசிக்குடையவன் ஒன்பதிலும், ஒன்பதுக்குடையவன் திரராசியிலுமிருக்க, சத்துருக்களால் சர்ப்ப ஓம மந்திரங்கள் செய்ய அதனால் மரணம் வருமென்பதாம். எ-று. 697

வருநாலிடத்தி லக்கினத்தில் வளருங்கேது குளிகனுடன்
அருள் சேர்ந்திருக்கச் சூனியமு மதுசாரத்தாலுறு மரணம்
திரளாம்வியத்திற்கேதுவுறத் தேடிப்பாவர்மிகநோக்கப்
புரமேயம்மையான் மரணம் பொன்பார்த்திடிலோவடுவுண்டாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். ஜென்ம லக்கினத்திலும், நாலாமிடத்திலும் செம்பாம்பு வம் பாம்புடனிருந்தால் சூனியத்தாலும், யுத்தத்தாலும் மரணமாம். பன்னிரண்டாமிடத்திற் கேதுவிருக்கப் பாவர்கள் பார்க்க, வைசூரியால் மரணமாம், குரு பார்க்க அம்மைத் தழும்பு உண்டாம். எ-று. 698

12-ராசிக்கும் சுபாசுபக் கிரகமாரக பலன்.

வேறு

சாற்றுமோர் துவாதசமாம் லக்கினந்தன்னையோர்ந்து
நேர்த்தியாய்ச் சுபரும்பாவர் நிறையோகமாரகங்கள்
போற்றியேயவர்தம் வீட்டிற் பின்பலமுரைக்கு நூலின்
தேற்றமேயறிந்துகொண்டு செறிபலனுரைப்பாய்தானே.

இ-ள் பன்னிரண்டு லக்கினங்களையும், முன்னால் இன்ன லக்கினந் தானென்று நிச்சயித்து சுபர் பாவர், யோகம், மாரகம், வீட்டின் பலம் இவைகளைச் சொல்லக் கூடிய சாஸ்திரங்களின் தெளிவுகளைத் தெரிந்து கொண்டு பின்னால் நெருங்கிய பலன்களை ஜாதகத்திற்குச் சொல்ல வேண்டும். எ-று. 699

தானுறுமேடத்தோற்குச் சனிபுகர்புந்திபாவர்
வானுறும்பரிதிதேவ வான்குருசுபனுமென்றே
கானுறுமிவர்கள்கூடக் கடினமாம் பலன்களற்பம்
தேனுறுஞ்சுக்கிரன்றன் றிசையிற்றான் மாரகங்கள்.

இ-ள். மேட லக்கினத்தில் ஜெனித்தவருக்குப் பங்கு பளிங்கு பண்டிதன் இவர்கள் பாவிகளாம். பிங்கலன் தங்கலன் சுபர்களாம். இவர்கள் கூடி நின்றால் பலன்கள் சொற்பமாம் சுக்கிர திசையில் மாரகமாம். எ-று 700

வேறு

களமேரிஷபஞ்சன்மத்தோற் கரசன்புகர்சூரியன்மூவர்
உளவாம்பாவிகதிர்சனியு முயர்ந்தசுபனும்யோகங்கள்
வளமார்புகருந்தான்குடும்ப மாரகத்தோனும்பாவி
புளகார்திதலையுறுங்கொங்கை பூவைக்குரலாரும்மானே.

இ-ள். தேமலும் புளகமும் செறிந்த கொங்கையும் வாமமுங் குயிற் குரல் வாய்ந்த வசனமுடைய மங்கையே, ரிஷப லக்கினத்தோருக்கு, சீமன் காமன் சோமன் இம்மூவரும் பாவிகள். தீமன் மீமன் சுபர்கள் இன்னுமிவர்களே யோகர்களுமாம். சுக்கிரன் குடும்பமாரக பாவனும் எ-று. 701

மானேமிதுனலக்கினத்திற் கரசன்செவ்வாய்கதிர்பாவர்
தானேசுங்கன்சுபனுகும் மதியுஞ்சனியுமற்பபலன்
வானூர்பாவர்திசையதனின் மன்னுமாரகம்மென்னே
தேனேயனையமதுரமொழிச் செவ்வாய்முறுவல்சிறுநுதலாய்.

இ-ள். தேன்போன்ற மொழியும், மான்போன்ற விழியும், முன்னஞ் சிவந்தவாயும், சின்னநுதலும், புன்னகையுமுடைய கன்னிகையே கேட்பாயாக, இன்னிலமதனில் நன்னடையுள்ள மிதுன லக்கினத்திற்கு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சீமன் பூதன் மீமன் பாவிகளாம் சுக்கிரன் சுதனும். சோமனும் தீமனும் அற்ப பலமுடையவர்களாம். பாவர் திசையில் மாரகமாம். எ - று. 702

நுதலுங்கடகம்புந்திபுகர் நோய்செய்பாவர்குருசெவ்வாய்
இதமார்சுபனுஞ்சேயோக மிருக்கும்பரிதிமாரகனும்
முதலேசிங்கம்புகர்புந்தி மோதும்பாவர்சேய்சுபனும்
மதலேயோகம்பொன்வெள்ளி மழைக்கோளுடன்மாரகன்மானே.

இ-ள். கருதும்படியான கடக லக்கினத்திற்கு, காமன் சாமன் பாவிகள், பூமன் பொன்னவன் சுபர்கள். உலோகிதன் யோகமுள்ளவனும் மார்த்தாண்டன் மாரகனும். சிம்ம லக்கினத்திற்கு பண்டிதன் பளிங்கு பாவர்களாம். செந்தீவண்ணன் சுபனும். பொன்புகர் கூடயோகமாம். புகர் புந்தி கூட மாரகமாம். எ - று. 703

மாலேகன்னிசேய்மதிபொன் மன்னும்பாவர்புதன்சுபனும்
காலேயோகம்புந்திபுகர் கனமாரகன்சுக்கிரன்பாவி
போலாந்துலாத்திற்சேய்பரிதி குருவும்பாவர்சனிபுதனும்
மேலாஞ்சுபர்கண்மதிபுந்தி யோகமாரகன்செவ்வாயே.

இ-ள். கன்னியா லக்கினத்திற்கு பூமன் சோமன் சீமன் இவர்கள் பாவர்களாம், சாமன் சுபனும் சாமன் காமன் யோகமுள்ளவர். சுக்கிரன், அக்கிரமமாய் மாரகஞ் செய்யும் பாவியாம். துலா லக்கினத்திற்கு, பூமன் மீமன் சீமன் பாவர்கள், தீமனும் சாமனும் சுபர்கள், சோமனும், சாமனும் யோகமுள்ளவர்கள், பூமன் மாரகனும். எ - று. 704

ஏயதேள்மால்சேய்பளிங்கோ யியன்றபாவரிந்துசுபன்
தூயயோகமதிகதிராந் தொடர்ந்தகுருவேமாரகனும்
ஆயதனுசில்புகர்பாவி யாரல்பரிதிசுபராகும்
நேயயோகபுந்திபுகர் நீண்டசனியும்மாரகனே.

இ-ள் விருச்சிக லக்கினத்திற்கு, சாமன் பூமன் காமன் பாவிகள், சோமன் சுபன், சோமனும் மீமனும் யோகர்களாம். தீமன் மாரகனும் தனுசு லக்கினத்திற்கு, காமன் பாவி பூமன் மீமன் சுபராம், சாமன் காமன் யோகமுள்ளவர்கள், தீமன் மாரகனும். எ - று. 705

மாகஞ்சுருவிற்குருசெவ்வாய் மதியும்பாவர்புகர்புந்தி
ஆகுஞ்சுபராமாயோக மருளுஞ்சுங்கன்மாரகன்சுன்
பாகார்கும்பங்குருமதிசேய் பாவர்சுக்கிரன்சுபனுகும்
தாகரர்யோகம்பளிங்குபுதன் றள்ளுமரசன்முன்பாவி.

இ-ள், மகர லக்கினத்திற்கு சீமன் பூமன் சோமன் பாவர்களாம், சாமன் காமன் சுபர்களாம், சுக்கிரன் யோக காரகன். தீமன் தியமாரகனும். கும்ப லக்கினத்திற்கு சீமன் சோமன் பூமன் பாவர்களாம், காமன் சுபன், காமனும் சாமனும் த்யாகமுள்ளவர்களாம், குரு மாரகனும். எ - று 706

பாவிமீனங்காரிபுதன் பளிங்குபதங்கள்பாவியரே
மேவுஞ்செவ்வாய்மதிசுபராம் விளங்கும்யோககுருவாரல்
தாவும்மாரகன்சேயென்றே சாற்றுந்துவாதசலக்கினத்தை
ஆவலறிந்தேசுபாசுபங்க ளறிந்துகூறப்பண்பாமே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். மீன லக்கினத்திற்கு, தீமன் சாமன் காமன் மீமன் பாவிகளாம், பூமன் சோமன் சுபராம், சீமன் பூமன் யோகமுள்ளவர், ஆரல் மாரகனும் என்று சொல்லக்கூடிய துவாதச லக்கினத்தின், சுபா சுபங்களை அறிந்துசொல்லின் குணமான நன்மையாம். எ-று. 707

பாலாரிட்டம்

பண்பாறதிபன்லக்கினுதிபாவனுகிப்பலமறவே
நண்பாமேழிலுற்றிருக்க நல்லோர்காணுர்மாதமிரண்
டெண்பார்லக்கினுதிபதிக் கெட்டின்மிகவேபாவர்களும்
திண்பாய்நோக்கமுற்றிடவே திங்கணுன்கில்வருமரணம்.

இ-ள். சட்டமாதிபனும், திட்டமான லக்கினுதிபனும் பாவிகளாய், பலமற்று ஏழாமிடத்திலிருக்க, சுபர்கள் பார்க்காதிருக்கின், இரண்டு மாதத்திலும், லக்கினுதிபதிக்கு அட்டமத்தில் பாவிகளும் அவர்களின் பார்வை பெற்றிருக்கின் நாலு மாதத்திலும் மரணமாம். எ-று. 708

இவன்றன்லக்கினுதிபதி யிதுவேபாவன்பலமறவே
சுவனேபார்வைவர்ச்சிதமாய்ச் சொல்லுமாறுதிங்கடனில்
தவமாறெட்டிற்பன்னிரண்டிற் றக்கபாவர்நோக்கமுற
கவனமுடனேயிருநான்கிற் காணும்மரணங்கண்டீரே.

இ-ள். ஜென்மலக்கினுதிபதி பாவியாய்ப் பலமற்று, சுபர்கள் நோக்கமற்றிருக்கில் ஆறுமாசத்திலும், மறைவுஸ்தானமாகிய சட்டாட்டம வியத்தில் பாவர்கள் பார்வை பெற்றிருக்கில் எட்டு மாதத்திலும் மரணமாம். எ-று. 709

கண்டவமரபக்கத்திற் காணுஞ்சோமனெட்டாறில்
கொண்டசன்மமிதிற்பாவர் கூடிநோக்கவிரைந்தே
மண்டுமெட்டிற்சென்மத்தில் வந்தேபாவர்தானிருக்க
மிண்டாய்நல்லோர்நோக்கமிலா மேவின்வருஷமொன்றிலுமே

இ-ள். தேய்பிறைச் சந்திரனை ஆயுங்கால், ஒன்று ஆறு எட்டாமிடங்களில் இருந்து அவனைப் பாவர்கள்கூட, அல்லது நோக்கப் பத்து மாதத்திலும், ஒன்று எட்டில் பாவர்களிருக்கச் சுபர்கள் பார்வையில்லாவிட்டால், ஒரு வருஷத்திலும் மரணமாம். எ-று. 710

ஒன்றேகாரிவக்கிரமா யோதும்புந்திசெவ்வாயும்
அன்றேஒருவீட்டினிலுறவே யாறைந்தெட்டுப் பன்னிரண்டில்
நின்றேசன்மமோரிரண்டினிற்கக்குசன்ருனுற்ருலும்
நன்றேசுபர்கணேக்கமிலா நாளும்வருஷமிரண்டினுமே.

இ-ள் சனி வக்கிரம்பெற்று, சாமனும் பூமனுங்கூடி நேமமாய் ஐந்து ஆறு எட்டு பன்னிரண்டில் இருக்க, லக்கினுதிபதி இரண்டில் நிற்கச் செவ்வாய் கூடினுலும், சுபர்கள் பார்வையில்லாவிடின் இரண்டு வ்ருஷத்தில் மரணமாம்- எ-று 711

நாளுஞ்செவ்வாய் தனக்கெட்டி னன்ணிக் குருவுந்தானிருக்கக்
கோளும்பரிதிசெவ்வாயுங் கொண்டமதியைப்பார்த்திடவே
மீளுஞ்சுங்கன்கண்ணுட்டி மேவினேக்கமில்லாத
ஆளும்வருஷமூன்றெனவே யறைவர்கணிதவல்லோரே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ - ள். மங்கலனுக்கு எட்டில் தங்கலனிருக்க, மங்கலனும் பிங்கலனும் திங்களாகிய சங்கலனைப் பார்க்க, நங்கலன் இவர்களைக்கன் நாட்டிப் பார்க்காதிருந்தால் மூன்று வருஷத்தில் மரணமாம். எ - று. 712

வல்லசன்மந்தனக்கெட்டு வாழுமதற்கோரெட்டதனை
நல்லோர்பார்க்கக்கோணத்தை நாடும்பாவரொருநான்கே
சொல்லுஞ்சன்மராசிக்குச் சுபக்கோடிருஷ்டிவர்ச்சிதமாய்
ஒல்லும்பாவர் பார்வையுற வோங்குவருஷமைந்திற்காம்.

இ - ள். ஜென்மலக்கினத்திற்கு, மூன்று எட்டாமிடங்களைச் சுபர்கள் பார்க்கத், திரிகோணத்தைப் பாவிகள் நோக்க, நாலு வருஷத்தில் மரணமாம். ஜென்மராசியைச் சுபக்கோட்கள் பார்க்காமல் பாவர்கள் பார்த்தால் ஐந்து வருஷத்தில் மரணமாம். எ - று. 713

சாமேவியமாறெட்டதனிற் சனிசூழ்பரிதிராகுமதி
ஆமேயிருக்கச்சுபர்திருஷ்டி யல்லால்வயதோராறுதரும்
தாமேசன்மமுன்பின்னுந் தக்கபாவரிருந்திடவே
போமேநல்லோர் பார்வையிலப் போதுமரணமேழ்தனிலே.

இ - ள் ஆறு, எட்டு, பன்னிரண்டிற், பங்கயன் முயங்கன் சங்கயன் கங்கயன் இந்நால்வரும் தங்கிருக்கச், சுபர் பார்வையில்லாவிடில் ஆறு வருஷத்திலும், ஜென்மலக்கினத்தின் முன்னும், பின்னும் பாவர்கள் நின்று சுபர்கள் பார்வையில்லாதபோது ஏழு வருஷத்திலும் மரணமாம். எ-று 714

தனிலேசன் மஞ்சேயுமதி தன்னிலொருவர்நின்றாலும்
இனியநான்கிற்பாவர்களு மெட்டிற்பரிதிசேய்மதியும்
மனுசூழ்ந்திருக்கயின்னமொரு மதிவீட்டரசன் சன்மாதி
சனிசூழ்பரிதியுறநல்லோர் தானும்பாராதேன்மரணம்.

இ - ள். ஜென்ம லக்கினத்தில் எரிச்சிகன் அரிச்சிகன் இவர்கள் இருவரில் ஒருவர் நின்றாலும். நாலாமிடத்திற் பாவர்களும், எட்டாமிடத்திற்பருதி குருதி இருதியிருந்தாலும், அவ்விருதி நின்ற வீட்டுக்குடைய யவன் லக்கினாதிபதி, சூரி-காரியிவர்கள், வீரியமால்க் கூடியிருக்கச் சுபர்கள் பார்வையில்லாவிட்டாலும், எட்டுவருஷத்தில் மரணமாம். எ-று.715

மரணம்சன்மமிதுனதுலாம் வாழுமெட்டிற்குருபுகரும்
திரமாய்ப்பாவர்நோக்கமுறத் தெரிந்தவயதுமெட்டுளதாம்
பரிதிமதியுட்டமஞ்சேர் பண்பாங்காரிபதினொன்றில்
வரவேயொன்பதிதுமரணம் வகையாயுலகீரறிந்திடுமே.

இ - ள். ஜென்மலக்கினமமிதுனம் துலாமாக அட்டமத்தில் அசுர குருவும், தேவ குருவும் இருந்து, பாவர்கள் பார்வை பெற்றால், எட்டு வயதிலும், வட்ட மதியும் பருதியும் எட்டில் இருக்கப் பதினொன்றில் சனி யிருக்க, ஒன்பது வருஷத்தில் மரணமாம். எ-று. 716

அறிந்தேயெட்டிற்கதிர்புகரு மரசன்பார்வை தானுமிலாச்
செறிந்தேயிருக்கவின்னமொரு செப்புநாளிற்சந்திரனைப்
பிறிந்துபார்க்குஞ்சேய் பரிதி பின்புநல்லோர்பாராதால்
இறந்தேயிருக்குமொன்பதினி வினையகோளின்பலனிதுவே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். எட்டாமிடத்தில் வேந்தனும், ஏந்தன் பார்வையில்லா திருந்தாலும் நாலில் நின்ற சங்கலனே, மங்கலன் பிங்கலன் பார்த்தும், சுபர்கள் பார்க்காவிட்டாலும் ஒன்பது வருஷத்தில் மரணமாகும். எ-று.

இதுவேகேந்திரமேறியிவ ரிராகுகேதுயிருந்திடவே
அதிசூழ்பாவர்நோக்கமுற வானபத்திலுறுமரணம்
மதிசேர்பரிதிகூடியொரு மனையிலிருக்கச்சன்மத்தைத்
துதிசேர்நல்லோர்பாராக்காற் சொல்லும்பதினென் றுறுவயதே.

இ-ள் கேந்திரத்திற் கரும்பாம்புசெம்பாம்பு இருக்கப் பாவர்கள் பார்க்கப் பத்துவருஷத்தில் மரணமாம் சந்திராதித்தன் வந்தொரு மனையிற்கூடியிருக்க, ஜென்மலக்கினத்தைச் சுபர் பார்க்காவிட்டால் பதினொரு வருஷத்தில் மரணமாம். எ-று. 718

வயதேசன்மங்கேதுகதிர் மதிதானிருக்கச்சுபர்திருஷ்டி
சயமேயில்லாப்பன்னிரண்டிற் சாருங்குழவியுறுமரணம்
நயமாமொன்றிலெட்டாதி கண்ணியிருக்கவோராறில்
நியமேநான்கிற்சேயுறவே நிற்பன்பதின்மூன்றெஆச்சொல்லும்.

இ-ள். ஜென்ம லக்கினத்தில், நோமன் மீமன் சோமன் சேர்ந் திருக்கச் சுபர்கள் பார்க்காவிட்டால் பன்னிரண்டு வருஷத்தில் மரண மாம். லக்கினத்தில் அட்டமாதிபனிருக்க, ஆறு அல்லது நாலாமிடத்திற் பூமனிருக்கப் பதிமூன்று வயதில் மரணமாம் எ-று. 719

சொல்லுமாறெட்டிற்பாவர் சூழ்ந்தேயிருக்கச்சன்மாதி
வெல்லுமாபோக்கிலியத்தின் மேவியிருந்தாற்பதினுரும்
வல்லோரதிபன்சென்மாதி வரவேபரிதியுடன்கூட
நல்லோர்பாராக்கேந்திரத்தி னண்ணும்பாவர் நாலைந்தே.

இ-ள். சட்டாட்டம ஸ்தானங்களிற் கெட்ட பாவிகளிருக்க, லக்கினாதிபன் ஆபோக்கியத்திலிருந்தால் பதினாறு வருஷத்தில் மரணமாம். சுக்கிரனும் லக்கினாதிபனும் சூரியனுடன் கூடியிருக்கச் சுபர்கள் பாராமல் பாவர்கள் கேந்திரத்திலிருந்தால் இருபது வயதிலும் மரணமாம். எ-று. 720

நாலேசோமற்கிருபுறமு மிராகுசெவ்வாய்சனிகேது
ஆலேயிருக்கச் சன்மாதி யாயபலன்களற்றிடவே
மேலாம்பாவருடன்கூடி வேண்டியிருக்குமிப்படியே
சீலாயையைந்தினின்மரணஞ் செப்புங்கணிதமாதவரே.

இ-ள். பக்கிரனுக்கு இருபுறமும், உக்கிரன் வக்கிரன் அக்கிரன் துக்கிரன் லக்கினாதிபன் பலனற்று பாவர்களுடன் கூடியிருக்கில் இரு பத்தைந்து வருஷத்தில் மரணமாம் என்று சோதிடத்தில் மாதிடம் வாய்ந்த வல்லோர்கள் சொல்லுவார்கள். எ-று. 721

மாதேகன்னிலக்கினமாய் வந்துசனியுந்தானிருக்கப்
போதேயரசன்வியமெட்டிற் போகவிருபத்தாருகும்
சாதிசன்மமெட்டதிபன் சரியாய்ப்புடமேதானிருந்தும்
ஓதுங்கேந்திரமுறவெட்டி லுற்றேகேதுமூவொன்பான்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ. ள். மாது என்று சொல்லா நின்ற கன்னியா லக்கினத்திற் சனி தனியாயிருக்க, அட்டமவியத்தில் திட்டமாய்க் குருவிருக்க, இருபத்தாறு வயதில் மரணமாம். லக்கினாதிபனும் அட்டமாதிபனும் சரிபுடமாய் கேந்திரத்திலிருக்க அட்டகத்திற் கேதுவிருக்கில் இருபத்தேழு வயதில் மரணமாம். எ-று. 722

பானுபுதல்வன்கேதுகரும் பாம்புசெவ்வாயொன்றெட்டில்
தேனேயிருக்கப்புகர்புந்தி தேவர்குருவுங்கேந்திரமில்
லானேயுற்ருலிருபத்தெட் டாகுமெட்டிற்கதிர்மூன்றில்
ஊனேமதியுஞ்சனிபாவ ருடனேக்கிருபத்தொன்பானே.

இ-ள். தீமனாகிய சனியும், நோமனாகிய கேதுவும், அல்லது ஈமனாகிய இராகுவும், பூமனாகிய செவ்வாயும் இவர்கள் ஒன்று எட்டில் இருக்க காமனாகிய சுக்கிரனும், சாமனாகிய புதனும், சீமனாகிய குருவும் இவர்கள் கேந்திரமில்லாதிருக்கின் இருபத்தெட்டு வயதிலும், எட்டில் மீமனாகிய சூரியனும், மூன்றில் தேய்பிறைச் சோமனும் தீமனாகிய சனியுமிருந்து பாவர்கள் பார்வை பெற்றிருக்கின் இருபத்தொன்பது வயதில் மரணமாம். எ-று. 723

ஒன்பான்றேய்தாய்சுபத்தான முற்றேயட்டமாதிபதி
அன்பாய்க்கேந்திரமுறவெட்டி லானபாவர்தானிருக்கப்
பின்பாம்லக்கினாதிபதி பெலன்களில்லாதிருந்திடவே
துன்பமுப்பதெனவறிந்து சுகமாயுரைத்தேன்மிகவாழும்.

இ-ள். தேய்பிறைச் சந்திரன் போயிருந்தது சுபர் வீடாகிலும், அட்டமாதிபதி கேந்திரத்திலுமிருக்க எட்டில் பாவர்களுமிருக்க, லக்கினாதிபதி பலனற்றிருக்க முப்பது வருஷத்தில் மாணமாம். எ-று. 724

வாழும்நான்கிற்சுக்கிரனும் வந்தேயெட்டிற்பாவருறச்
சூழும்நல்லோர்பார்வையறத் தொடர்ந்தேநிற்கவக்கினியால்
ஊழிமனையாடன்னலு மோங்கும்பாம்பின்கடியாலும்
ஆழியுலகோர்தாமறிய வாகுமரணங்கண்டிரே.

இ-ள். நாலில் நங்கயனாகிய சுக்கிரனும், எட்டிற் கெட்ட பாவிகளும், சுபர்கள் பார்வையில்லாதிருக்க, தீம்பு அக்கினியாலும், வீம்பு மனையாட்டியாலும், பாம்புக்கடியாலும் மரணமாவன். எ-று. 725

கண்டவிரண்டிற்பன்னிரண்டிற் காணுஞ்செவ்வாய்சோமனுற
பண்டேயேழிலெட்டில்கரும் பாம்புமரசனுறின்முப்பான்
கொண்டவட்டமாதிபதி கேந்திரமேவிலக்கினாதிபதி
மண்டுபலன்கள்வர்ச்சிதமேல் வயதுமுப்பத்திரண்டாமே.

இ-ள். இரண்டு பன்னிரண்டில் திரண்ட பூமனும், சோமனுமிருக்க
ஏழு எட்டாமிடத்தில் பாழும் பரிச்சிகனும் புரிச்சிகனும் இருக்க, முப்பது
வயதில் மரணமாம். அட்டமாதிபதி கேந்திரமேறி லக்கினாதிபதி பலன்க 726
ளற்றிருக்கில் முப்பத்திரண்டு வயதில் மரணமாம். எ-று.

ஆமேயரசன்சுக்கிரனு மணுகிக்கேந்திரந்தான்மேவ
தாமேலக்கினாதிபதி தானும்பாவருடன்கூடத்
தீமைசூழ போக்கிலியந் தேய்ந்தமதியுந்தானிருக்கத்
தோமேமரணமாருற்ற சொல்வார் கணிதவல்லோரே.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இ-ள். ஏந்தனுகிய குருவும், காந்தனுகிய சுக்கிரனும் கேந்திரத்திலிருக்க, லக்கினுதிபதி பாவர்களுடன்கூட, ஆபோக்கிலியத்தில் அமரபட்சச் சநதிரனிருக்க முப்பத்தாறு வயதில் மரணமாம். எ-று. 727

வல்லமிதுனலக்கினமாய் வாழும்பரிதி தானிருக்கப்
பொல்லாரிரண்டு பாரிசமும் புகவாறரசன் முப்பத்தேழ்
ஒல்லும் பாவர்கேந்திரத்தி லுறச்சன்மாதி பன்னிரண்டில்
வெல்லுமெட்டோன் லக்கினத்தின் மேவின் முப்பத்தெட்டாமே.

இ-ள். மிதுன லக்கினமாய் அதிற் பதுமபாணியிருக்க, இரண்டு பக்கமும் பாவர்களிருக்க, ஆறில் வியாழனிருக்க, முப்பத்தேழு வயதில் மரணமாம். பாவர்கள் கேந்திரத்திலும் லக்கினுதிபன் பன்னிரண்டிலும் எட்டாமிடத்தோன் லக்கினத்திலுமிருக்க, முப்பத்தெட்டு வயதில் மரணமாம். எ-று. 728

மேலாஞ்சன் மந்திரராசி மேவுமொன்றி லெட்டாதி
சாலவிருக்கச் சுபரெட்டிற் றந்தால் வயதுமென்னைந்தாம்
சேலெட்டாதி கேந்திரமே செவ்வாய் லக்கினந் தானிருக்க,
காலவாறின்மூன் றுசனி கதிர்சூழெண்ணைந்தாம் வயதே.

இ-ள். ஜென்ம லக்கினந் திரராசியாய் அதில் அட்டமாதிபனிருக்க, சுபர்களெட்டிலிருந்தால் நாற்பது வயதில் மரணமாம். அட்டமாதிபன் கேந்திரத்திலும், வக்கிரன் லக்கினத்திலும், மூன்று ஆருமிடங்களில் அக்கிரன், சுக்கிரன் சேர நாற்பது வயதில் மரணமாம். எ-று. 729

வயதே சோமன் லக்கினத்தில் வர்க்கோத்தமனுயுறிற்பாவர்
நியமே பார்க்கச் சுபர் திருஷ்டி நேசமில்லவாறெட்டில்
பயமேசன்மனெட்டாதி பதியங்கிஷையிற்பாவருடன்
சயமே நிற்கவெட்டாதி சன்மத் திருக்கிலைம்பதுவே.

இ-ள். லக்கினத்தில்* வர்க்கோத்தமனுகிய பக்கிரனுகிய சந்திரன் இருக்கப் பாவர்கள் பார்க்கச் சுபர்கள் பார்க்காதிருந்தால் நாற்பத்தெட்டு வயதில் மரணமாம். லக்கினுதிபதி அட்டமாதிபதி அங்கிஷத்தில் பாவர்கள் கூடிநிற்க. எட்டாமிடத்ததிபன் திட்டமாய் லக்கினத்திலிருக்க, ஐம்பது வயதில் மரணமாம். எ-று. 730

வேறு

அன்பாமுபய ராசிக்கதிபதி
இன்பமாய்லக்கின மியைந்தேயுற்றிட
பன்பாமதிசனி பனிரண்டெட்டுறில்
துன்பமைம்பத் திரண்டினிற்சொல்லுமே.

இ-ள். உபயராசிக்கதிபன், ஜென்மலக்கினத்திலிருக்க, அரிச்சிகனுகிய சந்திரன், கரிச்சிகனுகிய சனி அட்டமவியத்தானத்தில் அமர்ந்திருக்க ஐம்பத்திரண்டு வயதில் மரணமாம். எ-று. 731

---

* (வர்க்கோத்தமம் என்பது) ஜென்ம லக்கினம், நவாமிஷலக்கினம், ஓரா லக்கினம், திரேக்காண லக்கினம், சப்தமாங்கிஷ லக்கினம், தசாங்கிஷ லக்கினம், திரிசாங்கிஷ லக்கினம், சோடசாங்கிஷ லக்கினம், சஷ்டியாங்கிஷ லக்கினம் இவைகளில் பலன் பெற்றிருப்பதாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சொல்லுஞ்சன்மாதி சூழ்ந்தேயெட்டுற
வல்லசந்திரன் மனையிற்கதிபதி
வெல்லுசந்திரற் கெட்டினின்மேவிடிற்
புல்லர்கூடிற்போ மைம்பதினலதே.

இ-ள். லக்கினதிபன் எட்டில் இருக்க, பக்கிரனாகிய சந்திரா லக்கினத்திற் கதிபதி, அதற்கெட்டில் இருக்கப் பாவர்கள்கூட, ஐம்பத்திநான்கு வயதில் மரணம். எ-று. 732

நாலாஞ்சன்ம நாடுந்தனுசில்
மேலாயரசன் விரும்பியிருந்திடச்
சேலாரிராகுவுஞ் செவ்வாயெட்டுறிற்
காலமேழெட் டிற்கனகண்டமே.

இ-ள். ஜென்ம லக்கினம் வில்லாய், அதிற் செல்லா நின்ற நல்ல சொக்கிரனாகிய குருவும், ஆறில் உக்கிரனாகிய ராகுவும் எட்டில் வக்கிரனாகிய செவ்வாயும் இருக்க ஐம்பத்தாறு வயதில் மரணமாம். எ-று. 733

கண்டவாறு கருதிடுமெட்டினிற்
கொண்டகோட்களே கூடியதுதனில்
மண்டியிருக்கில் வயதைம்பத்தெட்டினில்
அண்டர்மாதவ ரறிந்துரைத்தானரோ.

இ-ள். சொல்லாநின்ற ஜென்ம லக்கினத்திற்கு, ஆறு எட்டில் எல்லாக் கிரகங்களும் கூடியிருந்தால் ஐம்பத்தெட்டு வருஷத்தில் மரணமாம். எ-று. 734

இரைத்திடும்பத்தி லுறுகதிரோனும்
திரைத்தகாரி ஜென்மமேவிடிற்
புரைத்தவெட்டினிற் புரவலனுற்றிட
நிரைத்தேயாண்டு நிற்பனறுபதே.

இ-ள். பத்தாமிடத்தில் மித்திரனாகிய சூரியனும், லக்கினத்தில் மத்திரனாகிய சனியும், எட்டில் புத்திரகாரகனாகிய குருவுமிருக்க, அறுபது வருஷத்தில் மரணமாம், எ-று. 735

அறுபதிலின்ன மாண்டினிற்காரி
நறுமலர்ச்சன்மம் நாலினிற்சந்திரன்
மறுவெழிற்செவ்வாய் பத்தினிற்கதிர்குரு
இறுபுகர்புந்தி யிவருடன்கூடிடில்.

இ-ள். ஜென்ம லக்கினத்தில், தீமனும், நாலிற் சோமனும், ஏழிற் பூமனும், பத்தில் மீமன் சீமன் காமன் சாமன் இவர்கள் கூடி நின்றால், அறுபத்தொரு வருடத்தில் மரணமாம். எ-று. 736

கூடியவெட்டா மதிபதிபாவனாய்
நாடியசந்திரன் நண்ணிடுங்கோணத்
தாடியகேந்திரந் தன்னிற்கூடிடில்
ஆடியவறுபத் தைந்தினிற்போகுமே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். எட்டுக்குடையவன் துட்டபாவியாய் வட்டச் சந்திரனிருக்கின்ற திரிகோண கேந்திரங்களில் கூடில் அறுபத்தைந்து வயதில் மரணமாம். எ-று. 737

போகிடுங்காரி புகுமனை நீச
மாகியகேந்திர கோணமாகிடில்
மேகமிலக்கின மெழின் மனை நல்லோர்
ஆகியசுபருட னனுகிலெழுபதே.

இ-ள். சோந்தனுகிய காரியிருக்கும் வீடு, நீசமாகியும், கேந்திர கோணமாகியும், லக்கினதிபதி சுபருடன் கூடி, சுபர்மனையிலிருந்தால் எழுபது வயதில் மரணமாம். எ-று. 738

எழுந்திடுலக்கினத் தெய்தநற்கோளுறத்
தழுந்தியகேந்திரஞ் சந்திரன்மேவிடில்
அழுந்திடுகோணக் காரியமர்ந்துறி
லழுங்குபின்செல்வமோ ரெழுபதினுலே.

இ-ள். ஜென்ம லக்கினத்தில் சுபர்களிருக்க, கேந்திரத்தில் சாந்த விருக்க, திரிகோணத்தில் சோந்தனிருந்தால் எழுபத்துநான்கு வயதில் மரணமாம். எ-று. 739

நாலாஞ்செவ்வாய் நாடியைந்தினில்
ஏலாம்பரிதி யேழிலமர்ந்திட
நீலாங்காரி நீசமுற்றிடில்
மாலாயெழுபத் தைந்தின்மரணம்.

இ-ள். ஐந்தில், எரிச்சிகனுகிய செவ்வாயும், ஏழில் விருச்சிகனுகிய சூரியனும் இருக்க, கரிச்சிகனுகிய சனி நீசமாயிருந்தால் எழுபத்தைந்து வயதில் மரணமாம். எ-று, 740

மரணமறியும் வசைகேந்திரத்தில்
குருவுடன்மதியுங் கூடியிருந்திட
திரள்சுபர்நோக்கத் தேசத்தரசாய்ப்
புரிபுவியெழுபத் தொன்பதுபொருந்துமே.

இ-ள். கேந்திரத்தில் ஏந்தனுகிய குருவும், சாந்தனுகிய சந்திரனும் கூடியிருக்க, சுபக்கிரகங்கள் பார்க்க, ஏந்தலாயிருந்து எழுபத்தொன்பது வயதுவரை, வாழ்ந்து மரணமாவான், எ-று. 741

மேவியலக்கின வீடாறளவும்
தாவியநல்லோர் தானுறவேழ்முதல்
பாவர்களுறிலே பரதேசத்தரசாய்
சாவதுயெண்பதிற் சாற்றிடுவாயே.

இ-ள். ஜென்ம லக்கினமுதல், ஆறுவீட்டளவும், நல்லவர்களிருக்க, ஏழாம் வீடுமுதல், பாவர்கள் இருந்தால், அன்னிய தேசத்தரசனுகி, எண்பது வயதில், மரணமாம். எ-று. 742

சாற்றிடுமின்னந் தானெண்பதனில்
ஏற்றிடுலாபத் திருந்தங்கிசாபதி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

போற்றுமெவ்வீட்டினிற் புகிலதற்குடையோன்
நேர்த்தியகேந்திரத் துறினச்சயமே.

இ-ள். லாபத்தானத்தி லிருந்த அங்கிசாதிபதி, எந்த வீட்டிலிருக்கின்றனே, அந்த வீட்டுக்குடையவன் கேந்திரம் பெற்றுலும், என்பது வயதில் மரணமாம். எ-று. 743

நிச்சவெட்டாறு நிலவுடன்சன்மம்
இச்சைநற்குருவும் லாபமூன்றினில்
துச்சபாவர் தொடர்ந்தேயிருந்திடில்
அச்சமிரெண்ணூ ருண்டினிலிறுமே.

இ-ள். எட்டு ஆருமிடங்களில், வட்டமதிச் சந்திரனும், லக்கினதிபதியும். இருக்க, லாபத்திற் குருவும், மூன்ருமிடத்தில் பாவர்களும் இருக்கத் தொண்ணூறு வயதில் மரணமாம். எ-று. 74 4

இறுஞ்சன்மாதி யிதுவேபலனுய்
நறுஞ்சுபர்நோக்க நண்ணிக்கேந்திரத்
துறினேலட்சுமி தொடர்ந்துபூவரசாய்
தெரிந்திடுநூறெனச் செப்புமாதவனே.

இ-ள். ஜென்மாதிபதி, பலமாய், சுபர்கள் பார்க்க, கேந்திரங்களிலிருந்தால், லட்சுமிகரம் பொருந்திய இராஜனுய் நூறு வயதுவரை யிருப்பவனென்று மாதவத்தை யுடையவர்கள் சொல்லுவார்கள். எ-று.

எட்டாம் பாவம்

சம்பூரணம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஒன்பதாம் பாவம்

பிதுர்ப் பலன்

ஓதுமைந்தொன்பா னதிபதிகதிருடனே கூட
ஓதிடுங்காரிபார்க்க வுறும்பிதாவிறகரிட்டம்
ஓதுமைந்தொன்பா னதிபதிகதிருடனேகாரி
ஓதுசேயுவர்தாமூன்றி லுறிற்றந்தையுடனேபோமே.

இ-ள். ஐந்து ஒன்பதாமாதிபதிகள் கெந்தனுடன் கூடிட மந்தன் பார்க்க, பிதாவுக்குத் தோஷமாம். ஐந்து ஒன்பதுக்குடையவர்களுடன் கெந்தன் கந்தன் மந்தன் ஆகிய இவர்கள் கூடி மூன்ருமிடத்திலிருந்தால், தகப்பன் உடனே மரிப்பன். எ-று. 746

உடன்சன்மலக்கினத்துக் கொண்பதிலைந்திற்பத்தில்
முடவன்சேயிரவியிந்த மூவரிலொருவர் நிற்கத்
திடமுறுபிதாவுக்கீனஞ் சென்மத்திற்செவ்வாயேழில்
அடல்கதிர்க்கையம்பொன் னேர்க்காண்டுமூன்றிருப்பன்றந்தை.

இ-ள். ஜென்மலக்கினத்திற்கு, ஐந்து ஒன்பதாமிடங்களில் மந்தன் முந்தன் கந்தன் இவர்களில் யாரேனும் ஒருவர் நிற்க, பிதாவுக்கு குற்றமாம், கந்தன் ஜென்மலக்கினத்திலும், முந்தன் ஏழாமிடத்திலுமிருக்கத் தாய்க்குச் சந்தேகமும். தந்தைக்கு மூன்ருண்டு, அந்தனிருந்தால் இந்த வுலகத்தில் வாழ்ந்திருப்பன். எ-று. 747

வேறு

தந்தைபதி யிற்றவுரி நிற்கச் செவ்வாய்
தானுங்கேந் திரத்துறில ரிட்டந் தந்தைக்
கந்தவனுக் கட்டமத்துஞ் சன்மாதி யுடனும்
ஆதவன்செவ்வாய்கூடி யணுகிலையர்க்கரிட்டம்
பந்துசன்மத்துக் கைந்தொன்பானிற்பாவர்
பாம்புகேந்திரத்திலுறத் தந்தைக்கீனம்
விந்தைமலர் நண்பனுக்கேழ் சனிசேய் நிற்கில்
மேலோர்நோக் கறநிற்கில் வியமொன் பானே.

இ-ள். தந்தையாகிய ஒன்பதாமிடத்தில் மந்தனும், கேந்திரத்தில் சேந்தனும் இருந்தால், தகப்பனுக்குத் தோஷமாம் ஒன்பதுக்கு அட்டமத்தில் லக்கினுதிபதி, சேந்தனுகிய செவ்வாயும், வேந்தனுகிய சூரியனும், கூடியிருக்கத் தகப்பனுக்குத் தோஷமாம், ஜென்மலக்கினத்திற்கு, ஐந்து ஒன்பதில் பாவர்களும் கூந்தனுகிய ராகுவும், கேந்தனுகிய கேதுவும், இவர்களில் எவரேனும், கேந்திரத்திலிருக்கில் தகப்பனுக்குக் குற்றமாம், சூரிக்கேழில் |சோரிகாரி நின்று, சுபர்கள் பார்வையில்லாவிட்டால் தகப்பன் இறந்து போவான். 748

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வேறு

ஒன்பா னிடத்திற் சனியைந்தி லிரவி யுடனே யுருபாம்பும்
அன்பா யிருக்கத் தந்தை தனக் கரிட்ட மைந்தா மாதிபதி
இன்ப முச்ச மாயிருக்க வில்லை யரிட்டம் பிணி காட்டும்
பொன்பார்த் தருளச் சனியிரவி நின்றுற் பிணிபோங் கண்டீரே.

இ-ள். ஒன்பதாமிடத்தில், மந்தனாகிய சனியும், ஐந்தாமிடந்தில் முந்தனாகிய சூரியனும், குந்தனாகிய ராகுவு மிருந்தால், தந்தைக்குத் தோஷமாம் ஐந்தாமிடத்ததிபன் உச்சமாயிருக்கத் தோஷமில்லையாம், பிணியை உண்டாக்குமாம். சுருதி பார்வையில் பருதி மிருதி நின்றால் அறுதியாய் நோய் நீங்கித் தகப்பன் சுகமடைவான். எ-று. 749

கண்ட சனியுங் கதிரோனுங் கதித்த வொன்பா னதிபனும்
அண்டி யொருவீட் டினிலிருக்க வையர்க் கரிட்ட மவரைப்பொன்
மண்டி நோக்க வைந்தாதி மனையோ னுச்ச மாயிருக்க
மிண்டாய்ச் சிலநா ளிருந்தரிட்டம் மேவும் விடம்போல் விழிமானே.

இ-ள் ஆலகாலவிடம் போன்ற நீலவிழிகளைச் சாலப்பெற்ற பெண்ணே? நீலனும், காலனும். ஒன்பதாமிடத்ததிபனுங்கூடி யொரு வீட்டிலிருக்கத் தகப்பனுக்குத் தோஷமாம். இவர்களைத் தவராமற் குரு பார்க்க, ஐந்தாமிடத்ததிபன் உச்சமாயிருக்கச் சிலநாளிருந்து பின்ன ரிட்ட முண்டாம். எ-று. 750

மானே பிதுர்கா ரகனென்பான் மனையா திபனுஞ் சனியாகித்
தானே பாவ ருடன்கூடித் தருமுந் நான்கெட் டாறிலுறத்
தேனே பிதுர்ஸ்தா னந்தன்னிற் செம்பாம் பிருக்க வம்மனையில்
ஊனே செறியுஞ் சனிவருநா ளுடனே தந்தைக் குறுமரிட்டம்.

இ-ள். பிங்கலனாகிய சூரியனும், முங்கலனாகிய சனியும் பிதிர்த்தா னதிபதியும், ஒன்று சேர்ந்து, ஒரு வீட்டிற்கூடி,: ஆறு எட்டு பன்னி ரண்டிலிருந்து, ஒன்பதாமிடத்தில், செம்பாம்பிருந்தால், அந்த வீட்டிற் குக்கோசரத்தில் மந்தன் வருங்காலம் தந்தைக்கரிட்டமாம். எ-று. 751

உறுஞ்சன் மத்திற் செவ்வாயு மொன்பா னிடத்திற் சனியிருக்கப்
பெறுந்தந் தைக்கு வருமரிட்டம் பிதாத்தானதி பதியுடனே
குறுஞ்செவ் வாயுஞ் சனிமூவர் கூடியிருக்க நல்லோர்கள்
அறிந்தெங் கேதா னிருந்தாலு மையர்க் கரிட்ட மாமென்பார்.

இ-ள். ஜென்ம லக்கினத்திற் சேந்தனும், ஒன்பதாமிடத்தி சேர்ந்தனுமிருக்கத் தகப்பனுக்குத் தோஷமாம். பிதிரத்தானதிபன் விதிரன் உதிரன் இம்மூலருங் கூடியிருக்கச் சுபர்கள் எந்த இடங்களி லிருந்த போதிலும், தகப்பனுக்குத் தோஷமாம். எ-று. 752

என்பார்சன் மந்தனிற்காரி யிரவிசசிமூவருமிருக்கத்
தன்பாரைந்திற்குசனிருக்கத் தந்தைக்கரிட்டந்தான்பின்னும்
அன்பார்குசன்செம்பாம்பிரவி யாகமூவருடன் கூடிப்
பின்பாராமன்மூன்ருண்டிற் பிதாவுக்கரிட்டம்பேசுவரே.

இ-ள். ஜென்ம லக்கினத்தில் முங்கலனாகிய சனி, பிங்கலனாகிய செங்கதிரோன், சங்கலனாகிய சந்திரன் மூவரும் இருக்க, ஐந்தாமிடத்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தில் மங்கலனுகிய செவ்வாயிருக்கத் தகப்பனுக்குத் தோஷமாம், மங்கலன் வெங்கலன் பிங்கலன் கூடியிருக்கில் மூன்று வருஷத்தில் தகப்பன் மரணமாம். எ – று. 753

பேசுமெட்டொன்பதுபத்திற் பெரிய பாவருறவொன்பான்
நேசமெட்டாறெருடுவியத்தி னிற்கப்பலன்கணிங்கியுற
ஓசையொன்பதற்குசனே யுலவுங்கதிரேலுற்றிடினும்
வீசுமொனபதினிற்பாவர் மேவர்பிதாமெய்யுயிர்பிரியும்.

இ – ள். எட்டு ஒன்பது பத்தாமிடத்திற் பாவிகளும ஒன்பதுக்கதிபன், ஆறு எட்டு பன்னிரண்டாமிடத்தில் பலனற்றுப் பொருந்தியிருக்க, ஒன்பதாமிடத்தில் செங்கயனுகிய செவ்வாய் அல்லது பங்கயனுகிய சூரியனிருக்க, அவரோடு பாவர்களிருக்கத் தகப்பன் இறந்துபோவான் எ – று. 754

வேறு

பிரியமுடனென்பதா மிடத்ததிபன் புடத்தில்
பெருங்குளிகன் றனைவாங்கிப் பெற்றிடுராசியிலே
நெறிபயிலந் தமனியனுர் தாமருவுங் காலம்
நிரியாண மந்தவருடத்தில்வரு மவர்தம்
குறிகாணும் படிவெய்யோன் புடத்தை வைத்துக்கொண்டு
குலவுமொன்ப தாமிடத்தோன் புடமதனை வாங்கிச்
செறியுமந்த ராசியே மாதங்க ளாகத்
தெளிந்து பிதா நிரியாணந் தனையருளுவீரே.

இ – ள். ஒன்பதாமிடத்ததிபன் புடத்தில் அன்புள்ள குளிகன் புடத்தைக் கழித்துக் கண்ட ராசியில் குருவருங் காலத்தில் அவ்வருடம் மரணமாம். திவாகரன் புடத்தை வைத்துக்கொண்டு நவமிடத்ததிபன் புடத்தைக் கழித்துக் கண்ட ராசியில் சூரியன் காலமாகிய மாசத்தில் பிதா மரணகாலத்தைச் சொல்வீராக. எ – று. 755

வேறு

அருளுந்தந்தைகாரகனை யறிந்தேபலன்களுரைசெய்ய
பரிதிக்கிருபுறமாரேனும் பாவரிருக்கப்பாவர்களும்
துரிதரய்நோக்கமிருந்ததனுற் சொல்லுங்குழவிகருப்பத்தில்
தெரியவிருக்கப்பிதாவரிட்டஞ் செப்புங்கணிதவல்லோரே.

இ – ள். மீவனுகிய சூரியனுக்கு, இரண்டு பக்கமும் பாவக்கிரகங்களிருந்து, பாவர்கள் பார்த்தாலும், குழந்தை கருப்பத்திலிருக்கும் பொழுதே, தகப்ப்ன் மரணமாவனென்று தந்தை காரகனுகிய எல்லவனுகிய சூரியனைக் கொண்டு சொல்ல வேண்டும் எ – று. 756

பாக்கிய பலன்

வேறு

உறுமென்ப தாமிடத்தோன் வெகுபலவா னுகி
உற்றவிடத் ததிபதிகேந் திரத்திற் பாக்கியவான்
பெறுந்தந்தை தனிலதிகன் கீர்த்திமா னரசர்
பிரியமுறச் சஞ்சரிப்பன் பிரதாப சாலி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அறிவுறுபாக் கியாதிபிதிர் காரகனைக் கூடி
ஆறிலுறப் பிதாவுரைகேட் டருள்வனென்பா னதிபன்
பிரியாம லிருந்தநவாங் கிசத்தாதி பதியைப்
பிதிர்கார கன்பார்க்கக் குருபத்திப் பிரியன்.

இ-ள். ஒன்பதாமிடத்ததிபன் அதிபலவானாகி, அவனிருந்த வீட் டதிபன் கேந்திரத்திலிருந்தால், பாக்கியவான் தகப்பனைப் பார்க்கிலுங் கீர்த்தியுள்ளவன், அரசர்கள் பிரியப்படும்படி யிருப்பவன், பிரதாப முடையவனுமாவன். பாக்கியாதிபதி பிதிர்காரகனைக் கூடி ஆறாமிடத்தி லிருக்கப் பிதா சொற்படி கேட்டு நடப்பவன். ஒன்பதாமிடத் ததிபதி யிருந்த நவாங்கிசத் ததிபதியைப் பிதிர்காரகன் பார்க்கக் குருபத்தி யுள்ளவனுமாவன். எ-று. 757

பிரியமுடன் பிறைக்கைந்தாம் வீடுசர மாகப்
பெருகியலக் கினத்துக்கைந் தாம்வீடு சரமாய்
நிரையுமபூ ரணமான வயிச்சுவரிய னென்பர்
நீள்சரமுந் திரமாகில் நிகழ்த்துபலன் பாதி
அருமைபெறுஞ் சரத்துபய மாகிற்காற் பங்காம்
அயிச்சுவரிய மெனப்பகர்வ ரம்புலிக்கஞ் சானக்
குரிமனைகண் முதற்கொண்டு லக்கினத்துக் கைந்தைக்
குணமுடனே கண்டுபலன் கூறிடவே வேண்டும்.

இ-ள். ஜென்ம லக்கினத்திற்கு ஐந்தாம் வீடும், சந்திராலக்கினத் திற்கு ஐந்தாம் வீடும், சரவிராசியாகின் பூரணமான ஐசுவரியவானும். இதில் ஒரு ராசி சரமும், மற்றொரு ராசி திரமாகில், அதிற்பாதி ஐசுவரிய மும், சரராசியும் உபயராசியுமாகில் காற்பங்கு ஐசுவரியமுமாம். எ-று.

வேண்டியதோ ரொன்பதா மதிபதியுங் குருவும்
விரும்பியகேந் திரத்திரிகோ ணங்களிலே மேவில்
ஆண்டகை பாக்கியவா னிவரிருவ ருடனும்
அன்புடனொன் பானிடத்தி லனுகினுமிம் மூவர்
பூண்டுவரு மகாதிசைலா பாதிபுசிப் பிலேதான்
பூரணபாக் கியஞ்சேரு மேழாமா திபனைத்
தீண்டிறலா பாதியுற வாய்க்கூடி நல்லோர்
செறியுமனை யுறில்வர்க டிசையிற்பாக் கியமே.

இ-ள். ஒன்பதாமிடத்ததிபதியும், அன்புள்ள குருவும் கேந்திர கோணங்களிலே இருந்தால், பாக்கியமுள்ளவனும், இவ்விருவருடனும் ஒன்பதாமிடத்தில் நின்றவனும் ஆகிய இவர்கள் திசையில் பதினோரா மிடத்ததிபன் புத்தியில் பூரணமான பாக்கியஞ் சேருமாம். ஏழாமிடத் ததிபனை லாபாதிபதிகூடி, சுபர்கள் வீட்டிலிருந்தால், அந்த ஏழு பதி னொன்றுக்குடையவர்கள் திசையிலும், பாக்கியமுண்டாம். எ-று. 759

மேயலா பாதியுமே ழாதியுமித் துருவாய்
மேலோர்கள் வீட்டிலுறச் சன்மாதி பதியும்
ஆயுமிவர் மூவருமொன் றுய்க்கூடி யிருக்கில்
அயிஸ்வரியஞ் சீவபரி யந்தமட்டுண் டென்னும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நேயமுட னென்பதா மிடத்ததிபன் சாதி
நிசமறிந்தே யவர்மரபின் னிருபர்களினுலே
தூயசவு பாக்கியங்கள் சேருமென்றே நல்ல
சோதிடநூ லுரையுணர்ந்தோா சொல்லுவர்கண்டீரே.

இ-ள். ஏழாமிடத்ததிபதி லாபாதிபதி இவர்களிருவரும் மித்துருவாய் சுபர்கள் வீட்டிலிருக்க, ஜென்மாதிபதியும் அவருடன் கூடியிருந்தால், ஜீவனுள்ள வரையும் பாககியவானென்றும், ஒன்பதாமிடத்ததிபன் ஜாதி உண்மையை யறிந்து அந்தக் குலத்துள்ள அரசர்களினுல் சௌபாக்கியங்கள் சேருமாம் என்று சோதிட வல்லவர்கள் சொல்லுவார்கள். எ-று. 760

கண்டிடுலா பாதிபதி பாக்கியா திபனும்
களத்திரத்தா னத்திருக்கப் பாக்கியலா பந்தான்
மிண்டியதோர் கேந்திரமா யுச்சவீ டாக
மேவியமே ழாமதிபன் சுபக்கிரக மாகி
மண்டியபாக் கியலாபத் தானத்தி லிருக்க
வரும்பலபாக் கியமவன்றன் மனைவிக்குஞ் சுகமாம்
திண்டிறலாந் தோளியதா மிவர்களொடுஞ் சான்ருேர்
செறியும்பா வாதியற்குச் செல்வமிகச் சேரும்.

இ-ள். லாபாதிபனும், பாக்கியாதிபனும் களத்திரத் தானத்திலிருக்க பாக்கிய லாபாதிபதியாகிய இவர்களும், கேந்திரத்தில் உச்சமாக ஏழாமிடத்ததிபன் சுபனுய், பாக்கிய லாபத்தானத்திலிருக்கப் பல பாக்கியங்களுமுண்டாம் அவன் மனைவிக்குஞ் சுகமாம். இவர்களோடு (தந்தை, தாய், சகோதரன், மனைவி, மாமன், சகோதரி) இதில் எந்தப் பாவாதிபர் கூடினுர்களோ அவர்களுக்குத் திரவியமுண்டாம். எ-று.

சேருமொன்பா னிடத்திருந்த பாக்கியவா திபனும்
திறல்குருமூ வருநீச மத்தமனஞ் செறியக்
கூறியபா வியுமாய்ச்சத் துருவீட்டி லிருக்கக்
குலவுவிய மாறெட்டிற் கூடிநின் ருலும்
நேரும்பாக் கியநட்டம பாக்கியவா திபனும்
நிருபனுநின் றிடுவீட்டோ னீசமத்த மனமாய்
பாரிலிரப் பான்பாக்கி யாதிகுரு வுடனே
பாவிகழ்கூ டினும்புசிப்பன் பலிகரத்தி லெடுத்தே.

இ-ள். ஒன்பதாமிடத்திலிருந்தவன், அவ்வதிபதி குருவாகிய இவர்கள் மூவரும் நீசாஸ்தமானமாக அல்லது பாவராய்ச் சத்துரு வீட்டிலிருக்க அல்லது சட்டாட்டம வியத்தில் கூடியிருக்கப் பாக்கிய நஷ்டமாம், பாக்கியாதிபனுங் குருவும், நின்ற வீட்டதிபர்கள் நீசாஸ்தமனமாகில், காசினியில் யாசிக்கின்றவனும், அப்பாக்கியாதிபனும் சிலரக்கியம்பெற்ற குருவும் பாவிகளுடன் கூடினும் லெச்சைகெட்டு அச்சமில்லாமல் பிச்சையைக் கையில் வாங்கிப் புசிப்பவனும். எ-று. 762

வேறு

எடுத்தபத்தா மதிபதியேழிறை
கடுத்தமித்திர ராகிப்பலனுடன்
கொடுத்தவுத்தமர் வீட்டினிற்சூழ்ந்திடப்
படைத்தபாரியி னுல்வரும்பாக்கியம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். பத்து ஏழுக்குடையவர்கள் மித்திரர்களாய், பலம்பெற்று சுபர் வீட்டிலிருக்க, களத்திரத்தினுல் பாக்கியமுண்டாம். எ-று. 763

வேறு

பாக்கியஞ்சேர் வகைபிருகு மதியரசன் கூடிப்
 பத்தாகு மிடத்திருக்கும் பலன்றனவா னுவன்
தேக்கியசத் தியவசனன் கல்விசெறி நிபுணன்
 திரராஜர் வெகுமானஞ் செய்யமகிழ்த் திருப்பன்
தாக்கியபொன் சனிபுந்தி மதிசெவ்வா யைவர்
 தானெருவீட் டினிலிருக்கத் தனவானுமாகி
ஊக்கமுறு முடியரசர் சன்மானஞ் செய்ய
 உலகில்வெகு பாக்கியமு முண்டாகுங் கண்டீர்.

இ-ள். பிருதியாகிய சுக்கிரன், இருதியாகிய சந்திரன், சுருதியாகிய வியாழன் இவர்கள் கூடிப்பத்தாமிடத்திலிருக்க, தனவான். பொய்சொல்லாதவன், கல்வி நிறைந்த வித்துவான், ராஜசன்மானம் பெற்று மகிழ்பவனுமாவன். புந்தனுகிய குரு. மந்தனுகிய சனி, தந்தனுகிய புதன், இந்தனுகிய சந்திரன், கந்தனுகிய செவ்வாய் ஆகிய இவ்வைவர்களும், செவ்வையாய்க் கூடி ஒரு வீட்டிலிருக்கச் செல்வவானுகிக் கிரீடம் பெற்ற ராஜசன்மானம்பெற்று உலகில் வெகு பாக்கியமுண்டாகுமாம். எ-று. 764

வேறு

கண்ட பத்தா மாதிபதி கருது முச்சர் வீட்டிலிருந்
தண்டிப்பத்தா மிடம்பார்க்கி லவன்பூ மியிலுண்டாஞ் செல்வம்
மிண்டிநீசர் சத்துருக்கள் வீட்டி விருந்தே மிகநோக்க
அண்டுந்தூர தேசத்து மந்நிய ராலு மயிஸ் வரியம்.

இ-ள், பத்தாமதிபதி, உச்சவீட்டிலிருந்து பத்தாமிடத்தைப் பார்த்தால், சொந்த ஊரிற் செல்வமுடையவனும், சத்துரு நீசவீட்டிலிருந்து, பத்தாமிடத்தைப் பார்க்கத் தூரதேசத்திலும் அன்னியராலும் ஐஸ்வரியமுண்டாம். எ-று. 765

ஒன்பதாம்பாவம்

சம்பூர்ணம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பத்தாம் பாவம்

கன்மபலன்.

பத்தாமிடத்தி லட்டமத்தோன் பாவ ருடனே கூடிநிற்கப்
பத்தா மாதி பலம்பெறவே பாவர் பார்க்கத் துர்க்கன்மம்
பத்தா மதிபன் பலவானய்ச் சுபக்கோ ளுடனும் பரிந்தேழில்
ஒத்த நான்கிற் சன்மத்தி லுறினற் கரும முளனுவன்.

இ-ள். பத்தாமிடத்தில், அட்டமாதிபன் பாவருடன் கூடிநிற்கப், பத்தாமிடத்தோன், பலம்பெறவே பாவிகள் பார்க்கக் கெட்ட காரியங்கள் செய்பவனும், பத்தாமிடத்ததிபன், பலவானய்ச் சுபர்களுடன் கூடி, ஒன்று நான்கு ஏழில் பொருந்தி நிற்கில், நல்ல காரியங்களைச் செய்ப வனும். எ-று. 766

ஆவன் ஞானி சனிநாலி லமர்ந்தா லந்தச் சனிபத்தில்
மேவிற் றீர்த்த யாத்திரையை விரும்பித் தவமே விரும்பிடவே
தாவுஞ் சன்மா திபன்பத்திற் றிக்கிற் கன்ம முளன்பத்தில்
மேவுங் கன்ம காரகனும் பலமேற் கன்மங் குறைவில்லான்.

இ-ள். நாலாமிடத்தில், நீலனுகிய சனிநிற்கில் ஞானியாவன் பத்தாமிடத்தில், மத்திரனுசிய சனியிருந்தால், தீர்த்தயாத்திரை தவங் கள் முதலியன, செய்ய விருப்பமுள்ளவன் லக்கினுதிபன், பத்தாமிடத் தில் நிற்கில்* முயற்சி யுடையவன், பத்தாமிடத்திற் புத்திரகாரகனும், கன்மாதிபதியும், பலத்து நிற்க, நீங்காத முயற்சி யுடையவனுவன். எ-று. 767

குறைவி லொன்ப தாமிடத்திற் கோவும் பலமாய்ச் சுபர்வீட்டில்
உறையச் சுபக்கோள் பார்க்கமதி யுகந்து சலராசியி லிருக்க
நிறைந்த கங்கா நதிதோய்வன் பின்னும் நிலவுச் சம்பெறவே
அறையும் பத்திற் சுங்கனுறத் தீர்த்தம் பலவு மாடுவனே.

இ-ள். ஒன்பதாமிடத்திற் பொன்னவன், பின்னமில்லாமற் பல மாய்ச் சுபர்வீடாய் இருக்க, சுபர்சள் பார்க்க, சந்திரன் சலராசியிலிருக்க, கங்கா தீர்த்தமாடுவன் அச்சந்திரன், உச்சமாயிருந்து, சுக்கிரனும், பத்திலிருக்கப் பல தீர்த்தங்களு மாடுபவனும். எ-று. 768

வேறு

ஆடும் பத்தா மதிபன் சுபருடன்
கூடி மற்றிரு பாலுற்ற கொற்றவர்
நீடி நிற்க நிரந்தர மன்பொடும்
தேடி யேசிவ பூசைகள் செய்வனே.

---

*முயற்சி, என்பது சுபராகில், நன்முயற்சியும், பாவனுகில் தாழ் மையான முயற்சியுமாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். கன்மாதிபதி நன்மார்க்கமுள்ள சுபருடன் கூடியிருந்த ராசிக்கு முன்னும் பின்னும் பலத்த சுபர்கள் இருக்க அன்போடு கூடி சிவபூஜை செய்வான். எ-று. 769

செய்ய சந்திரன் சன்மந் தனக்குமே
துய்ய பத்தா மதிமதி சூழ்ந்திடும்
மெய்யி லங்கிசை யோன்பல மேபெறில்
பொய்ய றச்சுப கன்மம் புரிவனே

இ-ள். சவுரியம் பெற்ற பத்தாமிடத்ததிபன், இருந்த நவாங்கி சாதிபதி, சந்திரா லக்கினம் ஜென்ம லக்கினம், இவைகளுக்குப் பலம் பெற்று நின்றால் சுபகாரியங்களைச் செய்வான். எ-று. 770

புரிகு சன்சனி பொன்மால் பளிங்குமே
பரிவு டனொரு விட்டினைப் பற்றிட
அரிய சற்குண சன்மார்க்க னாகியே
தெரிய ஞானசிந் தைச்சிவ யோகியாம்

இ-ள். வக்கிரனாகிய செவ்வாய், அக்கிரனாகிய சனி, சொக்கிர னாகிய வியாழன், சக்கிரனாகிய புதன், சுக்கனாகிய சுக்கிரன், இந்த ஐவருங்கூடி பெருமையாய், ஒரு விட்டிலிருக்க, சற்குணமும், சன்மார்க் கமுமுள்ளவனாகி, ஞான சிந்தையையுடைய சிவயோகியாவான் எ-று. 771

வேறு

ஆமெனும் பத்தா மதிபனற் கோளே
யாய்த்தன லாபபாக்கியத்தில்
நீமமா யுச்ச கேந்திரங் களிலும்
நிற்கநற் கன்மமே புரிவன்
தோமுறும் பவனாய் நீசமத் தமனாய்ச்
சொல்லுமா றெட்டினில் வியத்தில்
தாமுறி னல்லோர் தம்மையும் பழித்துத்
தக்கதுர்க் கன்மமே புரிவன்.

இ-ள். சத்கருமங்களை யுத்தியாய்ச் செய்யும், பத்துக்குடையவன் சுபனாய், வாக்கியம், பாக்கியம், ஆரோக்கியமுற லாபத்திலும், அச்ச மில்லாது மெச்சக்கூடிய, உச்சகேந்திரங்களிலும் நிற்க, நல்ல காரியங் களும் பாவனாய், நீசம், அஸ்தமனம் பெற்று சட்டாட்டமவியத்தில் இருக்க, நல்லவர்களைப் பழித்தலும், கெட்ட காரியங்களைச் செய்தலு முடையவனாவன். எ-று. 772

புரியுமீ ரைந்தா மதிபனற் கோளாய்ப்
புகழ்பல வானுமாய்ப் பத்தில்
தெரியவற் றிடில்யா காதிகன் மங்கள்
செய்வனீ ரைந்திடத் ததிபன்
பரிவுடன் வியத்தா னதியைக் கூடிப்
பண்புறுஞ் சுபபல முடனே
அரியவே வியத்தி லுறத்தன பதியா
யானநற் கன்மமே செய்வன்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். பலபுண்ணியங்களைச் செய்ய எண்ணமுள்ள பத்துக்குடையவன் சுபனாய் பலம்பெற்று பத்தில் இருக்க யாகமுதலிய காரியங்களைச் செய்பவனும் பத்துக்குடையவன் பன்னிரண்டாமிடத்ததிபனைக்கூடி சுப பலத்துடன் பன்னிரண்டிலிருக்கச் செல்வமுடையவனாய் சுபகாரியங்களையும் செய்பவனுவன் எ-று 773

செய்யகன் மாதி குருவுமா யுச்சஞ்
செறிந்தசுக் கிரனுடன் கூடில்
துய்யயா காதி கன்மமே புரிவன்
சூழ்ந்தகன் மாதியைத் தானும்
பய்யவே குருசுக்கி ரனுமே பார்க்கில்
பண்ணுவன் யாகமே பலவும்
மெய்யகன் மாதி குருவுமாய் நல்லோர்
வீட்டுற விரும்புவன் மகமே

இ-ள். அவ்விய கவ்வியத்துக் கொவ்விய பத்துக்குடையவன் புத்திரகாரகனாகி, உச்சம்பெற்ற உரிச்சிகனாகிய சுக்கிரனுடன் (மீனத்தில்) கூடில், யாக முதலிய கிரியைகளைச் செய்வான் பத்துக்குடையவனைப் புத்திரனாகிய குரு. நத்திரனாகிய சுக்கிரன் பார்க்கப் பற்பல யாகங்களைச் செய்பவனுவன் பத்துக்குடையவன் குருவாய் சுபர்கள் வீட்டிலிருக்க, யாகத்தை விரும்புகிறவனும். எ-று. 774

விரும்புசுக் கிரனுங் குருவுமே பலமாய்
மேவும்வீட் டதிபனற் கேளாய்
இரும்பல வானு யிருக்கமற்றவரோ
டெத்தனை சுபக்கி ரகங்கள்
பெரும்பல முடனே கூடின விலக்கம்
பெருமகம் புரிவனென் றுரைக்கும்
அரும்புதன் மாதி குருவுமாய்ப் பலமே
யாகில்வே தங்கண்மூன் றறிவன்.

இ-ள். லோலனாகிய சுக்கிரனும், பாலனாகிய குருவும் பலமாயிருக்க இவர்களிருந்த வீட்டதிபனும், சுபனாய், பலத்திருக்க, இவர்களுடன், எத்தனை சுபர்கள் பலத்திருக்கின்றார்களோ, அத்தனை பெரிய யாகங்களைச் செய்வான், பத்துக்குடையவன், பாலனாய், பலத்திருக்க மூன்று வேத மறியப்படுபவனுமாம். எ-று. 775

அறியுங்கன் மாதி பாவனாய் பாவ
ரகத்தினி லிருந்துகன் மத்தைக்
குறியுடன் பார்க்கிற் சூத்திர கன்மங்
கூசிடாப் பாவதுர்க் கன்மம்
நெறியுடன் புரிந்தீங் கிசைபெற விருப்ப
னிறைந்திடுங் குரூரசா கசமும்
செறியுமவ் வினையாற் சுபபலஞ் சிறிதாந்
தீங்குறு பலன்திர ளாமே.

இ-ள் ஜீவனஸ்தானாதிபதியாகிய, பத்துக்குடையவன், பாவியாய், பாவர் வீட்டிலிருந்து, பத்தாமிடத்தைப் பார்க்கில், சூத்திரகன்மமும், பாவமாகிய கெட்ட செய்கைகளும், முறைபடியே செய்து பாவகீர்த்தி யுள்ளவனாகிய கெட்டசகவாசத்திற் சேர்ந்து திரளான பாவச் செய்கைகள் செய்வான் சுபபலன் சொற்பமாம். எ-று. 776

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திரமுறு மொன்பா னதிபதி குருவாய்ச்
 செய்யவொன் பதிற்குரு வுறினும்
வரமுறும் பலர்க ளிடத்துப தேச
 வசனமும் வித்தையும் பெறுவன்
உரமுட ளென்பா னதிபதி மரபி
 லுரையுப தேசமும் பெறுவன்
பரமுறு மிவர்க ளுச்சகேந் திரத்தில்
 பற்றிடில் ஞானமே பலிக்கும்.

இ-ள். ஒன்பதுக்குடையவன், குருவானாலும், அல்லது ஒன்பதாமிடத்திற்குரு விருந்தாலும், பலபேர்களிடத்திலும், உபதேசமும், கல்வியும், கற்றுக்கொள்வன், ஒன்பதாமிடத்ததிபன், மரபிலே, உபதேசமும், பெறுவான், இவர்கள் உச்சகேந்திரங்களிலிருந்தால், ஞானம் பலிதமுண்டாகும். எ-று. 777

வேறு

பலிக்கு மேட மிடபமுடன் பகர்ந்த சிங்கம் பத்தாக
வலிக்குஞ் சுபக்கோ ணின்றிடினு மன்னுமவர்நோக் குற்றிடினும்
ஒலிக்கும்வேத மதிற்சொன்ன வுத்தமத்தன் மங்கடனைச்
சலிக்கச் செய்வ னெனச்சொல்வர் தக்ககணித வல்லோராம்.

இ-ள் ஆடு. மாடு, அரியாகிய சிங்கம், இந்தவிராசிகள், பத்தாமிடமாகச் சுபர்கள், இருந்தாலும், பார்த்தாலும், வேதாகம முறைப்படி சொல்லிய, உத்தம காரியங்களைப் பிரயாசையுடன் செய்வானென்று கணித வல்லவர்கள் சொல்லுவார்கள். எ-று. 778

ஆகும் சன்ம லக்கினத்தி லணுகும் ராகு மோரேழில்
வேக முடனே தானிருக்க வேண்டுங் கேந்திரங் காரிபுகர்
தாகமுடனே புதன்மூவர் தானுங் கூடச் சண்டாள
யோக மெனவே தானுரைப்ப ருண்மை கன்ம மநாசாரம்.

இ-ள். ஜென்ம லக்கினத்திற் கேதுவும், ஏழில் இராகுவுமிருக்க, கேந்திரங்களில் சனி சுக்கிரன் புதன் இம்மூவர்களுங் கூடிஇருக்கச் சண்டாள யோகமாம், (இதன் பலன்) அநாசாரமாகிய செய்கைகளுடையவனும். எ-று. 779

உண்மை பாக்கி யாதிபனு முற்றே சென்மத் துறுகதிரும்
வண்மை பெறவே யோரைந்தில் வந்துசுபக்கோ ணேக்கமிலாத்
திண்மை யாறி லொருமூன்றிற் றீயோர் வந்து தானுறைக
எண்மை யுடனே அநாசார மெய்து நீசக் கன்மியனே.

இ-ள். யோக்கியமான, பாக்கியாதிபன், சிலாக்கியமான, லக்கினத்திலும், முந்தனுகிய சூரியன் ஐந்தாமிடத்திலும் சுபர் பார்வையில்லாமலிருந்து மூன்று ஆறில் பாவர்கள் நிற்கில், இழிவாக மொழியக் கூடிய அநாசாரமும், நீசக்கிரியைகள் செய்பவனுமாவன். எ-று. 780

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சந்நியாசி யோகம்

வேறு

தேசுறுபத் தாமாதி நான்கிடத்தி லிருக்கச்
செப்பியநா லாதிபதி திரிகோணத் தெய்தப்
பூசலுறும் பாம்பல்லா தொருநான்கு கிரகம்
பொருந்திப்பத் தினிலிருக்கும் போதுசந்யா சியுமாம்
ஓசைகொணுன் காம்வீடு முதற்பத்தா மனைமட்
டோரேழு வீட்டினுங்கோ ளொழியாம லிருக்கில்
காசினியில் வாழ்பவர்க்குத் தேசிகனே யாகிக்
கதித்திடுசந் யாசியென வேகருதல் வேண்டும்.

இ-ள். பத்துக்குடையவன், சித்தமாய் நாலில் இருக்க, நாலாமிடத்ததிபன், திரிகோணத்திலிருக்க, இராகு கேது வல்லாத, ஏதாவது, நான்கு கிரகங்கள்கூடி பத்தில் இருக்கச் சன்னியாசியாம், லக்கினத்திற்கு, நாலாமிட முதல் பத்தாமிடம் வரையுள்ள, ஏழு வீடுகளிலும், இடைவிடாமல், கிரகங்கள் இருந்தால் பூமியிலுள்ளர்வகளுக்கு குருவாகி, நிலேத்த சந்நியாசியென்று கருதவேண்டும். எ-று. 781

வேண்டிடுசெவ் வாயிரவி மதிமூவர் கூடி
விரும்புபத்தா மிடத்திருக்க மின்னுர்பொன் றனக்கும்
ஈண்டியதோர் விரிவில்லாச் சந்யாசி யாவன்
இனியபுதன் கதிரோனு முச்சமா யிருக்கத்
தாண்டுவியத் தரனத்திற் சுக்கிரனெய் திடவும்
சனியொருவ னுகிச்சுக் கிரன்றன்னைப பார்க்கப்
பூண்டுவருஞ் சன்மமுத லாதியந்த மாகப்
புகழ்ந்திடுசந் யாசியெனப் போற்றிடவீற் றிருப்பன்.

இ-ள். குத்திரனுகிய செவ்வாய் மித்திரனுகிய சூரியன் வத்திரனுகிய சந்திரன் இவர்ஙள் மூவருங்கூடிப் பத்தில் இருக்க, மண் பெண் பொன் இல்லாத சன்னியாசியாவன். பச்சையாகிய புதனுவது, இச்செகத்தில், மெச்சக்கூடிய சூரியனுவது உச்சமாயிருக்கப் பன்னிரண்டில் தன்னெருகண் போன சுக்கிரனிருக்கச் சனி தனியாய் நின்று சுக்கிரனைப் பார்க்க, ஜெனனகாலமுதல் முடிவுவரை புகழ்பெற்ற சன்னியாசியாகி பூமியிலுள்ளோர் போற்றும்படியாக விருப்பான். எ-று. 782

பத்தாம் பாவம்

சம்பூர்ணம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பதினோரும் பாவம்

ஆதாய பலன்

வியமா றெட்டா திபன்கூடி மேவினுலுந் தனியேனும்
நயமாய்ப் பாவத் துறிற்பாவர் நண்ணிற் பார்க்கில் லாபமிலை
சுயலா பாதி யுச்சனுமாய்ச் சுபர்மத்தியிலே தானிருக்கில்
சயலா பத்திற் சுபரிருக்கச் சாரும் லாபந் திரளாக

இ-ள். லாபஸ்தானத்தில், பாவக்கிரகங்கள் கூடியிருந்தாலும், நாடிப் பார்த்தாலும், ஆறு எட்டு பன்னிரண்டாமிடத்ததிபர்கள் கூடியிருந்தாலும், தனித்திருந்தாலும், லாபமில்லையாம் லாபாதிபதி உச்சமாகிலும், சுபர்மத்தியிலும் இருந்து, லாபத்திற் சுபர்கள் இருக்க, லாபம் திரளாகச் சேருமாம். எ-று, 783

திரலாபாதியுச்சத்திற் செறிந்துலாபத்தினிலிருக்க
வரவாய்ச்சென்மாதிபன்பலமாய் மருவலாபம்வருஞ்சுகிப்பன்
விரவாய்லாபாதிபனிருந்த வீட்டுக்கிறைகேந்திரமேவ
உரவோரவனைக்கூடக்கண் ணுறலாபங்களுண்டாமே.

இ-ள். லாபாதிபதி லாபத்திலாகிலும், உச்சத்திலாகிலும் இருக்க, ஜென்ம லக்கினுதிபதி பலத்துடன் பதினொன்றிற் சேர்ந்திருக்க. மிக லாபம்பெற்று, சுகமாய் வாழ்ந்திருப்பவனுமாவன், லாபாதிபனிருந்த வீட்டதிபன் கேந்திரத்திலிருக்க, அவனை மித்துருக் கிரகங்களகூட அல்லது நோக்க, மிகுந்த லாபமுண்டாம். எ-று 784

உண்டாம்லாபாதிபனிருந்த திக்கிற்பலன் களுறைசெய்வாம்
தண்டாமரைநண்பன்கிழக்குத் தருஞ்சுக்கிரற் கக்கினிமூலை
கண்டாய்குசன்றெற்கராமூலை காரிமேற்குச்சசிவாயு
கொண்டேயிருக்கும்புதன்வடக்கு குருவீசானங்கொண்டுவரும்.

இ-ள். லாபாதிபன் இருந்த திக்கின் பலன்களைச் சொல்லின், சூரியனுகில் கிழக்கிலும், சுக்கிரனுகில் தென்கிழக்கிலும், செவ்வாயாகில் தெற்கிலும், பாம்பாகில் நிருதி மூலையிலும். சனியாகில் மேற்கிலும், சந்திரனுகில் வாயு திக்கிலும், புதனுகில் வடக்கிலும், குருவாகில் ஈசான்ய திக்கிலும் இருந்து லாபம் வந்து சேரும் எ-று. 785

வேறு

வரும்லாபா திபன்லாபத் தானத்தி லிருந்தோன்
மதியிரவி யிவர்நால்வர் மகிழ்பலமே பெற்று
பெருமையுள்ளோர் வீட்டினின்ற கிரகத்தோ டிருக்கப்
பெறும்வீட்டுக் கதிபதியு மேபலவா னுயின
கிருஷிகனன்'ருய்ப்பலிக்கு மயிஸ்வரிய னுவான்
கிட்டியிவர் மகாதிசையிற் கிளர்தனங்கள் சேரும்
தருமலாபா திபனிரவி யாகிமதி யுடனும்
தான்கூடப் பார்க்கவெகு தனலாப முண்டாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். லாபாதிபனும், லாபத்தானத்திலிருந்தவனும், சூரியன், சந்திரன் ஆகிய நால்வரும் பலம்பெற்று சுபர்கள் வீட்டிலிருந்த கிரகத்தோடு கூடியிருக்க, அவ்வீட்டதிபதி பலவானுகில் விவசாயங்கள் நன்ருய்ப் பலிதமுடையவனுயும், ஐஸ்வரியமுள்ளவனுயும் மேற்சொன்னவர்களுடைய திசாபுத்திகளில் பொருள் சேருமாம். லாபாதிப திசூரியனுகி சந்திரனுடன் கூட அல்லது பார்க்க, அதிகமான பொருள் லாபமுண்டாம். எ-று. 786

உண்டான லாபாதி பதியாகுஞ் சசியை
உம்பர்கோ னுனகுரு வும்முகந்து நோக்க
மிண்டான சகலபாக் கியலாபஞ் சேரும்
மிக்கலா பாதியெவர் வீட்டிலிருந் தாலும்
கொண்டாடு மவரவர்க்கு வெகுலாப முளதாம்
குறித்த சென்மக திபன்லாபத் ததனத்திற் குலவ
கண்டாய மொழியாய்லா பாதிநின்ற திசையில்
கருதியலா பங்கள்வருங் காணுமெனப் புகல்வர்.

இ-ள். லாபாதிபதி சந்திரனுகி, அச்சந்திரனைக் குரு பார்க்க, சகல பாக்கியமூம், லாபமும் சேரும். லாபாதிபன் எவர் வீட்டிலிருந்தாலும், (அந்த வீடு) (சகோதரர் தாய் தகப்பன் மாமன் (களத்திர வீடாகில்) அவரவர்களுக்கும் லாபமுண்டாம. லக்கினுதிபன், லாபத்தானத்திலிருச்க, லாபாதிபன் நின்ற வீட்டதிப்ன் திசை நடத்துங்காலம் லாபங்கள் வந்து சேருமென்று சொல்வார்கள். எ-று. 787

பதினேராம் பாவம்

சம்பூர்ணம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பன்னிரண்டாம் பாவம்

சயன பலன்

கூறியவியத் திற்காரி சசிகதிர்குருசேய்வெள்ளி
ஏறிடிற்குழவியன்னை பிதாமகன்றுணைவரில்லாள்
ஆறுபேருக்கரிட்ட மப்பதிசரமேற்றிதாம்
மாறிலாவலர்வீடுச்சம் நன்றெனவழுத்துவாரே.

இ-ள். வியத்தானமாகிய பன்னிரண்டாமிடத்தில் கரிச்சிகனுகிய சனி, அரிச்சிகனுகிய சந்திரன், விரிச்சிகனுகிய சூரியன், புரிச்சிகனுகிய வியாழன், எரிச்சிகனுகிய செவ்வாய், உரிச்சிகனுகிய சுக்கிரன் கூடியிருந்தால், (சேய்-தாய்-தந்தை-மைந்தர்-சோதரம்-களத்திரம் இந்த ஆறு பேருக்கும்) அரிட்டமென்று தோஷங் கூறுவர். அப்பன்னிரண்டாமிடம் சரமாகில், மிகவுங் கொடுமையாம். உச்சஸ்தானமாகில் நல்லதென்று சொல்லுவார்கள் எ-று. 788

(பன்னிரண்டாமிடத்தில் தனித்து நின்ற சனிக்கு ஜெனித்த சேயும், சந்திரனுக்குத் தாயும், சூரியனுக்குத் தந்தையும், குருவுக்குப் புத்திரனும், செவ்வாய்க்குச் சகோதரமும், சுக்கிரனுக்குக் களத்திரமும் தோஷமாம.)

வார்மைசேர்வியத்தானத்தின் மன்னவன்சுபக்கோளாகிச்
சீர்மைசேர்கேந்திரத்து முச்சத்துஞ்செறிந்துநிற்கில்
பார்மைசேர்வியத்தினல்லோர் பரிந்துநிற்பார்க்கில் மேலாம்
கூர்மைசேர்பரியங்கத்திற் குலவுபூச்சரங்கள்சூழ.

இ-ள். பன்னிரண்டாமிடத்ததிபன் சுபனுய், உச்சமுற்றுக் கேந்திரம் பெற்று நிற்க, அப்பன்னிரண்டாமிடத்தில் சுபர்கள் இருந்தாலும், பார்த்தாலும் மேன்மையான சப்ரமஞ்சத்தில் தொங்கலராய்க்கட்டிப் பூச்சரங்கள் சூழ்ந்திருக்கவும். எ-று. 789

சூழுஞ்செம் பட்டு மெத்தைத் தூக்கமேற் கட்டி தூபம்
தாழுஞ்சங் கிலியிற் றொங்குஞ் சப்பிர மஞ்ச மீது
ஏழுநல் லிசையாழ் கொண்டே யேந்திழை மாரி சைப்ப
வாழுமன் னவனுமென்று வழுத்துவர் மறை வல்லோரே.

இ-ள். தங்கத்தாற் செய்ததோர் சப்பிரமஞ்சமீது பங்கமில்லா அயத்தாற்செய்த சங்கிலியாற் கட்டித் தொங்கும் செம்பட்டு மெத்தையில் நித்திரையும், மேற்கட்டி, தூபங்கள் பெண்கள் ஏழ்நரம்பு கொண்டயாழ் மீட்டிக்கியானம் பாடவும். வாழ்கின்ற மன்னனுவானென்று மாதலத்துக் காதரவான வேதங்களைக் கற்ற சோதிட வல்லவர் சொல்லுவர். எ-று. 790

வல்லதோர் வியத்தா னுதி மற்றுமெட் டாறில் நிற்கச்
சொல்லிய சனியும் பாம்புஞ் சூழ்ந்துபன் னிரண்டில் நிற்க

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நல்லவர் பார்வை சற்றும் நயந்திடா திருக்கிற் பாரில்
புல்லது மெத்தை யாக விருவிழி துயில்வன் போந்தே.

இ-ள். பன்னிரண்டாமிடத்ததிபன், முன்னிலையாய் ஆறு, எட்டாமிடங்களில் இருக்க, நீலனுகிய சனியும், ஓலனுகிய இராகுவும் கூடிப் பன்னிரண்டா மிடத்திலிருக்க, நல்லவர்கள், பார்வையில்லாவிட்டால், புல்லதுவே மெத்தையாக நித்திரை செய்வான். எ-று. 791

விரய பலன்.

போந்த செறிபாக் கியத்தாதி பொருந்து பன்னென் றின்மேவ
ஏந்தும் பிதிர்லா பாதிபதி யிருவர் தமக்கு முதலாக
ஆர்ந்த புதிரின் றனம்போல வதிந்து விகுணம் பொன்தேடி
வேந்த னுவன் மைந்தற்கு மியைந்தே யிருக்கும் வெகுதனங்கள்.

இ-ள். பாக்கியாதிபதி, லாபத்திலிருந்தாலும், ஒன்பது, பதினொன்றுக்குடையவர்கள், நட்புக் கிரகங்களாயிருந்தாலும, தந்தை வெகு திரவியஞ் சம்பாதித்து அரசனுவான் அன்றியும், மைந்தர்களுக்கும், வெகு தனங்கள் சேர்த்து வைப்பவனுமாவன். எ று. 792

வேறு

கோல லாபக் குறிசில் வியத்துற
மேல்வி யத்தனம் மேவு தனத்துற
ஆலு மேதனத் தாதி பலமறச்
சால மன்னர் தனங் கொள்வர் தண்டமாய்.

இ-ள். லாபாதிபதி வியத்தானத்திலும், வியத்தானத்ததிபதி தனத்திலும் இருக்க, அத்தனுதிபதி பலமற்றிருக்க, மண்டலத்தரசர்கள் கண்ட பணத்தைத் தண்டமாகக் கைக்கொள்வார்கள். எ-று. 793

மாய்வி யத்தனும் வந்து தனத்துற
ஏய்த னுதி வியந்தனி லேயுற
நேய்சென் மாதி நிரிக்கண மன்றினெய்
தூய்த னங்க ளெல் லாந்துரை கொள்வரே.

இ-ள். பன்னிரண்டாமிடத்ததிபன், இரண்டாமிடத்திலிருக்க, இரண்டுக்குடையவன், பன்னிரண்டிலிருக்க, லக்கினுதிபதி திரேக்காணமில்லாதிருக்கில், பொன்பொருளையெல்லாம், மன்னனுகிய அரசன் கைக்கொள்வான். எ-று. 794

வேறு

கொள்ளு மிரண்டா மதிபதியுங் குலவு நவாங்கி சாதிபனும்
மெள்ளக் கூடிப் பலமறவு மெய்யா திபனுந் துர்ப்பலமாய்
உள்ளி யிருக்க வவன்றேடு முடமைப் பொருள்க ளுள்ளவெல்லாம்
கள்ள ராச ரக்கினியுங் கலந்து கொள்வர் கண்டாயே.

இ-ள். தனுதிபதியும், நவாங்கிசாதிபதியும், கூடிப் பலமற்றும், உடல்காரகனுகிய சந்திரனும், திடமற்றுத் துர்ப்பலமாயிருக்க, அவன் மெள்ளத் தேடியளவும் உள்ளதுமான பொருளகளை எல்லாம், கள்ளர்களும் அரசாளும் வள்ளல்களும் கைக்கொள்வார்கள் அக்கினியாலும் மிக்க நட்டமாகும். எ-று. 795

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வேறு

கண்ட பன்னிரண் டாமிடக் காவலன்
கொண்ட லக்கின மேழிற் குடி கொள
மண்டு பொன்னணி தானிய மாறிடும்
கெண்டை போல்விழிக் கிஞ்சுக வஞ்சியே.

இ-ள். கெண்டை மீன்போன்ற கண்ணையும், கிளிபோன்ற மொழியையுமுடைய பெண்ணே ? பன்னிரண்டுக்குடையவன் ஜென்மம், ஏழாமிடங்களிலிருந்தால், பொன்னுபரணங்களும், தானியங்களும் இழந்துவிடுவன். எ-று. 796

வஞ்சி யேபத் ததிபதி பாவனாய்
விஞ்சி யேபல னன்றிவி யத்தினில்
அஞ்சி யேயைம்ப தாம்வய தாயவன்
தஞ்ச மான தனங்கள் வழுவுமே

இ-ள். பெண்ணே? பத்தாமதிபன், மெத்தப்பாவியாய், பலமில்லாமல், பன்னிரண்டில் இருக்க, ஐம்பது வயதில் செல்வத்தை யிழப்பவனும்.

வே று

வழுத்திய பன்னி ரண்டா மனைக்குமன் பாவ னாகி
அழுத்திய வவனைப் பாவ ரணுகியும் பார்த்து நிற்க
முழுப்பொலாப் பாவ சிந்தை முயற்சியா லவன்பொன் னெல்லாம்
இழுக்குறுந் தொழிலுள் ளார்க்கே யிந்தவன் கீர்த்தி யேற்பன்

இ-ள். பன்னிரண்டாமிடதத்திபன் பாவியாகி அவனைப் பாவிகள் கூடியும், பார்த்துமிருந்தால் பாவசிந்தனையான கெட்ட முயற்சியால் அவன் திரவியங்களையெல்லாம் இழிதொழிலுடையவர்களுக்கு கொடுத்து, கீர்த்தியுள்ளவனுவான். எ - று. 798

ஏற்கவே பன்னி ரண்டி லிரணியன் வெள்ளி தூய
தீர்க்கசந் திரன் பொல் லாரைச் சேரா த புதனிந் நால்வர்
மார்க்கமாய் கூடிற் றன்ம வகையினாற் செலவா மென்று
ஏற்கநாற் சுருதி வல்ல வேதிய ரோதி னாரே.

இ - ள். பன்னிரண்டாமிடத்தில் தன்னிகரில்லாக் குரு சுக்கிரன், சுபசந்திரன் பாவர்களைச் சேராத புதன் ஆகிய நால்வருங் கூடியிருக்கில் தன்மவகையால் பொன்பொருள் செலவாகுமென்று மேதினியில் நாலுவேதங்களுங் கற்ற வேதியர்கள் சொன்னார்கள். எ - று. 799

ஓதிய பன்னி ரண்டா மதிபனோ டுற்ற பாவர்
நீதியா நல்லோர் வீட்டினிற்கினல் லோரைக் கூடில்
தீதிறப் பலவா னாகத் திகள்வியத் ததிபன் ரெண்டில்
போதவே செம்பொன் றேடிப் புதைப்பன் மற் றொருவர்க்கீயான்.

இ - ள். பன்னிரண்டா மிடத்ததிபனோடு சேர்ந்த பாவர்கள் நல்லோர்களுடன் கூடினாலும், நல்லோர்கள் வீட்டிலிருந்தாலும், பன்னிரண்டாமிடத்ததிபன், இரண்டாமிடத்தில் திரண்ட பலவானாய் நிற்கத் திரவியஞ் சம்பாதித்து வேறொருவருக்கு மீயாமல் புதைத்துவைப்பான் எ-று. 800

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆனதோர் பாக்கி யாதி தனுதி யைந்தாமிடத்தும்
ஊனமில் லைந்தா மாதி யொன்பதி லிரண்டி னிற்கத்
தானமிம் மூன்று பேரு மிலக்கினந் தன்னி னிற்க
ஈனமி லவன்பொன் னெல்லாங் கடன்கொடுத் திழந்து போவன்.

இ - ள். இரண்டு ஒன்பதுக்குடையவர்கள், முரண்டாய் ஐந்திலி ருந்தாலும், ஐந்தாமிடத்ததிபன் இரண்டு' அல்லது ஒன்பதில் இருக்க, அல்லாமல் தனபஞ்சம பாக்கியஸ்தானத்துக் குடைவர்கள், லக்கினத்தி லுமிருக்க குற்றமில்லாது பெற்று வளரும் உடன் சம்பாதித்த திரவிய மெல்லாம், கடன் கொடுத்து, திருப்பவும் வாங்காமல் இழந்து விடுவான் எ - று 801

வன்புறு மிரண்டா மாதி மார்த்தாண்ட னுடனே கூட
இன்புறு வியத்தா னுதி யினியான் டிடத்தி னிற்கத்
துன்புறு மட்ட மத்தி லாபாதி சூழ்ந்து நிற்கப்
பொன்பல வெல்லாஞ் சேதம் போய் விடும் புகழு மில்லான்.

இ - ள். இரண்டாமிடத்ததிபன். சண்டனுடன் கூடியிருக்க. பன்னி ரண்டாமிடத்ததிபன் இரண்டாமிடத்தில் இருக்க, எட்டாமிடத்தில், பதி னென்றுக்குடையவனிருக்கத், திரவியங்களெல்லாஞ் சேதமாய்விடுவ தோடு கீர்த்தியில்லாதவனுமாவன் எ – று 802

வேறு

புகழும் வெள்ளியும் பொன்னும் பிறைதனை
மகிழ நோக்குற மந்தன் றுலாத்துற
நிகழும் லோபத் தனமுடை னேமியோர்
இகழ வேயொரு காசொன்று மீவிலான்.

இ - ள். லோலகிய சுக்கிரனும், பாலனுகிய குருவும், ஆலனுகிய சந் திரனைப்பார்க்க நீலனுகிய சனிதுலாத்திலிருக்க உலோபகுணமுடையவ னுய் உலகத்தார் இகழ, ஒருகாசும், வரும்யாசகருக்குக் கொடுக்க மாட்டான் எ-று. 803

ஈத லீவ தெவர்க்கென் றுரைப்பது
ஓது மொன்பதாம் வீட்டுக் குடையவன்
சாதி வர்க்கத் தவர் தமக் கேநிதி
வாதி யாமன் மகிழ்ந்து வழங்குவன்.

இ - ள் ஒன்பதாமிடத்ததிபன், அன்புடன்தந்தை, எந்தசாதி வர்க்கம் பலம்பெற்றுனே, அந்தவர்க்கத்தவர்களுக்குத் தன் செல்வத்தை, வாதனையன்னியில் கொடுப்பவனும். எ-று. 804

வேறு

ஓது கதிருந் தேய்பிறையும் கூடி வியத்தி லுறத் தனத்தை
நீதியரசர் கைக்கொள்வர் நிலவுங் குருவும் விறத்திலுறும்
போது தனங்கண் மிகத்தேடிப் பொருந்துந் தன்மாம் புரிந்தருளி
மீதி சிறிது தனமிருக்க வாழ்வன் புவியில் வெகுகாலம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ - ள். விருச்சிகஞகிய சூரியனும், அமரபட்சத்து அரிச்சிகஞகிய சந்திரனுங்கூடி பன்னிரண்டிலிருக்க, இவன் திரவியத்தை. அரசர்கள் கைக்கொள்வார்கள். அரிச்சிகஞகிய சந்திரனும், புரிச்சிகஞகிய குருவும், பன்னிரண்டிலிருக்கில், பொருள் சம்பாதித்து அற்புதமாக, உத்தம தன்மஞ்செய்து, சொற்ப செல்வத்தோடு பூமியில் வெகுகாலம் வாழ்வான். எ - று. 805

வேறு

காலமாம்வியந் தன்னிலங் காரகன்
சால நிற்கத் தனித்துங்கண் ணேக்குறில்
ஞாலமீதிற் புதைத்திடு நற்பொருள்
வாலை கேடெரி யாமன் மறக்குமே.

இ - ள். பன்னிரண்டாமிடத்தில் பாணியாகிய செவ்வாயிருக்க, அல்லது தனிமையாய்ப்பார்க்கப் பூமியிற் புதைத்து வைத்திருந்த பொருளைத் தாமிதமாய்வைத்த இடந்தெரியாமல் நித்தம்பார்த்தும் புரியாமல், மொத்தவருத்தமாய்த்திரும்பஎடுக்கமுடியாமல்மறந்துவிடுவான். எ - று. 806

பன்னிரண்டாம் பாவம்

சம்பூர்ணம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கர்ப்பதானமறிய.

கர்ப்பத்தானலக்கினத்தில் கிளரும் பலன்கள் புரவலனுங்
கர்ப்பத்திரிகோணத்திருக்கக் கருவிலுதித்ததானுகும்
இர்ப்பச்சசிக்குஞ்சூரியற்கு மேழிற்சனிசெவ்வாயிருந்தால்
பொர்ப்புநிறையும்புருடனுக்கும் பூவை தனக்கு நோய்வருமே.

இ--ள். கர்ப்பந்தங்குகின்ற லக்கினத்தாற் சொல்லும் பலன்களாவன புரிச்சிகனுகிய குரு, கர்ப்பலக்கினத்திற்குத் திரிகோணங்களிலிருந்தால், கருவிலுற்பத்தி ஆணுகும், அமரபட்சத்து அரிச்சிகனுகிய சந்திரனுக்கும், விரிச்சிகனுகிய சூரியனுக்கும் ஏழாமிடத்திற் கரிச்சிகனுகிய சனி, எரிச்சிகனுகிய செவ்வாயிருந்தால் ஸ்திரீ புருஷர்களுக்கு சீக்குண்டாம். எ-று. 807

வருஞ்சூரியற்குமுந்நான்கி லிரண்டின் மந்தன் செவ்வாயும்
தெரிந்தே கூடும்வேளையினிற் சேர்ந்தாற்கரிட்டஞ்செழுமதிக்கும்
பரிந்திரண்டின் முந்நான்கிற் பாங்குபாதன்குசன்கூடி
இருந்தபோது புணர்ந்திடினே யேழைக்கரிட்டமெய்திடுமே.

இ-ள். பருதியாகிய சூரியனுக்குப் பன்னிரண்டில் மிருதியாகிய சனியும், குருதியாகிய செவ்வாயும் கூடியிருக்கின்ற காலத்தில் கூடினுல் ஸ்திரீ பூமான்களுக்கு தோஷமுண்டாகும். இருதியாகிய சந்திரனுக்கு, இரண்டு பன்னிரண்டில் நீலனுகிய சனியும், வேலனுகிய செவ்வாயும் கூடியிருந்த காலத்தில் (கூடினுல்) பெண்ணுக்குத் தோஷமுண்டாகும். எ-று. 808

எய்தியிளைத்தமதிதனக்கு நான்கில்வியத்திலிரவிகுசன்
வைதிக்கூடிலிருக்கிலந்த மாதுக்கரிட்டம்புணர் காலை
செய்திமதிக்கோரிருபுறமுந் தீயரிருக்கத் திரிக்கரிட்டம்
உய்துமுதயத்தாண்கிரக மாணுங்கிசையிலுறவாணும்.

இ--ள். தேய்பிறைச் சந்திரனுக்கு நாலுபன்னிரன்டில சேயும், ஞாயிறுங் கூடியிருக்கக் (கூடினுல்) அந்த ஸ்திரீக்குத் தோஷமாம். அக்காலையில் பக்கிரனுகிய சந்திரனுக்கு இரண்டு பக்கமும் பாவலர்களிருந்தால் பெண்ணுக்குத் தோஷமாம் கூடும் லக்கினத்தில் ஆண் கிரகமிருந்து ஆணுங்கிஷம்பெறின் உற்பத்தியாகுஞ் சிசு ஆணும். எ-று. 808

(பெண்கிரகமிருந்து பெண்ணுங்கிஷம் பெறின் பெண்ணும்.)

ஆனமதியின்கலைக்குப்பெண் ணுகுங்கடிகையைந்துக்குள்
தானுங்குறையாதிடிற்சீவன் றன்னுற்குறையா திருந்திடுமே
தேனின்மொழியாயிரவிகலை செல்லிற்செல்வனப்போது
ஊனங்கடிகைசென்றபடி யுயிருண்டொன்பாருயர்வோரே.

இ-ள். கெர்ப்பந்தரிக்குங் காலத்தில் சந்திரகலை நாழிகை ஐந்துக்குள், உற்பத்தி பெண்ணும் குறைந்திருந்தால் ஆயுள் குறைந்த குழந்தையும், கூடியிருந்தால் ஆயுள் நிறைந்த குழந்தையும் கர்ப்பத்திலுண்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

டாகும். சூரியகலை ஐந்து நாழிகைக்குள் உற்பத்தியாகில் ஆணும். ஆயுளும் மேற்சொல்லியபடியாம் என்று கணிதவல்லோர்கள் சொல்லுவார்கள். எ-று. 810

உயரும் பவனனெ திராகிலுபயமாகுமிருபுரமும்
பெயரப்பாவர்சூழிபுகுதப் பெற்றதலியாம்பின்னுமவர்
உயரமளவேயுருக்காணு முபயருதரமுறமலத்தின்
பெயருந்தகைமைதனைப்போலிப் பிள்ளைக்குணமும்பெற்றிடுமே.

இ-ள். கெர்ப்போற்பத்தி லக்கினத்திற்கு ஏழாமிடத்தில் ஏழ்பரியோனிருந்து இரண்டுபக்கத்திலும் லக்கினத்திலும் பாவர்களிருக்க,அலிப்பிள்ளைப் பிறக்குமாம். லக்கினத்தில் நின்ற கோளின் பருவப்படி உருவமுள்ளதாம். ஸ்திரீ பூமான்களின் உதரமாகிய ஆறுக்குடையவர்கள் கெர்ப்பதானத்திற் கூடியிருக்கில், மலத்துக்கொப்பாகிய கெட்ட குணமுள்ள பிள்ளை உற்பத்தியாம். எ-று 811

பெண்கள் ஜாதகம்.

திருவனைய மடவார்களம்புவியின் மீது
சனித்தபல சாதகத்தின் திறமை கூறும்
கருவுதய காலலக் கினஞ்சசிலக் கினமுங்
கண்டுவடி வுடனிறமுங் கருதியிட வேண்டும்
மருவியசத் தமராசி யாலவடன் குணமும்
மகிழ்நர் குணமுந்தெரிந்து வழுத்தலுமேவேண்டும்
உருவதய லக்கினத்திந் திருக்கிலழ குள்ளார்
ஒரேழிற் சசியுறப்பர்த் தாவழகுள் ளானே.

இ--ள். உருவத்தில் திருவனைய பருவமுள்ள பெண்கள் பூதலத்திற் பிறந்த பலன்களை ஜாதகரீதியாய்ச் சொல்லுமிடத்து ஜெனனலக்கினம் சந்திரா லக்கினம் இவ்விரண்டையும் தெரிந்து திரண்ட வடிவுநிறம் முதலியவைகளை நிதானிக்க வேண்டும். ஏழாமிடத்தால் ஜாதகியின் குணமும், கணவன் குணமும். தெரிந்து சொலல வேண்டும். உதய லக்கினத்தில் சுகாதாரனுகிய சந்திரன் இருந்தால் அழகுள்ளவளாம். ஏழில் ஆலோனிருந்தால் பத்தா அழகுள்ளவனும். எ-று. 812

உள்ளபிறை லக்கினமுஞ் சன்மலக் கினமும்
உறுமிரட்டை யாடல்வடி வுடையமயி லாகும்
தெள்ளியவம் மனையிரண்டும் நல்லோர்கள் காணில்
திரளாகப் பணியணிவள் செகத்ததிரு பியுமாம்
கொள்ளுமிரு மனையொற்றை யாகிலாண் சொரூபி
கூறுநல்லோர் கண்டிடினற் குலஞ்செல்லங் குலவும்
கள்ளமுறும் பாவரந்த ராசியிரண் டினிலே
கலந்திருக்கிற் கண்டிடிற்பொல் லாப்பாவக் கன்னி.

இ-ள். ஜென்ம லக்கினமும், சந்திரா லக்கினமும் இரட்டை ராசியாகில் அழகுள்ளவளாம். சுபர்கள் மேற்சொல்லிய இரண்டு லக்கினங்களையும் பார்த்தால், ரதிருபத்திலும் அதிருபமும் திரளான ஆபரணமுமுடையவளுமாவள் ஒற்றை இராசியாகில் ஆண் சொருபமாம் சுபர்கள் பார்வைபெற்றால் நற்குலமும் செல்வமுமுடையவளாம். பாவர்கள் மேற்சொன்ன ராசி இரண்டிலுமிருக்கப் பாவர்கள் பார்வை பெற்றாலும் பொல்லாத பாவங்களுள்ள பெண்ணாவள். எ - று. 813

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கன்னிகேள் சன்மத்திற் பிறைசுங்க ளிருக்கில்
கமழ்பெருமை யுடன்சுகியாய்க் காசினியில் வாழ்வான்
உன்னுமுத யத்திலிருந்தும் புதனுமே கூடில்
உணர்வள் பல கலைபோகி யோதியநற் டிணத்தாள்
இன்னஞ்சன் மந்தன்னில் புதனுஞ்சுக் கிரனும்
இருந்தாக்கால் ஞானியதி ரூபியினி துரைப்பள்
மின்னுமொரு மூன்றகத்திற் சுபக்கோள்க ளிற்கில்
வெகுதனநற் டிணந்தயவு விரவுசுக முள்ளாள்.

இ - ள். தன்னிகரில்லாக் கன்னியே கேள் ஜென்ம லக்கினத்திற் சோமனாகிய சந்திரனும், காமனாகிய சுக்கிரனும் இருந்தால் வாசனையும் பெருமையும் பொருந்தி சுகியாய்ப் பூமியில் வாழ்வாள். ஆலோனும் மாலோனும் இருந்தால் பலகலை யறிபவளும், நற்குணமுள்ளவளுமா வள். சக்கிரனாகிய:சுங்கனுமிருந்தரல் ஞானியும் அதிரூபியும் இனிமை யான வார்த்தை பேசுபவளுமாவள் மூன்றாமிடத்தில் சுபக்கிரகங்கள் நின்றால் மிருந்த செல்வமும் நற்குணமும் தயவும் பொருந்தி சுகமுள்ள வளுமாவள். எ - று. 814

உள்ளபல பாவரெட்டி விருந்தக்கால் விதவை
உளதாவ தென்றென்னி லோரெட்டா மதிபன்
தெள்ளியவங் கிசைக்கிறைவ னஷ்டகவர்க் கத்தில்
சேர்வருடமெத்தனையோ வத்தனையாண் டதனில்
மெள்ளவித வையுமாவ ளிரண்டினினல் லோர்கள்
மேவிலவள் கணவனைத்தான் விட்டுமுன்போய் விடுவள்
கள்ளமுறுந் தேளிடபங் கன்னியெனு மூன்றில்
கலைமதியு மேவிற்புத் திரரற்பங் காணும்.

இ - ள். கெட்ட பாவிகள் எட்டில் இருக்க, விதவையாவள். அப்படி யாகுங்காலமெதுவென்னில், அட்டமாதிபன் அங்கிஷாதிபனுடைய அட்டவர்க்கத்திற்சேருகின்ற காலம் எத்தனையோ அத்தனை வருஷத்தில் விதவையாவள். குடும்பத்தில் சுபர்கள் நிற்கில் கணவனைவிட்டு முன்னே இறந்து விடுவள். விருச்சிகம் ரிஷபம் கன்னி ஆகிய இம்மூன்றில் அரிச் சிகனாகிய சந்திரனிருக்கில் புத்திரரற்பமாம். எ - று. 815

காணியாஞ் சனியுமே பலத்திருக்க வேதான்
கணக்கன் மதி பிருகீனக் காரரகத் திருக்க
ஆணியந்த ராசியொற்றை யாகவுமே சென்மம்
அடுக்கமற்றோ ரொற்றைகளி லன்புடனே யிருக்க
நீணிலத்திற் பிறந்தாடன் புருடனுக் கோ ரரசாய்
நிருபதியாய்ச் சுவாமியாய் நேசமுட னிருப்பள்
பேணியதோ ரேழிற்றீக் கோளுமும் மூன்றிற்
பெருமையுள்ளோ ருறச்சந்நி யாசிப்பெண்ணவள்.

இ - ள். அக்கிரனாகிய சனி பலத்திருக்கச் சக்கிரனாகிய புதன், பக்கிர னாகிய சந்திரன், சுக்கிரனாகிய சுங்கன் இவர்கள் மூவரும் பாவர்கள் வீட்டி லிருக்க, ஆண் இராசியாகிய ஒற்றை லக்கினம் ஜெனனமாக. லக்கினாதிப னும் ஒற்றை இராசியிலிருக்க, மற்றக் கிரகங்களும் ஒற்றை ராசியிலிருக்க ஜெனனமாவள். தன் கணவனுக்கு அரசியாகியும் தெய்வத்தன்மை பெற்று பிரியமுடன் வாழ்வாள். ஏழாமிடத்திற்பாவர்களும் அதற்கு மும் மூன்றாமிராசிகளிற் சுபக்கோட்கள் இருக்க சன்னியாசம் பெறுவள் எ - று. 816

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆசமரட்டை ராசிதனிற் குருசெவ்வாய் புந்தி
அதிபலமா யிருந்தக்கா லவனியின்மேற் குலமும்
வாகுடனே பலகலைக ளறிந்திடுநற் குணமும்
மாதருக்குண் முக்கியமா மயிலுமா குவளே
சேகரமாம் பரிதிமதி கூடியே நிற்கிற்
றெரிந்து பல விதத்தொழிலே செய்துசீ விப்பள்
மோகமுடன் கதிர்செவ்வாய் கூடியுமே நிற்கில்
முழுப்பாவி யாவளென்றே மொழிந்திடுவர் பலரும்.

இ-ள். இரட்டை ராசிகளில் சுருதியாகிய குருதியாகிய செவ்வாய், நிருதியாகிய புதன் பலத்திருந்தால் உத்தம குலத்தும் அழகுபெற பல சாஸ்திரங்களறிதலும். நற்குணமும் மாதர் திலகம்போன்று மயிற்சாய லுடையவளாம் விரிச்சிகனுகிய சூரியன் அரிச்சிகனுகிய சந்திரன் கூடி நின்ருல். பலவகையான தொழிற்செய்து ஜீவிப்பவளாம். பிங்கலன் நின்ருல் முழுப்பாவியுமாவாளென்று தெரிந்து பெரியோர் பலரும் அறிந்துசொல்லுவா. எ-று. 717

வேறு சந்தம்

பலரும்பணி கதிர்புந்திகன் மருவும்பொழு தெழில்சேர்
பலர்சிந்தனை யறிவாள்புகழ் பரவுஞ்சுக சரீரி
அல ங்கதிர் குருவொன்றிடி லதிவஞ்சனை யான்முன்
அணுகுந்தொழி லறியாள்பிற கறிவாள்வரு கருமம்
மலரம்புய வதிபன்பிரு குடன் வந்துறின் மற்போர்
வனையுங்கொடி யவளாயுத வகையாநிதி தேடும்
சலமுண்டிடு கதிர்மந்தனை யணுகும்பொழு துலகிற்
றகுபித்தளை செம்பொடுத ராவிற்றுயி ருய்வாள்.

இ-ள். இரட்டையிராசிகளில், மித்திரநாகிய சூரியன், சித்திரனுகிய புதன் கூடியிருந்தால், பலர்சிந்தனைகளையறிபவள். புகழுள்ள சுகசரீர முடையவள். சூரியாகிய சூரியனும், பூரியாகிய குருவுங் கூடியிருந்தால், பாரில் அதிகவஞ்சனையுடையவள் காரியங்களை முன்னுல் அறியாமல் பின்னுல் அறிபவளாம். பங்கனுகிய சூரியன் நங்கயனுகிய சுக்கிரன் கூடியிருந்தால் சங்கையில்லாமல் மற்போர் செய்கிறவள், எங்கும் ஆயுதவகையால், சம்பாத்தியஞ்செய்பவள், மித்திரனுகிய சூரியன், மந்திரனுகிய சனி கூடியிருந்தால், பித்தளை செம்பு தரா இவைகளை விற்று ஜீவிப்பவளாம் எ-று. 818

உய்யும்மெரு தொடுகோலிவை யுதயம்மதின் மயம்
உறையங்குச திறையைத் திசை யுறுமங் கிசையாகில்
மையிந்திய குவளைச்செழு மலர் போலிரு கண்ணுள்
வகையுந்தொகை யறிவாள்சில யழி சாலவு ரைப்பாள்
எய்யுஞ்சனி திரையைத் தச மெனுமங்கிசை யெனில்
இருவோர்கண வோர்தாமுள ரென்னுமட வார்க்கே
மெய்யஞ்சொடு ரெண்டாமிரு வீட்டுக்குறை யிருவர்
மினிர்கேந்திர லாபத்துற வேவாகன முண்டாம்

இ-ள். மைதோய்ந்திலங்கும் குவளை மலர் போன்ற இருகண்களை யுடைய பெண்ணே, ஜெனனலக்கினம், இடபம் துலாமாகி, அதில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆலோனுகிய சந்திரனிருக்க, வேலோனுகிய செவ்வாய் மூன்றில் பொருந்திய அங்கிஷமாகில் பிணக்கில்லாத கணக்கு விவரங்களை யறிந்து, இணக்கமாய்ச் சிலஞாயங்களைத் தெறிந்துபேசுபவளாம். நீலனுகிய சனி பகவான் மூன்று பத்தாமிடத்தில் அங்கிசமாய் இருக்கில், இரண்டு கணவன்களை யுடையவளாம். ஐந்துஇரண்டுக்குடையவர்கள் கேந்திரங்களிலாவது லாபத்திலாவது இருக்கில் வாகனமுடையவனுமாம். எ-று. 819

உண்டாகிய வைந்தாமிறை யுச்சக்குரு வாகி
உணர்வாலிப யவ்வன்ன வுருவும்முள னுவன்
நண்டாகிய மனையுற்றிடி னுரிக்கிசை கணவன்
நரவாகன முளனுகுவ னவில்சுக்கிர னுடல்
மிண்டாகிய வெள்ளிக்கிசை பல்லக்குள வேந்தன்
விரவுஞ்சனி யாகிற்பரி வெண்சத்திர முள்ளான்
கொண்டாடிய கன்மாதிபன் குருசுக்கிர னுகில்
கூறைந்தினி லேனின்ற கொழுகன்சத சீவி.

இ-ள். ஐந்தாமிடத்ததிபன் அந்நனுகிய குருவாகி, முந்தக் கற்கடகத்தில் உச்சமாகியிருக்க, ஜாதகியின்கணவன் வாலிபமும் அழகும் பொருந்தியவனும், பெண்ணுக்கிசைந்தவனும், பல்லக்குடையனுமாவன்' சந்தனுகியசுக்கிரனுல் வெள்ளிப்பல்லக்குடை ய!அரசனுவான், மந்தனுகிய சனியாகிய வெண்குதிரைகளும், வாளாயுதமுள்ளனுவான் பத்துக்குடையவள் புத்திரனுகிய குரு அல்லது நத்திரனுகிய சுக்கிரனுகில்' ஐந்தாமிடத்தில் நின்ருலும் கணவன் நூறுவயதுள்ளவனும். எ-று. 820

சீவித்திடு குருசுக்கிர னுருமனை சேரில்
தெரிவைக்கிசை கணவன் பிணி செறிமெய்யின னுவன்
பூவைக்குமுந் நான்கிற்குரு புரிசுக்கிரன் மேவில்
போந்தேவிடு மற்பாயுசு புல்லாடல் மெய்யாவன்
பாவைக்குறு மைந்தாமிறை பரிவாயினி யவராய்ப்
பண்பாகிய வொன்பான்மனை பற்றப்பயிலொன்பான்
ஏவுற்ற பனைக்காதியி லாபத்துறி னின்ருேன்
எய்தும்பொரு ளுண்டானவை யெல்லாமிவ ளுக்காம்

இ—ள். பூரியாகிய குருவும், மாரியாகிய சுக்கிரனும், ஆருமிடத்திலிருந்தால், ஜாதகிக்குப் பொருத்தமான கணவனும், தேகத்திற்பிணியுமுள்ள வனுமாவன். பன்னிரண்டாமிடத்தில் மேற்கண்ட குரு சுக்கிரன் நின்ருல்கணவன் அற்பாயுளுடையவனும். ஜனனலக்கினத்திற்கு. ஐந்தாமிடத்ததிபன், சுபனுயும், மித்துருவாயும், ஒன்பதாமிடத்தோன், இரண்டாமிடத்துக் குடையவனுய், இலாபஸ்தானத்தில் நிற்கில் பிதிர்பாக்கியங்கள் பூராவும் ஜாதகிக்கு உண்டாம். எ-று. 821

ஆமெட்டதி பன்காரியொ டனுகிப்பதி னென்றெட்
டமரிற்சத வயதாமவ ரத்தங்கத மாயின்
போமற்பம தாயாயுசுபொன்றும்விய மன்னன்
புரிகைந்திர லாபத்திர கோணப்பதி புக்கி
தாமெத்தனை பேரோடுறி லாமத்தனை மனையாள்
தரிலற்றிடு வியநற்பதி சரமேலச லூரில்
நீபத்திர மாகிற்றம தூரத்தக மணமே
நிறைவாமுப யம்மென்னிலோ நீடும்மதி தூரம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ - ள். ஜாதகி ஜென்மலக்கினத்திற்கு அட்டமாதிபதி சனியோடு கூடி, எட்டு பதினோராமிடத்திலிருக்க (கணவன்) நூறு வருஷம் ஜீவித்திருப்பான். இவர்கள் பகை நீசம் அத்தமனமும், பாவசம்பந்தமும் பெற்று நிற்கில், கணவனுக்கு ஆயுள் அற்பமாம். பன்னிரண்டுக்குடையவனும் குருவும், கேந்திரம், லாபம், திரிகோணம் பெற்று நிற்கில் அவர்களோடு கூடிய கிரகம் எத்தனையோ அத்தனை தாரதோஷமுள்ள கணவனும். பன்னிரண்டாமிடம் சரவிராசியாகில் அயலூரிலும், திரவிராசியாகில் உள்ளூரிலும் உபயவிராசியாகில் அதிக தூரத்திலும் கல்யாணமாகும். எ-று. 222

வேறு.

தூரமுறும் பன்னிரண்டாமதி பன்ருனும்
சுபக்கோளாய்ப் பலவானுய்ச்சுகவானுயின்
பாரமனே மேன்மெத்தை மாடங்கூடம்
பரிவுடனே யுண்டாமப்பதியினிலே வாழ்வள்
சேருமுதயந்திரமா யேழைந்தாம் வீட்டில்
சேர்ந்தவரெத் தனையுண்டத்தனைசே யுண்டாகும்
பாரறியச் சென்மம்வா மியமாகின் மூன்ரும்
பதியுற்ரு ரெத்தனையப் பாலருள ராகும்.

இ-ள். பன்னிரண்டாமிடத்ததிபன் சுபனுய், பலம்பெற்று சுகவானுமானுல், மேல்மெத்தை, மாடகூடம் உண்டாகி அதில் வாழ்பவளாம், லக்கினம், திரவிராசியாகி ஐந்து ஏழாமிடங்களிற்சேர்ந்த கிரகங்களெத்தனையோ, அத்தனைபுத்திரர்களுற்பத்தியாகும், வாமியாகிய மூன்றில் எத்தனை கிரகங்களுளதோ, அத்தனை புத்திரருண்டாம. எ-று. 823

தாகமுடனேழைந்தா மூன்றதிப ருடனே
சனிகூடி லேகுழவி தனக்கற்ப வயதாம்
ஆகமகி ழொன்பதா மதிபதியா றெட்டில்
அமரிற்சூத் திரர்தமக்குற் பவித்திடுசேயாகும்
ஏகும் வியத் தினிலிருக்கில் விப்பிரர்சே யாகும்
ஏழிலொன் பான் மனைக்கதிபனிரவியுடன் கூடில்
மாகவிய மெட்டாறைப் பற்றிலொன்பான் மனையோன்
பரிந்திருந்த வீட்டோனப் படியிருக்கில் விதவை.

இ-ள். ஏழு ஐந்து மூன்ருமிடத்ததிபருடனே, நீலனுகிய சனி கூடில், குழந்தைகளுக்கு, அற்பவயதாம், ஒன்பதாமிடத் ததிபதி ஆறு எட்டாமிடத்திலிருக்கில் சூத்திரருக்கு உற்பத்தியான குழந்தையாம். பன்னிரண்டில் இருந்தால் பிராமணற் குற்பத்தியாகிய மகவாம், ஒன்பதாமிடத்ததிபன், சூரியனுடன்கூடி ஆறு எட்டுப் பன்னிரண்டில் இருந்தாலும், ஒன்பதாமிடத்ததிபன், நின்ற வீட்டுக்குடையவனும், மேற் சொல்லியபடி, ஆறு எட்டு பன்னிரண்டில் இருந்தாலும் விதவையாவள். எ-று. 824

வையகமென் ஞென்பதா மாதிபனே நல்லோர்
மனையிலுற மத்திமையிலேவிதவை யாவள்
செய்யவொன்பானுதியுற்ச னுகிப்பா வனுமாய்த்
தெரிவைசுமங் கலியாகித் தீர்க்கவய துள்ளாள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

துய்யசன்ம மொன்தா மாதியிவிருவர்
  தொடர்ந்துமாருகநிற்கிற் ரேன்றலுடனிறப்பள்
வெய்யதோ ரெட்டினிற்சந்திரபகவா னிருக்கில்
  விதவையெனப் பேர்படைத்து மேதினியிற்றிரிவள்.

இ-ள். ஒன்பதாமிடத்திற்குடையவன், சுபர் வீட்டிலிருக்க, நடு வயதிலே, விதவையாவள், ஒன்பாதாமிடத்ததிபன்; உச்சமாகிப் பாவனு யிருக்கில் சுமங்கிலியும் தீர்க்கவயதுள்ளவளுமாவள், ஜென்மம். ஒன்பது க்குடையவர்கள். கிரகமாறியிருந்தால், கணவனுடனிறப்பவளாம் அட்ட மத்தில் சந்திரனிருந்தால்,விதவையாகி, பூமியில் திரிவாள். எ-று 825

திரிசெவ்வா யிருமனையுஞ் சனனமதாயதனில்
  திங்களுற வேசெவ்வாய் திரிங்கிசாங் கிசமாய்
பரிவில்லாப் பாவிசனி திரிங்கிசாங் கிசமாய்ப்
  பாலரிலாளலதடுமைப் படுவளெனச் சொல்லும்
குருதிரிங்கிசாங் கிசமாகிற் பதிவிரதையாகும்
  குளிமேதை யங்கிசமா சாரமுள கோதை
விரிவெள்ளி யங்கிசைக்கு மெய்ய திரு பியுமாய்
  வெகுவயதாய்ப் பரபோகம் விரும்புமினியவளாம்.

இ-ள். மேடவிருச்சிகம் ஜென்மலக்கினமாய் அதில் திங்களாகியசந் திரனிருக்க, மங்கலனுகிய செவ்வாய், முங்கலனுகியசனி, திரிங்கிசாங்கிசம் பெற்று நிற்கில். புத்திரரில்லாதவளும், அடிமையுமாவள், தங்கலனுகிய குரு, திரிங்கிசாங்கிசம் பெற்ருல், பதிவிரதையாம், புங்கலனுகிய புதன் திரிங்கிசாங்கிசம்பெற்ருல், ஆசாரமுள்ளவளாவள், நங்கலனுகிய சுக்கி ரன் திரிங்கிசாங்கிசம் பெற்ருல் ரூபவதியும், அதிகவயதிருப்பவளும், பர போகம் விரும்புவளாயு மிருப்பவளாம். எ-று. 826

இனியவெள்ளி யிருமனையுஞ் சென்மமதாயதனில்
  இந்திருக்கச் செவ்வாயங் கிசமாயிற்கொடியாள்
சனியினங் கிசமாகிற் கணவனையும் விட்டே
  சஞ்சலமாய் வேருெவன்றனக்குப்பாரியுமாம்
தனிகுருவங் கிசமாகினற்குணமேயுள்ளாள்
  நாடுபுதனங்கிசத்தினுல் வகைஞானியுமாம்
கனிமொழியாள் சுக்கிரணங்கிசமாயிற்றன்சொல்
  கதித்தினியளாயிருப்பள் காசினியோர் போற்ற.

இ-ள். புடவியில், இடபதுலாம். ஜென்மலக்கினமாகிப்புரணியாகிய சந்திரனிருக்க, பரணியாகிய செவ்வாய் முரணியாகிய சனி. அங்கிஷம் பெற்ருல், கணவனைவிட்டு அன்னியபுருஷனுக்கு மனைவியாவள். இரணி யாகியகுருவங்கிஷமானுல் நற்குணமுள்ளவள் சரணியாகிய புதனங்கிஷ மானுல் ஞானியாவள். விரனியாகிய சுக்கிரனங்கிஷமானுல் சொற்திர முள்ளவளும் பூமியோர் போற்றும் படியா யிருப்பவளுமாம். எ-று. 827

போற்றுபுத னிருபனையுஞ் சன்மமதா யதனில்
  புனிதமதி யேயிருக்கப் பூசுதனங் கீசமாம்
ஏற்றமதாய் வேலைசெய்வள் சனிதன்னங் கிசையாய்
  இருப்பள் ...

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

நாற்றிசையென் னும்புதனங் கிசைதனக்கே ஞானி
நாடுசுங்க னங்கிசைக்கு நற்குணமு முள்ளாள்
தேற்றுகட கஞ்சென்ம மாய்த்திங்க ளிருக்கச்
செவ்வாயங் கிசமாகிற் சேர்வள்பலருடனும்.

இ-ள். மிதுனங் கன்னி லக்கினமாய், அதிற் சோமனுகிய சந்திர னிருக்கப் பூமனுகிய செவ்வாயங்கிஷமாகில், அதிகவேலைசெய்பவளும் தீமனுகிய சனியங்கிஷமாகில் அலிவடிவாகனுருப்பவளாம். சீமனுகிய குருவாங்கிஷமாகில் இனிமையாவள். சாமனுகிய புதனங்கிசமாகில், ஞானியாவள். காமனுகிய சுக்கிரனங்கிஷமாகில், நற்குணமுள்ளவளாம். கடகஞ் சென்மலக்கியமாய் அதிற் சந்திரனிருக்கச் செவ்வாயங்கிஷமாகில் பல புருஷரைச் சேர்வளாம். எ-று. 828

உடன்கடகஞ் சென்மமதா யதிலிருந்து மிருக்க
உயர்சனியங் கிசையாயி னுறுகணவன் றனையே
திடமுடனே கொல்வதற்குச் சினமாகி யிருப்பள்
சேர்புதனங் கிசைக்கேகிற் பத்தொழில்கள் செய்வள்
அடல்குருவங் கிசையாயிற் குணமினியள் வெள்ளி
அங்கிசையா கிற்சாது சாகியுமே யிருப்பள்
மடமயிலே கேளங் கிசையென் றுரைத்த வெல்லாம்
வருந்திரங்கி சாங்கிசையாய் மனதிற்கண் டுணர்வாய்

இ-ள். கடகம் ஜென்மலக்கினமாய், அதில் அரிச்சிகனுகிய சந்திர னிருக்க, கரிச்சிகனுகிய சனியாங்கிஷமாகில்' கணவனைக்கொல்ல நினைப்ப வளும், தெரிச்சிகனுகிய புதனங்கிஷமாகில், சிறப்பாகத் தொழில் செய்பவ ளும், புரிச்சிகனுகிய குரு வங்கிஷமாகில், இனிமையான குணமுள்ளவள் உரிச்சிகனுகியசுக்கிரனங்கிஷமாகில், சரதுவாகியுமிருப்பவளாம். இங்ங னம் சொல்லிய அங்கிஷமெல்லாம் திரிங்கிசாங்ஷையாக மடமயிலே, திட மாகமனத்திற் கண்டுணர்வாயாக. எ-று. 829

உணர்சிங்கஞ் சன்மமதா யதிலிருந்து மிருக்க
உயர்செவ்வா யங்கிசையா யுரைக்கிலநாசாரி
பிணிசனிசுங் கன்னிருவ ரங்கிசமே யாயின
பிறர்முகம்பார்ப் பாளரசன் பின்னுறுமங் கிசைக்கு
மணியரசர்க் கேதேவி தானுகி யிருப்பள்
மாட்சிபுத னங்கிசைக்கே சரீரவருத் தமதாய்
பணிபலவுஞ் செய்தொருவர்க் கேயடிமை யாகிப்
பரதவித்தே யிருப்பளெனப் பகருவர்தக் கோரே.

இ - ள். சிங்க லக்கினம் ஜெனனமாய். அதிற் சாந்தனுகிய சந்திர னிருக்க, சேந்தனுகிய செவ்வாயங்கிஷமாகில் அநாசாரமுடையவள். காந் தனுகிய சுக்கிரன், சோந்தனுகிய சனி இவ்விருவரின் அங்கிஷமாகில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பிறர்முகம் பார்ப்பாள். ஏந்தனாகிய குருவங்கிஷமாகில் அரசபாரியாயிருப்பள். பாந்தனாகிய புதனங்கிஷமாகில், சரீர பிரயாசையோடு பலவேலைகள் செய்து ஒருவர்க்கடிமையாகிப் பரதவிப்புடையவளாகுமென்று சோதிடவல்லர்கள் சொல்லுவார்கள். எ-று. 830

தக்கதனு மீனமவை யேசன்ம மாகிச்
சந்திரனப் பதியிலுறத் தான்குருசெவ்வாயின்
மிக்கதிரிங்கிசமே யாயிடினற் குணத்தாள்
வீறுசனி யங்கிசமேல் வெகுகாமி யாவள்
சுக்கிரனங் கிசையாகி லரோசிகமாம் புருடன்
தோளணைவள் சோமனார் சுதனமங் கிசைக்குப்
பக்குவமெய்ஞ் ஞானியாய்ச் சுபகர் மங்கள்
பண்ணுவளென் றேயுரைப்பர் பாரினினல் லோரே.

இ-ள். அச்சத்தைத் தரத்தக்க தனுசும், மச்சம் போன்ற மீனமும், ஜென்ம லக்கினமாக, அதிற் செச்சையாகிய சந்திரனிருக்க, விச்சையாகிய குரு, கொச்சையாகிய செவ்வாயின் அங்கிஷமாகில் நற்குணமுடையவள். முச்சையாகிய சனியங்கிஷமாகில் அதிகக்காமியாயிருப்பள் இச்சையாகிய சுக்கிரனங்கிஷமாகில், அரோசிகத்தோடு கணவனைக் கூடுபவள் பச்சையாகிய புதனங்ஷமாகில். பக்குவமுள்ள உண்மையான ஞானியாய்ச் சுபகர்மங்கள் செய்பவளுமாமென்று நல்லோர்கள் சொல்லுவார்கள் எ-று. 831

நல்லசனி வீடிரண்டும் லக்கினமா யதனில்
நாடுபுதன் றந்தையுறக் குசனாரங் கிசையேல்
அல்லலுறுந் தாதியாங் காரியினங் கிசமாய்
அவனியிற்கீழ்ச் சாதியரோ டணுகி மணந்திடுவள்
வல்லகுரு வங்கிசைக்கே பதிவிரதை யாவள்
மகிழ்வெள்ளி யங்கிசைக்கே மலடியுமே யாவள்
சொல்வரிசைப் புதனாரங் கிசமாயெப் போதும்
சுகமுடனே கணவனுடன் றேயுமனப் பரிவாள்

இ-ள். மகர கும்பம் லக்கினமாய், அதிற் சங்கலனாகிய சந்திரனிருக்க, மங்கலனாகிய செவ்வாயங்கிஷமாகில், துன்பமுள்ள தாதியாவாள் முங்கலனாகிய சனியங்கிஷமாகில், கீழ்ச்சாதியோடு சேர்ந்து கல்யாணஞ் செய்பவளாம் தங்கலனாகிய குரு வங்கிஷமாகில், பதிவிரதையாவள். நங்கலனாகிய சுக்கிரனங்கிஷமாகில், மலடியாவாள். புங்கலனாகிய புதனங்கிஷமாகில் எப்பொழுதும் சந்தோஷத்தோடு கணவனுடன் சுகமனுபவிப்பவளுமாவள். எ-று 832

பவோகச் சனிபுதனேழாமிடத்தினிற்கப்
பரில் குருவுக கேழ்வீடு பரவுசர மாயின்
திரிவளவள் பர்த்தாவெந் நாளும் வழி நடந்தே
திரராசிக் கூரைவிட்டுச் செல்லாம விருப்பன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வருராசி யுபயமாய்ச் சிலநாளூ ரினிலும்
வழிநடையிற் சிலநாளும் வருந்தியுமே திரிவன்
அரியேழாமிடத்திருக்கப் பாவருமே பார்க்கில்
அவன் மீதிற் கொழுநனுக்கன் பின்றியிகழ்ந்திடுவன்

இ-ள். மந்தன் புந்தனுகிய சனிபுதனேழிலும், அந்தனுகிய குருவுக்கு ஏழாமிடம், சரராசியாகில், கணவன், எக்கரலமும், வழிநடைச் சஞ்சாரஞ் செய்பவனும் திரராசியில், ஊர்விட்டுப்போராதவனும், உபயராசியாகில், சிலநாள் வெளியூரிலும், சிலநாள் உள்ளூரிலும் வசிப்பவனும், சந்திரன் ஏழாமிடத்தி லிருக்கப் பாவர்கள் பார்த்தால், அவள்மேல் கணவனுக்கு அன்பில்லாமல் இகழ்ந்து விடுவான், எ-று. 833

இடு செவ்வாய் கதிர்கூடி யெங்கேநின்ருலும்
இவளும்வா லிபந்தன்னிலமங்கலையே யாவள்
வடுவாகுஞ் சனிகதிரைக் கூடியுமே நிற்கில்
மன்னியதீக்கோன்பார்க்க வாலிபத்தினரைக்கும்
கொடுமையுள்ளோர் பலரேழா மிடத்திருக்கில் பார்க்கில்
கொழுநன்வாலிபத்திறப்பள் கொடியநல்லோர் கூடில்
சடுதியின்மீண் டொருவனுக்கே பாரியுமே யாகித்
தானிருக்க வேண்டுமென வேசாற்றல் வேண்டும்.

இ-ள் சேதியாகிய செவ்வாயும், சோதியாகிய சூரியனும் கூடி எங்கேயிருந்தாலும். வாலிபத்தில் அமங்கலையாவள் நிலனுகிய சனி காலனுகிய சூரியனைக்கூடி நின்று, அவர்களைப்பாவர்கள் பார்த்தால், வாலிபத்திலே, நரையுள்ளவளாம் பாவர்கள்பலரும்,ஏழாமிடத்திலிருந்தாலும்,பார்த்தாலும் கணவன் வாலிபத்திலிறந்து விடுவான் சுபர்களும் கூடியிருக்கில் இன்னெரு கணவனுக்குப் பாரியாப் இருக்கக் கூடியவளென்று சொல்லவேண்டும். எ-று. 834

வேண்டிடும்பா வக்கிரகம் பலன்களுமே யின்றி
விருமபுமேழிடத்திருக்கவ வரையுமே நல்லோர்
ஈண்டியே தான் பார்க்கிலக்கணவன் வேண்டர
திகழ்ந்தோட்டி விட்டிடுவ னேயின்னஞ் சொல்வாம்
நீண்டகுசன் குவள்யுந்தன் னைகிசத்தி னிற்க
நிகழ்த்துமிவர் மாருகி நிற்கிலுமவ் வீடு
பூண்டிடுமேழாமிடமே யாகிலவள் வேருேர்
புருடனையேயிச்சித்துப் போய்விடுவளென்ருர்.

இ ள். ஏழாமிடத்தில் பாவகிரகங்கள் பலமற்றிருக்கத்தாழாது சுபர்பார்வைபெற்ருல், அவளைக்கணவன் வேண்டாமென்று ஓட்டிவிடுவான், வக்கிரன் சுக்கிரன் தன்னுடைய வீடே அங்கிஷமாயிருக்க அல்லது இவ்விருவரும் கிரகமாறியிருக்க, அவ்வீடு, அவள் இன்னெருகணவனை விருப்பிப்போய்விடுவாள், என்றுமுன்னேர்கள்சொன்னுர்கள். எ-று. 835

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

என்றுமேழாமிடத்திற் சனிசெவ்வாய் சோமன்
இந்தமூ வருங்கூடி யிருக்கிலவம் போவள்
வென்றசனி செவ்வாயின் வீடேலக் கினமாய்
விரவுகுசனிங்கிசமாகச்சென்மந்தன்னில்
துன்றுமிருளகற்றுமதி சுக்கிரனுமிருக்கச்
சூழ்ந்துதீக்கோள் பலருந்தொடர்ந்துமே நோக்க
நின்றிடிலோ மலடியா மவளுமல டாயும்
நேமிதனிற் பலபேரை நேசித்தே சேர்வர்.

இ-ள். ஏழாமிடத்தில், விதிரனாகியசனி, உதிரனாகிய செவ்வாய், மதிரனாகிய சந்திரன் அந்த மூவருங் கூடியிருக்கச் சோரம் போவாள், நீலனாகிய சனி. வேலனாகிய செவ்வாயின் வீடு லக்கினமாகி வக்கிரனங்கிஷமாய் லக்கினத்தில் பக்கிரன், சுக்கிரன் இவர்களிருக்கப் பாவக்கிரகங்கள் பார்க்க, இருந்தால் மலடியாவதுடன் அவளும், அவளைப் பெற்ற தாயும், கவலையற்றுப் பூமியிற் காமியாம், பலரைச் சாமியாய்ப் பூசித்து நேசித்துச் சேர்வார்கள். எ-று. 836

சேருதய லக்கினவங் கிசத்துக்கோ ரேழில
செவ்வாயுஞ் சனியிருவர் சேர்ந்துமே நிற்க
நாரிபதந் தனிற்பிணிகொண் டிருந்துபர தவிப்பள்
நாடுமிவர் நல்லோர்கள் அங்கிசையி னன்றும்
பாரியதோ ரிடைதொடைகள் சோபனமுள் ளவளாய்ப்
பர்த்தாவி னிதயத்திற் பக்ஷமுற விருப்பள்
சாருதயந் தனக்கேழு சனிவீட தாகில்
தாலிதரிப் பவன்கிழவன் சற்குண மில்லானே.

இ-ள். உதயலக்கின வங்கிஷத்திற்கு இதமாகிய ஏழாமிடத்தில் உதிரனாகிய செவ்வாய் விதிரனாகிய சனி கூடியிருக்கப் பாதத்திற் சீக்குடையவளாய் பரதவித்திருப்பவளாவள் நல்லோர்கள் அங்கிஷையாகில் நன்மையான இடைதொடைகள் அழகுள்ளவளாய் கணவனை யெப்போதுஞ் சிந்தித்து மறவாமலிருப்பவளாம். ஏழாம்வீடு சனி வீடாகில் கிழவனுக்கு மணம்புரிவாள் சற்குண மில்லாதவளுமாவள். எ-று.

சற்குணஞ்சேர் லக்கினத்துக் கேழாகும் ராசி
தரைசுதன்வீ டாகிலவன் றன்னுடையங் கிசையால்
சிற்குணமா யவள்கணவன் ஸ்திரீலோலனவன்
செறிபிருகு ராசியா யங்கிசமே சேரில்
நற்குணஞ்சேர் சீமானு யழகுடைய னுவன்
நாடுபுத னங்கிசையாய் ராசியுமே யாகில்
சொற்கலைஞா னியுமாவன் சோமனுமே யாகில்
தோகைபல ருடன் கூடிச் சுகித்துவாழ்ந் திருப்பன்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள் ஜென்மலக்கினத்திற்கு ஏழாமிடம் நன்னிலத்தானுகிய செவ்வாய் விடும் அங்கிஷையுமானுல், அவள் கணவன் ஸ்திரீலோலனுவான். இச்சையாகிய சுக்கிரனுடைய விடாய் அவனங்கிஷமுமானுல், அவள் கணவன் அழகுள்ளவனும் சீமானுமாயிருப்பன் பச்சையாகிய புதனுடைய விடாய், அவனங்கிஷையானுல், அவள் கணவன் சாஸ்திரங்கள் கற்ற ஞானியாவன், செச்சையாகிய சந்திரனுடையவிடு சந்திராங்கிஷையுமானுல் அவள் கணவன் பல பெண்களைக்கூடிச் சுகித்திருப்பவனுமாவன். எ-று. 838

வேறு

இந்துவசுரகுருவிடனே யேழிலிருக்கக்கிழப்புருடன்
வந்தேபொல்லாரேழிலுற விதவையாவள் வாலிபத்தில்
நொந்தேகும்பந்தேண்மேடம் நுவலுஞ்சுருமீன் லக்கினமாய்
பந்திமதியம்புகர்கூடிப் பாவர்பார்க்கில் விபசாரி.

இ-ள். சோமனுகிய சந்திரன், காமனுகிய சுக்கிரனுடன் நேமமுடன் ஏழாமிடத்திலிருக்கக் கிழமான புருடனை மணமாலை சூடுவள். பாவர்கள் ஏழாமிடத்திலிருக்க,'வாலிபத்தில் விதவையாவள். கும்பம், விருச்சிகம், மேஷம், மகரம், மீனம் இவைகள் லக்கினமாக, உரிச்சிகனுகிய சுக்கிரன் அரிச்சிகனுகிய சந்திரன் கூடியிருந்து பாவர்கள் பார்த்தால் வியபிசாரியாவள். எ-று. 839

சாரவெட்டிற்பாவர்களுந் தானுமிருக்கவிரண்டதனில்
ஊருஞ்சுபர்களிந்திடவே யோங்குமரணஞ்சுமங்கிலியாய்
நேருமேழாமிடந்தானும் நிறைந்த புகரின்மனையாயின்
பாரோரறியவனுகூலப் பாவையாகுங்கண்டிரே.

இ-ள். எட்டாமிடத்திற் கெட்ட பாவக்கிரகங்களும், இரண்டாமிடத்தில், திரண்ட சுபக்கிரகங்களுமிருந்தால் சுமங்கலியாயிறப்பள் ஏழாமிடம், லோலனுகிய சுக்கிரன் வீடாய் இருக்கில் அனுகூலஞ் செய்கின்ற பெண்ணுவள். எ-று. 840

கண்டவேழாமனையுரைக்குங் கதிரோன்வீடாயிருந்திடவே
மிண்டேசொல்வானவள் கணவன் வினவும் பரிதியதிலிருந்தால்
கொண்டோனேட்டிவிடுவனெனக் கூறும் புதனின் மனையாயின்
பண்டேபுலவராவர்குரு பண்பாமனையிற் குணவானே.

இ-ள். ஏழாமிடம், காலனுகிய சூரியன் வீடாகி 'அச்சூரியன் வீரியமாய் அதிலிருந்தால் கணவன் ஓட்டிவிடுவான். ஏழாமிடம் மாலனுகிய

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

புதன் வீடாகில், கணவன் வித்துவானுவான். பாலனுகிய குரு வீடாகில் கணவன் குணமுள்ளவனுவான். எ-று. 841

குணமாமேழிற்பாவர்களும் கூடிப்பலன் களற்றிடவே
மணமார்நோக்கமுற்றதனுன் மகிழ்நனழகில்லாதவனே
இனமாரேழசரமனேயா யிருக்கவதிபன்சரத்திலுறச்
சினமேசராங்கிசையாத்திரையாந் திரமேயாகிற்றீர்க்கமுளன்.

இ-ள். ஏழாமிடத்திற் பாவர்கள் கூடிப் பலனற்றிருக்க, அல்லது பார்க்க, கணவன் அழகில்லாதவனும் ஏழாமிடம் சரராசியாகவும், அவ்வதிபன் சரராசியிலிருக்கவும் சராங்கிஷமாகில் யாத்திரை செய்கின்ற கணவனுவன். திரமாகில் தீர்க்க வயதுள்ளவனும், ஒரிடத்துலிருக்கிறவனுமாகிய கணவனுமாவன் எ-று. 842

தீர்க்கமேழிற்சனிசெவ்வாய் செறிந்தால்விதவை வாலிபத்தில்
நீர்த்தவேழிற்சுபர்பாவர் நின்ருல்கமனம்பரபுருடன்
ஊர்த்தலக்கினமுப்பாக முறைந்தாற்றிரங்கிசாதிபதி
ஏர்த்தபலன்கள் ஸ்திரீகளுக்கு வியல்பாயறிந்தே யுரைத்திடுமே.

இ-ள் ஏழாமிடத்தில் பாழுஞ்சனி செவ்வாய் இருந்தால், வாலிபத்தில் விதவையாவள் சுபரும் பாவருங் கலந்து நின்ருல் பரபுகிஷனேச் சேருவாள். லக்கினத்திலிருந்த அங்கிசாதிபர்களேக் கொண்டு, ஸ்திரீகளுக்குப் பலனறிந்து சொல்லும் விதமாவது. எ-று 843

உரைக்குங்கதிர் மதியங்கிசையா லோங்குந் தன்னில் விபசாரி
நிரைக்குஞ் செவ்வாய் தானுகி னீண்டலக்கினமவ் வீடாய்
மரிக்கும் பிள்ளேயுள்ள வெல்லாம் வாழும்புந்திசங்கிசையில்
நரைத்தகிழவியானுலும் நாடுங்கமனம் பரபுருடன்.

இ-ள் சொல்லா நின்ற எல்லோன் அல்லோன் அங்கிஷமாய் அதில் அவர்களிருக்கவிபசாரியாம். அங்கிஷம் செவ்வாயாகி, அவர் அதிலிருக்க, பெற்றபிள்ளேகள் இறந்துவிடுமாம். புதனங்கிஷமாகி, அவர் அவ்வீட்டிலிருந்தால் கிழவியானுலும் பரபுருட விச்சையை விடாதிருப்பவளாம். எ-று. 842

புருடக்கிரகங்குருவங்கிசையிற் பிறந்தான்மகவுந்தனமுண்டாம்
குருடப்புகரினங்கிசையாற் கூறும்போகந்தனமுளதே
வருடக்காரியங்கிசையில் வளருஞ்சனிவீடிலக்கினமாய்
திருடிக்கமனம் பரபுருடன் சிந்தை நோக்கவரும்பலமே.

இ-ள். புருஷக்கிரகங்கள் குருவங்கிசையில் இருக்கப் பிறந்தால், மிக்க செல்வமும் தக்க மக்களும் முக்கியமாயுள்ளவளாயிருந்பள் சுக்கிரனங்கிசை யாகில் போக யோக்கியமும் தனபாக்கியமும் உள்ளவளாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சனியாங்கிசமாய் சனி லக்கினத்திலிருக்க, திருட்டுத்தனமாய் முரட்டுக் குணமாய் பரபுருஷனைச் சேரும் பலமுள்ளவளாம். எ-று. 846

பலங்களுரைக்கும் ஸ்திரிகளுக்குப் பகரு மெட்டா மிடம்விதவை
துலங்கு மேழா மிடந்தன்னுற் சுகமு மகிழநன் பலமறியப்
பிலங்கொள் லக்கின மழகறிந்து பேசு மொன்பான் புத்திரரும்
தலங்க ளறிந்தே மிகவுரைப்பர் தாமுங் கணித வல்லோரே.

இ-ள். பெண்களுக்குக் கண்டு பலன் விண்டுரைக்குமிடத்து' எட்டாமிடம் கட்டிய மாங்கலியமும். ஏழாமிடம் வாழும், சணவன் பலமும் சுகமும் லக்கினத்தால் அழகும், ஒன்பதாமிடத்தால் புத்திரரும் இவைகளைத் தெரிந்து கணிதவல்லோர்கள் பலன் சொல்லுவார்கள். எ-று.

வல்ல மதிய மிவல்சன்மம் வருமே ஸ்திரீகள் மனையாயின்
நல்ல சுபரு நோக்கமுற நாடும் வடிவு மாபரணம்
சொல்லு மிவ்வீ டிரண்டொற்றை தோன்றப் புருடக் கிரகமிதை
ஒல்கிப் பார்க்கப் புருடவடி வுற்றே யிருக்குமிவள் தனக்கே.

இ-ள். ஜென்மலக்கினத்தில் வெண்கதிரோனிருக்க, அவ்விராசி பெண் ராசியாக சுபர்கள் பார்வைபெற்றிருந்தால் அழகும் ஆபரணமு முள்ளவளாம் ஆணிராசியாகிபுருஷக்கிரங்கள் பார்வைபெற்ருல்புருடவடிவாயிருப்பவளாம்

தனமார் குருசுக் கிரர்சென்மந் தன்னைச் சந்திர லக்கினத்தை
முனமே நோக்க வாலிபத்தின் முற்றும் போகம் நன்மணமும்
தனிசூழ் மதிய லக்கினத்தைச் சனிசேய் பாவர் நோக்கமுற
மனமே ம சலிக்கத் தலைநரைத்து வாழ்க்கைப் படாளிம் மாநிலத்தே

இ-ள். பீதகனுகிய குரு, சீதகனுகிய சுக்கிரன், ஜென்மலக்கினத்தையும், சந்திரன் லக்கினத்தையும், பார்க்க, வாலிபத்தில் கல்யாணமும் போகமுமுண்டாம். மந்தன்-கந்தன்-பார்த்தால் மனஞ்சலிப் புள்ளவளாய் தலைநரைத்தாலும், கல்யாணமில்லாம மிருப்பவளாம். எ-று. 849

மானே சுங்கன் செவ்வாயின் மனைபி லிருக்க மதிதானும்
ஊனச் சனியின் வீட்டிலுற வோங்கும் பாவர் மிகநோக்கித்
தானே யிவர்கள் லக்கினத்திற் றரித்தா லிவளும் விபசாரி
தேனேய் மொழியாய் சுரிகுழலின் சிந்தை யறிந்து சொல்லுகவே.

இ-ள். சுக்கிரன் வக்கிரன் வீட்டுலும் பக்கிரனுகிய சந்திரன், அக்கிரனுகிய சனி வீட்டிலுமிருக்கப் பாவர்கள் பார்க்க அல்லது லக்கினத்திற்பாவர்களிருக்க விபசாரியாம் என்று அளபமாரத்தையுடைய பெண்ணே ? சொல்லவேண்டும். எ-று. 850

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சொல்லும் நவாங்கிசைக் கேழ்மனையுந்தொர்டருஞ் செவ்வாய் மனையு
வல்லசனியு மிருந்திடவே வருமே யோனி ரோகமுடன் [ள தாய்
நல்ல மதியுஞ் சுக்கிரனும் நயந்தே கூடி லக்கினத்தில்
அல்ல லறவே யிருந்ததனு லழகுஞ் சுகமு முண்டாமே.

இ - ள் நவாங்கிசலக்கினத்திற்கு ஏழாமிடம் செவ்வாய் வீடாக அதிற்சனியிருக்க யோனிரோகமுடைவளாம் பக்கிரனுகிய சந்திரனுஞ் சுக்கினும் கூடிலக்கினத்திலிருக்க' அழகும் சுகமுமுடையவளாம். எ-று. 851

உண்டா மதியும் புதனிருவ ருற்ற சென்மத் திருந்திடவே
பண்டே வித்துவத் தன்மையுள்ளா ளென்றுபகர்வர் மறைவல்லோ
கண்டே புதனுஞ் சுக்கிரனுங் காணும் லக்ன முற்றதனுல்
கொண்ட மகிழ்நன் பிரியபெனக் கூறுஞ் சௌரிய முள்ளவளே.

இ - ள் இந்தரியாகிய சந்திரனும், தந்தரியாகிய புதனும், ஜென்ம லக்கினத்திலிருந்தால், வித்வதனைமையுள்ளவளென்று பெரியோர்கள் சொல்லுவார்கள் தந்வரியாகிய புதனும் லக்கினத்திலிருந்தால் :கணவன் பெண்ணிடத்தில் பிரியமுள்ளவனென்றும், சௌரிய முள்ளவனென்றும் சோதிடவல்லவர்கள் சொல்லுவார்கள். எ - று. 852

உள்ள சுபர்கண் மூன்றுமனை யுற்றசென்ம முதற்கொண்டு
மெள்ள விருக்கத் தனலாபம் விரும்புஞ் சுகமு மழகுள்ளாள்
துள்ளும் பாவரெட்டிலுறச் சூழ்ந்தே விதவை யாயிருப்பள்
கள்ள விழியி னமுதவிஷங் கருதி நோக்குங் கண்ணுளே.

இ - ள். அமுதமும் குமுதமும் கலந்து அமைதியாய்ப் பார்க்குங் கண்களையுடையபெண்ணே ! லக்கினமுதற்கொண்டு மூன்று மனைக்குள் முக்கியமாக சுபக்கிரகங்களெல்லாம் நிற்கில் தனலாபமும், சுகமும் அழகு முள்ளவைளாவஇ எட்டாமிடத்திற் கெட்ட பாவர்களிருந்தால் விதவை யாவள். எ-று. 853

கண்ணுரெட்டி ஏதிபதியுங் காணுமொருவ னங்ஙசத்தில்
நண்ணி யிருக்க வவ்வீட்டோ னயந்தே யெட்டி லிருந்ததனுல்
எண்ணுஞ் சுமங்கலி மரணமென வினிதாச் கன்னி தேளிடபம்
ஒண்ணுஞ் சிங்க மிதின்மதியு முற்ரு வற்ப புத்திரனே.

இ - ள். எட்டாமிடத்திப னிருந்த அங்கிசாதிபதி எட்டாமிடத்திலிருக்கச் சுமங்கிலிற்ாய மரிப்பள், கன்னி விருச்சிகம் ரிஷபம் சிங்கம் இவைகளில் அந்தரியாகிய சந்திரனிருந்தால் அற்பப்புத்திரருண்டாம். எ-று. 854

பெண்கள் ஜாதகம்.

சம்பூர்ணம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆட்சி, உச்சம், நீசம்-பகை-உறவும்

—o—

ஆய்ந்தகதிர்க் காட்சிசிங்கம் மதிக்கலவன் செவ்வாய்க்
காடுதேள் புதற்கரிவை மிதுனமும்பொன் னவற்கு
வாய்ந்தசிலை மீன்புகற்குத் துலையிடபஞ் சனிக்கு
மகரகும்ப மிவையாட்சி வாழிரவிக் காடு
ஏய்ந்தமதிக் கேறெரிக்குக் கலைபுதற்குக் கன்னி
இரணியற்கு கற்கடக மெழிற்புகற்கு மீனம்
காய்ந்தசனி தனக்குக்கோ லுச்சமுச்சங்
கனங்குழையா யேழிடங்கள் நீசமெனக் கருதே.

இ—ள். களப வாசனையைப்போன்ற துளபம் முதலிய புட்பங்களை அழகாய்ச்சூடும் அளகபாரத்தையுடைய பெண்ணே கேட்பாயாக, தீட்சண்யமாகிய சூரியனுக்கு ஆட்சி சிங்கம், மதியாகிய சந்திரனுக்கு கற்கடகம், செவ்வாய்க்கு மேட விருச்சிகம், புதனுக்கு மிதுனம் கன்னி, பொன்னவனாகிய குருவுக்குத் தன்னிகரில்லாத் தனுசு மீனம், புகராகிய சுக்கிரனுக்கு இடபம் துலாம், சனிக்கு மகரம், கும்பம், இப்பன்னிரண்டு ராசிகளும், சப்த கிரகங்களுக்கு ஆட்சி வீடுகளாம். இச்செகத்தில் மெச்சுதற்குரிய உச்ச வீடுகளை அச்சமில்லாமற் சொல்லுவோமாக :— பொச்சையாகிய சூரியனுக்கு மேடம், செச்சையாகிய சந்திரனுக்கு இடபம், கொச்சையாகிய செவ்வாய்க்கு மகரம், பச்சையாகிய புதனுக்கு கன்னி, விச்சையாகிய குருவுக்கு கற்கடகம், இச்சையாகிய சுக்கிரனுக்கு மீனம், முச்சையாகிய சனிக்கு துலாம், இவ்வேழுவிராசிகளும் ஏழு கிரகங்களுக்கு உச்ச வீடுகளாம். இதற்கு ஏழாமிடமாகிய துலாம் விருச்சிகம் கற்கடகம் மீனம் மகரம் கன்னி மேடம் இவ்வேழிடங்களும் நீசமென்ற வாசஸ்தலங்களாம். எ-று. 855

கரியபாம் புக்குவெள்ளி குருசனிநட் பாகும்
கதிரவன்சந் திரன்செவ்வாய் பகைமற்றோர் சமமாம்
உரிடிகன்னி தண்டுசிலை யாட்சிவீ டாகும்
உயர்மீனங் கோல்மகர மதிநட்பு வீடாம்
விரிவனைய கும்பமே மூலத்திரி கோணம்
விருச்சி கந்தான் நீசமாம் விடையுட்ச மாகும்
மரிசிங்கங் கற்கடகம் பகைவீட தாகும்
மையரிக்கண் களபமுலை யமுதமொழித் திருவே.

இ—ள். மைதோய்ந்திலங்கும் வரிவிழியும், கைதோய்ந்திலங்கும் களபவரையும், வையகம் வாழ்த்தும் ஐயமில்லா அமுதமொழி

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

யுமுடைய பெண்ணே? கேட்பாயாக, கரிய பாம்பாகிய இராகுவுக்கு கரிச்சிகனுகிய சனி, உரிச்சிகனுகிய சுக்கிரன், புரிச்சிகனுகிய வியாழன் நட்பாம். விருச்சிகனுகிய சூரியன், அரிச்சிகனுகிய சந்திரன், எரிச்சிகனுகிய செவ்வாய், பகையாம். தெரிச்சிகனுகிய புதன் சமமாம், கன்னி மிதுனம் தனுசு இம்மூன்று விராசியும், ஆட்சி வீடாகும். மீனம் மகரம் துலாம் இம்மூன்று விராசியும் நட்பு வீடாகும், கும்பம் மூலத்திரிகோணம் விருச்சிகம் நீசம் விடையாகிய இடபம் உச்ச வீடாகும், மேட சிங்கம் கடகம் பகை வீடாகும். எ-று. 856

செய்யகே துக்குறவு சனிசெவ்வாய் வெள்ளி
 தீயபகை யிரவிமதி யென்பர்மற் றோர்சமனும்
துய்யதொரு மீனுட்சி குடமகர மிடபங்
 துலைபெண்ணட் பாமிதுனம் உச்சம்வில் நீசம்
மெய்யவிருச் சிகமூலத் திரிகோணமாகும்
 வீறுசிங்கங் கற்கடகம் பகைமேடஞ் சமனும்
பையரவின் மணிமுடியை யரசிலையைத் தேரை
 பழித்திளைஞ ராசையைப் போற் பரந்தவல்குற் றிருவே.

இ—ள். விதம்விதமாய்ச் சிற்பிகள் செய்த தேரையும், பதமில்லாப் பாம்பின் மணிமுடியையும், மிதமில்லா அரசிலையும் பழித்து, மதம்பெற்ற இளைஞர்போற் பரந்த நிதம்பரத்தையுடைய பெண்ணே? இதமாகக் கேட்பாயாக, செம்பாம்பாகிய கேதுவுக்கு சனி செவ்வாய் சுக்கிரன் நட்பாம், சூரியன் சந்திரன் பகையாம், புதன் வியாழன் சமமாம், மீனம் ஆட்சி வீடாம், கும்பம் மகரம் ரிஷபம் துலாம் கன்னி நட்பு வீடாம். மிதுனம் விருச்சிகம் உச்ச வீடாகும், அதற்கேழாமிடமாகிய தனுசு ரிஷம் நீசவீடாகுமென்பர், உச்ச வீடாகிய விருச்சிகமே மூலத்திரிகோண வீடாம், பங்கமில்லாத சிங்கம் கற்கடகம் பகைவீடாம், மேடம் சம வீடாகும். எ-று. 857

குளிகனுக்குக் கன்னிதனு சாட்சியாகும்
 கும்பமூலத் திரிகோணம் மகர முச்சம்
களிமேடம் பகைகடகம் நீச மாகும்
 கற்றறிவாய் மற்றுறும் நட்ப தாகும்
வளியான மங்கலனுக் குற்றுப் போல
 வந்தபடி மூலமுச்சம் பகைநீச மாகும்
அளவில்லாக் கணிதங்கற் றறிந்த பேர்கள்
 ஆய்ந்துசொன்ன பலனிதுவே அறிந்து கொள்ளே.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy
இ—ள். மந்தன் மைந்தன் மாந்தியாகிய குளிகனுக்கு, கன்னி தனுசு, ஆட்சி வீடாகும், கும்பம் மூலத்திரிகோணம் மகரம் உச்சம்

மேடம் பகை, கடகம் நீசம், ரிஷபம் மிதுனம் சிங்கம் துலாம் விருச்சிகம் மீனம், இவ்விராசிகளாலும் நட்புவிடாகும், செவ்வாய்க்குச் செப்பினது போல் எவ்வாறோ அதுபோல, குளிகனுக்கும் மூலத்திரிகோணம் உச்சம்பகை நீசம்நட்பு விடாகுமென்று கணிதங்கற்ற சோதிட வல்லவர்கள் சொல்லுவார்கள். எ-று. 858

வேறு.

தோற்றிடும் மூலத் திரிகோணங் கதிர்க்கே
துலங்கரி முன்வரும் பாதி
ஏற்றிடு மதிக்கே விடையின்முற் பாதி
யெரிக்குமே தகரின்முற் பாதி
சாற்றிடும் புந்திக் கன்னிமுற் பாதி
தமனியன் தனுசுமுற் பாதி
போற்றிடும் வெள்ளி துலையின்முற் பாதி
பொருசனி குடத்தில்முற் பாதி.

இ–ள். மகாமேரு பருவத்தை வலமாகச் சுற்றித்தகதகெனப் பிரகாசித்துவருஞ் செங்கதிரோனுக்குச் சிங்கவிராசியிலும், கடகபதியாகிய சந்திரனுக்கு இடபவிராசியிலும், தேடற்கரிய செவ்வாய்க்கு மேடவிராசியிலும், தன்னிகரில்லாப் புதனுக்குக் கன்னியாமிராசியிலும், தமனியனாகிய குருவுக்குத் தனுசு விராசியிலும், தூயவெள்ளியாகிய சுக்கிரனுக்கு துலாவிராசியிலும் அம்பிலுங்கொடி வம்பனாகிய சனிக்குக் கும்பவிராசியிலும் முற்பாதி மூலத்திரிகோணவி ராசிகளாம். எ – று. 859

வேறு.

மூலமாந் திரிகோணத்தின் முன்பின்னுன் கைந்தெட் டொன்பான்
சாலவே யிவர்க டன்னில் தனித்தொன் று சமமே யாகும்
ஏலவே விந்தில் லாத இடமுஞ்சத் துருவே யாகும்
சீலமா யிரண்டு விந்து அதிநட்புஞ் செப்ப லாமே.

இ – ள் ஏழு கிரகங்களும், வாழும் பன்னிரண்டு விராசிகளில் மூலத்திரி கோண விராசிக்குமுன்னும் பின்னும நான்கு ஐந்து எட்டு ஒன்பது இவ்விராசிகளில், அஷ்டவர்க்கப்பரலாகிய விந்து தனித்து ஒன்றிருந்தால், சமபலனுகும், விந்து இல்லாத இடமாகில் வந்ததெல்லாம் பகையாம். இரண்டு விந்து இருக்குமேயாகில் அதிநட்பும் எக்களிப்பும் உண்டாகும். எ – று. 860

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கிரகங்களின் நட்பாட்சி யுச்சம் பகை நீசமறிய.

கிரகங்கள்.	ஆட்சி.	மூலத்திரிகோணம்.		உச்ச விடுகள்.		நீச விடுகள்.		நட்பு விடுகள்	பகை விடுகள்.
சூரியன்	சிம்மம்	சிம்மம்	6	மேஷம்	10	துலாம்	10	தனுசு, மீனம்	ரிஷ, மிது, கட, கும் கன், விருச், மக
சந்திரன்	கடகம்	ரிஷபம்	27	ரிஷபம்	3	விருச்சிக	3	மிது, கன், தனு, மீன	மே, சிம், துலா, மக கும்
செவ்வாய்	மேடம் விருச்	மேடம்	12	மகரம்	28	கடகம்	28	ரிஷ, மிது, கன், துலா	சிம், தனு, கும், மீன
புதன்	மிதுன கன்னி	கன்னி	5	கன்னி	15	மீனம்	15	மே, ரிஷ. கட, துலா விருச், தனு, மக, கும்	சிம்மம்
வியாழன்	தனுசு மீனம்	தனுசு	10	கடகம்	5	மகரம்	5	ரிஷ, மிது, சிம், கன், துலா, கும்	மேஷ, விருச்
சுக்கிரன்	ரிஷப துலாம்	துலாம்	5	மீனம்	27	கன்னி	27	மே, மிது, விருச், தனு, மக, கும்	கட, சிம்
சனி	மகர கும்ப	கும்பம்	10	துலாம்	20	மேஷம்	20	ரிஷ, மிது, கன், தனுமீன	கட, சிங், விருச்
இராகு	மிதுன கன்னி	கும்பம்	10	ரிஷபம் தனுசு	22	விருச்சி	22	துலா, மக, மீன	மே, கட, சிம்
கேது	மீனம்	விருச்சிக	12	விருச்சி மிதுன	24	ரிஷபம் தனுசு	24	கன், துலா, மக, கும்	மே, கட, சிம்
குளிகன்	மிதுன கன்னி	மீனம்	12	மகரம்	28	கடகம்	28	துலா, விருச், தனு, கும்	மே, ரிஷ, சிம்

இத்தனை பங்குவரையில் அதிகபலமென்க.

உச்சவிராசியை 30-பங்கு செய்து அதிலித்தனை பங்கு வரையில் அதிக உச்சமென்க.

நீசவிராசியை 30-பங்குசெய்து அதிலித்தனை பங்குவரையில் அதிக நீசமென்க.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கிரகங்களின் சத்துரு மித்துரு

சமயங்களறிய.

கிரகங்கள்	சத்துரு.	மித்துரு.	சமம்.
சூரியன்	சுக், சனி, ரா, கே	சந், செ, வி	புதன்
சந்திரன்	ராகு, கேது	புதன்	சூ, செ, வி, சு, சனி
செவ்வாய்	புத, ரா, கே	சந், வியா	சூ, சுக், சனி
புதன்	வியாழன்	சுக், சனி	சூ, சந், செ, ரா, கே
வியாழன்	புத, சுக்	சூ, சந், செ	சனி, ரா, கே
சுக்கிரன்	சூரி, சந்	பு, சனி, ரா, கே	செ, வியாழன்
சனி	சூ, சந், செ	பு, சுக், ரா, கே	வியாழன்
இராகு	சூ, சந், செ	வி, சுக், சனி	புத, கேது
கேது	சூ, சந்	செ, சுக், சனி	பு, வி, ரா
குளிகன்	சந், செ	சுக்	சூ, பு, வி, சனி, பாம்

வேறு.

எல்லிரவி தனக்குறவு வியாழந் திங்கட்
கிரணியனும் புதனுஞ்சேய்க் கினியபுதன் வெள்ளி
புல்லியெழும் புதற்கருக்க னொழிய நல்லன்
பொன்னவற்குச் சனியொழியப் பொருந்தா ரில்லை
நல்லபுகர்க் குறவுசனி செவ்வாய் புந்தி
நான் மறையோன் சனிக்குபுதன் வியாழம்வெள்ளி
அல்லவர்க ளெல்லாரும் பகைவ ரென்றூர்
ஆரணங்கே அருந் தமிழ்நூ லடைவாய்ந்தோர்.

இ-ள். சூரியனுக்கு உறவு வியாழன், சந்திரனுக்கு உறவு புதன் வியாழன், செவ்வாய்க்கு உறவு புதன் சுக்கிரன், புதனுக்கு உறவு சந்திரன், செவ்வாய் வியாழன் சுக்கிரன் சனி, வியாழனுக்கு உறவு, சூரியன், சந்திரன் செவ்வாய் புதன் சுக்கிரன், சுக்கிரனுக்கு உறவு செவ்வாய், புதன் வியாழன் சனி, சனிக்கு உறவு புதன்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வியாழன், சுக்கிரன், இவ்வேழு கிரகங்களுக்கும், இதிற் சொல்லாத கிரகங்களெல்லாம் பகைவர்களென்று ஆரணங்கே பூரணமாய் அருந்தமிழாய்ந்த பெரியோர்கள் பொருந்தும்படி திருவாய் மலர்ந் தருளினூர்கள். எ-று. 861

காலங்களின் வலிவு கிரகங்கள்.

வே று.

ஏந்து செவ்வாய் சனியிந்து ராப்பிலன்
வேந்த ரூதவன் வெள்ளி பகற்பிலன்
போந்த புந்திக்கெப் போதும் பிலன்களாம்
கூந்தல் வேலிபக் குங்குமக் கொங்கையே.

இ-ள் கூந்தலேயும், ஆசையைத் தரத்தக்கதாயும், யானைக் கொம்பு போன்றதாயும், குங்குமத்தையுமணிந்த ஸ்தனத்தையு முடைய பெண்ணே? பூமனுகிய செவ்வாய், தீமனுகிய சனி, சோமனுகிய சந்திரன், ஆகிய இவர்களுக்கு, இரவிற்பலமும், சீமனுகிய குரு, மீமனுகிய சூரியன், காமனுகிய சுக்கிரன் ஆகிய இவர்களுக்குப் பகலிற் பலமும், அறிவுள்ள சாமனுகிய புதனுக்கு இரவிலும் பகலிலும் பலமாம். எ-று. 862

(இன்னின்னக்ஷேத்திரம் இவ்வளவுபலமுடையதெனல்.)
உச்ச மொன்றுடன் காலொன்று கேந்திரம்
அச்ச முக்கா லதிபதி யோர்பலம்
மெச்சு நட்புக் கரைப்பல மிக்ககால்
துச்ச நீசர் பலனெனச் சொல்லுமே.

இ-ள். உச்சக்கிரகங்களுக்கு, ஒன்றேகாற்பலமும், பயமில்லாத ஆட்சிக் கிரகங்களுக்கு முழுப்பலமாகிய ஒருபலமும், கேந்திர ஸ்தானங்களில்நின்ற கிரகங்களுக்கு முக்காற்பலமும் நட்பு ஸ்தானத்தில் நின்ற கிரகங்களுக்கு அரைப்பலமும், பகை நீசஸ்தானங்களில் நின்ற கிரகங்களுக்கு கால்பலமுமாம்.

கிரகங்களின் பார்வை.

சேருமுதய மேழிடங்கள் முழுநோக் கொன்பான் திகழ் முக்கால்
பாரி லைந்தும் அரைநோக்காம் பத்தும் நான்குங் கால்நோக்காம்
ஆரி மூன்றும் பதினென்றும் அரைக்கால் நோக்கா மாறெட்டும்
நாரி யிரண்டு பனிரண்டும் நயன மில்லை நவகோட்கே.

இ-ள். உதயமாகிய ஜென் மலக்கினத்திலும், ஏழாமிடத்திலும் இருக்கிற கிரகங்கள் முழுநோக்காம். ஒன்பதாமிடமிருக்கிற கிரகங்கள் முக்கால் நோக்காம். ஐந்தாமிடமிருக்கிற கிரகங்கள் அரைநோக்காம் பத்தும் நான்கும் கால்நோக்காம் மூன்றும் பதினென்றும் அரைக்கால் நோக்காம் ஆறும் எட்டும் இரண்டும் பனிரண்டும் நயனப்பார்வையில்லையாம். எ-று. 864

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

{ கீழே சொல்லியவாறு சில கிரந்தங்களில்
4-8 செவ்வாய்க்கும், 3-10 சனிக்கும்
2-12 குளிகனுக்கும் பார்வையுண்டாம். }

இரவிமதிமால்பாம்பு வெள்ளியுமேழைநோக்கும்
பரவிபசெவ்வாய்நான்கேழெட்டதுபார்வையாகும்
குருதனக்கைந்தொன்பானேழ் கூறுநற்பார்வையாகும்
தருகிய சனிமூன்றேழுந் தசமதுபார்வையாமே.

இ-ள். இரவியாகிய சூரியன், மதியாகிய சந்திரன், மாலாகிய புதன், பாம்பாகிய இராகு கேதுக்கள், வெள்ளியாகிய சுக்கிரன் இவர்கள்தானிருக்கும் இடத்திலிருந்து ஏழாமிடத்தை நோக்கிப் பார்ப்பது முழுப்பார்வையாம். செவ்வாய்க்கு, நான்கு ஏழு எட்டும், குருவுக்கு ஐந்து ஏழு ஒன்பதும், சனிக்கு மூன்று ஏழு பத்தும் பார்வை ஸ்தானங்களாம். எ-று. 865

(12 ராசிகளும் 8-திக்கை நோக்கல்.)

ஆடுகீழ்பாலைநோக்கிடுஞ்சிங்க மாஞ்சிலைதானதென்கீழ்நோக்கும்
கூடுறுமிடபந்தென்றிசைநோக்குங் கூர்கன்னிமகரந்தென்மேற்கு
நாடுறநோக்குமிதுனமேல்நோக்கும் கற்கும்பந்துலாம்வடமேற்கு
ஊடுறப்பார்க்கும் நண்டு மீன் தேளும் உகந்துதான் வடதிசை
நோக்கும்

இ-ள். மேடம் கிழக்கு, சிங்கம் தனுசு, தென்கிழக்கு இடபம் தெற்கு, கன்னி மகரம் தென்மேற்கு, மிதுனம் மேற்கு, கும்பம் துலாம் வடமேற்கு, (ஊடுற நோக்குமென்பதால்) கடகம் வடக்கும், மீனம் விருச்சிகம் வடகிழக்கும் நோக்கிப்பார்க்குமென்பதாம். எ-று. 866

வேறு விதம்.

(கிரகங்களும் இராசிகளும் நோக்குந் திசைகள்.)

சூரியன்	மேஷம்	கிழக்கு
சுக்கிரன்	சிம்மம்-தனுசு	தென்கிழக்கு
செவ்வாய்	ரிஷபம்	தெற்கு
இராகு	கன்னி-மகரம்	தென்மேற்கு
சனி	மிதுனம்	மேற்கு
சந்திரன்	துலாம்-கும்பம்	வடமேற்கு
புதன்	கடகம்	வடக்கு
வியாழன்	விருச்சிகம்-மீனம்	வடகிழக்கு

இக்கிரகங்களும், இவ்விராசிகளும், இத்திசைகளை நோக்கிப் பார்க்கும். இதில், முன்னும் வலமும் நன்று. பின்னும் இடமும் தீது. யாத்திரை குடி புகுதல் நினைத்த காரியங்களுக்குப் போகுதல், இவைகளுக்கு நன்மை தீமையறிந்து செல்லல் வேண்டும். அதுவே மிகவும் உத்தமம்.

CC-0 In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆடுவிடை சீயமிந்த மூன்றும் பகற் குருடாம்
  அலவன்கன்னி மிதுனமிந்த மூன்றும்ராக் குருடாம்
நீடுதுலாம் விருச்சிகமிவ் விரண்டும் பகற்செவிடாம்
  நெடியசிலை மகரமிந்த ரெண்டிம்ராச் செவிடாம்
ஓடுமீன் பகற்காலஞ் சப்பாணி யாகும்
  ஒண்கும்பம் ராக்காலஞ் சப்பாணி யாகும்
தேடுமிந்தப் பனிரண்டு ராசிகுணங் தன்னைத்
  தெரிந்துரைத்த சாதகத்தோர் தெளிவுடைய செயலே.

இ-ள். ஆடு விடை சீயமென்ற மேடம் இடபம் சிங்கமாகிய இம்மூன்றும் பகற்குருடாம், கற்கடகம் கன்னி மிதுனமாகிய இம் மூன்றும் இராக் குருடாம், துலாம் விருச்சிகம் இவ்விரண்டும் பகற்செவிடாம். தனுசு மகரம் இவ்விரண்டும் இராச்செவிடாம். மீனம் பகற்காலஞ் சப்பாணியாகும், கும்பம் இராக்காலம் சப்பாணி யாகும். இப்பனிரண்டு ராசிகளின் குணங்களைச் சாதகத்தோர்க்கு செப்புதற்கரிய சோதிடந் தெளிந்த அறிவுடையோர்கள் இப்புவி யில் ஒப்புவமையாகச் சொன்னார்கள். எ-று. 867

விதமுறும் மிதுனந் துலாங்கன்னி சிங்கம்
  விருச்சிகங் கும்பமிவ் வாறும்
உதயந்தான் சிரசு முன்னதா யுதிக்கும்
  உயர்சிலை விடைமறி கடகம்
வதைசெயும் பிருட்ட முன்னுற வுதிக்கும்
  மகரமீ னிவ்விரு வகையாம்
மதிசரந் துவாரம் கெற்பமோ ருபய
  மானவான் மீகமுந் திரமே.

இ-ள். மிதுனம் துலாம் கன்னி சிங்கம் விருச்சிகம் கும்பம் இவ்வாறு விராசிகளிற் பிறந்த குழந்தைகளுக்கு முன் சிரசு உதைய மாகும், தனுசு ரிஷபம் மேடம் கற்கடகம் இந்நான்கு விராசிகளிற் பிறந்த குழந்தைகளுக்குட் சிலது சிரசும், சிலது பாதமும் முன் உதையமாகும், சரராசியாகிய மேஷம் கடகம் துலாம் மகரம் இந்நான்கும் துவாரமாம், திரராசியாகிய ரிஷபம், சிங்கம் விருச்சி கம் கும்பம் இந்நான்கும் வான்மீகமாம், உபயராசியாகிய மிதுனம் கன்னி தனுசு மீனம் இந்நான்கும் கெற்பமாம். எ-று.

சிங்கமே முதலா யாறுரா சியுமே
  செறிபகற் கதிரவன் கூறுந்
தங்கிய நிசியிற் குடமுத லாறுஞ்
  சந்திரன் கூறெனச் சாற்றும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இங்கிவர் கூறுந் தனிற்சுப ருடனே
  இவர்களே யினிதுட னிருக்க
அங்கவர் பிலத்தை யுடையரென் றுரைத்தா
  ரன்னமென் னடையிளங் குயிலே.

இ - ள். சிங்கம் முதல் மகரம் வரையுள்ள ஆறுராசிகளும், பகலிற் சூரியன் கூறும். தங்கிய கும்பம் முதல் கடகம்வரையுள்ள ஆறு ராசிகளும், இரவிற் சந்திரன் கூறும். இங்கிவர்களுடன் சுபர்கள் கூடியிருந்தால். அங்கவர்க்கு அதிக பிலத்தை யுடையவர் களென்று அன்னநடையும், தன்னிகரில்லா யிளங்குயில் மொழியு முடைய பெண்ணே ? சோதிடமுணர்ந்த பெரியோர்கள் தெரியச் சொல்லுவார்கள். எ-று. 869

ஓதிய மிதுனங் கன்னிகோல் கும்பம்
  உரைத்திடும் மானிட ராசி
காதிய சிங்கஞ் சிலைமறி யிட்டம்
  கருதிய மிருகரா சியுமாஞ்
சீதமா மீனம் மகரமிவ் விரண்டுஞ்
  சிறகொடு பறக்கும் ராசியுமாம்
மேதில்கற் கடகம் விருச்சிகம் பலகால்
  ராசியென் றுரைத்திட லாமால்.

இ - ள். மிதுனம் கன்னி துலாம் கும்பம் இந்நான்கு விராசி களும், மானிடராசியாம். சிங்கம் தனுசு மேடம் இடபம் இந் நான்கு விராசிகளும் மிருகராசியாம். மீனம் மகரம் இவ்விரண்டு விராசிகளும், சிறகொடு பறக்கும் ராசியாம் கற்கடகம் விருச்சிகம் பலகால் ராசியாம். எ று. 870

உதயத்தில் மனுட வோரையே பிலமாம்
  ஓதிய பத்தினில் நாற்கால்
பதமிக்க பலகா லேழினில் விசையாம்
  பறக்கும்நீர்க் கீழினில் வெல்லும்
மதமிக்க மனுட ராசியே பகலில்
  வலிதென்ப ரிரவில்நாற் காலும்
சதமிக்கப் பறவை பற்பல கால்கள்
  சந்தியில் வலிதெனச் சாற்றே.

இ - ள். உதயத்தில் மனுடவிராசியே பிலாம். ஓதியபத்தில் நாற்காலி ராசியே பிலவாம். பதமுடைய ஏழில் பலகால் விராசியே பிலமாம் நீர்க்கீழாகிய நாலாமிடத்தில் சிறகொடு பறக்கும் ராசியே பிலமாம். நரனுகிய மனுட விராசியே பகலில் வலுவுடையதாம். நாற்கால் ராசியே இரவில் வலுவுடையதாம் பறக்கும்ராசியும், பலகால்விராசியும் சந்தில் வலுவுடையதாம். எ-று. 871

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வேறு.

ஏற்றிய புந்தி பொன்னேன் இருபாதக் கிரக மென்பார்
சாற்றிய கதிரோன் செவ்வாய் சதுர்ப்பாதக் கிரக மென்பார்
வேற்றுமைச் சனியுந் தானே வெகுபாத மென்ன வேண்டும்
மாற்றரும் வெள்ளி திங்கள் வருஞ்சலக் கிரக மாமே.

இ-ள். புந்தியாகிய புதனும், பொன்னேனுகிய குருவும், இரண்டுபாத முடையகிரகங்களாம். பிதுர்க்காரகனுகிய சூரியனும், சகோதரகாரனுகிய செவ்வாயும், சதுர்ப்பாதக்கிரகங்களாம் முதுமகனுகிய சனியும் வெகுபாதக்கிரகமாம். அலவனுகிய சந்திரனும், ஆசனனுகிய சுக்கிரனும், ஜலக்கிரகமாம்.

தாதுமூல ஜீவக்கிரகங்கள்.

சனிசெவ்வாய் ராகு கேது தாதுவின் கிரக மாகும்
முனிவிலாக் கதிரோன் வெள்ளி மூலத்தின் கிரக மாகும்
பனிமதி யுடன்வி யாழன் பண்புறு கணக்கன் ருனும்
குனிசிலை நுதலாய் சீவக் கோட்களென் றுறைத்த வாறே.

இ-ள். பேதகனுகியசனி, சூதகனுகிய செவ்வாய், ராதகனுகிய ராகு கேதகனுகிய கேது இந்நால்வரும், தாதுவின் கிரகங்களாம், ஆதகனுகிய சூரியன், சீதகனுகிய சுக்கிரன் இவ்விருவரும், மூலத்தின் கிரகங்களாம், மேதகனுகிய சந்திரன் பீதகனுகிய வியாழன் மீதகனுகிய புதன், இம்மூவரும் ஜீவக் கிரகங்களாமென்று, குனிசிலைபோன்ற நுதலையுடைய பெண்ணே ? இனிமையாக இக்கிரகங்களைக் கூறுவாயாக. எ-று. 873

{ சுக்கிராச்சாரியார் முக்கியமாய்ச் சொன்ன துவாதசபாவகம். }.

ஜென்மலக்கினம் சந்திரலக்கினம் ஒராலக்கினம் 3-ம் ஆயுளுக்கு, ஆரூடலக்கினம் கடிகாலக்கினம் பாவாலக்கினம் 3-ம் யோகந்திற்கு, தேகலக்கினம் ஆதிபத்தியலக்கினம் பிரபலலக்கினம் 3-ம் சவுக்கியத்திற்கு, அங்கிசலக்கினம் திவாலக்கினம் திரேக்காணலக்கினம் 3-ம் அந்தியகாலத்திற்குப் பார்க்கும் விதமெனச் சுக்கிராச்சாரியார் இக்குவலயத்தோர்க்கு முக்கியமாய்ச் சொல்லியிருக்கிருர்.

உதயலக்கினமே லக்கினம், சந்திரனிருந்தலக்கினமே சந்திரா லக்கினம், சூரியன்நின்ற ராசி முதலாக இரண்டரை நாழிகைக்கு ஒரு லக்கினமாக நடத்துவது ஓராலக்கினமாம்.

லக்கினம் முதல் லக்கினேசன் இருந்த ராசிவரைக்கும் எண்ணி, அந்தத் தொகையை, லக்கினுதிமுதலெண்ணிக் காண்பது ஆரூடலக்கினமாம் உதயசூரியன் முதல் ஒவ்வொரு நாழிகையாக நடத்துவது கடிகாலக்கினமாம் அதை வாராதிபனைத் தொட்டு ஐந்து நாழிகையாக நடத்துவது பாவாலக்கினமாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சுக்கிரன் நின்ற ராசி ஓசையாகுல் நாலாமிராசியும், உக்குமமாகுல் பத்தாமிராசியும் ஒட்டுவது ஆதித்தியலக்கினமாம். தேகலக்கினம் சந்திரத்திரிகோண உபயராசியாம் பிரபலலக்கினம் லக்கினே சத்திரிகோணத்திரராசியாம்.

ரவித்திரிகோண சரராசி தொட்டு உதயமுதல் காற்கடிகையாக நடத்துவது சீவாலக்கினமாம். லக்கினுங்கிசமே அங்கிசலக்கினமாம். வக்கினத்திரேக்காணமே திரேக்காணலக்கினமாம்.

{ பத்துவித அங்கிசஞ்செய்யும்படி
இதுவே தசவர்க்கமாம். }

தசவர்க்க கணிதம்.

60 – விகலை — ஒரு கலை.
60 – கலை — ஒரு பாகை.
60–பாகை — ஒரு ராசி.
12 – ராசி — ஒரு பகணம்.

ஒவ்வொரு ராசிகளிலும், கிரகங்கள் நிற்கும் நிலையைப் பத்துவித அளவைகளால் நிதானித்து அறிந்து கிரகங்களுக்குள்ள பெலனையறிவது தசவர்க்கமாம்.

முதலாவது - கிரகங்கள் நின்றதே இராசியாம்.

இரண்டாவது-ஒரு ராசிக்குப் பாகை-30. இதை இரண்டு கூறு செய்யில் பங்கொன்றுக்கு பாகை 15. இதில் ஒத்தை ராசிக்கு ஒற்றையாகிய, ஆணி ராசிக்கு முற்கூறு சூரியன், பிற்கூறு சந்திரன். இரட்டையாகிய பெண்ணிராசியில் முற்கூறு சந்திரன் பிற்கூறு சூரியனுக வருவது கோட்கூருகிய ஓரையாம்.

மூன்ருவது – ஒரு ராசியை மூன்றுகூறு செய்யில் பங்கொன்றுக்கு 10. ஆக நின்ற பங்கறிந்து, சரத்துக்கு 1, 5, 9, ஒட்டுவது, திரத்திற்கு, 9, 1, 5, ஒட்டுவது உபயத்திற்கு, 5, 9, 1, ஒட்டுவது திரேக்காணமாம்.

நான்காவது - ஒற்றை ராசிக்கு கிரகங்களின் பாகைகள். 30-க்கு விபரம், செவ்வாய்க்கு 5. சனிக்கு 5. வியாழனுக்கு 8. புதனுக்கு 7. சுக்கிரனுக்கு 5. இரட்டை ராசிக்கு சுக்கிரனுக்கு 5. புதனுக்கு 7. வியாழனுக்கு 8. சனிக்கு 5. செவவாய்க்கு 5. இப்படி அறிவது திரிம்சாமிசையாம்.

ஐந்தாவது – ஒரு ராசியை ஏழுகூறு செய்யில் பங்கொன்றுக்கு பாகை 4. கலை 17. விகலை, 8½ ஆக. ஒற்றித் தராசிக்கு அது 'முதலாகவும், இரட்டித்தராசிக்கு ஏழாமிடமுதலாக நடத்துவது. சத்தமாங்கிசமாம்.

அதன் விபரம் அடியிற் காண்க.

1. வது கூறுக்கு – பாகை-4. கலை-17. விகலை 8½
CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy
2. வது கூறுக்கு – பாகை-8. கலை-34. விகலை 17.

3. வது கூறுக்கு - பாகை-12.	கலை-51.	விகலை	$25\frac{1}{2}$.
4. வது கூறுக்கு - பாகை-17.	கலை-8.	விகலை	34.
5. வது கூறுக்கு - பாகை-21.	கலை-25.	விகலை	$42\frac{1}{2}$.
6. வது கூறுக்கு - பாகை-25.	கலை-42.	விகலை	51.
7. வது கூறுக்கு - பாகை-30.	கலை-0.	விகலை	0.

ஆருவது - ஒரு ராசியை ஒன்பதுகூறு செய்யில் பங்கொன்றுக்குப் பாகை-3. கலை-20. கண்டு சரராசிக்கு. அந்தராசி முதலும், திரராசிக்கு ஒன்பதாம்ராசி முதலும், உபயராசிக்கு ஐந்தாம் ராசி முதலும், நடத்துவது. நவாம்சையாம்.

அதன் விபரம் அடியிற்காண்க.

1. வது கூறுக்கு-பாகை	3.	கலை	20
2. வது கூறுக்கு-பாகை	6.	கலை	40
3. வது கூறுக்கு-பாகை	10.	கலை	0
4. வது கூறுக்கு-பாகை	13.	கலை	20
5. வது கூறுக்கு-பாகை	16.	கலை	40
6. வது கூறுக்கு-பாகை	20.	கலை	0
7. வது கூறுக்கு-பாகை	23.	கலை	20
8. வது கூறுக்கு பாகை	26.	கலை	40
9. வது கூறுக்கு-பாகை	30.	கலை	0

ஏழாவது—ஒரு ராசியை, பத்துக்கூறு செய்யில் பங்கொன்றுக்கு, பாகை-3. ஆகக்கண்டு அந்தராசி ஒற்றையாகில் அது முதலும், இரட்டையாகில் ஒன்பதாமிடம் முதலாக நடத்துவது. தசாமிசையாம்.

அதன் விபரம் அடியிற் காண்க.

1 - வது கூறுக்கு பாகை	3	6 - வது கூறுக்கு பாகை	18
2 - வது கூறுக்கு பாகை	6	7- வது கூறுக்கு பாகை	21
3 - வது கூறுக்கு பாகை	9	8 - வது கூறுக்கு பாகை	24
4 - வது கூறுக்கு பாகை	12	9 - வது கூறுக்கு பாகை	27
5 - வது கூறுக்கு பாகை	15	10 - வது கூறுக்கு பாகை	30

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

எட்டாவது:—ஒரு ராசியைப் பன்னிரண்டு கூறு செய்யில், பங்கொன்றுக்குப் பாகை இரண்டரையாக லக்கினமுதல் கிரமமாக நடத்துவது. துவாதசாமிசையாம்.

அதன் விபரம் அடியிற் காண்க.

1–வது கூறுக்கு பாகை	2½	7–வது கூறுக்கு பாகை	17½
2–வது கூறுக்கு பாகை	5	8–வது கூறுக்கு பாகை	20
3–வது கூறுக்கு பாகை	7½	9–வது கூறுக்கு பாகை	22½
4–வது கூறுக்கு பாகை	10	10–வது கூறுக்கு பாகை	25
5–வது கூறுக்கு பாகை	12½	11–வது கூறுக்கு பாகை	27½
6–வது கூறுக்கு பாகை	15	12–வது கூறுக்கு பாகை	30

ஒன்பதாவது:—ஒரு ராசியைப் பதினாறு கூறு செய்யில் பங்கொன்றுக்குப் பாகை ஒன்றே முக்காலே அரைக்காலாகக் கண்டு, ஒன்றைக்கு மேட முதல் நேரும், இரட்டைக்கு மாறுபாடாக நடத்துவது, மேட முதல் மீனம் வரை 12–ராசியும், பிரமா–விஷ்ணு–ருத்திரன்–சூரியன்–ஆகப் பதினாறும், சோடசாமிசையாம் (இதைக் கலாங்கிஷமென்றுஞ் சொல்வதுமுண்டு.)

அதன் விபரம் அடியிற் காண்க.

1–வது பாகை 1.	கலை 52½	9–வது பாகை 16.	கலை 52½
2–வது பாகை 3.	கலை 45	10–வது பாகை 18.	கலை 45
3–வது பாகை 5.	கலை 37½	11–வது பாகை 20.	கலை 37½
4–வது பாகை 7.	கலை 30	12–வது பாகை 22,	கலை 30
5–வது பாகை 9.	கலை 22½	13–வது பாகை 24.	கலை 22½
6–வது பாகை 11,	கலை 15	14–வது பாகை 26.	கலை 15
7–வது பாகை 13.	கலை 7½	15–வது பாகை 28.	கலை 7½
8–வது பாகை 15.	கலை 0	16–வது பாகை 30.	கலை 0

பத்தாவது:—ஒரு ராசியை அறுபது கூறு செய்யில், பங்கொன்றுக்கு கலை–30 ஆக ஒற்றைக்கு நேரும், இரட்டைக்கு விகுர்தியாய் நடத்தவும். சஷ்டியாமிசையாம்.

அதன் விபரம் அடியிற் காண்க.

1. கோரம்	11. மாயாந்தகம்	21. பிரபலம்
2. இராக்கதம்	12. பிரேதபுரிபாவம்	22. பதுமம்
3. தேவபாகம்	13. அதிதேவம்	23. இலட்சுமி
4. குபேரன்	14. கணேசன்	24. வாகீசம்
5. ராக்கதபோகம்	15. ஈசுபாகம்	25. திகம்பரம்
6. கின்னரம்	16. சர்ப்பபயம்	26. தேவேந்திரம்
7. இஷ்டகுலபோகம்	17. அமுதசந்திரன்	27. கவிதை
8. கோபம்குலதிலகம்	18. அபிராமம்	28. நாசம்
9. விடாக்கினி	19. மிருது	29. பூபதி
10. அகளங்கம்	20. கோமளம்	30. கமலாகரம்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

31. சனிசுதன்	41. குலநாசம்	51. பிரதட்சணம்
32. பவத்தகம்	42. வெகுமானம்	52. காலாக்கினி
33. அக்கினிகோரம்	43. வம்சநாசம்	53. தண்டாயுதம்
34. { இமகண்டம் காலமிருத்து }	44. உபவாசம்	54. நிருமலம்
35. தபாக்கினி	45. காலரூபம்	55. சுபம்
36. அமுதபூரணம்	46. சௌமியம்	56. அசுபம்
37. பூரணசந்திரம்	47. மிருது	57. அசிதம்
38. மதிமயக்கம்	48. சுசீதளம்	58. பயோததி
39. சௌபாக்கியம்	49. திலாமதி	59. சுழல்
40. விஷக்கலப்பு	50. சந்திரமுகம்	60. சந்திரரேகை

மிதுனம்–கன்னி–தனுசு–மீனம்–ரிஷப–துலாம்–கடகம்-புதன்-வியாழன்–சுக்கிரன்–பூர்வபட்சத்துச் சந்திரன்,சுபராசியும், சுபக்கிரகமும், சுபவர்க்க மென்று கணக்கிட்டுத் தசவர்க்கத்திலும் வந்த தொகையறிய.

தசவர்க்க அங்கிஷபலனறிய.

தசவர்க்கங்களிலே ஆதித்தியாதி கிரகங்கள் ஒவ்வொன்றுக்கும் பாபவர்க்கம் எவ்வளவென்றும், சுபவர்க்க மெவ்வளவென்றுங் கண்டு,

1. சுபவர்க்கமாத்திர மேறினல்	யோகாங்கிஷம்,	நிஷ்பலம், துர்ப்பலம்.
2. சுபவர்க்கமேறினல்	பாரிசாதாங்கிஷம்	சுசீகரம்
3. சுபவர்க்கமேறினல்	உத்தமாங்கிஷம்	ரோகம்
4. சுபவர்க்கமேறினல்	கோபுராங்கிஷம்	வாகனம்
5. சுபவர்க்கமேறினல்	சிங்காசனங்கிஷம்	செல்வம்
6. சுபவர்க்கமேறினல்	பாராவதாங்கிஷம்	வித்தை, கீர்த்தி செல்வம்
7. சுபவர்க்கமேறினல்	தேவலோகாங்கிஷம்	சேனதிபதி
8. சுக்வர்க்கமேறினல்	வைசேஷிகாங்கிஷம்	லோகாதிபதி
9. சுபவர்க்கமேறினல்	ஐராவதாங்கிஷம்	அஷ்டைஸ்வரியம்
10. சுபவர்க்கமேறினல்	தெய்வேந்திராங்கிஷம்	இந்திரபோகி, சார்வபௌமன்.

தசவெர்க்கபெலம்.

தசவர்க்கத்திலே ராசிக்குப்பெலம்	... க
கோட்கூருகிய ஓரைக்குப்பெலம்	... இ
திரேக்காணத்துக்குப்பெலம்	... இ
சத்தமாங்கிஷத்துககுப்பெலம்	... வ
நவாம்சத்துக்குபபெலம்	... இ
தசாம்சத்துக்குப்பெலம்	... வ
துவாதசாம்சத்துக்குப்பெலம்	... இ
சோடசாமசத்துக்குப்பெலம்	... இ
திரிம்சாம்சத்துக்குப்பெலம்	... இ
சஷ்டியாம்சத்துக்குப்பெலம்	... வ

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

லக்கினசமயம் அறியும்படி.

மேடமுதலாக லக்கினம் வரைக்கும் எண்ணிய தொகையும் பின்னும் மேடமுதலாக லக்கினாதி நின்ற ராசிமட்டும், எண்ணிய தொகையும், இவ்விரண்டு தொகையும் மாறி - 27-ல் கழித்த மிச்சத்தை, அந்தந்தக்கிரகமகா திசையிற்பெருக்கிப் பின்னும், 27-ல் கழித்த மிச்சம், சமயமாம்.

அதன் விபரம் அடியிற் காண்க.

1. ஸ்நானம்	10. கிரிவலம்	19. ஜலபானம்
2. பூஷணப்பூணல்	11 வைசுவதேயம்	20. கிலேசம்
3. விபூதிசந்தனமிடல்	12. அதிதிபூசை	21. சயனம்
4. அனுஷ்டானம்	13. போஜனம்	22. அமுதபானம்
5. சிவபூசை	14. வித்தை	23. மதனாலங்காரம்
6. ஔபாசனம்	15. தானபோஜனம்	24. சத்துருஜெயம்
7. விஷ்ணுபூசை	16. தாம்பூலம்	25. மத்தியபானம்
8. தேவபூசை	17. ராஜாங்கம்	26. நித்திரை
9. நமஸ்காரம்	18. கிரீடம்பூணல்	27. ரத்னப்பரிட்சை

கிரியாகெமனம்.

கிரியாகெமனம்-பாகை-1-க்கு ஒருகெமனமாக ஒற்றைறராசிக்கு நேரும், இரட்டை ராசிக்கு மாறாகவுங் கொள்க.

அதன் விபரம் அடியிற்காண்க.

1. நிர்ச்சலபோசனம்	16. பூர்வாதிக்கம்
2. அன்னதானம்	17. தேசாதிகாரம்
3. சுயம்பாகம்	18. களத்திரகோபம்
4. விருந்தூண் புசித்தல்	19. தீர்க்கநித்திரை
5 பரவீட்டிலன்னசிந்தை	20. களத்திரமோகம்
6. சுகபோஜனம்	21. நிர்ச்சலநித்திரை
7. வாகனசஞ்சாரம்	22. சயனப்பிரதாபம்
8. அநேகவாகனம்	23. பரதாரகெமனம்
9. தீர்த்தயாத்திரை	24. உற்றதுக்கம்
10. தானப்பிரஷ்டம்	25. பூமிகெமனம்
11. மங்களயாத்திரை	26. வர்ச்சிதம்
12. மண்டலாதிக்கம்	27. ஆபத்துக்காலம்
13. குலாதிக்கம்	28. ராஜதண்டனை
14 கிராமாதிக்கம்	29. கருவிஷாக்கினிபிடை
15. குடும்பாதிக்கம்	30. தேகமெலிவு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஸ்ரீகாலம் புருஷகாலம் அஷ்டகுலவிபரம்.

இரவி சுன்பொன் சேய்காலை புருஷனாகும்
ஏழிற்றிங்கள் புதன்வெள்ளி ஸ்ரீகால மென்பர்
வருகடிகை யொன்றேகால் வீதமதி லாண்பெண்
வகுத்ததல மெண்மருக்கு வகைவிபரஞ் சொல்வாம்
பிரம க்ஷத்திரிய வைஸ்ய சூத்திரபா ஷாண்டி
பிசகியசண் டாளர்விப் பிரர்வேசி யெண்மர்
மருவியதோர் முதற்சாதி நான்கும் நன்மை
வம்பான பிற்சாதி நான்குந் தீங்கே.

இ ள். ஞாயிறு, சனி, வியாழன், செவ்வாய், இவ்வாரங்கள் நான்கினும் உதயத்தில் புருஷகாலம், நாழிகை-$1\frac{1}{4}$. திங்கள், புதன், வெள்ளி, இவ்வாரங்கள் மூன்றிலும் உதயத்தில் ஸ்ரீகாலம் நாழிகை சென்றபின் மாறிவரும். அதன் விபரம் அடியிற் காண்க. சாதியின் விபரம் 1. பிரமன் 2. க்ஷத்திரியன் 3. வைசியன் 4. சூத்திரன் 5. பாஷாண்டி 6. சண்டாளன் 7. விப்பரன் 8. வேசி, முற்சாதி நான்கும் நன்மை. பிற்சாதி நான்கும் தீமை.

ஆண் பெண்ணறியும் படி.

நாழிகை	ஞாயிறு.	திங்கள்.	செவ்வா.	புதன்.	வியாழம்.	வெள்ளி.	சனி.
$1\frac{1}{4}$	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்
$2\frac{1}{2}$	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்
$3\frac{3}{4}$	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்
5	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்
$6\frac{1}{4}$	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்
$7\frac{1}{2}$	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்
$8\frac{3}{4}$	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்
10	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்
$11\frac{1}{4}$	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்
$12\frac{1}{2}$	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்
$13\frac{3}{4}$	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்
15	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்
$16\frac{1}{4}$	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்
$17\frac{1}{2}$	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்
$18\frac{3}{4}$	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்
20	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்
$21\frac{1}{4}$	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்
$22\frac{1}{2}$	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்
$23\frac{3}{4}$	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்
25	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்
$26\frac{1}{4}$	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்
$27\frac{1}{2}$	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்
$28\frac{3}{4}$	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்
29	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆதித்தாதியர் சமயங்கள் — கிரகங்களின் சமயம்

இராசி	சூரியன்	சந்திரன்	செவ்வா	புதன்	வியாழன்	சுக்கிரன்	சனி	ராகு	கேது
மேஷம்	சிவபூசை	தானம்	தானம்	தானம்	கோபம்	சஞ்சாரம்	கிலேசம்	கோபம்	கோபம்
ரிஷபம்	விசாரம்	கிரீடை	ஜெயம்	பூஷணம்	நித்திரை	போஜனம்	சிவதரிசனை	போஜனம்	நித்திரை
மிதுன	போஜனம்	விசாரம்	கோபம்	சிவபூசை	கிலேசம்	கிரீடை	பரிமளம்	தானம்	போஜனம்
கடகம்	சங்கீதம்	காரசாரம்	கிரீடை	தவவேணி	சிவபூஜை	தானம்	நித்திரை	விபூதிதாரணை	விசாரம்
சிங்கம்	சிவவேணி	தானம்	விசாரம்	சுகமாலி	விசாரம்	நித்திரை	விசாரம்	நித்திரை	சந்தோஷம்
கன்னி	தாம்பூலம்	ஸ்ரீபோகம்	கிலேசம்	ஆவிதாரணை	சஞ்சாரம்	விசாரம்	சஞ்சாரம்	கிரீடை	வஸ்திராபர [ணம்
துலாம்	கோபம்	மூர்க்கம்	சமர்செய்தல்	விசாரம்	கோபம்	சிவபூசை	பீதாம்பரம்	கோபம்	கோபம்
விருச்சி	அலைச்சல்	கோபம்	சுரதவேளை	கோபம்	தாம்பூலம்	சஞ்சாரம்	நித்திரை	நித்திரை	போஜனம்
தனுசு	தானம்	பரிமளம்	சிவதரிசனை	கோபம்	சிவதரிச [னை	சங்கீதம்	கோபம்	போஜனம்	தானம்
மகரம்	உறக்கம்	விசாரம்	உறக்கம்	சங்கீதம்	விசாரம்	கிரீடை	புட்பதாரணை	விசனம்	விபூதிதாரணை
கும்பம்	பரிவேடம்	சஞ்சாரம்	கிலேசம்	கோபம்	கிரீடை	நித்திரை	விசாரம்	சஞ்சாரம்	நித்திரை
மீனம்	போஜனம்	பீதாம்பரம்	சிவபூசை	போஜனம்	போஜனம்	கிரீடை	கிரீடை	வஸ்திரதான [ம்	கிரீடை

CC0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பஞ்சபக்ஷி சுருக்கம்.

தினந்தோறும் தங்கள்பெயரின் முதலெழுத்துப் பக்ஷியின் சுபத்தைத்தரும் ஊண். அரசுகாலம் அறிய விபரம்.

பக்ஷிக்குரிய எழுத்து

வல்லூறு - அ-ஆ - க-கா-ங ஙா-ச-சா-ஞ - ஞா-ட-டா-த-தா ந - நா-ப-பா-ம-மா-ய-யா-ர-ரா-ல-லா-வ-வா-ஐ-ஔ.

ஆந்தை-இ-ஈ - கி-கீ- ஙி-ஙீ-ஞி-ஞீ-டி-டீ-தி-தீ-நி-நீ-பி-பீ-மி-மீ-யி யீ-ரி-ரீ-லி-லீ-வி-வீ.

காகம்-உ- ஊ-கு-கூ-ஙு-ஙூ-சு-சூ-ஞு-ஞூ-டு-டூ-து-தூ-நு-நூ-பு-பூ-மு மூ-யு-யூ-ரு-ரூ-லு-லூ-வு-வூ.

கோழி-எ-ஏ-கெ-கே-ஙெ ஙே-செ-சே-ஞெ-ஞே-டெ-டே-தெ-தே-நெ-நே-பெ-பே-மெ-மே-யெ-யே-ரெ-ரே-லெ-லே-வெ-வே.

மயில்-ஒ-ஓ-கொ-கோ-ஙொ - ஙோ-சொ-சோ-ஞொ-ஞோ-டொ-டோ-தொ-தோ-நொ-நோ-பொ-போ-மொ-மோ யொ - யோ-ரொ-ரோ - லொ-லோ-வொ-வோ.

நக்ஷத்திரப் பக்ஷிகள்

பூர்வபக்ஷம்

அசுவணி-பரணி-கார்த்திகை ரோகணி-மிருகசீரிடம்	வல்லூறு
திருவாதிரை-புநர்பூசம்-பூசம்-ஆயில்யம்-மகம்-பூரம்	ஆந்தை
உத்திரம்-அஸ்தம்-சித்திரை-சுவாதி-விசாகம்	காகம்
அனுஷம-கேட்டை-மூலம்-பூராடம்-உத்திராடம்	கோழி
திருவோணம்-அவிட்டம்-சதயம்-பூரட்டாதி-உத்திரட்டாதி-ரேவதி	மயில்

அமரபக்ஷம்.

அசுவணி-பரணி-கார்த்திகை-ரோகணி-மிருகசீரிடம்	மயில்
திருவாதிரை-புநர்பூசம்-பூசம்- ஆயிலியம்-மகம்-பூரம்	கோழி
உத்திரம்-அஸ்தம்-சித்திரை-சுவாதி-விசாகம்	காகம்
அனுஷம்-கேட்டை-மூலம்-பூராடம்-உத்திராடம்	ஆந்தை
ஓணம்-அவிட்டம்-சதயம்-பூரட்டாதி-உத்திரட்டாதி-ரேவதி	வல்லூறு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வல்லூறு

அமரபக்ஷம்.		பூர்வபக்ஷம்.	
ஞாயிறு. செவ்வா	வியாழம்.	ஞாயிறு. செவ்வா	வியாழம்.
ஊண் 1ம் ஜாமம் அரசு 3ம் ஜாமம்	ஊண் 3ம் ஜாமம் அரசு 5ம் ஜாமம்	ஊண் 2ம் ஜாமம் அரசு 5ம் ஜாமம்	ஊண் 3ம் ஜாமம் அரசு 1ம் ஜாமம்
திங்கள். புதன்.	வெள்ளி.	திங்கள். சனி.	வெள்ளி.
ஊண் 2ம் ஜாமம் அரசு 4ம் ஜாமம்	ஊண் 4ம் ஜாமம் அரசு 1ம் ஜாமம்	ஊண் 4ம் ஜாமம் அரசு 2ம் ஜாமம்	ஊண் 1ம் ஜாமம் அரசு 4ம் ஜாமம்
சனி.	———	புதன்.	———
ஊண் 5ம் ஜாமம் அரசு 5ம் ஜாமம்	படுபட்சி வியாழம் சனி	ஊண் 5ம் ஜாமம் அரசு 3ம் ஜாமம்	படுபட்சி செவ்வாய்

———

ஆந்தை.

பூர்வபக்ஷம்.		அமரபக்ஷம்.	
வல்லூறு. செவ்வா	வெள்ளி	ஞாயிறு. செவ்வா	வியாழம்.
ஊண் 5ம் ஜாமம் அரசு 2ம் ஜாமம்	ஊண் 3ம் ஜாமம் அரசு 5ம் ஜாமம்	ஊண் 5ம் ஜாமம் அரசு 3ம் ஜாமம்	ஊண் 1ம் ஜாமம் அரசு 4ம் ஜாமம்
திங்கள். புதன்	சனி.	திங்கள். சனி.	வெள்ளி.
ஊண் 1ம் ஜாமம் அரசு 3ம் ஜாமம்	ஊண் 4ம் ஜாமம் அரசு 1ம் ஜாமம்	ஊண் 2ம் ஜாமம் அரசு 5ம் ஜாமம்	ஊண் 4ம் ஜாமம் அரசு 2ம் ஜாமம்
வியாழம்	———	புதன்.	———
ஊண் 2ம் ஜாமம் அரசு 4ம் ஜாமம்	படுபட்சி வெள்ளி. ஞாயிறு	ஊண் 3ம் ஜாமம் அரசு 1ம் ஜாமம்	படுபட்சி திங்கள்

———

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

காகம்

பூர்வபக்ஷம்.		அமரபக்ஷம்.	
ஞாயிறு. செவ்வா	வெள்ளி.	ஞாயிறு. செவ்வா	வியாழம்.
ஊண் 4ம் ஜாமம் அரசு 1ம் ஜாமம்	ஊண் 2ம் ஜாமம் அரசு 4ம் ஜாமம்	ஊண் 3ம் ஜாமம் அரசு 4ம் ஜாமம்	ஊண் 4ம் ஜாமம் அரசு 2ம் ஜாமம்
திங்கள் புதன்.	சனி.	திங்கள் சனி.	வெள்ளி
ஊண் 5ம் ஜாமம் அரசு 2ம் ஜாமம்	ஊண் 3ம் ஜாமம் அரசு 4ம் ஜாமம்	ஊண் 5ம் ஜாமம் அரசு 3ம் ஜாமம்	ஊண் 2ம் ஜாமம் அரசு 5ம் ஜாமம்
வியாழம்.	———	புதன்.	———
ஊண் 1ம் ஜாமம் அரசு 3ம் ஜாமம்	படுபக்ஷி திங்கள்	ஊண் 1ம் ஜாமம் அரசு 4ம் ஜாமம்	படுபக்ஷி ஞாயிறு

———

கோழி

பூர்வபக்ஷம்.		அமரபக்ஷம்.	
ஞாயிறு. செவ்வா	வெள்ளி.	ஞாயிறு. செவ்வா	வியாழம்.
ஊண் 3ம் ஜாமம் அரசு 5ம் ஜாமம்	ஊண் 1ம் ஜாமம் அரசு 3ம் ஜாமம்	ஊண் 1ம் ஜாமம் அரசு 3ம் ஜாமம்	ஊண் 2ம் ஜாமம் அரசு 5ம் ஜாமம்
திங்கள் புதன்.	சனி.	திங்கள் சனி.	வெள்ளி.
ஊண் 4ம் ஜாமம் அரசு 1ம் ஜாமம்	ஊண் 2ம் ஜாமம் அரசு 4ம் ஜாமம்	ஊண் 3ம் ஜாமம் அரசு 1ம் ஜாமம்	ஊண் 5ம் ஜாமம் அரசு 3ம் ஜாமம்
வியாழம்.	———	புதன்.	———
ஊண் 5ம் ஜாமம் அரசு 2ம் ஜாமம்	படுபக்ஷி புதன்.	ஊண் 4ம் ஜாமம் அரசு 2ம் ஜாமம்	படுபக்ஷி வியாழன் சனி.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மயில்

பூர்வபக்ஷம்		அமரபக்ஷம்	
ஞாயிறு செவ்வா	வெள்ளி	ஞாயிறு செவ்வா	வியாழம்
ஊண் 2ம் ஜாமம் அரசு 4ம் ஜாமம்	ஊண் 5ம் ஜாமம் அரசு 2ம் ஜாமம்	ஊண் 4ம் ஜாமம் அரசு 2ம் ஜாமம்	ஊண் 5ம் ஜாமம் அரசு 3ம் ஜாமம்
திங்கள் புதன்	சனி	திங்கள் சனி	வெள்ளி
ஊண் 3ம் ஜாமம் அரசு 5ம் ஜாமம்	ஊண் 1ம் ஜாமம் அரசு 3ம் ஜாமம்	ஊண் 1ம் ஜாமம் அரசு 4ம் ஜாமம்	ஊண் 3ம் ஜாமம் அரசு 1ம் ஜாமம்
வியாழம்	----	புதன்	----
ஊண் 4ம் ஜாமம் அரசு 1ம் ஜாமம்	படுபக்ஷி புதன்	ஊண் 2ம் ஜாமம் அரசு 5ம் ஜாமம்	படுபக்ஷி புதன் வெள்ளி

சாம விபரம்

சாமம்	நாழிகைமுதல்	நாழிகைவரையில்	காலம்	முதல்		வரையில்	
				மணி	நிமிஷம்	மணி	நிமிஷம்
1	1	6	காலை	6	,,	8	24
2	6	12	,,	8	24	10	48
3	12	18	பகல்	10	48	1	12
4	18	24	,,	1	12	3	36
5	24	30	,,	3	36	6	,,

பக்ஷி அரசாயிருக்கும்போது அரசர்முதலிய பிரபுக்களைக்காணவும், கோருகிற சகல சுபங்களுக்கு மிகவும் நன்மை. பக்ஷி ஊணாயிருக்கும் போது சகல சுபகாரியங்கள் செய்ய நன்மையாகும். படுபக்ஷி தினங்களில் சுபகாரியங்கள் செய்யலாகாது.

முற்றிற்று.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கோட்சாரபலன்

இரவியஞ்சா மிடந்தனிலே திங்க ளெட்டில்
ஏழதனிற் செவ்வாயும் இரண்டிற் புந்தி
விரவுகுரு மூன்றிடத்திற் சுங்க ளுறில்
மிக்கசனி ஜென்மத்தில் மிகுபாம் பொன்பான்
திரமுடனே இத்தலங்கள் சேரு மாகிற்
சிறைகாவல் வெகுநோயாஞ் சிலுகு சண்டை
உரைத்திடுமா னச்சேதம் மரணச் சேதம்
உற்றபல னுகாதென் றுரைக்க லாமே.

இ-ள். கோட்சாரபலனுவது, பூதலத்தின் கண் பிறந்த ஜாதகத் தோர்க்கு, மேதகனுகிய சந்திரனிருந்த ராசியே சந்திராலக்கினமாம், அதற்கு, ஆதனுகிய சூரியன் ஐந்தாமிடத்திலும், மாதுர்காரகனுகிய சந்திரன், எட்டாமிடத்திலும், சூதகனுகிய செவ்வாய் ஏழாமிடத்திலும், நீதகனுகிய புதன் இரண்டாமிடத்திலும், பீதகனுகிய குரு மூன்ருமிடத் திலும், சீதகனுகிய சுக்கிரன்-ஆருமிடத்திலும், பேதகனுகிய சனி ஜென் மத்திலும், சேருமாகில் அக்காலங்களில் இச்சாதகற்கு, சிறைகாவல்-நோய்-சிலகு சண்டை-மானக்கேடு-மரணத்துக்குச் சமானமான கண்டங் கள் வந்துவிலகும். சோதிடத்துக்கு விதவிலக்கு என்றுபெயர் ஆகை யால் அக்கிரத்துக்குத் தக்க ஓமசாந்தி-அர்ச்சனை முதலியனசெய்து விலக்கிக்கொள்ள வேண்டுமென்று மாதிடமாகச் சோதிட முணர்ந்த பெரியோர்கள் தெரியச்சொன்னுர்கள்.

வேறு

கண்டங்கள்நான்கிலெட்டிற் கருதியேசனிசேய்நிற்கத்
தெண்டங்கள்மிகவுண்டாகுந் திரவியம்நாசமாகும்
கொண்டதோர்மனைவிவேருங் குறித்திடுஞ்செட்டுநஷ்டம்
பண்டுளநாடுவிட்டுப் பரதேசம்போவானென்னே.

இ-ள். சந்திராலக்கினத்திற்கு நான்கிலும், எட்டிலும், சனியாவது செவ்வாயாவது இருந்தாலும், தற்போதுவந்தாலும், அப்போது இச்சாத கற்கு தெண்டங்கள் மிகவுண்டாகும். திரவியமும் வீண் செலவாகும். கொண்ட பெண்டாட்டியும் அண்டாமற் பிரிந்திருப்பாள். தான் செய்யுந் தொழில் வியாபாரங்களும், நஷ்டமாம். பாடுகெட்டுத் தேடும் வீடும் நாடும் விட்டுப் பரதேசம்போவான். எ-று. 876

ஆதித்தன்பன்னிரண்டில் அட்டமம்நாவிலஞ்சில்
வாதித்தசென்மம்ரெண்டில் வந்துதான்நிற்குமாகில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வேதிக்கும்வெதுப்புக்காச்சல் மீறியவயிற்றுநோவு
தீதுற்றமனையாள்கேடு சிரங்குடன்பிணியுண்டாமே.

இ-ள். சந்திராலக்கின ரீதியாகப் பன்னிரண்டு-எட்டு-நாலு-ஐந்து-ஜென்மம். இரண்டு இவ்விடங்களிற் சூரியன் வந்து நிற்குமாகில் ஜாதகற்குவெதுப்புகாச்சல் வயிற்றுவலி, மனையாளுக்கு வினையாலாட்டும், சிரங்கு சீக்காகிய பிணியுமுண்டாகும். எ-று. 877

இரவிதான் பகைநீசத்தி லிருப்பிடம்விட்டுப்போகும்
மருவியவாதநோயாம் வான்பொருள்மாடுகேடு
எரியினாற்பயமதாகும் எண்ணியகருமமாகா
குருகியபுருவத்தாளே குலதெய்வங்குற்றஞ்சொல்லே.

இ-ள். உருவாகிய விற்போன்ற புருவத்தையுடைய பெண்ணே? தியாகிய சூரியன் பகை நீசவீட்டிலிருந்தால், இருக்கும் இருப்பிடம் விட்டு மற்றோரிடம் ஓட்டும், வாதநோயாம். மாடாடு கேடு நெருப்பினாற் பயம், நினைத்தகாரியங்களாகாது. குலதெய்வத்தின் குற்றமுண்டென்று நிலை பெற்ற சோதிட முணர்ந்தோர்கள் கலைகற்ற வாணியினருளாற் பல முற்றுச் சொல்லுவார்கள். எ-று. 878

ஞாயிறுமூன்றிலாறில் நயந்தபன்னொன்றிலொன்பான்
தூயுறும்பத்தில்நின்றாற் சுகமதுமிகவுண்டாகும்
சேயசங்கடகமானாற் றேன்வளங்குழலாள்சேர்வள்
ஆயிழையாளேசொல்வாய் ஆதித்தனிருப்பதாலே.

இ-ள். சந்திராலக்கினத்துக்கு மூன்று — ஆறு பதினொன்று ஒன்பது-பத்தில், சூரியனிருந்தால் ஜாதகன் அகமகிழச் சுகமுண்டாகும் இரவியாகிய சூரியன்-இடபம்-மேடம்-கடகமாயிருந்தால் இன்பத்தைத் தரக் கூடிய ஏந்திழையுஞ் சாந்தமாகவந்து சேருவாளென்று ஆயிழையே ஞாயிறு இருக்குமிடத்தைபற்றி வாயார வழுத்துவாயாக. எ-று. 879

நில்லுமுற்கதிரோனுச்சி நட்பதில் நிற்குமாகில்
நல்லபற்பொருளுமுண்டாம் நாடெலாம்நன் மையாகும்
அல்லலும்பிணியுஞ்சேரும் அருக்கனர்பகைநீசத்தில்
கொல்லுமேகுளிரும்வெப்புங் குவலையங்குற்றமாமே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். ஆதித்தனுகிய சூரியன் ஆட்சி-நட்பு வீடுகளில் தீட்சண்ய மாய் நிற்குமாகில், ஜாதகன் வீடெலாம் பற்பலபொருளுந் தேடிக்கொண்டு வந்துசேர்ப்பான், காடெலாம் விளைந்து நாடெலாம் நன்மையுண்டாக்கும். அருக்கனுகிய சூரியன் திருக்காகிய பகை நீசராசிகளில் இருப்பாக இருக்கு மாகில் ஜாதகன் குடும்பத்தில் பேதகமாய் அல்லலாகிய துன்பமும், வெப்பாகிய காச்சலுங் குளிரும் பிணியுமுண்டாகும். குவலயத்திற் குற்றமுண்டாம்.

திங்களும்பன்னிரண்டிற் றிகழிரண்டைந்திலெட்டில்
அங்கதுநாலதாகில் அதுசெயுங்குற்றங் கேளீர்
மங்கிடும்மனையாள்பிள்ளை வயிற்றுநோய்போக்குமூலம்
நங்கொடிகெர்ப்பமங்கை யானவள்குற்றஞ்சொல்லே

இ-ள். கங்குலிற் சிறந்த திங்களாகிய சந்திரன் தங்குமிடம், பன்னி ரண்டு-இரண்டு-ஐந்து-எட்டு-நாலதாகில், அங்கு அது செய்யுங் குற்றத் தைக் கேட்பாயாக, ஜாதகம் குடும்பம் பேதமாக வேதனையடைய மனைவி மக்களுக்குக் குணமில்லாது வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு மூலம் முதலிய பலவித ரோகங்களுமுண்டாகும். இதுவுமன்றி தன்குலத்திலு தித்த மங்கை யொருத்தி கெர்ப்பவதியாயிருந்து இறந்தவள் குற்ற மொன்றுண்டென்று சொல்லுவாயாக. எ-று. 881

சந்திரன்சென்மமேழிற் றசமுடன்மூன்றிலொன்பான்
வந்துபன்னொன்றுமாறில் வகையுடன்பொருந்திநின்ருல்
சந்த தங்குதிரையானை தண்டிகைபதார்த்தமுண்டாம்
இந்துவின்நுதலாய்கேளாய் இன்பமுமியற்கையாமே.

இ-ள். அந்தரத்தில் வந்துலாவும் இந்துவாகிய சந்திரன் போன்ற நுதலையுடைய சுந்தரமான பெண்ணே? கேட்பாயாக, இந்தவுலகில் வந்தவதரித்து சுந்தரமாயிலங்கும் ஜாதகற்கு சென்மம்-ஏழு, பத்து-மூன்று ஒன்பது, பன்னொன்று ஆறு-இவ்வேழிடங்களுள், எவ்விடமாகிலும் ஓரிடத்திற் சந்திரன் வாழும் ஸ்தானமாயிருந்தால், வாகனம்-வண்டி-பாகனேறி நடாத்தும் யானை-வேகமானகுதிரை-யோக மான தண்டிகை முதலியவைகளும், ஆடையாபரணம் பண்டபாத்திரச் சேர்க்கையும், மண்டலத்தோர் கொண்டாடும் பொன்னும் பொருளும் உண்டாகுமென்று இன்பமும் இயற்கையாய் ஒண்டொடியே விண்டு ரைப்பாய். எ-று. 882

மதிதனக்காட்சியுச்சம் நட்பதில்வந்துநிற்கில்
நிதிபெறும்பூஷணங்கள் நேரிழைவிவாகமுண்டாம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சதிவருஞ்சலத்திற்கண்டஞ் சந்திரன் பகைநீசத்தில்
அதிரவேசலவியாதி அரும்பொருட்கேடுசொல்லே.

இ-ள். தீட்சண்யமுள்ள சந்திரன்—ஆட்சியுச்சம் நட்புஸ்தானங்களிலிருந்தால், கண்காட்சிக்குகந்த பொன்பொருள் பூஷணம் உண்பொருள் தானியம், பெண்விவாகமு முண்டாம். அச்சந்திரன் பகை நீசத்தானத்திலிருந்தால் ஜலகண்டம் ஜலவியாதி பல பொருட்கேடு முதலியன உண்டாகு மென்று மண்டலத்தோர்க்கு ஒண்டொடியே சொல்லுவாய். எ-று. 883

மிக்கவேமெட்டிலைந்தில் விளங்குமீராறுசென்மம்
வக்கிரனிரண்டுநான்கு பத்துடன்வந்துநின்ருல்
சிக்கெனச்சிலுகுண்டாகுந் தேகநோயுதிரம்வெக்கை
உக்கிரமானதீயா லுளைப்புடற்குடைச்சலாமே.

இ-ள். வக்கிரனுகிய செவ்வாய் பக்குவமாக-ஏழு-எட்டு-ஐந்து பன்னிரண்டு-ஜென்மம்-இரண்டு-நான்கு-பத்து இவ் வெட்டு ஸ்தானத்துள் எதிலாகிலும் ஒட்டியிருந்தால் கட்டாயம் சண்டைசச்சரவு உண்டாவதோடு, கண்டபடி தேகத்தில் நோயும், ஒர்பாகத்தில் உதிரமும், வெக்கையும் ஏகமாயெரியுந்தீயால் ஆகத்தில் உளைச்சலுங் குடைச்சலும் உண்டாகும். எ-று. 884

குருதியின்பகையாற்சண்டை கொலைபொருள்கேடுஞ்சொல்லும்
அரியதோர்கன்னிமார்கள் அத்துடன் முனிகருப்பன்
எரியினுற்சேதமாகும் எண்ணரியகருமமாகா
குருகியபுருவத்தாளே குலதெய்வங்குற்றஞ்சொல்லே.

இ-ள். சத்துருவாகிய பகை வீட்டிற் குத்திரனுகிய செவ்வாய் நின்ருல் அத்தினம் சண்டை சச்சரவு, கொலைபாதகம், பொருட் செலவுகளும் உண்டாகும். அத்துடன் அடா துடியான சடாமுனி இருபத்தொரு பந்திகளுக்குள் வீரன், கருப்பன், இருளன், சோனை, மாடன், கன்னிமார்ப்பெண்டுகள், பூவாடைக்காரி முதலிய வீட்டுக் குலதெய்வங்களின் குற்றமுண்டென்று முற்றுமுணர்ந்த முனிவோர்கள் கற்றுத் தெளிந்த கவிகளினுற் சொற்றிமையாகச் சொல்லியவாறு குருகிய விற்போன்ற புருவத்தாளே நீயும் சொல்லுவாயாக. எ-று. 885

சேயவனுென்பதாறிற் சிறந்தபன்னுென் றுமூன்றில்
ஆயவேழதனில்நின்ரு லாடையாபரணமுண்டாம்
நேயமாமனையாள்சேர்த்தி நிச்சயம்மக்களுண்டாம்
தூயபால்வெண்ணெய்நெய்யும் சுகமெனச்சொன்னவாறே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். சேயவனாகிய செவ்வாய், ஒன்பது ஆறு பன்னொன்று மூன்று ஏழு இத்தானங்களில் எத்தானத்துள் நின்றாலும், மனைவி, மக்கள், நெய் பால், வெண்ணெய் சேர்க்கையும் சகல சுகமும் உண்டாகுமென்று கொண்டாடிச் சோதிடமுணர்ந்தோர் சொன்னார். எ-று. 886

செய்யவன் ஆட்சியுச்சஞ் சிநேகமாய் நிற்குமாகில்
மையுறும்மணியும்முத்தும் மகிழ்ச்சியாய்மாதுசேர்வள்
ஐயமும்சுரமுமுண்டாம் அழலவன்பகைநீசத்திற்
பையவேயுத்தமாகும் பகைவரும் மனத்திற்கேடே.

இ-ள். செய்யவனாகிய செவ்வாய். வையகத்தோர்க்கு ஆட்சி உச்சம் நட்பு ராசிகளில் நிற்குமாகில், நவரத்தினங்களிற் சிறந்த முத்தும் மணியும் பூண்டு நத்திடும்படியான மாது காதலுடன் வந்து சேருவள். பகை நீசவீடாகில் தசையாகிய சேட்டும் சுரமும், சத்துருக்கள்மேல் யுத்தமும் பகையும் மனக்கேடுமுண்டாம். எ-று. 887

பலன்புந்திநாலைந்தேழு பன்னிரண்டொன்பான் ஜென்மம்
நலமிலைமூன்றிலாகில் நற்பொருளுற்றார்நாசம்
ஜலநிலம்வழக்குச்சண்டை தான்பிணைசொல்லச்சேதம்
பலவிதமத்திபங்கள் பண்டிதன்பகரும்நாளே.

இ-ள். புந்தியாகிய புதன் ஐந்து, நாலு ஏழு, பன்னிரண்டு, ஒன்பது சென்மம் மூன்று இத்தானங்களில் எத்தானங்களிலாவது நிற்குமாகில், பொன், பொருள், தன்னுற்றார் பெற்றார் நாசமாம். வயற் காட்டுக்கு நீர்ப்பார்ச்சும் வழக்காற் சண்டை சச்சரவும், ஒருவனுக்குத் தான் முன்னிருந்து பணம் வாங்கிக்கொடுக்க, அவன் கொடாததால் ஜாயிண்டாய்க் கையெழுத்துப்போட்டதால் தானே பணஞ் செலுத்தலும், வீணாகப் பணச்செலவாகுதலும், பலவித வழக்குகளுக்கு மத்தியஞ் செய்தலும், பண்டிதனாகிய புதன் அண்டிவந்த நாளானதாற் கண்டு மொழியாளே விண்டுரைப்பாயாக எ-று.

மதிமகன்பகையினாலே வன்கிறைதேகநோவாம்
அதிரவேசலத்திற்கண்டம் ஆடுமாடடிமைசேதம்
பதியினிலிருந்துவாழும் பகைவரும்பெண்தெய்வத்தால்
சதிவரும்பிணியுமுண்டாம் சஞ்சலம்மிகுதியாமே.

இ-ள். மதிமகனாகிய புதன் பகைவீட்டிலிருக்குமாகில், அதிபதியாகிய அரசர் கோபம், சிறைகாவல், தேகநோவு, ஜலகண்டம், ஆடுமாடு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆளடிமை சேதம், பதியில்வாழும் பெண் தெய்வத்தாற் பகைவரும், பிணியும் பிணக்கும் மிகுதியாகும். எ-று. 889

புந்தியும்ஆருரெட்டுப் பொருந்துபன்னொன்றுபத்து
முந்திரண்டிடத்தில்நிற்கில் மூர்த்திமாதீர்த்தமாடல்
வந்திடுங்கல்விசுற்றம் வஸ்திராபரணமெல்லாம்
தந்திடுமமரர்பூசை தவமதுநன்மையாமே.

இ-ள், ஆறு, எட்டு, பன்னொன்று, பத்து, இரண்டு, இவ்விடங்களில் புதன் நின்ருல் கீர்த்திபெற்ற ஸ்தலம், மூர்த்தி, தீர்த்தம் இவைகளுக்கு யாத்திரை சென்று தீர்த்தமாடித் தெய்வங்களைத் தெரிசித்தல், கல்விகற்றல், சுற்றத்தார் வந்து விருந்துண்டுபோதல், வஸ்திராபரணம் வலியவருதல், தேவபூசையும், சிவபத்தியும் தவமுந்தானே உண்டாகி நன்மையைத் தரும்.

புதனுட்சியுச்சம்நட்பிற் பொருந்தியேநிற்குமாகில்
பதமுறும்மாதர்சேர்த்தி பாற்பசுபூமிலாபம்
விதவிதம்சுரங்களுண்டாம் விரகமால்பகைநீசத்தில்
அதனமாஞ்சலனஞ்சண்டை யென்றனர் அரியநூலோர்.

இ-ள். ஆட்சி உச்சம் நட்பு ராசிகளில், கண்காட்சியைத் தருகின்ற புதன் வீட்சண்யமாய் வீற்றிருந்தால் பதமுறும் மாதர் சேர்த்தியென்றதால் இன்ப சுகத்தை அன்பாய்க் கொடுக்கும் மாது சேர்க்கையும், பாற்பசு பூமிலாபமும் வந்து சேரும், பகை நீசராசிகளில் புதன் நிற்குமாகில் அதனமாக விதம்விதமான சுரங்களும், காச்சலும், மனச்சஞ்சலமும், சண்டை சச்சரவும் உண்டாகுமென்று சோதிட நூலுணர்ந்த பெரியோர்கள் தெரியச் சொன்னர்கள். எ-று. 891

பொன்னவன்மூன்றுநாலிற் பொருந்துபத்தாறிலெட்டில்
உன்னியபன்னிரண்டிலொருசென்மத் தன்னில்நின்ருல்
மன்னராற்பதியுஞ்சேதம் மாதரால்வியாதிமந்தம்
நன்னியதலைமயக்கம் நவிலுவாய்ப்புண்ணுண்டாமே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். மூன்று, நாலு, பத்து, ஆறு, எட்டு, பன்னிரண்டு சென்மந் தன்னில் பொன்னவனுகிய வியாழன் நின்ருல் மன்னராற் பதியுஞ்சேதம் என்றதால், அரசர்களாலேற்பட்ட வரி வசூலால் அதிகக் கஷ்டமும், வயற்காடு சேதமும், மாதரால் வியாதி, மந்தம் என்றதால் பெண்டுகள் சீக்கினுல் கண்ட ரோகங்களும் உண்டாகுவதோடு தலைமயக்கம் வாய்ப் புண்ணும் உண்டாகும் எ-று. 892

மந்திரிபன்ஞென்ருென்பான் வளம்பெறவேழிலஞ்சில்
வந்திரண்டிடத்தில்நிற்கில் மன்னற்குநல்லனுவன்
சுந்தரமனைவிமக்கள் சோபனஞ்சிவிகையுண்டாம்
தந்திரத்துடனேபூமி யாளவுந்தலைவனுமே.

இ-ள். பதினுென்று, ஒன்பது, ஏழு, அஞ்சு, இரண்டு இந்த இடங் களில் எந்த இடங்களிலாவது மந்திரியாகிய வியாழன் வந்து நிற்கில் சுந்தரமாகிய மனைவியும், மக்களுக்கு மணமகிழ்ச்சியும் சுபசோபனமும் சிவிகையும் உண்டாவதோடு தந்திரத்துடன் பூமியையாளுந் தலைவனு மாவன். எ-று.

மறையவனுட்சிநட்பி லுச்சத்தேநிற்குமாகில்
குறைவிலாராசயோகங் கொடியிடைமாதர்சேர்த்தி
அறைபிணிமிகுதியுண்டாம் அந்தணன்பகைநீசத்தில்
வறுமையாம்மனையாள்சேதம் வாழ்பொருள்கேடுசொல்லே.

இ-ள். மறையவனுகிய குரு உறைவிடமாகிய நட்பாட்சி யுச்சத்தே நிற்குமாகில் குறைவில்லாத ராஜயோகமும் வடிவுடைய கொடியிடை யாகிய மாதர் சேர்க்கையும் வலியவந்து சேரும். அந்தணனுகிய வியாழன் பகைநீசராசியிலோர் வகையாய் வந்து நிற்கில், வறுமை, மனையாள் சேதம், வாழ்பொருள் பாழாம், அறையிற் பிணியும் மிகுதியா மென்று சொல்லுவாய்.

வெள்ளி வியந் தனிலஞ்சி லேழுபத்தில்
விளங்கியதோர் மூன்ருறிற் நீராநோவு
உள்ளெரிவு வயிற்றுநோய் பிடரி நோவு
ஒங்குசய ரோகம்நீ ரிழிவுமாகும்
தெள்ளியதோர் பொருட்போக்கு சலத்திற் கண்டம்
தேவியின்றன் நேத்திரத்தில் வியாதியாகும்.
கள்ளமருங் குழலாளே அயனுர் காணக்
கனங்குறையுங் கனிதத்தோர் காணுங்காலே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். ஆதியில் அயனுற் சிருஷ்டிக்க, அவனியிற் பிறந்து வாழும் மாந்தராகிய மனிதருக்குச் சாந்தமாய்ச் சோதிடவல்லோர் சொல்லியபடி கள்ளுண்டு தள்ளாடும் வண்டுகள் மொய்க்குங் கொண்டையையுடைய பெண்டுகளிற் சிறந்த பெண்ணே, அடியிற்கண்டபடி விண்டுரைப்பாய், வெள்ளியாகிய சுக்கிரன் வியமாகிய பன்னிரண்டு, ஐந்து, ஏழு, பத்து, மூன்று ஆறு இத்தானங்களில் எத்தானங்களிலாவது ஒன்றில் நின்றுல் உள்ளெரிவு வயிற்றுவலி, பிடரிவலி, சயரோகம், நீரிழிவு இவைகளில் எவையாவது வந்தால் தீராநோவாம். இதுவுமன்றிப் பொருட்செலவு, ஜலகண்டம், பெண்டாட்டிக்குத் திண்டாட்டமாகிய கண்நோவு உண்டாகும். எ-று. 895

வே று.

வெள்ளிபன்னென்றிரண்டில் விளங்கியநாலிலெட்டில்
ஒள்ளியவொன்பானென்றில் உகந்தவர்நிற்பாராகில்
கள்ளவிழ்குழலார்தம்மைக் கண்டுளங்களிப்பன்மிக்க
வள்ளலின் நண்பனுவன் மனையவளமகிழநல்லன்.

இ-ள். பதினென்று, இரண்டு, நாலு, எட்டு, ஒன்பது, ஒன்றில் சுக்கிரன் நின்றுல், வாசனைதாங்கி மலர்மாலையையணிந்த மாசற்ற கூந்தலையுடைய பெண்ணைக்கண்டு உள்ளங்களிப்பான். மன்னனும், மனையாளும், தன்னுளம் மகிழ வாஞ்சையும் நல்ல நண்பனுமாயிருப்பன். எ-று. 89

சுங்கனுமாட்சிநட்பி லுச்சத்தேநிற்குமாடல்
பொங்கிடும்பூமிலாம் புகழ்ந்திடும்ராஜயோகம்
மங்கிடும்மனையாள்பிள்ளை மகன்பிள்ளைபகைநீசத்தில்
துங்கமாவாகனங்கள் தொல்லையாம்பொருளுங்கேடாம்.

இ-ள். தக்க பொருளைத் தரக்கூடிய சுக்கிரன், ஆட்சி, நட்பு, உச்ச ராசியில் நிற்குமாகில், ராஜயோகமும், நல்ல பூமி லாபமும் யாவரும் புகழக்கீர்த்திபொருந்தி பார்த்திபனுக வாழ்ந்திருப்பன். பகை நீசஸ்தானத்தில் சுக்கிரன் நிற்கில், பொருளும் அருளும் புகழும் வாகனமும் போகும். பெண்டாட்டி பிள்ளை பிள்ளையின் பிள்ளை சாகும். எ-று. 897

காரிதானிரண்டைந்தெட்டேழ் கண்டமீராறுசன்மங்
கூரியகைகால்வாதங் கொடுமைதானதிகமாகும்
சீரியதலையிற்பாரம் சினத்தசூனியம்போலச்சம்
பாரியுத்தநோவாம் பகைத்திடும்முனிவர்குற்றம்.

இ-ள். கனிவு சற்றுமில்லாத சனிபகவான், தனியாய் இரண்டு ஐந்து எட்டு ஏழு கண்டமாகிய நாலு பன்னிரண்டு ஜென்மம் இந்த இடங்களில் வந்தமர்ந்தால், வஞ்சனை பில்லி சூனியம்போல மனதுக்கு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அச்சமும், கொஞ்சமும் அஞ்சாதகொடுமையும், வஞ்சகராகிய பகைவரோடு யுத்தமும், கைகால் வாதமும், தலையிற் பாரமும், தெய்வ குற்றமும் உண்டாம். எ-று.

பத்திலே சனியும் நிற்கிற் பதிகுலைந் தலையச் செய்யும்
செத்திடும் ஆடு மாடு சிலுகுடன் மனிதர் சாவாம்
நத்திய பொருளுஞ் சேதம் நற்பயிர் விளைவு குன்றும்
பத்திய சோகை சோம்பல் பலனிலை பயமுண் டாமே.

இ-ள். பத்தாமிடத்திலே மத்திரனுகிய சனிநிற்கில் பதியாகிய வீட்டில் மதியுள்ள மனைவி மக்களைக்கதியில்லாது வேறுவேருய்ப் பிரித்து நிலைகுலையச்செய்துவைக்கும், ஆளடிமை ஆடுமாடுகளும் வாழாது பாழாகச்சாகும், பாடுபட்டுத் தேடுதற்கரியபொருளும், கூடுவிட்டுப்பாய்ந்தபறவை போற்பறந்துபோகும், நற்பயிரும் விளையாமல் துற்பலமாய் விளைவு குன்றும், சோகை சோம்பல் பயம், இவைகளுண்டாம். எ-று. 899

சனியவன் மூன்றி லாறிற் றயவுபன் னென்றி லொன்பான்
இனிவருங் கருமம் நன்ரும் எடுத்தகா ரியங்கள் வெற்றி
தனிபெரு மகிழ்ச்சி யாகுந் தண்டிகை குதிரை யுண்டாம்
கனிதரு மதுரச் செவ்வாய் கன்னியர் காம னாமே.

இ-ள். மூன்று ஆறு, பதினென்று ஒன்பதில், சகன்ரேன்புதல்வனுகிய சனிபகவான் தோன்றிடில், ஜாதகற்கு எடுத்தகாரியங்களும், தொடுத்த தொழில்களும், நினைத்த நினைவுகளனைத்தும் நடைபெறும் கோவைக்கனிபோன்ற செவ்வாயுடைய பாவையற்குத் தேவையென்ற காமனுவன், வண்டிவாகனம் தண்டிகை குதிரைகளுமுண்டாம். எ-று. 900

காரிதா னுட்சி நட்பி லுச்சத்தே நிற்கு மாகில்
சீரியல் செட்டு லாபம் சிறப்புள பூமி சேர்க்கை
மூரிய பகைய தாகும் முடச்சனி பகைநீ சத்தில்
துரிய கோளு முண்டாஞ் சூனிய கிரகத் தாலே.

இ-ள். காரியாகிய சனிபகவான், பாரிற்பிறந்த மாந்தருக்கு வீரியமாகிய ஆட்சி நட்பு உச்சஸ்தானங்ளில் காரியமாய் நிற்கில், செய்யுஞ் செட்டுகளில் அதிகலாபமும், பெய்யும் மழையால், வையகமாந்தர் உய்யும்படி நஞ்செய் புஞ்செய் விளைவுதரும் பூமிசேர்க்கையும் உண்டாம் முடவனுகிய சனி திடமில்லாதபகை நீசஸ்தானத்திலிருந்தால், அடமுள்ள கோளும், குண்டுனியும், பாழுஞ்சூனியமும், எந்நாளும் பகையும் உண்டாக்கும். எ-று. 901

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ராகுடன் கேதி ரண்டில் நாலெட்டி ஐந்து பத்தில்
சேகரம் பன்னி ரண்டிற் சென்மத்திற் சேர்ந்து நின்றால்
வாகுதாய் பிதுர்கள் சாவாம் மனையாட்டி பூமி நாசம்
பாகுசேர் மொழியி னாளே பகர்ந்தனர் தமிழ்வல் லோரே.

இ ள். பண்டு பாலுடன் கண்டு சீனியைக் கொண்டு கலந்து சுண்டக்காச்சிய பாகுசேர் மொழியாளே அருந்தமிழ் வல்லோர் திருந்தப் பொருந்த உரைத்ததைக் கேட்பாயாக, கரும்பாம்பாகிய இராகு, செம் பாம்பாகியகேது இவ்விருவரில் செவ்வையாய் எவரேனும் ஒருவர், நாலு எட்டு ஐந்து பத்து பனிரண்டு ஜென்மம் இவைகளில் நிற்கில், மாதா பிதா மனையாட்டி மக்கள் இவர்கள் சாவார்கள். பூமியும் நாசமாம். எ-று. 902

கேதுடன் ராகு வுக்குக் கிளர்ந்தபன் னொன்று மேழும்
தீதிலா மூன்றி லாறிற் செழித்திடும் பெண்டிர் மக்கள்
தாதுலாந் திருவுஞ் சேருந் தார்மணி மிகவு முண்டாம்
பூதல மீதிற் சொன்னோம் புலவர்தம் வாக்குத் தானே.

இ-ள். பூதலமீதில் ஜாதகற்கு கேதகனாகிய கேது, ராதகனாகிய ராகு, இருவரிலொருவர் பன்னொன்று ஏழு மூன்று ஆறு, இத்தானத்தில், எத் தானத்திலாவது இருப்பாராகில்பெண்டு பிள்ளைகளும், உண்டு களித்துக் கொண்டாடுவார்கள் விண்டுவின்தேவி யண்டியிருப்பள், அண்டா கொப்பரை குண்டாச்சட்டி பண்டபாத்திரங்களும் ஆடையாபரணங்களும் அதிகமுண்டாகும்

நாகமே ஆட்சி யுச்சம் நட்பதில் நிற்குமாகில்
போகமாம் பூமி லாபம் பொருளொடு மணமு முண்டாம்
ஆகமீ தரையில் நோவாம் அரவுகள் பகைநீ சத்தில்
வேகமாய் விஷங்கள் தீண்டு மென்றனர் தமிழ்மிக் கோரே.

இ-ள். நாகமாகிய இருபாம்புகளும் ஆட்சி யுச்சம் நட்பு வீடுகளி லிருந்தால், போகபூமி பொன் பொருள், லாபமும், சுபசோபனத்திரு மணமும் உண்டாகும். பகை நீசஸ்தானத்திலிருந்தால் தேகத்திலோர் பாகத்தில் அறையின்கீழ் நோவுண்டாகும், வேகமாய் விஷமுந்தீண்டும் என்று தக்கோராகிய தமிழ் வல்லோர்கள் பக்குவமாகச் சொல்லுவார்கள், எ-று. 904

பொது

சூரியன் சோமன் செவ்வாய் சொற்புதன் வியாழம் வெள்ளி
காரியு மிராகு கேதுக் கடவுள ரொன்பான் நாமத்
தாரியல் சக்கரத்தைத் தரித்திரர் பூசித் தாலும்
பாரிற்புத் திரரு மட்ட பாக்கியம் நல்குந் தானே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இ-ள். சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி சனி இராகு கேது இவ்வொன்பது நவக்கிரகங்களின் நாமத்தையும், சக்கரத்தையும், தரித்திரர்கள் பூசித்தாலும் பாரில் புத்திரரும் அஷ்ட ஐஸ்வரியமும், தீர்க்காயுளும் அதிக இன்பசுகமுங் கொடுக்குந்தானே. எ-று. 905

வாழி

சீர்பெரும் நவக்கோள் வாழி திகழ்பனி ரண்டா மோரை
பேர்பெருந் தினங்க ளேழும் பிரபலத்திதிபன் ஊனந்தும்
ஏர்பெரு முடுக்கள் யோகம் இருபத்தேழ் கரணம் ருத்ரர்
தார்பெரும் மன்னர் வாழி தமிழ்வலோர் வாழி வாழி.

இ-ள். ஒன்பது நவக்கிரகங்களும், பன்னிரண்டு இராசிகளும், ஏழு வாரங்களும் பதினைந்து திதிகளும், இருபத்தேழு நட்சத்திரங்களும், இருபத்தேழு யோகங்களும், பதினொரு காரணங்களும், அரசர்களும், சோதிடமுணர்ந்தவர்களும், தமிழ்வல்லோர்களும், இவர்கள் எல்லோருக்கும் வாழி வாழி

சோதிடக்களஞ்சியம் மூலமும்

விசேட உரையும்

முற்றிற்று.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

→ 219560

33.50

5.51. 27-2

2.20

1.29

1.25

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy